ஸ்ரீ லலிதோபாக்யாநம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களின்

ஸ்ரீமுகத்துடன்.

N. RAJAM & CO.,

Vepery, Madras.

1940

ஸ்ரீ லலிதோபாக்யாநம்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்களின்
ஸ்ரீமுகத்துடன்.

இஃது

ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹாமஹோபதேசக
ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவ சர்மா அவர்களால்
ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு,

சென்னை, ஸ்ரீபிரஹ்ம வித்யா விமர்சினீ சபை
ஸ்தாபகரும், தலைவருமாகிய
பிரஹ்மஸ்ரீ, அருட்கவி, ந. சுப்ரமணிய அய்யர் அவர்களால்
பார்வையிடப்பட்டு, அவர்களது முகவுரையுடன்
கூடியது.

N. RAJAM & CO.
Vepery, Madras.

உரிமையுள்ளது] 1940 [விலை ரு. 2

Printed at
GORDON & CO., LTD.,
Triplicane High Road, Madras.



ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி

சங்கராசார்ய ஸ்வாமிகள்.

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौळीश्वर ॥

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालंकारत्रयस्त्रिंशत्कोटिदेवता-सेवित श्रीकामाक्षीदेवी सनाथ श्रीमदेकाम्रनाथ श्रीमहादेवी सनाथ श्रीहस्तिगिरिनाथ साक्षात्कारपरमाधिष्ठान सत्यव्रतनामांकित काञ्ची दिव्यक्षेत्रे शारदामठसुस्थितानां अतुलित सुधारसमाधुर्यकमला-सनकामिनीधम्मिल्लसम्फुल्ल मल्लिकामालिकानिष्यन्द मकरन्दझरी सौवस्तिक वाङ्निगुंभविजृंभणानन्द तुन्दिलितमनीषिमण्डलानां अनवरताद्वैत विद्याविनोदरसिकानाम् निरन्तरालंकृतीकृतशान्ति-दान्ति भूम्नाम् सकल भुवनचक्र प्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठाविख्यातय-शोलंकृतानाम् निखिलपाषण्डषण्ड कण्टकोद्धाटनेन विशदीकृत-वेदवेदान्तमार्गषण्मत प्रतिष्ठापकाचार्याणाम् श्रीमत्परमहंसपरिव्राज-काचार्यावर्यश्रीजगद्गुरुश्रीमच्छंकरभगवत्पादाचार्याणाम् अधिष्ठाने-सिंहासनाभिषिक्त श्रीमन्महादेवेन्द्रसरस्वतीसंयमीन्द्राणाम् अन्ते-वासिवर्यश्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः—

अस्मदत्यन्त प्रियशिष्य वेंगन्दूरग्रामाभिजनपण्डित सोम-देवशर्म विषये सर्वाभीष्टसिध्यैक्रियते नारायणस्मृतिः ॥ भगवत्याः पराशक्त्याः श्रीललितादेव्याश्चरितामृतमाधुर्यरसानुभवः यथा सर्वेषामपि सुकरो भवेत्तथाविधातुमनाः भवान् गीर्वाणभाषान-भिज्ञानामपि सुखाववोधने सौलभ्यं सम्पादयन् ललितपदप्रयो गरमणीयम् नातिविस्तरं अनुज्झितविषयसारं द्राविडभाषामयं **श्रीललितोपाख्यानं** व्यरचयदिति विज्ञायसुतरां सन्तुष्यामः । एवं लोकस्यबहूपकुर्वन् भवान् श्रीचन्द्रमौळीशकृपया श्रेयांस्यवाप्नु-यादित्याशास्महे ॥

मुकाम् तुवरङ्कुरिचि
श्री. शा. शके १८६३
विक्रमर्स-श्रावण कृ. २.

नारायणस्मृतिः



ஸாஹித்ய வாங்முக பூஷணம்

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ சர்மா

ஸ்ரீலலிதாம்பிகாயை நம:

ஆசிரியர் முன்னுரை.

அவனன்றி ஓர் அணுவு மசையாதென்றபடி இறைவனது சக்திவடிவமான திருவருள் சிற்சிலகாலத்தில் சிலரைக் கொண்டு சிலவேலைகளைச் செய்விக்கின்றது. பரசுராம க்ஷேத்ரமான மலையாளத்திலே தோன்றி அன்னையின் திருவடிகளைச் சரணடைந்த ஸ்ரீமான் T. S. நாராயண ஸ்வாமி அய்யரவர்கள் இவ்வரிய நூலை வெளியிடும் தொண்டில் ஈடுபடும்படி செய்யப்பட்டார்.

ஸ்ரீலலிதாபரமேஸ்வரியின் ஸஹஸ்ரநாமம் தமிழ்ப் படுத்தப்பட்டது. ஸ்ரீலலிதாத்ரிசதியைத் தமிழ்ப்படுத்தி வெளியிட இவரே பாத்ரமாக்கப்பட்டார். இவ்விரண்டும் வெளிவந்தபின், ஸ்ரீலலிதா தேவியின் சரிதம் வெளி வராதிருத்தல் ஒரு பெருங்குறையேயாகும். அக்குறையை நீக்கும் அரிய கைங்கரியத்திற்கும் அன்னை இவரையே ஏவினள் போலும்.

இரண்டாண்டுகளுக்கு முன் இவ்வுபாஸகர் இதைத் தமிழ்ப்படுத்தும்படி அடியேனைத் தூண்டினர். ஒன்றே செய்க! அன்றே செய்க! நன்றே செய்க! என்ற ஸித்தாந்தத்தைக் கைக்கொண்டவரிவர். இந்நூலோ மந்த்ர சாஸ்த்ரம் நிறைந்தது. அநேக தத்வார்த்தங்கள் அமையப்பெற்றது. அதிகாரிகளுக்கேற்றபடி பொருள்தரக் கூடியது. ஆதலின் அடியேனைவிடச் சிறந்த அறிவும் பரந்த அநுபவமும்

உள்ளவர்களைக்கொண்டு இதைப்பூர்த்தி செய்யும்படி கூறினேன்.

அடியேனையே எழுதும்படி அவர் பன்முறை நிர்ப்பந்தம் செய்து, வேண்டிய உபகரணங்களைத் தந்தனர். ஓராண்டு அதனருகே செல்லாமலே நீண்ட ஆலோசனைசெய்து, கொண்டிருந்தேன். காரணமென்னவென்றால், இதில் தமிழில் வெளியிடமுடியாத பல தர்மரஹஸ்யங்களுள்ளன. வடமொழியில்வெளியான மூலக்ரந்தம் ஒன்றல்ல, இரண்டல்ல; மூலக்ரந்தமான பிரஹ்மாண்ட புராணத்திலோ பூர்ணமாக ஸகல கண்டங்களும் காணப்படவில்லை. நியாஸம் முதலியவிஷயங்கள் அநுபவிகளுக்கேஸந்தோஷத்தைக்கொடுப்பனவாகக் காணப்படுகின்றன. ஆதலால் பூர்ணமாக இதை எழுதாவிடில் அன்னைக்கு அபசாரம் செய்ததாகுமென்றஞ்சி காலஹரணம் செய்தேன்.

ப்ரமாதி ஆண்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்பஞ்செய்து, ஸ்ரீகும்பகோணம் ஸ்ரீமடத்தில் விஜயம் செய்திருந்த ஸ்ரீபரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய, ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாளைப் பணிந்து, இந்த சிரமத்தையும் முதல் சுலோகத்திற்கே பலர் பலவிதமாகப் பொருள் கூறுவதையும் தெரிவித்துக்கொண்டேன். மௌனத்திலிருந்து ஸ்ரீமதாசார்யாள் அதன் பொருளை எழுதிக் காட்டி இத்தொண்டிலென்னை உத்ஸாஹப்படுத்தினார்கள்.

அடியேன், சென்னை லக்ஷ்மீபுரத்தில், உபன்யஸித்து அது பூர்த்தியாகி பாண்டவபட்டாபிஷேகம் நடக்கும் தினமும் ஸ்ரீபிரஹ்ம வித்யாவிமர்சினீ ஸபையின் ஆண்டுவிழா தின

மும் ஒன்ருகக் கூடிற்று. ஸ்ரீகண்ணனது திருவுருவப் படம் விமானத்திலலங்கரிக்கப்பட்டு ஊர்வலமாக வரும்போது ஷடி ஸபையின் ஸ்தாபகரும் தலைவருமான பிரஹ்மஸ்ரீ அருட்கவி, ந. சுப்ரமண்ய அய்யர் அவர்களங்குவர, தாங்களே இத்தொண்டைச் செய்யுங்கள் என அவர்களைப் பிரார்த்தித்தேன். அவர்களும் நீதான் எழுதவேண்டுமென்று கூறினுர்கள். ஆனுல் ஒவ்வொரு வரியும் தாங்கள் விடாமல் படித்து ஸம்ப்ரதாய விரோதமாக இருந்தால் திருத்தி, ந்யாஸம் போன்ற கடினமான பாகங்களைத் தாங்களே எழுத வேண்டுமெனப்பிரார்த்தித்தேன். அன்புடன் அவர்கள் அதை அப்படியே அங்கீகரித்துச் செய்தும் முடித்தார்கள். ஆதலின் அடியேனும், பிரசுரதாரரும், உபாஸகர்களும் அவர்களுக்கு எவ்வளவு நன்றி செலுத்தினுலும் போதாது.

அத்துடன் இவ்வரிய நூலின் ரஹஸ்யார்த்தங்களை விளக்கி விரிவாக ஒரு முகவுரை எழுதும்படியும் வேண்டினேம். அதற்கு மிசைந்து நூலெனும் தேனடையைப் பிழிந்தெடுத்தது போல் மிக மிக சுவை ததும்பும்படி எல்லோருமெளிதில் அவ்வாநந்தத்தைப் பருகும்படி எழுதிய இதற்கு வையகமே ஈடாகாது.

"ஶ்ரோத்ரியாக்ஷரம் தெளிவாயிராது" எனச் சாணக்யன் கூறியபடி மற்றவைகளில் ஶ்ரோத்ரியனல்லாவிடினும் கையெழுத்தில் அடியேன் பூர்ணஶ்ரோத்ரியனே. அத்தகைய அடியேனது கையெழுத்தை மிக சிரமத்துடன் படித்து வேறு காபி எழுதி, அச்சுப்பிழைகளைத் திருத்திய ஸ்ரீமான் S. ஸாம்பமூர்த்தி அய்யர் அவர்களின் உதவி என்றும் மறக்கத்தக்கதல்ல.

தர்மசிந்தையுடன் அபூர்வமான பல அரிய நூல்களை அச்சிடுவதுடன், ஆங்காங்கு உசிதமான பல படங்களை இணைத்துத் தார்மிக உலகிற்கும் விசேஷமாக உபாஸக உலகிற்கும் ஸ்ரீமான், T. S. நாராயணஸ்வாமி அய்யரவர்கள் செய்துவரும் உத்தமதொண்டிற்கு அவர் பேரானந்தமடைந்து நீண்டநாள் ஜிவித்திருந்து மற்றும் பல தொண்டு செய்யும்படி அன்னை மனங்குளிர்ந்து அருள்புரிய வேண்டுகின்றேன். அன்னையின் தொண்டில் அடியேனை ஆளாக்கினுள். புருஷபுத்தி ஸ்வபாவத்தினல் ஸாதாரணமான தவருதல்கள் தோன்றின் அதைப் பரதேவதா பக்தர்களும் அன்னையும் க்ஷமிக்க வேண்டுகிறேன்.

அமரகலா விலாஸிநீ ஸபா,
154, தம்புசெட்டி வீதி,
சென்னை.

இங்ஙனம் பக்த பாததூளி,
ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.



பிரஹ்மஸ்ரீ ந. சுப்ரமணிய அய்யர்.

॥ श्रीः ॥

முகவுரை.

श्रीमन्मद्गुरुबोधितं श्रितमनोऽभीष्टप्रदानक्षमं
श्रीकामाख्यसुपीठमध्यमगतं श्रीनाथसंसेवितम् ।
एकाम्रद्रुमनाथभावितमुमालक्ष्मीसुवागाश्रितं
त्वेकं चिद्घनमाश्रये परमहं सचित्स्वरूपं महः ॥

ஸ்ரீலலிதோபாக்யான மங்களாசரணம்.

"अस्तु वः श्रेयसे नित्यं वस्तु वामाङ्गसुन्दरम् ।
यतस्तृतीयं विदुषां तुरीयं त्रैपुरं महः ॥"

ஜீவப்பிரஹ்மைக்கியவடிவ தத்துவக்ஞானஸ்வரூபிணியாயுள்ள எந்த சித்சக்தியின் அபரோக்ஷஞானத்தினால் வித்வான்களுக்கு மூன்றாவது அவஸ்தையாயுள்ள ஸுஷுப்தியானது அதற்குப் பரமாயும், ஸ்தூலஸூக்ஷ்ம காரண சரீரங்களுக்கு அதிஷ்டான பிரகாசவடிவ துரீய ஸ்வரூபமாயும் விளங்குமோ, அத்தகைய-மஹாகாமேஸ்வரரது வாமபாகத்தில் விளங்கும்—மஹாத்ரிபுரஸுந்தரியென்னும் (த்ரிகாலாபாத்திய)நித்தியவஸ்துவானது நமது ஸ்ரேயஸ்ஸின் பொருட்டு (நமது சித்தத்தில்) ஆவிர்ப்பவிக்கட்டும். அல்லது, எந்த ஜீவப் பிரஹ்மைக்கியக் ஞானத்தினால் ஆத்மஞானிகளுக்கு மூன்றாவது புருஷார்த்தமாகிய காமமானது அதற்கடுத்த நான்காவது புருஷா

ர்த்தமாகும் (திரிவர்க்கங்களின் நீக்கமாகும் அபவர்க்கவடிவ) மோக்ஷமாக விளங்குமோ, அத்தகைய பிரஹ்மவித்யாஸ்வ ரூபிணியும், மஹாகாமேஸ்வரரது வாமபாகத்தில் விளங் கும் த்ரிபுரஸுந்தரியுமான ஸத்யாநந்த சித்சக்தியானது நமது சிரேயஸ்ஸர்கும் பரமபுருஷார்த்தலாபத்தின் பொ ருட்டு அபரோக்ஷமாய் விளங்கட்டும்.

"स्त्रीसङ्गमो मोक्षति त्वत्पादसंसेवनात्"

தேவீ மஹிம்னம்

ஸ்ரீலலிதோபாக்யானமென்னும் இச்சிறந்த நூலா னது பதினெண் மஹாபுராணங்களுள் கடைசியதான பிர ஹ்மாண்ட புராணத்தின் உத்தரகண்டத்தில் ஸ்ரீஹயக்கிரீ வருக்கும் அகஸ்தியருக்கும் நடந்த ஸம்வாதவடிவமாய் விளங்குவதாகும்.

ஸ்ரீஹயக்கிரீவரின் வரலாறு

முன்னொருகாலத்தில் சதுர்முகப் பிரஹ்மன் ஜகத் தைச் சிருஷ்டிசெய்ய உத்தேசித்து

क इति ब्रह्मणो नाम तेन तत्राञ्चितो हरिः ।
तस्मात्काञ्चीति विख्याता पुरी पुण्यविवर्धनी ॥

என்று புகழப்பட்ட காஞ்சிக்ஷேத்திரத்தில் பூர்வாங்கமாக ஒரு அஸ்வமேதயாகம் இயற்றினன். அந்தயாகம் ஆயிரம் மஹாயுகங்கள் நடந்தது. இங்ஙனம் இயற்றுகையில் அது அஸுரர்களால் அழிந்துகெடாவண்ணம் காப்பாற் றித்தர பிரஹ்மன் மஹாவிஷ்ணுவை வேண்டிக்கொண்ட னர். வாஸுதேவனும் அவரது வேண்டுகோளுக்கிரங்கி வில்லம்புகளைத் தாங்கி அந்தயாகம் முடியும்வரை நித்திரா

ஹாரங்களின்றி யதை ஸம்ரக்ஷித்துக்கொண்டிருந்து அது முடிந்தவுடனே அதிகக் களைப்பால் அவ்வில்லைக் கழுத்தில் தாங்கிக்கொண்டு அப்படியே தூங்கிவிட்டனர். இங்ஙனம் ஐந்நூறு மஹாயுகங்கள் வரையில் தூங்கிக்கொண்டே யிருந்தனர். அப்பொழுது பிரஹ்மாமுதலிய தேவர்கள் யாவரும் மஹாவிஷ்ணுவை எங்ஙனம் விழிக்கச் செய்வதெனப்பலவிதமாய் யோஜித்துக் கடைசியில் சிதல் (வம்ரீ) என்னும் ஒருவகைப் புழுவைச் சிருஷ்டித்து அதைக் கொண்டு விஷ்ணுவின் கழுத்திற்குக் கீழுள்ளகோதண்டத்தின் நாணைக்கடித்து அரிக்கும்படி ஏற்பாடுசெய்தனர். அதுவும் அங்ஙனமே வில்நாணையரிக்க அது அறுபட்டு அதன் வேகத்தினால் மஹாவிஷ்ணுவின் சிரம் அறுபட்டு ஆஹவனீயாக்னியில் விழுந்து பஸ்மமாயிற்று.

இதைக்கண்டு பிரஹ்மாவும் மற்றதேவர்களும் ஹாஹாகாரத்தோடு மிகவும் வருந்தி, இன்னது செய்வதெனப் புலப்படாது, பராசக்தியாகும் ஜகதம்பிகையைத் துதித்தனர். அப்பொழுது பராசக்தியானவள் அசரீரியாய் ஆகாயத்தில் தோன்றி, “ஹே பிரஹ்மன்! நடந்தவற்றைப் பற்றி வருந்துவதில் பயனில்லை; யாவும் ஒரு நிமித்தத்தின் பொருட்டே ஸம்பவித்தனவாகும். ஹயக்கிரீவனென்னும் ஓரஸுரன் பலவரங்களைப் பெற்று வேதமார்க்கத்தில் நிஷ்டையும் சிரத்தையும் உடைய ரிஷிகள், முனிகள் முதலியவர்களை வருத்துகின்றனன். அவனுக்குத் தன்னைப் போலவே குதிரை முகமுடைய வொருவனால்தான் மரணம் ஏற்படவேண்டும். ஆதலின் அவ்வஸுரனது நாசத்தின் பொருட்டு இந்தயாக பசுவாகிய அஶ்வத்தின் சிரஸ்ஸை விஷ்ணுவின் சரீரத்தோடு பொருத்துங்கள். அவர் உயிர் பெற்று எழுந்திருப்பார். அஶ்வ முகத்தோடு

விளங்குவதால் விஷ்ணுவுக்கு "ஹயக்கிரீவர்" என்னும் பெயர் ஏற்படட்டும். இவரால் அவ்வஸுரன் ஸம்ஹரிக்கப்படுவான்" என்று திருவாய் மலர்ந்தனள்.

பிரஹ்மாதி தேவர்களும் ஜகதம்பிகையின் ஆக்ஞையின் படியே செய்தனர். மஹாவிஷ்ணுவும் புநர் ஜீவிதராய் தூக்கத்தினின்றும் விழித்தது பொலெழுந்து, தனது அழகான முகம் போனமைக்கு மிகவும் வருந்திப் பரதேவதையைத் துதித்து நிற்கையில், அம்பாள் "இன்னும் ஐந்நூறு மாஹாயுகங்கள் வரையில் இந்த க்ஷேத்திரத்தில், காமகோடி பீடத்தில் என்னை விதிப்படி ஆராதித்துக் கொண்டு, தேடிவரும் தக்கவித்யார்த்திகளுக்குப் பிரஹ்மவித்தையை யுபதேசித்துக்கொண்டிருப்பாயாக; பிறகு உனக்கு ஸ்வபவமான முகம் ஏற்படும்" என்று மொழிந்து மறைந்தனள். அந்த ஆக்ஞையின்படி மஹாவிஷ்ணுஸ்வரூபரான ஹயக்கிரீவர் இன்னும் காஞ்சீ காமகோடிபீடத்தில் ஸ்ரீ காமாக்ஷி தேவியைத் தூர்வாஸகல்ப (ஸௌபாக்ய சிந்தாமணி) பத்ததியின்படி ஆராதித்துக் கொண்டிருக்கின்றனர்.

அகஸ்தியர் காஞ்சிமாநகரத்திற்கு வந்தது.

அகஸ்தியரது சிஷ்யனான விந்தியன் நாரதருடைய கலகத்தால் ஹிமவானுடன் போட்டி போட்டுக்கொண்டு ஸூர்ய சந்திரர்களுடைய கதியைத் தடைசெய்யும்படியான அவ்வளவு உயரம் வளர்ந்ததனால், ஸூர்ய சந்த்ர கதிகள் தடைப்பட்டு ஸகல வேதோக்த கர்மாக்களுக்கும் பங்கம் ஏற்பட, சதுர்முகன் பிரஹஸ்பதியுடன் கலந்து யோஜித்துக் காசிக்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு வஸிக்கும் அகஸ்தியரைத்தரிசித்து விந்தியமலையை யடக்கும்படியும், அதற்காக அவரை

काश्यां मरणतो मुक्तिः शिवसारूप्यदा हि सा ।
काञ्च्यां स्मरणतो मुक्तिः सायुज्यपददायिनी ॥

என்னும் பிரமாணத்தின்படி காசியினும் சிறந்த காஞ்சிக்குச் சென்று அங்கேவஸிக்கும்படியும் வேண்டிக்கொண்டனர். அவர்களது வேண்டுகோளுக் கிசைந்து அகஸ்தியரும் காசியிலிருந்து புறப்பட்டுத் தனது தர்ம பத்தினியாகும் லோபாமுத்ரா தேவியுடன் காஞ்சியாத்திரை செய்தனர். வரும் வழியில்,

विन्ध्यः प्रणम्य तं भूयः प्रार्थयामास साञ्जलिः ।
भगवन् मुनिशार्दूल लोपामुद्रापतेऽधुना ॥
शाधि मां करवाण्यत्र किङ्करं किं मुनीश्वर ।

விந்தியன் அகஸ்தியரை வணங்கி 'ஹேபகவன்! தங்களது சிஷ்யனுகும் யான் செய்யவேண்டிய பணி யாது? என்று வினவி நமஸ்கரிக்க, அகஸ்தியர்

अहं त्रिदशकार्यार्थं प्रस्थितो दक्षिणां दिशम् ।
त्वमेवं तिष्ठ विन्ध्याद्रे यावदागमनं मम ॥

ஓ விந்தியனே! யான் தேவகார்யத்தின் பொருட்டுத் 'தென்திசையில் (காஞ்சிக்கு) செல்கின்றேன். யான் திரும்பி வருமளவும் நீ இங்ஙனமே இருப்பாயாக" என்று ஆக்ஞாபித்துக் காஞ்சி க்ஷேத்திரத்திற்கு வந்தனர். வந்ததும் ஸ்ரீகாமாக்ஷி தேவியையும் ஸ்ரீகாமேஶ்வரராகும் ஏகாம்ரநாதரையும், தேவராஜஸ்வாமியையும் தரிசித்து, மஹாவிஷ்ணுவைக் குறித்து நெடு நாள் தவமியற்றினர். விஷ்ணுவும் பிரத்தியக்ஷமாகி, என்ன வேண்டுமென்று வினவ, அகஸ்தியர் லோக க்ஷேமத்தின் பொருட்டு பாமரர்களும்

முத்தியடைதற்குச் சுலபமான ஸாதனமிதுவெனக் கூற வேண்டுமென்று பிரார்த்திக்க, வாஸுதேவன் ஸ்ரீஹயக்கிரீவரைக் காட்டி அவர்பால் யாவற்றையும் தெரிந்து கொள்ளும்படி ஆக்ஞாபித்து அந்தர்த்தானமாயினர். பின் அகஸ்தியர் ஹயக்கிரீவரைப் பணிந்து,

यदि तुष्टोऽसि भगवन् इमे पामरजन्तवः ।
केनोपायेन मुक्ताः स्युरेतन्मे वक्तुमर्हसि ॥

பாமரஜனங்களும் எந்த உபாயத்தினுல் மோக்ஷமடையக் கூடுமென்று வினவ, ஹயக்கிரீவரும் பரமஸந்தோஷத்தோடு "ஜகதம்பிகையாகும் பராசக்தியின் ஸ்வரூபம் நன்கு அறியப்பட்டு உபாஸிக்கப்படுமேயாயின், அஃதொன்றே போதுமானது; பாபிகளுக்கும் முக்தி ஸுலபம்" என்று கூறிச் சித்சக்தியின் ஸ்வரூபம், ஆவிர்ப்பாவம், மஹிமை, முதலியவற்றைப்பற்றி ஸவிஸ்தாரமாய்த் திருவாய் மலர்ந்தருளினுர். இங்ஙனம் இவ்விருவர்க்கும் நடந்த ஸம்பாஷணையே ஸ்ரீலலிதோபாக்கியானமாகும்.

இவ்வுபாக்கியானத்தில் பண்டாஸுரனது உத்பத்தி, அவனியற்றிய பீடைகள், லலிதாதேவியின் பிராதுர்ப்பாவம், லலிதையின் சக்தி ஸமூஹத்தின் பிரபாவம், பண்டாஸுரவதம், மன்மதன் மறுபடியும் உயிர்பெற்று விளங்கல் முதலிய பலவிஷயங்கள் அடங்கியுள்ளன.

இக்கதை புராணுந்தர்க்கதமாயிருக்குங் காரணத்தால், இதற்கொரு ரஹஸ்யார்த்தம் இருந்தே தீரவேண்டுமென்பது நியமம். ஏனெனின், வேதத்திலுள்ள துரூஹமான சிலவிஷயங்களைத் தெளிவாய்ப் புலப்படுத்தவே புராணங்கள் ஏற்பட்டன. ஆதலின் புராணங்கள் வேதத்தின் உபப்பிரஹ்மணங்களாகும். வேதத்தின் கர்மகாண்ட உபப்

பிரஹ்மணம் தர்மசாஸ்திர ஸ்ம்ருதிகளெனவும், ஞான காண்ட உபப்பிரஹ்மணங்கள் புராணங்களெனவும் கூறப் படும். ஆகவே புராணகதைகளுக்கு பிரஹ்மஸ்வரூபத்தில் தான் தாத்பர்யமென்பது சாஸ்திர ஸித்தாந்தமாகும்.

ஸ்ரீலலிதோபாக்யான கதாஸங்கிரஹம்.

முன்னொருகாலத்தில் பரதேவதையின் புஷ்பப் பிர ஸாதத்தை இந்திரன் அசட்டைசெய்ததனால், அவனது த்ரைலோக்யஸாம்ராஜ்யமானது சீரும் சிறப்பும், தேஜஸும் அற்று ஒழியக்கடவதெனப் பகவான் துர்வாஸ மஹரிஷி சாபமிட்டனர். இந்தசாபத்தோடு, தக்ஷப் பிரஜாபதி செய்த நிரீஸ்வரயாகத்திற்கு மற்ற தேவர் களோடு இந்திரன் சென்றமைக்குக் கோவித்துத் ததீசி முனிவரிட்ட மற்றொருசாபமும் காரணமாக இந்திராதி தேவர்கட்கு வலிவு குன்றிப் பகைவர்களாகின்ற அஸுரர் களால் ஏற்பட்ட துன்பங்களுக்குட்பட்டு வருந்த நேரிட் டது.

தாரகன் முதலிய அஸுரரால் தேவர்கட்கு நேரிட்ட துன்பத்தை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு குஹப் பெருமானையுண்டாக்கப் பிரஹ்மாதி தேவர்கள் பார்வதீ பரமேஸ்வரர்களை யொன்று சேர்க்கும்படி மன்மதனை வேண்டிக்கொண்டனர். மன்மதனும் பரமசிவன் மேல் புஷ்பபாணங்களை யெய்தனன். அப்போது, முன் தனக் கேற்பட்ட பிரஹ்மசாபத்தின்படி, அவன் பரமசிவனது நெற்றிக்கண்ணால் எரிந்து சாம்பலானான். அச்சாம்பலி லிருந்து பண்டாஸுரன் என்னும் ஓரஸுரன் மஹாரௌத் ரத்தோடு தோன்றினான்.

தோன்றியவுடன் அவன் பரமசிவனைத் துதித்துத் தவமியற்றிப் பகைவர்களின் பாதிபலம் தன்னைச்சாரும் படியும், பகைவரின் அஸ்த்ர சஸ்த்ரங்கள் தன்னிடத்தில் பயனற்றுப் போகும் படியும், அறுபதினாயிரம் வருஷங்கள் பகையற்று ஏகசக்ராதிபத்யம் செய்யவும் வரம் பெற்றுத் தானும் தனது தோள்களிற்றோன்றிய தன் தம்பிகள் இருவரும் ஸ்வர்க்க மர்த்திய பாதாளங்களென்னும் மூவுலகங்களையும் ஆக்கிரமித்து நிர்வீர்யமாக்கினர்.

இவர்களது அட்டூழியங்களை நினைந்து தேவர்கள் பிரஹ்ம விஷ்ணுக்களோடு யோஜித்து ஒரு மஹாயாகமியற்றினார்கள். அந்த யாககுண்டத்தினின்றும் ஸ்ரீசக்ரராஜமென்னும் சிறந்த ரதத்தில் ஆரோஹணித்து ஸ்ரீலலிதாம்பாள் ஆவிர்ப்பவித்தனள்.

ஸ்ரீலலிதாத்ரிபுரஸுந்தரியின் ஆவிர்ப்பாவம் இந்நூலில் இரண்டுவகையாகக் கூறப்பட்டுள்ளது. (1) இந்திராதி தேவர்கள் மேரு மலைக்கருகில் ஒரு யோஜனை விஸ்தாரமுள்ள ஒரு ஹோமகுண்டத்தை நிர்மித்து, அதில் மஹாயாக விதானப்படி ஸகல தேவசரீரங்களையும் அங்கங்களையும் ஹோமம் செய்ய, அவ்வக்கினி குண்டத்திலிருந்து லலிதை ஆவிர்ப்பவித்தனளென்பது ஒருவகை. இது,

कुण्डं योजनविस्तारं सम्यक्कृत्वा तु शोभनम् ।
महायागविधानेन प्रणिधाय हुताशनम् ॥
यजाम परमां शक्तिं महामांसैर्वयं सुराः ।
ब्रह्मभूता भविष्यामो भोक्ष्यामो वा त्रिविष्टपम् ॥
एवमुक्त्वा ततः सर्वे देवाः सेन्द्रपुरोगमाः ।
विधिवज्जुहुवुर्मांसमुत्कृत्योत्कृत्य मन्त्रतः ॥

हुतेषु सर्वमांसेषु पादेषु च करेषु च ।
होतुमिच्छत्सु देवेषु कळेबरमशेषतः ॥
प्रादुर्बभूव परमं तेजःपुञ्जमनूपमम् ।
कोटिसूर्यप्रतीकाशं चन्द्रकोटिसुशीतलम् ॥
तन्मध्यमे समुदभूच्चक्राकारमनुत्तमम् ।
तन्मध्यमे महादेवीमुदयार्कसमप्रभाम् ॥
जगदुज्जीवनाकारां ब्रह्मविष्णुशिवात्मिकाम् ।
सर्वाभरणसंयुक्तां शृङ्गारैकरसालयाम् ॥
पाशाङ्कुशेक्षुकोदण्डपञ्चबाणलसत्कराम् ।

என்னும் பிரமாணத்தால் ஏற்படுகின்றது.

2. மஹாஸம்புநாதர் சுத்தநீர்க் கடலையே ஹோம குண்டமாகவும், மற்ற ஆறு கடல்களிலுள்ள வஸ்துக்களை யும், ஜராயுஜமாதி நால்வகைப் பிறப்புப் பிராணிகளையும், ஸ்தாவராதிகளையும், யக்ஷகின்னர கிம்புருஷ, வித்யாதர ராதிஸமஸ்ததேவதாசரீரங்களையும் அகண்டாக்கினியில் ஹோமம் செய்து காரிகாஷ்டகம் படித்துத் துதித்த பின் னர், மஹா ஸ்மஸானமாகும் அவ்வக்கினி குண்டத்தி லிருந்து பரதேவதை ஆவிர்ப்பவித்தனளென்பது இரண் டாவது வகை. இவ்விஷயம்,

स महाशंभुरुत्थाय विधुन्वन्भुवनत्रयम् ।
सप्तमं शुद्धजलधिं कुण्डार्थं समशोषयत् ॥

என்பது முதல்,

आविर्बभूव चिद्वह्नेर्ललितापरमेश्वरी ।
चतुर्योजनविस्तारं दशयोजनमुन्नतम् ॥

नवपर्वसमायुक्तं सर्वतेजोमयाकृतिम् ।
चतुर्वेदमहाचक्रं पुरुषार्थमहाहयम् ॥

आनन्दध्वजसंयुक्तं तत्प्रकार्तस्वरोज्ज्वलम् ।
सर्वाग्रे बिन्दुपीठेन सहितं ब्रह्मचारिणा ॥

मेरुप्रस्ताररूपाढ्यं चक्रराजरथोत्तमम् ।
आरूढा ललिता देवी स्वयं प्रथममुद्गता ॥

என்பது வரையுள்ள பிரமாணங்களால் நன்கு விளங்குகின்றது.

இங்ஙனம் லலிதாம்பாள் ஆவிர்ப்பவித்து ஸர்வ சக்திகளையும் பிரபஞ்சத்தையும் தன் சரீரத்தினின்றும் சிருஷ்டித்துப் பண்டாஸுரனையும் அவனது ஸோதர, புத்ர, ஸேனைகளையும் ஸம்ஹரித்து மறுபடியும் மன்மதனைப் புனர் ஜீவிதனாகச் செய்து, பார்வதியைப் பரமசிவனுக்கு மணம் புரிவித்துக் குஹனைத் தோற்றுவித்துத் தாரகன் முதலிய அஸுர பாதையை நிவர்த்தித்துத் தேவர்கட்கு அபயமளித்தனள்.

இக்கதையானது ஸ்காந்த புராணம், சங்கரஸம்ஹிதை, ஸம்பவ காண்டத்தில் கூறப்பட்டுள்ள காமதஹனத்திற்கும், பார்வதிகல்யாணத்திற்கும் மத்தியகாலத்தில் நடைபெற்றதாக ஏற்படுகின்றது.

மன்மதன் எரிந்த சாம்பலிலிருந்துண்டான ஒரு அஸுரனைப், பராசக்தி தோன்றி, ஸம்ஹரித்து மறுபடியும் காமனைப் பிழைப்பித்த விஷயமே லலிதோபாக்யானத்தில் பிரதானமாய் விளங்குகின்றது.

இவ்வுபாக்கியான கதையின் ஸாரம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமத்தில் 64 வது நாமாவாகும்.

“देवर्षिगणसंघातस्तूयमानात्मवैभवा”

என்பது முதல் 84-வது நாமாவாகும்

“हरनेत्राग्निसंदग्धकामसंजीवनौषधिः”

என்பது வரையிலுள்ள நாமாக்களில் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்குப் பாஷ்யமியற்றிய ஸ்ரீபாஸ்கரராநந்த நாதர் பண்டாஸுரன் முதலிய அஸுரர்களினுடையவும், பாலா; ஶ்யாமளா, வாராஹீ, முதலிய சக்திகளினுடையவும், ஸ்ரீ லலிதையினுடையவும் ரஹஸ்யார்த்தத்தை வெகு அழகாக நிரூபணம் செய்துள்ளார்.

அவ்விமர்சனத்தை யநுஸரித்தே ஸ்ரீலலிதோபாக்யானத்தின் தத்துவம் இங்கே சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

ஸ்ரீலலிதோபாக்யான தத்துவம்.

இந்திரன்	=	விவேகாதிஸாதன சதுஷ்டய ஸம்பத்தியை யுடைய சுத்த அந்தக்கரணத்தோடு கூடிய ஜீவன்.
பரமசிவனால் எரிக்கப் பட்ட காமன்.	=	புஷ்பம், சந்தனம், ஸ்திரீ முதலிய பாஹ்யவிஷய ஸுகங்களில் உள்ள அசுத்த காம வ்ருத்தி.

பண்டாஸுரன்	= மல விக்ஷேப ஆவரணாதி தோஷங்களோடுகூடிய அசுத்த ஜீவபாவம். भण्डो जीवभावः
விஷங்கன்	= சப்தஸ்பர்சாதி விஷயங்களில் அபிலாஷை विरुद्धः सङ्गो विषङ्गः; विषयाभिलाषः
விசுக்கிரன்	= சுக்கிரமாகும் ஞான தேஜஸ்ஸுக்கு விரோதபாவம். கோரவ்ருத்தியும் மூடவ்ருத்தியும் கூடிய, சோகத்தைத் தரும் நிலை
பண்ட புத்திரர்கள் சதுர்ப்பாஹு முதல் உபமாயன் வரை முப்பது பேர். }	ஆணவம், மாயிகம், கார்மிகம் முதலிய பாப எண்ணங்கள்.
பண்டனது மந்திரிகள் இந்த்ரசத்ரு, வித்யுன்-மாலி முதலிய எண்மர் }	காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், தம்பம் ஹிம்ஸையென்னும் அஷ்டராகங்கள்.
பண்டஸைன்யங்கள்	= ஜீவபாவத்திற்கு அநுகூலமான த்வைத வ்ருத்திகள்.
விக்னயந்த்ரம்	= அத்வைத ஞானத்திற்கு அநுகுணமான ஆத்ம கோசர வ்ருத்திகளைச் செழித்து ஓங்காமல் தடுக்கும் ப்ரத்யூஹ (விக்ன) ங்களின் கூட்டம்.

சூன்யக நகரம் = அக்ஞானம்.

சிதக்னிகுண்டம் = அக்ஞான அவித்தைகளையும் அவற்றின் காரியங்களையும் ஒழிக்கும் அகண்டஞானகார வ்ருத்தி

ஸ்ரீலலிதை = அஹம்பத லக்ஷ்யார்த்தரூப ஆத்மஞானம்.

ஸ்ரீசக்ரராஜ ரதம் = பிரபஞ்சம், சரீரம், அல்லது பரிசுத்தமான அந்தக்கரணம்.

ஸ்ரீசக்ரத்தின் சக்திகள் = ஜிவஸம்பந்தமான அவித்யா துவைதவிருத்திகளை நாசம் செய்யும் ஆற்றலுள்ள ஆத்ம கோசரவ்ருத்திகள்.

குறிப்பு:—ஒன்பது சக்ரங்களோடு கூடிய ஸ்ரீ சக்கிரத்தில் ஒவ்வொரு சக்ரத்திலுள்ள ஆவரண சக்திகளினுடையவும், சக்ரங்களினுடையவும் தத்வார்த்தம், சென்னை, பிரஹ்ம வித்யா விமர்சனீ ஸபை வெளியிட்டுள்ள "ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை" யென்னும் நூலில் நிரூபணம் செய்யப் பட்டிருக்கின்றது. விஸ்தாரமாய் அறிய விரும்புவோர் அதில் கண்டு தெளிக.

ஆத்ம கோசர வ்ருத்திகளாகும் ஸ்ரீ லலிதாம்பாளின் ஆத்மீய சக்திகளின் விவரம்.

சக்தியின் பெயர்-	லலிதையின் எந்த அங்கம் அல்லது அம்சத்திலிருந்து தோன்றியது	தத்துவம்.
1. பராம்பாள்.	ஹ்ருதயம்.	அத்வைத தாத்பர்யம்.
2. ஶ்யாமளே.	புத்தி.	மனன வ்ருத்தி
3. வாராஹி.	அஹங்காரம்.	நிதித்தியாஸன வ்ருத்தி
4. விக்னேஶ்வரன்.	புன்சிரிப்பு.	ஸந்தோஷம்.
5. ஷடாம் நாய தேவதைகள்	மூலாதாராதி ஷட்சக்ரங்கள்	சுபேச்சை முதல் ஆறு ஞானபூமிகா வ்ருத்திகள்.
6. பாலே.	விளையாட்டு.	நிருபாதிக நாட்டத்தின் ஆரம்ப ஸ்திதி.
7. ஸம்பத்கரீ.	அங்குசம்.	யோகம்.
8. அஶ்வாரூடை.	பாசம்.	பாஹ்யேந்திரிய அடக்கம்.
9. நகுலீ	தாலு தேசம்.	சிரவணம்.
10. ரஶ்மிமாலா தேவதைகள்.	மூலாதாரம் முதல் பிரஹ்ம ரந்தரம் வரை	சப்தஸ்பர்ஶ ஸுகதுக்காதி விஷய ஞானங்களின் அதிஷ்டானம்.

இங்ஙனம் ஸ்ரீ லலிதா தேவியானவள் ஸகல ஆத்மீய சக்திகளைக் கொண்டு அநாத்ம-அவித்யா வ்ருத்திகளாகும் பண்டஸைன்யத்தையும் பண்டாஸுரனையும் நாசம் செய்தனளென்பது தான் மேற்படி உபாக்யான கதையின் சிறந்த தத்துவமாகும்.

ஒரு சங்கை:—ருத்ர கோபாக்கினியிலிருந்து பிறந்த பண்டாஸுரன் தோன்றியவுடனே சித்ரகர்மகணேசன் அவனுக்குச் சதருத்ரீய மஹாமந்த்ரத்தை யுபதேசித்து ஸ்ரீமஹாதேவனைத் துதிக்கும்படி செய்தனன். அவனும் அப்படியே துதித்துப் பரமசிவனிடத்திலிருந்து வரங்களைப் பெற்றதோடு சிவபூஜா துரந்தரனாய் விளங்கினான். மற்றும் வேத வேதாங்க பாராயணத்தோடு யக்ஞயாகாதிகளும் இயற்றிக்கொண்டு வந்தானென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இது

अर्चयन्तो महादेवमास्थिताः शिवशासने ।
बभूवुर्दानवास्तत्र पुत्रपौत्रधनान्विताः ॥
गृहे गृहे च यज्ञाश्च संबभूवुः समन्ततः ।
ऋचो यजूंषि सामानि मीमांसान्यायकादयः ॥
प्रवर्तन्ते स्म दैत्यानां गृहं प्रति गृहं प्रति ।
यथाश्रमेषु मुख्येषु मुनीनां च द्विजन्मनाम् ॥
तथा यज्ञेषु दैत्यानां बभूवुर्हव्यभोजिनः ॥"

என்னும் மேற்படி லலிதோபாக்யானப் பிரமாணங்களால் ஏற்படுகின்றது. இங்ஙனம் பண்டன் வேதோக்த கர்மங்களிலும், சிறந்த சிவோபாஸனையிலும் துரந்தரனாய் இருக்க அவனைத் துஷ்டனாக நினைத்து அவனைச் சம்ஹரிக்க யத்தனித்தல் தர்மமாகுமா?

ஸமாதானம் : — தர்மமேயாகும். பண்டாஸுரன் வெளிக்கு, ஸகலவேதோக்த யக்ஞயாகாதி கர்மாக்களையும் சிவாராதனத்தையும் செய்தானே யொழிய ஆந்தரமாய் மஹா பாஷண்டன். டம்பத்துக்காகவே எல்லாவற்றையும் இயற்றினன். இவ்விஷயம் பண்டதத்துவ விமர்சனத்தால் நன்கு புலப்படும்.

பண்டாஸுரதத்துவம்

ரஜஸ்தமோ குணப்பிரதான அசுத்த காம (மன்மத) னுடைய ரூபாந்தரமே பண்டாஸுரனென்பதில் யாதொரு ஸந்தேஹமுமின்று. அசுத்த காமன் எரிந்து சாம்பலான பொழுது சரீரம் மாத்திரம் நாசமாயிற்றே தவிர அசுத்த காமத்துவம் நாசமாகவில்லை. எங்ஙனம் இரும்பு செம்பு முதலிய உலோஹங்கள் ப்ஸ்மமாக்கப் பட்டபோது, அதற்கு முன்னிலும் அதிக வீர்யமுண்டாகின்றதோ, அங்ஙனமே ரூபாந்தரத்தை யடைந்த பண்டனென்னும் அசுத்த காமனுக்கு வீர்யமதிகரித்தது. மஹா வைராக்கியத்தோடு விளங்கும் சிவனது அக்கினி நேத்திரத்தால் எரிக்கபட்டமையால் பண்டனுக்குக் குரோதமும் கோபமும் அதிகரித்திருந்தன. வைராக்கியவ்ருத்தியினல் அஹங்காரமும் காமமும் (நாசமாகாமல்) பீஜவடிவமாய் இருக்கின்றன வென்பது சாஸ்திர ஸித்தாந்தமாகும். ஸர்வ விஷயங்களும் விஷம் போல் தூஷ்யமாய்த் தோன்றுவதால் எதனிடத்திலும் பிரியமென்பதே கிடையாது.

“रसो वै सः, रसँ ह्येवायं लब्ध्वानन्दीभवति”

ரஸமே ஆநந்தம். ரஸரூப ஆநந்தத்தை நாசம் செய்பவன் **பண்டன்.** இது பிரஸித்தமானது.

भण्डासुराभिधः कश्चिदभूदसुरपुङ्गवः ।
ततः सर्वाणि भूतानां शरीराणि सहात्मभिः ।
संप्रविश्य सुवीर्याणि भक्षयामास वीर्यवान् ॥
देवानां च मनुष्याणां गन्धर्वाणां च भोगिनाम् ।
शरीराणि समं प्राप्य वीर्याण्यादत्सहात्मभिः ॥"

என்று காஞ்சிமாஹாத்மியம் 35வது அத்தியாயம் கூறு வதிங் கறியத்தக்கது.

வைராக்கியதசையில் சப்தஸ்பர்ஸாதி வடிவ பிரபஞ் சத் தோற்றம் இருப்பதால் தத்துவஞானமும் இல்லே. ஆத லால் ஆநந்தம் விளங்கவில்லே. ஆதலாற்ருன் பண்டன் அசுத்த ஜீவப்பாவமாகக் கூறப்பட்டது. மேலும் அக்ஷர ங்களின் மாறுபாட்டால் டம்பன் என்பது தான் பண்ட னென்று வியவகரிக்கப் படுகின்றது. ஆதலின் அவனு டைய ஆசரணே வெளிவேஷமே யாகும். அனுபவமின்றி வாய் வேதாந்தம் பேசுதலும் பண்டத் தன்மையே யாகும்.

காமத்தின் பீஜவடிவ பண்டாஸுரனது நாசம் சித் சக்தியினுல்தான் ஆகும். இதுதான் காமப்பிரளயமென் பது.

कामप्रलयतोद्धर्त्री ललितापरमेश्वरी ।
प्रत्यण्डं प्रतिकल्पं च साविर्भावं समश्नुते ॥
मदंशेन महेशेन रोषाद्दग्धे मनोभवे ।
तद्भस्मप्रोत्थितैर्भण्डमुखैराकुलितं जगत् ॥
विनष्टं च विसारं च मृतप्रायमभूत्सुराः ।

என்னும் பிரமாணத்தின்படி மனத்தோற்றங்களாகும் காமாஹங்காரங்கள் யதார்த்த ஞானத்தினால்தான் நாச மாகும்.

ஆகவே இதுவரையிற் செய்த விசாரத்தால் பண்டன் அசுத்த அஹங்காரத்தோடும் அசுத்த காமத்தோடுங்கூடிய ஜீவபாவமே யாகுமென்பது சித்தமாயிற்று.

அநாத்மாகாரவ்ருத்திகளை யொழித்தல் வாயிலாக ஆத்மாகார வ்ருத்திகளைப் பெருக்குதலென்னும் லக்ஷணத் தோடுகூடிய நிதித்தியாஸனமே ஸ்ரீ லலிதாபண்டாஸுர யுத்தத்தின் தத்துவமாகும்.

இதன் விமர்சமாவது--

பண்டாஸுரபக்ஷம்	லலிதாபக்ஷம்
1. துர்மதன்	ஸம்பத்கரீ
2. குருண்டன்	அஶ்வாரூடை
3. கரங்கன் முதலிய ஐந்து ஸேனாதிபதிகள்	கருடாரூடையாகும் நகுலீ சக்தி
4. வலாஹகன் முதலிய 7. ஸேனாதிபதிகள்	திரஸ்கரிணீ
5. சதுர்பாஹு முதலிய 30 பண்ட புத்திரர்கள்	பாலா பரமேஶ்வரி
6. பண்டாஸுரன் தம்பி விசுக்ரன்—	மந்த்ரிணியாகும் ஶ்யாமளை
7. ,, ,, விஷங்கன்—	தண்டநாதை யாகும் மஹாவாராஹீ.
8. பண்டாஸுரன்	ஸ்ரீலலிதாமஹாராக்ஞீ.

भण्डासुरेन्द्रनिर्मुक्तशस्त्रप्रत्यस्त्रवर्षिणी ।

பரதேவதையானவள் பண்டனுல் விடப்பட்ட ஒவ்வொரு அஸ்த்ரத்திற்கும் சஸ்த்ரத்திற்கும் விரோதமான அஸ்த்ர சஸ்த்ரங்களைவிட்டு அவற்றை நாசமாக்கினுள். பண்டாஸுரனது அஸ்த்ரசஸ்த்ரங்கள் யாவும் அவித்யா வ்ருத்திரூபங்களே. பரதேவதையால் விடப்பட்ட பிரதி அஸ்த்ர சஸ்த்ரங்கள் அவற்றின் நிவர்த்தகங்களாகும் வித்யா வ்ருத்திகளே யாகும்.

இவற்றின் விவரமாவது —

பண்டனது அஸ்த்ரம்.	லலிதையின் பிரதி அஸ்த்ரம்
1. அந்ததாமிஸ்ரம் (பேரிருட்டு)	மஹாதரணி அஸ்த்ரம்
2. பாஷண்டாஸ்த்ரம்.	காயத்ர்யஸ்த்ரம்
3. அந்தாஸ்த்ரம் (குருடு)	சக்ஷுஷ்மதீ மஹாஸ்த்ரம்
4. சக்தி நாசாஸ்த்ரம்	கந்தர்வ ராஜ விஸ்வாஸு அஸ்த்ரம்
5. அந்தகாஸ்த்ரம் (யமன்)	ம்ருத்யுஞ்ஜயாஸ்த்ரம்
6. ஸர்வஸ்ம்ருதி நாசகாஸ்த்ரம்	ஸ்ருதி தாரணுஸ்த்ரம்
7. பயாஸ்த்ரம்	அபயங்கராஸ்த்ரம்
8 மஹா ரோகாஸ்த்ரம்	நாமத்ரயாஸ்த்ரம்
9. ஆயுர் நாசனுஸ்த்ரம்	காலஸங்கர்ஷிணீ என்னும் அஸ்த்ரம்

பண்டனது அஸ்த்ரம்.	லலிதையின் பிரதி அஸ்த்ரம்
10. மஹா அஸுராஸ்த்ரம். இதிலிருந்து மது கைடபர், மஹிஷாஸுரன், தூம்ரலோசனன், சண்ட முண்டர், சிக்ஷுரன், சாமரன், ரக்த பீஜன், சும்பநிசும்பர்கள், காலகேயர், முதலிய பல்லாயிரம் அஸுரர்கள் தோன்றினர்	மஹாதுர்க்காஸ்த்ரம். இதிலிருந்து மஹாகாளீ, மஹா லக்ஷ்மீ மஹா ஸரஸ்வதி முதலிய பல துர்க்கா தேவிகள் தோன்றி அஸுரரை யொழித்தனர்.
11. மூகாஸ்த்ரம் (ஊமை)	வாக்வாதின்யஸ்த்ரம்

कराङ्गुलिनखोत्पन्ननारायणदशाकृतिः

12. i வேததஸ்கர ஸோமகாஸ்த்ரம்	மத்ஸ்யாவதார அஸ்த்ரம்
ii அர்ணவாஸ்த்ரம்.	கூர்மாவதார ,,
iii ஹிரண்யாக்ஷாஸ்த்ரம்.	வராஹாவதார ,,
iv ஹிரண்யகசிபு அஸ்த்ரம்	ந்ரஸிம்ஹாவதார ,,
v மஹா பலீந்த்ராஸ்த்ரம்	வாமனாவதார ,,
vi ஹைஹயாஸ்த்ரம்	பரசுராமாவதார ,,
vii ராவணாஸ்த்ரம்	கோதண்டராமாவதார ,,
viii வானராஸ்த்ரம்	பலராமாவதார ,,

பண்டனது அஸ்த்ரம்	லலிதையின் பிரதி அஸ்த்ரம்
ix ஆஸுர ராஜாஸ்த்ரம். இதனின்று சிசுபால தந்தவக்தரர்கள், ருக்மீ, பாணாஸுரன், கம்ஸன், சாணூரமல்லன், முஷ்டிகன், காளீயன் யமளார்ஜுனர், த்ருணாவர்த்தன் முதலியவர்கள்.	வாஸுதேவனுகும் க்ருஷ்ணாவதார அஸ்த்ரம்
x கல்யஸ்த்ரம். (அநாசாராஸ்த்ரம்)	கல்கியவதார ”
13. மஹாமோஹாஸ்த்ரம்	சாம்பவாஸ்த்ரம்

महापाशुपतास्त्राग्निनिर्दग्धासुरसैनिका ॥

अभ्यासतारतम्येन उत्तरोत्तरोत्पन्ना उत्कृष्टा अद्वैतवृत्तय एव महापाशुपतास्त्राग्नयः । असुरसैनिकाः—आविद्यकवृत्तयः ॥

லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் 81வது நாமம்.

இங்ஙனம் பரதேவதை பண்டாஸுரன் விட்ட அஸ்த்ரங்களுக்கு விரோதியான பிரதி யஸ்த்ரங்களை விட்டு அவற்றை யொழித்துப், பண்டனது ஸர்வ ஸைன்யங்களையும் நாராயணாஸ்த்ரத்தால் நாசம் செய்து பின் மஹாபாசுபதாஸ்த்ரத்தை விட்டனள். இது பண்டனது ஸேனாதிபதிகளைக் கொன்றது. பின் ஏகாங்கியாய் நிற்கும் பண்டனை மஹாகாமேஶ்வராஸ்த்ரத்தால் கொன்றனள்.

இங்கே கூறப்பட்ட அஸ்த்ரங்கள் யாவும் மந்த்ராத்மகமானவை. இந்த அஸ்த்ர மந்த்ரங்கள் யாவும் வித்யோபாஸகர்கள் தினந்தோறும் ஜபிக்கும் ரஸ்மிமாலையில் சேர்ந்தவையே யாகும்.

இந்த யுத்தத்தை யாழ்ந்து யோஜிக்கின் ஸகல புராணேதிஹாஸங்களில் நடந்த யுத்தங்களின் பரம ரஹஸ்யார்த்தம் ஜீவ பாவத்திற்கும் ஆத்ம ஞானத்திற்கும் நடக்கும் யுத்த ரூப நிதித்தியாஸனமே யாகுமென்பது புலப்படாமற் போகாது.

कामेश्वराग्निनिर्दग्धसभण्डासुरशून्यका (सैनिका)।

कामेश्वराग्निश्चिदग्निः । चिदात्मन एव सर्वकाम्यमानत्वेन कामेश्वरत्वात् । आत्मनः कामाय सर्वं प्रियं भवतीति श्रुतेः । भण्डासुरो द्वैतभानकरो जीवभावः । सैनिका लिङ्गशरीरादयः । शून्यकेति तात्विकपाठे जीवभावसहितस्य शून्यभावस्य चिदग्निनापगमे चिन्मात्रमवशिष्यत इति सिध्यति ॥

(ஸஹஸ்ரநாம பாஷ்யம் 82வது நாமம்)

இங்ஙனம், இவ்வுபாக்கியானத்தில் பண்டாஸுர வதை யென்னும் வியாஜத்தால், ஸ்ரீலலிதாதேவியின் பராரூபம் கூறப்பட்டதோடு ஒவ்வொரு ஜீவனிடத்திலும் பிரதிதினம் இந்த யுத்தம் நடைபெறுகின்றதென்றும், பண்டனுக்கும் ஜீவபாவம் ஒழியின் தானே அஹம்பத லக்ஷ்யார்த்த வடிவ லலிதா தேவியாகி நிர்விசேஷ சிவத்தோடு ஐக்கியமாகின்றனனென்னும் பரம ஸித்தாந்தம் நிரூபணம் செய்யப்படுகின்றது.

இந்த லலிதாக்கியானமானது

''द्वात्रिंशल्ललिताख्यानममृतं दिव्यदर्शनम्''

என்றபடி முப்பத்திரண்டு அத்தியாயங்களோடு கூடியது. இந்த எண்ணிக்கைக்கு அதிகமான ஸங்கியையுள்ள அத்தியாயங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. அவை காஞ்சீ மாஹாத்மியம், ஸ்ரீவித்யோபாஸனக்கிரமம், முத்ராலக்ஷணம், தீக்ஷாக்கிரமம், நியாஸகண்டம் முதலிய விஷயங்கள் கூறுவனவேயாகும். இதுவுமன்றி தக்ஷயாகம், ஸதீதேவியின் தேஹத்தியாகம், பார்வதியின் அவதாரம், தக்ஷயக்ஞத்துவம்ஸம் பரமசிவனது ஸமாதி, மன்மத தஹனம் முதலிய பலவிஷயங்களடங்கிய பல அத்தியாயங்களும் இதில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்தகைய மஹாமஹிமை வாய்ந்த இந்நூலானது வடமொழிப் பயிற்சி யில்லாதவர்க்கு சற்றும் உபயோகமின்மையைக் கருதி, சென்னை ஸ்ரீ அமரகலா விலாஸினீ ஸபை ஆசிரியர், பிரஹ்மஸ்ரீ, ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹாமஹோபதேசக ஸ்ரீவத்ஸ-வெ-ஸோமதேவ சர்மா அவர்கள் இதைத் தமிழில் மொழி பெயர்த்தனர். இம்மொழி பெயர்ப்பானது மூலகிரந்தத்தின் ரஸமும் அர்த்த பாவமும் சிறிதும் மாறுபடாமல் விளக்கமான எளிய நடையில் அமைந்துள்ளது.

இதை, சென்னை ஸ்ரீ பிரஹ்மவித்யா விமர்சினீ ஸபையிற் சேர்ந்தவரும், ஸ்ரீபரதேவதா பக்தருமாகிய ஸ்ரீமான். T. S. நாராயணஸாமி அய்யர் M. A. அவர்கள் வெகு அழகாக அச்சிட்டு வெளிப்படுத்தினர். இதில் பல உருவப் படங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றுள் ஸ்ரீ ஹயக்கிரீவர் அகஸ்தியரது படங்களும் ஸ்ரீ அகஸ்த்யாச்ரமத்தின் படமும் முக்கியமானவையாகும். இது வெளிப்பட்டது

தமிழுலகம் செய்த பெரும் புண்ணியத்தின் பயனேயா கும். இத்தகைய பெரும் புண்ணியத்தைச் செய்த அய்யரவர்களுக்குப் பரதேவதை ஸர்வ அபீஷ்டங்களையும் அருளி, இனி, மேலும் மேலும், இத்தகைய புண்ணியத்தையே செய்யும்படி பிரேரணை செய்யப் பரதேவதையைப் பன்முறை பிரார்த்திக்கின்றேன்.

இச்சிறந்த நூலுக்கு முகவுரை யெழுதும் பெரும் பாக்கியத்தை யடியேனுக்கருளிய பிரஹ்மஸ்ரீ மொழி பெயர்ப்பாசிரியர்பால் யான் எஞ்ஞான்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை நன்கு ஆதரித்தல் வித்யோபாஸகர்களது சிறந்த கடமையாகுமென்று கூறுவது மிகையே யாகும்.

तत्वाकारसुसालकैः परिवृते चिन्तामणिभ्राजिते
मञ्चे पञ्चसुकारणेन्द्ररचिते कामेशवामाङ्कगा ।
तत्वातीतपदप्रशोभितगुहानन्दाकृतिर्या शिवा
विद्या सद्गुरुदर्शितांघ्रियुगळा कुर्यात्सदा मङ्गळम् ॥
रागद्वेषसमाकृती करतलैः पाशाङ्कुशौ बिभ्रती
तन्मात्राकृतिपुष्पवाणमपि या चापं मनस्त्वैक्षवम् ।
शृङ्गारारुणवेषभूषणलसद्गात्रार्धचन्द्रोज्ज्वल-
त्फाला चिद्घनरूपिणी भगवती कुर्यात्सदा मङ्गळम् ॥

சிவம்

இங்ஙனம்,

ஸஜ்ஜனவிதேயன்,

ந. சுப்பிரமண்ய அய்யர்.

ஸ்ரீபிரஹ்ம வித்யா
விமர்சினீஸபை,
சென்னை.
14—9—1940.

விஷய ஸூசிகை.

அத்தியாயம்.	விஷயம்.	பக்கம்.
1.	அகஸ்தியர் காஞ்சிக்கு வந்து ஹயக்கிரீவரைத் தரிசித்து உலகம் உய்வதற்குச் சிறந்த ஸாதனம் யாதென வினவுதல் ...	1
,,	ஹயக்கிரீவர் பராசக்தியின் உபாஸனையே சிறந்த ஸாதனமென உபதேசித்தல் ...	3
2.	தேவியின் பிராதுர்ப்பாவம் முதலியவற்றைப்பற்றிய வினாக்கள் ...	4
,,	இந்திரனுக்குத் துர்வாஸரிட்ட சாபம். ...	5
,,	இந்திரனுக்கும் பிரஹஸ்பதிக்கும் நடந்த தர்மாதர்ம விமர்சம் ...	7
3.	த்விஜவர்மன் கதை ...	9
4.	மத்யபான குணதோஷ விசாரம் ...	12
5.	அகம்யாகமன விசாரமும் பிராயசித்த விசாரமும்...	13
6.	பக்ஷ்யாபக்ஷ்ய விசாரம் ஸஹவாஸ தோஷ விசாரம். பிராயசித்தம் ...	15
7.	துர்வாஸரால் இந்திரனுக்கேற்பட்ட சாபத்திற்குக் காரணம். விஶ்வரூப உபாக்கியானம் ...	17
8.	ஸமுத்ர மதன காரணம், மதனம், மஹாலக்ஷ்மியின் ஆவிர்ப்பாவம் ...	19
9.	மோஹினி அவதாரம் ...	21
,,	மோஹினி வர்ணனை ...	23
,,	மஹா சாஸ்தாவின் அவதாரம் ...	23
10.	பண்டாஸுர சரித்திர பிரஸ்தாபம் ...	24
,,	பண்டாஸுர உற்பத்தி ...	26
11.	பண்ட பட்டாபிஷேகம் ...	27
,,	பண்டன் விஷ்ணு மாயையின் வசமாதல் ...	27
12.	நாரதன் இந்திரனை அம்பிகாராதனை செய்யும்படி தூண்டல் ...	29
,,	இந்திரன் முதலிய தேவர் மஹா யாகமியற்றல் ...	30
,,	லலிதாதேவி பிராதுர்ப்பாவம் ...	30

C

பக்கம்.

13.	ஸ்ரீலலிதா ஸ்தவ ராஜம் ...	31
14.	லலிதாதேவியின் தர்ஶனத்திற்கு பிரஹ்ம விஷ்ணுவாதிகள் வருதல் ...	34
,,	லலிதா காமேஶ்வரர்களின் விவாஹம், லலிதாம்பிகையின் பட்டாபிஷேகம் ...	36
15.	பண்ட வதையின் பொருட்டுத் தேவி புறப்படுதல் ..	39
,,	ஸம்பத்கரீ, அஶ்வாரூடை, தண்டநாதை, மந்த்ரிணீ முதலியவர்கள் புறப்படுதல் ...	39
16.	ஸ்ரீசக்ரராஜரத வர்ணனை (பர்வா தேவிகள்) ...	44
,,	கேயசக்ர ரத பர்வா தேவிகள் ...	47
17.	கிரிசக்ர ரத பர்வா தேவிகள் ...	49
18.	ஶூன்யக நகரத்தில் உத்பாதங்கள் ...	52
,,	பண்டனுடைய மந்த்ராலோசனை ...	53
19.	பண்டாஸுர ஸேநா ஸங்காஹம் ...	56
,,	துர்மதவதம் ...	57
,,	அஶ்வாரூடை குருண்டனை வதித்தல் ...	59
20.	கரங்கன் முதலியவர்களின் வதம் ...	61
21.	வலாஹகாதி ஸேநாதிபதிகளின் வதம் ...	64
22.	விஷங்காதிகள் ஓடுதல் ...	68
23.	அக்னிக்கோட்டை கட்டுதல் ...	72
,,	பாலாம்பிகை பண்டபுத்திரர்களை வதஞ்செய்தல்.	74
24.	பண்டாஸுரன் புலம்பல் ...	78
,,	விசுக்ரன் செய்த ஜயவிக்ன யந்த்ரம் ...	80
,,	கணேசரது அவதாரம், பராக்ரமம் ...	82
25.	விசுக்ர விஷங்க வதம் ...	84
26.	ஸ்ரீலலிதை பண்டாஸுரனுடன் போர்புரிதல் ...	90
,,	ஸ்ரீலலிதையும் பண்டாஸுரனும் திவ்யாஸ்த்ரம் விடுதல் ...	95
,,	பண்டாஸுர வதம் ...	102
27.	பிரஹ்மாதிகள் செய்த ஸ்ரீலலிதா ஸ்துதி ...	104
,,	மறுபடி மன்மதன் தோன்றல் ...	111
28.	ஸ்ரீநகர நிர்மாணம் ...	116
,,	மாதங்க கன்யா ஜனனம் ...	125
,,	ஸப்தஸால ரக்ஷகர்களின் பெயர்கள் ...	126

		பக்கம்.
29.	இரத்னக்கோட்டைகளின் லக்ஷணங்கள் முதலியன.	133
30.	ருத்ராலய ருத்ர விசேஷ நாமாக்கள் ...	145
31.	மஹா பத்மாடவீ வர்ணனம் ...	158
32.	சிந்தாமணி கிருஹத்தின் உட்புற வர்ணனம் ...	169
,,	,, ,, முதல் ஆவரணம் ...	175
,,	,, ,, இரண்டாவது ஆவரணம் ...	177
,,	,, ,, மூன்றாவது ஆவரணம் ...	177
,,	,, ,, நான்காவது ஆவரணம் ...	178
,,	,, ,, ஐந்தாவது ஆவரணம் ...	180
,,	,, ,, ஆறாவது ஆவரணம் ...	180
33.	,, ,, ஏழாவது ஆவரணம் ...	181
,,	,, கிரஹராஜத்தின் எட்டாவது ஆவரணம்.	182
,,	,, (ஆயுதமண்டலம்) ...	182
,,	,, (குருமண்டலம்) ...	183
,,	,, (நித்யாமண்டலம்) ...	184
,,	,, (ஷடங்கதேவிகள்) ...	185
,,	,, ஒன்பதாவது ஆவரணம் ...	185
34.	மந்த்ரராஜமும் இதன் ஸாதனமும் ...	191
,,	பலஸ்ருதி ...	199
,,	நூலின் பூர்த்திக்குறிப்பு ...	202
,,	காஞ்சிபுர மஹாத்மியம் ...	203
35.	பிரஹ்மா செய்த தேவீஸ்துதி ...	205
36.	திரிபுரசுந்தரி தசரதனுக்குப் புத்ரவரமளித்தல் ...	215
37.	ஸ்ரீ சக்ரோபாஸனாக் கிரமம் ...	227
38.	முத்திரா லக்ஷண பிரகரணம் ...	235
39.	தேவீதர்சன தீக்ஷா வர்ணனம் ...	238
40.	மந்த்ரோபாஸனா பிரகாரத்தை கூறுதல் (நியாஸப் பிரகரணம்) ...	248
	அநுபந்தம் ...	273
	ஸதீதேவி தக்ஷயாகத்திற்குச் செல்லுதல் ...	273
	ஸதி, தக்ஷன் இவர்கள் ஒருவர்க்கொருவர் ஸம்வாதம் ...	278
	ஸதீதேவி தனது உடலைத் தியாகம் செய்தல் ...	280
	மேனையிடத்தில் பார்வதீதேவி ஆவிர்ப்பவித்தல் ...	283

பக்கம்.

பார்வதீ தேவியின் பாதாதி வர்ணனம்	..	284
தக்ஷனது யாகம் அழிதல்	...	286
வீரபத்ரர் உற்பத்தி	...	287
விஷ்ணு வீரபத்ரர்களது யுத்தம்	...	290
தக்ஷனது பத்நிகள் செய்த ஸ்துதி	...	292
தக்ஷன் செய்த ஸ்துதி	...	293
நாரதர் ஹிமாலயஞ் செல்லுதல்	...	294
ஹிமவான் ஸ்தாண்வாஶ்ரமஞ் செல்லுதல்	...	296
தாரகாஸுரனது கொடுமை	...	299
தாரகனது கொடுமையை யகற்ற உபாயம்	...	300
இந்திர மன்மத ஸம்வாதம்	...	302
இரதி மன்மத ஸம்வாதம்	...	304
வஸந்தன் ஸ்தாண்வாஶ்ரமத்தில் விஜ்ரும்பித்தல்	...	306
மன்மதன் ஆஶ்ரமத்தினுள் செல்லுதல்	...	309
சிவபெருமானது ஸமாதி வர்ணனை	...	309
ரதிமன்மதர்களின் நிலை	...	311
பார்வதி தேவியின் வர்ணனை	...	312
பார்வதி ஈசனைத் தரிசித்தல்	...	313
சிவனது மன்மத விகாரம்	...	315
மன்மதஹனனம்	...	316
பிரஹ்ம சாபம்	...	318
பண்டாஸுரன் முதலியவர்களின் உற்பத்தி	...	324
பண்டன் ஸ்வர்க்கத்தை யழித்தல்	...	326
விசுக்ரன் பூலோகத்தை யழித்தல்	...	327
விஷங்கள் பாதாளத்தை யழித்தல்	...	329
இந்திரன் முதலியோர் விஷ்ணுவிடஞ்செல்லுதல்	..	330
மஹாசம்பு ஸ்துதி	...	332
பண்டவதோபாயம்	...	334
மஹா சம்புயாகம்	...	337
காரிகாஷ்டகம்	...	342
ஸ்ரீலலிதா பிராதுர்ப்பாவம்	...	343
ஸ்ரீலலிதாம்பாள் இயற்றிய ஜகத் ஸ்ருஷ்டியைக் கூறுதல்	...	344
சக்தி ஸமூஹ ஸ்ருஷ்டி	...	345

பீஜாபூரகதேக்ஷுகார்முகருஜாசக்ராப்ஜபாஶோத்பல
வ்ரீஹ்யக்ரஸ்வவிஷாணரத்நகலஶப்ரோத்யத்கராம்போருஹ :|
த்யேயோ வல்லபயா ஸபத்மகரயா ஶ்லிஷ்டோஜ்வலத்பூஷயா
விஶ்வோத்பத்திவிபத்திஸம்ஸ்திகரோ விக்நேஶ இஷ்டார்த்தத :||

ஸ்ரீ அகஸ்தியர்.

ஸ்ரீ ஹயக்ரீவர்.

ஓம் ஸ்ரீலலிதாபரமேச்வர்யை நம:

ஸ்ரீ லலிதோபாக்யானம்

முதல் அத்தியாயம்.

சதுர்ப்புஜே சந்த்ரகலாவதம்ஸே
குசோன்னதே குங்குமராகசோணே |
புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேகமாத: ||

நான்கு கைகளுள்ளவளே! சிரஸில் சந்த்ர கலையைத்தரிப்பவளே! உன்னத ஸ்தநமுள்ளவளே! குங்குமத்தால் சிவந்தவளே! நாமக் கரும்பு பாசம் அங்குசம் புஷ்பபாணம் இவைகளைக் கரத்திலேந்தியவளே! ஜகத்தின்தாயே! உமக்கு நமஸ்காரம்.

அஸ்து ந: ச்ரேயஸே கிஞ்சித் வஸ்து வாமாங்கஸுந்தரம் |
யதஸ்த்ரிதீயோ விதுஷாம் துரீயம் தத்பரம் மஹ: ||

அர்த்தநாரீச்வரரது இடது புறத்தில் அழகாயிருப்பதும், அர்த்தநாரீச்வர ஸ்தானத்திலிருந்து, வித்வான்களுக்கு மூன்றாவதாக பிரஹ்ம விச்வரிஷ்ட ஸ்வரூபமாக உள்ள துரியமாயும் பரப்ரஹ்ம ஸ்வரூபமாயுமுள்ள ஓர்வஸ்து நமக்குச் சிரேயஸ்ஸை அளிக்கட்டும்.

வேத வேதாந்தங்களையும் ஸர்வ ஸித்தாந்தங்களையுமுணர்ந்து பிரஹ்மாநந்த ஸ்வரூபியாய் விளங்கும் அகஸ்த்ய முனிவர் ஒரு ஸமயம் ஸகல புண்ய க்ஷேத்ரங்களிலும் தீர்த்தங்களிலும் புண்ய ஆரண்யங்களிலும் யாத்ரை செய்தார். எங்குமஞ்ஞான இருள்சூழ, உண்பது உடுப்பது காமரஸத்தி

லீடுபடுவதுமான மானிடரைக் கண்டார். சிந்தை நொந்து அவர்கள் நற்கதியையே எண்ணி காஞ்சிமா நகரம் சென்றார். ஆங்கு கலியின் கொடுமையை யகற்றவல்ல ஹஸ்தகிரிநாத னெனும் வரதர், ஏகாம்பரநாதர், காமாக்ஷி இவர்களை அர்ச்சித் தார். பல்லாண்டு பரந்தாமனை நாடி பாரின் க்ஷேமத்திற்காக கடுந்தவம் புரிந்தார். சங்கசக்ர பீதாம்பர தாரியான பரமன் ஹயக்ரீவ வடிவமேந்தி முனிவர் முன்னே தோன்றினார். அகஸ்த்யர் ஆநந்த பரவசராகி பல முறைப் பணிந்தெழுந்து பகவானைத் துதித்தார். பக்த பராதீனரான பரம புருஷன், முனிவரே! உமது தவத்தால் உள்ளங் குளிர்ந்தோம். உமக்கு வேண்டிய வரம் யாதென்றார். ஜநார்த்தந! இப்பாமர ஜனங்கள் பிறவிக்கடலைக் கடந்து பேரானந்தம்பெற ஓர் உபா யத்தைத் தந்தருளல் வேண்டும் என மஹர்ஷி வேண்டினர்.

ஹயக்ரீவர் கூறினார்:-முன்னம் இதே சிவனால் எனக்குக் கூறப்பட்டது. பிரஹ்மனாலும் தூர்வாஸராலும் பின்னர் உன் னாலும் வினவப்பட்டது. நான்கூறும்வழி உமது மூலமாக ப்ரஸித்தமாகும்படி வரந்தருகிறேன். நான் உலகிற்கு ஆதி கர்த்தா. உலகைப்படைத்துக் காத்து உபஸம்ஹரிப்பவன். மும் மூர்த்திகளாக விளங்குபவன். உலகவடிவன். குணமற்ற வன், குணாச்ரயன். பிரதானம், புருஷன் என்ற இருகூறாக உலகெலாம் பரந்து நிற்பவன். ஜடமாய் குணமாய் ஸர்வ பிராணிகளிடமும் இருப்பது எனது பிரதானமாம். குணாதீத மாய் சுத்தசைதன்யமாய் விளங்குவது புருஷனாம். இதில் ஒன்றை நன்குணர்ந்தவனே நற்கதி பெறுவானெனில் இரண்டையு மறிந்தவர் மோக்ஷம் பெறுவரெனக்கூறவும் வேண்டுமோ? தவத்தினாலும் யமநியமங்களாலும் தியாகத்தி னாலும் பிராணிகளது பாபங்களகலும். ஆத்மகுணம் உண் டாம். அதன் பின்னரே ஞானம் உதயமாகும். ஜீவாத்ம ஐக்ய ஞானத்தால் மோக்ஷமுண்டாகும். இது எல்லோருக்கும் ஸுலபமானதன்று.

பாமரரும், வர்ணாச்ரம தர்மங்களைவிட்ட பாபிகளும், அஸத்துகளும்கூட ஸுலபமாக நற்கதிபெற ஓர் அரிய வழி

கூறுகிறேன். பராசக்தியான ஸ்ரீ ஜகன்மாதாவைப் பூஜிப்பதே அத்புதமமான மார்க்கம். சாஸ்த்ர முணராமல் விதியை விட்டு எப்படி பூஜித்தாலும் உள்ளம் உவர்ந்து இம்மை மறுமை புக்தி முக்தி எல்லாவற்றையும் எல்லோர்க்கும் அளிக்க வல்லவள் இவள் ஒருவளே. பரமசிவனும் தேவியை த்யானம் செய்து ஸகலஸித்திகளையும் பெற்றார். அர்த்தநாரீச்வரராக ஆனார். பிரஹ்மாதி தேவர்களும் தேவீ த்யானத்தால் ஸித்தி பெற்றனர். ஆதலின் தேவியை மந்த்ரம் அஸ்த்ரம் நியாஸம் இவைகளுடன் கிரமமாக பூஜை செய்ய வேண்டும். தேவியிடமே மனது பிராணன் ஆசை இவைகளை வைத்து தேவியைத்தவிர நான் வேறல்ல என்ற எண்ணத்துடன் கர்மாக்களைச் செய்பவன் முக்தி பெறுவான்.

முனிவரே! இது மிக ரஹஸ்யமானது. உமது தபோபலத்தாலும் உலகமெல்லாம் இன்பமுற வேண்டுமென்ற எண்ணத்தாலுமே இதை உமக்குக்கூறினேன். தேவரும் மற்றவரும் உம்மிடமிருந்து உபதேசம் பெற்று ஸித்தி பெறட்டும். இதைக்கேட்ட அகஸ்தியர் மற்றுமோர் முறை மாலின் திருவடி பணிந்து தாங்கள் கூறிய சக்தி உருவம் எத்தகையது? எத்தகைய லீலைகளைச் செய்கின்றது? எத்தகைய மஹிமை வாய்ந்தது? என்று கூறவேண்டினார். தனது அம்சத்தினால் தன்னைப்போல் உருகொண்ட ஹயக்ரீவரைக் காட்டி "எது எதைக் கேட்க விரும்புகிறீரோ அவைகளுக்கு இவர் விடையளிப்பர்" என்றுகூறி மஹாவிஷ்ணு மறைந்தார். ஆனந்தத்தால் மயிர்கூச்சலடைந்த மஹர்ஷி ஹயக்ரீவருடன் தன் ஆச்ரமஞ்சென்றார்.

முதல் அத்தியாயம் முற்றிற்று. 37 சுலோகங்கள்

இரண்டாம் அத்தியாயம்.

அகஸ்த்யர் ஹயக்ரீவ முனிவரை அத்புதமான ஆஸனத்திலமர்த்தி, "ஸ்வாமின்! தங்களைப்போன்றவர்களது தர்சநமே உலகக்ஷேமத்தை யளிக்கும். தாங்கள் மஹாதேவியின் ஆவிர்பாவம், திவ்யரூபங்கள், லீலைகள் முதலியனவற்றை விஸ்தாரமாக வர்ணியுங்கள்" என்று வேண்டினர்.

ஹயக்ரீவர் உரைத்தார்:—அந்ததேவி அநாதியாக உள்ளவள். ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஆதாரமானவள். ஸதஸத்கர்ம வடிவமானவள். த்யாநத்தினல் மாத்திரம் தர்சிக்கத்தக்கவள். அறிவையும் வித்யையையும் அங்கமாகக்கொண்டவள். உள்ளத்திலே வஸிப்பவள். வெகுகாலம் அப்யஸிக்கும் ஆத்மைக்ய பாவனையால் வியக்தமாக விளங்குபவள். பிரஹ்மாவினது தியாந யோகத்தால் முதலில் ப்ரகிருதி என்ற பெயரோடு தோன்றினள். தேவர்களது விருப்பைப் பூர்த்திசெய்தவளவளே. பாற்கடலைக் கடைந்தபோது இரண்டாவதாக மோஹினியாகத் தோன்றினள். அவளது அழகிய ரூபத்தைக்கண்டு ஸர்வக்ஞனை பரமசிவனும் பார்வதியை விட்டுவிட்டு பின் தொடர்ந்தோடி சாஸ்தா என்பவரைப்பெற்ருர்.

அகஸ்த்யர்:—ஜிதேந்திரியராய் மந்மதனையே எரித்தவரான பூதேசன் எப்படி மோஹமடைந்து ஸுதனைப் பெற்ருர்?

ஹயக்ரீவர்:—திரிலோகாதிபதியான தேவேந்திரன் கைலாஸபர்வதம்போல் விளங்கும் வெள்ளையானை மீதேறி தேவகணஞ்சூழ செறுக்குடன் பவனிவந்தார். அவன் கர்வத்தை உணர்ந்த கைலாஸநாதன் துர்வாஸரை அவரருகே அனுப்பினர். கந்தை கிருஷ்ணாஜிநத்தை உடுத்தி மெலிந்த தேஹத்துடன் பித்தனைப்போல் ஆகாயமார்க்கமாய் அமராதிபனிடம் புறப்பட்டார். இடையே ஓர் வித்யாதரப்பெண் பல்லாண்டுகளாகத் தேவியை உபாஸித்து அவளருள் செய்தளித்த ஓர் திவ்யமாலையை வாங்கி வந்தாள். துர்வாஸர் அவளைப்பார்த்து "நீயார்? எங்கிருந்து வருகிருய்? எதிந்த

மாலே!" எனவினவ வித்யாதரி தன்வரலாற்றை உரைத்தாள். மஹர்ஷி அம்மாலையை விரும்ப அவள் தடையின்றிதந்து தம்மிருப்பிடம் புறப்பட்டாள். முனிவர் ஆவலுடனதை இரு கரங்களாலேந்தி தலைமீது வைத்து "பிரஹ்மாதி தேவர்களுக்கும் கிட்டாததிது. நான் கிருதார்த்தனானேன்" என்றுகூறி வித்யாதரிக்கு தேவி பக்தி உண்டாகும்படி ஆசிர்வதித்தார். பின்னர் ஆகாயத்தில் வரும் வித்யாதரிகளிடமிருந்து வீணை ஆபரணம் மாலை சந்தனம் முதலியவைகளைப் பிடுங்கி அணிந்து பித்தனைப்போல் ஆடிபாடிக்கொண்டு இந்திரனருகே சென்றார். தன்னிடமிருந்த அந்த மாலையை சக்ரனுக்களித்தார். அவர் அதை அலக்ஷியமாக வாங்கி, யானை மீது வைத்தார். ஐராவதமதை எடுத்து பூமியில் வைத்துத் தேய்த்தது. அதைக்கண்டு அடங்காக் கோபங்கொண்ட முனிவர் "பிரஹ்மாதி தேவர்களுக்கும் கிட்டாத ஜகன் மாதாவின் மாலையை நீ சிரஸில் தரிக்காமல் அலக்ஷியம் செய்தாய். ஆதலின் உனது ராஜ்யம், சோபையையும் தேஜஸ்ஸையுமிழக்கும்" என சபித்தார். தேவேந்திரன் எவ்வளவு வேண்டியும் வருங் காரியத்தைக்கருதி தூர்வாஸர் பேசாமலே போய்விட்டார். உடனே இந்திரனிடமிருந்த விஜயலக்ஷ்மி பாதாளஞ் சென்றாள். நித்யலக்ஷ்மி வாஸுதேவனிடஞ் சென்றாள். சதமகன் மனம்நொந்து ஸ்வர்க்கத்தில் தோன்றிய பற்பல அபசகுனங்களைக் கண்டு வருந்தி குருவான பிருஹஸ்பதியை அழைத்து வேண்டினார்.

இந்திரன்:—முக்காலத்தையுமுணர்ந்த முனிவரே! முன்னம் காணாத பல துர்நிமித்தம் தோன்றுகின்றதே! அதனால் ஏற்படும் தீமை யாது? அதை அகற்ற உபாயம் யாது?

பிருஹஸ்பதி:—அவரவர் செய்த வினை பிராயச்சித்தம் அநுபவம் இதைத் தவிர வேறெதனாலும் கல்ப கோடி சதமானாலும் அகலாது.

இந்திரன்:—துஷ்கர்மா எத்தகையது? பிராயச்சித்தம் எத்தகையது?

ப்ருஹஸ்பதி :—கொல்லல், திருடுதல், ஹிம்ஸை, குடி, பரஸ்த்ரீகமநம் என பாபம் ஐந்து வகைப்படும். பிராமணருக்கு ஓர் பாபத்தைச் செய்தால் அது பத்தாயிரம் மடங்கு அதிகமான துன்பத்தைத் தரும். க்ஷத்திரியருக்குச் செய்யும் தீவினை ஆயிரம் மடங்கும், வைச்யருக்குச் செய்வது நூறு மடங்கும், சூத்ரர் பசு குதிரை இவைகட்குச் செய்வது பத்து மடங்கும், யானைக்குச் செய்தது ஐந்து பங்கும், ஒட்டகைக்குச் செய்வது மூன்றுபங்கும், பக்ஷிகளுக்குச் செய்வது ஒன்றரை மடங்கும் பலனை அளிக்கும். மூன்று வர்ணத்து ஸ்த்ரீகளுக்கு பாபம் செய்தால் மேற்கூறியதில் கால்பங்கே பாபமானதால் அவ்வளவு பிராயச்சித்தம் செய்தால் போதும். பெற்றோர், குரு, யஜமானன், புத்ரன் இவர்களுக்குத் தீமைசெய்யின் அதற்கு பிராயச்சித்தமே கிடையாது. குருவின் உத்திரவினால் ஓர் பாபம் செய்ய நேர்ந்தால் கால்பங்கு பிராயச்சித்தம் போதும். குருவின் ஆக்ஞையைமீறி பாபம் செய்ய நேரிடில் அரைப் பங்கு பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும்.

பத்து பிராமணர்களை ரக்ஷிக்கும்பொருட்டுஅரசன் ஓர் அந்தணனைக் கொல்லலாம். நூறு வேதியரைக்காக்க பிராமணன் ஒரு பிராமணனைக் கொல்லலாம். ஐந்து பிரஹ்ம வித்துக்களைக் காக்க ஓர் வைச்யனைத் தண்டிக்கலாம். பத்து வைச்யரைக்காக்க வைச்யர் ஓர் வைச்யரைக் கொல்லலாம். நூறு வைச்யர் ஆயிரம் சூத்ரர் நிமித்தம் ஓர் அந்தணனையும் சிக்ஷிக்கலாம். நூறு சூத்ரருக்காக ஓர் வைச்யனையும் ஐம்பது சூத்ரனுக்காக ஓர் சூத்ரனையும் சிக்ஷிக்கலாம். பந்து மித்ரர்களுக்குச் செய்த பாபத்திற்கு முக்கால்பங்கும், மனைவிமக்களுக்குச் செய்தால் பாதிபங்கும் பிராயச்சித்தம் செய்து கொள்ளல்வேண்டும். ஆத்மரக்ஷணார்த்தம் பாபம்நேர்ந்தால் பிராயச்சித்தமில்லை. தன்னைக் கொல்லவரும் எவரைக் கொன்றாலும் பாபமில்லை. மனைவி மக்கள் ஸோதரர் பந்து இவர்களைச் சிக்ஷித்தால் முறையே பத்துபத்து மடங்கு பாபமதிகமாம். ரக்ஷித்தால் அங்ஙனமே ஸுகிருதமுண்டாகும். தேவர், பிராமணன், வேதியன், வேதார்த்தமறிந்தவன், விரு

தம் செய்பவன், வேதாந்தி, வேதவித் இவர்களைச் சிக்ஷித்தால் முறையே ஒன்று இரண்டு ஐந்து நூறு ஆயிரம் பத்தாயிரம் லக்ஷம் மடங்கு பாபமும், ரக்ஷித்தால் அவ்வளவு ஸுகிருதமு முண்டாகும். அவர்களைத் தர்சித்தல் வணங்குதல் பணிவிடை செய்தல் ஆகிய இவைகளுக்குச் சமமான புண்யமுண்டாகும். தேவபிராமணர்களைக்காக்க வேந்தன் ஸிம்ஹம் முதலிய கொடிய மிருகங்களைக் கொல்லவேண்டும். ஆபத்தில் தன்னை ரக்ஷிக்கவும் அவ்விலங்குகளைக் கொல்லலாம். சுத்தமான அந்த மாம்ஸத்தைப் புஜிக்கலாம். ஆனால் தனக்கென அன்னத்தை யும் மிருகங்களையும் பாகம் செய்யாமல் தேவபிராமணர் நிமித் தம் செய்தால் பாபமாகாது.

முன்னம் உலகை உய்விக்க பகவதி மாயாதேவி, தேவா ஸுர மநுஷ்யாதிகளையும் பதினான்கு வகையான மிருகங் களையும் அவைகளைக் கொண்டு செய்யத்தக்க யாகங்களையும் படைத்தாள். மனிதர்களை நோக்கி "மிருகங்களைக் கொண்டு யக்ஞம் செய்து தேவர்களை ஸந்தோஷப் படுத்துங்கள். அவர்கள் உங்கள் விருப்பைப் பூர்த்தி செய்வார்கள். இப்படி என்னுலியற்றப்பட்ட சக்ரத்தை அனுஸரிக்காதவர் தரித்ர ராகி பல நரகங்களை அனுபவிப்பர்" எனக் கூறினாள்.

தேவ பித்ரு குரு அதிதி மகாபுருஷர் நிமித்தம் மன்னன் மிருகங்களைக் கொல்ல வேண்டும். ஆபத்காலத்தில் அந்த ணர் சுத்தமாம்ஸத்தை உட்கொண்டால் தோஷமில்லை. வேதம் விதித்ததைச் செய்து, தடுத்ததை விடவேண்டும்.

முன்னர் யௌவனுச்வன் செய்த வேள்வியில் எனக்கே இது, எனக்கே இது என அமரர்களுக்குள் கலவரம் தோன் றிற்று. சதுர்முகன் அங்குவந்து இன்னருக்கு இன்ன பசு என ஓர் வ்யவஸ்தை செய்தார். பராசக்திக்குச் சிறிது கினம் தோன்ற பிரஹ்மா அவளை வணங்கி 'எல்லா பசுக்க ளும் தங்களுக்குரியன; தாங்கள் லோக க்ஷேமார்த்தமன்றோ இதை விரும்புகிறீர்' என்று கூறி மறைந்தார். அதன்படியே அன்று முதல் வேள்வி நடைபெறுகிறது. அது நன்கு

வேதத்தில் கூறப் பட்டதாலிங்கு விஸ்தரிக்கப்படவில்லை. பிராமணஸ்திரியைத்தவிர மற்ற பெண்மக்களும் சூத்ரரும் மாம்ஸமருந்துவதால் பாபமில்லை. அந்தணன் ஆபத்காலத்தில் குரு உத்திரவு பெற்று அதைப் புஜித்தால் பாபமல்ல.

'ஏ பசோ! இதை அறி! நீ அசிவமல்ல! சிவமே! சிவனே உலக ஸ்ருஷ்டி ஸ்திதி லய காரணன். ருத்ரனே எல்லாவற்றிலும் சிறந்தவன். அவனே நீ' என்று எந்த மிருகத்தைத் தனக்காகவோ மற்றவர் பொருட்டோ கொன்றாலும் அது பாபமாகாது. வீட்டில் துன்புறுத்தும் பாம்பு தேள் எலி முதலியவைகளைக் கொல்வதால் பாபமில்லை. இந்த பசுயக்ஞம் கர்ம பலத்தைக் கருதும் கிருஹஸ்தர்களுக்கே ஏற்றது. மற்றோர் ஜபம் ஹோமம் தேவார்ச்சனம் இவைகளால் இஷ்டத்தைப் பெறலாம்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று. 69 சுலோகங்கள்.

மூன்றாம் அத்தியாயம்.

இந்திரன் :—பகவன்! ஹிம்ஸையாலுண்டாகும் பாபங்களைக் கூறினீர். திருட்டினால் வரும் தீமையை விளக்கிக் கூறுங்கள்.

பிருஹஸ்பதி :—ஜீவனை வதைப்பது பாபங்களில் அதிகமானது. நம்பியவனையும் சரணாகதனையும் கொல்வது அதிலும் கொடிய பாபமாம். நம்பியவன் பாபியானாலும் சூத்ரனாயினும் சண்டாளனாயினும் அவனைக்கொல்வது பிரஹ்மஹத்திக்குச் சமமாம். அதற்குப் பிராயசித்தமே இல்லை. பிரஹ்மத்தை அறிந்தவனும் தரித்ரனும், மிக கஷ்டப்பட்டு பொருள் தேடி அதைக்கொண்டே ஜீவிப்பவனும் குடும்பியுமான ஒருவர் பொருளை அபஹரித்தல் மிகக்கொடிய பாபமாகும். நம்பியவர் பொருளை அபஹரித்தல் அதிலுமதிக பாபம். தரித்ரன் பொருளை அபஹரிக்கக் கூடாது. தேவத்விஜர்களுக்குச் சொந்தமான ஸ்வர்ண ரத்நாதிகளைத் திருடும் பாபியைக் கொல்

பவன் அச்வமேதயாக பலனைப் பெறுவான். குரு தேவபிராமணன் நண்பன் புதல்வன் ஆத்மஸகா இவர்களது பொருளைத் திருடினுல் ஒன்றைவிட ஒன்று பத்து மடங்கு பாபத்தை அளிக்கும். பொருளைத் திருடி வேசிக்கோ, அன்யன் ஸ்திரீக்கோ, நடனுக்கோ அளிப்பவன் பிராமண அதமனுவன். க்ஷத்திரிய வைசிய சூத்ர பிராமண சண்டாளர் பொருளைத் திருடினுல் முறையே பத்து பத்துமடங்கு பாபமதிகமாம். பதினுயிரம் ஆயிரம் நூறு பத்து இதில் ஓரம்சம் திருடினுலும் பாபமே. இவ்விஷயத்தில் உதாரணமாக ஓர் கதை சொல்லுகிறேன் கேள். அது மிக ரஹஸ்யமானது.

த்விஜவர்மன் கதை

முன் ஓர் ஸமயம் காஞ்சியிலே வஜ்ரன் என ஓர் திருடனிருந்தான். அழகிய அந்நகரிலுள்ளவரனைவரும் தனிகர், தயை நிறைந்தவர், நோயற்றவர். பேராசைகொண்ட வஜ்ரன் தனிகர் விடுகளிலிருந்து சிறிதுசிறிதாக திருடி நிறையபொருள் சேர்த்து விட்டான். அதைக்காட்டில் ஓர் பள்ளத்தில் பதுக்கிவைத்து அதன்மீதுமூட ஓர்கல்லைத் தேடிச்சென்ருன். அச்சமயம் அவ்வழியாக வந்த ஓர் வேடன் அந்த தனத்தில் பத்தில ஓர் பாகத்தை எடுத்துக்கொண்டு விறகுக் கட்டுடன் சென்றுவிட்டான். வஜ்ரன் விசாலமான கல்லைக் கொண்டுவந்து அதன்மீதுமூடி. மண்ணைத்தள்ளி குழியை மறைத்துவிட்டு மறுபடியும் காஞ்சி சென்ருன். இங்ஙனம் பலமுறை திருடிப் பூமியில் வைத்து வந்தான்.

கிராதன் தன் மனைவியினிடம் அப்பொருளைத் தந்து அது வந்த வரலாற்றையுங் கூறினுன். அவள் அதை மிக ஜாக்ரதையாக வைத்துவிட்டுச் சிறிதுயோசித்தாள். பின்னர் கணவனை நோக்கி “நமது வீட்டருகே நடமாடும் ஓர் பிராமணன் என்னைப் பார்த்து, ‘இவள் ராஜ மனைவியாயிருந்தால் மிக்க பாக்யவதியாயிருப்பாள். வேடன், ஆட்டக்காரன், சண்டாளன் முதலியவர்களிடம் லக்ஷ்மி நீண்ட நாள் நிற்க மாட்டாள். இருந்தாலுமிவள் மிக்க பாக்யவதி புண்யவதியாவாள்’ என்ருர். அவர் சொல் வீணுவதில்லை. நமது

உழைப்பினால் உண்டாகும் பொருளே நிலைத்து நிற்கும். மற்றது விரைவில் மறைந்துவிடும். தானே வந்த தனத்தைக் கொண்டு குளம் கிணறு முதலிய தர்மத்தைச் செய்வோம்'' என்றாள். இதைக் கேட்டு புண்யவசத்தால் அவனுமங்ஙனமே இந்திர தீர்த்தத்திற்குக்கிழக்கே ஆழமான அழகிய ஓர் தடாகத்தை நிர்மாணம் செய்தான். கையிலிருந்த பொருளைக் கூலியாகக் கொடுத்துவிட்டான். மிகுதி வேலைக்குப் பொருளில்லை. முன் போலவே வஜ்ரன் பூமியில் புதைத்து வைத்திருந்த தனத்திலிருந்து சிறிது சிறிதாகக் கொண்டு வந்து வற்றாத ஜலமுள்ளபடி ஆழமாகத் தோண்டி நாலு புறமும் படிக்கட்டுகளையும் மகா விஷ்ணுவுக்கு ஓர் ஆலயத்தையும் கட்டினான். படிக்கரை இடையே ஓர் சிவாலயத்தையும், காட்டை அழித்து அதனுள்ளே பற்பல ஆலயங்களையும் வீடுகளையும் கட்டி தேவர்க்கும் த்விஜர்க்குமர்ப்பணம் செய்தான். தேவநாதர் முதலிய வேதியரை அழைத்து வஸ்த்ரஸ்வர்ணாதிகளைத் தந்து, "வேதியர்களே! வீரதத்தனெனும் விறகு வெட்டி வேடனெங்கே? இந்த தடாகம் தேவாலயம் அக்ரஹாரமிவைகளெங்கே? தங்கள் கிருபையால் தான் இவை தோன்றின. அவைகளை ஏற்று அருள் புரியவேண்டும். என் போன்றோர்க்கு நீங்களே கதி'' என்று வேண்டினான். அவர்கள் அப்படியே ஏற்று அவனது பிராமண பக்திக்கேற்றபடி த்விஜவர்மா என்று அவனுக்குப் பெயரிட்டனர். அவன் மனைவியைச் சீலவதி என்றழைத்தனர். இவ்விருவர்களும் புரோஹிதர் போன்ற தேவநாதர் பெயரால் தேவநாதபுரமென்று அதற்குப் பெயரிட்டு அங்குள்ளவர்களைக் காக்க தானுமங்கே வஸித்து வந்தான். பல காலஞ்சென்ற பின் மனைவியுடன் த்விஜவர்மா இறந்தான். அவனருகே யமகிங்கரர் பிரஹ்மதூதர், சிவதூதர், விஷ்ணுதூதர் அனைவரும் சூழ்ந்து தத்தம் உலகிற்கே ஏற்றவனிவன் எனப் போர் புரிந்தனர். இதனிடையே நாரதர் அங்கு தோன்றி இந்த வேடன் சொந்த தனத்தினால் புண்யம் செய்தவனல்ல. எவர்களுடைய பொருளைத் திருடித் தர்மஞ் செய்தானோ அவர்களும் இறக்கும் வரை இவன் வாயு வடிவ

ஞய் ஸஞ்சரிக்கட்டுமென்றார். இதைக் கேட்டு, வந்த தூதர்கள் சென்றபின் முனிவர் சீலவதியை நோக்கி 'நீ மிகப் புண்யவதி. பிரஹ்மலோகஞ் செல்' என்றார். அவள் 'கணவனை விட்டு நான் எங்கும் செல்ல மாட்டேன. அவர் வரும் வரை அல்லது பழய உடலைப் பெறும் வரை இங்கேயே இருப்பேன்.' என்றாள். கருணைக்கடலான நாரதர் 'என் மஹிமையால் கர்மாவை நன்கு செய்யத்தக்க உடலைப் பெறுவீர்கள். அப்பாபம் நிவர்த்தியாக சுத்த ஜலத்தில் புனலாடி பூதி அணிந்து ஸாம்ப ஸதாசிவனை மனத்தே நினைத்து சதருத்ரமெனும் மா மந்திரத்தை ஜபி. அது ஆயிரத்தெட்டு முறை ஜபிக்கப்படின் பிரஹ்மஹத்யாதி ஸகல பாபங்களையுமகற்றும்' என்று அம்மந்திரத்தை அவளுக்கு உபதேசித்தார். அவளங்ஙனமே ஜபிக்க த்விஜவர்மன் சாபமகன்று பழய உடலைப் பெற்றெழுந்தான். பின்னர், வஜ்ரனும் அவன் திருடிய பொருளுக்குச் சொந்தக்காரர்களுமிறந்தனர். யமதர்மன் அனைவரையும் நோக்கி 'நீங்கள் செய்த பாபங்களெல்லாம் தைவஸங்கல்பத்தினல் புண்யமாகமாறின. முதலில் புண்யத்தை அனுபவிக்கிறீர்களா? அல்லது பாபபலனை அனுபவிக்கிறீர்களா?' என்று கேட்டார். அனைவரும் ஸுகிருதபலனையே கோர தர்மராஜன், த்விஜவர்மனது புண்யபலத்தால் எல்லோருமே புத்ர மித்ர களத்ராதிகளுடன் விமானத்தின் மீதேறி ஸ்வர்க்கம் செல்லுங்கள் என்றார். த்விஜவர்மா மனைவியுடன் எல்லா உலகங்களையும் தாண்டி கைலாஸஞ் சென்று சிவ கணங்களுக்குத் தலைவனாகி இன்றுமங்கே வஸிக்கிறான்.

அப் புண்யத்தின் தாரதம்ய பாகுபாட்டை இந்திரன் வினவ 'பாதி புண்யம் த்விஜவர்மனைச் சார்ந்தது. கால் பங்கு வஜ்ரனுக்கும் மற்ற கால்பங்கு பொருளைப் படைத்தவருக்கும் சென்றது. மநஸ் வாக் காய சேஷ்டைகளால் நான்கு வகையாக செய்யப்படும் பாபங்களும் அதனல் செய்யப்படும் பிராயச்சித்தங்களாலகலும்' என்று பிருஹஸ்பதி கூறினர்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று. 66 சுலோகங்கள்

நான்காம் அத்தியாயம்.

இந்திரன்:—மது எத்தகையது? அதனாலுண்டாகும் தீமை நன்மை யாவை? அதை அருந்தில் யாது தோஷம்?

பிருஹஸ்பதி:—மாவினாலும் பனை சாற்றினாலும், தென்னஞ் சாற்றினாலும், புஷ்பங்களாலும் வெல்லத்தினாலும் ஐந்து வகையாக ஆஸவம் செய்யப்படுகிறது. முறையே ஒன்றைவிட ஒன்று பாபத்தில் குறைவானது. பைஷ்டிகமென்பதை எவரும் அருந்தலாகாது. முதலிரண்டை வேந்தரும் சூத்ரரும், முதல் மூன்றை வைச்யரும் விடவேண்டும். மூன்றுவதிலிருந்து பிராமண ஸ்திரீ தவிர மற்ற ஸ்திரிகளும் முவ்வர்ணத்தாரும் அருந்தலாம். கணவனையிழந்தவள், கன்யகை, ருதுமதி இவர்கள் எந்த மதுவையும் கொள்ளலாகாது. கணவன் ஊரிலில்லாதபோது மதுபானஞ் செய்யும் பெண் உன்மாதினி. அவளைச்சண்டாளி போல் தூரவிலக்கவேண்டும். மோஹத்தினால் பிராமணன் மதுவை உட்கொண்டால் சாந்த்ராயண க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவேண்டும். பத்தாயிரம் காயத்ரியையோ அல்லது ஜாதவேதஸே என்ற மந்திரத்தையோ அம்பிகா ஹிருதயத்தையோ ஜபித்தால் சுத்தனாவான். மற்ற முவ்வர்ணத்தவருக்கும் பெண்களுக்கும் முறையே பாதி பாதி பிராயச்சித்தம் செய்ய வேண்டும். பிராமணர்களைக்கொண்டு மற்றவர் அதைச் செய்யலாம். ஜலத்திலிருந்து ஆயிரம் முறை ஜபித்தாலும் போதும்.

லக்ஷ்மி, ஸரஸ்வதீ, கௌரி, சண்டிகா, திரிபுராம்பிகா, பைரவா, பைரவி, காளி, மஹாசாஸ்தா, மாத்ருகணங்கள் மற்ற சக்திகள் இவர்களது பூஜைக்கு மது மிகவும் சிலாக்கியமானது. வேதாந்தமறிந்த வேதியர் மதுவில்லாமலே அர்ச்சிக்க வேண்டும். காமனைகொண்ட இதரர் மதுவினால் தேவியைப் பூஜித்து இவளைத்தவிர மற்றெதையும் கருதாது அந்த நிவேதன மிகுதியைப் புஜித்தால் பாபலேசமுண்டாகாது. தெரிந்தோ தெரியாமலோ செய்த ஸகல பாபங்களையுமகற்ற தேவிபாதார விந்த ஸ்மரணமே போதிய பிராயச்சித்தமாம். தேவி நிவே

தன மில்லாமலருந்தும் மது எவ்வளவு பிந்து உட்சென்றதோ அவ்வளவாண்டு ரௌரவ நரகத்தை நந்தரும். போகத்திற்காக புஜிப்பவன் சூத்ரனிலுமதமன். பிராமணன் மோஹத்தினலோ லோபத்தினலோ விருப்பில்லாமலோ மதுபானஞ் செய்தால் தீயில் விழுவதைத்தவிர வேறு பிராயச்சித்தம் கூறக்கூடாது. தனது தவறை உணர்ந்து ஜன்மம் வியர்த்தமாய்விட்டதே என புழுபோல் துடிக்கும் பிராமணனுக்கு மஹான்களின் அநுக்ர ஹத்தாலும் பராசக்தியின் அர்ச்சனையாலும் யமநியமங்க ளாலும் எத்தனைநாள் அதை உட்கொண்டானே அத்தனை முறை சாந்த்ராயன க்ருச்ர அனுஷ்டானத்தினலும் சுத்த னவான். புத்தி பூர்வமாக குடித்தால் இரண்டுமடங்கு இந்த பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று. 18 சுலோகங்கள்.

ஐந்தாம் அத்தியாயம்.

இந்திரன்:—அகம்யாகமனம் என்பதுயாது? அதனு லுண்டாகும் தோஷம்யாது? அதற்குப் பிராயச்சித்தம்யாது? இவைகளை விவரிக்க வேண்டுகிறேன்.

பிருஹஸ்பதி:—தாயுடன் பிறந்தவள், குருபத்னி, மாமன் மனைவி, இவர்கள் மனைவியாக எண்ணத்தக்கவர்களல்ல. தன் உடன் பிறந்தவளும் குருபத்னியும் பெற்றதாய் போன் றவர்கள். பிரஹ்மோபதேசம் முதல் வேதாந்தம் வரை கற் பித்தவர் மஹாகுரு ஆவர். பிரஹ்மோபதேசம் ஓரிடத்தே வேத சாஸ்த்ரங்கள் வேறோரிடத்தே எனில் இவர் ஆசார்ய ராவர். இப்படி பலவகைப்படும். ஆசார்யமனைவியுடன் சேர்ந் தால் பனிரண்டாண்டு க்ருச்ரம் அநுஷ்டிக்கவேண்டும். மாமன் மனைவியுடன் சேர்ந்தால் ஆறாண்டு க்ருச்ரம் செய்யவேண்டும். பிராமண ஸ்த்ரீயுடன் பிராமணன் சேர்ந்தால் மூன்றுநாள் உபவாஸமிருந்து நூறு பிராணாயாமங்கள் செய்தால் சுத்தனு

வான். ஸ்வஜாதி குலடையானல் இரண்டுநாளும், க்ஷத்ரிய ஸ்த்ரீயானல் ஐந்துநாளும், வைசியஜாதியானல் ஏழுநாளும், குயவன் வேடன் சம்படவன் தொழிலாளிகள் ஜாதியானல் பனிரண்டுநாளும், சண்டாளியானல் ஓராண்டும் உபவாஸமிருந்தால் சுத்தனவான். தேவதாஸி ப்ரஹ்மதாஸி ஸ்வதாஸி சூத்ரதாஸி என்ற நால்வரில் முதலிருவரும் க்ஷத்ரிய ஸ்திரீ துல்யமாவர். மூன்றுவது ஸ்த்ரீ வைசியப்பெண் போலும் மற்றவள் தாழ்ந்த ஜாதிப்பெண் போலுமாவள். ஆத்மதாஸியானல் சொன்னதில் பாதி தோஷமே தோன்றும். ஸ்வஸ்த்ரீ ரஜஸ்வலையாயிருக்கும்போது சேர்ந்தால் ப்ராஜாபத்ய விரதம் செய்யவேண்டும். அத்தகைய அன்யஸ்த்ரீயாயின் இருபங்கும் க்ஷத்திரியையாயின் நாலுபங்கும் வைசியையாயின் எட்டுபங்கும் சூத்ரை அல்லது வேசியாயின் பதினறு பங்கும் ஸங்கரஜாதியாயின் முப்பத்திரண்டு பங்கும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். ஸ்வபத்னி ருதுவான காலத்தில் மோஹத்தால் சேரில் சொன்னதில் பாதி பிராயச்சித்தம் அதாவது ஸ்நாநம்செய்து வேறு வஸ்திரமணிந்து இரவுவரை உபவாஸமிருந்து தேவியை அர்ச்சிக்க வேண்டும். பெற்றோர் உத்திரவினல் கன்யகையைச்சேர்ந்தால் மூன்று நாள் உபவாஸமிருந்து அவளையே மணக்கவேண்டும். அவள் பிறர்க்குக் கொடுக்கப்பட்டு பின் கன்யாகாலத்தில் சேர்ந்தால் மூன்றுநாள் உபவாஸத்தால் சுத்தனவான். ஓர்மாத காலம் அத்தகைய கன்யகையைச்சேர்ந்தவன் நூறு ப்ராணயாமம் செய்யவேண்டும். ஒருவனல் அநுபவிக்கப்பட்ட கன்யகையை அன்யருக்கு விவாஹம் செய்பவன் ஸர்வகர்மத்திற்கும் அர்ஹனல்லாத சூத்ரனவன்.

பெற்றோரறிய ஒரு கன்யகையை ஒருவன் சேர்ந்தபின் அவளை அன்யனுக்குக் கொடுத்து அவனிறந்தபின் முதல்வன் தனது பாபத்தைக்கூறி மஹான்களது அநுக்ரஹத்தால் விதிப்படி அவளையே மணந்து கிருஹஸ்த கர்மாக்களை அநுஷ்டிக்கலாம். விவாஹமானவள் கணவனிறந்த பின் வேறொரு புருஷனைச் சேர்ந்தால் அவள் கர்மாவுக்கேற்றவளல்ல.

எறும்பு முதல் பிரஹ்மாவரையிலுள்ள ஒவ்வோர் பிராணியும் பஞ்சபூதங்களாலாகியன. ஆஹாரம் சிருங்காரம் நித்திரை பயம் இவைகளால் சூழப்பட்டிருக்கின்றன. ஆஹாரமின்றி பிழைத்தலரிது. உண்பவர் காமனையை அடக்கமுடியாது. உலகைப் படைக்கும்போதே பிரஹ்மன் ஆண்பெண் வடிவங்கொண்டு காமனையால் பிரவிருந்தித்தார். ஆதலின் அவர் பிரவிருத்திவரை உலகமும் காமனைகொண்டே இருக்கும்; அவர் ஓய்ந்தால் ஓய்வடையும்.

இப் பிரவிருத்தியினாலேயே நிவிருத்தியினாலடையக் கூடிய மோக்ஷத்தைப் பெற ஓர் ரஹஸ்யமான வழி உண்டு கேள். "ஸர்வாத்மாவான வாஸுதேவன் புராதன புருஷன். ஸகல ஜகத்தையும் பெற்றெடுத்த ப்ரகிருதி லக்ஷ்மி. இருபத்தைந்து தத்வ த்ருப்திக்காக மதநம் செய்யப் படுகிறது. இவள் உமையவள். நான் ஸதா சிவன். இருபத்தைந்து தத்துவத்திற்காக கடயப்படுகிறது" என்ற மந்திரத்தின் மஹிமையால் ஸ்த்ரீ புருஷர்களுக்கு தோஷம் தோன்றாது. மற்றுமோர் அதிரஹஸ்யத்தைக் கேள். பக்தி சிரத்தையுடன் ஸ்நானம் செய்து ஜலத்திலிருந்து ஆயிரம் முறை பஞ்சதசாக்ஷரீ மந்ரத்தை ஜபித்து தேவியை அர்ச்சித்தால் எத்தகைய பாபமும் கல்ப கோடிகளில் செய்து சேர்ந்திருந்தாலும் பறந்துபோம். ஆபத்தகன்று ஸம்பத்துமுண்டாகும்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று. 36 சுலோகங்கள்.

ஆறும் அத்தியாயம்.

இந்திரன் :—ஸர்வ தர்மங்களையுமுணர்ந்த ஸர்வ பூதங்களுக்கும் உபகாரஞ்செய்யும் பகவானே! சேர்க்கையாலுண்டாகும் பாப விசேஷத்தைக் கூறும்.

பிருஹஸ்பதி :—அதைச் செய்தவன், பிரதானம், ஸஹாயம் செய்தவன், நிமித்தமாயிருந்தவன், அநுமதியளித்தவன்

என்பவர்களுக்கு செயலுக்கேற்றபடி பாபமதிகம். முற்கூறிய உபாயத்தால் அது அகலும். மத்யம், கஞ்சா, பிசின், நாக்கொடை, உள்ளிப்பூண்டு, வெங்காயம், தும்மட்டிக்காய், நாயுரிவி, கோவக்காய், ஆம்பல், முருங்கக்காய், அத்திக்காய், கத்திரிக்காய், தேத்தாங்காய் இவைகளைப் புஜித்தால் பாபம். பெயர் மாத்திரப் பிராம்மணன், தொழிலாளி, நடன், தன்னகரத்திலுள்ள ஸேவகன், குக் கிராமத்திலுள்ளவன், பரஸ்த்ரீகாமீ, வைத்யன், வைகாநஸன், சைவன், பெண்ணைக்கொண்டு ஜீவிப்பவன், அன்னத்தை விற்பவன், ஆயுதத்தால் பிழைப்பவன், ஸன்யாஸி, வைதிகாசாரத்தை நிந்திப்பவன் ஆகிய இவர்களது பக்வான்னத்தைப் புஜித்தால் முறையே பாபமதிகமாகும். நமது அரிசியைக்கொண்டு அவர்கள் பாகம் செய்தளித்தால் சிறிது பாபமாம். பிராமண க்ஷத்ரிய வைச்யர் ஸத்சூத்ரர் இவர்களது, (நாம் காணாத) தைல பக்வமான பொருளைப் புஜித்தால் கால் பகுதி பாபமாம். த்விஜ தாஸியால் செய்யப்பட்டதை அவள் எதிரில் புஜித்தாலும் பாபமாம். வேசியின் பொருளை ஏற்றால் முக்கால் பங்கு பாபமாம். இடையன் சூத்ரனைப் போன்றவனே. ஆனால் அவனிடம் பால், நெய் முதலியவைகளை ஏற்கலாம். எண்ணெய், நெய், வெல்லம் இவைகளாலாகியதை வைச்யனிடமிருந்து ஏற்கலாம். பிரஷ்ட பிராமண ஸ்திரீ தாஸியைப் போன்றவள். அவளெதிரில் எதையும் உட்கொள்ளலாகாது. ப்ருவன் அன்னத்தைப் புஜிக்கும் பூசுரன் நூறு பிராணாயாமம் செய்யவேண்டும். அல்லது ஜலத்திலிருந்து காயத்ரியை அல்லது இதம் விஷ்ணு, த்ரயம்பகம் என்பதை மூன்று வாரம் ஜபிக்கவேண்டும். மேற்படி அன்னத்தைப் பெண்கள் புஜித்தால் ஓரிரவு உபவாஸமிருந்து எத்தனை வேளை புஜித்தாளோ அத்தனை பிராமணர்களுக்கு அன்னமிட்டால் சுத்தையாவாள்.

அல்லது அவ்வன்னத்தை, ஜலதேவதாகமான, பாவமானுதி ஸூக்தங்களாலே ப்ரோக்ஷிக்கவேண்டும். அன்ன ஸூக்தத்தாலோ பிருதர்வைவாருணி என்பதாலோ பிரஹ்மார்ப்பணம் என்ற சுலோகத்தாலோ ஜபித்து புஜித்தால்

பாபமில்லை. இதம் விஷ்ணு: என்ற மந்த்ரத்தால் ஏழுமுறை ஜபித்து ஸோஹம் பாவனையால் தியானம் செய்து உண்டால் எந்தப் பாபமும் வாராது. சங்கரனை ஸோஹம் பாவனையால் தியானித்துத் திரியம்பக மந்த்ரத்தை ஜபித்தலும் நன்றே. இதுவே துரன்னத்திற்கும் பிராயச்சித்தமாகும்.

இதிலும் ரஹஸ்யமானதைக்கேள்; தேவியைத்தியானம் செய்து பஞ்சதசாக்ஷரியை ஜபித்து அவளுக்கு நிவேதனம் செய்ததிது என்ற எண்ணத்தோடு நித்யம் புஜிப்பவன் எந்தப் பாபத்தையும், தாரித்ர்யம், வியாதி, சத்ருபயம், முதலியவைகளையு மடைய மாட்டான். ஜபம் செய்பவனுக்கு எங்கும் மங்களமுண்டு. முடிவில் முக்தியுமுண்டாம். இன்னும் என்ன கேட்க விரும்புகிறாய்?

ஆறாம் அத்தியாயம் முற்றிற்று. 22 சுலோகங்கள்.

ஏழாம் அத்தியாயம்.

இந்திரன்:—ஸ்வாமின்! எல்லாமுரைத்தீர். எந்தக் கர்ம விபாகத்தால் எனக்கு இந்தகதி வந்தது? அதற்கென்ன பிராயச்சித்தம்? அதைக் கூறுங்கள்.

பிருஹஸ்பதி:—கச்யபருக்குத் திதி என்பவளிடம் தநுவும் ரூபவதியும் பிறந்தனர். ரூபவதியைத் தாதாவுக்களித்தார். அவ்விருவர்களுக்கும் விச்வரூபனென்ன ஓர் புத்ரன் பிறந்தான். அவர் விஷ்ணு பக்தர். கல்வியைக் கரைகண்டவர். தைத்யர் சுக்ரரைப் புரோஹிதராக வரிக்க, தேவராஜனை நீ விச்வரூபனை வரித்தாய். அவர் தானவராது ஸஹோதரி புத்ரராதலின் அவர்களிடம் த்வேஷ மற்றவராயிருந்தார். ஆதலால் அஸுரேந்திரனும் தேவேந்திரனும் ஸமபலமாகவே இருந்தனர். ஆதலின் கோபங்கொண்ட நீ தபோவனஞ்சென்று முனிவர் சூழ பிரஹ்ம நிஷ்டனாய் வேத மோதிவரும் விச்வரூபரது மூன்று தலைகளையும் அறுத்தாய். அந்தப் பாபத்தினால் பீடிக்கப்பட்ட நீ மேரு குஹையில் அனேகாண்டுகள் பதுங்கி

நின்றாய். புத்ர சோகத்தால் வருந்திய தாதா உன்னைவிட்டு லக்ஷ்மி விலகட்டுமெனச் சபித்தார். நாதனற்ற தேவர்கள் தைத்யர்களால் பீடிக்கப்பட்டு பிரஹ்மாவைச் சரண் புகுந்தனர். அவர் அதற்கு ஒன்றும் பரிஹாரம் செய்ய முடியாமல் தேவர்களை அழைத்துக்கொண்டு வைகுண்டஞ் சென்றார். அங்கு பகவானைப் பணிந்து துதித்து வேண்டினர். கருணை மூர்த்தியான பகவான் சிறிது யோசித்து, அந்தப் பாபத்தை மூன்றாகப்பிரித்துப் பெண்களிடமும் பூமியினிடமும் மரத்தினிடமும் கொடுத்தார். பெண்கள் ஸதா புருஷ ஸங்கத்தையும் ருதுவில் புத்ரோத்பத்தியையும், தன்னை வெட்டியபின்பும் தான் வளரும்படி மரங்களும், வெட்டிய பள்ளம் தானே தூர்ந்து போகும்படி பூமியும் வரம் வேண்டினர். அதை அச்யுதனளிக்க பூமியிடம் அந்த பாபம் களராகவும், மரங்களிடம் பிசினாகவும், பெண்களிடம் ரஜஸ்ஸாகவும் நின்றது. பிரஹ்மாவினருளால் நீ குகையிலிருந்து வந்து ராஜ்யத்தையும் லக்ஷ்மியையும் பெற்றாய். பிரஹ்மாவினால் ஸமாதானம் செய்யப்பட்ட தாதா நானிந்திரனுக்களித்த சாபம் காலாந்திரத்திலாவது பயனையளிக்கட்டுமென விஷ்ணுவை வேண்டினார். வருங் கார்யத்தை உணர்ந்த வைகுண்டன் அப்படியே ஆகட்டும் என்று சிரித்துக்கொண்டே சென்றார்.

மூவ்வுலகையுமாண்டுவந்த நீ கைலாஸத்தைப் பீடிக்க ஆரம்பித்தாய். சிவனால் தூண்டப்பட்ட தூர்வாஸர் உன் மதத்தை அகற்ற மறுபடியும் அதே சாபத்தைக் கொடுத்தார். இருவர் சாபமும் ஒரே பலனைத் தந்தது. ஆகலின் மூவ்வுலகும் லக்ஷ்மி யக்ஞம் தானம் தபஸ் யமம் நியமம் முதலியவையில்லாமலிருக்கின்றது பார். வேதியர் லோபிகளாய் தைர்யமிழந்து நாஸ்திகராயினர். செடி கொடிகள் வீர்யமற்றிருக்கின்றன. சந்த்ரசூர்யரும் அக்னியும் ஒளியற்றிருக்கின்றனர். காற்று புழுதி நிறைந்திருக்கிறது. திக்குமாகாசமும் குழம்பி இருக்கின்றன. மூவ்வுலகும் பாழாயிருக்கின்றது.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று. 30 சுலோகங்கள்.

எட்டாம் அத்தியாயம்.

ஹயக்ரீவர்:—இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது மலகனெனு மரக்கன் ஸ்வர்க்கத்தைப் பிடித்து நந்த வனத்தைப் பாழாக்கி கோட்டையை இடிந்து வீட்டிலுள்ள வானவரை வலுவிலே இழுத்து அப்ஸரஸ்களையும் ஹிம்ஸித் தான். தேவர் கூக்குரலைக்கேட்ட வாஸவன் ஆஸனத்தைவிட்டு அமரருடன் ஸத்யலோகஞ் சென்று பிரஹ்மனிடம் முறை யிட்டான். பிரஹ்மன் தேவர்களை நோக்கி, தைத்யர்களைச் சிக்ஷிப்பவரான முகுந்தனையே சரண மடைவோமென அனை வரும் பாற்கடலை யடைந்தனர். அழகிய சொற்களால் அவ ரைப் பணிந்து துதிக்க, பகவான் ப்ரத்யக்ஷமாகிக் கூறினர்.

ஹரி:—தேவர்களே! அஞ்சவேண்டாம். எனது தேஜ ஸால் உங்களைக் காப்பாற்றுவேன். திவ்ய ஓஷதிகளை இப்பாற் கடலிலிட்டு அஸுரருடன் ஸமாதானம் செய்துகொண்டுமந்தர மலையை மத்தாகவும் வாஸுகியைக் கயிருகவும் செய்து எனது ஸஹாயத்தால் அமிருதமதனம் செய்யுங்கள். தானவரிடம் சென்று ஸமாதானமாக, இதிலிருந்துவரும் அமிருதம் இரு வகுப்பினர்க்கும் பொதுவானதெனக் கூறுங்கள். அமிரு தத்தை உண்டு அமரர்களாவீர்கள். அஸுரர் அதை அடையா வண்ணம் யான் செய்கிறேன்.

அங்ஙனமே தேவர் தைத்யருடன் ஸந்தி செய்து பாற் கடலைக் கடைய ஆரம்பித்தனர். வாஸுகியின் வால் புறத்தில் வானவரும், முகத்தைத் தானவரும் பிடிக்கும்படி பகவான் தந்திரமாகச் செய்தார். பலவான்களானாலும் அஸுரர் அரவத் தின் முகத்திலிருந்து கிளம்பிய விஷஜ்வாலையால் எரிக்கப்பட்டு தேஜஸை இழந்து துன்புற்றனர். அனுகூலக் காற்றினாலும் தன் தேஜஸினாலும் தேவர்களுக்குப் பலமளித்து பகவான் ஆதி கூர்மமாகி முதுகுமீது அம்மலையைச் சுமந்தார். ஒருரு வால் தேவரிடையிலும் மற்ருென்ருல் அஸுரரிடையிலு மிருந்து இழுத்தார்; வேருேருருவால் மலையின் தலையிலிருந்து அதைப்பிடித்துக் கொண்டும், வாஸுகிக்கும் மற்றவர்க்கும்

சக்தியையும் தந்தார். இதென்னவென்று ஸித்தர் சிந்திக்க, வாருணீ எனும் தேவி தோன்றி தைத்யரிடம் சென்றாள். ஸுரர் என்ற அதை அவர்கள் ஏற்காததால் அஸுரர் என்றழைக்கப்பட்டனர். பரமன்ஸூசனையால் தேவரதை ஏற்க அன்று முதல் ஸுரர் ஆனார்கள். பிறகு ஸுரர் களால் பூஜிக்கத்தக்க ஸுரபி தோன்ற அனைவருமதைக் கண்டு ஆனந்தித்தனர். மறுபடியும் கடைய அழகிய அப்ஸரஸ்ஸுக்களும் வாசனையுள்ள பாரிஜாதமும் தோன்றின. பின்னர் சந்திரன் தோன்ற பரமசிவனவனை ஏற்றுக் கொண்டார். அதன் பின் தோன்றிய விஷத்தை நாகங்களும், கௌஸ்துபமெனும் மணியை மாதவனும், வாஸனை நிறைந்த விஜயா என்னும் ஓஷதியை பைரவரும் எடுத்துக் கொண்டனர். பிறகு திவ்யாம்பரதாரியான தன்வந்தரி அமிருதம்நிறைந்த கமண்டலுவுடன் தோன்றினர். அதைக் கண்டு அனைவரும் ஆனந்தமடைந்தனர். அதன் பின் தாமரைக் கந்தமுள்ள ஸாக்ஷாத் லக்ஷ்மிதேவி கையிற் தாமரை மலருடன் தோன்ற முனிவர் ஸ்ரீஸூக்தத்தினல் அவளைத் துதித்தனர். கந்தர்வர் கானம் செய்ய, அப்ஸரஸ் ஆட, கங்காதி புண்ய நதிகள் நீராட்டிவைக்கக் காத்திருந்தனர். தாமரையிலமர்ந்த தேவியை எட்டு திக்கஜங்களும் ஸ்வர்ண கலசத்தினல் ஸ்நாநம் செய்வித்தன. பகவானுக்கு மிகப் பிரிய மான துளஸியும் கடலிலிருந்து தோன்றினள். பாற்கடல் திவ்ய வடிவத்துடன் அழகிய பத்மமாலையைத் தேவிக்களிக்க திவ்யாபரணங்களை விச்வகர்மா தந்தான். அனைவரும் பார்த் திருக்க திவ்யமாலை யணிந்த ஸ்ரீதேவி ஸ்ரீபதியின் மார்பை அடைந்தாள். துளஸியும் பகவானையே அடைய, ஸர்வலோக மகேச்வரியான லக்ஷ்மீதேவி கருணைநிறைந்த கண்களால் தேவர்களை அநுக்ரஹித்தாள்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று. 47 சுலோகங்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்.

ஹயக்ரீவர் :—விஷ்ணுவால் ஏற்கப்பட்ட தேவர் மிக ஸந்துஷ்டியுடனிருக்க, விஷ்ணு பராங்முகர்களான மலகாதி அஸுரர் லக்ஷ்மீ கடாக்ஷமின்றி மிக்க வாடியவர்களாயிருந்தனர். தைத்யர் தன்வந்திரியிடமிருந்த அமிருதத்தைப் பிடுங்க தேவர்க்கும் அஸுரர்க்கும் பயங்கரமான யுத்த முண்டாயிற்று. இதைக்கண்டு பிரஹ்மாவும் சம்புவும் தத்தமிருப்பிடம் சென்றனர். ஸர்வலோக ரக்ஷகனன விஷ்ணு தன்னைவிட வேறல்லாத ஸாக்ஷாத் மஹேச்வரியை ஆராதித்து, அவள்மயமாகி விட்டார். எல்லோரையும் மயக்கத்தக்க சிருங்கார வேஷமுள்ள அம் மோஹினி, புன்னகையால் அஸுரரை மயக்கி, “வீண் சண்டையை நிறுத்துங்கள். நான் மத்யஸ்தையா யிருக்கிறேன். இருவரும் கஷ்டப்பட்டீர்கள். எல்லோருக்கும் ஸமமாகப் பங்கிடுகிறேன். இரு பந்தியாக உட்காருங்கள். எவரும் பேசக்கூடாது. கிரமமாகப் பங்கிடுகிறேன்” என்றாள். இச்சொல்லாலும் தேவியின் உருவாலும் மதிமயங்கிய தானவர் அங்ஙனமே ஏற்று அம்பிகையிடம் அமிருதத்தையளித்து வரிசையாக உட்கார்ந்தனர். இடது கரத்தில் அமிருதகலசத்தையும் வலதுகையில் ஸ்வர்ணக்கரண்டியையும் ஏந்தி, கங்கணம் சப்திக்க, மிக அழகாகத் தேவி தேவபந்திக்கே முதலில் பரிமாறினாள். தங்களிடையே தேவவேஷம் பூண்டு அமர்ந்திருக்கும் ஸைம்ஹிகேயனைச் சந்த்ர ஸூர்யர் இவனரக்கனென்று காண்பிக்க, பகவதி அக்கரண்டியால் அவன் சிரத்தை அறுத்தாள். அமிருத ஸம்பந்தத்தினால் அது இறக்காமல் மேலே சென்றது. இங்ஙனம் தேவர்க்கே அமிருதமனைத்தையும் அளித்துவெறும் பாத்திரத்தைத் தைத்யர் முன் வைத்துவிட்டுத் தேவி மறைந்தாள். சூன்யமான பாத்திரத்தைப் பார்த்த அஸுரர் அடங்காச் சினங்கொண்டு தேவருடன் போர் புரிந்தனர். அமிருதபான பலத்தால் அமரர் துர்ப்பலரான அரக்கரை அடித்துவிரட்ட, சிலர் பாதாளத்திற்கும் சிலர் திக்குகளின் ஓரத்திற்கும் பயந்தோடினர். மலகாதிகளை முறியடித்த வெற்றிபெற்ற வாஸவன் லக்ஷ்மீ கடாக்ஷத்தினால்,

இழந்த தேவ ராஜ்யத்தைப் பெற்று முன்போல் மூவுலகையு மாண்டுவந்தான். வானவரும் பயமின்றி ஸந்தோஷத்துடன் ஸஞ்சரித்தனர்.

இந்த மோஹினியின் சரித்திரத்தைக் கண்டு ஆச்சர்ய மடைந்த நாரதர் விரைவாகக் கைலாயஞ் சென்று நந்திபிடம் விடைபெற்று பரமனை வணங்கி அவரளித்த ஆஸனத்தி லமர்ந்தார். "தேவரிஷியே! அமிருத நிமித்தம் நடந்த தேவா ஸுர யுத்தத்தில் யார் வெற்றிபெற்றது? அங்கென்ன அற் புதம் விஷ்ணுவினால் செய்யப்பட்டது? கூறும்" என்று விருஷ பத்வஜன் வினவினார். ஸர்வக்ஞரான தாங்களறியாத தொன் றுண்டோ? அந்தப் போரில் ஆதி நாராயணன் சிருங்கார தேவதையே உருவெடுத்து வந்ததுபோல் மோஹினியாக வந்தார். அவளைக் கண்டவுடன் சண்டை ஓய்ந்தது. அந்த தேவி கூறியவண்ணம் அவளிடமே அமிருதத்தையளித்து தைத்யர் ஏமாந்தனர். தேவர்க்கே அதை அளித்து மோஹினி மறைந்தபின் அஸுரர் தேவருடன் சண்டை யிட்டுத் தோல்வியடைந்து பாதாளஞ் சென்றனர், என்று நாரதர் கூற, ஆச்சர்யமடைந்த பகவான் பார்வதியுடன் பாற் கடல் சென்றார். சேஷசாயி எழுந்து வரவேற்று ஈசனை இறு கத் தழுவி ஆஸனத்தே அமர்த்தி, வந்தகாரணம் யாதெனா வினவினார். உமது ஜகன்மோஹனகரமான மோஹினி உரு வைக் காணவந்தோம்; வேண்டியவர்க்குக் காமதேனுவான நீர் எமது விருப்பைப் பூர்த்திசெய்க, என்று பரமசிவன் கூற உடனே மாதவன் மறைந்தார். எங்கும் கண்படைத்த முக் கண்ணன் நான்கு திசைகளையும் நோக்க, அபூர்வமான அழகிய ஓர் உத்யானம் கண்முன்னே தோன்றிற்று. மலர்ந்த புஷ்பங்க ளிடையே ரீங்காரத்துடன் ஸஞ்சரிக்கும் வண்டுகளும், திக்குகளெல்லாம் பரவும் சம்பகாதி புஷ்பவாஸனையும், மாந் துளிரை அருந்தி மதோன்மத்தமாய்க் கூவும்குயிலும், அசோக மரத்தே தாண்டவமாடும் மயிலும், பாடலி தமாலம் முதலிய புஷ்ப வாஸனையும், இளங்காற்றால் அசையும் தாமரைநிறைந்த தாடகங்களும் முனிவர் மனதையுங் கவர்ந்தன. அங்கு ஓர்

பாரிஜாத மரத்தருகே இளம் ஸூர்யன்போல் சிவந்த மேனி யுள்ளவளும், நவ யௌவனம் வாய்ந்தவளும், உயர்ந்த பத்ம ராகம் போன்ற, பாதங்கள், நகங்கள் இவைகளின் காந்தியை உடையவளும் செம்மஞ்சிக் குழம்பில்லாமலே சிவந்த பாதார விந்தமுள்ளவளும், அழகாக சப்திக்கும் பாதசலங்கையுள்ள வளும், மன்மதன் பாணப் பெட்டியின் திமிரை அடக்கும் முழங்காலுள்ளவளும், யானை துதிக்கைபோன்ற தொடை யுள்ளவளும், சிவப்பாயும் வழவழப்பாயும் மெல்லியதாயு முள்ள பட்டாடை உடுத்தியவளும், புதிய மாணிக்கம் பொருந்திய ஒட்டியாணமுள்ளவளும், சுழல்போல் குழிந்த நாபியின்மேல் மூன்று ரேகையுள்ளவளும், மிகப்பெரிய ஸ்தனமண்டல மத்தியில் புரளும் முத்தாஹாரங்களுள்ள வளும், காட்டுவாழைபோல் மிருதுளமான கைகளும், அழகிய கங்கணங்களு முள்ளவளும், ஒவ்வோர் விரல்களிலும் கணையாழியணிந்தவளும், சங்கம்போன்ற கழுத்துள்ளவளும், கண்ணாடிபோன்ற முகமும், சிவந்த உதடும், முல்லையரும்பு போன்ற தந்த பங்க்தியும், பெரும் முத்துடன்கூடிய மூக்கும், சிறிய தாழமடல்போன்ற நீண்டகண்ணும், அர்த்த சந்திரன் போன்ற நெற்றியில் விளங்கும் முன்நெற்றிமயிர்களை யுடையவளும், அழகிய குண்டலம் உள்ளவளும், வாயில் வெற்றிலையும், நெற்றியில் கஸ்தூரிப் பொட்டும், தலையில் கறுத்தமயிரும், சஞ்சலமான கடைக்கண்களும் உள்ளவளும், ஸர்வ அவயவ பூஷிதையும், பந்தாடி வருபவளுமான மோஹி னியைக் கண்டு பரமசிவன் மோஹித்து உமையைவிட்டு அவளைப் பின் தொடர்ந்தார். அவள் பயந்தவள்போலோட வெகு சிரமப்பட்டு சிவன் அவளைப்பிடித்து அடிக்கடி ஆலிங் கனம் செய்து கொண்டார். அவரை உதறித்தள்ளி வெகு விரைவாக மோஹினி ஓடியும் காமபரவசரான சிவன் பின் தொடர்ந்து பலாத்காரமாகக் கட்டிக்கொண்டார். உடனே சிவ வீர்யம் சிந்த அதிலிருந்து ஸகல ராக்ஷஸர்களையும் வெல்லத் தக்க மஹா சாஸ்தா என்பவர் உதித்தார். சிவவீர்யம்பட ஆங் காங்கு பூமி வெள்ளிச்சாலையயாகவும், ஸ்வர்ணநிறமாகவும்

மாற்று. ஜகன்மோஹினியும் அங்கே மறைந்தாள். சிவையுடன் சிவனும் கைலை சென்றார்.

என் மனதிலேயே உள்ள ஓர் அற்புதத்தைக் கூறுகிறேன் கேள். முன்னர் பண்டன் எனும் ஓர் அஸுரனிருந்தான். அவன் தன்னிஷ்டப்படி தன் இனத்தவரைப் படைக்கும் சக்தி வாய்ந்தவன். அவன் சுக்ரருக்கு ஸமமான விசுக்ரனை வலது தோளிலிருந்தும், விஷங்கனை இடது தோளிலிருந்தும் படைத்தான். தூமினீ எனும் ஸஹோதரியையும் சிருஷ்டித்தான். இரு ஸகோதரருடனவன் பிரும்மாண்டத்தை ஹிம்ஸித்தான். திருமூர்த்திகளும் அவனைக் கண்டு அஞ்சிப் பதுங்கினர். தேவகணங்கள் அவனால் பிடிக்கப்பட்டு மூச்சு விடவும் முடியாதிருந்தனர். சிலர் பாதாளத்திலும், சிலர் ஜலத்திலும், சிலர் திக்கோணங்களிலும், சிலர் மலைப் புதர்களிலும் பதுங்கி, மனைவி மக்களை விட்டுப் பிரிந்து, அதிகாரத்தை விட்டு உயிரை மிகக் கஷ்டத்துடன் வஹித்தனர். பிரஹ்மா முதல் ஸகல தேவ ஜாதிகளையுமவன் த்ருணமாக எண்ணி உலகை ஆண்டான்.

அவனைக்கொன்று உலகைக்காக்க தேவி இரண்டாவதவதாரம் செய்தாள். யாகாக்னியிலிருந்து லலிதா என்ற பெயருடன் பாசம், அங்குசம், தனுஸ், பாணம் முதலியவைகளைக் கரங்களிலேந்தி பரப்பிரஹ்ம ஸ்வரூபிணியான அவள் பண்டாஸுரனைச் சண்டையில் கொன்றாள்.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று. 86 சுலோகங்கள்.

பத்தாம் அத்தியாயம்.

அகஸ்த்யர்:—பண்டாஸுரன் எப்படி உண்டானான்? திரிபுராம்பிகை எங்ஙனம் தோன்றினாள்? அவன் எப்படிக் கொல்லப்பட்டான்? விஸ்தாரமாகக் கூறுங்கள்.

ஹயக்ரீவர் :—முன்னர் தங்கையின் யக்ஞத்தை அழித்த தாக்ஷாயணியை விட்டுப் பரமசிவன் தன்னைத்தானே த்யானித்து பிரஹ்மானந்தபரிதராகக் கங்கைக் கரை மீது ஹிமாலயத்தே தங்கினர். அதை உணர்ந்த ஹிமவான், நாரதர் மூலம் தாக்ஷாயணியே தனக்குப் பெண்ணானளென்றறிந்து சிவனுக்குப் பணிவிடை செய்யும்படி உமையை ஏவினர்.

இதனிடையே தாரகனல் பீடிக்கப்பட்ட தேவர்கள் பிரஹ்மாவின் உத்திரவுபடி மன்மதனை அழைத்து "உலகைப் படைகக ஆரம்பித்த சதுர்முகனுக்கு மனதில் ஸந்தோஷமில்லாததால் ஸ்ரீலக்ஷ்மீ நாராயணனைக் கருதித் தவம் செய்தார். பகவான் ப்ரத்யக்ஷமாகி யாது வரம் வேண்டுமென அவர் அனுயாஸமாக உலகைப் படைக்க அருள்புரிய வேண்டுமென்றார். உடனே லக்ஷ்மீபதி லக்ஷ்மியின் முகத்தை நோக்க அங்கிருந்து அழகிய நீ பிறந்தாய். கரும்பு வில்லையும் புஷ்ப பாணத்தையும் எங்கும் ஜயத்தையும் எவராலும் தாண்டமுடியாமையையுமுனக்கு வரமாக அளித்து உன்னைக் கொண்டு சுலபமாக உலகைப் படைக்கும்படி அநுக்ரஹித்தார். அஜனும் ஸந்துஷ்டரானர். உனது பலமும் பராக்ரமமும் அழகிய அம்பும் எங்கும் தடையற்றது. பிரஹ்மாவிடம் வரம் பெற்ற தாரகன் ஸகல உலகையும் விசேஷமாக எங்களையும் பீடிக்கிறான். சிவ புத்ரனைத் தவிர மற்றவரிடமவனுக்குப் பயமில்லை. சிவனுக்கும் சிவைக்கும் குமாரன் ஜனிக்கும்படி செய்ய உன்னைத் தவிர வேறெவராலும் முடியாது. ஆத்மைக நிஷ்டராய் முனிவர் சூழச் சிவன் இமயகிரியில் தவம் புரிகிறார். கௌரி அங்கு அவருக்குப் பணிவிடை செய்கிறாள். அவ்விருவரையும் ஒன்று சேர்க்குமிச் சிறு காரியத்தினல் எங்களைக் காப்பாற்று" எனக் கூறினர்.

இவ்வாறு அடிக்கடி இந்திரனல் துதிக்கப்பட்ட காமன் ஆத்ம விநாசத்தின் பொருட்டு சிவாலயஞ் சென்று கந்தபுஷ்பாதிகளால் சிவனுக்குபசாரம் செய்யும் பார்வதியைப் பார்த்தான். ஒருவருமறியாமல் பதுங்கி நின்று புஷ்ப

பாணத்தால் பரமசிவனை அடித்தான். உடனே சிவன் ஸர்வ கர்மங்களையும் மறந்து ஆசையுடன் தேவியை நோக்கினார். பிறகு தைர்யங்கொண்டு என்ன இது என்று யோசித்து எதிரில் புஷ்ப பாணத்துடன் நிற்கும் மன்மதனை மூன்றாவது கண்ணாலெரித்தார். இதைக் கண்டு துக்கமடைந்த பார்வதி தன் தந்தை உத்திரவுபெற்றுத் தவம் செய்யச் சென்றாள்.

சித்திரத்தில் ஸமர்த்தரான ஓர் கணேச்வரர் மன்மதனது சாம்பலை ஓர் புருஷாகாரமாகச் செய்தார். அதைச் சிவன் தன் கண்ணால் பார்த்தவுடன் அது ஓர் தேஜஸ்வியான புருஷனாய் உயிர் பெற்றெழுந்தது. கணேச்வரனான சித்ரஸேநன் அவனை தழுவி, 'சிவனை ஸ்தோத்திரம் செய்' என்று சதருத்ரீய மந்திரத்தை அவனுக்கு உபதேசித்தார். அங்ஙனமே அப்புருஷன் அதை ஜபித்துச் சிவனை நமஸ்கரித்தான். ஸந்தோஷங்கொண்ட ஸாம்பசிவன் அவன் கோரியபடி சத்ருவின் பாதிப் பலம் அவனை வந்தடையும்படியும், சத்ருக்களது அஸ்திர சஸ்திரங்கள் அவனைப் பாதிக்காதபடியும், அறுபது ஆயிரமாண்டு ராஜ்யமாளும்படியும் வரந்தந்தார். இவனது செயலைக் கண்டு பிரஹ்மா 'பண்ட்' 'பண்ட்' என நகைத்தபடியால் அப் புருஷனுக்குப் பண்டாஸுரன் எனப் பெயர் உண்டாயிற்று.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று. 35 சுலோகங்கள்.

பதினொன்றாம் அத்தியாயம்.

ஹயக்ரீவர்:—ருத்ரகோபாக்கினியால் உண்டான பண்டன் ருத்ரஸ்வபாவனாகவும் அஸுரனாகவுமானான். சுக்ரரும், ஆயிரக்கணக்கான தைத்யரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். தைத்ய சில்பியான மயனை அழைத்து முன்னர் அஸுரேந்திரரிருந்து முவ்வுலகையுமாண்டவிடமான சோணித

புரத்தைப் புதியதாக நிர்மாணம் செய்யும்படி பண்டன் கூறினான். அங்ஙனமேயவர் மனதினால் ஓர்க்ஷணத்திற்குள் தேவபுரம்போல் படைக்க, ஆங்கு சுக்ரர் அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து முன்னர் ஹிரண்யனுக்குப் பிரஹ்மா தந்ததும் ஜீவகலையுடன் கூடியதும் அழிவற்றதுமான கிரீடத்தைச் சூட்டினார். பிரஹ்மாவால் படைக்கப்பட்டதும் ரோகம் துக்கம் முதலியவைகள் தோன்றாமல் காப்பதுமான இருசாமரங்களையும், பிரஹ்ம நிர்மிதமானதும், அஸ்த்ர சஸ்த்ரங்கள் மேல் விழாமல் காப்பதுமான குடையையும், விஜயமெனும் வில்லையும், சக்தியையும், திவ்விய ஆபரணங்களையும், ஸிம்ஹாஸனத்தையுந் தந்தார்.

ஸர்வ ஆபரணங்களுடன் ஸிம்ஹாஸனத்தி லமர்ந்த அவன் கடசல் பிடித்த ரத்நம் போல் விளங்கினான். இந்திரசத்ரு, அமித்ரக்னன், வித்யுன்மாலீ, விபீஷணன், உக்ரகர்மா, உக்ரதன்வா, விஜயன், ச்ருதிபாரகன் என பலிஷ்டர்களான எட்டு அஸுரர்கள் அவனைச் சூழ்ந்திருந்தனர். அவனுக்கு ஸம்மோஹினி, குமுதினி, சித்ராங்கி, ஸுந்தரி என நான்கு மனைவிகளிருந்தனர். காலகதியை அறிந்த இந்திரன் முதலிய தேவர்கள் அவனைச் சேவித்தனர். ரத கஜ துரக பதாதிகள் ஆயிரக்கணக்காக அவனிடமிருந்தன. சுக்ரர் சொல்படி எல்லா அரக்கர்களும் நடந்து, புத்ர பௌத்ராதிகளுடன் பரமசிவனை ஆராதித்தனர். ஒவ்வோர் ராக்ஷஸர் வீட்டிலும் யக்ஞமும், ருக் யஜுஸ் ஸாம வேதங்களின் அத்யயநமும், மீமாம்ஸா நியாயம் முதலிய சாஸ்திர விசாரமும் நடந்துவந்தன. மஹரிஷிகளது ஆச்ரமத்தில் நடக்கும் வேள்வியைப் போல் அஸுரர் வேள்வியிலும் தேவர்கள் ஹவிஸ்ஸைப் புஜித்தனர். இங்ஙனம் உலகை ஆண்டுவந்த பண்டனுக்கு அரைக்ஷணம் போல் அறுபது ஆயிரம் ஆண்டுகள் சென்றன.

தபஸாலும், பலத்தாலும் அஸுரர் பலிஷ்டர்களாகவும், இந்திரன குறைந்தும் வருவதைக் கண்ட கமலாபதி, ஜகன்மோஹினியான ஓர் மாயையைப் படைத்து, 'உனது தேஜஸால்

நீ உலகை ஜயி. உன்னை எவரும் ஜயிக்க முடியாது. விரைவாகச் சென்று பண்டாஸுரனை மயக்கி விஷயங்களை அனுபவி' என்றார். அப்படியே என அச்சுதனைப் பணிந்து அவள் தனக்கு ஸஹாயமாகச் சில அப்ஸரஸ்ஸுகளை அளிக்க வேண்டினாள். அங்ஙனமே அவர் அளித்த விச்வாசி முதலியவர்களுடன் கூடி, பண்டன் மனைவிகளுடன் கிரீடை செய்யும் மானஸ ஸரஸிற்குச் சென்றாள். ஓர் சம்பக மரத்தடியே தங்கி தோழிகளுடன் அழகாகப் பாடினாள். பண்டனும் மந்திரிகளுடன் அங்கு வந்து அழகிய கானத்தால் பரவசனாகி அம் மரத்தருகே சென்று மின்னல் கொடிபோன்ற அவர்களைக் கண்டு மோஹித்தான். மந்திரிகளும் மற்ற மங்கையரிடம் ஆசை கொண்டனர். வெகு நேரம் அவர்கள் தங்களை ஏற்றுக் களிக்கும்படி வேண்ட, முடிவிலவர்களும் இசைந்தனர். மகா யாகங்களால் கூட கிடைக்கத்தகாத அந்த ஸ்த்ரீ ரத்னங்களைப் பெற்று அனைவரும் பேரானந்தமடைந்தனர். இதில் சிக்கிய அஸுரர் மறையையும் மாதேவனையும் வேள்வியையும் மற்ற சுபாசாரங்களையும் மறந்தனர். புரோஹிதரை அவமதித்தனர். இங்ஙனம் எண்ணூறு ஆண்டுகளை ஓர் முகூர்த்தம் போல் கழித்தனர்.

பதினொறாம் அத்தியாயம் முற்றிற்று. 35 சுலோகங்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

அஸுரர் மோஹத்தால் ஸதாசாரத்தைவிட்டுவிட, இந்திரர் முதலிய தேவர்கள் அஸுர பீடை நீங்கி பரம ஸந்தோஷ மடைந்தனர். ஓர் ஸமயம் நாரதர் இந்திர ஸபைக்கு வர, வாஸவனெழுந்து வணங்கி ஆஸனமளித்து, 'பகவன்! தமது வரவால் யான் தன்யனானேன். இனி எனக்கு மங்களமுண்டாகும். உமது வசனாம்ருதத்தைக்கேட்டு ஸமஸ்த துக்கங்களிலிருந்தும் கரையேறி க்ருதார்த்தனாவேன்' என்றார்.

நாரதர்:—இச்சமயம் பண்டன் விஷ்ணு மாயையால் மோஹமடைந்திருக்கிறான். அதிலிருந்து விடுபட்டால் மூவ்வுலகையுந் தஹிப்பான். உன்னைவிட அதிக பலமும் தேஜஸும் சஸ்திரமுமுள்ள பண்டனது தேஜஸைக் குறைக்கவேண்டும். தேவியை ஆராதித்து அவளருள் பெற்றாலன்றிக் கல்ப கோடி சதமானாலும் அவனை அசைக்கமுடியாது. அவன் மேன்மை அடைவதற்குள் அம்பிகையை ஆராதித்து க்ஷேமத்தை அடையுங்கள். இப்படி உபதேசித்த நாரதரைப் பூஜித்து தேவருடன் தேவேந்திரன் தவஞ்செய்ய இமயமலை சென்றான். அங்கு கங்கைக் கரையில் ஸமஸ்த தேவர்களுடன் பராசக்தியைப் பூஜித்தான். அந்த இடம் அது முதல் இந்த்ரப்பிரஸ்தமென வழங்கப்படுகிறது. நாரதர் கூறியபடி ஜப த்யானாதிகளால் வேறிடத்தே மனதைச் செலுத்தாமல் ஏகாக்ர சித்தர்களாக தேவி பூஜை செய்து உக்ரமான தவம் செய்யுமவர்கட்கு பத்தாயிர மாண்டுகள் பத்து தினம் போல் சென்றன.

மோஹமடைந்த தன் சிஷ்ய வர்க்கத்தைக்கண்டு சுக்ரர் பண்டனிடஞ் சென்று "உனது பலத்தைக்கொண்டே அஸுரர்கள் நிர்ப்பயர்களாக ஸஞ்சரிக்கின்றனர். ராக்ஷஸ ஜாதியையே அழிக்கும் விஷ்ணு, மாயையால் உங்களை மோஹிக்கும்படி செய்துவிட்டார். ஸமயம் பார்த்துக்கொண்டிருந்த இந்திரன் உன்னை ஜயிக்கும் பொருட்டுக் கடுமையாகத் தவம் செய்கிறான். அதனால் ஜகன்மாதா ஸந்தோஷமடைந்தால் அவனுக்கே ஜயமுண்டாகும். ஆகலால் மோஹத்தைவிட்டு மந்திரிகளுடன் ஹிமாலயஞ்சென்று சத்ருக்களின் தவத்தைக் கலை" என்றார். உடனே பண்டன் ஆஸனத்தை விட்டெழுந்து மந்திரிகளை அழைத்து இந்த விருத்தாந்தத்தைக் கூறினான்.

ச்ருதவர்மா என்னும் மந்திரி "தைத்யேந்த்ர! சிவனளித்த அறுபதாயிரமாண்டும் கழிந்து அநேக காலமாய் விட்டது. காலத்தை மீற எவராலும் முடியாது. அந்தந்தக் காலத்தில் ஸுக துக்கங்களை அனுபவிக்கத்தான் வேண்டும்" என்றான். பீமகர்மா "காலத்தைக் கருதி சத்ருவை உபேக்ஷை செய்ய

லாகாது. குரு கூறியபடி சத்ருவின் கார்யத்தைக் கெடுத்து ஜயம் பெறுவோம். அன்றியும் சத்ருவின் பாதி பலம் தங்களிடம் வரும்படி சிவனளித்த வித்தையால் உமக்கே ஜயம்'' என்றார். இதை ஆமோதித்துப் பண்டன் ஸேனையுடன் இமயகிரி சென்றான். இதையறிந்த அம்பிகை தாண்டமுடியாத மாயாப்ராகாரத்தை அங்கு உண்டு பண்ணினாள். பண்டனதைக் கண்டு ஆச்சர்யமடைந்து மிக்க பலமுள்ள அஸுராஸ்த்ரத்தாலதை முறித்தான். மறுபடியுமது தோன்ற வாயவ்யாஸ்த்ரத்தாலதை முறித்துக் கர்ஜித்தான். முறிக்க முறிக்க மறுபடியும் புதிது புதிதாகத் தோன்றும் அக்கோட்டையைக் கண்டு அஸுரேந்த்ரன் வருந்தித் தன்னிருப்பிடஞ் சென்றான்.

தேவர்கள் பல்லாண்டு கடுந்தவம் புரிந்தும் தேவி ப்ரத்யக்ஷமாகாததால வருந்தி, மிகப் பயங்கரமான ராக்ஷஸ சேனையைக் கண்டு பயந்தோட ஆரம்பித்தனர். வாஸவனவர்களை நோக்கி "அரக்கன் எங்கு சென்றாலும் நம்மை விடப்போவதில்லை. அவனை ஜயிக்கவும் நம்மால் முடியாது. ஒரு யோஜனை தூரம் விசாலமான ஓர் குண்டத்தைக் கல்பித்து மஹா யாக விதியாக அக்கினியைப் ப்ரதிஷ்டை செய்து பராசக்தியைக் குறித்து மஹா மாம்ஸத்தால் யாகம் செய்து மோக்ஷமடைவோம். அல்லது ஸ்வர்க்கத்தை அனுபவிப்போம்'' என்றான். அங்ஙனமே அமரர், விதிப்படி மந்திரபூர்வமாகத் தங்கள் மாம்ஸத்தை அறுத்தறுத்துக் கை கால் முதலியவைகளை ஹோமம் செய்து கடைசியாகச் சரீரத்தை ஹோமம் செய்யும் போது ஒப்பற்ற ஓர் திவ்ய தேஜஸ் தோன்றிற்று. கோடி ஸூர்யன்போல் ஜ்வலிப்பதும் கோடி சந்திரனைப் போல் சீதளமாயிருப்பதுமான அந்த தேஜஸ்ஸினிடையில் ஓர் சக்ரமும், அதனிடையே ஜகத்தை உஜ்ஜீவிப்பவளும், பிரஹ்ம விஷ்ணு ருத்ரஸ்வரூபிணியும், உதய சூர்யனை யொத்த காந்தியுள்ளவளும், அழகின் எல்லையும், ஆனந்தக்கடலும், ஜபா புஷ்பம் போன்றவளும், மாதலமுத்துப், போன்ற வர்ணமுள்ள வஸ்திரமணிந்தவளும், ஸர்வாபரணங்களைப் பூண்டவளும்,

சிருங்காரத்திற்கிருப்பிடமானவளும் கருணை ததும்பிய கடைக்கண்ணுள்ளவளும், பாசம் அங்குசம் இக்ஷு கோதண்டம் பஞ்சபாணம் முதலியவைகளைக் கரத்திலேந்தியவளுமான ஸாக்ஷாத் மஹாதேவி தோன்றினாள். ஸமஸ்த தேவர்களும் பரம ஸந்தோஷத்துடன் தேவியைப் பலமுறை பணிந்தனர். அவர்கள்மீது தேவியின் கடாக்ஷம் விழ்ந்தவுடன், தேவரனைவரும் வஜ்ரசரீரமுள்ளவர்களாகி அகிலார்த்தத்தையுமளிக்கு மம்பிகையைக் கீழ்கண்டவாறு துதித்தனர்.

பனிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று. 44 சுலோகங்கள்.

பதிமூன்றும் அத்தியாயம்.

லலிதாஸ்தவராஜம்.

தேவி! ஜகன் மாதாவே! பரவஸ்துவிலும் பரமானவளே! கல்யாணத்திற் கிருப்பிட மானவளே! காமகலாஸ்வரூபிணி! சங்கரி! வாமாக்ஷீ! காமாக்ஷீ! சுந்தரீ! ஸமஸ்த தேவர்களாலு மாராதிக்கத் தக்கவளே! காமேசி! காமத்தை யளிப்பவளே! பிரஹ்மஸ்வரூபிணீ! பிரஹ்மாநந்த ரஸாத்மிகே! நாராயணி! பரே! ஸமஸ்த லோகத்தையும் ஸந்தோஷப் படுத்துபவளே! ஸ்ரீகண்டனுக்குப் பிரியமானவளே! ஸ்ரீலலிதாம்பிகே! ஸ்ரீவிஜயே! தேவீ! விஜய லக்ஷ்மியையும் ஸமிருத்தியையு மளிப்பவளே! ஸர்வோத்கிருஷ்டையாய் விளங்குக!!

உண்டானதிற்கும், உண்டாகப் போவதற்கும், யக்ஞ யாகாதிகளுக்கும், கிணறு வெட்டுவது, தோப்பு வைப்பது முதலிய பூர்த்தத்திற்கும் காரணமானவளே! மூன்று லோகத்தையுங் காப்பவளே! உமக்கு நமஸ்காரம். கலை, முகூர்த்தம், காஷ்டை முதலிய காலவடிவமானவளே! ஆயிரக் கணக்கான சிரஸ் வாய் கண் கை கால்களுள்ளவளே! நமஸ்காரம்! அணுவிலுமணுவாய்ப் பெரிதிலும் பெரிதாய்ப் பரக்

திலும் பரமாய் தேஜஸ்விற்குத் தேஜஸாய் உள்ளவளே! அதலம் உனது கால்: விதலம் முழங்கால்: ரஸாதலம் இடுப்பு: பூமி வயிறு: புவர்லோகம் ஹிருதயம்: ஸ்வர்க்கம் முகம்: கண்கள் சந்தர சூர்யாக்நிகள்: திக்குகள் கைகள்: காற்று மூச்சு: வாக்கு வேதங்கள்: விளையாட்டு உலக ஸிருஷ்டி: தோழன் சின்மய சிவன: ஆஹாரம் ஸதாநந்தம்: இருப்பிடம் ஸாதுக்களின் ஹிருதயம். திருச்யா திருச்யமாயுள்ள புவனம் உமது ரூபம்: கேசம் ஆகாசம்: நக்ஷத்ரங்கள் புஷ்பம்: தர்மாதிகள் பாகுக்கள்: அதர்மம் ஆயுதம்: யம நியமாதிகள் விரல்கள்: ஸ்வாஹா ஸ்வதா என்பன உலகை உஜ்ஜீவிக்கும் ஸ்தனங்கள்; பிராணாயாமம் நாஸிகை: நாக்கு ஸாஸ்வதி: பிரத்யாஹார மிந்திரியங்கள்: தியானம் புத்தி: தாஹம் ஆஸநம்: மனஸ் தாரணாசக்தி: ஹ்ருதயம் ஸமாதி: உடலிலுள்ள ரோமங்கள் மரங்கள்: உதயம் வஸ்த்ரம்: பூதம் பவ்யம் பவிஷ்யத்தெனும் முக்காலமும் நித்யமான சரீரம். யக்ஞ ரூபே! ஜகத்தாத்ரீ! ஸர்வாதாரமான உம்மை உலகம் அறிவதில்லை. எல்லோருடைய உள்ளத்திலிருந்தாலும் காணப்படாதவள் நீ! மோஹன சக்தி உள்ளவள். நாமரூப வடிவமான உலகைப் படைத்து அதில் பற்றில்லாமல் அங்கே நிற்பவள்! அத்தகைய தேவிக்கு நமஸ்காரம்! மஹா தேவியாய் ஸர்வ சக்தியாய் பராசக்தியாய் பரப்பிரஹ்மம், பிரஹ்மாநந்தா என்றழைக்கப் படுபவளான தேவிக்கு நமஸ்காரம்! தன் ஆக்ஞையால் அக்னி சூர்யர் சந்திரர் காற்று பிருதிவி முதலியவைகளை உலகிற்குப் பயன்படுமாறு செய்பவளும், பிரஹ்மனைப் படைத்து, ஆதி ஸிருஷ்டியில் ஆதி பூமியாயிருந்து உலகைத் தரித்த தேவிக்கு நமஸ்காரம்! அமேயமான சக்தியால் பிருதிவி ஆகாசம் முதலியவைகளைத் தரிப்பவளும், தன்னிடமிருந்து சூர்யனை உதிக்கும்படி செய்பவளுமான தேவிக்கு நமஸ்காரம்! ஸ்வர்க்கம் அந்தரிக்ஷமிவைகளைத் தனக்குள்ளே அமைத்து உலகவடிவமாயுள்ள தேவிக்கு நமஸ்காரம்! இந்த ஸமஸ்தமான ஜகத்தும் அந்தந்தக் காலத்தில் எங்கிருந்து உண்டாகி எங்குவளர்ந்து எங்கு ஒடுங்கின்றதோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

ரஜோ குணத்தால் படைத்து ஸத்வத்தால் ரக்ஷித்துத் தமஸால் அழிப்பவளும், குணமற்றவளுமான சிவைக்கு நமஸ்காரம்! ஜகத்திற்கு ஒரே தாயாயும், தந்தையாயுமுள்ள வளும், அகில தந்த்ர ரூபமாயும், யக்ஞ ரூபமாயுமுள்ள தேவிக்கு நமஸ்காரம்! லோக குருக்களில் பிரதானமாயும், வாக் விபூதியாயுமுள்ள தேவிக்கு நமஸ்காரம்! லக்ஷ்மியாய் ஜகத்திற்கு ஒரே ஸந்தோஷமாய்ச் சம்பு பத்நியாய் ஸர்வ சக்தியாயுள்ள தேவிக்கு நமஸ்காரம்! ஆதிமத்யாந்தமற்றதும், பஞ்சபூத ஸம்பந்தமில்லாததும், வாக்கு, மனஸ் இவைகளுக்கு எட்டாததும், ஊஹிக்கவும் முடியாத வைபவமுள்ளதும், ரூப மற்றதும், இரண்டற்றதும், கண்ணுக்கு விஷயமாகாததும், சிறந்ததுமான உமது ப்ரபாவத்தை எப்படி வர்ணிப்பது? உலகத்தால் நமஸ்கரிக்கப்பட்ட விச்வேச்வரீ! வேதரூபிணீ! மாயாமயி! மந்த்ர ஸ்வரூபி! ஸர்வேச்வரீ! ஸர்வ ரூபிணீ! தயை செய்வாயாக!

இவ்வாறு இந்த்ரன் முதலிய தேவர்கள் துதித்துப் பல முறை பணிந்து தேவியைச் சரணமடைந்தனர். ப்ரஸன்ன மான தேவி வாஸவனை நோக்கி "வரத்தை வேண்டிக் கொள்" என்றாள். இந்த்ரன், "தாயே பண்டனால் பீடிக்கப்பட்ட நாங்கள் மிகச் சிரமத்துடன் உயிரை வைத்துக்கொண்டிருக் கிறோம். நீயே சரணம்" என்றான். தேவியானவள், "நானே அவனைக்கொன்று விரைவில் மூவுலகையும் உனக்களிக் கிறேன். நிர்ப்பயமாயும் ஸந்தோஷமாகவும் தேவர்களிருக் கட்டும்" என்றனள்.

அன்றியும் "இந்த ஸ்துதியைப் பக்தியுடன் படிப்பவர் தர்மம், ஸ்ரீ, யசஸ் இவைகளைப் பெற்று, வித்யாவிநயஸம்பந்நர் களாய் நோயற்று, நீண்ட நாள் புத்ரமித்ர களத்ரர்களுடன் ஸுகமாக வாழ்வர்" என்றும் வரமளித்தனள். அனைவரும் தேவியைப் பார்த்துப் பார்த்துப் பேரானந்தம் பெற்றனர்.

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று. 57 சுலோகங்கள்.

———

பதினான்காம் அத்தியாயம்.

ஹயக்ரீவர்:—அந்த ஸமயத்தில் மஹரிஷிகளுடன் பிரஹ்மா, கருடாரூடரான விஷ்ணு, விருஷபாரூடரான பரமசிவன், நாரதாதி தேவரிஷிகள், அப்ஸரஸ்கள், விச்வாவஸு முதலிய கந்தர்வர், யக்ஷர் அனைவரும் மஹேச்வரியைத் தரிசிக்க வந்தனர். பிரஹ்மாவின் உத்தரவுப்படி விச்வகர்மா அழகிய ஒரு பட்டணத்தைப் படைத்தார். ஸர்வ மந்த்ராதி தேவதையான துர்க்கையும், ஸர்வ வித்யாதி தேவதையான ச்யாமையும், பிராஹ்மீ முதலிய மாத்ரு கணங்களும், அணிமாதி ஸித்திகளும், கோடிக்கணக்கான யோகினிகளும், பைரவர்களும், க்ஷேத்ர பாலகர்களும், மஹாசாஸ்தாவும், மஹாகணேசரும், ஸ்கந்தரும், வீரபத்ரரும் வந்து தேவியைப் பணிந்து ஸ்தோத்ரம் செய்தனர். ப்ராகாரங்களும், தோரணங்களும், ரத, கஜ, துரக சாலைகளும், அழகிய ராஜ வீதிகளும், சிற்பசர், மந்திரி, ஸேநாதிபதி, த்விஜர்கள், வைதாளிகர், தாஸிகள் ஆகிய இவர்களுக்குத் தனித்தனியே அற்புதமான வீடுகளும் நிறைந்த அப்பட்டணத்தினிடையே திவ்யமான ராஜ கிருஹமமைக்கப்பட்டது. அதன் வாசலில் பெரிய கோபுரமும், உள்ளே பல சாலைகளும், அனேக ஸபைகளும், நவரத்ந மயமான ஸிம்ஹாஸன ஸபையும், அதனிடையே சிந்தாமணியால் நிர்மாணம் செய்யப்பட்ட, ஒப்பற்ற, அழகிய, ஸ்வயம் ப்ரகாசமான, உதய சூர்யன்போன்ற திவ்ய ஸிம்ஹாஸனமும் இருந்தன.

இதைக்கண்டு பிரஹ்மா "அந்த அழகியபுரத்தில் வஸிக்கும் பாமரனும் ஸர்வலோகாதிபதியாவன். கேவல ஸ்திரீயோ புருஷனோ ராஜ்யத்திற்கு அருகரல்ல. மங்களாசாரமுள்ள மஹாபுருஷன் தக்க மனைவியுடனிருந்தால் அபிஷேகத்திற்கேற்றவன். ச்ருங்காரரஸமே உருவெடுத்து வந்ததுபோன்ற இத்தேவதைக்கேற்ற புருஷன் சிவனையன்றி வேறெவருமல்லர். அவரோ ஜடாதாரியாய் முண்டமாலை யணிந்தவராய், விரூபாக்ஷனாய் கபாலியாய் விபூதியை அணிந்து முதுகாட்டில்

தங்கி அமங்களா வேஷராயிருக்கின்றார், அவரை ஸுமங்கலை யான தேவி எப்படி வரிப்பாள்?'' என யோசித்துக் கொண்டிருந்தார். அங்கு பரமசிவன் கோடி மன்மதனைப் போல், திவ்யாம்பரதாரியாய், அழகிய கந்த புஷ்பங்கள் மணக்க, கிரீடம் ஹாரம் குண்டலம் முதலிய திவ்யாபரணங்களை யணிந்து மணக் கோலத்துடன் தோன்றினார். அவரைக்கண்டு ஆச்சர்யமடைந்தவராய், பிரஹ்மா அவரைத் தழுவி, காமேச்வரனெனப் பெயரிட்டுப் பராசக்திக்கேற்ற புருஷன் இவனே என்று தேவியிடஞ் சென்றார். அங்கு மும் மூர்த்திகளும் தேவியைத்துதிக்க, காமேச்வரன் காமேச்வரியி னிடமும், காமேச்வரி காமேச்வரனிடமும் காதல் கொண்டு மற்றக் கார்யங்களை மறந்து இவரே நமக்கேற்றவரென இருவருங்கருதினர். இருவரும் மன்மத பாணத்தினால் பீடிக்கப்பட்டும் தீரர்களாதலால், பிறராலறிய முடியாதகார்ய முள்ளவர்களாதலால் ஒரு முகூர்த்த காலத்தில் ஸ்வஸ்த்த சித்தர்களாக ஆனார்கள்.

பிரஹ்மா தேவியைப் பார்த்து "தாயே! இந்த ஸகல தேவரிஷிகணங்களும் கணவனுடன் தாங்கள் ஸிம்ஹாஸனத்தி லிருந்து எங்களை ஆளும்படி விரும்புகின்றனர். உமக்கேற்ற பதியாகும் பாக்யத்தைப் பெற்றவர் யாரோ? உலகைக் காக்க அப்புருஷனை மணந்து இந்நகரத்திற்கு ராணியா யிருங்கள். தேவரிஷிகளாலபிஷேகம் செய்யப்பட்டு ஸாம்ராஜ்ய லக்ஷ்மி யுடன் ஸர்வாபரண பூஷிதையாக பதியுடன் ஸிம்ஹாஸனத் தில் வீற்றிருக்கும் உம்மைப் பார்க்க ஆவல்கொண்டிருக் கிறோம்'' என்று வேண்டினார். புன்னகைகொண்ட தேவி பிரஹ்மாதி தேவர்களைப் பார்த்து, "தேவர்களே! யான் ஸ்வதந்த்ரையாய் என்னிஷ்டம்போல் ஸஞ்சரிப்பவள். என்னைப்போன்ற பதியையே யான் விரும்புகிறேன்'' என்றாள். அப்படியே யாகட்டுமென்று பிரஹ்மா ஸர்வ தேவர்களுடன் தேவியை நோக்கி தர்மார்த்தம் நிறைந்த சொற்களைக் கூறினார்.

"தேவி ! சிலகாலம்வரை மனைவியாக வைத்துக் கொள்ளப்படும் பெண் வேச்யையாவாள். விலை கொடுத்து மனைவியாக ஏற்கப்பட்டவள் தாஸியாவாள். தந்தையால் பத்நியாக அளிக்கப்பட்டவள் பித்ருதத்தை எனப்படுவாள். தன்னிஷ்டப்படி கணவனைத் தேடி எடுப்பவள் காந்தர்வ விவாஹம் செய்தவளாவாள். இங்ஙனம் நால்வகையுண்டு. ஒரே வஸ்துவாய், உண்டு இல்லை என்பன இல்லாததாய் சிதாநந்த வடிவமாய் உள்ள பிரஹ்மத்தினிடமிருந்து பிரகிருதி தோன்றிற்று. அந்த பிரஹ்மமும் பிரகிருதியும் தாங்களே! தாங்கள் அநாதி! எல்லாமாயிருப்பவள்! உமக்குக் காரணம் வேறில்லை. நீரே எல்லாவற்றிற்கும் காரணம். ஸநகாதி யோகிகள் உம்மையே தேடுகின்றனர். ஸதஸத்தாயும் வியக்தாவ்யக்தையாயும் உள்ளவள் நீர்! பஞ்சபிரஹ்மஸ்வரூபிணி என உம்மைக் கொண்டாடுகின்றனர். உலகை நீரே படைத்துப் பரிபாலித்து உபஸம்ஹாரம் செய்வதால் நீர் காந்தர்வ மணம் புரிவது உமது ஸ்வாதந்த்ரியத்திற்குப் பங்கத்தைத் தராது. லோகாநுக்ரஹத்திற்காக தாங்கள் ஒரு புருஷனை ஏற்கவேண்டும்."

இதைக் கேட்ட தேவி ஓர் மாலையைத் தன் கரத்தாலெடுத்து ஆகாயத்தே எறிந்தாள். அது காமேச்வரரின் கழுத்திலேயே விழ்ந்தது. ஸகல தேவர்களும் பரம ஸந்தோஷமடைந்தனர். இந்த்ரனது தூண்டுதலால் ஸகல மேகங்களும் புஷ்பவர்ஷங்களை வர்ஷித்தன.

பிரஹ்மா மஹாவிஷ்ணுவை நோக்கி, "இவ்விருவர்களுக்கும் விவாஹத்தைச் செய்து வைக்கவேண்டும். ஜகத்திற்கு மங்களத்தை உண்டு பண்ணும் முகூர்த்த மிதுதான். உமது ரூபமுள்ளவள் தேவி. நீரும் அவளுக்கு உடன் பிறந்தவர். ஆதலால் நீரே காமேச்வரனுக்குக் கல்யாணியான தேவியைக் கன்யாதானம் செய்யும்" என்றார். அங்ஙனமே அச்யுதனும் ஆநந்தத்துடன் தேவர்ஷி பித்ரு கந்தர்வர் முன்னிலையில் விதிப்படி ஜலதாரா பூர்வகமாய்த் தேவியைத்

தேவனுக்குத் தானஞ்செய்து, இருவருக்கும் விவாஹத்தைப் பூர்த்தி செய்து வைத்தார். அவ்விருவர்களுக்கும் பிரஹ்மாதி தேவர்கள் காணிக்கைகள் ஸமர்ப்பித்தனர். வஜ்ரம் போன்ற கரும்பு வில்லைப் பிரஹ்மனும், வாடாத புஷ்ப பாணத்தை விஷ்ணுவும், வருணன் நாகபாசத்தையும், விச்வகர்மா அங்குசத்தையும், அக்னி கிரீடத்தையும், சந்திர சூர்யர்கள் இரண்டு குண்டலங்களையும், ரத்நாகரம் நவரத்ந மயமான ஆபரணத்தையும், சுக்ரன் அக்ஷயமான மதுபாத்ரத்தையும், குபேரன் சிந்தாமணிமாலையையும், தந்தனர். ஸாம்ராஜ்யத்திற்கடையாளமான குடையை விஷ்ணுவும், கங்காயமுனைகள் சாமரங்களையும், பிரஹ்மா, வஸு, ருத்ரர், ஆதித்யர், அச்வினீதேவர், திக்பாலர், மருத், ஸாத்யர், கந்தர்வர், ப்ரமதேச்வரர் ஆகிய இவ்வனைவரும் தத்தம் ஆயுதங்களையும், மிக்க வேகமும், பலமுமுள்ளனவும், நோய் பசி தாகம் முதலியன இல்லாதனவும், பருத்தனவுமான நான்கு குதிரைகளையும், ரதத்தையும், வஜ்ர துல்யமான ஆயுதங்களையும் கொடுத்தனர்.

பிரஹ்மா ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்யக்கருதி குஸுமாகரம் எனும் ஒரு திவ்ய விமானத்தைப் படைத்தனர். அது வாடாத மாலையுள்ளது. ஆயுதங்களால் வெட்ட முடியாதது. விண்ணிலும் மண்ணிலும் இஷ்டம்போல் ஸஞ்சரிப்பது. அதன் வாஸனையை முகர்ந்த மாத்திரத்தில் மயக்கம் பிணி பசி துன்பம் முதலியன நீங்கிப்போம். மனதிற்குப் பேரானந்தத்தை யளிக்கும். அந்தத் திவ்ய விமானத்தின்மீது தம்பதிகளை ஏற்றித் தேவர்கள் ஊர்வலம் வந்தனர். சத்ரம் சாமரம், கொடிகள் தடிகள் முதலியன சூழ, வீணை வேணு மிருதங்கம் முதலிய வாத்தியங்கள் கோஷிக்க, நாற் புறமும் தேவ கணங்கள் சூழ ஒவ்வோர் மாடியிலுமிருந்து அப்ஸரஸுகள் பொரியையு மக்ஷதையையு மிறைக்கத் தனது தேஜஸால் எல்லாவற்றையும் பிரகாசப் படுத்திக்கொண்டு, ஆர்த்தி எடுக்கும் அப்ஸரஸுகளை மந்த ஹாஸத்தால் ஆசீர்வதித்து, ஆதி தம்பதிகள் ஒவ்வோர் வீதியாக வலம்

வந்து விமானத்திலிருந்து இறங்கி ராஜ கிருஹத்தி னுள்ளே நுழைந்தனர். வயதான ஸுமங்கலிகள் திவ்ய கந்த புஷ்பாக்ஷதைகளால் அவ்விருவரையும் வரவேற்று ஸிம்ஹாஸனத்திலமர்த்தினர். ஆங்குக் கூடியவர்களில் யார் யார் எதையெதை மனதில் விரும்பினரோ, அதையதைத் தேவி உடனே தன் கடாக்ஷ வீக்ஷணத்தால் பூர்த்தி செய்வித்தாள். இதைக்கண்ட சதுர்முகன் அம்பாளுக்குக் காமாக்ஷி, காமேச்வரீ என்ற காரணப் பெயர்களைச் சூட்டினர். தேவியின் ஆணையால் மேகம் அந்நகரில் அற்புதமான அரிய பல ஆபரணங் களை வர்ஷித்தது. சிந்தாமணி, கல்பவிருக்ஷம், லக்ஷ்மி, காமதேனு, இவைகள் ஒவ்வோர் வீட்டிலும் தங்கி நின்றன. பிரஹ்மாதி ஸகல தேவர்களும் நாரதாதி தேவரிஷிகளும் வஸிஷ்டாதி பிரஹ்மரிஷிகளும் இதர கார்யங்களைவிட்டுத் தேவியின் ஆனந்தத்திலேயே ஈடுபட்டுத் தந்தம் நகரைவிட விசாலமாய் ஸகல ஸௌகரியங்களும் நிறைந்த இப்புரியில் ஸுகமாக வஸித்தனர். தேவியானவள் என்னிடத்தில் அதிக அன்புள்ளவள், என்னிடந்தான் அவளுக்கு அதிக அன்பு என ஒவ்வொருவரும் எண்ணும்படி அவரவர்களை அத்யந்தப் பிரீதியோடு ஸந்தோஷிப்பித்தனள். இந்தத் தம்பதிகள் மூவுலகிலுமுள்ள அனைவருக்கும் அவரவர் விருப்பை வர்ஷித்து ஆனந்தமளித்தனர். இங்ஙனம் பத்தாயிரமாண்டு கள் ஒரு க்ஷணம்போல் சென்றன.

ஒரு ஸமயம் நாரத ரிஷி, ஆங்கு தோன்றித் தேவியைப் பணிந்து, துதித்து "தாங்கள் அவ்யக்தையாயினும், துஷ்டர் களைச் சிக்ஷிக்கவும், சிஷ்டர்களை ரக்ஷிக்கவும், வ்யக்தையாக அவதரிக்கிறீர். பண்டாஸுரன் என்பான் மூவுலகையும் பீடிக்கிறான். தங்களை யன்றி வேறெவராலேயும் அவன் கொல்லத்தக்கவனல்லன். அன்றியும் தேவர்கள் அனைவரு மிங்கு தங்கி உமது ஸேவையிலேயே ஈடுபட்டிருப்பதால் தேவநகரங்கள் அமங்களமாயும் சூன்யமாயுமிருக்கின்றன. தங்களுத்தரவு பெற்றுத் தேவர்கள் தங்களிருப்பிடஞ் செல்லட்டும்" என்றார். பராசக்தியும் அப்படியே அனைவரை

யும் தக்கபடி ஸன்மானித்து அனுப்பினாள். பிரஹ்மாதிகள் தேவியை விட்டுப்பிரிய மனமின்றி ஓர் அம்சத்தால் அங்கு தங்கித் தேவியைப் பூஜித்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் தேவியின் ஆவிர்ப்பாவம் ராஜ்யாபிஷேகம் முதலிய கதைகளைக் காலையில் எழுந்து எவன் பக்தி சிரத்தையுடன் ஜபிக்கிறானோ அவன் செல்வம் நிறைந்து அமிருதம் போன்ற வாக்குள்ளவனாவான். இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவன் அசுபத்தைப் பெறமாட்டான். பரந்த கீர்த்தியையும் நித்ய லக்ஷ்மியையும் பெறுவான். மிக தேஜஸ்வியாய், வீர்யவானாய், தீரனாய், தாபத்ரயமின்றி, நான்கு புருஷார்த்தங்களைப் பெற்று ஸுகமாக வாழ்வான். ஸிம்ஹாஸனத்திலுள்ள தேவியைத் தியானம் செய்து மூன்று ஸந்திகளிலும் ஜபிப்பவன் ஆறு மாதங்களுக்குள் மிகுந்த செல்வத்தைப் பெறுவான்.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று. 93 சுலோகங்கள்.

பதினைந்தாம் அத்தியாயம்

ஹயக்ரீவர்:—ஜகன்மாதாவான ஸ்ரீலலிதாதேவி த்ரிலோக கண்டகனான பண்டனைக் கொல்லக் கிளம்பினாள். ஸப்த ஸாகரங்களும் மத்தளமாகி வானளாவக் கோஷித்தன. ஆநகம், பணவம், கோமுகம், அர்த்த சந்த்ரகம், டிண்டிமம் முதலிய வாத்யங்கள் முழங்கின. ஸ்ரீலலிதாதேவியின் அங்குசத்திலிருந்து தோன்றிய ஸம்பத்கரீ என்னும் சக்தி ரண கோலாஹலமென்னும் யானையின் மீதேறி, நால்வகைச் சேனையுடனும், சக்திகணங்களுடனும் கிளம்பினாள். ஸ்ரீ லலிதையின் பாசத்திலிருந்துண்டான அச்வாரூடா என்பவள் போர்க் கோலத்துடன் புறப்பட்டனள். அவளைத் தொடர்ந்து வநாயுஜம், காம்போஜம், பாரசீகம் முதலிய குதிரைப் படைகள் பின் சென்றன. அவை மிக்க பலமும்

வேகமுமுள்ளவை. யஜமானன் கருத்தையுணர்ந்து அதன்படி நடப்பன. அநேக ஸல்லக்ஷணங்கள் பொருந்தியன. அதில் அபராஜிதமென்னும் அச்வத்தின்மீது அச்வாரூடை அமர்ந் தாள். அது மிக்க கம்பீரமானது, இருபுறமும் புரளும் பிடரிமயிருள்ளது. படபட வென்று பூமிமீது குளம்புகளை வைத்து, இனி வரப்போகும் தேவியின் விஜயத்திற்கு மங்கள கோஷம் செய்வதுபோல் விளங்கிற்று. மயிரடர்ந்த வாலை அடிக்கடி இரு புறங்களிலும உதறுவதாலும், அதி வேகமாகச் செல்லுவதாலும் அது இறக்கைகளை உதறிப் பக்ஷி பறப்பது போலிருந்தது. அச்வாரூடை பாசம், அங்குசம், பிரம்பு, கடிவாளம் இவைகளை நான்கு கரங்களிலுமேந்தி திவ்யா பரணங்களால் ப்ரகாசித்துக்கொண்டு குதிரைகளை நர்த்தனம் செய்வித்துக்கொண்டே சென்றாள்.

ஸ்ரீ தண்டநாதை யென்னும்சக்தியின்பிரயாணத்திற்காக வாசிக்கப்படும் படஹ சப்தம் உலகைச் செவிடுபடும்படி செய்தது. தண்டநாதையைச் சார்ந்த சில சக்திகள் பயங்கர மான பல ஆயுதங்களைத் தாங்கி மிக நெருக்கமாய்க் கூடி வரும் சேனைகளைப் பிரம்பினுல் பிரித்து அடக்கி நடத்திச் சென்றன. சில சக்திகள் எருமைக்கொடி, மான்கொடி, ஸிம்ஹக் கொடி முதலிய உயர்ந்த த்வஜங்களைக் கையிலேந்தி சென்றன. சிலர் வெண்குடைகளை எடுத்துச் சென்றனர். அவை ஆகாயத்தில் பல சந்த்ர மண்டலங்கள் விளங்குவது போலிருந்தன. குடைகள் மறைத்ததால் ஸூர்ய வெளிச்ச மின்றி இருள் சூழ, அக் குடைகளின் ஸ்வர்ண தண்டங்கள் தம் காந்தியால் இருளை யகற்றிப் பிரகாசமளித்தன. சில சக்திகள் விசிறிகளை ஏந்திச் சென்றன. சண்டன் உச்சண்டன் முதலிய பைரவர்கள் ஸ்வர்ண வர்ணமான ஜடாமண்டலத்தால் திக்குகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு அரக்கரைத் தஹிப் பவர் போல் சூலபாணிகளாகச் சென்றனர்.

வராஹமுகியான தேவி தன்னைப்போன்ற முகமும் ஆயுத மும் மகிஷவாஹனமும் உள்ள பல சக்திகள் சூழ கறுத்த

வஸ்திரம் உடுத்தி கோரப் பல்லும் உக்ரப் பார்வையுமுள்ள வளாகக் கிளம்பினாள்.

ஸ்ரீ தண்டநாதை கிரிசக்ரமெனும் உத்தம ரதத்திலிருந்து இறங்கி வஜ்ரகோஷ மெனும் உக்ரமான தனது ஸிம்ஹ வாஹனத்தின் மீதமர்ந்தனள். மிக்க பயங்கரமாய் மூன்று யோஜனை தூரம் உயரமாயுள்ள அந்த ஸிம்மவாஹனத்தில் வீற்றிருந்து கோபத்துடன் அரக்கர்களை அழிக்கத் தண்ட நாயகி கிளம்பியபோது மூவுலகமும் நடுங்கிற்று. அமரரனை வரும், உலகை எரித்துச் சாம்பலாக்குவாளோ? பூமியை உலக்கையால் இரு கூறாகப் பிளப்பாளோ? கலப்பையால் கடலைக் கலக்குவாளோ? என அஞ்சி வெகு தூரமோடி ஆங்கிருந்து தேவியைப் பார்த்து, அஞ்ஜலியுடன் பல முறைப் பணிந்து பன்னிரண்டு நாமாக்களை ஜபித்தனர்.

அகஸ்த்யர்:—மஹாப்பிராக்ஞரான ஹயக்ரீவரே! அந்தத் தேவியின் பன்னிரண்டு பெயர்கள் யாவை? அதைக் கேட்க மிக ஆவல் கொண்டுளேன்; அருள்புரியும்.

ஹயக்ரீவர்:—எதைக் கேட்டவுடன் தேவி ப்ரஸன்ன மாவளோ அதைக் கூறுகிறேன், கேள். பஞ்சமீ, தண்டநாதா, ஸங்கேதா, ஸமயேச்வரீ, ஸமயஸங்கேதா, வாராஹீ, போத்ரிணீ, சிவா, வார்த்தாளீ, மஹாஸேநா, ஆக்ஞாசக்ரேச்வரீ, அரிக்நீ. இப் பன்னிரண்டு நாமாக்களென்னும் வஜ்ர கவச மணிந்தவர் எப்போதும் துன்பம் பெறார்.

இங்ஙனம் துதிக்கும் தேவர்களது நன்மையை நாடியே தேவி யுத்தத்திற்குக் கிளம்பிச் சென்றாள். மந்த்ரிநாதா தேவியைப் பணிந்துகிளம்ப, ஸங்கீதயோகினீ ப்ரயாணத்தைக் காண்பிக்கும் காஹளீ வாத்யத்தை முழக்கினாள். வீணாபாணி களாகச் சிலர் பாடினர்; சிலர் ஆடினர்; சிலர் மதுபானத்தால் சிவந்த கண்களுள்ளவர்களாகித் தேவியைத் துதித்தனர். மயில், குயில், ஹம்ஸம், கிளி முதலிய வாஹனங்கள் மீதேறிச் சில சக்திகள் மந்திரிநாதையைப் பின் தொடர்ந்தனர்.

கேய சக்ரமெனும் திவ்ய ரதத்திலமர்ந்து ச்யாமளா எனும் மந்த்ரிநாயிகை கிளம்பினள். தேவர்கள் அவளை ஸங்கீதயோகிநீ, ச்யாமா, ச்யாமளா, மந்த்ரிநாயிகா, மந்த்ரிணீ, ஸசிவேசானீ, ப்ரதானேசீ, சுகப்ரியா, வீணாவதீ, வைணிகீ, முத்ரிணீ, ப்ரியகப்ரியா, நீபப்ரியா, கதம்பேசீ, கதம்ப வநவாஸினீ, ஸதாமதா என்னும் பதினாறு பெயர்களால் துதித்தனர். இந் நாமாக்களைப் பக்தியுடன் ஒரு முறை ஜபித்தாலும் மூன்று உலகும் வச்யமாகும். மந்திரிநாதையின் கடாக்ஷம் எங்கெங்கு படுகிறதோ அங்கங்கு ஸேனைகள் தைரியமாய் ஸந்தேஹமின்றிச் சென்றன. ஸ்ரீ லலிதாதேவி எவ்வளவு ராஜ்யவிஷய சர்ச்சை செய்கிறாளோ அவ்வளவும் அவளுக்கு வச்யமாயின.

பிறகு, ஸங்கீத யோகினியின் கரத்திலுள்ள கிளியினிட மிருந்து தநுர்வேதம் நான்கு கைகளுடனும் மூன்று தலை களுடனும் மூன்று கண்களுடனும் தோன்றி ப்ரதாநதேவியை வணங்கிக் கூறிற்று.

"தாயே! பண்டாஸுரனுடன் போருக்குக் கிளம்பும் தங்களுக்கு ஸஹாயம் புரிவது என் கடமை. தானவரை அழிக்கும் சித்ரஜீவமென்னும் இவ் வில்லையும், அக்ஷயமான இரு அம்பறாத்தூணிகளையும் பெற்று எனக்கருள் புரியுங்கள்." சுகப்ரியை அவ்வில்லை யேற்று, நாணேற்றி, டங்காரஞ் செய் தனள். அச் சப்தமானது உலகெலாம் பரவி, தேவர்களுக்குப் பேரானந்தத்தை விளைவித்தது.

யந்த்ரிணி, தந்த்ரிணி எனும் அவளுடைய இரு தோழி கள் கிளியையும், வீணையையும், தலைமீது ஏந்தித் தேவிக்குப் பணிவிடை செய்தனர். தேவியின் கரத்திலிருந்த அம்பு, காளியின் கண்போல் தீக்ஷணமாக இருந்தது. உக்ர வேஷத் துடன், பயங்கரமான பற்பல ஆயுதங்களைத் தாங்கிய ஆயிரம் அக்ஷௌஹிணி ஸேனைகள் தேவியைப் பின் தொடர்ந்தன. அவைகளின் சப்தம் ஆகாய மளாவி நின்றது.

சக்ர ராஜ ரதநாயிகையான ஸாக்ஷாத் பராசக்தி, அங்குசம், பாசம், கரும்புவில், புஷ்பபாணம் இவைகளையேந்தி, கோடி ஸூர்யோதயம் போல் விளங்காநின்ற சிவந்த சரீர காந்தியுடன், திக்குகளில் பரவுகிற மூககாந்தியால் மேக மண்டலத்தைச் சந்த்ர மயமாக்கிக்கொண்டு, பத்து யோஜனை தூரம் விஸ்தீர்ணமுள்ள முத்துக் குடையால் சந்த்ர மண்டலத்திற்கு அதிக ப்ரகாசத்தை அளித்துக் கொண்டு, விஜயை முதலிய முக்ய பரிசாரிகைகள் நாற்புறமும் வெண்சாமரம் வீச, தேவர்கள் துதிக்க, வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத வைபவமுள்ளதும் மூவுலகைத் தனக்குள்ளே அடக்கியுள்ளதுமான சக்தி சக்ர ஸாம்ராஜ்யத்தில் அபிமானமுள்ளவளாகி, அஞ்சலி பந்தத்துடன் தன்னைத் துதிக்கும் மும்மூர்த்திகளையும் கடாக்ஷ வீக்ஷணத்தால் அருள்புரிந்து, அப்ஸரஸுகள் ஜெய ஜெய சப்தத்துடன் பொரி இறைக்க, யுத்த வேஷத்தால் மனோஹரமாய் விளங்கும் காமேச்வரீ முதலிய பலர் புடைசூழ, நாறு யோஜனை தூரம் நீளமான கொடி பறக்கும் ஸ்ரீசக்ரராஜமெனும் ரதத்திலேறி, நவாவரண தேவதா பரம்பரைகள் சூழ, ஸம்ஸார தாபத்தைத் தணிப்பதில் ஸாமர்த்தியம் வாய்ந்த இருபத்தைந்து நாமரத்னங்களால் தேவர்கள் துதிக்க, யுத்தத்திற்குக் கிளம்பினாள்.

அகஸ்தியர் :—ஸ்வாமின் ! கர்ணாம்ருதமான அந்த இருபத்தைந்து நாமாக்களையும் அருள்புரியும்.

ஹயக்ரீவர் :—ஸிம்ஹாஸநேசீ, லலிதா, மஹாராக்ஞீ, வராங்குசா, சாபிநீ, த்ரிபுரா, மஹாத்ரிபுரஸுந்தரீ, ஸுந்தரீ, சக்ரநாதா, ஸம்ராக்ஞீ, சக்ரிணீ, சக்ரேச்வரீ, மஹாதேவீ, காமேசீ, பரமேச்வரீ, காமராஜப்ரியா, காமகோடிகா, சக்ரவர்த்திநீ, மஹாவித்யா, சிவாநங்கவல்லபா, ஸர்வபாடலா, குலநாதா, ஆம்நாயநாதா, ஸர்வாம்நாயநிவாஸிநீ, ச்ருங்கார நாயிகா. இந்த நாமாக்களால் லலிதா பரமேச்வரியைத் துதிப்பவர் ஸகல ஸௌபாக்யத்தையும், அஷ்டஸித்திகளையும், கீர்த்தியையும் பெறுவர்.

இங்ஙனம் மிகப் பயங்கரமான ஸேனையை நடத்திக் கொண்டு ஸ்ரீ லலிதை பண்டனை எதிர்க்கச் சென்றாள்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று. 108 சுலோகங்கள்.

பதினாறும் அத்தியாயம்

அகஸ்த்யர் :—சக்ரராஜ ரதேந்த்ரத்தின் *பர்வாக்களில் உள்ள ப்ரகடா முதலிய தேவதைகளின் பெயர்களையும், ஸங்க்யைகளையும், வர்ணங்களையும், ஆயுதங்களையும் கூறுங்கள்.

ஹயக்ரீவர் :—அந்த ரதத்தின் ஒன்பதாவது பர்வாவில் அணிமா, மஹிமா, லகிமா, கரிமா, ஈசிதா, வசிதா, ப்ராப்தி, ப்ராகாம்யா, புக்தி, ஸர்வகாமா, என சதுர்பாஹுக்களான பத்து ஸித்திகள் இருக்கின்றனர். அவர்கள் ஜபாபுஷ்பம் போன்ற சிவந்த வர்ணமுள்ளவர்கள். சிந்தாமணி, கபாலம், த்ரிசூலம், ஸித்தி கஜ்ஜலம் இவைகளைத் தரித்தவர்கள். யோகிகளால் ஸேவிக்கத் தக்கவர்கள். அப்பர்வாவின்மேலே ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டா, மஹாலக்ஷ்மீ ஆகிய எட்டுச் சக்திகள் கபாலத்தையும் தாமரையையும் ஏந்திய இரு கரங்களுடன், சிவப்பு வஸ்திரமுடுத்திச் சிவந்த காந்தியுடன் விளங்குகின்றனர். இந்தச் சக்திகளையே சிலர் ப்ரும்ஹாதிகளுக்கு ஸமமான சரீரம், ஆயுதம், சின்னம் முதலியவைகளை உடையவர்களாக த்யாநம் செய்கின்றனர்.

அவர்களுக்கு மேலே பத்து முத்ரா தேவிகள் மாதுளம் புஷ்பம் போன்ற காந்தியுள்ளவர்களாயும் பீதாம்பரமணிந்து, நாற்கைகளில் முத்திரையுடன்கூட கத்தியுங் கேடையமுமேந்தி, மதத்தால் சிவந்த கண்களுடையவர்களாகவும்

---

* பர்வா—ரதத்தட்டு.

விளங்குகின்றனர். ஸர்வஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ, ஸர்வவசங்கரீ, ஸர்வோன்மாதினீ, ஸர்வமஹாங்குசா, ஸர்வகேசரீ, ஸர்வபீஜா, ஸர்வயோநி, ஸர்வத்ரிகண்டிகா என்பன அவர்களது பெயர்கள். அணிமா முதலிய ஸித்திகளும், ப்ராஹ்மீ முதலிய சக்திகளும் ஸம்க்ஷோபிணீ முதலிய முத்ரா சக்திகளும், ப்ரகட யோகினிகள் எனப்படுவர். பண்டாஸுரனை ஸம்ஹரிக்க இவர்கள் அந்த ரதத்தில் வீற்றிருந்தனர்.

எட்டாவது பர்வாவில் காமாகர்ஷிணீ, புத்யாகர்ஷிணீ, அஹங்காராகர்ஷிணீ, சப்தாகர்ஷிணீ, ஸ்பர்சாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, கந்தாகர்ஷிணீ, சித்தாகர்ஷிணீ, தைர்யாகர்ஷிணீ, ஸ்மிருத்யாகர்ஷிணீ, நாமாகர்ஷிணீ, பீஜாகர்ஷிணீ, ஆத்மாகர்ஷிணீ, அமிருதாகர்ஷிணீ, சரீராகர்ஷிணீ, எனச் சந்த்ரகலை வடிவமான பதினாறு சக்திகள் விளங்குகின்றனர். இவைகள் குப்த யோகினிகள் என்றழைக்கப்படுபவர்கள். பவழம் போன்ற திருமேனியையுடையவர்கள். நான்கு கரங்களும் மூன்று கண்களுமுள்ளவர்கள். தலையிலே அர்த்த சந்திரனைத் தரித்தவர்கள். வில்லும், அம்பும், கத்தியும், கேடயமும் இவர்களது ஆயுதங்களாகும்.

ஏழாவது பர்வாவில் குப்ததரயோகினிகள் எனும் பெயர் கொண்ட எட்டு அநங்க சக்திகளுளர். அநங்ககுஸுமா, அநங்கமேகலா, அநங்கமதநா, அநங்கமதநாதுரா, அநங்கரேகா, அநங்கவேகா, அநங்காங்குசா, அநங்கமாலினீ என்பன இவர்களது பெயர்கள். ஜபாபுஷ்பம் போன்ற நிறமுள்ள இவர்கள் கரும்புவில், புஷ்ப பாணம், புஷ்ப கந்துகம் உத்பலம் இவைகளைத் தரித்துப் பண்டனிடம் மிகக் கோபங் கொண்டு ஜ்வலித்தனர்.

ஆறாவது பர்வாவில் ஸம்ப்ரதாய யோகினிகள் என்ற பெயருடைய ஸம்க்ஷோபிணீ முதலிய சக்திகள் ஜடாதாரிகளாய், ஸிந்தூர திலகமணிந்தவர்களாய் அக்நிவில், அக்நி

பாணம், அக்நிக்கத்தி, அக்நிசக்ர மெனும் கேடயம் முதலிய வைகளைத் தரித்திருந்தனர். ஸ்ரீ லலிதையின் ஆக்ஞா சக்தி களிவர்கள். ஸர்வஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வா கர்ஷிணீ, ஸர்வாஹ்லாதிநீ, ஸர்வஸம்மோஹிநீ, ஸர்வஸ்தம்பிநீ, ஸர்வஜ்ரும்பிணீ, ஸர்வவசங்கரீ, ஸர்வரஞ்ஜிநீ, ஸர்வோந்மாதிநீ, ஸர்வார்த்தஸாதிநீ, ஸர்வஸம்பத்திபூரணீ, ஸர்வமந்த்ரமயீ ஸர்வத்வந்த்வ க்ஷயங்கரீ என்பன அவர்களது பெயர்களாகும்,

ஐந்தாவது பர்வாவிலுள்ளோர் குலோத்தீர்ண யோகினி கள் என்ற பொதுப் பெயருடையவர்கள் ; ஸ்படிகம் போன்ற வர்கள். பரசு, பாசம், கதை, மணி இவைகளைத் தரித்தவர் கள். ஸர்வஸித்திப்ரதா, ஸர்வஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரீ, ஸர்வமங்களகாரிணீ, ஸர்வகாமப்ரதா, ஸர்வதுக்கவிமோசிநீ, ஸர்வம்ருத்யுப்ரசமநீ, ஸர்வவிக்நநிவாரணீ, ஸர்வாங்க ஸுந்தரீ, ஸர்வஸௌபாக்யதாயிநீ என்ற இவர்கள் தேவியின் தயை யால் பூரணமாக ஈடேற்றப்பட்ட மநோ ரதங்களை யுடையவர் கள்.

நான்காவது பர்வாவிலுள்ளோர் முத்துப் போன்ற வர்ணமுள்ளவர்கள். நிகர்ப்ப யோகினிகள் எனும் பெயருள்ள வர்கள். ஸர்வக்ஞா, ஸர்வசக்தி, ஸர்வைச்வர்யப்ரதாயிநீ, ஸர்வ க்ஞாநமயீ, ஸர்வவ்யாதிவிநாசிநீ, ஸர்வாதாரஸ்வரூபா, ஸர்வ பாபஹரா, ஸர்வாநந்தமயீ, ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப் ஸிதபலப்ரதா என்ற இவர்கள் நான்கு கரங்களையுடையவர்கள். வஜ்ஜரம், சக்தி, தோமரம், சக்ரம் இவைகளைத் தரிப்பவர்கள்.

மூன்ருவது பர்வாவில் வஸிப்பவர்கள் ரஹஸ்ய யோகினி கள் எனும் ப்ரஸித்தமான வாகதிச்வரிகள். ரக்தாசோக புஷ்பம் போற் சிவந்த வர்ணமுள்ளவர்கள். சரீர முழுவதும் கவச மணிந்தவர்கள். வில், அம்பு, வீணை, புத்தக மிவைகளைத் தரித்தவர்கள். வசிநீ, காமேசீ, மோதிநீ, விமலா, அருணா, ஜயிநீ, ஸர்வேசி, கௌளினீ எனுமிவர்கள் தைத்யருக்கு எமன் போன்றவர்கள்.

இரண்டாவது பர்வாவில் உள்ளோர் காமேசி, வஜ்ரேசி, பகமாலினி எனும் மூவர்கள். இவர்களுக்கு எட்டுக் கரங்களுண்டு. வில், பாணம், பானபாத்ரம், மாதுலங்கம், கத்தி, பலகை, நாகபாசம், மணி இவைகளை ஏந்தி, அம்பிகைக்குச் சமமான பலமுள்ளவர்களாயும் ஸ்ரீ லலிதைக்கு மிக அந்தரங்கமாயும் விளங்குகின்றனர்.

ஆநந்த மஹா பீடமான ரதமத்ய பர்வாவின் சுற்றிலும் வஸிக்கும் திதி நித்யாக்களெனப்படும் தேவிகள் ஸ்ரீ தேவிக்குச் சமமான ரூபம், ஆயுதம் இவைகளையுடையவர்கள். லோகோபகாரமாக ஒவ்வோர் யுகத்திலும் தோன்றுபவர்கள். காமேசி, பகமாலா, நித்யக்லின்னா, பேருண்டா, வந்ஹிவாஸிநீ, மஹா வஜ்ரேச்வரீ, தூதி, த்வரிதா, குலஸுந்தரீ, நித்யா, நீல பதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலிநிகா, சித்ரா என்பன அவர்களின் பெயர்களாகும்.

கீதிசக்ரரதபர்வா தேவிகள்.

கீதி (கேய) சக்ரமெனும் மந்த்ரிநாதையின் மஹா ரதத்தில் ஏழு பர்வாக்களிருக்கின்றன. நடுப் பர்வாவில் ஸ்ரீ தேவிக்கு மிக ப்ரியையான ஸங்கீத யோகிநீ எனும் தேவி விளங்குகிறாள். முதல் பர்வாவில் மந்த்ரிணி வஸிக்கிறாள். இரண்டாவது பர்வாவில் ரதி, ப்ரீதி, மநோஜா என்பவர்கள் வீணாபாணிகளாகக் கறுத்த மேனியுடன் ப்ரகாசிக்கின்றனர். மூன்றாவது பர்வாவில் த்ராவிணி, சோஷிணி, பந்திநீ, மோஹிநீ, உந்மாதிநீ, எனும் மன்மதபாண தேவதைகளிருக்கின்றனர். அதனடியிலே காமராஜன், கந்தர்ப்பன், மன்மதன், மகரத்வஜன், மநோபவன், என்பவர்கள் மூவுலகையும் மோஹிக்கச் செய்துகொண்டு வசிக்கின்றனர். நான்காம் பர்வாவிலே ப்ராஹ்மீ முதலிய ஏழு சக்திகளும், சண்டியுமிருக்க, அதனடியிலே லக்ஷ்மீ, ஸரஸ்வதீ, ரதி, ப்ரீதி, கீர்த்தி, சாந்தி, புஷ்டி, துஷ்டி, முதலிய சக்திகளுமிருக்கின்றனர். ஐந்தாம் பர்வாவில் வாமா, ஜ்யேஷ்டா, ரௌத்ரீ,

சாந்தி, ச்ரத்தா, ஸரஸ்வதி, கிரியாசக்தி, லக்ஷ்மீ, துஷ்டி, மோஹிநீ, ப்ரமதிநீ, ஆச்வாஸிநீ, வீசி, வித்யுந்மாலிநீ, ஸுரானந்தா, நாகபுத்திகா ஆகிய இவர்கள் வஜ்ரகவசம் பூண்டு அட்டஹாஸத்துடன் வஜ்ரம், தண்டம், சதக்நீ, புஸுண்டிகா, முதலிய ஆயுதங்களை ஏந்தி யுத்தத்திற்கு ஸன்னத்தமாயிருக்கின்றனர்.

ஆருவது பர்வாவில் மூன்று சிகைகளும், பாநபாத்ரமும் கறுத்த மேனியுமுள்ள அஸிதாங்கர், ருரு, சண்டர், குரோதர், உன்மத்தர், கபாலீ, பீஷணர், ஸம்ஹாரர், எனும் அஷ்ட பைரவர்கள் வஸிக்கின்றனர். ஏழாவது பர்வாவில் மாதங்கி, ஸித்தலக்ஷ்மீ, மஹாமாதங்கி, மஹாஸித்தலக்ஷ்மீ, ஆகிய இவர்கள் நால்வரும் சிவந்த மேனியுள்ளவர்களாகவும் ஆயுத பாணிகளாகவும் இருக்கின்றனர். அதே பர்வாவின் கீழ்ப் புறத்தில் கணபர், க்ஷேத்ரபர், துர்க்காம்பா, வடுகர், இவர்கள் சஸ்த்ரபாணிகளாக இருக்கின்றனர். இன்னும் சிறிது கீழே லக்ஷ்மியும், ஸரஸ்வதியும், சங்கநிதி பத்மநிதிகளும், யுக்த கோலத்துடனிருக்கின்றனர். இந்திரன் முதல் விஷ்ணுவரை பத்துத் திக்குகளின் சக்ர நாயகர்கள் சக்தி வடிவமாகவும் அங்கு வஸிக்கின்றனர். இவர்கள், முறையே வஜ்ரம், சக்தி, காலதண்டம், கத்தி, பாசம், த்வஜம், கதை, த்ரிசூலம், தர்ப்பாஸ்த்ரம், சக்ரம், ஆகிய ஆயுதங்களை ஏந்தி மந்த்ரி நாதையை ஸேவிக்கின்றனர். மந்த்ரிநாதையை முன்னிட்டு ஸ்ரீ தேவியின் ஆக்ஞையைப் பெற்றால் ஸேவகர்களுக்கு விரைவில் கார்ய ஸித்தி உண்டாகுமெனக் கருதி, அவளையே அணுகி ஸகல சக்திகளும் திக் பாலகர்களும் நின்றனர். அவளோ எல்லாம் வல்லவள். இந்த கேயசக்ரரதபர்வாவில் வஸிப்பவர்களின் பெயரைக் கேட்பவர்கள் ஸகல பாபங் களிலிருந்தும் விடுபட்டு ஜயத்தைப் பெறுவார்கள்.

பதினாரும் அத்தியாயம் முற்றிற்று. 97 சுலோகங்கள்.

பதினேழாம் அத்தியாயம்

கிரிசக்ரரத பர்வ தேவதைகள்.

கிரிசக்ரமெனும்ரதத்தில் ஐந்து பர்வாக்களிருக்கின்றன. பிந்து எனும் முதற் பர்வாவில் தண்டநாயிகை பல பயங்கர மான ஆயுதங்களையேந்தி ஜகத்திற்குக் கண்டகர்களான அஸுர கணங்களை அடியோடு நாசம் செய்பவள்போல் பிர காசிக்கிறாள். வாராஹீ, வார்த்தாளிகை, என்பவருமங்கு தங்கு கின்றனர். இரண்டாவது பர்வாவில் ஜ்ரிம்பிணீ, மோஹிநீ, ஸ்தம்பிநீ எனும் மூவரிருக்கின்றனர். முஸலம், கலப்பை, பாசம், பாநபாத்ரம் இவைகளைக் கரகமலங்களிலேந்தி சத்ருக் களைத் தஹிப்பவர் போலிருக்கின்றனர். மூன்றாவது பர்வா வில் தேவியின் மந்த்ரத்தை ஆச்ரயித்த அந்திநீ முதலிய ஐந்து சக்திகள் அட்டஹாஸத்தால் மூவுலகையும் பிளப்பவர் போலும், ப்ரளயாக்நியே பெண்ணுருவெடுத்ததுபோலும் பண்டாஸுரயுத்தத்தில் பெருகும் ரக்தப்ரவாஹத்தை நாவினால் நக்க ஆசைகொண்டவர்போலும் தண்டநாதையை ஸேவிக்கின்றனர்.

நான்காவது பர்வாவில் ப்ராஹ்மீ முதலிய சக்திகளில் ஐந்தாவது மெட்டாவதுமான வாராஹீ மஹாலக்ஷ்மீ சக்தி கள் தவிற மற்ற ஆறு பேரும் தண்டநாதையின் உத்தரவுப்படி வஸிக்கின்றனர். அவர்களின் நாற்புறங்களிலும் யாகிநீ, ராகிநீ, லாகிநீ, வாகிநீ, சாகிநீ, டாகிநீ, இவர்களின் ஐக்ய ரூபமான ஹாகிநீ முதலிய ஏழு யோகினிகள் சத்ருக்களின் உடலைப் பீறி ரத்தத்தைக் குடிப்பவர்போல் கடினமான ஸிம்ஹநாதத்தால் பத்துத் திக்குகளையும் நிரப்பிக்கொண்டு விளங்குகின்றனர். தாதுநாதைகளென்று அழைக்கப்படு மிவர்கள் அணிமாதி எட்டு ஸித்திகளையுமளிக்க வல்லவர்கள். மோஹநம், மாரணம், ஸ்தம்பநம், தாடநம், பக்ஷணம், வேரோடு அரக்கரை அறுப்பது, இவைகளில் மிக்க ஸமர்த்தர் கள். பக்திமான்களது ஸகல ஆபத்துகளையும் போக்கடிப்பவர் கள். தாதுக்களில் தங்கி நிற்கும் இந்த தாது நாதைகள்

ஒரு க்ஷணத்திற்குள் ஏழு கடலையும் கலக்க வல்லவர். ஆகாயத்தை மலையாக்கவும், அரைக்ஷணத்திற்குள் மலைகளைத் தூள் தூளாக்கவும் வல்லவர்கள். வண்டிச் சக்கரம் போல் சுழலும் பயங்கரமான கண்களுள்ளவர்கள். தன் நாதனுக்கும், தனது மதத்திற்கும், வைதிக தர்மத்திற்கும், தேவர்களுக்கும், வீரர்களுக்கும், யஞ்ஞங்களுக்கும் துரோஹம் செய்பவர்களைப் பக்ஷிப்பதில் ஸமர்த்தர்கள். நித்யம் வாராஹியை ஸேவிப்பவர்கள். அங்கேயே இருபுறங்களிலும் க்ரோதிநீ, ஸ்தம்பிநீ, என இருவர்கள் இரண்டு சாமரங்களை வீசிக் கொண்டிருக்கின்றனர். ரதத்தின் இரு பார்ச்வங்களிலும் ஹலம், முஸலமென்னுமிரு ஆயுதங்கள் தேவதாஸ்வரூபத்துடன் நிற்கின்றன. லோகோபத்ரவம் செய்யுமரக்கர்களைக் கொல்லுமிவ்வாயுத தேவதைகள் தங்கள் தலைகளின்மீது அந்த ஆயுதங்களை மகுடம்போல் வஹிக்கின்றனர். இவைகளைக் கொண்டே தேவி விஷங்கனெனு மரக்கனை வெல்லப் போகிருள். அப்பர்வாவிலேயே கட கட வென்று பற்களைக் கடிக்கும் சப்தத்தால் உலகைச் செவிடாக்கும் சண்டோச்சண்டனென்பவன் ஸதா தேவியை ஸேவித்துக் கொண்டே சூல, கட்க, ப்ரேத, பாசங்களுடன் வீற்றிருக்கிருன். ஐந்தாவது பர்வாவில், வார்த்தாளி முதலிய எட்டுத் தேவதைகள் எட்டுத் திசைகளிலும் அல்லும் பகலும் தேவியை ஸேவிக்கின்றனர். வார்த்தாளீ, வாராஹீ, வராஹமுகீ, அந்திநீ, ருந்திநீ, ஜ்ரிம்பிநீ, மோஹிநீ, ஸ்தம்பிநீ என்பன அவர்களது பெயர்கள். அங்கே இடது புறத்தில் ஓர் க்ரோச தூரம் (500 முழம்) உயரமுள்ள மிகப் பயங்கரமான மஹிஷ வாஹனம் நின்றது.

லோக க்ஷேமத்தை நாடிக் கார்ய ஸித்தியை ஸ்ரீ லலிதா தேவியிட மறிவித்துக்கொள்ள அறுபத்துநான்கு கோடி அப்ஸரஸுகளுடன் அமராதிபதியும், ஸித்தரும், ஸாத்யரும், கந்தர்வரும், பூதகணங்களும், வருணனும், வித்யாதரரும், தும்புரு நாரதர்களும், பிரஹ்ம விஷ்ணு ருத்ரர்களும், மற்ற எண்ணிறந்த கணங்களும் சூழ்ந்திருந்தனர். ஜ்ரிம்பிநீ,

ஸ்தம்பிநீ, மோஹிநீ என்னும் மூன்று சக்திகளும், க்ஷேத்ர பாலனும், ஸிம்ஹவாஹனமும், வராஹ முகங்கொண்ட ஆயிரம் சக்திகளும், மற்றோர் வாஹனமான மானும், கரத்தில் மாம்ஸ மேந்தி தேவதாரூபத்துடன் தோன்றிய மதுக் கடலும், ப்ரத்யேகம் ஆயிரம் படர்களுடன் கூடிய ஹேதுகர், த்ரிபுராரி, அக்நி பைரவர், யமஜிஹ்வர், ஏகபாதர், காலர், கபாலகர், பீம ரூபர், ஹாடகேசர், அசலநாமா எனும் பத்துப் பைரவர்களும், ரக்த பானத்தில் ஆசைகொண்ட ஜ்ரிம்பிணி முதலியவர்களும் சூழ கிரிசக்ரமெனும் சிறந்த ரதம் கிளம்பிற்று. சக்ர ராஜ ரதம் சென்ற விடத்தே கேயசக்ர ரதமும், கேயசக்ர ரதம் சென்ற விடத்தே கிரிசக்ர ரதமும் செல்வது, மூவுலகும் நடந்து செல்வது போலவும், மேரு, மந்தரம், விந்திய பர்வத மென்னும் மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்தன போலவுமிருந்தது. சக்ரராஜ ரதத்திற்கு இரா தேவி, த்ரிபுர பைரவீ, ஸம்ஹார பைரவர், ரக்த யோகிநீவல்லபர், ஸாரஸர், சாமுண்டா எனும் ஆறு ஸாரதிகளாம். கேயசக்ரரதத்திற்கு ஹஸந்திகையும், கிரி சக்ரரதத்திற்கு ஸ்தம்பிநியும் ஸாரதிகளாம். ஸ்ரீ லலிதையின் ரதம் பத்து யோஜனை உயரமுள்ளது. கேயசக்ர ரதம் ஏழு யோஜனை உயரமும், கிரிசக்ர ரதம் ஆறு யோஜனை உயரமுமுள்ளது. பத்து யோஜனை அகலமுள்ள லலிதை யின் முத்துக்குடை சக்திஸாம்ராஜ்யஸூசகமாயிருந்தது.

ஸ்ரீலலிதாதேவி இவ்வளவு சிறப்புடன் பண்டாஸுரனை ஜயிக்கக் கிளம்பும்போது பூமி நடுங்கிற்று. ஸர்வ பூதங் களும் கலங்கின. தேவதுந்துபி முழங்கிற்று. புஷ்பவர்ஷம் வர்ஷித்தது. கந்தர்வர் கானம் செய்தனர். ஸரஸ்வதி ஜய மங்கள சப்தங்களைக் கூறினாள். தேவியைத் துதித்து ஆநந்த பரவசர்களாகிச் சக்திகள் ஆடிப் பாடிச் சென்றனர். வஸிஷ்டர் முதலிய ஸப்த ரிஷிகள் நான்கு வேதங்களாலும் ஜயச்ரீயை விருத்தி செய்தனர். அவ்வுத்தமர்கள் ஆசிர்வதித்தனர்.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று. 105 சுலோகங்கள்.

பதினெட்டாம் அத்தியாயம்

சூன்யக நகரத்தில் உத்பாதங்கள்

ஸ்ரீ லலிதை புறப்பட்ட சப்தத்தைக்கேட்டுப் பண்டாஸுர புரத்திலுள்ளோர் நடுங்கினர். கடற்கரையில் மஹேந்த்ர பர்வதத்தினருகே சூன்யகமென்று மிகப் பிரஸித்தமான புரியில் பண்டன் பரிவாரத்துடன் வஸித்தான். நூறு யோஜனை தூரம் விசாலமான அந்நகரம் உத்பாதங்களால் ஒரேபுகையால் சூழப்பட்டது போலாயிற்று. சுவர்களெல்லாம் பிளந்து விழுந்தன. ஆகாயத்திலிருந்து கொள்ளிக்கட்டைகள் வீழ்ந்தன. பூகம்பம் உண்டாயிற்று; த்வஜங்களின் மீதமர்ந்து காக்கை, கழுகு முதலியவை சூர்யனைப் பார்த்துப் பயங்கரமாகக் கத்தின. குடிகளின் மனம் காரணமின்றித் துடித்தது. ஆகாயத்திலிருந்து பல க்ரூரமான அசரீரிச் சொற்கள் கேழ்க்கப்பட்டன. கொடிகள் அழுக்கடைந்தன. ராக்ஷஸ ஸ்த்ரீகளது உடலிலிருந்து மாலையும் ஆபரணங்களும் திடீரெனக் கீழே விழுந்தன. ஹா ஹா எனக்கூக்குரலுடன் அழுகைக்குரல் கேட்டது. கண்ணாடி, கவசம், கொடி, கத்தி, மணிகள், ஆகாசம் இவைகள் அடிக்கடி தமது பிரகாசங்களை யிழந்தன. உப்பரிகைகளிலும், சந்த்ர சாலைகளிலும், கடைத் தெருக்களிலும், கோஷ்டிகளிலும், ஸபைகளிலும், விளையாடுமிடங்களிலும், ஸேனைகளிலும், உத்யானங்களிலும், நாற்சந்துகளிலும், கோபுரங்களிலும், மற்றுமுள்ள விடங்களிலும் மஹாபயங்கரமான கோஷங்கள் கேழ்க்கப்பட்டன. நாய்கள் சூர்யனைப்பார்த்து ஊளையிட்டன. ஆங்காங்கு ரக்த மழை பொழிந்தது. ஆகாயத்திலிருந்து சுருள் சுருளாக மயிர்கள் பூமியில் எங்கும் விழுந்தன.

இப்படி பூமியிலும் ஆகாயத்திலும் பல கெட்டக் குறிகள் தோன்ற, இதைக்கண்டு அந் நகரவாஸிகள் நடுநடுங்கிப் பண்டனிடம் தெரிவித்தனர். உடனே அவன் தனது மந்த்ராலோசனை ஸபைக்கு வந்து ஸிம்ஹாஸநத்திலமர்ந்தான். விசுக்ரன், விஷங்கன் என்னும் இரண்டு ஸஹோதரர்களும் அவனருகே

வந்து வணங்கி அமர்ந்தனர். சிற்றரசர்கள் எண்ணிறந்த ஸேனைகளுடன் வந்து அஸுரராஜனைப்பணிந்து அவனது ஆக்ஞையின்பேரில் பணிவுடன் ஆஸனங்களில் அமர்ந்தனர்.

மிக்க கம்பீரமான த்வனியுடன் விசுக்ரன் எழுந்து பண்டாஸுரனைநோக்கி "தேவ! உமது புஜபலத்தைக் கண்டு பயந்த தேவர்கள் வேறுசரணமின்றி அக்னியில் வீழ்ந்து அழிந்தனர். அங்கிருந்து தெய்வச்செயலாக ஒரு பெண் தோன்றி இறந்த இந்திராதி தேவர்களைத் தன் பராக்ரமத்தால் படைத்தெழுப்பினள். உத்ஸாஹங்கொண்ட தேவர்களால் உத்ஸாஹப்படுத்தப்பட்ட அவள் அநேக அபலைகளுடன் பல ஆயுதங்களை ஏந்தி நம்மை ஜயிக்க வருகிறாள்! என்ன அறியாமை! அபலைகளான ஸ்திரீகளின் கூட்டம் மஹாபலசாலிகளான நம்மை ஜயிப்பதென்பது தளிர்களால் பர்வதங்களைப்பிளக்க முயல்வதுபோல்வதாகும்; பெண்களுடன் போரென்பது நமக்கு வெட்கமானதன்றோ? நமது ஸேனையைக் கண்டவுடன் இந்திராதி தேவர்கள் பயந்தோடுகின்றனர். பிரம்மா முதலியவர்களுக்கு நமது பாணத்தால் அடிபட்ட அடையாளம் இன்றும் மாறவில்லை. விஷ்ணுவைப் பற்றிப் பேச்சே இல்லை! சிவனோ நம்மைக்கண்டு மிகப் பயந்தவர். மற்றவரைப்பற்றிப் பேசவும் வேண்டுமா? திக்பாலர்களோ பயந்து ஓட்டமெடுத்தனர். அத்தகைய வல்லமையுள்ள நம்மை ஜயிக்கப் பெண் வருகிறாளாம்! ஆயினும் அல்பமான சத்ருவைக்கூட உபேக்ஷை செய்யலாகாது. அவளை விரட்ட நமது கிங்கரர்களை அனுப்புவோம்; மதோன்மத்தையான அவளைத் தலைமயிரைப் பிடித்திழுத்து வந்து நமது அந்தப்புரத்திற்கு ஒரு சேடியாக வைத்துக் கொள்ளுவோம். நமது ஸேனையிலுள்ள ஒவ்வொருவரைக் கண்டாலும் மூவுலகும் நடுங்குகிறது. பின்னர் தேவர் சித்தம்" என்றான்.

பின், விசாரசமர்த்தனும், நீதியின் மர்மங்களை நன்குணர்ந்தவனுமான விஷங்கன் எழுந்து "தேவா! தாங்களறி

யாதொன்றுமில்லை. தங்களுக்குச் சொல்ல வேண்டியது மொன்றுமில்லை. எதையும் நன்கு விசார்த்தே செய்தல் வேண்டும். இல்லையேல் கார்யம் அடியோடு அழிந்துவிடும். ஜயத்தை விரும்புபவர் சத்ருவினிடம் சாரனை அனுப்பி அவனது பலாபலத்தை நன்குணர வேண்டும். சாரனையே சக்ஷுஸ்ஸாகக்கொண்டு, த்ருடப்ரக்ஞனாய், ஸதா சங்கை யுள்ளவனாய், ஆனால் அதை வெளியில் காட்டாமல் மந்திரி களிடம் ஏகாந்தமாக மந்த்ராலோசனை செய்யு மரசனே ஜயம் பெறுவான். யோசிக்காமல் செய்யுங் கார்யம் அழிந்துவிடும். பிராணி என்றோ, பெண்ணென்றோ, அல்பனென்றோ அரசன் சத்ருவை அவமதிக்கலாகாது. தூணிலிருந்து தோன்றிய நரதிர்யக்ஸ்வரூபமான நரஹரி ஹிரண்யனைக் கொல்ல வில்லையா? சண்டி என்னும் ஒரு பெண்ணால் சும்ப நிசும்பர், மஹிஷன், அவர்களைத் தொடர்ந்த பல அரக்கர்கள் அழிக்கப்படவில்லையா? ஆதலின் பெண்ணென்று அவமதிக்க லாகாது. அவள் சக்தியன்றோ? சக்தியே ஜயத்திற்குக் காரணம். சக்தியின் ஆதரவைக்கொண்டன்றோ ஆண், பெண் எனப்படுகின்றது. அச்சக்தி எங்கும் விளங்குபவள். ஆனால் அவள் யார்? எங்கிருந்து பிறந்தாள்? என்ன செயலுள்ளவள்? எதை ஆச்ரயித்தவள்? என்ன பல முள்ளவள்? யாரவளுக்கு ஸஹாயம்? என அவளது ப்ரவிருத்தியை முதலில் நன்கு உணரவேண்டும்" என்றான்.

இதைக் கேட்ட பண்டன் அலக்ஷ்யமாய்ப் பரிஹஸித்துக் கூறலானான். "ஆஹா! இஃதென்ன விசாரம்? ஸம மான சத்ருவினிடமன்றோ இத்தகைய நீதிமார்க்க விசாரம் செய்யவேண்டும்; ஓர் பெண்ணுக்காகவா நாம் விசாரம் செய்வது? நமது ஸேனைகளில் மிகப் பலிஷ்டர்களான ஸேனாபதிகள் நூற்றுக் கணக்காக இருக்கின்றனர். ஏழு கடலைக் குடிக்கவும், மூவ்வுலகை எரிக்கவும் அவர்கள் சக்தி வாய்ந்தவர்கள். என் வீணாகப் பெண்ணிடமஞ்சுகிறாய்? சாரர் மூலம் அவளைப் பற்றி முன்னமே கேள்விப்பட்டிருக் கிறேன். அவள் அக்னியிலிருந்து தோன்றியவள். அவள்

பெயர் லலிதா. பெயருக்கேற்றபடி புஷ்பம்போல் மிக மிருது வான சரீரமுள்ளவள்; வீர்யமற்றவள்; அவள் போர்க் களத்தைப் பார்த்ததேயில்லை. ஆனால் மாயை நிறைந்தவள்; பல பெண்மணிகளைப் படைத்து அவர்கள் மத்தியிலேயே நடமாடுகிறாள்; அவளுக்கேது பலம்? அல்லது, நீ கூறியபடி அவள் மஹா பலசாலியாயிருப்பினும், மூவுலகிலும் தங்கு தடங்கலின்றிச் செல்லும் மஹிமை வாய்ந்த பண்டனை யாவரே ஜயிக்க வல்லவர்? எனது பாஹுபலத்தால் பீடிக்கப் பட்ட தேவர்கள் யாவரும் தங்கள் அதிகாரங்களை யிழந்து, ஸ்திரீ புத்ராதிகளைத் துறந்து, பாதாளம், கடல், மலைக் குஹை, புதர் முதலிய விடங்களில் உருமாறிப் பதுங்கி வஸிக் கின்றனர்.

இத்தகைய நமது பராக்ரமத்தை நேற்று பிறந்த அவள் எவ்வாறு அறிவாள். பெண்களுக்கு ஸாஹஸமதிகம். கார்யாகார்ய மறியாது நாசமடைவர்! அவளை முன்னிட்டுக் கொண்டு யுத்தத்திற்கு வரும் தேவரோ, மூவரோ, திக் பாலரோ, எவராயினும் அவர்களை ஒரு க்ஷணத்தில் ஹதம் செய்ய நான் ஒருவனே போதும். குடிலாக்ஷன், குரண்டன், கரங்கன், காகவாசிதன், வஜ்ரதந்தன், வஜ்ரமுகன், வஜ்ர லோமா, வலாஹகன், ஸூசீமுகன், பாலமுகன், விகர்ணன், விகடாநநன், கராளாக்ஷன், கரண்டகன், தமநன், தீர்க்க ஜிஹ்வன், ஸ்வர்க சத்ரு, ஸ்வர்க்க பலன் முதலிய கணக்கற்ற நமது ஸேநாதிபதிகள் ஹிரண்யகசிபுவுக்கு ஸமமானவர்கள். சத்ருவை பழய மட் பாத்ரத்தைப் போல் பொடியாக்கி தள்ளு வர். ஹிரண்யாக்ஷனுக்கு ஸமமான எனது புத்ரர்கள் ஒவ்வொருவருக்கும் மஹா வீரர்களான நூறு நூறு புத்ரர் களிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான நமது அக்ஷௌஹிணீ பதிகள் கோபங்கொண்டால் எதிரிகளின் ஸேனைகளில் சாம் பல்தான் மிஞ்சும். ஹா! அபலையான இச்சிறுமி எம்மாத் திரம்! இவளது மாயா விலாஸம், மஹா மாயாவிகளான நமது சேனைத் தலைவர்களுக்கு ஒரு சிறிய மாம்ஸ துண் டத்திற்குச் சமானமாகும். மனக் கவலையை விட்டொழி''

என்று இவ்வாறு கூறி, ஆஸநத்தை விட்டெழுந்து, பண்டா ஸுரன் ஆயிரம் ஸேனைக்கதிபனான குடிலாக்ஷனெனும் ஸேநாபதியைப் பார்த்து "ரே! ஸேனைகளை ஸந்நாஹம் செய். நம் நகரத்தின் நாற்புறங்களிலும் சேனைகளை நிறுத்து. துர்க்கங்களைப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய். சஸ்திரங்களை எறியும் யந்திரங்களை நூற்றுக் கணக்காகச் சேகரி. புரோஹிதர்களைக் கொண்டு ஆபிசார ஹோமம் செய்! ஆயுதங்களைத் தயாராக வைத்துக்கொள். விரைவில் யுத்தம் நடைபெறும். தக்க சேனையுடன் ஒரு ஸேநாபதியை முன்னே நிறுத்து. அவன் வருபவளுடன் போர்புரிந்து அவளைத் தலை மயிரைப் பிடித்திழுத்து வரட்டும்" என்று கூறி அந்தப்புரம் சென்றான். யுத்தத்திற்குவரும் லலிதையின் ஸேநாத்வநி அஸுரர்கள் காதில் விழ்ந்து மிக்க பயத்தை உண்டு பண்ணிற்று.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று. 104 சுலோகங்கள்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

பண்டாஸுர ஸேநாஸந்நாஹம்.

ஹயக்ரீவர்:—ஸ்ரீ லலிதா தேவியின் ஸேனையிலிருந்து கிளம்பும் சப்தம் மூவுலகையும் செவிடுபடும்படி செய்தது. தைத்ய ஸேனைகளது த்வநியோ ந்ருஸிம்ஹனது கர்ஜனை போல் ஆகாயமளாவிற்று. சக்தி ஸேனைகளைக் கண்டு அடங்காக் கோபங் கொண்ட அஸுரர்கள் படையிலிருந்து ஒருவன் விசித்திரமான ரத்ன கவசம்பூண்டு ரோஹண பர்வதம் நடந்து வருவது போல் வந்தான். காளராத்திரி போன்ற கத்தி யேந்தி மற்றொருவன் எதிர்த்தான். சிலர் குதிரைகளின் மீதும், சிலர் யானைகளின் மீதும் ஏறிக்கொண்டு பட்டஸம் முத்கரம், பிதுரம், பிண்டிபாலம், த்ருகணம், முஸுண்டி, கதை, முஸலம், சதக்நீ, த்ரிசிகம், விசிகம், அர்த்தசக்ரம், மஹாசக்ரம், வக்ராஸ்த்ரம், உரகாநநம், பணி சீர்ஷம், தண்டம்,

க்ஷேபணீ, வஜ்ரபாணம், கரட்டம், யவமத்யம், முஷ்டிமத்யம், வலயம், கண்டலம், கட்டாரம், பரசு முதலிய ஆயுதங்களைக் கரங்களிலேந்தி வந்தனர். ஒட்டை, கழுதை, ஓநாய், நாய், காக்கை, கழுகு, புலி, ஸிம்ஹம், சரபம், பேருண்டம், பன்றி, ப்ரேதம், முதலிய வாஹனங்களிலமர்ந்து பலர் போருக்கு வந்தனர். குடிலாக்ஷனென்னும் ஸேனாதிபதி துர்மதனென்னும் அஸுர வீரனை அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன் தேவியோடு போர் புரிய அனுப்பினன். அவனுக்கு முன்னே படஹ வாத்யத்தை வாசித்துக் கொண்டு அட்டஹாஸத்துடன் துர்முகன் சென்றான்.

சூன்யக நகரத்தின் கிழக்கு வாயிற்படியில் பத்து அக்ஷௌஹிணியுடன் தாளஜங்கனும், தென்திக்கில் பத்து அக்ஷௌஹிணியுடன் தாளபுஜனும், மேற்கில் அவ்வளவு படையுடன் தாளக்ரீவனும், வடதிசையில் அப்படியே தாள கேதுவும் ரக்ஷகர்களாக நிறுத்தப்பட்டனர். கோட்டைச் சுவரைச் சுற்றி கடிசீர்ஷகமெனும் வீடுகளில் பத்து அக்ஷௌஹிணீ ஸேனைகள் மண்டலமாக நிறுத்தப்பட்டன. துர்மதனனுப்பப்பட்டதையும், மேற்கூறிய ஏற்பாடுகளையும் குடிலாக்ஷன் பண்டனிடம் விக்ஞாபித்துத் தானும் ஸேனையுடன் யுத்த ஸந்நத்தனானான்.

துர்மத வதம்.

துர்மதன் தூண்டுவதால் ராக்ஷஸ ஸேனை, சக்தி ஸேனையிலுள்ளோரைக் கத்தியினால் எதிர்க்க ஆரம்பித்தனர். சக்திகளும் தன் யஜமானியின் உத்தரவுப்படி தைத்ய ஸேனையைத் தாக்கினர். இரு ஸேனைகளும் கைகலந்து யுத்தம் செய்தபோது புழுதிகள் ஆகாயத்தைச் சூழ்ந்தன. யானைகளின் காதுகளாலும், குதிரைகளின் மூச்சுகளாலும் ரேணுக்கள் ஆகாயத்தில் பரவி சுழன்று சுழன்று சென்றன.

அரக்கரது அட்டஹாஸத்தைக் கண்டு அடங்காச் சினம் கொண்ட ஸம்பத்கரீ தன்னைப் போன்ற பல சக்திகள் சூழத்

தங்கள் வாஹநங்களான அச்வங்களாலும் யானைகளாலும் அஸுர ஸேனையைத் தாக்கினள். ரணகளத்தில் எங்கும் தூளிகள் பறந்தன. பேரிகள் முழங்கின; ரத்த ஆறுகள் ஓடின; பாணங்களால் அறுபட்ட த்வஜங்களும், தலைகளும், நாலா பக்கமும் சிதறி விழுந்தன. ரத்தத்தினல் சிவந்ததும், கீழே தள்ளப்பட்ட வெண்குடைகளால் நிறைந்ததுமான யுத்தகளம் ப்ரளயகால ஸந்த்யாகாலம் போல் விளங்கிற்று. இங்ஙனம் முறியடிக்கப்பட்ட அஸுர ஸேனை மிகக் கோபங்கொண்டு சக்திகளைத்தாக்க அவர்கள் அதி பயங்கரமான ஆயுதங்களால் தைத்யர்களது சிரங்களை அறுத்துக் குவித்தனர். தேவிகளது உக்ர பராக்ரமத்தை ஸஹியாமல் தைத்தியர் கூக்குரலிட்டு ஓட ஆரம்பித்தனர். இதைக் கண்டு துர்மதன் ஒட்டை மீதேறி வந்து பல்லாயிரக் கணக்கான சரங்களால் ஸம்பத்கரீயின் ஸேனையை முறியடித்தான். தனது ஸேனை அஸுரர் படையால் அசைவற்றிருப்பதைப் பார்த்து ஸம்பத்கரீ ரண கோலாஹலமெனும் குஞ்ஜரத்தின் மீதேறிக் கையில் கோதண்டத்தை எடுத்துச் சரங்களை வர்ஷமாக வர்ஷித்தாள். அவள், தான் சரங்களை எடுப்பதையும், தொடுப்பதையும், விடுவதையும், பிறர்காண முடியாமல் அதி விரைவாக யுத்தம் செய்தாள். அரக்கனும் சினங்கொண்டு மிகக் கடுமையாகப் பாணங்களை வர்ஷித்தான். இருவர்களது பாணங்களும் ரீங்காரத்துடன் கிளம்பி ஸூர்யனை மறைத்து ரணகளத்தை இருள் சூழும்படி செய்தன. பாணங்கள் ஒன்றோடொன்று உறைவதாற் கிளம்பின தீப்பொறிகள் மினுமினுப் பூச்சிகள் போல் தோன்றின. தேவியினது வாஹநமான ரண கோலாஹலம் என்னும் கரீந்த்ரன் துதிக்கையாலும், கால்களாலும், கூரிய தந்தங்களாலும், வாலாலும், பிளிறுதலாலும், பல பகைவரைக் மிக ஸாமர்த்தியமாய்க் கொன்றது. துர்மதன் மிக ஆக்ரஹத்துடன் ஒரு பாணத்தால் ஸம்பத்கரியின் மகுடத்திலுள்ள ஒரு மணியைத் தரணியில் தள்ளினன். கோபத்தால் கண்கள் சிவக்க, உதடு துடிக்கப் பல பாணங்களைத் தேவி அவன் மார்புமீது விட்டாள். அவைகளாலடிபட்ட துர்மதன்

அவனிமீது விழுந்து உடனே உயிரை விட்டான். சக்தி ஸைன்யங்கள் அஸுர ஸேனைகளிலுள்ள இதர ப்ரமுகர்களைக் கொன்று வீழ்த்தினர். எங்கும் கூக்குரலுண்டாயுற்று. அடிபட்டுத் தப்பிப் பிழைத்த சிலர் சூன்யக நகரத்திற்கு ஓடிப் பண்டனிடம் முறையிட்டனர்.

அச்வாருடை குருண்டனைக் கொல்லுதல்.

அதைக் கேட்ட தாநவேச்வரன் கோபங் கொண்டு கத்தியை உதறி அருகிலுள்ள குடிலாக்ஷன் என்னும் ஸேநாபதியைப் பார்த்து, "தேவராலுமஸுரராலும் வெல்ல முடியாத, நமது துர்மதன் கேவலம் அபலையான அத்துஷ்டையால் எப்படிக் கொல்லப்பட்டான்? இது தைய்வச் செயலோ? அவளை ஜயித்து இழுத்து வரும்படி ஸேநாபதி குருண்டனை அனுப்பு" என்றான். அங்ஙனமே குருண்டன் இருபது அக்ஷௌஹிணீ ஸேனையுடன் யுத்த ஸன்னத்தனாய் பண்டனையும் பிரதம ஸேநாதிபதியையும் வணங்கி உத்திரவு கேட்டான். அவனைப் பார்த்து குடிலாக்ஷன், "நீ மாயையிலும் கபட யுத்தத்திலும் மிகச் சிறந்தவன். அந்த ஸ்த்ரீயை விரைவில் ஜயித்து வா" என்று அரசன் முன்னே கட்டளையிட்டான். துர்மதனது ஸஹோதரனான குருண்டன் மிக தீரனாய்க் கோபத்துடனும் சோகத்துடனும் ரண களஞ் சென்று வில்லை வளைத்து நாண்பூட்டி எண்ணிறந்த பாணவர்ஷங்களைச் சக்திகள் மீது வர்ஷித்தான். அன்றியும் ஸம்பத்கரியை நோக்கி, "ஏ பாபியே! என் தம்பியைக் கொன்று வீணே கர்வங்கொள்கிறாய். இந்த நிமிஷத்திலே எனது கூரிய பாணங்கள் உன்னை யமலோகமனுப்பப் போகின்றன. அதிமிருதுவான உனது உடலிலிருந்து பெருகுகின்றதும் ருசியானதும், ரண களத்தில் அபூர்வமானதுமான ஸ்திரீயின் உதிரத்தை ரண பூதனைகள் பருகட்டும். தம்பியைக் கொன்றதற்கேற்ற பயனைப் பெறப் போகிறாய், எனது பாகுபலத்தைப் பார்" என்று கூறித் தனது ஸேனையை உத்ஸாஹப்படுத்தினான். அவனது பரிவாரத்தை அழிக்கச்

சக்திகள் கிளம்பும்போது அச்வாரூடா என்பவள் வந்து, "ஸகீ ஸம்பத்கரீ! அன்புடன் எனது சொல்லைக் கேள். இவனோடு நான் யுத்தம் செய்ய எனக்கு உத்தரவு கொடு. ஒரு க்ஷணம் பொறுத்திரு. நானிவனைக் கொல்கிறேன். தோழியான என் வேண்டுகோளை மறுக்காதே" என்று கூறினாள். இதைக் கேட்டு ஸம்பத்கரீ புன்னகையுடன் தன் படையைத் திருப்பி விட்டாள்.

ஸேனைக் கடலின் அலைபோன்ற அதிவேகமுள்ள குதிரைமீதேறிய சக்திகள் பல சூழ அச்வாரூடை அரக்கனுடன் ஸமர் செய்யக்கிளம்பினாள். அவளது ஸகிகள் குதிரைகளைத் திருப்புவதிலும், ஓட்டுவதிலும் பற்பல வகையான நடைகளிலும், கை கால்களால் அவைகளைத் தொட்டு உத்ஸாஹப் படுத்துவதிலும், அச்வத்தின் உள்ளத்தை உணர்வதிலும் மிக ஸமர்த்தர்கள்.

குருண்டனது தூண்டுதலால் தைத்யர்கள் பூர்ண பலத்துடன் இவர்களை எதிர்க்க, சக்திகளும் அஸுரர்களைத் தாக்க இருவர்களுக்கும் மிக பயங்கரமான யுத்தந் தோன்றிற்று. அபராஜித யெனும் அச்வரத்நத்தின்மீதமர்ந்து அச்வாரூடை குருண்டனை எதிர்த்துச் சென்றாள். அவள், பின்னலசைய, சந்த்ரகலை சலிக்க, மணிவில்லைக் கையிலெடுத்து பொற்பிடிகளுள்ள சரங்களை வர்ஷித்தாள். கோபங் கொண்ட குருண்டன் தேவி மீது பல பாணங்களை வர்ஷித்தான். தேவியின் குதிரை கூரிய குளம்புகளால் பல சத்ருக்களைக் கொன்றது. தனது கர்ஜனையால் பலர் மூர்ச்சையடையும்படி செய்தது. தேவி தனது திவ்யமான பாசாயுதத்தை பிரயோகிக்க அதிலிருந்து பாம்பு போல் பல்லாயிரம் பாசங்கள் தோன்றி பகைவர்களைக் கட்டிக் கட்டி மூர்ச்சை அடையும்படி செய்தன. தன் ஸேனைக் கட்டுண்டதைக் கண்டு குருண்டன் தேவியினது மணிமயவில்லின் நாண் கயிற்றை அறுத்தான். தேவி வில்லை எறிந்து விட்டு அங்குசத்தினால் அவன் மார்பைப் பிளந்தாள். இடிவீழ்ந்த மரம் போல் குருண்டன்

பூமியில் வீழ்ந்திறந்தான். அந்த அங்குசத்திலிருந்து தோன்றிய சில பூதனைகள் பாசத்தால் கட்டப்பட்ட பகைவரைப் புஜித்து மறைந்தன. இதில் தப்பிப்பிழைத்த சிலர் இருபது அக்ஷௌஹிணீ சேனைகளுடன் குருண்டன் கொல்லப்பட்டதைப் பண்டாஸுரனிடம் தெரிவித்தனர். இதைக் கேட்டு அவன் ஸர்ப்பம்போல பெருமூச்சு விட்டான்.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று. 110 சுலோகங்கள்.

இருபதாம் அத்தியாயம்.

கரங்கன் முதலிய ஐந்து ஸேனாபதிகளின் வதம்.

ஹயக்ரீவர்:—குடிலாக்ஷனைப் பார்த்து பண்டன் "ஸ்வப்நத்திலும் நினைக்காதது இது! எவரும் சங்கிக்காதது! முன் கேட்கப்படாதது! மஹாபலிஷ்டர்களான இரு ஸஹோதரர்களும் ஒரு பெண்ணால் கொல்லப்பட்டார்கள்! மாயாவிநீயான அவள் மஹிமை இது. நூறு அக்ஷௌஹிணி சேனையுடன் கரங்கன் முதலிய ஐந்து ஸேனாபதிகளை அனுப்பு. அவர்கள் யுத்தத்தில் மிகக் கொழுத்தவர்கள்; உடலைத்தியாகம் செய்பவர்கள்; அவளை நிச்சயமாக ஜயிப்பார்கள்" என்றான். குடிலாக்ஷன் உத்தரவுபடி அவர்கள் அரசனைப் பணிந்து அவரது கடாக்ஷத்தால் உத்தரவுயிடப்பட்டு கோபத்தால் ஒன்றுமறியாமல் தீயில் விழுபவர்போல் கிளம்பினார்கள். கஜங்களது கர்ஜனையும் குதிரைகளின் கோஷமும் வீரர்களது வீராட்ட ஹாஸமும் ரத சக்ரங்களது சப்தமும் வானையளாவிற்று. தூசு தூளிகள் பரவினதினால் எவ்வளவு ஸேனை என கணக்கிடமுடியாமற் போயிற்று. அரவக் கொடி, மத்ஸ்யக் கொடி முதலிய த்வஜங்கள் அசைந்தன. இதைக் கண்ட வானவர், சக்தி ஸேனைக்கு பங்கமுண்டாமோ என அஞ்சினர். கரங்காதிகள் ஸர்ப்பிணீ எனும்

மாயையைப் படைத்தனர். கறுத்த உருவமும் தொங்கும் உதடுகளுமுள்ள அது பல்லாயிரக் கணக்கான பாம்புகளை அணிந்து, சக்திகள் முன்தோன்றி அவர்கள் மனம் நடுங்கும் படி செய்தது. இரு ஸேனைகளுக்கும் மிகக் கடுமையான பயங்கர யுத்தம் நிகழ்ந்தது. பிணங்கள் மலைபோல் குவிந்தன. ரத்த ஆறுகள் பல ஓடின. ஆயுதங்களது உறைச்சலால் அக்நி தோன்றி பளீர் பளீரெனப் பிரகாசித்தது. அறுபட்டு பூமியில் வீழ்ந்து கிடக்கும் உடல்களிலும் தலைகளிலும் விரைந்து செல்லமுடியாமல் ரதங்கள் அசைவற்று நின்றன. காது செவிடுபட வீரவாதங்கள் எழும்பின.

ஸர்ப்பிணியால் படைக்கப்பட்ட தக்ஷ கார்க்கோடக துல்யர்களான ஸர்ப்பங்கள் தாரதம், வத்ஸநாபம், கால கூடம், ஸௌராஷ்டிரம், ப்ரஹ்ம புத்ரம், ப்ரதீபநம், சௌக்லி கேயம் முதலிய கொடிய விஷங்களைக் கக்கின. கறுநாகங்கள் இரு தலைகளுடன் மிக பயங்கரமாக ஸர்ப்பிணியின் இரு கண்களிலிருந்து கோடிக் கணக்காகப் படைக்கப் பட்டன. சில ஸர்ப்பங்கள் பல நிறங்களுள்ளவைகள். நான்கு தலை களுள்ளவைகள், மூக்கிலிருந்தும், காதிலிருந்தும், வாயி லிருந்தும், ஸ்தநங்களிலிருந்தும், நாபியிலிருந்தும், முன்னும் பின்னும் தலையுடன் கூடி பறபல வர்ணமுள்ள மிக பயங் கரமான கோடி கோடிக்கணக்கான நாகங்கள் தோன்றி விஷ ஜ்வாலையை கக்கிக்கொண்டு சக்திகளின் கை கால்களைக் கட்டி ஹிம்ஸித்தன. அவைகளை அடிக்கும்போது ஒன்று நூறாகக் கிளம்பின. விஷ ஜ்வாலையால் சக்திகள் கொளுத்தப்பட்ட னர். என்ன செய்வதென்று தெரியாது தேவிகள் திகைத்து நிற்க, நூறு கழுதைகள் பூட்டிய ரதத்திலிருந்து கரங்கன் பிரளயகால மேகம் போல் சரங்களை வர்ஷித்தான். காக வாசிதனெனும் மற்றோர் ஸேநாபதி, கஜத்தின் மீதிருந்து சக்ரத்தால் தாக்கினன். வஜ்ரதந்தனெனும் மற்றொரு ஸேநாபதி ஒட்டைமீதிருந்து வஜ்ரங்களால் அடித்தான். வஜ்ரமுகன் கழுதை மீதிருந்தும், வஜ்ரலோமன் கழுகுகள் பூட்டிய ரதத்திலிருந்தும் சரங்களால் சக்தி ஸேனையைத்

தாக்கினர்கள். ஒரு புறத்தில் ஐந்து ஸேனைத் தலைவர்களும் மற்றொரு புறத்தில் அரக்கராது நூறு அக்ஷௌஹிணீ ஸேனைகளும், இன்னுமொரு புறத்தில் க்ஷணத்திற்கு க்ஷணம் கோடிக்கணக்கான விஷ ஸர்ப்பங்களைப் படைக்கும் ஸர்ப்பிணியுமாக சக்திகளைத் தாக்க, கருடாரூடையான நகுலீ எனும் சக்தி ஸ்ரீ லலிதையின் தாலுவிலிருந்து தோன்றி ஸர்ப்பிணீ முனனின்றாள். ஸுமேருமலை நடந்து வந்தது போல் கருடன் யுத்தகளத்தில் ஸஞ்சரித்தார். கோபத்தால் சிவந்த கண்களுள்ள நகுலா தேவி வாயைத் திறக்க, முப்பத்திரண்டு பற்களிலிருந்தும் முப்பத்திரண்டு கோடி ஸ்வர்ணமான நகுலங் (கீரி)கள் தோன்றின. அவை வாலை உதறிக் கொண்டு கூரிய நகங்களாலும் பற்களாலும் ஒரு ஸர்ப்பத்திற்கோர் கீரியாகச் சென்று மாய ஸர்ப்பங்களைக் கண்ட துண்டங்களாகக் கடித்தெறிந்தன. ஒன்றுகூட மிகுதியில்லாமல் இறந்து கிடக்கும் அவைகளின் தலைகளிலுள்ள மாணிக்கங்கள் நகுலங்களது கோபாக்னி போல் விளங்கின. கோபத்துடன் ஸர்ப்பிணி எதிர்த்து வர, நகுலேச்வரீ க்ரூரமான காருடாஸ்த்ரத்தை ப்ரயோகித்தாள். அது ஸர்ப்பிணியின் உடலில் புகுந்து மாயையை அகற்றி ஸர்ப்பிணியையும் லயமாக்கி விட்டது.

இதைக்கண்டு அடங்காக் கோபங் கொண்ட ஐந்து ஸேனாபதிகளும் ஒன்று சேர்ந்து ஒரே முகமாக சரவர்ஷங்களை நகுலேச்வரி மீது வர்ஷித்தனர். அவள் ஒருவளாகவே கருடாரூடையாய் நின்று ஐந்து வீரர்களையுந் தாக்கினள். பட்டஸம், முஸலம் முதலிய ஆயுதங்களால் தைத்யர் நகுலங்களை அடிக்க அவைகள் வஜ்ரம் போன்ற கூறிய பற்களால் அஸுரர்களது மர்மஸ்தானங்களில் கடித்தன. ஹாஹாகாரத்துடன் தைத்யரிதைப் பொறுக்க முடியாமல் சிலர் ஆகாயத்தில் மறைந்தனர். அங்கும் நகுலங்கள் சென்று காது மூக்கு வாய் முதுகு முதலிய இடங்களில் கடித்தன. அவர்கள் தலை மீது திடீர் திடீரென குதித்தன. சிறிய வடிவமெடுத்து மூக்கிலும் காதுகளிலும் புகுந்து கடித்தன. இங்ஙனம் தன்

ஸைன்னியர் துன்பப்படுவதைக் கண்டு கரங்கன் முதலியவர் பல பாணவர்ஷங்களால் நகுலங்களின் பற்களை உடைத்தனர். வாலை அறுத்து உடலைப் பிளந்தனர். அஞ்சி ஓடிய நகுலங்கள் நகுலேச்வரியைச் சூழ்ந்தன. மஹா கோபத்துடன் அவள் எங்கும் ஜ்வலிக்கும் முகமுள்ள அக்ஷீண நகுலமெனும் அஸ்த்ரத்தை பிரயோகித்தாள். அதிலிருந்து கோடிக்கணக்காக வஜ்ரம்போன்ற சரீரம் நகம் தந்தம் ரோமம் பலம் உள்ளவைகளான நகுலங்கள் பிறந்தன. அவைகள் ராக்ஷஸஸேனையில் புகுந்து கடித்துக் கீறிப் பூறி மேல் விழுந்து நூறு அக்ஷோஹிணியில் பலரைக் கொன்று வெகு சிலரையே மிகுதியாக்கிவிட்டது. மிக்கப் பயத்துடனும் கோபத்துடனும் ஸேநாபதிகள் கடுமையாகப் போர் தொடுத்தனர். கருடனுடன் நகுலேச்வரி வேகமாக வந்து அஸுர ஸேனையின் மத்தியில் குதித்து பட்டஸத்தால் கரங்கனுடைய சிரத்தை அறுத்தாள். அதேபோல் தாவித் தாவி மற்ற நால்வர் தலைகளையுங் கத்தியினலறுத்துத் தள்ளினள். இத்தகைய பராக்ரமத்தைக் கண்டு களித்த ச்யாமளாதேவி நகுலாதேவியைக் கொண்டாடி தனது அங்கத்தில் ஒரு தேவதையாக இருக்கும் பாக்யத்தைத் தந்தாள். மிகுதியுள்ள ஸைன்னியர் நடு நடுங்கி ஓடி நடந்ததைப் பண்டனிடங் கூறினர். அதைக்கேட்டு அஸுரேந்திரன் அடங்காக் கோபங் கொண்டான்.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று. 101 சுலோகங்கள்.

இருபத்தொன்றும் அத்தியாயம்.

வலாஹாதி ஏழு ஸேநாபதிகளின் வதம்.

ஹயக்ரீவர்:—சித்தங் கலங்கிய பண்டன் குடிலாக்ஷனை நோக்கி "ஸேநாபதே! நமக்கேதோ கெட்டகாலமிது; ஸர்ப்பிணி மாயாபலத்தைக்கொண்டு தேவர்களை வென்ற கரங்கன்

முதலிய ஐந்து வீரர்கள் மாயாவினியான அந்த பாபியால் கொல்லப்பட்டனர். வலாஹன் முதலிய ஏழு ஸேனாபதிகளை முன்னூறு அக்ஷௌஹிணீ ஸேனையுடன் அனுப்பு. லலிதை யின் ஸேனையை முறியடித்து விட்டு அவர்கள் திரும்பி வரட்டும். கீகஸையின் கர்ப்பத்தில் பிறந்த இம் மஹாவீரர்கள் ஜயமின்றி திரும்பாரல்லவா?" என்று கூறினன், வலாஹகன், ஸூசிமுகன், விகடாநநன், கராளாக்ஷன், கரடகன், பால முகன், விகர்ணன் ஆகிய இவ்வேழு வீரர்களும் ஒரு தாய் வயற்றில் பிறந்த ஸஹோதரர்கள். அன்யோன்ய அன்புடைய வர்கள். முன்னொரு சமயம் ஏழு லோகங்களையும் கலக்கினவர் கள். அவர்கள் ராக்ஷஸேச்வரனை வணங்கி ரணகளஞ் சென்றனர். பாசம் முஸலம் முதலிய ஆயுதங்களைத் தாங்கிச் சக்திகளும் தைத்யஸேனை எனும் கடலைக் குடிப்பவர் போல் எதிர்த்து வந்தனர். "ஏ பாபிகளே! துஷ்டை களே! அதமப் பெண்களே! மாயையால் ஏமாற்றும் உங்களை உக்ரபாணங்களால் யம லோகத்திற்கனுப்புகிறோம்" என்று அரக்கர் வீராட்டஹாஸத்துடன் தேவிகள்மீது பாணங்களை எறிந்தனர். ஒரு சக்தி சத்ருவின் கழுத்தை அறுத்து அங்கிருந்து வரும் ரத்தப் பிரவாஹத்தைக் குடிக்கவரும் கழுகுமண்டலங்களால் யமனுக்குக் குடை பிடித்தாள். மற்றொருவள், அரக்க ரனுப்பிய சக்த்யா யுதத்தை சக்தியால் முறித்தாள். கஜாரூடையான ஒரு சக்தி அஸுரன் மார்பில் தன் வாஹநத்தைக் கரைமுட்டி விளையாடச் செய்தாள். ஒருவள் ஹஸ்தியின்மஸ்தகத்தைப் பிளந்தாள். ஒருவள் யானையின் துதிக்கையை யறுத்து பெரும் பன்றி போலாக்கினள். ஒருவள் சத்ருவின் தநுஸ்ஸை முறித்தாள். ஒருவள் முத்கரத்தால் ரதசக்ரத்தைத் தூளாக்கினள். பாலும் நீரும்போல் இருஸேனைகளும் ஒன்று கலந்தன. கத்தியோடு கத்தியும் கதையுடன் கதையுங் கலந்து மிக பயங்கரமாக போர் நடந்தது. வலாஹகன் அக்கியிடமிருந்து பிறந்ததும், வஜ்ரம் போன்ற மூக்குள்ளதும், காலதண்டம் போன்ற காலுள்ளதும், ஸம்ஹாரகுப்தனென பெயர் பூண்டதுமான ஒரு பெரிய கழுகுமீதமர்ந்து யுத்தஞ்செய்தான். அது அரைக்

குரோசமுள்ள சிறகுகளை விரித்துக்கொண்டு, கொள்ளிக் கட்டைபோன்ற கண்களால் பார்த்து, அக்நிகுண்டம் போன்ற வாயைத்திறந்து சக்திஸேனைகளைப் பக்ஷித்தது. தனுஸை உதறிக்கொண்டு அதன்மீதுள்ள வலாஹகன் பர்வதத்தின் மீதமர்ந்த மேகம்போல் விளங்கினன். ஸூசிமுகன் காக்கை வாஹநத்திலமர்ந்து யுத்தஞ்செய்தான். அது ஒரு க்ரோச தூரம் விசாலமான சிறகுகளாலும் கூரிய கால்களாலும் முகத்தினுலும் சக்திகளை ஹிம்ஸித்தது. பாலமுகன் மலை போன்ற கழுகுமீதேறி யுத்தஞ் செய்தான். விகர்ணன் பேருண்டமென்னும் பக்ஷி மீதும், விகடாநநன் கோழி மீதும் அமர்ந்து ஸமர் செய்தனர். கராளாக்ஷன் தபஸ்மசாந மந்த்ரத்தால் கிடைத்த அகோர முகமான ப்ரேத வாஹநத்தின் மீதமர்ந்து போர் புரிந்தான். கரடகன் வேதாள வாஹநத்திலிருந்து சண்டை செய்தான். ஏழு கடல் போன்ற இவ்வேழு வீரர்களும் சக்தி ஸேனை களைக் கலக்கினர்கள். அவர்கள் முன்னம் ஸூர்யனைப் பல்லாண்டு தவத்தால் ஆராதித்தனர். அவர் ப்ரத்யக்ஷ மாகி யாது வரம் வேண்டுமென்று வினவ, "யுத்த காலத்தில் நீர் எங்கள் கண்களில் வீற்றிருந்து சத்ருக்களைத் தேஜஸால் கொளுத்தி ஸ்தம்பிதர்களாகச் செய்ய வேண்டும். அவர் களது ஆயுதங்களும் அசைவற்றிருக்க வேண்டும். அவர் களை எளிதில் நாங்கள் ஜயிக்க வேண்டும்" என்று வரம் கேட் டனர். அங்ஙனமே அவர் அளிக்க, அதை இச்சண்டையில் அவர்கள் ஸ்மரித்தனர். இந்த பாநுவின் ஸான்னித்யத்தினல் சக்திகளும் சக்திகளது ஆயுதங்களும் அசைவற்று நின்றன. அஸுரர்கள், ஸந்தோஷமடைந்து எண்ணிறந்த பாணங்களை வர்ஷித்து சக்திகளது உடலிலிருந்து ரத்தம் பெருகும்படி செய்தனர். சக்திகள் சிவந்த துளிர்களுள்ள கொடிபோல் நின்றனர். ஹாஹாகாரம் செய்து ஸ்ரீலலிதா தேவியைச் சரண் புகுந்தனர்.

ஸ்ரீ தேவியின் ஆணையால் தண்டநாதையின் ப்ரத்யங்க ரக்ஷிணியான திரஸ்கரிணிகா என்பவள் தோன்றினள்.

அவள் தமோலிப்த மெனும் பெயர்கொண்ட விமாநத்தின் மீதேறி சக்திகளுக்கு அபயமளித்தாள். அவள் உடல் கறுப்பு. கறுத்த கவசமணிந்து கறுங்குதிரை பூட்டிய விமாநத்திலிருந்து மோஹனமெனும் வில்லே வளைத்து ஸிம்ஹத் துவனிடன் கறுநாகம்போன்ற பாணங்களை வர்ஷித்தாள். வலாஹகாதிகள் உக்ரமாக யுத்தஞ்செய்ய, தண்டநாதையின் உத்தரவுபடி அவள் அந்தாஸ்த்ரத்தைப் பிரயோகித்தாள். அதனல் அரக்கர்கள் பார்வையிழந்து சஸ்த்ரங்களை உபயோகிக்க சக்தியற்றவர்களாயினர். சக்திகள்கூட அவ்வஸ்த்ரத்தின் மஹிமையால் சற்று அசைவற்றிருந்து, பிறகு கோலாஹலத்துடன் சத்ருக்களைத் தாக்கினர். அன்றியும் "ஒ திரஸ்கரிணி! ஸாது! ஸாது! ஸரியான ஸமயத்தில் சத்ருக்களின் கண்களை மறைத்தாய்! எவராலும் ஜயிக்க முடியாத எங்களையே ஸ்தம்பிக்கும்படிச் செய்த நீயே இவ் வேழு துஷ்டர்களையும் கொல்வாய். இதைக்கேட்டு ஸ்ரீ லலிதாதேவி உன்மீது ஸந்தோஷமடைவாள். அவ்விதமே மந்திரிணி, தண்டிநீ இருவர்களுங்கூட ஆனந்தமடைவார்கள். நாங்கள் அவர்களுடைய ஸேனைகளை நாசஞ் செய்கிறோம்" என்று சக்திகள் திரஸ்கரிணிகா தேவியை உத்ஸாஹப்படுத்தினர்.

உடனே திரஸ்கரிணி மிகப் போராவேசங்கொண்டு, வலாஹகனுடன் யுத்தஞ்செய்து சிறிது நேரத்திற்குள் அவன் தலைமயிரைக் கரத்தால் பிடித்திழுத்துக் கத்தியினல் அவன் சிரத்தை யறுத்துத் தள்ளினள். அவனது வாஹனத்தையும் கொன்றாள். அதேபோல் அவனுடன் வந்த ஸஹோதரர்கள் அறுவர்களையும் வாஹநங்களுடன் கொன்று வீழ்த்தினள். சக்திகள் அவர்களுடைய ஸேனைகளை அனைத்தையும் கொன்றுக் குவித்து ரத்த நதிகள் ஓடும்படி செய்தார்கள். அந்த திரஸ்கரிணீ எனும் மாயையின் செயல் மிக ஆச்சரியமாக இருந்தது. ஒரு சிலர், உயிர் தப்பிப் பயந்தோடிக் கூக்குரலுடன் பண்டனிடம் சென்றுக் கதறினர். தண்டநீ,

திரஸ்கரிணியை மிகக் கொண்டாடினுள். ஏனைய சக்திகளும் தலைகளையசைத்து ஸாது, ஸாது என்றுக் கூறிப் புகழ்ந்தனர்.

இருபத்தோரும் அத்தியாயம் முற்றிற்று. 104 சுலோகங்கள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

விஷங்காதிகள் ஓடுதல்.

ஹயக்ரீவர் :—தபோபல முள்ள இவர்களும் கொல்லப்பட்டதைக்கேட்டு, பண்டன் கிருஷ்ண ஸர்ப்பம்போல் பெருமூச்சு விட்டு, தன் இரு ஸஹோதரர்களை ஏகாந்தமாக யோசிக்க அழைத்தான். யுவராஜனை விசுக்ரன் தன் தம்பி விஷங்கனையும், குடிலாக்ஷன் முதலிய மிக ஆப்த மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். பண்டன் அவர்களை நோக்கி, "ஆச்சர்யம்! அஸுர வம்சத்திற்கு அழிவுகாலம் நெறுங்கி விட்டது. அதற்கேற்ற முறையில் தெய்வபலமு மிறங்கி விட்டது! இனி தாமதம் கூடாது. நமது கிங்கரர் பெயரைக்கேட்ட மாத்திரத்தில் வானவரனைவரும் பயந்தோடுவர். அத்தகைய நமக்கே பெருங்கேடு விளைந்துள்ளது. விதியின் பயனை யாரால் வெல்ல முடியும். அது, பலமுள்ளவரை நபும்ஸகமாகவும், தனிகனை தரித்திரனுகவும், தீர்க்காயுளை அற்பாயுஸாகவும் செய்கிறது. நமது புஜவலிமைக்கு அபலையான இச்சிறுமி ஈடாகுவாளோ! திடீரென்று எதிர்பாராமல் நம்மேல் இடி விழுந்து விட்டது. ஸர்ப்பிணி எனும் மாயாபலம் பொருந்தியவர்களும், எதிரியால் வெல்ல முடியாத பராக்ரமமுடைய நமது ஸேனைத்தலைவர்களும் அப்பெண்ணுல் கொல்லப்பட்டனர். சூரியனிடம் அரியவரம் பெற்று தேவர்களை விழுங்கிய வலாஹகாதிகள் வீழ்த்தப்பட்டனர். மாயையால் திமிர்பிடித்த ஒரு நங்கை நம்மைக்கொல்வ தென்றுல் நமது பராக்ரமம் வீணேயாகும்.

இதைப்பேச என்நாவும் எழவில்லை. ஸ்த்ரீயா எனது ஸேனை களை அழிப்பது? அந்த மதங்கொண்ட பெண்ணை வேருட னழிக்க வேண்டும். சாரர்கள் மூலமாய், ஸேனையின் முன் வராமல் பின்னிருக்கும் லலிதையே மூலகாரணம் என்றறி கின்றேன். அவளைக்காக்க பரிமித ஸேனைகள் ஆங்கிருக் கின்றன. சுற்றுப் புறத்திலிருந்து சத்ருவை வெல்வதில் விஷங்கன் மிக ஸமர்த்தன். ஆகையால் அவன் ரஹஸ்ய மாக அந்த துஷ்டை இருக்கிற இடஞ் செல்லட்டும். அவன் பின்னால் பதினைந்து அக்ஷௌஹிணீ ஸேனைகள் சென்று ஸமயத்தில் ஸஹாயம் செய்யட்டும். வேர் போன்ற அவள் ஒருவளைக் கொன்றால் எல்லா சக்திகளையும் கொன்றதாகும். அவள் எல்லோருக்கும் பின்னால் பத்துயோஜனை தூரம் விஸ்தாரமான ரதத்தில், முத்துக்குடை பிடிக்க, நான்கு சாமரங்கள்வீச, இடையில் வீற்றிருப்பாள். அவளுக்கு ஸ்த்ரீகளே ஸஹாயமாயிருப்பதால் எளிதில் அவளை ஜயிக்க லாம். விஷங்கனுக்குத் துணையாக தமநகன், தீர்க்க ஜிஹ்வன், ஹும்பேகன், ஹுலுமுல்லன், கல்கஸன், கல்கிவாஹனன், புல்கஸன், புண்டரகேது, சண்டபாகு, குக்குரன், ஜம்பு காக்ஷன், ஜம்பனன், தீக்ஷ்ணச்ருங்கன், த்ரிகண்டகன், சந்திர குப்தன் என்ற இப்பதினைந்து ஸேனாதிபதிகள் ஒவ்வோர் அக்ஷௌஹிணீ ஸேனையுடன் செல்லட்டும். விஷங்க! நீ வரு வதைச் சத்ருக்கள் அறியாதபடி ரஹஸ்யமாகச் செல்! உனது பெருமையைக் காட்ட இதே தக்க ஸமயம்! ஜய முண்டா குக'' என்று கூறி விஷங்கனைப் போருக்கு அனுப்பினான்.

விஷங்கன் ஸ்ரீதேவியை யெதிர்க்கக் கிளம்பினபோது சூர்யாஸ்தமனமாயிற்று. அச்சமயம், எருமையின் உடல் போலும், காட்டுப் பன்றியின் உடல்போலும், மயிலின் கழுத்துப்போலும், தீபத்தைக்கண்டு ஒளிவதுபோலும், விஷங்கனுக்கு உதவி செய்ய வந்தது போலும், எங்கும் திரண்ட இருள் சூழ ஆரம்பித்தது. இரவுதான் ராக்ஷஸர் களுக்கும், அஸுரர்களுக்கும் பலத்தைக் கொடுக்குங் காலம். மாயா சக்தி பெருகுங்காலம். விஷங்கனுடைய பரிவாரங்

கள் இருளுடன் ஐக்யத்தை விரும்புபவர் போல் கறுத்த தலைப்பாகைகளையும், கறுத்த கவசங்களையும், நீல வஸ்த்ரங்களையும் தரித்திருந்தனர்.

விஷங்கன் கபடமாக தேவியை ஜயிக்கக் கருதி மேகடம்பர மென்னும் கவசத்தை யணிந்து, யுத்த வாத்யங்களான படஹாதிகளை நிறுத்திவிட்டுயாதொரு சப்தமுமில்லாமல்மிக்க ரஹஸ்யமாக ஆப்தர்களான பரிமித யுத்த வீரர்களை அழைத்துக் கொண்டு அவ்விரவிலேயே புறப்பட்டான். மேற்குத் திக்கை நாடிச் செல்லும் தேவியின் ஸேனையை இவன் எதிர்க்க எண்ணங்கொண்டு, சுவாசங்கூட விடாமலும், காலடி சத்தம் கேளாமலும், மிக ஜாக்ரதையுடன் ரஹஸ்யமாக தன் ஸேனையை வடக்கு முகமாக நடத்திச் சென்று ஸ்ரீலலிதையின் ஸேனையை வளைத்தான். இருட்டில் எவரேனும் வழியில் ஸந்தித்து யாரென்று கேட்டால் விஷங்கன் தாங்கள் சக்தியின் ஸைன்னியர் என ஸூசனை செய்வான். இவ்வாறாக மெதுவாக ஸ்ரீலலிதாதேவியின் சக்ரராஜ ரதத்தினருகே வந்து சேர்ந்து முத்துக் குடையின் கீழ் ஆயிரம் ஸூர்யன் போற் பிரகாசிப்பவளும், தேவியைப் போன்ற காமேச்வரீ முதலிய நித்யைகளுடன் ரஸமாகப் பேசுபவளும், முன்னே நிற்கும் ஸேனைகளைக் கவனித்துக்கொண்டிருப்பவளுமான ஸாக்ஷாத் ஸ்ரீலலிதா தேவியை விஷங்கன் கண்டான். அப்போது, தன்னை தேவியானவள் கவனிக்கவில்லை யென்றெண்ணி, திடீரென பின் புறமாக ஸேனைகளுடன் ஸ்ரீலலிதையின் ரதத்தைத் தாக்கினான். ஆங்கு ஒன்பதாவது ஆவரணத்திலுள்ள அணிமாதி சக்திகள் கோலாஹலம் செய்தன. அஸுரஸேனை பட்டஸம், த்ருகணம், பிண்டிபாலம் முதலிய ஆயுதங்களால் சக்தி கணங்களை யடித்து நாசஞ் செய்தனர். திடீரென்று நேர்ந்த யுத்தத்தாலும், இருளாலும் திகைத்த சக்திகள், ஆயுதங்கள் ஒருபுறம் கவசம் ஒருபுறமாகக் கிடக்கின்ற அவைகளைத் தேடி எடுத்து போர் செய்வதற்குள் பல சக்திகள் சின்ன பின்னமாக்கபபட்டன. இவர்களது கூக்குரல் ஒவ்வோர் ஆவரணமாகத் தாண்டி கர்ணிகையாக

ஸ்ரீலலிதாதேவியின் செவிக் கெட்டிற்று. இதைக்கேட்க ஸ்ரீதேவி மிகக் கோபங் கொண்டாள்.

இதற்குள் குடிலாக்ஷன் பத்து அக்ஷௌஹிணி ஸேனை களுடன் முன்புறமாக யுத்தத்திற்கு வந்து, பின்புறம் நடக் கும் யுத்தத்திற்கு ஸஹாயமாக முன்னுள்ள ஸேனைகள் போகாதபடிச் செய்தான். இருபுறங்களிலும் மிகக்கடும் போர் நிகழ்ந்தது. மாயாபலத்தினலும் இருளின் உதவி யாலும் விஷங்கன் முதலியவர்கள் சக்திகள் மீது அபரிமித மான பாணங்களை வர்ஷித்தார்கள். விஷங்காதிகள் விட்ட பாணங்களினல் ஸ்ரீதேவியின் விசிறி ஒன்று முறிந்தது. சக்ரராஜரதம் பாணங்களால் மூடப்பட்டது. உடனே ஸ்ரீலலிதையின் புருவமசைய காமேச்வரீ முதலிய நித்யைகள் பரம ஆக்ரஹத்துடன் யுத்த ஸந்நத்தர்களாய்த் தேவியை வணங்கி, "தேவி! மஹாராக்ஞீ! தண்டிநீ மந்த்ரிணிகளால் நடத்தப்படும் அவர்களுடைய ஸேனைகளைக் கண்டு பயந்த அரக்கர்கள் மாயையால் பின்புறமாக வந்து நம்மைத் தாக்கு கின்றனர். வந்நிவாஸிநீ, ஜ்வாலாமாலிநீ இருவர்களும் இப் பேரிருளை நீக்கினல் துஷ்டர்கள் இருக்குமிடங்களைக் கண்டு அவர்களின் மதத்தை அடக்கிவிட்டு தங்களருகே வந்து விடுகிறோம்" என்றனர் அவ்வாறே ஸ்ரீதேவி அநு க்ரஹிக்க, காமேச்வரீ நித்யை வில்லை வளைத்து, கோபத் துடன், "துஷ்டர்களே! நில்லுங்கள்! உங்கள் மாயையை இப்பொழுதே அழிக்கின்றேன்" என்று அதட்டிக் கொண்டே பர்வாவின் மீதேறினள். பகமாலினீ முதலியவர் களும் பின் தொடர்ந்தனர். ஜ்வாலாமாலினியும், வந்நி வாஸினியும் இருளை அகற்றி யுத்தகளத்தைப் பிரகாசப்படுத் தினர்கள். அதனல் மாயை விலக, தங்களைச் சக்திகள் கண்டு கொண்டதால் அரக்கர்கள் மிகச் சினங்கொண்டு மிக மும்மர மாகப் போர் புரிந்தனர். கூரிய ஆயுதங்களுடன் கூடிய காமேச்வரீ முதலிய பதினைந்து சக்திகளும் அஸுரஸேனை களை ஒரு நொடியில் கலக்கினர். இருயாமம் வரையில் கடின மாகப் போர் புரிந்து, பல அக்ஷௌஹிணி ஸேனைகளை அழித்

தனர். காமேசி தமநனையும், பகமாலினி தீர்க்கஜிஹ்வனையும், நித்யக்லின்னா ஹூம்பேகனையும், பேருண்டா ஹூஹுமுல்லனையும், வஹ்நிவாஸிநீ கல்கஸனையும் மஹாவஜ்ரேச்வரீ கல்கிவாஹநனையும், சிவதூதி புல்கஸனையும், த்வரிதா புண்டரகேதுவையும், குலஸுந்தரீ சண்டபாகுவையும், நித்யா குக்குரனையும், நீலபதாகா ஜம்புகாக்ஷனையும், விஜயா ஜம்பனையும், ஸர்வமங்களா தீக்ஷ்ணச்ருங்கனையும், ஜ்வாலாமாலினீ த்ரிகண்டகனையும், சித்ரா சந்த்ரகுப்தனையும் உக்ரபாணங்களால் கொன்றார்கள்.

முக்ய ஸேநாபதிகள் அனைவரும் கொல்லப்பட்டதைக் கேட்ட விஷங்கன் கடுஞ்சினங்கொண்டு, இரவின் கடைசி யாமத்தில் இரண்டு முகூர்த்த காலம் நித்யைகளுடன் ஸமர் செய்தான். இனிதன்னால் முன்னிற்க முடியாதென்று யோசித்து, காமேச்வரியின் பாணத்தால் நன்றாக அடிப்பட்டு நொந்து மிகுந்த ஸேனையுடன் ஓட ஆரம்பித்தான். தண்டநாதையினாலேயே அவன் கொல்லத்தக்கவனாதலால் எவரும் அவனைக் கொல்லாமல் விட்டனர். ஓடுபவனைத் துறத்தலாகாதென அவனை எவரும் பின் தொடரவில்லை. பொழுது விடிந்தது. அஸுரர்களின் சஸ்த்ரங்களினாலடிபட்டுண்டான காயங்களிலிருந்து பெருகுகின்ற ரத்தத்தால் நனைந்த சரீரங்களோடு கூடிய நித்யாதேவிகள் வெற்றியுடனே திரும்பி வந்து லலிதையை வணங்கி நின்றனர். இம்மாதிரி இரவில் மிகக் கடும்போர் செய்த நித்யாதேவிகளை ஸ்ரீலலிதா தேவி மெச்சி மிகுந்த ஆனந்தத்தை யடைந்தாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று. 110 சுலோகங்கள்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்.

வஹ்நிப் பிராகாரம் (அக்நிக்கோட்டைகட்டுதல்).

ஹயக்ரீவர் :—தண்டநாதாதேவியின் சரவர்ஷத்தால் பத்து அக்ஷௌஹிணி ஸேனைகளும் அன்றிரவே மடிந்தன.

குடிலாக்ஷன் தனியே நிற்க முடியாமல் பயந்தோடினான். இதைக்கேட்ட பண்டன் மனங்கலங்கினான். "தண்டநாதையும், மந்த்ரிணியும் முன் புறத்திலிருந்த போது, விஷங்கன் கபடமாக பின்புறம் வந்து விளைவித்த தீங்கைக்கேட்டு தேவியின் மனம் என்ன நினைத்ததோ! ஆஹா, என்ன கஷ்டம்! மஹா சக்ர ரதத்திற்கு சரியானபடி காவல் வைக்கவில்லை. நாம் தூரத்தில் விலகி இருந்து விட்டோம். இந்த ஸமயம் பாபிகள் அங்கு சென்றனர். ஸ்ரீதேவிதான் யுத்தம் செய்தாளோ! வேறெவரேனும் செய்தனரோ! ஆங்கு என்ன நடந்ததோ" என்று பலவாறு சங்கித்துக்கொண்டே சகல சக்திகளும் ஸ்ரீதேவியின் ரதத்தைச் சூழ்ந்துகொண்டனர். தண்டநாதையும் மந்த்ரிணியும் தம்தம் வாஹநத்தை விட்டிறங்கி, ஸ்ரீரதத்தின் ஒன்பது பர்வாக்களிலும் ஏறி ஆங்குள்ளவர்களால் அறிவிக்கப்பட்டு, ஸ்ரீலலிதையைக் கண்டு களித்து ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தனர்.

பிறகு, தண்டநாதையும் மந்த்ரிணியும் ஸ்ரீதேவியைப் பார்த்து, "மஹாராக்ஞீ! பெருந்தவறு நேர்ந்து விட்டது. கபடமார்க்கத்தால் நம்முடன யுத்தஞ் செய்யலாமெனக் கருதி, அரக்கர்கள் இரவில் நமது ஸேனைக்குப் பெருந்தீங்கிழைத்தனர். தெய்வச்செயலாக ஸ்ரீதேவியின்மீது சத்ருக்களின் சரங்கள் விழாமலிருந்தன. தங்களொருவர் பலத்தைக் கொண்டேதான் நாங்களனைவரும் பிழைத்திருக்கிறோம். மாயாவிகளான அஸுரரிடமிருந்து ஸ்ரீதேவியின் அங்கத்தைக் காக்க ஒருபாயந் தேடவேண்டும். அக்காலத்தில் மாயாவிகள் நம்ஸேனையிற் புகுந்து கபடயுத்தஞ் செய்யாதபடி மஹேந்திரமலையின் தென்புறத்தில் நூறு யோஜனைதூரம் விசாலமான ஒரு சிபிர (கூடார)த்தை நிர்மாணித்து அதைச்சுற்றி அக்நிக்கோட்டையை யமைக்க வேண்டும். அதற்குத் தென்திசையில் அஸுரநகர மிருப்பதால் அந்தப் புறத்தில் மாத்திரம் வாசற்படி அமைத்து, ஆங்கு சோம்பலில்லாதவர்களும், தூக்கமில்லாதவர்களும், சொற்படிக்கேட்டு நடக்கின்றவர்களுமான பலவில்லாளிகள்

காவல் புரிய வேண்டும். இல்லையேல் நமது ஸேனையை மாயாவிகள் அழித்து விடுவார்கள்" என்று கூறினர்.

இதைக்கேட்ட ஸ்ரீதேவி புன்னகைகொண்டு "ஆஹா! நீங்கள் நன்கு யோஜித்துக் கூறினீர்கள். இஃதே புத்திசாலித்தனமான நீதி மார்க்கம். ஜயத்தை விரும்புபவர் சத்ருவிடஞ் செல்வதற்கு முன் தன் ஸேனைகளை நன்கு ரக்ஷித்துக் கொள்ளல் வேண்டும்" என்று கூறி, ஜ்வாலாமாலினியைப் பார்த்து, "ஸ்ரீவத்ஸே! நீ அக்னிசக்தி யல்லவா? நீ பூமியில் நூறு யோஜனை தூரம் வட்டமாகவும், ஆகாயத்தில் முப்பது யோஜனை உயரமாகவும் இருந்து, உனது ஜ்வாலையால் ஒரு கோட்டையை அமை. வாசற்படி ஒரு யோஜனை தூரமிருக்கட்டும்." என்று உத்தரவிட்டாள். சதுர்த்தசி திதியான ஜ்வாலாமாலினீ "அப்படியே" யென்று தேவியை வணங்கி, உத்தரவுபடி ரத்னப்பிரகாரம்போல் அக்னிக் கோட்டையை யமைத்தாள்.

இந்த விசாலமானக் கோட்டையைக் கண்டு ஸந்தோஷத்துடன் தண்டநாதையும், மந்த்ரிணியும் தத்தம் ஸேனைகளுடன் உள்ளே நுழைந்தனர். சக்ரராஜரதத்தை மத்தியிலமர்த்தி, இடது புறத்தில் தன் தேரையும், தென் புறத்தில் ச்யாமளா ரதத்தையும், மேற்கில் ஸம்பத்கரீ ரதத்தையும் எதிரில் ஹயக்ரீவரையும் நிறுத்தினார்கள். வாசற்படியில் இருபது அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன், ஜ்வலிக்கும் தண்டாயுதத்தைக் கரத்திலேந்திய ஸ்தம்பினீ என்பவளை வைத்தார்கள். அவள் தண்டநாதையின் விக்னதேவி யெனப் பிரஸித்தமானவள். இங்ஙனம் ஸகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு சூரியன் நன்கு உதயமான பிறகு யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள்.

பண்டபுத்ர வதம்.

சக்தி ஸேனைகள் மிகுந்த ஆரவாரத்துடன் அக்னிக் கோட்டையிலிருந்து வெளிக்கிளம்பினர். இங்ஙனம் மிக

அற்புதமானக் கோட்டையமைக்கப்பட்டதைக் கேட்ட பண்டனுக்குப் பயமதிகமாயிற்று. தன்னிரு சகோதரர் களையும், தன் புத்திரர்களையும், முக்கிய ஸேனாதிபதிகளையு மழைத்து மந்த்ராலோசனை செய்தான். முடிவில் யுத்தம் செய்ய மிக்க சக்தியும், பிரியமுமுள்ள தனக்குச் சமமான தனது * முப்பது புத்திரர்களையும் பண்டன் அழைத்து, "வீர புத்திரர்களே! போரில் உங்களுக்குச் சமமானவரொரு வருமில்லை. உங்களது பலத்தைக்கொண்டே இந்திரன் முதலிய திக்பாலர்களையும் நான் ஜயித்தேன். ஸகல அஸ்த்ர சஸ்த்ரங்களையும் நன்கு உணர்வீர்கள். நீங்கள் விழித்திருக் கும்போது நமது குலத்திற்கு நாசமேற்படலாமா? பெண் ணொருவள் தன்னைப் போன்ற பல பெண் மக்களையே துணை யாகக்கொண்டு நம்மவர்களை யழிக்கிறாள். அவளை நீங்கள் உயிருடன் பிடித்து வர வேண்டும். மஹா வீரர்களான உங்களை ஒரு பெண்ணுடன் போருக்கனுப்புவது உசிதமல்ல. ஆயினும் அவளுடன் யுத்தம் செய்ய நேர்ந்தது. இது அப கீர்த்தியை யளிப்பதாயினும், பொறுத்துக்கொண்டு யுத்தத் திற்குச் செல்லுங்கள். இது தெய்வக் கூற்று" என்று கூறி, இருநூறு அக்ஷௌஹிணி ஸேனைகளுடன் அவர்களை யனுப்பினான்.

அவ்வமயம் பூமி நடுங்கிற்று. பல அப சகுனங்கள் தோன்றின. உலகெலாம் திகிலடைந்தது. அதை மதியாது செல்லும் அவ் வீரர்கள் மீது வயதான ஸ்திரீகள் பொரியை வாரியிறைத்தனர். வந்திகள் துதி பாடினர். ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் ஆரத்தி சுற்றினர். பூமியைப் பிளப்

---

* சதுர்பாகு, சகோராக்ஷன், சதுச்சிரன், வஜ்ரகோஷன், ஊர்த்துவகேசன், மஹாமாயன், மஹாஹனு, மகசத்ரு, மகாஸ்கந்தி, ஸிம்ஹகோஷன், ஸராலகன், அந்தகன், திரிநேத்திரன், கூபகன், கூபலோசனன், குஹாக்ஷன், கண்டலன், சண்டவர்மா, யமாந்தகன், லட்டநன், பண்டஸேனன், பூருஜித், பூர்வமாரகன், ஸவர்க்கசத்ரு, ஸ்வர்க்கபலன், துர்காக்யன், ஸ்வர்க்ககண்டகன், அதிமாயன், ப்ருஹன் மாயன், உபமாயன்.

பவர்கள் போலும், ஆகாயத்தையுலர்த்துபவர்கள் போலும், கடலைக் கலக்குபவர்கள்போலும், இருபது அக்ஷௌஹிணிகளுடன் பண்டனது புத்திரர்கள், "சக்தி ஸேனையை விழுங்கி விடுவோம்; ஆயுதங்களை பொடிபொடியாக்கி விடுவோம்; அக்னிக் கோட்டையை அவித்து விடுவோம்; அந்த லலிதையைச் சிறையிலடைப்போம்" என வீராட்டஹாஸம் செய்துகொண்டே கிளம்பினர். அக்னிக் கோட்டையினருகே சென்று யௌவன கர்வத்தால் மதாந்தர்களாகிப் பிரளயகால இடிபோல் வீரகர்ஜனை செய்தனர்.

இந்த அபூர்வமான த்வனியானது சக்திகளது செவிகளைத் துளைத்து மனத்தைக் கலக்கிற்று. எல்லா சக்திகளாலும் பூஜிக்கத்தக்கவளும், ஸ்ரீலலிதாதேவியினருகில் வஸிப்பவளுமான ஸ்ரீபாலாம்பிகை இதைக்கேட்டு மிகவும் சினங்கொண்டாள். அவள் எப்போதும் ஒன்பது வயதுள்ளவள். ஸர்வ வித்யைகளுக்கும் நிதியானவள். சிவந்த நிறமுடையவள். ஸ்ரீமஹாராக்ஞியின் பாதகமலங்களில் ஸதா வஸிப்பவள். ஸ்ரீதேவியின் வெளியில் சஞ்சரிக்கும் பிராணனும் அவளே; அவளே நான்காவது நேத்திரம். இப்பேர்க்கொத்த ஸ்ரீபாலாதேவி, அவர்களைத் தானே கொல்லக் கருதி, ஸ்ரீலலிதையைப் பார்த்து, "அம்மா! பண்டபுத்திரர்கள் வந்து அட்டஹாஸம் செய்கின்றார்கள். அவர்களுடன் போர் புரிய நான் மிகவும் அவா கொண்டிருக்கிறேன். நான் தங்கள் குமாரியல்லவா! நான் விரும்பும் இவ்விளையாட்டைத் தாங்கள் தடுக்கலாகாது. என் கைகள் துடிக்கின்றன. என் அவாவைப் போக்கும் இந்த யுத்தக் கிரீடையை தாங்கள் கண்டு தங்கள் மனம் களிக்கட்டும்," என்று விக்ஞாபித்துக் கொண்டாள்.

இதைக்கேட்டதேவி, "குழந்தாய்! நீ அதிமிருதுவான சரீரத்தையுடையவள்! ஒன்பது வயதுள்ளவள்; புதிய தாகப்போரில் பழகுபவள்; நீ யெனக்கு ஒரே குமாரி! உன்னை விட்டு ஒரு க்ஷணமேனும் பிரிந்திரேன். நீ பெரும்

போருக்கேற்றவளா? இல்லை. தண்டிநீ, மந்த்ரிணி முதலிய கோடிக்கணக்கான சக்திகளிருக்க, நீ ஏன் போகவேண்டும்?" எனத்தடுத்தாள். குழந்தைப் பருவமாதலால் ஸ்ரீபாலாதேவி மறுபடியும் பிடிவாதம் செய்தாள். அவளது த்ருடமான நிச்சயத்தைக்கண்டதேவி, அவளை இறுகத்தழுவி, தன் கவசங்களிலிருந்து ஒரு கவசத்தையும், ஆயுதங்களிலிருந்து ஆயுதங்களையும் தந்து அனுப்பினாள். ஸ்ரீபாலாதேவி, ஸ்ரீலலிதையினுடைய வில்தண்டத்திலிருந்து கிளம்பிய கர்ணீரதம் எனும் பல ஹம்ஸங்கள் பூட்டிய தேர்மீதமர்ந்து கிளம்பினாள். கின்னரர் பாடினர். ஆவரண தேவதைகள் ஆசிர்வதித்தனர். சிலர் வணங்கிப் பணிந்தனர். மந்திரிணியும், தண்டநாதையும் பயந்து "அம்மா! யுத்தஞ் செய்ய நிச்சயித்து விட்டாயோ! அகாலத்தில் தேவியால் நீ அனுப்பப்பட்டாய்! நாங்களிருக்கும்போது நீ வருவது உசிதமல்லவே! நீதேவியின் ஜீவனல்லவா? திரும்பிப்போ; உனக்கு நமஸ்காரம்," என்றனர். இதைக்கேட்டும் சலிக்காத மனதுடன் பாலாம்பிகை போருக்குப் போவதைக் கண்ட இருவரும் ஆச்சர்யமடைந்து அபரிமிதமான ஸேனைகளுடன் அவளை ரக்ஷித்துக்கொண்டு அக்னிக் கோட்டையின் வாயிற்படி வழியாக வெளிக்கிளம்பினர். சக்திஸேநாதிபதிகள் செய்த அஞ்ஜலிகளையேற்று, அருள் புரிந்தவண்ணமாக பாலை யுத்தகளத்தில் நுழைந்தாள். ஆக்ரஹங் கொண்ட அஸுர ஸேனைகள் எண்ணிறந்த சரங்களை குமாரியின் மீது வர்ஷித்தனர். பாலாதேவியும் சளைக்காமல் அபரிமிதமான பாணங்களை வர்ஷித்தாள். ஸுரரும், அஸுரரும் கொண்டாடத் தக்க அந்தச் சிறுமியின் யுத்த சாதுர்யத்தைக் கண்டு பேரானந்தம் பெற்ற பரிவார சக்திகள் க்ஷணத்திற்கு க்ஷணம் ஓடி மஹா ராக்ஞியினிடம் விக்ஞாபித்துக்கொண்டிருந்தனர். மந்திரிணியும், தண்டநாதையும் வியந்து போர் புரிவதை விட்டு விட்டு அவளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். பாலையொருவளேயாயினும், அவள் ஒவ்வொரு பண்ட புத்திரனெதிரிலும் ஒவ்வொருவளாகத் தோன்றி நின்று, சத்ருக்களின் மர்மங்களை அடித்து, அதிவிரைவாக யுத்தஞ் செய்யும் சிறப்பானது விண்ணவருக்கு வியப்பைத்

தந்தது. ஸாது! ஸாது! என மந்த்ரிணியும், தண்டநாதையும் துதிக்க, இரண்டாம் நாள் யுத்தமனைத்தும் பாலை ஒருவளே போர் புரிந்து ஒப்பற்ற தனது பராக்ரமத்தை உலகிற்குக் காட்டினாள். கோபத்தால் கண்கள் சிவக்க, அஸுரர்களின் அஸ்த்ரங்களுக்குத் தக்கப் பிரத்யஸ்த்ரங்களைப் பிரயோகித்தாள். இன்னும் நாராயணாஸ்த்ரத்தால் இருபது அக்ஷௌஹிணீ ஸேனைகளை க்ஷணத்தில் பஸ்மமாக்கினாள். இதைக்கண்டு மிகச் சினங்கொண்ட பண்ட புத்திரர்களனைவரும் ஒன்றுகூடி ஏக காலத்தில் பாலாதேவியின் மீது பாய, குமாரியும் ஏக காலத்தில் முப்பது பாணங்களை அவர்களின் மீது விட்டனள். அவைகள் ஒரு நொடியில் முப்பது பண்ட புத்திரர்களின் சிரங்களையும் அறுத்து அவர்களை யமலோகமனுப்பின. விரைந்து வந்து மந்த்ரிணியும் தண்டநாதையும் பாலாவை யிறுகத் தழுவிக் கொண்டாடினார்கள். மற்ற சக்திகள் தங்களுக்குண்டான ஆனந்தத்தால் கூத்தாடிக் குதித்து, ஸாது! ஸாது! என ஜய கோஷங்களால் முவ்வுலகையும் கலக்கினார்கள். இந்த ஆச்சரியத்தை மஹாராக்ஞியிடம் விக்ஞாபிக்க விரைந்தோடினார்கள். ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் தேவியைப் பணிந்து இவ்வற்புதத்தைக் கூறித் திரும்பினர். இதைக்கேட்ட தேவியும் பரம சந்தோஷத்தை யடைந்து, ஸ்ரீபாலையை மடிமீதமர்த்தி உச்சி முகர்ந்து தனது கரத்தால் தடவிக் கொடுத்துக் கொண்டாடினாள். சக்திக் கூட்டமனைத்தும் குமாரியின் வெற்றியைக் கண்டு வியந்தன.

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று. 125 சுலோகங்கள்.

இருபத்துநான்காம் அத்தியாயம்.

பண்டாஸுரன் புலம்பல்.

ஹயக்ரீவர்:—புத்திரர்களிறந்ததைக் கேட்டு சோகாக்னியால் தபிக்கப்பட்ட பண்டாஸுரன் தனது குலமே அழிந்த

தெனக் கருதி, "ஹா! என் புத்திரர்களே! குணம் நிறைந்தவர்களே! எனது கண்மணிகளே! எனது குல விருத்திக்காக வுதித்தவர்களே! தேவர்களின் கர்வத்தை அழித்தவர்களே! என்னோடு ஒரு வார்த்தை சொல்லுங்கள்! மடிமீதமருங்கள்! தந்தையை விட்டுப் போகலாமா? நீங்களில்லாமல் ராஜ்யமே சோபிக்கவில்லையே! வீடும் ஸபையும் சூன்யமாக இருக்கின்றனவே! ஐயோ! ஒருவர்கூட மிச்சமில்லாமற் பாபியால் கொல்லப்பட்டீர்களே! என் குலத்திற்கு அங்குரமான உங்களை எப்படி ஒருவளே ஒரே காலத்திற் கொன்றாள்? இனி நமக்கேது சுகம்? நமது வம்ச சோபையே யழிந்தது. உங்கள் புன்சிரிப்பு முகங்களை இனி நான் எப்போது காண்பேன்? எனது ஜன்மாந்தர புண்யத்தால் கிடைத்த உங்களை அநியாயமாக யிழந்து விட்டேனே. ஹா! கொல்லப்பட்டேன்! பேராபத்தை யடைந்தேன்! மஹா மந்தபாக்யனானேன்" எனப் பலவாறுக் கதறி, கண்ணீர் சொரிந்து, மூர்ச்சையாகி, ஆஸனத்திலிருந்து தீடீரெனக்கீழே விழுந்தான்.

விசுக்ரன் விஷங்கன் முதலியவர்கள் அவனை ஆச்வாஸப்படுத்தி, "தேவ! தாங்கள் ஸர்வ ஸாதாரணமானவர்களைப் போல் இப்படிப் புலம்பலாமோ? மஹா யுத்தத்திலிறப்பது மஹா வீரர்களது தர்மமன்றோ? அத்தகைய மரணத்திற்காக வருந்தலாகாது. ஒரு பெண் வந்து நமது வீரர்களைக் கொல்கிறாளென்பதைப் பற்றித்தான் வருந்தத் தக்கது," என்று கூற, அவர்களின் சொற்களைக்கேட்டவுடன் புத்திர சோகத்தை விட்டு தைத்யேந்திரன் காலாக்நிபோல் கோபங் கொண்டான். கண்கள் துடிக்கக் கோபக்கனல் எழும்ப உக்ரமான கத்தியை யுதறி, "இப்பொழுதே இந்தக் கத்தியினால் அந்த துஷ்டையைத் துண்டு துண்டாக வெட்டி யெறிந்து மனச் சாந்தியை யடைவேன்" என்று கூறி, மஹோந்மத்தனாய்க் கிளம்பினான். அருகிலுள்ள அஸுரர்கள் அவனைத் தடுத்து, 'ஸ்வாமின்! ஒரு ஸ்த்ரீயின் நிமித்தமாகவா தங்களுக்கு இத்தகைய பரபரப்பு! எங்களைக்கொண்டே

யிந்தக் கார்யத்தைச் செய்யலாகாதா ? உமது கட்டளையின் பலத்தைக்கொண்டு ஸமஸ்த உலகையுமழிப்போமே! இந்தப் பெண் எந்த மட்டில் ? எழுகடலையும் உலர்த்த வேண்டுமா? மலைகளை விழுங்கவேண்டுமா ? மூவ்வுலகையும் தலைகீழாகப் புரட்டவேண்டுமா ? தேவர்களை வெட்ட வேண்டுமா ? ஸ்வர்க் கத்தைப் பிளக்க வேண்டுமா ? திக் பாலர்களைப் பொடியாக்க வேண்டுமா ? உத்தரவு கொடுங்கள் !'' எனக் கூறினர்.

விசுக்ரன் செய்த ஜயவிக்நயந்தரம்.

இதைக்கேட்ட பண்டன் முகஞ் சிவக்க, கண்கள் துடிக்க, "விசுக்ர ! நீ மாயையால் மறைந்து சத்ருக்கள் ஜயம் பெறுதபடி அவர்களின் கூடாரத்தில் ஒரு விக்நயந்தரத்தை ஸ்தாபனம் செய்வாய்'' என்று உத்தரவிட்டான். "அப்படியே செய்கிறேன்'' என்று விசுக்ரன் கூறிப் புறப்படும்போது ஸூர்யன் அஸ்தங்கதனுனன். புருஷனை நாடிப் போகத்தை விரும்பிச் செல்லும் பெண்மணிபோல் ஸூர்யனை ஸந்தியா தேவி பின் தொடர்ந்தாள். விரைவாகச் செல்லும் பாநுவின் அங்கஸங்கத்தினல் எழுந்த கடலின் திவலைகள் போல் ஆகாசத்திலே பல நக்ஷத்திரங்கள் தோன்றின. விசுக்ரனுக்கு உதவி புரிவதுபோல் மை போன்ற இருள் தோன்றிற்று. அப்போது அவன் மாயா ரதத்திலேறி மறைந்து, மிக விசாலமான அக்நிக் கோட்டையையும், தக்ஷிண துவாரத்தில் ஜாக்ரதையாக ஆயுதமேந்தி கவசந் தரித்து, எந்த க்ஷணத்திலும் யுத்த ஸந்நத்தர்களா யுள்ள இருபது அக்ஷௌஹிணி ஸேனைகளுடன் நிற்கும் ஸதம்பிநி முதலிய சக்திகளைக் கண்டான். ஆச்சர்யங் கொண்டு உள்ளே நுழைய முடியாமல் விசுக்ரன் வெகு நேரம் யோசித்துக் கோட்டைச் சுவர்க்கு வெளியிலிருந்தபடியே விக்நயந்த்ரத்தைச் செய்தான். இரண்டு க்ரோசம் அகலமும் நீளமுமுள்ள அழகிய சிலா பட்டத்தில் எட்டுத் திக்குகளிலும் சூலத்தை யமர்த்தி, அதில் ஸம்ஹாராக்ஷரத்தையெழுதி, அலஸா, க்ருபணா, தீநா, நித்ரா, தந்த்ரா, ப்ரமீலிகா, க்லீபா,

நிரஹங்காரா முதலிய எட்டு தேவதைகளையும் பிரதிஷ்டை செய்தான்.

பிறகு அதற்குரிய மந்த்ரத்தை ஜபித்து, பூஜை செய்து, ஆடு முதலிய பலிகளைத் தந்து, வெளியிலிருந்தபடியே தேவி யின் கூடாரத்தில் அந்த யந்த்ரத்தை யெறிந்தான். அதனுல் சக்திகள் தங்கள் ஆயுதங்களை நழுவ விட்டுத் தீனர்களாகி, "சண்டை போதும்; அரக்கர்களைக் கொல்வதால் யாது பயன்? ஜயத்தினுல்தான் என்ன பயன்? ஜீவஹிம்ஸை பாப மல்லவா? தேவர்க்குதவி புரிவதால் நமக்கென்ன வரும்? வீண் சண்டை வேண்டாம். யஜமானி யார்? மந்த்ரிணி யார்? தண்டினி யார்? என்ன வேலைக்காரப் பிழைப்பு? ஒருத்தியை யஜமானியாகக் கொண்டு நாமெல்லோருமடையும் பயன்தா னென்ன? சத்ருவை யடித்து நாமும் இறப்பதேன்? சண்டையிலிறந்தால் வீரஸ்வர்க்க மென்பதில் பிராமண மென்ன? உத்ஸாஹத்தினுல் பயனென்ன? தூக்கத்திற்குச் சமமான ஸுகமுண்டோ? ஆலஸ்ய மொன்றுதான் மனத் திற்கு ஓய்வைக் கொடுப்பது. ஆனுல் இப்படிப்பட்ட நம்மைக் கண்டு தேவி என்ன செய்ய முடியும்? நாமெல்லோ ரும் ஒன்று சேர்ந்தால்தானே அவள் ராக்ஞீ! நாம் விலகி விட்டால் அவளுக்கேது பலம்? பலமில்லையேல் நம்மை எப்படி சிக்ஷிப்பாள்?" எனப்பலவாறு கூறிக்கொண்டு சக்தி கள் சண்டை செய்வதை விட்டு, தூக்கம் கண்ணைச் சொருக அனைவரும் அயர்ந்து விட்டனர்.

இதைக்கண்ட விசுக்ரன் இரண்டாம் நாள் நள்ளிரவில் தங்கராஞ் சென்று முப்பது அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன் சக்திகளது கோட்டைக்கருகே வந்து அட்டஹாஸஞ் செய் தான். இதைக்கேட்டும் எந்த சக்தியும் உறக்கத்தை விட்டு யுத்தத்தில் விருப்பங்கொள்ளவில்லை. மஹாநுபாவைகளான மந்த்ரிணியும், தண்டநாதையு மிந்த விக்நயந்திரத்தினுல் பீடிக்கபடாமலிருந்து "அஹோ! மஹா கஷ்டம்! எவர் செயலால் இப்படி நமது ஸேனைகள் அயர்ந்திருக்கின்றன?

ஆயுதங்களை நழுவ விட்டுச் சுணங்கி யிருக்கின்றனர்! நமது சொற்களை மதிக்கவில்லையே! மஹாராக்ஞியையும் பூஜிக்க வில்லையே! உதாஸீனர்களாயிருக்கின்றனர்களே!" என்று யோசித்து, ஸ்ரீமஹாராக்ஞியினிடம் விக்ஞாபித்துக் கொண்டனர்.

"தேவி! இது எவர் செயல்? உலகமனைத்தாலும் பரிபாலிக்கப்படும் தங்களாக்ஞையை எவரும் கேட்கவில்லையே. விரக்தர்களாய் ஸகல கார்யங்களிலும் பராங்முகர்களாய் நித்திராமயக்கங்கொண்டு, "தண்டினி யார்? மந்த்ரிணி யார்? ராக்ஞிதான் யார்? சண்டை யென்ன? எனப்பல ஆக்ஷேபங்களைச் சொல்கின்றனரே! இச்சமயத்தில் சத்ரு பெருஞ் சேனைகளுடன் வந்திருக்கிறான்! அவர்களது முழக்கம் வானைப் பிளக்கின்றது! இனி செய்ய வேண்டியதை மஹாராணி செய்யட்டும்," என்று கூறி தண்டநாதை வணங்கி நின்றாள்.

இதைக்கேட்ட ஸ்ரீ லலிதாதேவி ஸ்ரீ காமேச்வரர்பால் கடைக்கண் செலுத்தி, பற்கள் அதிகமாகத் தெரியாமல் சிறிது புன்னகை புரிந்தனள். அந்த சிரிப்பின் காந்திக் கூட்டத்திலிருந்து யானை முகத்தோடு கூடிய ஒரு தேவர் கிளம்பினார். அவர் மாதுளை, கதை, கரும்புவில், சூலம், ஸுதர்சநம், தாமரைப்பூ, பாசம், நெய்தல், நெற்கொத்து, தனது தந்தம் முதலியவைகளைத் தன் பத்துக் கரங்களிலேந்தி, துதிக்கையில் ரத்ன கும்பத்துடன், பெருத்த வயிறோடு, சந்த்ர சூடராயும், மதங்கொண்டவராயும், ஸித்த லக்ஷ்மியால் ஆலிங்கநம் செய்துக்கொள்ளப்பட்டவராயுமிருந்து, ஸ்ரீதேவியைப் பணிந்து நின்றார்.

கணேசரது பராக்ரமம்.

ஸ்ரீ தேவியின் ஆசிர்வாதத்தைப்பெற்ற கணேசர், விக்ந யந்ரத்தை அழிப்பதற்காக அதிவேகத்துடன் கிளம்பி, அக்நிக்கோட்டையினுள்ளே அலைந்து திரிந்து ஒரு மூலையில் பதிந்து கிடந்த விக்ந யந்திரத்தைத் தேடிக் கண்டு பிடித்தார்.

அத்புக்ரமான தனது தந்தங்களால் அந்த யந்த்ரத்தை ஒரு நொடியில் பொடியாக்கி ஆகாயத்திலெறிந்தார். ஆங்குள்ள துஷ்ட தேவதைகளுமழிந்தனர். உடனே சக்திஸேனைகளனைத்தும் ஆரவாரத்துடன் எழுந்து யுத்த ஸந்நத்தர்களானார்கள். கணேசரும் தன்னைப்போல் பலரைப் படைத்தார். அவர்கள் அழகிய துதிக்கையை ஆட்டிக்கொண்டு சுந்தர வடிவத்துடன் போர்க்களத்திற் தோன்றினர். ரித்தி முதலிய சக்திகளால் ஸேவிக்கப்பட்ட ஆமோதர், ப்ரமோதர், ஸுமுகர், துர்முகர், விக்நர், விக்னகர்த்தா என ஆறு ஸேநாபதிகள், எழு கோடி ஹேரம்பர்களுக்கு அதிபதிகளாய்ப் போர்க்கோலத்துடன் வீராட்டஹாஸஞ் செய்துகொண்டு தீக் கோட்டையிலிருந்து வெளிக்கிளம்பினர். முப்பது அக்ஷௌஹிணியுடன் வந்திருக்கும் விசுக்ரன்மீது பாண வர்ஷங்களை வர்ஷித்தனர். உலகெலாம் செவிடு படும்படி வீறிட்டுக் கொண்டு, தைத்யர் படைமீது கணேச கணங்கள் பாய்ந்தன. இக்கணங்களால் தைத்யரின் படையில் பலர் அழிந்தனர். இதைக்கண்டு சினங்கொண்ட விசுக்ரன் வில்லை வளைத்துக் கணேசருடன் போர் செய்தான். வில்லின் சப்தமும், வீர நாதமும், சஸ்த்ரங்கள் ஒன்றோடொன்று உறைவதால் உண்டாகும் த்வனியும், யானை, குதிரை, தேர் முதலியவைகளின் சப்தமும், திக்குகளெல்லாம் பரவிற்று. கணநாதரது ரதங்கள் தைத்ய ஸேனையைச் சூழ்ந்து கொண்டன. கணேச கணங்கள் சத்ருக்களைத் துதிக்கைகளால் வளைத்துப் பிடித்துக்கூரிய தந்தங்களால் குத்திக்கொன்றன. புஷ்கலம், ஆவர்த்தகமெனும் மேகக் கூட்டங்கள் போன்ற காதுகளின் காற்றுகளினாலும், மூச்சுக் காற்றினாலும் சத்துருக்களைச் சிதற யடித்தன. மலைபோன்ற மார்பினாலும், தூண்கள் போன்ற கால்களாலும், சூலம், சக்ரம் முதலிய ஆயுதங்களாலும் பகைவரைக் கொன்றன. புழுதி மாத்திரம் மிகுந்த தனது ஸேனையைக் கண்டு சினங்கொண்ட விசுக்ரன், கணேசருடன் போர் புரிய கஜாஸுரனை ஏவினான். எழு அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன் வரும் கஜாஸுரனோடு கணேசர் கடும் போர் செய்தார். தனது வலிமை குறைவதையும் உத்ஸாஹத்

துடன் போர் செய்யுங் கணேசருடைய பலம் மேன்மேலும் அதிகரிப்பதையுங் கண்ட விசுக்ரன் ரணகளத்தை விட்டோடினன். மூஷிக வாஹனத்திலமர்ந்த விநாயகரொருவரே கஜமுகாஸுரனை ஏழு அக்ஷௌஹிணியுடன் கொன்றழித்தார். எதிரில் எவருமில்லாமையால் உடனே கணபதி தேவியிடஞ் சென்றார். அஸுரர்களுக்குக் காளராத்திரியான அந்த இரவுங் கழிந்தது. ஸ்ரீ லலிதாதேவி மிக ஸந்தோஷமடைந்து ஸகல தேவதைகளைப் பூஜிப்பதற்கு முந்தி, விநாயகருக்கு, பிரதம பூஜையை நடத்தும் வரத்தை யளித்தனள்.

இருபத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று. 105 சுலோகங்கள்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

விசுக்ர விஷங்க வதம்.

ஹயக்ரீவர்:—பண்டாஸுரன் தனது ஸஹோதரன் முறியடிக்கப்பட்டதைக் கேட்டு சிந்தை நொந்து, ஸமஸ்த ஸேனைகளுடன் விசுக்ரன் விஷங்கனென்னு மிருவர்களையும் யுத்தத்திற்கனுப்பினன். இருவர்களும் மிக ஆக்ரஹத்துடன் நூற்று நான்கு அக்ஷௌஹிணிகள் புடைசூழ, வீராட்டஹாஸஞ் செய்துகொண்டு கிளம்பினர். உலூகஜித் முதலிய பத்து மஹா வீரர்கள் அவர்களைப் பின் தொடர்ந்தனர். அவர்கள் பண்டனது ஸஹோதரியான தூமினீ என்பவளுக்குப் பிறந்து மாமனிடமே அஸ்த்ர சஸ்த்ரங்களைப் பயின்றவர்கள். அவர்கள் கோதண்டங்களின் கோஷத்தால் பத்துதிக்குகளையும் நடுங்கச் செய்து மாமனது ப்ரீதியைச் சம்பாதித்தனர். யுவராஜனுக்குரிய ராஜ பிருதுகள் சூழ,விசுக்ரன் வில்லின் கோஷத்தினாலும், ஸிம்ஹ நாதத்தினாலும், சக்திகளுடைய மனதைக் கலக்கினன். மின்னலோவென எண்ணும்படி பள பளவென்றுப் பிரகாசிக்கும் கத்தி முதலிய ஆயுதங்களை யேந்தி

சக்திகள் யுத்தரங்கத்திற்கு வந்து சேர்ந்தனர். ஸ்ரீலலிதையின் உத்தரவுபடி, மந்த்ரிணியும் தண்டநாதையும் தங்கள் இரதத்தின் மீதேறி அப்ஸரஸுகள் ஆட, விசுக்ர விஷங்கர்களை எதிர்த்து யுத்தஞ்செய்ய வந்தனர். ஸ்ரீசக்ரராஜ ரதத்தை ரக்ஷிக்க நாலு அக்ஷௌஹிணிஸேனைகளை வைத்து விட்டு மற்றெல்லா ஸேனைகளையும் அழைத்துக் கொண்டு, தண்டநாதை ஸேனைகளின் முன் நின்று, ஒரு கராங்குளியால் ஹலத்தையும், மற்றொன்றால் முஸலத்தையும் சுற்றிக்கொண்டு இங்குமங்கும் ஸஞ்சரிக்கும் ஸேனைகளைக் கவனித்து யுத்த ஸந்நத்தையாக நின்றாள். அவளைப் பின் தொடர்ந்து மந்த்ரிணியும் அம்பைக் கரத்திலெடுத்து சுழட்டினாள். தேவ ரிஷிகள், "ஜயம் பெறுக! மேன்மை யடைக!" என ஆசிர்வதித்து ஆனந்தத் தாண்டவமாடினர்.

ரத சக்ரங்களின் சப்தம் தைத்யர்களின் மனத்தையும், பூதலத்தையும் பிளந்தது. பல சக்திகள் பாடிப் போற்றினர். எண்ணாயிரம் அக்ஷௌஹிணி சக்திகள் தேவியைச் சூழ்ந்தன. அதில் சிலர் பசுமை நிறமுள்ளவர். சிலர் சிவந்தவர். சிலர் கறுத்தவர். சிலர் மரகதப்பச்சை வர்ண முள்ளவர். சிலர் நிலா போன்றவர்.

மந்த்ரிணியைச்சுற்றியும் இதே போல் திவ்யாபரணம் பூண்டு அத்யுக்ரமான பற்பல ஆயுதங்களைத் தாங்கி பல வர்ண முள்ள சக்தி ஸேனைகள் சூழ்ந்தன. ஸ்ரீ மஹாராக்ஞியின் ஆக்ஞா முத்ரா ரூபமான அங்குலீயகம் (மோதிரம்) ஒன்று தான் அதிகமாக மந்த்ரிணியிடங் காணப்பட்டது. இங்ஙனமிருவரது ஸேனைகளும் கடற்போல் புரண்டு வரும் போது பூமி பாரந்தாளாமல் சிறிது ஊசலாடிற்று. சக்தி ஸேனைகளும் சத்ரு ஸேனைகளும் யுத்தத்தில் கிளப்பிய புழுதி எழு கடலையும் சேறாக்கிவிட்டது. குதிரைப்படை குதிரைப்படையுடனும், ரதம் ரதத்துடனும், யானை யானையுடனும், காலாள் காலாளுடனும் கலந்து யுத்தந் துவக்கின. தண்டநாதை விஷங்கனுடனும், ச்யாமா விசுக்ரனுடனும் அச்வாரூடை

உலூகஜித்துடனும், ஸம்பத்கரீ புருஷேணனுடனும், நகுலீ விஷேணனுடனும், மஹா மாயை குந்திஷேணனுடனும், ஒரு தேவி குரூஷகனுடனும், உன்மத்தபைரவி மலதனுடனும், லகுச்யாமா குரூசனுடனும், ஸ்வப்நேசி மங்களனுடனும், வாக்வாதிநீ த்ருகணனுடனும், சண்டகாளி கோல்லாடனுடனும், சக்தி அக்ஷோஹிணி தைத்ய அக்ஷோஹிணியுடனும், கலந்து கோபத்துடன் கடுமையாகப் போர் செய்தனர்.

விசுக்ரன் தன் ஸேனை பலங்குன்றி வாடுவதையும் சக்திகள் உத்ஸாஹத்துடன் யுத்தஞ் செய்வதையுங் கண்டு ஆக்ரஹத்துடன் வில்லை வளைத்து தாஹத்தை யுண்டு பண்ணும் தர்ஷாஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். காட்டுத் தீபோல் அது சக்திகளை வாட்டிற்று. மூன்றாவது நாள் யுத்தத்தில் ஒரு யாம காலமானபோது தாஹாஸ்த்ர ஜ்வாலையால் உதடுகளுலர்ந்து, இந்திரியங்கள் சோர்ந்து, கரங்களிலுள்ள அஸ்த்ர சஸ்த்ரங்கள் கீழே விழுந்து, சக்திகளினுடல்கள் அவனியிற் சாய்ந்தன. இங்ஙனம் தோன்றிய மஹாதாபத்தைக்கண்டு மந்த்ரிணியானவள் தண்டிநீயைப் பார்த்து, "இஃதென்ன தெய்வத்தின் விபரீதச் செயல்? தர்ஷாஸ்த்ரத்தால் சக்திகள் ஆயுதங்களை விட்டு, உத்ஸாஹமின்றி, போரை மறந்து தவிக்கின்றனர்களே!வாய் உலர்ந்ததால் பேசவும் முடியாமல் வருந்துகின்றனரே! இந்த நிலைமையைக் கேட்டால் தேவி என்ன சொல்வாளோ? இந்த துஷ்ட தைத்யர்களது செயலுக்கு என்ன உபாயம்? யோசனைசெய்! பதினாறு அக்ஷோஹிணி ஸேனைகளில் ஒருவன் கூட இதனால் பீடிக்கப் படாமலில்லையே! இப்படி நாம் தபிக்கும்போது ஸமயம் பார்த்து அஸுரர்கள் பாணத்தால் நம்மவர்களைத் தாக்குகின்றனரே! இதுகாலை நீயும் நானும் கலந்து ஒருபாயந் தேடவேண்டும். உனது ரதபர்வாவிலுள்ள மதுஸமுத்திரத்தைச் சக்திகளின் தாஹத்தை அடக்கும்படி கட்டளையிடு. ஸ்வல்பமான ஜலத்தால் இவர்களது தாஹம் அடங்காது. அந்தக்கடலே சக்திக் கூட்டத்தைச் சந்தோஷப்படுத்தும். ஆதலால் எல்லாருடைய

தாகத்தையும் சமனம் செய்து, பலத்தை யளித்து, ஸமரில் உற்சாகத்தை யூட்டுவதுமான மதுக்கடலை ஏவுவாயாக,'' என்று கூற, தண்டநாதை ஸந்தோஷங்கொண்டு அக்கடலை யழைத்துத் தாகசமனம் செய்யும்படி உத்தரவிட்டாள். மதத்தினுல் சிவந்த கண்களுள்ளதும் ஸ்வர்ணத்தாமரை மாலை யணிந்ததுமான அந்தக் கடல், சிலவிடத்தில் ஸூர்ய கிரணம் போல் சிவப்பாகவும், சிலவிடத்தில் மயில் தோகையின் வர்ணமாகவும், சிலவிடத்தில் வெண்மையாகவும், யானை துதிக்கையளவு மது தாரைகளைக் கோடி கோடியாக வர்ஷித்தது. புஷ்கலாவர்த்தகம் முதலிய பிரளயகால மேகங்களால் பெருக்கப்பட்ட மத்யக்கடல் சக்தி ஸேனைகளினிடையே பெருகிற்று. அதன் நறுமணமானது இறந்தவரைப் பிழைப்பிக்கும்; பலமற்றவனை பலவானுகச் செய்யும்.

அபரிமிதமான மத்ய தாரைகளால் தாகமடங்க, சக்திகள் மிக உற்சாகத்துடன் எழுந்தனர். இந்தத் தாரையானது தைத்தியஸேனையினருகே செல்லாதபடி கதம்பவநவாஸினீ எனும் சக்தி அழகிய ஒரு கோட்டையை அமைத்தாள். இதைக் கண்டு எல்லோரும் வியந்தனர். யார் யாருக்கு எந்தெந்த வகையான மதுவில் விருப்பமோ அந்தந்த விதமான கௌடீ, பைஷ்டீ, மாத்வீ, வல்கீ, காதம்பரீ, ஹைறந்தாலீ, லாங்கலேயா, தாளஜாதம், கல்பவிருக்ஷோத்பவா முதலிய பலவகையான மதுக்களை அக்கடல் வர்ஷித்தது. அவைகள் மிக ருசிகரமாயும், நல்ல மணமுள்ளதாயும், மதத்தையும் உத்ஸாகத்தையுமளிக்கவல்லதாயும், பலவர்ணமுள்ளதாகவும், சிறிது புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, தித்திப்பு முதலிய ருசிகளுள்ளதாயுமிருந்தன. ஐராவதத்தின் துதிக்கை போல் விழும் அத்தாரைகளை ஒரு முகூர்த்தகாலம் அண்ணாந்து நின்று சக்திகள் பருகினர்.

பின்னர் மதுக்கடல் பழயபடி திவ்ய வடிவமெடுத்துத் தண்டநாதையை வணங்கி, "தேவி! மஹாராக்ஞியின் ஸேனைகளைப் பார்! தாகமகன்று களைப்பு நீங்கி சிலர் ஆடுகின்றனர்;

சிலர் பாடுகின்றனர்; சிலர் கைகளால் தாளம் போடுகின்றனர்; சிலர் மார்பு குலுங்கச் சிரிக்கின்றனர். ஆநந்தத்தால் ஒருவர்மேலொருவர் விழுகின்றனர். மதத்தால் வஸ்த்ரம் நழுவச் சிலர் தட்டுத் தடுமாறி நடக்கின்றனர். சிலர் தங்களது ஆயுதங்களைச் சுழற்றிக் கொண்டு யுத்த ஸந்நத்தர்களாகின்றனர்" என, இங்ஙனம் குறிப்பிடப்பட்ட சக்திகளைப் பார்த்து மிக ஸந்தோஷமடைந்த தண்டிநீ, மதுக்கடலைப் பார்த்து, "ஓ மதுக்கடலே! மிக ஸந்தோஷமடைந்தேன்! நீ பரம ஸஹாயஞ் செய்தாய்! தேவகார்யத்தை நிர்விக்நமாகச் செய்தாய். அதனாலும், எனது பிரஸாதத்தினாலும் வாஜபேயம் முதலிய யாகத்தில் நீ ஸோம பாநம் போல் அத்யந்த உபயோகமுள்ளவனாவாய். மந்த்ரத்தினால் சுத்தமான உன்னை யாகத்தில் ஸமஸ்த தேவதைகளும் பருகுவார்கள். யாகங்களில் மந்த்ர சுத்தியை யடைந்த உன்னைப் பருகி ஸித்தி, ரித்தி, பலம், ஸ்வர்க்கம், மோக்ஷம் முதலியவைகளை ஸாதுக்கள் பெறட்டும். மஹேச்வரீ, மஹாதேவன், பலதேவர், பார்க்கவர், தத்தாத்ரேயர் முதலிய மஹாஜனங்கள் உன்னைப் பருகுவர். யாகத்தில் உன்னை யர்ச்சிப்பவருக்கு நீ ஸர்வஸித்தியையும் அளிப்பாய்" என்று வரமளித்தாள்.

மறுபடியும் மந்த்ரிணியை விரைவாக யுத்தத்திற்கு ஸந்நாஹம் செய்யும்படி தூண்டினாள். சக்திகளுக்கும் தைத்யர்களுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஆங்கு தோன்றிய மஹாட்டஹாஸமானது எட்டுத்திசைகளிலுமுள்ள மலைகளைப் பிளந்தது.

புதிய மதுபானத்தால் மதங்கொண்டு கண்கள் சிவக்க சக்திகள் சத்ரு ஸேனையின்மீது விளையாட்டாக விழுந்தனர். மதுவினாற் சிவந்த சக்திகளது நேத்திரங்களும், சத்ருக்களின் ரத்தத்தினால் சிவந்த சக்திகளது சஸ்த்ரங்களும் மிக அழகாக விளங்கின. யமதர்மராஜனும் பயந்தோடும்படி அவ்வளவு கடுமையாகப் போர் நிகழ்ந்தது. மதத்தால் தட

மாடும் பாதங்களை யுடையவர்களும், சிவந்த கண்களை யுடையவர்களும், வீரவாதஞ் செய்யும்போது பொருத்த மில்லாத சொற்களைச் சொல்பவர்களும், ஸந்தோஷத்தால் சிலிர்த்த கதம்ப மொக்குகள் போன்ற உரோமங்களுடன் கூடிய சரீரங்களையுடையவர்களுமான சக்திகள் யுவராஜனது ஸேனைகளை நாசஞ் செய்தார்கள். ஓர் அக்ஷௌஹிணீ ஸேனை யைத் தண்டிநீ ஒருவளே கொன்றாள். நூற்றைம்பது அக்ஷௌஹிணீ ஸைன்யங்களை மந்த்ரிணீதேவி கொன்றாள். மதத்தால் சிவந்த கண்களையுடைய அச்வாரூடை முதலிய தேவிகள் நூற்றைம்பது அக்ஷௌஹிணீ ஸைன்யங்களை யமனுக்கு விருந்தினர்களாக அனுப்பினார்கள். அச்வாரூடை மிக தீக்ஷணமான அங்குசத்தால் உலூகஜிதனைக் குத்தி யம லோகத்திற்கு அதிதியாக அனுப்பினாள். ஸம்பத்கரீ முதலிய சக்தி ஸேநாநாயிகைகள் புருஷேணன் முதலிய ஒன்பது பேர்களைக் கொன்றார்கள். ஸூர்யன் அஸ்தமனமாகும் போது ஸமஸ்த சத்ரு ஸேனைகளும் அழிக்கப்பட்டன. கோபமுள்ள ச்யாமளா விசுக்ரனுடன் போர்புரிந்தாள். தேவர்களுமஞ்சும்படி அஸ்த்ரங்களுக்குப் பிரத்யஸ்த்ரங் களைப் பிரயோகித்து மந்த்ரிணீ பெரும்போர் நிகழ்த்தினாள். மிக தீக்ஷணமான விசுக்ரனது ஆயுதங்களையும், கொடியையும், ஸாரதியையும், வில்லின் நாணையும், தண்டத்தையும் துண்டு துண்டுகளாகக் கண்டித்தாள். அக்நி போல் ஜ்வலிக்கும் பிரஹ்மசிரஸ் எனும் அஸ்தரத்தை விசுக்ரன் மேல் பிரயோ கிக்க, அதனால் அவனுடல் சேதிக்கப்பட்டு, அவன் பூமியில் விழுந்திறந்தான். மதோத்ததையான தண்டநாதை தன் உக்ரமான முஸலாயுதத்தால் அடித்து விஷங்கனுடன் யுத்தஞ் செய்தாள். அந்தத் துஷ்ட தானவனும் யம தண்டம்போன்ற கதையைத்தூக்கி எல்லோரும் நடுங்கும்படி யுத்தஞ் செய்தான். கதையால் ஒருவருடலை யொருவர் தாக்கிக் கொண்டும், வீராட்டஹாசஞ் செய்தும், இடம் வலமாகச் சுற்றிச் சுற்றிப் பலவகையாகக் கதைகளைச் சுழற்றிக் கொண்டும், ஒருவரை யொருவர் மூர்ச்சையாகும்படி அடித்தும், பலமாகத் தாக்கும் போது யார் ஏமாறுவார் என்று ஸமயம் பார்த்தும், முஸலமும்

கதையும் ஒன்றோடொன்று உறைவதால் ஆகாசத்தைக் கலக்கித் தண்டநாதையும், தைத்யேசனும் யுத்தஞ் செய்தனர். பாதி இரவு வரையில் யுத்தஞ்செய்து தேவி மிகக் கோபங் கொண்டு விஷங்கனைக் கொல்லக் கருதினள். உடனே அவன் தலைமீது ஆழப்பதியும்படி கலப்பையை யெறிந்து, அவனை அதன் மூலமாக யிழுத்து முஸலத்தால் ஓங்கி அறைந்தாள். உடனே மஹாஸுரனது தலை சுக்கல் சுக்கலாகி, அவன் உயிரற்றுப் பூமி மீது விழுந்தான். இத்தகைய பெருங் கார்யத்தைச் செய்துவிட்டு மந்த்ரிணியும் தண்டநாதையும் மற்ற சக்திகளுடன்கூட மீதி இரவுப்பொழுதை அங்கேயே கழித்தார்கள். அன்றிரவுப் பொழுதானது பண்டாஸுரனது ஆயுளுடன் கூடவே கழிந்தது. யுத்தத்தால் மிகக் களைப் படைந்த தன் ஸேனையை தண்டிநியும் மந்திரிணியும் தம் கூடாரத்திற்கழைத்துச் சென்றனர்.

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று. 121 சுலோகங்கள்.

இருபத்தாறும் அத்தியாயம்

ஸ்ரீலலிதை பண்டாஸுரனுடன் போர்புரிதல்

அகஸ்தியர் :—ஹே அச்வாநந! மஹாப் பிராக்ஞ! மந்த்ரிணியின் பலம், தண்டநாதை செய்த விஷங்கனின் வதம் இவற்றை நன்கு வர்ணித்தீர்கள். இரணகளத்தில் ஸ்ரீ தேவி யின் பராக்ரமத்தைக் கேட்க விரும்புகிறேன். ஸஹோதரர் கள் இறந்ததைக் கேட்டு பண்டன் என்ன செய்தான்? இரணத்தில் உத்ஸாஹம் எப்படி யிருந்தது? எவரோடு அவன் யுத்தஞ் செய்தான்? ஸஹோதர்களையும் புத்திரர் களையும் பறிகொடுத்த அவ்வஸுரனுக்கு உதவி புரிந்தவர்கள் யாவர்?

ஹயக்ரீவர் :—மஹாப் பிராக்ஞரே! ஸர்வ பாபங்களை யுமகற்றுவதும், அணிமாதி ஸித்திகளைத் தருவதும், புண்யமு

மான ஸ்ரீ லலிதாதேவியின் சரிதத்தைக் கேள்! விஷுவ அயநாதி புண்யகாலங்களிலும், *பஞ்ச பருவங்களிலும் இதைக் கீர்த்தநம் செய்தால் ஸர்வ பாபங்களையு மகற்றி ஸகல ஸித்தி களையு மளிக்கும்.

இரணத்தில் உத்ஸாஹமுள்ள தனது இரு ஸோதரர் களும்கொல்லப்பட்டதைக் கேட்டு, பண்டாஸுரன் கதறினன். அவிழ்ந்த சிகையுடன் மூர்ச்சையாகி மண்மீது விழுந்தான். ப்ராதாவின் வியஸனத்தால் வாடி, யாரென்ன சொல்லியும் அவன் ஆச்வாஸமடையவில்லை. அவர்களையே நினைத்து நினைத்துப் பலமுறை வாய்விட்டுக் கதறியழுதான். குடி லாக்ஷன் பலவகையாகப் பல முறை சமாதானப் படுத்தினன். அதைக் கேட்டு, பண்டன் சோகத்தை விட்டுக் கோபங் கொண்டு, புருவத்தை நெறிக்க, நெற்றிச் சுறுங்கி மிகக் குரூர மாக மாற, கட்டழல் போல் கண்கள் சிவக்க, கருநாகம்போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, அடிக்கடி கத்தியைத் தொட்டு உதறி, கோபத்தால் ஹுங்காரஞ் செய்து, உத்பாத மேகம் போல் கர்ஜித்து ஸமஸ்த ஸேனபதியான குடிலாக்ஷனைப் பார்த்து, “எந்த துஷ்டையின் மாயா பலத்தால் யுத்தத்தில் ப்ராதாக்களும் புத்திரர்களும் ஆயிரக் கணக்கான ஸேநாபதிக ளும் கொல்லப்பட்டார்களோ, அந்த மிக துஷ்டையின் கழுத்தி லிருந்து வரும் ரத்தத்தால் சஹோதரர் புத்திரர் இவர்களது சோகாக்நியை அவிப்பேன்! ரே குடிலாக்ஷ! நீ போ! ஸேனை களை ஸன்னஹம் செய்!” என்று பண்டன் கூறி, வஜ்ரம் விழுந்தால் கூட அதை லக்ஷியஞ் செய்யாத பெரிய கடின மான கவசத்தை மாரிலணிந்தான். இரு பாணப்பெட்டிகளைப் பின்புற மணிந்து, கம்பீரமான நாண் கயிற்றினது சப்தத் தோடு கூடிய மிகக் கடினமான வில்லை யேந்தி காலாக்நிபோல் கோபங்கொண்டு தன் நகரத்திலிருந்து கிளம்பினன்.

---

* மாஸ ஸங்க்ரமணம், அமாவாசை, பௌர்ணமி, கிருஷ்ணாஷ் டமி, கிருஷ்ண சதுர்த்தசி.

நான்கு துவாரங்களில் ரக்ஷகராக வைக்கப்பட்டிருந்த தாளஜங்கன் முதலியவர்களும் எண்ணிறந்த அஸ்த்ர சஸ்த்ரங்களுடன் அவனைப்பின் தொடர்ந்தனர். முப்பத்தைந்து ஸேனாதிபதிகளும் கோபங் கொண்ட குடிலாக்ஷனும் நாற்பது ஸேனா வீரர்களும் சேர்ந்துவர, இரண்டாயிரத்து நாற்றெண்பத்தைந்து அக்ஷௌஹிணீ சேனைகளும் சத்ருக்களையழிக்க விளையாட்டாக அஸுரனுடன் சென்றன. ஸர்வ ஸேனைகளுடனும் பண்டாஸுரன் ஊரை விட்டுக் கிளம்பும்போது சூன்யக நகரம் சூன்யமாகவே யிருந்தது. பெண்கள் மாத்திரமே அங்கு தங்கி யிருந்தனர். மஹாரதனான தைத்யேந்திரன் ஆபீலம் எனும் சிறந்த ரதத்திலமர்ந்தான். அதை ஆயிரம் ஸிம்மங்களிழுத்துச் சென்றன. அவன் கையில் சந்திர நிலா போல் காந்தியுள்ளதும், காலாக்நிபோற் பிரகாசிப்பதுமான யாதனை எனும் பெயருள்ள கத்தி ஜ்வலித்தது. இங்குமங்கும் ஸேனைகள் நடக்கும்போதுண்டான தூளிகள் ஆகாயத்திற் பறந்து அந்த ஸேனையின் பாரத்தைச் சுமக்க முடியாமல் பூமியே மேலே கிளம்பி விட்டாளோ என்ற எண்ணத்தை உண்டு பண்ணிற்று. பூமியின் மீது இடம் போதாமல் சிலர் ஆகாய மார்க்கமாய்க் கிளம்பினர். சிலர் பூமியில் நடப்பவரது தோள் மீது நின்ற வண்ணமாய்ச் சென்றனர். திக்குகளிலும் பூமண்டலத்திலும் ஆகாயத்திலும் அந்த ஸைன்னியங்கள் அடங்கவில்லை. ஒருவர் மீதொருவர் உறைந்துகொண்டே மிக ச்ரமத்துடன் அந்த ஸேனைகள் கிளம்பிற்று. மிக்க நெருக்கமாயிருந்ததால் சிலர் தேர்ச் சக்கரங்களிலும், சிலர் யானையின் கால்களிலும் அகப்பட்டு விழுந்தனர்.

இப்படி ஸைன்யங்கள் கிளம்பும்போது பேரிடிபோல் ஒரு ஸிம்ஹநாதம் கேட்டது. பண்டாஸுரனது முகத்திலிருந்து கிளம்பினதும், அத்யந்த கொடூரமாயுள்ளதுமான அது ஜகத்தையே பிளந்தது. ஸமுத்திரங்கள் உலர்ந்தன. சந்திர ஸூர்யர்கள் பயந்தோடினர். நக்ஷத்ரங்கள் ஆகாயத்திலிருந்து உதிர்ந்தன. பூமி ஊசலாடிற்று. திக்கஜங்கள்

திகைத்தன. வானவர் மூர்ச்சித்தனர். சக்திகளது கூடாரமும் திடீரெனப் பயத்தால் வாடிற்று. யானை குதிரைகள் மிக சிரமப்பட்டு பிராணனை விடாது ரக்ஷித்தன. பயத்தால் நழுவிய ஆயுதங்களைச் சக்திகள் மறுபடியும் கையிலேந்தினர். அக்நிக் கோட்டையுமவிந்து மறுபடியும் ஜ்வலித்து நின்றது. தைத்யேந்திரனது ஸிம்ஹநாதத்தாலும், ஸேனாபதிகளது வில் சப்தத்தினாலும், யோதர்களுடைய கூக்குரலாலும் ஜகத்தானது சப்த மயமாகவிருந்தது. அந்தப் பெரும் சப்தத்தினால் பண்டாஸுரன் தானே வருகிறானென நிச்சயித்து ஸ்ரீ லலிதாதேவியுந் தானே யுத்தத்திற்குக் கிளம்பினாள். மற்ற சக்திகளால் அவனுடன் பெரும்போர் புரியமுடியாதென்றெண்ணி, துஷ்ட பண்டனுடன் சண்டைசெய்ய தேவியே ஆரம்பித்தாள்.

ஸ்ரீசக்ரராஜ ரதமானது கிளம்பிற்று. அது ரிக் யஜுஸ் ஸாம அதர்வண வேதங்களையே சக்ரங்களாக யுடையது. தர்மார்த்த காமமோக்ஷமாகிய சதுர்வித புருஷார்த்தங்களே அதற்குக் குதிரைகள். ஆனந்தமே அதற்குத் துவஜம். அதில் ஒன்பது பர்வாக்களிருக்கின்றன. அந்தந்த பர்வாக்களிலுள்ள சக்திகள், மிகப்பெரிய விற்களை கைகளி லேந்தி பதினாயிரக் கணக்கான பரிவாரங்களால் சூழப்பட்டு அந்த ஸ்ரீரதத்தை நான்கு புறங்களிலும் காப்பாற்றி வருகின்றனர். அது பத்து யோஜனை உயரமும் நான்கு யோஜனை அகலமுமுள்ளது. மஹாராக்ஞியின் திவ்யமான சக்ரராஜ ரதேந்த்ரம் மெதுவாக சலிக்கும்போது, அதற்கு முன்னே கேய சக்ரமும், பின்னால் கிரிசக்ரமும் சென்றன. மற்ற சக்திகள் வாஹனங்களின் மீது அமர்ந்து அதன் பின் சென்றனர். ஸிம்ஹம், ஒட்டை மனிதன், பாம்பு, மிருகம், பக்ஷி, குதிரை யானை, *பேருண்டம் *சரபம், புலி, வாதமிருகம் (ஒருவித மான்) இது போன்ற பற்பல வாஹனங்களிலமர்ந்து

** இவ்விரண்டும் இப்போது காணப்படவில்லை யெனினும் சில ஆலயங்களில் வாஹனமாகவும், பிம்பமாகவும் காணப்படுகின்றன.

சக்திகள் பண்டாஸுர யுத்தத்தில் ஊக்கமுள்ளவர்களாகக் கிளம்பினார்கள். ஒரு யோஜனை தூரம் வந்நிப் பிராகார வாசற்படி விசாலமாக இருந்தாலும் மிகப் பெரிய சக்தி ஸேனைகளின் கூட்டத்திற்கு அது போதாததாக யிருந்தது. இதைக்கண்ட ஜ்வாலாமாலினீ சக்தி ஸேனைகள் நெருக்க மில்லாமல் ஸுகமாக வெளிக்கிளம்பட்டு மென்ற எண்ணத் தால் வாசற்படியை இன்னும் அதிக விஸ்தாரமாகச் செய்தாள். உலக க்ஷேமத்திற்காகவே உதயமான ஸ்ரீ ஜகன்மாதா அதி தீவ்ரமானப் பிரதாபத்துடன் அக்நிக்கோட்டை வாயற்படி வழியாகக் கிளம்பினாள். அச்சமயம் தேவ துந்துபிகள் முழங்கின. புஷ்ப வர்ஷங்கள் வர்ஷித்தன. ஸ்ரீ ரதத்தின் மீதுள்ள முத்துக்குடை மிகப் பிரகாசமாக விளங்கிற்று. ஸ்ரீ தேவியின் ஜயத்தை காட்டக்கூடிய பற்பல சுப நிமித் தங்கள் சக்தி ஸேனையில் காணப்பட்டன. அஸுர ஸேனை யிலோ பற்பல அபசகுனங்கள் தோன்றின. பிறகு இரண்டு ஸேனைகளுக்கும் மிக பயங்கரமான யுத்தம் ஆரம்பமாயிற்று. பாணக்கூட்டத்தால் உலகெலாம் இருள் சூழ்ந்தது. யானைக் கூட்டங்கள் அறுபட ஆங்கிருந்து ரக்த ஆறு ஓடிற்று. சக்தி களது சரங்களால் தைத்யர்களது வெண்குடைகள் அறு பட்டு பூமியிலே விழுந்தன. ஆகாயமோ, பூமியோ, திக்கு களோ ஒன்றுங் காணப்படவில்லை. எங்கும் ஸேனைகள் கிளப்பிய ஒரே புழுதிதான் காணப்பட்டது.

இரு ஸேனைகளும் கடுமையாகப் போர் புரிந்தபோது இருகரைகளும் பிரவாஹம் புரள ஒரு பெரிய ரக்த நதி ஓடிற்று. தலைக ளறுபட்டவுடன் பழைய வேகத்தால் தாண்டவமாடும் கபந்தங்களே அந்நதிக்கரைகளில் உள்ள விருக்ஷங்கள் போலிருந்தன. தைத்யர்களது தலை மயிரே பாசி போலிருந்தது. அறுந்து விழுந்த வெண்குடைகளே வெண்டாமரை போலிருந்தன. சக்ரத்தாலறுப்பட்ட பெரும் யானைக் கூட்டத்தினது பாதங்கள் ஆமைகள் போலிருந்தன. சக்திகளாலறுக்கப்பட்ட மதகஜங்களது தலைகள் பர்வதங்கள் போல் பிரகாசித்தன. காம்பறுந்து வீழ்ந்து கிடக்கும் சாம

ரங்கள் நுரைபோல் விளங்கின. கத்திகள் கரைகளி லுள்ள மரங்களில் படர்ந்துள்ள கொடிகள் போலிருந்தன. தைத்ய வீரர்களது கண்களின் வரிசைகள் முத்துச் சிப்பிகள் போலிருந்தன.

இங்ஙனம் யமனுக்கும் பயத்தைத் தரும்படியான யுத்தம் நிகழ்ந்தது. நான்காவது தினம் காலை முதல் இரண்டு யாமங்கள் வரையில் இரு ஸேனைகளுக்கும் நடந்த போர் மிகக்கடுமையாகவும் பயங்கரமாகவுமிருந்தது. பின்னர் ஸ்ரீ லலிதா தேவிக்கும் பண்டனுக்கும் யுத்தமாரம்பமாயிற்று. அஸ்த்ரப் பிரத்யஸ்த்ரங்களின் உறைச்சலால் உண்டான சப்தம் திக்குகளெல்லாம் வியாபித்தது. வில்லின் நாணொசையாலும் ஹுங்காரத்தினாலும் இரணகளம் மிகப் பயங்கரமாயிருந்தது. அச்சண்டையில் ஸ்ரீதேவியின் கரங்கள் எப்போதும் அம்புறாத்தூணியிலிருந்து பாணத்தை யெடுப்பதும் வில்லில் தொடுப்பதும் விடுவது மாகவே காணப்பட்டது. அதிவேகமாகக் கைகள் சுறுசுறுப்பாக அந்தந்த வேலையிலீடுபடும்போது வேறொன்றும் செய்வதாகத் தெரியவில்லை. ஸ்ரீ மஹாராக்ஞியின் பாணப் பிரயோகமானது, வில்லுடன் சேர்க்கும்போது பாணம் ஒன்றாகவும், வில்லிலிருந்து கிளம்பும் போது பத்தாகவும், ஆகாசத்தில் செல்லும்போது நூறாகவும் தைத்ய ஸேனையினருகே செல்லும்போது ஆயிரமாகவும், தைத்யரின் அங்கத்தில் தைக்கும்போது கோடியாகவும் பெருகிற்று. பாணங்களால் இரணகளத்தை ஒரே இருளாக்கி, ஆகாசத்தையும் மறைத்து மஹாராக்ஞியானவள் அஸுரனது மர்மங்களைப் பிளந்தாள்.

ஸ்ரீ லலிதையும் பண்டனும் திவ்யாஸ்த்ரம் விடுதல்.

பிறகு கோபத்தால் கண்கள் சிவக்கப் பண்டாஸுரன் ஸ்ரீ லலிதா பரமேச்வரியின் மீது பெரும் பாணவர்ஷத்தை வர்ஷித்தான். அன்றியும் அந்ததாமிஸ்ரம் என்னும் இருளை யுண்டு பண்ணும் மஹாஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். மஹாதரணீ என்னும் ஸூர்யாஸ்த்ரத்தால் மஹேச்வரீ அதை

யகற்றினாள். பாஷண்டாஸ்த்ரத்தைப் பண்டன் பிரயோகிக்க அதை யகற்ற ஜகதம்பிகை காயத்ரியஸ்த்ரத்தை நினைத்தாள். சக்திகளது கண்களை மறைக்கும் அந்தாஸ்த்ரத்தைப் பண்டன் ஸ்ருஷ்டித்தான். அம்பிகை சக்ஷுஷ்மதீ எனும் மஹாஸ்த்ரத்தால் அதை அடக்கினாள். சக்திநாசம் எனும் அஸ்த்ரத்தை அப்பெருஞ் சண்டையில் பண்டன் விட்டான். விச்வாவஸு என்பவருடைய அஸ்த்ரத்தால் அதன் திமிரைத் தேவி அகற்றினாள். மிக்க கோபங்கொண்ட பண்டன் மிக உயர்ந்த அந்தகா (யமா) ஸ்த்ரத்தை யுண்டுபண்ணினான். தேவி மஹாம்ருத்யுஞ்ஜயாஸ்த்ரத்தால் அதன் பலத்தை நாசஞ் செய்தாள். எல்லா அஸ்த்ரங்களையும மறக்கும்படி, ஸர்வாஸ்த்ர ஸ்ம்ருதி நாசம் எனுமஸ்த்ரத்தைப் பண்டன பிரயோகித்தான். சக்ரேசியான தேவி தாரணாஸ்த்ரத்தால் அந்த பயத்தை நாசஞ்செய்தாள். சக்திகளுக்குப் பயத்தைத்தரும் பயாஸ்த்ரத்தைப் பண்டன் உண்டுபண்ண, ஜகதம்பிகை அபயத்தை யளிக்க வல்ல ஐந்த்ராஸ்த்ரத்தை விட்டாள். தாநவன் மஹா ரோகாஸ்த்ரத்தைச் சக்தி ஸேனைமீதுப் பிரயோகித்தான். அதிலிருந்து * ராஜயக்ஷ்மா முதலிய ஆயிரக்கணக்கான நோய்களுண்டாயின. அவற்றைப் போக்க ஸ்ரீ லலிதா பரமேச்வரீ நாமத்ரய மஹாமந்த்ரமெனும் மிகப்பெரிய அஸ்த்ரத்தை விட்டாள். அவ்வஸ்த்ரத்திலிருந்து அச்யுதன், அநந்தன் கோவிந்தன் எனும் மூவர்கள் தோன்றி ஹுங்காரத்தினால் ஸகல ரோகங்களையும் அழித்துவிட்டு, தேவியை வணங்கி, அவளுத்தரவுபடி உலகில் தேவீ பக்தர்களது வியாதியை அழிப்பதற்காக அவர்கள் தம்மிருப்பிடஞ் சென்றனர்.

பண்டன் ஆயுர்நாசநம் என்னுமஸ்த்ரத்தை விட்டான். ராக்ஞீ, காலஸங்கர்ஷிணீ ரூபமான ஓர் அஸ்த்ரத்தை அதற்குப் பதிலாகப் பிரயோகித்தாள். கட்டிலடங்காத மஹாஸுராஸ்த்ரத்தைப் பண்டாஸுரன் பிரயோகித்தான். அதிலிருந்து மகத்தான சரீரமுள்ள மது, கைடபன், மஹிஷாஸுரன்

* கொடிய க்ஷயரோகம்.

தூம்ரலோசனன், சண்டமுண்டாதிகள், சிக்ஷூரன், சாமரன், ரக்தபீஜன், சும்பன், நிசும்பன், காலகேயன் முதலிய அஸுரர்களும், தாம்ரன் முதலிய மற்றும் பற்பல மஹா ஸுரர்களும் தோன்றி கொடூரமான ஆயுதங்களால் சக்தி ஸேனைகளை மர்த்தநம் செய்தனர்.

தைத்யர்களாலடிக்கப்பட்ட சக்திகள் ஹா ஹாவென்று கதறிக்கொண்டு "காப்பாற்று! சீக்கிரம் காப்பாற்று!" என லலிதாதேவியைச் சரணமடைந்தனர். பிறகு தேவி மிகக் கோபங்கொண்டு ரோஷத்தால் அட்டஹாஸஞ் செய்தனள். அதன் காரணமாக ஸகல தேவர்களது தேஜஸால் நிர்மிக்கப்பட்ட மிகுந்த யசஸ்ஸுள்ள துர்க்கை என்னும் ஒரு சக்தி தோன்றினாள். அத்தேவிக்குச் சூலத்தைச் சிவனளித்தனர். விஷ்ணு சக்ரத்தைத் தந்தனர். வருணன் சங்கத்தையும், அக்நி சக்தியையும், வாயு வில்லையும் அழிவற்ற அம்பறாத்தூணிகளையும், இந்திரன் வஜ்ராயுதத்தையும், ஐராவதம் மணியையும், காலன் மஹா தண்டத்தையும், வருணன் பாசத்தையும், பிரஹ்மா குண்டிகா எனும் பாத்ரத்தையும், குபேரன் சஷகமென்னும் பான பாத்ரத்தையும், ம்ருத்யு கத்திகேடயங்களையும், ஸமுத்ரராஜன் முக்தாஹாரத்தையும் தந்தனர். விச்வகர்மா அரிய ஆபரணங்களையும் அளித்தனன். இவை யாவற்றையும் துர்க்கையணிந்து கொண்டனள். பிறகு ஸூர்யகிரணம்போல் ஒளி பொருந்திய அங்கங்களால் ஸகல ஆயுதங்களையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டு மற்றவர்களளித்த இதர உபகரணங்களையும் ஏற்றுக்கொண்டு ஸிம்ஹ வாஹநத்திலமர்ந்து நாராயணி எனும் அத்துர்க்கை யுத்தஞ் செய்தனள். மஹிஷாஸுரன் முதலிய பல அரக்கர்களை மாய்த்தனள். *சண்டிகா ஸப்தசதி என்னும் நூலில் எப்படி வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே மஹிஷன் முதலியவர்களது மதத்தை அடக்கி அற்புதமாக அவள் போர் புரிந்தனள். மிகக் கடினமான அந்தக் கார்யத்தைச் செய்து அவள்

* மார்கண்டேய புராணத்தில் இதைக் காணலாம்.

ஸ்ரீலலிதா தேவியை நமஸ்கரித்தாள். பின்னர் அந்த பண்டன் மூகாஸ்த்ரமெனும் ஊமையாக்கும் ஒரு பாணத்தைப் படைத்து சக்தி ஸேனைமீது அனுப்பினான். ஜகதம்பிகையானவள் மஹாவாக்வாதினீ எனும் பாணத்தால் அதை அகற்றினாள். பண்டாஸுரன், வித்யா வடிவமான வேதத்தைக் கொள்ளை கொள்ளும் கொடிய அஸுரர்களைப் படைத்தான். மஹாராக்ஞியின் வலது கைப் பெருவிரல் நகத்திலிருந்து தோன்றிய மஹா மத்ஸ்ய வடிவங்கொண்ட ஸ்ரீமந்நாராயணன், வேதத்தை அபகரித்தவர்களான ஸோமகன் முதலியவர்களைக் கொன்று சென்றார். போரில் பண்டதைத்யன் ஸமுத்ராஸ்த்ரத்தைப் படைத்தான். அதிலிருந்து கிளம்பிய பெரும் பிரவாஹத்தில் சக்தி ஸேனைகள் மூழ்கி விட்டன. பின்னர் ஸ்ரீலலிதாதேவி தனது வலதுகை ஆள் காட்டி விரலின் நகத்திலிருந்து ஆதிகூர்மத்தைப் படைத்தாள். அது பத்தாயிரம் யோஜனை தூரம் விசாலமான தனது முதுகு ஓட்டினால் சக்திகளைத் தாங்கி நின்றது. அதனால் சந்தோஷமடைந்த சக்திகள் ஸாகராஸ்த்ரத்தாலுண்டான பயத்தை விட்டனர். பிறகு பண்டன் ஹிரண்யாக்ஷ மஹாஸ்த்ரத்தை விட்டான். அதிலிருந்து ஆயிரம் கணக்காக கதைகளைக் கொண்டு யுத்தஞ் செய்யும் அஸுரர்கள் தோன்றினார்கள். அவர்களால் அடிக்கப்பட்ட சக்தி ஸேனைகள் பயத்தால் நடுங்கி இங்குமங்கும் ஓடி யுத்தஞ் செய்ய முடியாமல் தவித்தன. அதற்கு ஸ்ரீலலிதாதேவியின் வலது கை நடுவிரல் நகத்திலிருந்து கைலாசம் போல் வெண்மையான மஹாவராஹம் தோன்றிற்று. வஜ்ரம் போன்ற அவ்வராஹத்தால் கோடிக் கணக்கான ஹிரண்யாக்ஷர்கள் நாசஞ் செய்யப்பட்டு அழிந்தனர்.

பிறகு பண்டன் அதிக கோபங்கொண்டு புருவத்தை நெரிக்க, கோடிக்கணக்கான ஹிரண்யகசிபுகள் தோன்றினார்கள். ஜ்வலிக்கும் ஸூர்யனைப்போல் பிரகாசிக்கும் அவர்கள் பிரகாசமுள்ள ஆயுதங்களைக் கரங்களிலேந்தி சக்தி ஸேனைகளை நாசஞ் செய்தார்கள். ப்ரஹ்லாதனையும் பீடித்தார்கள். பரமா

நந்த லக்ஷணமான சக்திகளின் ஸந்தோஷமே ப்ரஹ்லாதன் என்னும் சிறுவனாகி, திரிபுரையைச் சரணமடைய, தேவிக்குக் கருணை யுண்டாயிற்று. அதனால், சக்திகளின் ஆனந்தமே உருவெடுத்து வந்த அப்பிரஹ்லாதனைக் காப்பாற்றத் தனது வலது கை மோதிரவிரல் நுனியை ஜகதம்பிகை உதறினாள். அதிலிருந்து, பிடரியை சிலுசிலுத்துக்கொண்டு, மூன்று கண்களும் ஜ்வலிக்க, ஸிம்ஹ முகமும், கழுத்திற்குக் கீழே மனித வடிவமுங் கொண்ட ஸ்ரீ ஜனார்த்தனர் தோன்றினர். அவர், நகங்களையே ஆயுதங்களாகக் கொண்டும், காலருத்ர ரூபமாய் கோரமான அட்டஹாஸஞ் செய்துகொண்டும், ஆயிரக்கணக்கான கைகளுள்ளவராய் ஸ்ரீலலிதையின் ஆக்ஞையின்படி பண்டனது புருவத்திலிருந்து தோன்றிய ஸகல ஹிரண்ய கசிபுகளையும் ஒரு க்ஷணத்திற்குள் மிகக் க்ரூரமாயுள்ள தன் நகங்களால் கிழித்தெறிந்தனர். ஸர்வ தேவதைகளையும் நாசஞ் செய்வதும், மஹா கோரமானதுமான மஹாபலீந்த்ராஸ்த்ரத்தை ஸ்ரீலலிதையைக் குறிவைத்துப் பண்டன் பிரயோகித்தான். அதன் கர்வத்தை யடக்க ஸ்ரீகாமேச்வரியினது வலதுகைச் சுண்டுவிரலின் நகத்திலிருந்து தோன்றிய நூற்றுக்கணக்கான வாமனர்கள் மஹா பலிஷ்டர்களாகவும், உத்ஸாஹத்துடன் பாசங்களைக் கரங்களிலேந்தி ஒவ்வொரு க்ஷணத்திலும் விருத்தியாகியும், அந்த அஸுராஸ்த்ரத்திலிருந்து தோன்றியவர்களைப் பாசங்களால் கட்டினார்கள். பின்னர், பண்டதைத்யன் இரணகளத்தில் ஹைஹயாஸ்த்ரத்தை யுண்டுபண்ணினான். அதிலிருந்து கார்த்தவீர்யார்ஜுனர்கள் கோடி கோடியாகத் தோன்றினர். பிறகு ஸ்ரீத்ரிபுரா தேவியின் இடதுகைப் பெருவிரலின் நகத்திலிருந்து தோன்றியவரும், கோபத்துடன் கூடியவரும், ஸிம்ஹநாதஞ் செய்பவருமான பரசுராமர், கொடூரமான கோடாலியின் நுனியால் அந்த அர்ஜுனக்கூட்டத்தை ஒரு நொடியில் நாசஞ்செய்து அழித்தனர். கோபங்கொண்ட பண்டன் ஒரு ஹூங்காரஞ் செய்தான். அதிலிருந்து சந்த்ரஹாஸமெனும் கத்தியை யுடையவனும், ஆயிரம் அக்ஷௌஹிணீ ராக்ஷஸ ஸேனைகளுடன் கூடியவனும், இருபது கைகளுள்ளவனுமான இராவணனென்

னும் இராக்ஷஸன் மிகுந்த கோபத்துடன் தோன்றினன். அவன், இளைய ஸஹோதரனுன கும்பகர்ணனுடனும், புத்ரனுன மேகநாதனுடனுங்கூடி, சக்திஸேனைகளை வெகுதூரம் நாசஞ் செய்தனன். பிறகு ஸ்ரீதிரிபுரா தேவியின் இடது கை ஆள்காட்டி விரலின் நகத்திலிருந்து லக்ஷ்மணப் பெருமானுடன்கூட ஸ்ரீகோதண்டராமன் தோன்றினர். தலையில் ஜடையும், இடையில் மரவுரியும், முதுகில் அம்பறாத்தூணிகளும் விளங்க நீலோத்பலம்போன்ற கறுத்த திருமேனியுள்ளவருமான அவர், அடிக்கடி தனுஸ்ஸை உதறிக்கொண்டு ஒரு க்ஷணத்திற்குள் இராக்ஷஸ ஸேனைகளனைத்தையும் திவ்யாஸ்த்ரங்களால் நாசஞ் செய்தனர். அன்றியுமவர் இராவணனையும் அவன் தம்பி கும்பகர்ணனையும் கொன்றார். இலக்ஷ்மணன் மேகநாதனை வதைத்தான். பண்டன் மஹா பயங்கரமான த்விவிதாஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். அதிலிருந்து சிவந்த கண்களுள்ள அநேக குரங்குகள் தோன்றின. கோபத்தினுற் சிவந்த முகங்களை யுடையதும், பலத்தில் ஹநுமானுக்குச் சமமான துமான ஒவ்வொன்றும் க்ரூரமான இச்சனுடன் சக்திஸேனையை நாசஞ் செய்தன. பிறகு ஸ்ரீலலிதா தேவியின் இடது கை நடுவிரல் நகத்திலிருந்து கோபத்தாலும் மதுவினுலும் சிவந்த கண்களுள்ளவரும், கறுப்பு வஸ்திரமுடுத்தியவரும், கைலாஸம்போல் வெண்மை நிறம் வாய்ந்த வருமான பலராமர் தோன்றி, த்விவிதாஸ்த்ரத்திலிருந்து உண்டான ஸமஸ்த வானரங்களையும் நாசஞ் செய்தனர்.

பிறகு அந்த பண்டாஸுரன், பெரிய ராஜாஸுராஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். அதிலிருந்து, அரசர்போல் ரூபங்கொண்ட சிசுபாலன், தந்தவக்த்ரன், ஸால்வன், காசிபதி, பௌண்ட்ரவாஸுதேவன், ருக்மீ, ஹம்ஸடிம்பகர்கள், சம்பரன், ப்ரலம்பன், பாணுஸுரன், கம்ஸன், சாணூர மல்லன், முஷ்டிகன், உத்பலசேகரன், அரிஷ்டன், தேநுகன், கேசி, காளியன், யமளார்ஜுநர்கள், பூதனை, சகடன், த்ருணுவர்த்தன் முதலிய பல அரக்கர்கள் அநேக ஸேனை

களுடன்கூடி சஸ்த்ரபாணிகளாகக் கிளம்பினர்கள். அவ்வெல்லோரையும் அழிக்க ஸ்ரீவாஸுதேவன் ஸ்ரீதேவியின் இடதுகை மோதிரவிரல் நகத்திலிருந்து தோன்றினர். அவர் தன்னை நான்கு *வ்யூஹங்களாகப் பிரித்துக்கொண்டனர். வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற அந்த நால்வரும் ஆயுதங்களை யேந்தி, துராசாரமுள்ளவர்களும், இராஜவேஷத்தால் தனது இராக்ஷஸ சரீரத்தை மறைத்துக்கொண்டவராயுமுள்ள அவர்களனைவரையும் நாசஞ் செய்தார்கள். அவர்களுமிறந்த பின்னர் கோபங்கொண்ட பண்டாஸுரன் தர்மத்தை யழிக்கும்படியான கலி அஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். அதிலிருந்து ஆந்த்ரர், புண்ட்ரர் மூர்த்திஜர், கிராதர், சபரர், ஹூணர், யவநர் முதலிய பாபிகள் தோன்றி, வேதத்தையழித்து, தர்மத்ரோஹஞ் செய்து பிராணிகளை ஹிம்ஸை செய்துகொண்டு, வர்ணாச்ரமங்களை யழித்து, †வர்ணஸாங்கர்யத்தையுண்டு பண்ணிக்கொண்டு அழுக்கடைந்த சரீரங்களை யுடையவர்களாய்த் திரிபுரையின் சக்திஸேனைகளை நன்ருய் மர்த்தனஞ் செய்தனர். பின்னர் தாமரைபோல் மிக அழகாய்ப் பிரகாசிக்கும் ஸ்ரீலலிதா தேவியின் இடதுகைச் சுண்டுவிரல் நகத்திலிருந்து கல்கி என்ற பெயருடன் ஜநார்த்தநன் அவதரித்தனர். மிகப் பிரகாசமும் அழகுமுள்ளவரான அவர், குதிரை மீதமர்ந்து, ஓர் அட்டஹாஸஞ் செய்தனர். இடி விழுந்ததுபோலுள்ள அவருடைய அந்தத் த்வனியினுல் கிராதர் முதலியோர் மூர்ச்சையற்று இறந்தனர். சக்திகளதைக்கண்டு மிக்க ஆனந்தமடைந்தனர்.

இங்ஙனம், தசாவதார நாதர்கள் அரிய கார்யங்களைச் செய்தபிறகு, ஸ்ரீலலிதாம்பிகையைப் பணிந்து கைகூப்பிக்கொண்டு நின்ருர்கள். ஸ்ரீதேவி அவர்களை நோக்கி, "இவ்வாறு ஒவ்வொரு கல்பத்திலும் மத்ஸ்யாதி அவதாரங்களால் தர்மத்தை ரக்ஷியுங்கள்," என்று கூறி அநுமதியளிக்க அனைவரும் வைகுண்டத்திற்குக் கிளம்பினர்.

---

* ஒருவித பகுதி

† ஒரு ஜாதி மற்ருெரு ஜாதியிடம் ஸந்ததியுண்டு பண்ணுதல்.

இவ்விதம் ஸமஸ்த அஸுரர்களும் நாசஞ் செய்யப்பட்ட பின், மிக்க கடின ஹ்ருதயமுள்ள பண்டன் மஹாமோஹா ஸ்த்ரத்தைப் பிரயோகித்தான். அதனுல் சக்திகள் யாவரும் மூர்ச்சையடைந்தார்கள். உடனே அம்பிகை சாம்பவா ஸ்த்ரத்தைப் பிரயோகித்து மஹாமோஹாஸ்த்ரத்தை யழித்தனள். அஸ்த்ரப் பிரத்யஸ்த்ர தாரைகளால் இங்ஙனம் பெரிய யுத்தம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் ஸூர்யன் சிவந்து அஸ்தகிரியை அடைய ஆரம்பித்தான்.

பண்டாஸுர வதம்.

பிறகு ஸ்ரீலலிதாம்பிகை நாராயணுஸ்த்ரத்தால் பண்டாஸுரனுடைய எல்லா அக்ஷௌஹிணி ஸேனைகளே யும் யுத்தத்தில் அக்நிக்கு இரையாக்கி சாம்பலேயே மிகுதி யாகும்படிசெய்தனள்; அன்றியும், மஹாராஜ்ஞியானவள் ப்ரள யகாலாக்நிபோல் ஜ்வலிக்கும் பாசுபதாஸ்த்ரத்தால் நாற்பது ஸேனுபதிகளேயுங் கொன்ருள். தனித்து ஏகாங்கியாய் நிற் பவனும், துஷ்டனும், ஸமஸ்த பந்துக்களேயு மிழந்தவனும், கோபத்தால்ஜ்வலிப்பவனும், உலகிற்குத்துன்பத்தையே விளே விப்பவனும், மஹாபலமுள்ளவனும், அத்யுக்ர பராக்ரமம் வாய்ந்தவனுமான பண்டமஹாஸுரனே ஜகன்மாதாவான ஸ்ரீலலிதாபரமேச்வரி ஆயிரம் ஸூர்யர்போல் பிரகாசிக் கும் மஹாகாமேச்வராஸ்த்ரத்தால் கொன்றனள். அந்த அஸ்த் ரத்திலிருந்து கிளம்பிய ஜ்வாலேயானது சூன்யகமென்னும் அஸுரபட்டணத்தினுள்ளே புகுந்து, ஆங்குள்ள பெண் கள், சிசுக்கள், பசுக்கள், தனம், தான்யமாகிய எல்லாவற் றையும் எரித்து இடத்தைமாத்ரம் மிகுதியாகச் செய்தது. பண்டனிறந்ததால் மூவுலகும் ஆனந்த தாண்டவம் செய்தன. விஜயலக்ஷ்மியுடன் விளங்கும் தேவியைச் சக்திகள் கண்டு பேரி, மத்தளம், காஹளம் முதலிய மங்கள வாத்தியங்களே முழக்கினர். ஸந்தோஷங்கொண்ட அமரர்கள் ஆகாயத்தி லிருந்து புஷ்பவர்ஷத்தை வர்ஷித்தனர். தேவ துந்துபிகள் முழங்கின. தென்றற்காற்று மந்தமாகவும் வாஸனேயுடனும்

வீசிற்று. திக்குகள் தெளிந்தன. ஆகாசம் நிர்மலமாக விளங்கிற்று. தேவ கந்தர்வஸ்த்ரீகள் மங்கள ஹாரத்தி எடுத்தனர். ஊர்வசி மேனகை முதலிய சிரேஷ்டமான அப்ஸரஸுகள் நர்த்தனம் செய்தனர். தேவ கந்தர்வ கின்னரர்கள் ஸந்தோஷத்தால் குதித்தனர். ஸ்ரீமஹாராக்ஞியின் பராக்ரமத்தை நினைத்து நினைத்து சகலசராசரங்களும் "இஃதென்ன! இஃதென்ன!" என்று ஆச்சர்யமடைந்து மயிர்க்கூச்சலடைந்தன. தேவகாயகர்களான கந்தர்வர்களும், தும்புருவும், நாரதரும், ஸாக்ஷாத் ஸரஸ்வதிதேவியும் இனிய கானங்களால் ஜயமங்கள பத்யங்களைப் பாடினார்கள். ஸந்தோஷமிகுதியால் மலர்ந்த முகங்களுள்ளவர்களும், மயிர்க்கூச்சலையே ஆபரணமாகப் பூண்டவர்களும், அடிக்கடி ஜய ஜய வென்று ஸ்ரீலலிதாதேவியைத் துதிப்பவர்களும், ஸந்தோஷத்தால் மெய் மறந்தவர்களுமாகி மதோன்மத்தர்களாய் அடிக்கடி கூத்தாடினார்கள். வஸிஷ்டர் முதலிய உத்தமர்களான ஸப்தரிஷிகள் ரிக் யஜுஸ் ஸாம அதர்வ ரூபமான மந்த்ரங்களாலும், ஹவிஸ்ஸால் அத்யந்த பாவநமான மஹாக்நி ஜ்வாலையைப்போன்ற மஹத்தான ஆசிர்வாதத்தாலும் ஜயச்ரீயை விருத்திசெய்தார்கள். அவர்களால் துதிக்கப்பட்ட ஸ்ரீலலிதை வெட்கத்தால் சிறிது தலை குனிந்து பண்டாஸுர ஜயத்திற்குப்பின் தன்னிருப்பிடஞ் செல்ல ஆரம்பித்தனள். தன் ஸேனையுடன் ஸம்பத்கரி தேவியும், பரதேவதையின் பாசாயுதத்திலிருந்து தோன்றியவளும் பராக்ரமமுள்ளவளுமான அச்வாரூடையும் தம் ஸேனையோடு அசைகின்ற கொடிகளால் மேக மண்டலத்தைப் பிளப்பவள்போல் முன்னே சென்றார்கள். மந்த்ரிணியும் தண்டநாதையும் தத்தம் சிறந்த ரதங்களிலமர்ந்து ஸ்ரீமஹாராக்ஞியின் இருபுறங்களிலும் நெருங்கிச் சென்றார்கள். இங்ஙனம் தேவ கார்யத்தைச் செய்து முடித்துக் குற்றமற்ற ரூபமுள்ளவளும், ஸ்ரீசக்ர ராஜரத மண்டலத்திற்கு அலங்காரச்ரீயாயுள்ளவளும், மூவ்வுலகிற்கும் மாதாவாயுமுள்ள ஸ்ரீகாமேச்வரீதேவி, ஸகல விபவங்களும் சிறந்து விளங்க விஜயஸ்ரீயுடன் நிறைந்திருந்தனள். யுத்தத்தில் கஷ்டப்பட்டவர்களும் பண்டனது

பிரபல பாணங்களால் அதிக தாபமடைந்தவர்களுமான தனது ஸமஸ்த ஸைன்னியங்களையும், சூரியன் அஸ்தமித்த பின் ஸ்ரீதேவி பிரஸித்தமானப் பிரபாவமுள்ள தன்னது கூடாரத்திற்கு அழைத்து வந்தனள்.

'ஓ தபோமஹிமையுள்ள அகஸ்தியரே! ஸ்ரீலலிதையால் செய்யப்பட்ட பண்டாஸுர ஸம்ஹார சரித்திரத்தை எவன் ஒருமுறை படிக்கிறானோ அவனுடைய பாபங்களனைத்தும் மழியும். அவன் அஷ்ட ஸித்திகளையுமடைவான். அவனது ஸ்வாதீனத்திலேயே அவனது முக்தியுமிருக்கிறது. பவித்ர மானதும், ஸமஸ்த பாபங்களை அகற்றக்கூடியதும், ஸமஸ்த ஸித்திகளை யளிக்கவல்லதுமான இந்த லலிதா பராக்ரமத்தை எவர்கள் புண்ய தினங்களில் படிக்கிறார்களோ அவர்கள் உத்தமமான பாக்ய ஸம்ருத்தியை யடைகின்றனர்.'

இருபத்தாறும் அத்தியாயம் முற்றிற்று. 174 சுலோகங்கள்.

இருபத்தேழாம் அத்தியாயம்.

பிரஹ்மாதிகள் செய்த ஸ்ரீலலிதா ஸ்துதி.

அகஸ்த்யர்:—ஹே ஹயக்ரீவ! மஹாப்ராக்ஞ! உத்தம மான கதையைக் கேட்டேன். ஸ்ரீலலிதாதேவியின் விசேஷ மான விக்ரமத்தை வர்ணிக்கும் மிகச்சிறந்த சரிதங்களால் யான் மிக்க ஸந்தோஷமடைந்தேன். மந்த்ரிணீ தண்ட நாதைகளுடைய அபரிமிதமான சக்தியையும் கேட்டு மகிழ்ந் தேன். ஸ்ரீஹயானந! நான்காவது தினமிரவு கழிந்தபின் யுத்தம் முடிந்த பிறகு அம்பிகை யாது செய்தனள்? திரு வாய் மலர்ந்தருள வேண்டும்.

ஹயக்ரீவர்:—புத்தியிற் சிறந்த கும்பஸம்பவ! பண் டாஸுரனைக் கொன்றபின் அந்த ஜகன்மாதாவினால் என்ன

கார்யம் செய்யப்பட்டதென்பதைச் சொல்லுகிறேன் கேளும். தைத்யரது யுத்தத்தில் பாணத்தினுல் பீடிக்கப்பட்ட சக்தி ஸேனைகளனைத்தையும் அமிருதத்தைப் பெருக்கும் தனது கருணைகடாக்ஷ வீக்ஷண்யத்தினுல் அடிக்கடி அம்பிகை சந்தோஷப்படுத்தினுள். ஸ்ரீலலிதா பரமேச்வரியினது கடாக்ஷ அமிருத தாரைகளால் பரம சந்தோஷமடைந்த சக்திகள் யுத்தத்தினுலடைந்த களைப்பை அகற்றிக் கொண்டார்கள். இந்த ஸமயத்தில், பண்டாஸுரனைத் தேவி கொன்றதினுல் ஸந்தோஷமடைந்த பிரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், இந்திரன், திக்பாலர்கள், ஆதித்யர்கள், வஸுக்கள், ருத்ரர்கள், மருத்துக்கள், ஸாத்ய தேவதைகள், ஸித்தர், கிம்புருஷர், யக்ஷர், நிருருதி முதலிய நிசாசரர்கள், பிரஹ்லாதன் முதலிய மஹா தைத்யர்கள், அண்டத்தில் வஸிக்கும் மற்ற எல்லோரும் அங்கு வந்து, மிகுந்த பக்தியுடன் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்துள்ள மஹேச்வரியை ஸ்தோத்திரம் செய்தார்கள்.

பிரஹ்மா முதலிய தேவர்கள் :—

"ஜகத்திற்கெல்லாம் ஏகநாயகியே! த்ரிபுரை எனும் திருநாமமுள்ளவளே! பண்டமஹாஸுரனைக் கொன்றவளே! காமேச்வரரது இடது பாகத்திற்கு அதிபதியே! உமக்கு நமஸ்காரம்!

நினைத்ததைக் கொடுக்கவல்ல சிந்தாமணியே! சிந்தைக் கெட்டாதவளே! சிதாகாரமான அலையின் மாலையே! சித்ரமான ஆகாச வடிவமானவளே! அல்லது சித்ரவர்ணமான உடையைத் தரித்தவளே! விசித்ரமான உலகை ஈன்றவளே! சித்ரா எனும் நித்யா தேவியால் சூழப்பட்டவளே! உமக்கு நமஸ்காரம்!

மோக்ஷத்தை யளிப்பவளே! அழகிய சந்திரனைச் சிரத்திலணிந்தவளே! அழகிய புன்சிரிப்புள்ளவளே! மோஹத்தை யகற்றுவதில் மிக்க ஸாமர்த்யம் வாய்ந்தவளே! முத்ரேச்வரியாகும் மந்த்ரிணீ தேவியால் இராஜ்ய தந்த்ரத்தை

நடத்துபவளே! ஸங்க்ஷோபிண்யாதி முத்ரைகளில் பிரிய முள்ளவளே! உமக்கு நமஸ்காரம்!

க்ரூரமான அஸுரர்களைத் துவம்ஸம் செய்யுங் கோம லாங்கியே! கோபம் வந்தபோது காளியின் உருவத்தை யேற்பவளே! வாராஹமுகியால் காக்கப்படும் மஹாஸைன்ய சக்ரமுள்ளவளே! அன்பெலாந்திரண்டு ஒருருவமானவளே! உமக்கு நமஸ்காரம்!

[1] ஷடங்க தேவீ பரிவாரங்களால் ரக்ஷிக்கப்படுபவளே! ஆறு [2] அங்கங்களுடன் கூடிய வேத வாக்யங்களால் தேடத் தக்கவளே! ஆறு [3] சக்ரங்களில் வஸிப்பவளே! [4] ஆறு வித மான வியஸனங்களை அகற்றுபவளே! [5] ஷட் பாவங்களின் வடிவமானவளே! ஸ்ரீலலிதையே! உமக்கு நமஸ்காரம்!

காமேச்வரீ முதலிய ஸமஸ்தமான நித்யாதேவிகளாகிய அழகிய ஆஸனத்தில் அமர்ந்தவளே! தாமரையிதழ்களைப் போன்ற நேத்ரங்களை யுடையவளே! ஸர்வ காமனைகளையும் பூர்த்தி செய்பவளே! காமேச்வரரால் விரும்பப்படுபவளே! ஸகல கலைகளுக்கும் நாயகியே! உமக்கு நமஸ்காரம்!

திவ்ய, ஸித்த, மானவ ஓக (கூட்ட) மென்னும் குரு மண்டல ஸ்வரூபமாயுள்ளவளே! ஸ்வயம் பிரகாசவடி வினளே! ஆயிரம் ஸூர்யர்களை யொத்த பிரகாசமுள்ளவளே!

---

1. ஹ்ருதயதேவி, சிரோதேவி, சிகாதேவி, கவசதேவி, நேத்ரதேவி, அஸ்த்ரதேவி.

2. சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்ப ஸூத்ரம்.

3. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை.

4. பசி, தாகம், சோகம், மோஹம், ஜரை (கிழத்தனம்), மரணம்.

5. பிறத்தல், இருத்தல், வளர்தல், திரிதல், குறைதல், நசித்தல்.

மிகப் பிரகாசமானவளே! தயையுடன் கூடியவளே! தேவர்களுக்கு ஆதி தேவனான மஹாதேவன் மனைவியே! உமக்கு நமஸ்காரம்!

எப்போதும் அணிமா முதலிய அஷ்ட ஸித்திகளால் ஸேவிக்கத்தக்கவளே! ஸதாசிவ ஸ்வரூபமாய்ப் பிரகாசிக்கும் மஞ்சத்தில் விளங்குபவளே! அழகானவளே! ஸத்துக்களால் பூஜிக்கப்பட்ட ஒப்புமுயர்வுமற்ற பாதங்களையுடையவளே! உலகைப் படைத்தவளே! உமக்கு நமஸ்காரம்!

பிராஹ்மீ முதலிய மாத்ரு கணங்களால் ஸேவிக்கப்படுபவளே! பிரஹ்மனுக்குப் பிரியமானவளே! பிராஹ்மணியே! பந்தத்தை யறுப்பவளே! பிரஹ்மாநந்தஸரஸின் ராஜஹம்ஸமே! பிரஹ்மேச்வரீயாகும் ஸ்ரீலலிதாதேவியே! உமக்கு நமஸ்காரம்!

ஸம்க்ஷோபிணீ முதலிய ஸமஸ்த முத்ரா தேவிகளாலும் ஸேவிக்கப்படுபவளே! ஸம்ஸார துக்கத்தை யகற்றுபவளே! ஸம்ஸார லீலையைச் செய்பவளே! தாமரையிதழ்களைப் போன்ற நேத்ரங்களையுடையவளே! ஆதிநாதையே! ஸ்ரீ லலிதே! ஸதா உமக்கு நமஸ்காரம்!

காமாகர்ஷிணீ முதலிய பதினாறு நித்யாகலாதேவிகளால் ஸேவிக்கப்படுபவளே! அழிவற்றவளே! தங்கு தடையின்றிப் பிரவஹிக்கும் கருணைப் பிரபஞ்சமே! கறுத்த முன் மயிருள்ளவளே! உமக்கு நமஸ்காரம்!

மதங் கொண்ட அநங்ககுஸுமா முதலிய அநங்க தேவதைகளால் எப்போதும் ஸேவிக்கப்படுபவளே! அமங்கலத்தைத் தொலைப்பவளே! மாத்ருகா ஸ்வரூபமானவளே! சத்ரு வர்க்கத்தை அழிப்பவளே! லலிதே! உமக்கு நமஸ்காரம்!

ஸம்க்ஷோபிணீ முதலிய பதினான்கு கிரணங்களாகும் சக்திக் கூட்டத்தினால் சூழப்பட்ட, உதாரமாய்ப் பிரகாசிக்கும்

உடலைப் பரிப்பவளே! விளையாட்டு நிறைந்தவளே! சுப்ரமான எண்ண முள்ளவளே! சுத்தமான பாதமுள்ளவளே! உமக்கு நமஸ்காரம்.

ஸர்வஸித்திப்பிரதை முதலிய சக்திக் கூட்டத்தை யுடையவளே! ஸர்வக்ஞரால் அறியப்படும் பாதாரவிந்த முள்ளவளே! எல்லாவற்றிற்கும் அதிகமானவளே! எங்கு மிருப்பவளே! எல்லா ஸித்திகளையும் அளிப்பவளே! ஸ்ரீ லலிதே! உமக்கு நமஸ்காரம்!

ஸர்வக்ஞதா சக்தி முதலிய மற்ற (பத்து) தேவிகளா லும் ஆச்ரயிக்கப்பட்ட சக்ர பூமியை யுடையவளே! ஸமஸ்த தேவர்களது விருப்பத்தையும் பூர்த்தி செய்பவளே! எல்லா வுலகிற்கும் தாயே! என்னை ரக்ஷிப்பாயாக!

நமஸ்கரிக்கத் தக்கவளே! வசினீ முதலிய வாக் விபூதி களை விருத்தி செய்யும் சக்ரகாந்தியை வஹிப்பவளே! மேகம் போல் கறுத்த அளகபார முள்ளவளே! வாக்கின் கடலே! வரமளிப்பவளே! ஸுந்தரி! உலகை ரக்ஷிப்பாயாக!

பண்டாஸுரனது ஸேனையாகிய காட்டிற்குக் காட்டுத் தீ போன்ற பாணம் முதலிய ஆயுதேந்த்ரங்களால் பாதுகாக்கப் பட்டவளே! புதிய தேஜஸ்ஸால் கடலை ஜ்வலிக்கும்படி செய் பவளே! நாற்புறமும் உமக்கு நமஸ்காரம்!

காமேச்வரி, வஜ்ரேச்வரி, பகமாலினீ யென்னும் மூன்று வடிவமாயுள்ளவளே! திறமையுள்ளவளே! கலாவடிவமான வளே! காலனை யழிப்பதில் ஸாமர்த்திய முள்ளவளே! தைத்ய ஸேனைகளைப் பேர் மாத்ரமிருக்கும்படி அழித்தவளே! காமே ச்வரன் மனைவியே! கமலையே! உமக்கு நமஸ்காரம்!

பிந்துவிலிருப்பவளே! பிந்து கலை களின் ஐக்கிய வடிவ மானவளே! பிரஹ்மஸ்வரூபியே! சித் ப்ரகாசத்தைப் பெருக்

குபவளே! பெரிய ஸ்தநங்களினிடையே ஒளிக்கும் ஹார முடையவளே! பெரிய ப்ரபாவமுள்ளவளே! வரதே! உமக்கு நமஸ்காரம்!

காமேச்வரனது மடியின் மீது ஸதா வஸிப்பவளே! கால வடிவமானவளே! தயை நிறைந்தவளே! கல்பம் முடியும் போது காளியின் ரூபத்தை யெடுப்பவளே! காமத்தை யளிப் பவளே! கற்பகவல்லியே! உமக்கு நமஸ்காரம்!

எங்கும் சிவந்த நிறமுடையவளே! கனமான அமிருதம் போல் சீதளமாயிருப்பவளே! குட்டி மானின் கண்களைப் போன்ற கண்களையுடையவளே! தாமரைபோன்ற முகமுள்ள வளே! ஸாரமான ஒவ்வொன்றுக்கும் இருப்பிடமானவளே! ஸமஸ்த வித்யைகளுக்கும் ஈச்வரியே! உமக்கு நமஸ்காரம்!

சிதக்னியிலிருந்து தோன்றியவளும் *ஸ்ரீசம்புநாதரால் பிரகாசப்படுத்தப்பட்டவளுமான தங்களது பிரபாவத்தினல் லோக கண்டகர்களாயும் உக்ர வீர்யமுள்ளவர்களாயுமுள்ள பண்டாஸுரன் முதலியவர்கள் போரில் கொல்லப்பட்ட னர். வித்வான்களால் அடையத்தக்க ஸுந்தரமான தேவியே! உமது பரிபூர்ண கருணாமிருதத்தால் நனைக்கப்பட்டு புதிய உடல்களைப் பெற்றோம்! உம்மால் ஸமஸ்த புவனங்களும் ஸந்தோஷத்துடன் பிழைப்பிப்பட்டன! மஹாசயரான ஸ்ரீசம்புநாதருடைய தேஜஸால் இரண்டாவது வடிவமாகக் கிளம்பிய பரமசிவன் ஸ்தாண்வாச்ரமத்தில் ஸதீ தேவியினது பிரிவால் வைராக்கியங் கொண்டு போகங்களைத் துறந்து தவம் செய்கிறார். மலையின் வம்சத்திலே பர்வத ராஜகுமாரியாகத் தோன்றிய உமை எனும் கன்யகையுடன் அச்சிவனைச் சேர்க்க முயன்றோம். அதன் பொருட்டு நாங்கள், மிகக் கடுமையாக தவம் புரியும் அவரிடம் மன்மதனை அனுப்பி

*ஸ்ரீபரசம்புநாதரால் இயற்றப்பட்ட மஹாயாக விதானம் இந்த ஸ்தோத்திரத்தினல் குறிப்பிடப்படுகின்றது. ஆதலின் இது வும் இந் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

னும். தனது வைராக்கியத்திற்கும் தவத்திற்கும் விக்நம் நேரிட்டதால் கோபங் கொண்டு ருத்ரன் தனது நெற்றிக் கண்ணின் தீயினால் மன்மதனைச் சாம்பலாக்கினார். அந்தச் சாம்பலிலிருந்து தோன்றியவனல்லவா இந்த பண்டாஸுரன்! பிறகு தாங்கள் சண்டையில் மதங்கொண்ட அந்தப் பாபி யைக் கொன்றீர்கள். எங்களுக்காகத் தனது உடலைநீத்த மன்மதனைத் தாங்கள் விரைவில் எழுப்பவேண்டும். பர்த்தா வின் பிரிவினால் பரிதபிக்கும் இந்த ரதிதேவி பொறுக்க முடியாத வைதவ்ய துக்கத்தை அடைந்திருக்கிறாள். ஓ லலிதே! தாங்கள் மன்மதனை எழுப்பினால் அவனது சேர்க்கையால் புருஷனோடு கூடியவளாவாள்; அன்றியும் தங்களால் எழுப்பப் பட்ட காமனால் முன்போல் மோஹமடைந்த சந்த்ர மௌளீச் வரன் வெகுகாலமாய் அவரை அர்ச்சித்துவரும் உமையவளைச் சீக்கிரமாய் மணப்பார். அவ்விருவர்களிடமிருந்தும் ஜனிக்கும் குமாரன் ஸமஸ்த தேவஸேனைகளுக்கும் நாயகனாக ஆவார். அவராலேயே அஸுரத் தலைவனான தாரகன் எனுமரக்கன் கொல்லத்தக்கவன். கெட்ட எண்ணமுள்ள அந்தப் பண்ட னுக்கு நண்பனாய் மூன்று லோகங்களுக்கும் தூமகேதுவா யுள்ள அந்த தாரகன் நீலகண்டனது புத்ரனால் கொல்லப் பட்டால்தான் எங்கள் உயிர் நிலைத்து நிற்கும். ஆதலால் அன்னையே, ஹே த்ரிபுரையே! நீ ஜனங்களுக்கு ஆநந்தத்தை யளிக்கும் வீரரில் சிறந்த மன்மதனைப் பிழைப்பித்து, தலை விரித்துக் கதறும் ரதியினது வைதவ்ய துக்கத்தை அகற்றுவாயாக. இவள் அநாதை! உன்னையே சரண் புகுந்தவள். பர்த்தாவை யிழந்ததால் இளைத்த சரீர முள்ளவள். ஹேத்ரிபுராதிநாதே! அந்த ரதி உம்மை நமஸ்கரிக்கின்றாள். அவளிடம் நீ உனது கருணையின் லவலேசத்தை வைப்பாயாக!"

ஹயக்ரீவர்:—பிரஹ்மா முதலிய தேவோத்தமர்கள் இங்ஙனம் மஹேசானியைத் துதித்துச் சோகத்தாலும் துக் கத்தாலும் தீனையாய் வாடியவளாயுள்ள ரதியைத் தேவிக்குக் காண்பித்தனர்.

மறுபடி மன்மதன் தோன்றல்

வைதவ்யத்தினால் ஸகல ஆபரணங்களையும் களைந்து கண்ணீர் பெருக முன்மயிர் புரள தூளியால் அழுக்கடைந்த ரதி, ஜகதம்பிகையை நமஸ்கரித்தனள். அவளைப்பார்த்த மாத்ரத்தினாலேயே கருணை ததும்பியவளும் குற்றமற்றவளுமான பரமேச்வரீ தனது காந்தனான காமேச்வரனைக் கடைக்கண்ணால் பார்த்தனள். அந்தக் கடாக்ஷத்திலிருந்து மலர்ந்த முகாரவிந்தமுள்ளவனும் முன்னிருந்த சரீரத்தை விட பன்மடங்கு அதிக அழகுள்ளவனும் மதமுள்ளவனும் இருகரங்களுள்ளவனும் ஸர்வாபரணங்களையுமணிந்தவனும் புஷ்பபாணங்களையும் கரும்பு வில்லையுங் கொண்டவனுமான மன்மதன் உண்டானான். முற்பிறவியில் மனைவியான ரதியைக் கடாக்ஷத்தினால் ஆநந்தப் படுத்தினான். பேராநந்தக் கடலில் முழுகிய ரதிதேவி தன் கணவனை வணங்கிச் சந்தோஷமடைந்தனள். கந்தர்ப்பனான அந்த வீரனும் பக்தி நிறைந்த மனமுள்ளவனாய் மஹேச்வரியை நமஸ்கரித்து கீழ் வரும் இந்த வாக்யத்தை விக்ஞாபனம் செய்துகொண்டான்—

“ஹே லலிதாம்பிகே! ஈச்வரனது நேத்ரத்தால் பஸ்மம் செய்யப்பட்ட எனது இந்த உடலானது உமது கடாக்ஷ ப்ரஸாதத்தினால் மறுபடியும் உற்பத்தியாயிற்று; ஆதலால் யான் உமது புத்ரனே; உமது தாஸன் யான்; ஏதேனும் ஒரு கைங்கரியத்தில் எனக்கு உத்திரவு யளிப்பாய்.” இங்ஙனம் வேண்டப்பட்ட பரமேசாநீ மகரத்வஜனான மன்மதனைப் பார்த்து கூறினாள்.

ஸ்ரீதேவி :—மனோவ்ருத்தியில் பிறந்த குழந்தையே! நீ செல்வாயாக! உனக்கு இனி பயங்கிடையாது. எனதருளால் ஸகல ஜகத்தையும் மோஹமடையும்படி செய்; உனது பாணம் எங்குந்தடைபடாது; உன் பாணபாதத்தால் தைர்யத்தை யிழந்த ஈச்வரன் விரைவில் பர்வத குமாரியான கௌரியை மணப்பார். எனதருளால் ஆயிரங்கோடி காமர்கள்

உன்னிடங்தோன்றி எல்லாருடைய உடல்களிலும் புகுந்து உத்தமமான ரதியை யளிப்பார்கள். வைராக்யத்தால் பரம கோபங்கொண்டவராயினும் ஈச்வரன், மற்றொரு முறை உனது உடலை யெரிக்க ஸாமர்த்தியமற்றவராவார். அது மாத்திரமல்ல; பயந்தவராய் உனது பாணத்தாலிழுக்கப் பட்ட மனமுள்ளவராகித் தனது பார்யையின் விரஹம் வந்துவிடுமோ என்ற சங்கையால் தன்னுடலிற் பாதியை கௌரிக்கு அளிப்பார். ஓ கந்தர்ப்பனே! இன்றுமுதல் எனது மஹாப் பிரஸாதத்தினால் ஸகலப் பிராணிகளுக்கும் கண்ணில் தோன்றாமலிருந்து மோஹத்தைச் செய். உன்னை நிந்திப் பவர்களும் உன்னிடத்தில் பராங்முகமான எண்ண முள்ள வர்களும் ஒவ்வோர் பிறவியிலும் நபும்ஸகராகப் பிறப்பார்கள் என்பது நிச்சயம். பாபிகளும் துராத்மாக்களும் எனது பக்தர்களுக்குத் துரோஹம் செய்பவர்களுமான மனிதர் களைச் சேரத்தகாத பெண்களிடம் தள்ளி நாசஞ்செய். எவர் மனம் நமது பூஜையிலும், நமது பக்தர்களிடமும் ஆதர வுள்ளதாயிருக்கிறதோ அவர்கள் விரும்பும் ஸகல காம ஸுகங்களையு மளிப்பாய்.

இங்ஙனம் ஸ்ரீலலிதாதேவி ஆக்ஞையிட மன்மதன் பத்தாஞ்சலியுடன் "அப்படியே" என்று அதைச் சிரஸால் வஹித்துப் பணிந்து சென்றான். அந்த அநங்கனது ஸகல மான மயிர்க்கால்களிலிருந்தும் அநேக மன்மதர்கள் தோன்றி னர். அவர்கள், எல்லோரையும் மோஹிக்கும்படி செய்யத் தக்க அழகு வாய்ந்தவர்கள். மன்மதன் அவர்களைக்கொண்டு, ஸமஸ்த ஜகத்தையும் மயக்கிச் சந்த்ர மௌளீச்வரனையும் ஜயிக்கவேண்டுமென்ற ஆசையால் மறுபடியும் ஸ்தாண்வாச்ர மத்திற்குச் சென்றான். நண்பனான வஸந்தனும், ஸேநாபதி யான சந்த்ரனும், விதூஷகனுயுள்ள ராகனு (ஆசையு)ம், மந்த மாருதமென்னும் மஹாரதமும், கோகிலத்தின அழகிய கான மென்னும் காஹளீ வாத்யமும் காமனைப் பின்பற்றிச் சென்றன. ச்ருங்கார வீர்யத்துடன் கூடியவனும், ரதியால் ஆலிங்கனம் செய்துக்கொள்ளப்பட்டவனுமான அவன் ஜைத்ரமென்னும்

வில்லை உதறி வீராக்ரேஸரனுய்த் தபோநிஷ்டராயுள்ள சந்த்ர மௌளியைத் தனது பாணங்களாலடித்தனன். மன்மத பாணங்களாலடிக்கப்பட்ட அந்த சந்த்ரசேகரன் வைராக்யத்தைக் கைவிட்டனர்; கடுந்தவத்தையும் விட்டனர்; ஸகல நியமங்களையும் விட்டனர். அவரது தைர்யமுமழிந்தது. அந்தப் பார்வதியையே த்யானம் செய்துக்கொண்டு மேன்மேலும் மன்மதனுல் பீடிக்கப்பட்டனர். பெருமூச்சு விட்டனர். விரஹத்தால் அவரது கன்னங்கள் வெளுத்தன. தைர்யமிழந்ததால் விரஹதாபம் பொறுக்காது கண்ணீர் சொரிந்தனர். முன்கண்ட கௌரியை அடிக்கடி நினைத்தனர். மன்மத சராக்நியால் தஹிக்கப்பட்ட சூலபாணியினது தேஹதாபத்தைச் சந்த்ர கிரணங்களும் கங்கையும் போக்கடிக்கவில்லை. நந்தி ப்ரிங்கி மஹாகாலர் முதலிய கணங்கள் கொண்டுவந்த புஷ்ப சயநத்தில் படுத்து அடிக்கடி புரண்டனர். நந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு புஷ்ப சயநத்திலிருந்து மற்றொரு புஷ்ப சயநஞ்சென்று படுத்துப் புரண்டார். அவர் உடலிலுண்டான மன்மத ஜ்வரம் புஷ்ப சயநத்தினுலோ, சந்த்ரனிடமிருந்து பெருகிய அமிருதத்தினுலோ, பனிஜலத்தினுலோ நீங்கவில்லை ; அவர் உடலிலுண்டான அதிக தாப ஜ்வாலையை அகற்றுவதற்காக கல்போல் உறைந்து கிடக்கும் பனிக்கட்டிகள் மீதமர்ந்தனர். அடிக்கடி பார்வதியின் உருவத்தைச் சித்ரபடத்தில் நகங்களால் எழுதினுர். அதைப் பார்த்தவுடன் முன்னிலும் பன்மடங்கு மன்மததாபம் விருத்தியாயிற்று. வெட்கத்தினுல் குனிந்த சிரமுள்ளவளாகவும் கடைக்கண்ணுல் தன்னைப் பார்ப்பவள் போலவும் சித்திரம் வரைந்து, அதைக் கண்டவுடன் மயிர்க்கூச்சலெடுத்த தனது அங்கத்தின் மீது அந்தச் சித்திரத்தை வைத்துக்கொண்டனர். மஹத்தான சித்திர ஸங்கத்தாலும், அதிகமான ரதி ஸம்பத்தாலும், மிக அதிகமான மன்மத தாபத்தாலும் முக்கண்ணன் மிகவும் துன்பமடைந்தனர். எங்கும் அந்தப் பார்வதியையே பார்த்துக்கொண்டு அவளிடமே மனத்தை வைத்து உன்மாதாவஸ்தையால் அருகில் வந்த அவளுடனே பேசிக் கொண்டு பார்வதீமயமான மனமுள்ளவராய் அதே சிந்தையாய், அதேபற்

8

றுள்ளவராய் அந்தத் தேவியினது கதாம்ருதத்தால் இரவும் பகலுங் கழித்துக் கொண்டிருந்தனர்.

அவளது சீலத்தை வர்ணிப்பதில் ஊக்கமுள்ளவராகவும், அவளது ரூபத்தைக் காண்பதில் கவலையுள்ளவராகவும், அவளது அழகிய போகங்களை ஸங்கல்பித்து, அந்த ஸங்கல்ப மாலையைத் தொடுக்கும் மாலாகாரனாகவும் ஆன சிவன், பார்வதி மயமாகி மிகவும் விரஹதாபத்தை அடைந்தனர். இந்த மன்மத தாபத்திற்கு வேறு சிகிச்சையில்லை யென்று ணர்ந்த பரமசிவன் பார்வதியை மணந்து கொள்வதற்குத் தக்க முயற்சி செய்தார்.

ஸ்ரீலலிதையின் ஆக்ஞையால் மஹாதேவனை இங்ஙனம் மோஹமடையும்படி செய்துவிட்டுப் பிறகு, மன்மதன் பர்வத ராஜகுமாரியையும் தனது புஷ்ப பாணங்களாலடித்தனன். அதிகமான விரஹ ஜ்வாலையால் தேவி பெரு மூச்சுவிட, அதனால் அவளுடைய அழகிய உதடுகள் உலர்ந்தன; கன்னம் வெளுத்தது; உண்பதிலோ உறங்குவதிலோ படுப்பதிலோ அவளது மனஞ் செல்லவில்லை. ஆயிரந்தோழிகள் இரவும் பகலும் சைத்யோபசாரம் செய்தும் மேலும் மேலும் தாப மடைந்து வாடினள். ஓங்கி வளர்ந்த காதற்கனலுக்கு எதுவும் சாந்தியைத் தரவில்லை. விரஹதாபத்தால் பார்வதி உறங்கவுமில்லை. இதனால் அவளது உடல் இளைக்க, அதைக்கண்டு அவளது தந்தை மிக வருந்தினர். சிவனிடத்தில் தன் மகள் கொண்ட விரஹத்திற்கு வேறு பரிஹாரம் செய்ய முடியாதென்று கண்ட பர்வதராஜன் மஹா துக்கத்தை யடைந்தனர். பெண்ணைப் பார்த்து "பத்ரே! நீ தவத்தினால் அந்த மஹா தேவனை ஸந்தோஷப்படுத்தி, அவரைக் கணவனாக அடைவாயாக" என்று பிதா தூண்டினர். பார்வதியும் அங்ஙனமே ஹிமாசலத்தின் சிகரத்தில் கௌரீசிகரம் என்னும் இடத்தில் பரமனைப் பதியாகப் பெறக் கடுந்தவம் புரிந்தனள். அவள் குளிர்காலத்தில் ஜலத்திலிருந்தும், வேனிற் காலத்தில் பஞ்சாக்னி மத்தியிலிருந்தும், ஸூர்யனிடத்தில் கண்களைச் செலுத்தியும் கோரமான தபத்தைச் செய்தனள்.

அந்தத் தவத்தினால் ஸந்தோஷமடைந்த சிவன், பார்வதியின் முன்னே தோன்றி, விவாஹ விதியினால் அவளைப் பார்யை யாக (வாக்கினால்) ஏற்றுக் கொண்டனர். பிறகு ஹிமவானால் கொடுக்கப்பட்டவளும், தாமரைமலர் போன்றகண்களையுடைய வளும், முன்னமேயே ஸப்தரிஷிகள் மூலமாகப் பிரார்த்திக்கப் பட்டவளுமான அந்தத் தேவியைச் சிவன் மணந்து கொண் டனர். அந்தத் தேவியுடன்கூடப் பரமசிவன் அநேக காலம் ஓஷதிப்ரஸ்த மென்னும் மாமனாரது நகரத்திலே ரமித்துக் கொண்டிருந்தனர். மறுபடி கைலாஸத்திற்கு வந்து ஸமஸ்த பிரமத கணங்களுடன்கூட அழகிய வேஷமணிந்து ஹிம வானுக்குச் சந்தோஷத்தை யளிக்கப் பார்வதியைத் தன்னி ருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். பிறகு கைலாஸம், விந்த்யம், மந்தரம், ஹேமசைலம், மலயம், பாரியத்ரகம், முதலிய நானாவிதமான பற்பல இடங்களில் தேவியுடன்கூட மஹாதேவன் ரமித்துச் சந்தோஷமடைந்தனர்.

பின்னர், தேவன் தேவியிடம் உக்ரமான தனது வீர் யத்தை விடுத்தனர். அதை வஹிக்க முடியாமல் தேவி அவனியில் விட்டு விட்டனள். பூமி அக்நியினிடமும், அக்நி கிருத்திகைகளிடமும், அவர்கள் கங்காஜலத்திலும், கங்கை சரவணத்திலும் முறையே அதைப் பரிக்க முடியாமல் விட்ட னர். அங்கு மஹாவீரனாய் ஆறுமுகங்களுடன் கூடியவனாக மஹாஸேநன் தோன்றினார். கங்கை அவரைச்சிவனருகே கொண்டுவிட்டனள். அவர் அவரிடத்தில் நாளொரு மேனி யாக வளர்ந்து வந்தனர். தீவிரமான பராக்ரமமுள்ள ஷடான னருக்கு அவரது தந்தையே ஸகல வித்யைகளையுங் கற்பித் தனர். தந்தையின் உத்தரவு பெற்று அவர் தேவஸைன்யங் களுக்குப் பதியானார். அநேக தானவர்களுடன் சென்று தாரகாஸுரனை அவர் ஸம்ஹரித்தனர். தாரக வதத்தால் ஸந்தோஷமடைந்த தேவேந்திரன் தனது புத்ரியான தேவஸேனையை அவருக்குத் தர, குஹன் அவளை மணந்து கொண்டனர். மிக்க யசஸ் உள்ளவளான தேவஸேனை ஸ்கந்தனைக் கணவனாகப் பெற்றுப் பேரானந்த மடைந்தனள்.

இங்ஙனம் மன்மதன் ஸகல ஜகத்தையும் மோஹிக்கச் செய்து தேவ கார்யத்தையும் முடித்து விட்டு ஸ்ரீபுரத்திற்கு மறுபடியும் வந்து சேர்ந்தான். புண்யமான அந்த ஸ்ரீ நகரத்தில் ஸ்ரீ லலிதா பரமேச்வரீ ஜகத்தின் க்ஷேமத்திற்காகவே வஸிக்கின்றாள். அங்கு அந்தத் தேவியை ஸேவிப்பதற்காகவே காமனும் சென்றான்.

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று. 105 சுலோகங்கள்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்.

ஸ்ரீநகர நிர்மாணம்.

அகஸ்த்யர்.—ஸ்ரீபுரம் என்பதென்ன? அது எந்த வடிவமாக இருக்கிறது? அது யாரால் முன்னர் நிர்மாணம் செய்யப்பட்டது? அஃதெல்லாவற்றையும் தெரிவியுங்கள். ப்ரபோ! அது எவ்வளவு அளவுள்ளது? என்ன வர்ணமுள்ளது? என்பதையும் எனக்குக் கூறுங்கள். தாங்களே ஸந்தேஹமென்னும் சேற்றை யுலர்த்தும் ஸூர்யன்.

ஸ்ரீ ஹயக்ரீவர்:—முற்கூறிய லக்ஷணங்களுடன் கூடிய ஸ்ரீசக்ரரதத்தை யடைந்து, மஹாயாகாக்னியால் தோன்றிய ஸ்ரீ லலிதா பரமேச்வரி, எப்போது லோக கண்டகனை பண்டனென்னும் அஸுரனை ஜயித்தாளோ, அப்பொழுதே மஹேந்த்ரன் முதலிய தேவர்கள் மிக்க ஸந்தோஷமடைந்தனர். பிறகு காமேச்வரருக்கும், குமாரியான லலிதா தேவிக்கும், மிக்க ஸுந்தரமாயும், நித்யம் போகானுபவத்திற்கு உசிதமாயுமுள்ள ஒரு மந்திரத்தை நிர்மிக்க பிரஹ்ம விஷ்ணு ஈச்வரர்கள் ஆசை கொண்டார்கள். சிற்ப சாஸ்த்ரத்தில் மிக ஸமர்த்தனை விச்வகர்மா எனும் தேவத் தச்சனையும், மாயையில் ஸமர்த்தனமயனெனும் அஸுர

சில்பியையு மழைத்துத் தக்கபடி அவர்களைப் புகழ்ந்து லலிதையின் ஆக்ஞையின்படி கீழ்வருமாறு கூறினர்.

காரண புருஷர்கள் :—"ஓ சில்ப மறிந்த விச்வகர்மாவே! ஓ மஹோதயரான மயரே! நீங்களிருவர்களும் ஸர்வ சாஸ்த்ரங்களையு முணர்ந்தவர்கள்; ஒரு கார்யத்தை முடித்து வைக்கும் விஷயத்தில் திறமை வாய்ந்தவர்கள். ஸங்கல் பத்தினாலேயே மஹா சில்பங்களைச் செய்வதில் ஸமர்த் தர்கள். நீங்கள் நித்யக்ஞானக்கடலான லலிதாதேவிக்குப் பதினாறு க்ஷேத்திரங்களினிடையே அந்த க்ஷேத்ரங்களுக்குச் சமமான ஸங்க்யையால், பல வகையான ரத்னங்களால் அலங் கரிக்கப்பட்ட ஸ்ரீ நகரங்களை நிர்மித்தல் வேண்டும். பதினாறு விதமாகப் பிரிந்தொளிரும் லலிதா பரமேச்வரி உலகைக் காக்க எப்போதும் அங்கு வசிப்பாள். இது எங்களுக்கும் பிரியமானது; தேவர்களுக்கும் பிரியமானது; ஸர்வ லோகங் களுக்கும் பிரியமானது. ஆதலால் சிறிதும் தாமதித்தல் கூடாது." என்று காரண தேவர்கள் கூற, அவ்வார்த்தைகளைக் கேட்டு அந்த விச்வகர்மாவும் மயனும் அவர்களை நமஸ்கரித்து, "அங்ஙனமே ஆகட்டும்" என்று கூறினார்கள். அன்றியும், அவர்கள் காரண தேவர்களை மறுபடியும் பணிந்து, "ஓ மஹோதயர்களே! எந்த எந்த க்ஷேத்திரங்களில் ஸ்ரீ நகரங்களை நிர்மிக்க வேண்டும்" என வினவினர். அதைக்கேட்டு ஸந்தோஷமடைந்த அந்தப் பிரஹ்மாதி தேவர்கள் உசித மாக க்ஷேத்திரங்களை விபாகம் செய்து சில்பிகளைப் பார்த்துக் கூறினதாவது:—

காரணபுருஷர்க்ள் :— முதலில் மேரு ப்ருஷ்டத்திலும், இரண்டாவது நிஷத மலையிலும், மூன்றாவது ஹேமகூடத்தி லும், நான்காவது ஹேமகிரியிலும், ஐந்தாவது கந்தமாதநத் திலும், ஆறாவது நீலமேஷத்திலும், ஏழாவது ச்ருங்கத்தி லும், எட்டாவது மஹேந்த்ரத்திலும், ஒன்பதாவது மஹா கிரியிலும் ஆக அவனியில் ஒன்பது க்ஷேத்திரங்களும்; உப்புக் கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், ஸுராக்கடல், நெய்க்கடல்,

தயிர்க்கடல், பாற்கடல், சுத்த ஜலக்கடல் ஆகிய ஏழு கடல்களில் ஏழு க்ஷேத்திரங்களும் இங்ஙனம் மலைகளில் ஒன்பதும் கடல்களில் ஏழுமாகப் பதினாறு க்ஷேத்திரங்கள் அன்னைக்கு ஸ்ரீபுரம் அமைப்பதற்கேற்றவனவாகும். இவைகளில், மிக்க தேஜஸ் வாய்ந்த லலிதைக்கு, ஏற்றபடி திவ்யமான புரம் அமைப்பதில் பண்டிதர்களான நீங்களிருவரும் அழகிய அரண்மனைகளை அமையுங்கள். இந்த க்ஷேத்திரங்களில் அமைக்கப்பட்ட ஸ்ரீதேவியின் மஹாபுரங்களுக்குப் பதினாறு நித்யா தேவிகளது பெயர்களே இடப்பட்டுப் பிரஸித்தமாக விளங்கும். அந்தத் தேவியே நித்யா ஸ்வரூபத்தினால் காலத்தை வியாபித்துக்கொண்டு சிறந்தவளாய் ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டிகலையால் படைக்கின்றாள். நித்யைகளுக்கும் மஹா ராஜ்ஞியாகும் மஹாநித்யைக்கும் பேதமில்லை. ஆதலால் அவள் பெயராலேயே ஸ்வநாமாக்களுக்குள்ள பட்டணங்களுக்குப் பிரஸித்தி ஏற்படுவது உசிதமே. காமேச்வரீபுரி, பகமாலினீபுரி, நித்யக்லின்னாபுரி முதலிய பெயர்கள் பிரஸித்தமாக விளங்குவதும் உசிதமே. ஆதலால் நாமாக்களின் ஆதி அக்ஷரத்திற்குப் பொருந்தியதான புண்யதரமான தினங்களில் மஹாசில்பப் பிரகாரத்தால் சுபமான புரி அமைக்கப் படட்டும்.''

இங்ஙனம் காரண க்ருத்யேந்த்ரர்களான பிரஹ்ம விஷ்ணு மஹேச்வரர்களால் வேண்டப்பட்ட அவ்விரு சில்பிகளும் அந்த க்ஷேத்திரங்களில் ஸ்ரீபுரங்களைப் படைத்தனர். ஓ லோபாமுத்திரையின் பதியே! ஸ்ரீபுரத்தின் விஸ்தாரத்தையும், அப்புரத்திலுள்ள அதிஷ்டான தேவதைகளையும் சொல்கிறேன்; கவனமாகக்கேளும்.

மேருமலை ஸகலத்திற்கும் ஆதாரமானது; உயரமானது. ஆயிரம் யோஜனை விஸ்தாரமுள்ளது. பதினான்கு உலக சக்ரத்திலும் கோர்க்கப்பட்ட தன் உடலையுடையது. அதன் கிழக்கில் ஒன்றும், நிருருதி திக்கில் ஒன்றும், வாயு திசையில் ஒன்றும், இடையே ஒன்றுமாக நான்கு சிகரங்கள் உண்டு.

ஸ்ரீ நகரத்தின்

1. உலோகக் கோட்டைகள்.



By courtesy of *Sri Brahma Vidya Vimarsini Sabha.*

அதன் உயரங்களைக் கூறுகிறேன் கேளும்! முற் கூறிய மூன்று சிகரங்களும் நூறு* யோஜனை நீளமும் நூறுயோஜனை அகலமும் உள்ளவை. அம்மூன்றிலும் முறையே பிரஹ்ம லோகம் விஷ்ணுலோகம் சிவலோகமென்னும் மூன்று லோகங் களிருக்கின்றன. இவைகளிலுள்ள வீடுகளின் அமைப்பை மற்றொரு ஸமயங் கூறுகின்றேன், கேளும். மத்தியிலுள்ளது நானூறு யோஜனை நீளமும், நானூறு யோஜனை அகலமும் உள்ளது. மிகப்பெரிதான அந்த சிருங்கத்தில் இரு சில்பி களாலும் ஸ்ரீபுரம் அமைக்கப்பட்டது. ஓ அகஸ்த்யரே!

அந் நகரத்தின் முதல் ப்ராகாரம் இரும்பினாலாகியது. அது ஆயிரத்து அறுநூறு யோஜனை தூரம் சுற்றளவுள்ளது. நான்கு திசைகளிலும் நான்கு வாயிற்படிகள் உள்ளன. நான்கு யோஜனை தூரம் உயரமுள்ளது. கடலைக் குடித்த அகஸ்த்யரே! அந்த ப்ராகாரத்தின் அடிப்புறம் ஒரு யோஜனை தூரம் விசாலமானது. வாதாபியைத் தபிக்கும்படி செய்தவரே! அதன் அக்ர பாகம் ஒரு மைல் விஸ்தாரமானது. ஆங்குள்ள வாயிற்படிகள் ஒரு யோஜனை தூரம் உயரமானவை. ஒவ்வோர் வாயிற்படியிலும் ஒரு யோஜனை உயரமும் ஒரு மைல் அகலமுமுள்ள இரண்டு இரும்புக் கதவுகள் இருக் கின்றன. ஒவ்வொன்றின் இரு தாழ்ப்பாள்களும் அரை மைல் நீளமானது. இங்ஙனம் நான்கு வாயிற்படிகளிலும் கதவு முதலியவை ஸமானமாயிருக்கின்றன.

கும்பஸம்பவரே! கோபுரத்தின் அமைப்பைக் கூறு கிறேன் கேளும். முன் சொன்ன இரும்புக் கோட்டையின் ஒரு யோஜனை விஸ்தாரமான மூலபாகத்தில் இரண்டு பக்கங் களிலும் இரண்டு இரண்டுயோஜனை தூரம் ஆக்ரமித்து அமைக் கப்பட்டது. வாயிற்படிகளை இடையே அமைத்து அவைகள் இரண்டு இரண்டு யோஜனை முன்னும் பின்னும் விஸ்தார முள்ளவை. இருபக்கங்களிலுமுள்ள இரண்டு யோஜனை களுக்கிடையிலுள்ள ப்ராகாரத்தின் அளவு ஒரு யோஜனை.

---

* யோஜனை என்பது எட்டு அல்லது ஒன்பது மைல்களாம்.

இவைகளைச் சேர்த்துக் கணக்கிடின் கோபுரமுள்ளவிடத்தில் கோட்டை ஐந்து யோஜனை விஸ்தாரமுள்ளதாகிறது. முனி வரே! இங்ஙனமாக கோபுரமைக்கப்பட்டுள்ளது. ஆதலின் ஒரு கோபுரத்தின் அடிச் சுற்றளவு இருபது யோஜனையா கிறது. உயர, மேலே போகப் போக அளவு குறைகிறது. கோபுரத்தின் உயரம் இருபத்தைந்து யோஜனையாகும். ஒவ்வொரு யோஜனை உயரத்திலும் அழகிய கதவுடன்கூடிய வாயிற்படி உள்ளது. மேலே போகப் போகக் குறுகியதான இருபத்தைந்து பூமிகைகள் (தட்டுகள்) அமைந்திருக்கின் றன. கோபுரத்தின் அக்ரம் ஒரு யோஜனை விஸ்தாரமும் நீளமு முள்ளதாகும். அங்கு மூன்று மகுடங்களிருக்கின்றன. ஹே கடோத்பவ! மகுடம் ஒவ்வொன்றும் இரண்டு மைல் விஸ்தாரமும், நான்கு மைல் உயரமுமுள்ளவை. அதுவே ஒரு கோபுரம்போல் அடி பருத்து போகப் போகச், சிறுத்து விளங்குகின்றது. மகுடத்தின் இடை ஒரு மைல் உள்ளது. தென் கோபுரத்திலுள்ள மகுடங்கள் கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டன. மேற்குக் கோபுரத்தில் தெற்கும் வடக்கு மாக இருக்கின்றன. வடக்குக் கோபுரத்தில் தென் கோபுரத்தி லுள்ளது போலவும் கிழக்குக் கோபுரத்தில் மேற்குக் கோபுரத்திலுள்ளது போலவும் கிரீடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இரும்புக் கோட்டைக்கு ஏழாவது யோஜனை தூரத் தில் முன்போல் நான்கு த்வாரங்களும் மகுடங்களுமமைந்த வெண்கலக் கோட்டை உளது. அதன் ப்ராகார மூல அள வுகள் முற்கூறிய வண்ணமே இருக்கின்றன. ஒவ்வோர் வாயிற்படியிலும் முற்கூறிய லக்ஷணங்களமைந்த கோபு ரங்களிருக்கின்றன. கும்பஸம்பவரே! இரும்புக்கோட்டைக் கும் வெண்கலக் கோட்டைக்குமிடையிலுள்ள இடங்கள் பல வகையான மரங்களுடன் கூடிய நாநாவ்ருக்ஷ மஹோ த்யானமாகும். உலகில் எவ்வளவு செடி கொடிகளுண்டோ அவ்வனைத்துமங்கே இருக்கின்றன. எப்போதும் அழகிய தளிர்களையும் வாஸனை நிறைந்த புஷ்பங்களையும், இனிய

பழங்களையுமுடைய லக்ஷக்கணக்கான மரங்களங்கு விளங்குகின்றன. மா, கங்கேலய, வெள்ளாத்தி, மகிழை, கர்ணிகாரம், சிம்சிபா, காட்டுவாகை, தேவதாரு, நமேரு, புன்னகம், பத்ரநாகம், முசிளந்தம், கர்பரம், ஏலம், லவங்கம், தக்கோலம், கர்பூரம், பீலு, காக துண்டம், நலகம், ஆஸநம், காஞ்சநாரம், எலுமிச்சை, பாரஸம், ஹிஞ்ஜூலம், பாடலம், பலிநீ, ஜகன்யா, ஜகனேபலா, கணிகா, குகுருண்டா, பந்துஜீவ, மாதுளை, அச்வகர்ண, ஹஸ்திகர்ண, சாம்பேய, கநக, யூதிகா, தாளபர்ணீ, லாங்கலீ, ஸதாபலா, பனை, தமாலம், ஹிந்தால, ஈச்சை, சரபர்ப, கரும்பு, க்ஷீரீ, ச்லேஷ்மாதக, விபீதக, கடுக்காய், அவாக்புஷ்பீ, கோண்டாலீ, ஸ்வர்ண புஷ்பிகா, பல்லாதக, காதிர, சாகோடா, சந்தந, அகில், சாலஸ்கந்தா, சிஞ்சா, தவா, அத்தி, அச்வத்த, வன்னி, த்ருவ, ருசகம், கொடைமல்லி இவை முதலிய ஆயிரக்கணக்கான மரங்களிருக்கின்றன. தேவியினது சிருங்காரத்திற்குக் காரணமாக, எல்லா ருதுக்களும் ஒன்று சேர்ந்து எல்லாப் புஷ்பங்களையுமளிக்க உயர்ந்த அடர்ந்த விருக்ஷங்கள் அந்த உத்யாநத்திலிருக்கின்றன. வெண்கலக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் ஏழு யோஜனை உயரமுள்ள சதுரச்ரமான தாம்ர கோட்டை இருக்கிறது. வெண்கலக் கோட்டைக்கும் தாம்ரக் கோட்டைக்கு மிடையில் உள்ள பூமி கல்பவாடிகை எனப்படும். கர்ப்பூரத்தை உள்ளே ரஸமாக உடையதும், அழகிய ரத்னங்களையே விதையாக உடையதும், ஸ்வர்ணத் தோலால் அழகியதுமான பழங்களோடு கூடிய மரங்கள் தங்கள் கிளைகளின்மீது திவ்யமான கோம்பரங்களையும் பவழங்களையும் பூத்திருக்கின்றன. அதன் தேன் அமிருதமாம். புஷ்பங்கள் ஆபரணங்களாம். இத்தகைய கல்ப விருக்ஷமெனப்படும் மரங்கள் அநேகமிருக்கின்றன. இந்த இரண்டாவது அங்கணத்திற்கு கல்பவாடீ என்று பெயர்.

தாம்ரக்கோட்டைக்கு அடுத்தாற்போல் ஈயக் கோட்டை இருக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள ப்ரதேசம்

ஏழு யோஜனை தூரமுள்ளது. அவ்விடம் கல்பவாடிகைக்குச் சமமானது. இது ஸந்தாநவாடிகை என்றழைக்கப்படுகிறது.

ஈயக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் முற்கூறிய கோட்டைகளைப்போல் அமைந்துள்ள பித்தளைக் கோட்டை ஒன்றிருக்கிறது. அவ்விரண்டிற்குமிடையிலுள்ள ப்ரதேசம் ஹரிசந்தநவாடிகை எனப்படும். இங்குள்ள ஹரி சந்தந விருக்ஷங்கள் கல்பக மரங்களைப்போல் பல புஷ்பங்கள் நிறைந்தவைகளாகும்.

இந்தக் கோட்டைகளெல்லாம் முதலிற் கூறிய கோட்டையைப்போல் அழகிய நான்கு த்வாரங்களும் ஒவ்வோர் வாயிற்படியிலும் கோபுரங்களும், மகுடங்களும் அமையப் பெற்றவைகள். பித்தளைக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் முன் கோட்டைகளுக்குச் சமமான பஞ்சலோஹக்கோட்டை ஒன்றுண்டு. அவ்விரண்டிற்குமிடையிலுள்ள பூமி மந்தார த்ருமவாடிகை யெனப்படும்.

பஞ்சலோஹக்கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் முற்கூறிய ஸகல லக்ஷணங்களும் பொருந்திய வெள்ளிக் கோட்டை ஒன்றிருக்கிறது. அவ்விருகோட்டைகளுக்குமிடையேயுள்ள ஸ்தலம் பாரிஜாதத்ருமவாடிகை யெனப் படும். அது திவ்யமான வாஸனையுள்ளது ; புஷ்பங்களாலும் பழங்களாலும் பரிமளிப்பது.

வெள்ளிக்கோட்டைக்கு ஏழுயோஜனை தூரத்திலே அழகிய வாயிற்படிகளும் கோபுரங்களும் சிகரங்களும் உள்ள ஸ்வர்ணக் கோட்டை இருக்கிறது. அதற்கும் வெள்ளிக் கோட்டைக்குமிடைப்ரதேசம் கதம்பவன வாடிகை என் றழைக்கப்படும். ஆங்குள்ள அழகிய கடம்ப மரங்கள் இரண்டு யோஜனை உயரம் வளர்ந்திருக்கின்றன. எப்போதும் அவை மதுவைக் கக்கிய வண்ணமாயுள்ள மலர்ந்த மலர்களால் ப்ர காசிக்கின்றன. இவைகளிலிருந்துதான் போகத்தை யளிக் கும் காதம்பரீ எனும் யோகினி தோன்றினள்.

மதுவிலிருந்து தோன்றிய மிகச் சிறந்த காதம்பரீ, மந்த்ரிணீதேவிக்கு எப்போதும் பிரியமானவள். நல்ல நிழலைத் தரும் நீப மரங்களும், தளிர் நிறைந்த மகிழ மரங்களுமங்கிருக்கின்றன. வாஸனையில் ஆசைகொண்ட வண்டுகள் ஜங்காரம் செய்துக்கொண்டு அந்த மரங்களைச் சூழ்ந்திருக்கின்றன. அங்கேயே மந்த்ரிநாதைக்கு மனோஹரமான ஆதி அரண்மனை இருக்கிறது. கதம்பவநவாடியின் அக்நி மூலை முதலிய நான்கு மூலைகளிலும் ஆதி சில்பியால் பெரிய நான்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வோர் வீட்டின் அகலமும் நீளமும் அவ்வைந்து யோஜனை தூரமாகும். ஆங்கு ஏழு ஆவரணங்களமைந்திருக்கின்றன. இங்ஙனமே மற்ற மூலைகளிலுமுள்ள வீடுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கு எல்லாவிடத்திலும் மிக ப்ரியமான விருக்ஷங்களும் நிறைந்திருக்கின்றன. சியாமளையெனும் மந்த்ரிணீ தேவி அந்த நகரத்தில்தான் வசிக்கிறாள்.

ஆனால், தேவியை ஸேவிப்பதற்காக மந்த்ரிணிக்கு மஹா பத்மாடவியின் மத்தியில் மற்றோர் நகரமுண்டு. இந் நகரிலேயே இருந்தால் வெகு யோஜனை தூரத்திலுள்ள தேவியைப் பிரதிதினம் ஸேவிக்க முடியாதென்றெண்ணி தேவத்தச்சனும் மயனும் தேவி வஸிக்கும் சிந்தாமணி க்ருஹத்தின் வெகு ஸமீபத்தில் மந்த்ரிநாதைக்கொரு பவநம் ஏற்படுத்தினர். ஸ்ரீபுரத்தில் மந்த்ரிணீ தேவிக்கமைக்கப்பட்ட மந்திரத்தின் சிறப்பை ஆயிரம் நாப் படைத்திருந்தாலும் எவரால்தான் வர்ணிக்க முடியும்? காதம்பரீ என்னும் ஸுதையால்சிவந்த நேத்ரமுள்ளவர்களும் மிகக் கொண்டாடத் தக்கவர்களுமான மாதங்க கன்னிகைகள் அழகிய வீணையுடன் பாடிக்கொண்டு விளையாடுகிறார்கள்.

அகஸ்தியர் :—மதங்கர் என்பவர் யார்? கன்னிகைகள் அவரிடம் எப்படித் தோன்றினர்? மதுவின் மதத்தால் சோம்பலுள்ள அவர்கள் எப்பொழுது எப்படி மந்த்ரி நாதையை ஸேவிக்கின்றனர்?

ஸ்ரீஹயக்ரீவர்:—தபோநிதியான மதங்கரென்பவர் தபஸுக்கெல்லாம் ஒரே இருப்பிடமானவர். மஹாமஹிமை வாய்ந்தவர். உலகைப்படைக்க வல்லவர். தீவிரமான தபஸின் சக்தியால் எல்லோருக்கும் ஆக்ஞையிடும் வல்லமையுள்ளவர். அவருடைய புத்திரரான மாதங்கர் ஸ்திர புத்தியுள்ளவராய் முத்ரிணியான மந்த்ரநாயகியைக் கோரமான தவத்தினல் மிகவும் ஆராதித்தனர். மதங்கமுநிபுத்திரரால் நீண்டகாலமாய் உபாஸிக்கப்பட்டவளான மந்த்ரிணி அவர் முன் தோன்றி, "வேண்டிய வரத்தைக் கேள்" என்றுள். தபோநிதியும், முநிவர்களில் சிறந்தவருமான அந்த மாதங்க முநி, தன்னெதிரே தோன்றிய சியாமளாம்பிகையைப் பார்த்துக் கூறினர்.

மாதங்கமுநி:—ஓ தேவி! உன்னை நினைத்தமாத்திரத்லேயே அணிமாதி ஸித்திகளும் எனக்குக்கிட்டி விட்டன. அன்னையே! உமது திருவடியை நினைத்ததால் சகல காமங்களையும் பெற்ற எனக்கு மூவுலகிலும் பெறத்தக்க வேறு பொருளொன்று மில்லை. அம்பிகையே! அப்படியிருந்தாலும் உமது இந்த தரிசனம் நிஷ்பலமாகலாகாதென ஒரு வரத்தைக் கேட்கிறேன். அதைப் பூர்த்தி செய். முன்னொரு ஸமயம் ஹிமவானுடன் நட்பினல் சில பரிஹாஸமான சொற்களைக் கூறி விளையாடிக்கொண்டிருந்தேன். அச்சமயம் அவர், தான் கௌரியின் பிதாவென்றுத் தன்னைச் சிலாகித்துக்கொண்டு பெருமை கொண்டனர். எதனுல் அதிகச் சிறப்பு உண்டாகுமோ, அந்த பாக்கியம் எனக்கில்லாமற் போயிற்று. இரு நண்பர்களுக்கும் குணம் ஸமானமாக இருக்கும்போது ஒருவருக்கு விசேஷ குணம் ஏதேனுமொரு காரணத்தால் உண்டாகுமாயின், அதில் மற்றவர் ஆசை கொள்வரன்றோ?

மாதங்க கன்யா ஜனனம்

ஓ மந்த்ரிணீ நாதே! கௌரிக்கு யான் குரு (தந்தை) என்று எல்லோராலும் கொண்டாடப்படவேண்டும். எனது

இந்த ஆசை பூரணமாகவேண்டுமென தவம் செய்தேன். ஆதலால் தாங்கள் எனக்குப் பெண்ணாகப் பிறந்து என் பெயரால் மாதங்கீ எனப் பிரஸித்தமாக விளங்குவீர்கள்" என்று மாதங்கமுநி கூறிய சொற்களைக்கேட்டு "அங்ஙனமே ஆகட்டும்" என்று தேவி பதிலுரைத்து அங்கேயே மறைந்தனள். முநிவரும் பரம ஸந்தோஷ மடைந்தார். பின்னர், மாதங்கரது மனைவியின் ஸ்வப்பநத்தில் ஸதாமதை யென்னும் தேவி தோன்றி யவளுக்குத் தனது காதிலணிந் திருந்த பச்சிலை மரத்தின் புஷ்பக்கொத்துகளிலொன்றை அருள்புரிந்தனள். மாதங்கரது மனைவியான ஸித்திமதி அந்த ஸ்வப்பநத்தின் ப்ரபாவத்தால் தனது கர்ப்பத்தில் லகுச்யாமையைத் தரித்தனள். முறையே நக்க காலத்தில் ஸித்திமதியினிடமிருந்து தேவி கன்யகையாகப் பிறந்தனள். ஆதலால் அவளுக்கு மாதங்கி என்னும் பெயர் ஏற்பட்டது. மூல விதையான சியாமையினிடமிருந்து (ஓரம்சமாய்த்) தோன்றியதால் லகுச்யாமா என்றும் அவள் அழைக்கப் படுகிறாள். கும்பஸம்பவரே! தன் தந்தையினிடமிருந்து ஸ்ருஷ்டி மஹாவித்தையைக்கற்று, அந்த வித்யா ப்ரபாவத் தினால் லகுச்யாமை, தனக்கு ஸமமாயும் அழகாயுமுள்ள மாதங்க கன்யகைகளைக் கோடி கோடியாகப் படைத்தனள். மாதங்கி கூட்டத்துடன் லகுச்யாமாவானவள், மஹாச்யாமா தேவிக்கு அங்க சக்தியாயிருக்கும் பாக்யத்தையடைந்து ப்ரியகப்ரியா எனும் மஹாச்யாமா தேவியை ஸேவிக்கிறாள். கும்பஸம்பவரே! இங்ஙனம் மாதங்க கன்யகைகள் பிறந் தனர். இரும்பு முதலிய லோஹங்களால் நிர்மாணிக்கப்பட்ட ஏழுவிதமான கோட்டைகளைக்கூறினேன். இனி எதைக் கேட்க விரும்புகிறாய்?

ஸப்த ஸால ரக்ஷகர்களின் பெயர்கள்.

அகஸ்தியர்:—ஓ ப்ராக்ஞரே! அவ்வேழு கோட்டை களை ரக்ஷித்துக்கொண்டு வசிப்பவர்களது பெயர்களைக் கூறின் எனது ஸந்தேகமகலும்.

ஹயக்ரீவர்: அகஸ்தியரே! முதலில் கூறிய இரும்புக்கோட்டைக்குள்ளுள்ள [illegible] மஹோத்யானத்தில் மஹாகாளர் என்பவர் ரக்ஷகராக இருக்கிறார். அவர் ஸர்வ லோகங்களையும் பக்ஷிப்பவர்; கறுத்த சரீர முடையவர்; கறுத்த கவசத்தை யணிந்தவர்; மதத்தால் சிவந்த கண்களை யுடையவர்; பிரஹ்மாண்ட மென்னும் பாத்திரத்தில் விச்வரஸ மெனும் மதுவை வைத்துக்கொண்டு பானம் செய்பவர்; மேகம் போல் நீல நிறமுள்ளவளும், மன்மதனால் நினைந்த (பீடிக்கப்பட்ட) வளுமான மஹா காளியைக் கடாக்ஷிப்பவர். மங்களகரமாய் கலநா வடிவமாயுள்ள ஸிம்ஹாஸநத்திலே வீற்றிருப்பவர். ஸ்ரீலலிதா தியானத்தையே பெருஞ் செல்வமாகக் கொண்டவர். லலிதாபூஜையிலும் மிக விருப் பங்கொண்டவர். லலிதா தேவியின் பக்தர்களது ஆயுளை வெகு வெகு நீண்டதாகச் செய்பவர். காலமிருத்யு முதலிய கிங்கரர்களால் நாற்புறமும் ஸேவிக்கப்படுபவர். இந்த மஹாகாளரும், அவரது பத்னி மஹாகாளியும் முதல் உத்யானத்திலிருந்துகொண்டு ஸ்ரீலலிதாதேவியினது ஆக்ஞையின்படி உலகமனைத்தையும் நடத்துகின்றனர். அங்கு மிகப் பெரியதான காலசக்கரம் அவர்களுக்கு ஆஸநமாக அமைந்துள்ளது. அது நான்கு ஆவரணங்களால் சூழப்பட்டு மத்தியில் பிந்துவினால் மிக அழகாக விளங்குவதாகும். முக்கோணம், பஞ்சகோணம், பதினாறுதளமுள்ள கமலம், எட்டுதளமுள்ள பத்மம் ஆகிய நான்கு ஆவரணங்களுக் கிடையே இருப்பவர் மஹாகாளராவர்.

திரிகோணத்தில், மஹாகாளருடைய சக்திகளான மஹாகல்பா, மஹாஸந்த்யா, மஹாநிசா எனும் மூன்று மஹா தேவிகளிருக்கின்றனர். பஞ்சகோணத்தில் கிருதா, த்ரேதா, த்வாபரா, கலி, மன்வந்தரா ஆகிய பஞ்சசக்திகளுளர். அங்கேயே (பஞ்சகோணத்தின்) அக்ர பாகத்தில் ப்ரத்யூஷா, பித்ருப்ரஸூ, ப்ராங்ஹா, பராங்ஹா, மத்யாங்ஹா எனும் ஐந்து (மஹாகாளருடைய) சக்திகளிருக்கின்றனர். முனிவரே! ஷோடசார பத்மங்களிலுள்ளோர்களைக் கூறுகிறேன் கேளும்.

திநா, நிசா, தாமிஸ்ரா, ஜ்யோத்ஸ்நீ, பக்ஷிணீ, ப்ரதோஷா, நிசீதா, ப்ரஹாரா, பூர்ணிமா, ராகா, அநுமதீ, அமாவாஸீ, ஸிநீவாலீ, குஹூ, பத்ரா, உபராகா என்னும் பதினாறு சக்திகளும் ஷோடச தளங்களில் வஸிப்பவர்களாவர். கலா, காஷ்டா, நிமேஷா, க்ஷணா, லவா, த்ருடி, முஹூர்த்தா, குதபா, ஹோரா, சுக்லபக்ஷா, கிருஷ்ணபக்ஷா, அயநா, விஷூவா, ஸம்வத்ஸரா, பரிவத்ஸரா, இதாவத்ஸரா, இந்த பதினாறு சக்திகளும் ஷோடச கமலதளங்களின் அக்ரத்தில் வஸிப்பவர்களாவர். இத்வத்ஸரா, இதுவத்ஸரா, வத்ஸரா, திதி, வாரா, நக்ஷத்திரா, யோகா, கரணா எனும் எட்டு சக்திகள் அஷ்டதளகமலத்தின் எட்டுத் தளங்களில் வஸிப்பவர்களாவர்.

பிரகாசமான காலசக்ரத்திற்குக் கலி, கல்யா, கலநா, காளீ எனும் நான்கு சக்திகள் த்வாரபாலகர்களாவர். மதத்தினல் மலர்ந்த முகமுள்ளவர்களும், மது நிறைந்த பாத்ரத்தையும், சிவந்த மாம்ஸத்தையும் தரித்திருப்பவர்களும், கறுத்த வர்ணமுள்ளவர்களுமான மஹாகாலதேவிகளெனப் படும் காலனது சக்திகள், ஸ்ரீலலிதையின் பூஜை, தியானம், ஜபம், ஸ்தோத்ரம் இவைகளிலே ஈடுபட்ட மனமுடையவர் களாய் காலசக்ராஸநத்திலுள்ள மஹா காளரை ஸேவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஓ அகஸ்தியரே! கல்பக வாடிகையைக் காத்து ரக்ஷிப்பவர் வஸந்தருது நாதராவர். அவர் மஹா தேஜஸ்வி; லலிதைக்குப் பிரியமானதைச் செய்பவர்; புஷ்ப ஸிம்ஹாஸநத் தில் வீற்றிருப்பவர்; புஷ்பமதுவை யருந்தி அந்த மதத்தாற் சிவந்தவர்; புஷ்பங்களையே ஆயுதமாகவும் ஆபரணமாகவும் உடையவர்; புஷ்பக்குடையால் அலங்கரிக்கப்பட்டவர். பிரகாசமுள்ள அவருக்கு மதுஸ்ரீ, மாதவஸ்ரீ எனும் இரண்டு தேவிகளிருக்கின்றனர். அவர்கள் புஷ்ப மதுவின் பானத் தால் மதமுள்ளவர்கள்; மன்மத (லீலையில்) ஆசை கொண்ட வர்கள்.

ஸந்தானவாடிகையை ரக்ஷிப்பவர் க்ரீஷ்மருது ஆவர். அவர் தீவ்ரமான கண்களை யுடையவர்; லலிதையின் கிங்கரனாக இருந்து அவளது ஆக்ஞையைச் செய்பவர். அவருக்கு சுக்ரஸ்ரீ, சுசிஸ்ரீ என்னும் இருவர் மனைவி களாவர்.

ஹரிசந்தனவாடிகையில் வர்ஷருதுநாதர் ரக்ஷகராக விளங்குகிறார். அவர் மிக்க தேஜஸ் உள்ளவர்; மின்னலைப் போல் பிரகாசிக்கும் சிவந்த கண்களையுடையவர்; வஜ்ரம் போன்ற அட்டஹாஸத்தைச் செய்பவர்; மதங்கொண்ட மேகத்தை வாஹநமாகக்கொண்டவர்; மேகங்களைக் கவசமாகப் பூண்டவர்; மணிமயமான வில்லையேந்தியவர்; லலிதையின் பூஜை, தியாநம், ஜபம், ஸ்தோத்ரம் இவைகளில் மிகப் பற்றுடையவர். விந்தியமலையின் செருக்கை யடக்கிய அகஸ்த்யரே! அவர் மூன்று லோகங்களுக்கும் இன்பத்தைத் தருபவர். அவருக்கு, நபஸ்ரீ, நபஸ்யஸ்ரீ, ஸரஸா, ஸஸ்யமாலிநீ, அம்பா, துலா, நிதத்நீ, அப்ரயந்தீ, மேகயந்திகா, வர்ஷயந்தீ, சுபுணிகா, வர்ஷதாரா எனும், மதத்தினுற் சிவந்த நேத்ரங்களை யுடைய, பன்னிரண்டு சக்திகளிருக்கின்றனர். அவர்களுடன் கூட அந்த வர்ஷருது நாதரானவர் தன்னுல் உண்டுபண்ணப் பட்ட புஷ்பக்குவியலால், எப்போதும் பரமேச்வரியைப் பூஜித்தப்படியே யிருக்கின்றூர். அன்றியும் அவர் லலிதா பக்தர்கள் வஸிக்கும் தேசங்களைத் தனது ஸம்பத்தால் அலங்கரித்துக்கொண்டும், தேவியின் வைரிகளுள்ள தேசங் களை மழை பொழியாமல் பீடித்துக்கொண்டும் எப்போதும் பரதேவதையின் வேலையாளாக இருக்கின்றூர்.

மந்தார வாடிகையில் ஸதா சரத்ருது வஸித்துக்கொண்டு அந்தக் கோட்டையை ரக்ஷித்து வருகிறூர். அவர் அழகில் சிறந்தவர். உலகத்தாரின் சித்தங்களனைத்தையும் சந்தோஷப்படுத்துபவர். இஷஸ்ரீ, ஊர்ஜஸ்ரீ என்னும்

இருவர்களும் அவரது பிராணநாயகிகளாவர். அவ்விருவர்களுடன்கூடச் சரத்ருதுவானவர் தன்னுலுண்டுபண்ணப்பட்ட புஷ்பராசிகளால் ஸ்ரீகாமேச்வரரது பத்னியான ஸாம்ராக்ஞியைப் பூஜிக்கின்றார்.

வில்வலனைச் சிக்ஷித்த அகஸ்தியரே! பாரிஜாதவாடிகையில், எப்போதும் மலர்ந்த முகமுள்ளவரும், லலிதைக்கு மிகவும் பிரியமான தாஸரும், மஹாதேஜஸ்வியும், பனிபோல் குளிர்ந்த உடலுள்ளவருமான ஹேமந்தருதுவானவர் அந்த வாடிகையைஸதா ரக்ஷித்துக்கொண்டு வஸிக்கின்றனர். தன்னுலுண்டுபண்ணப்பட்ட புஷ்பங்களைக்கொண்டு அவர் தேவியைப் பூஜித்துக்கொண்டிருக்கின்றனர். ஸஹஸ்ரீ, ஸஹஸ்யஸ்ரீ என்ற இவ்விருவர்களும் அவரது பிரிய பத்னிகளாவர்.

முனிச்ரேஷ்டரான அகஸ்தியரே! கதம்பவாடிகையிலே சீதளமான சரீரமுள்ள சிசிரருது தங்கி நின்று, அதைப் பரிபாலித்து வருகிறார். அந்த ருதுவால். அவ்விடமெல்லாம் மிகச் சிதளமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த இடத்தில் வசிப்பதால்தான் சியாமளாதேவி மிகச் சீதளமாயிருக்கின்றாள். அவருக்கு தபஸ்ரீ, தபஸ்யஸ்ரீ எனும் இரண்டு உத்தம பத்னிகளுண்டு. அவர் அவ்விருவர்களுடன் கூடிப் பரம பாவநியான ஸ்ரீலலிதையை அர்ச்சிக்கிறார்.

அகஸ்தியர் :—ஹயக்ரீவரே! நானாவிருக்ஷம் முதலிய ஏழு உத்யானங்களில் முதலாவது உத்யானபாலகர் மஹாகாளர் என அறிந்தேன். அங்கு, நான்கு ஆவரணங்களுடன் கூடிய அவருடைய சக்ரமும் உம்மால் கூறப்பட்டது. மற்றைய கல்பகாதி ஆறு உத்யானங்களில் வஸந்தம் முதலிய ருதுநாதர்கள் அவற்றின் பாலகர்களாயிருக்கின்றனர் என்றுணர்ந்தேனே தவிர ஆங்குள்ள சக்ரங்கள், சக்ரதேவிகள் என்னால் கேழ்க்கப்படவில்லை. ஆதலால் ஓ பகவன்! ஸர்வக்

ஏனையும் மஹானுபுமுள்ள தாங்கள் வஸந்தாதி சக்ர ஆவர்ண தேவதைகளைக் கிரமமாகத் திருவாய் மலர்ந்தருள்வீராக.

ஹயக்ரீவர் :—ஓ முனிச்ரேஷ்டரே! அந்தந்த சக்ரத்தி லுள்ள தேவதைகளைக் கூறுகிறேன்; கேளும். காலசக்ரத் தை முன்னர் கூறியுள்ளேன். இப்போது வஸந்த சக்ரத் தைப் பற்றிக் கூறுகிறேன். த்ரிகோணம், பஞ்சகோணம், அஷ்டதள பத்மம், ஷோடசாரபத்மம், மறுபடியுமிருதசாரங் கள், சதுரச்ரம் ஆகிய ஏழு ஆவரணங்களுள்ளது அந்த சக்ரமாகும். அதன் மத்தியில் பிந்து சக்ரத்தில் மஹாப் பிரகாசமுள்ளவராக வஸந்தருதுநாதர் விளங்குகின்றார். அவரது இருபுறங்களிலும் அங்கத்தோடு அங்கமாகச்சேர்ந்து மதுஸ்ரீயும் மாதவஸ்ரீயுமிருக்கின்றனர். தன்னிரு கரங்களால் அவர் அவ்விரு மாதர்களது ஒவ்வொரு ஸ்தநத்தையும் பிடித்துக்கொண்டு மற்ற இருகரங்களால், தன்னால் மலர்த் தப்பட்ட புஷ்பங்களிலிருந்துண்டான மதுவால் நிறைந்த பாத்ரங்களை யேந்தி விளங்குகின்றனர். ஓ விந்தியமலையின் செறுக்கை யடக்கியவரே! இங்ஙனமே ஒவ்வொரு ருதுநா தரையும் தியாநம்செய்தல்வேண்டும். வர்ஷருதுவைத் தியாநஞ் செய்யும்போது முதலிரண்டு சக்திகள் அவர் அங் கத்துடன் ஸம்பந்தித்ததாகவும் மற்றவர்கள் அருகிலிருப் பதாகவும் தியாநஞ் செய்தல் வேண்டும்.

வாஸந்த சக்ரத்திலுள்ள சக்திகளைக் கூறுகின்றேன்; கேளும்! மதுசுக்லப்ரதமா - மதுசுக்லத்விதீயா - மதுசுக்ல த்ரிதியா - மதுசுக்லசதுர்த்தி - மதுசுக்லபஞ்சமீ - மதுசுக்ல ஷஷ்டீ - மதுசுக்லஸப்தமீ - மதுசுக்லாஷ்டமீ - மதுசுக்ல நவமீ- மதுசுக்லதசமீ- மதுசுக்ல ஏகாதசி-மதுசுக்லதுவாதசி-மதுசுக்ல த்ரயோதசி - மதுசுக்லசதுர்த்தசி - மதுசுக்லபூர்ணிமா - மது க்ருஷ்ணப்ரதமா - மதுக்ருஷ்ணத்விதீயா - மதுக்ருஷ்ண த்ரி தீயா - மதுக்ருஷ்ணசதுர்த்தீ - மதுக்ருஷ்ணபஞ்சமீ - மது

க்ருஷ்ண ஷஷ்டீ-மதுக்ருஷ்ண ஸப்தமீ-மது க்ருஷ்ணாஷ்டமீ-மதுக்ருஷ்ணநவமீ-மதுக்ருஷ்ண தசமீ - மதுக்ருஷ்ணஏகாதசி-மதுக்ருஷ்ணத்வாதசி-மதுக்ருஷ்ணத்ரயோதசி - மதுக்ருஷ்ண சதுர்த்தசி-மதுஅமா எனும் முப்பது சக்திகளும், இம் மாதிரியே மாதவசுக்லப்ரதமா முதல் மாதவஅமா வரையில் மற்று மோர் முப்பது சக்திகளும் சேர்ந்து அறுபது வாஸந்த சக்திகளாவர். அவரவர்க்குரிய மந்த்ரங்களால் அந்த அந்த சக்ரத்தில் விதிப்படி இவ்வறுபது சக்திகளும் பூஜிக்கத் தக்கவர்களாவர். வஸந்த சக்ர ராஜத்திற்கு ஏழு ஆவரணங்களும், அவைகளில் அறுபது தளங்களும், அவற்றில் அறுபது சக்திகளு மிருக்கின்றனர். ஸாதகர்கள் இவர்களைப் பிரித்து அந்த அந்த சக்தி மந்த்ரத் தால் அவரவர்களை பூஜித்தல்வேண்டும். வஸந்த சக்ரம் போலவேதான் மற்ற ஐந்து ருது சக்கரங்களும் அமைந் துள்ளன. ஆவரண சக்திகளும் அவ்விதமே யமைந் துள்ளார். ஆயினும் சுக்ர, சுசி முதலிய பேதங்களால் அந்த அறுபது சக்திதேவதைகள் மாத்திரம் வேறு படுவார்கள்.

சுக்ரசுக்லப்ரதமா, சுக்ரசுக்லத்விதீயா என்பது போலவே சுக்ரக்ருஷ்ணப்ரதமாதிகளையுங் கூறல்வேண்டும். இங்ஙனமே சுசிசுக்லப்ரதமா முதலிய பேதங்களால் க்ரீஷ்மசக்ரத் திலும் அறுபது சக்திதேவதைகளிருக்கின்றனர். இப்படியே வர்ஷருது முதலியவைகளிலும் நபசுக்லப்ரதமா, நபஸ்ய சுக்லப்ரதமா முதலிய அறுபது சக்திகளிருக்கின்றனர். ஒவ் வொரு சக்ரத்திலும் அறுபது அறுபது சக்திகள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். நூல் விரியுமென்றஞ்சி ஒன்றை மாத்திரம் கூறி நிறுத்தினோம். இந்த ருதுசக்திகளனை வரும் லலிதாபக்தர்களுக்கு ஸௌக்யத்தை யளிப்பவர் களாவர். இவர்கள் லலிதையின் மஹாமந்த்ர ஜபம், பூஜை, தியானம், ஸ்தோத்திரம் முதலியவைகளில் மிக்க ஆசை

யுள்ளவர்களாவர். கல்பகாதி வாடிகாசக்ரங்களில் விளங்கு மிவர்கள் மதத்தால் மந்தகதியையுடையவர்களாகவும், தத்தம் ருதுக்களில் உண்டாகும் புஷ்பங்களிலிருந்துண்டான மதுக் களால் மஹேச்வரியைப் பூஜிப்பவர்களாகவுமிருக்கின்றனர். இவர்களது ஸங்கியையை ஒன்று சேர்த்துப்பார்த்தால் முன் னூற்றறுபதாகும்.

இங்ஙனம் ஏழுகோட்டைகளிலும் விளங்கும் ரக்ஷ கர்களின் சக்ரதேவதைகளின் பெயர்களை வினவிய உமக்கு அவை விஸ்தாரமாகக் கூறப்பட்டன. மற்றக் கோட்டைகளின் மூலஸ்வரூபத்தையும் விஸ்தாரத்தையும் ஆங்குள்ள சக்தி களையும் கூறுகிறேன்; கவனமாகக்கேளும்.

இருபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று. 184 சுலோகங்கள்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்.

இரத்னக்கோட்டைகளின் லக்ஷணங்கள் முதலியன.

ஹயக்ரீவர்:—சிற்பிகளால் நிர்மிக்கப்பட்ட உலோஹ மயமான கோட்டைகளின் லக்ஷணங்களை யுரைத்தேன். இப் பொழுது இரத்னமயமான கோட்டைகளைக் கூறுகிறேன். கவனியும்! ஸுவர்ணமயமான கோட்டைக்கும் புஷ்யராக மயமான கோட்டைக்கு மிடையே ஏழு யோஜனைதூரம் இடைவெளியுண்டு. அவ்வெளியில் மதங்கொண்ட ஸித்தர் களும், ஸித்த ஸ்திரீகளும், பலவகை ரஸஸித்தி, ரஸாயன ஸித்தி, கட்கஸித்தி, பாதாஞ்சனஸித்தி முதலிய ஸித்திகளை விளையாடுகின்றனர்; அன்றியும், லலிதையினிடம் பக்தி கொண்ட மஹாஜனங்களை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு

ஸ்ரீ நகரத்தின்

2. இரத்னக் கோட்டைகள்.



By courtesy of *Sri Brahma Vidya Vimarsini Sabha.*

நாநாவிதமான ஸித்தகணங்களங்குத் தங்கி மதிராரஸத்தைப் பருகுகின்றனர்.

புஷ்யராகாதி கோட்டைகளிலும் முற்கூறிய கோட்டைகளைப்போலவே துவாரம் கோபுரம் முதலியன அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்குள்ள கதவுகளும் தாழ்ப்பாள்களும், உதயமாகும் இளம் ஸூர்யனைப்போல் பிரகாசிக்கின்ற புஷ்யராகாதிகளாலேயே செய்யப்பட்டனவாகும். தங்கக்கோட்டைக்கும் புஷ்யராகக்கோட்டைக்கும் இடையிலுள்ள ஸ்தலமும் புஷ்யராக மயமாகவே இருக்கின்றது. இனிச் சொல்லப்போகிற மஹாஸாலங்களில் மத்தியப் பிரதேசங்களிலுள்ள ஸகல இடங்களிலும் பக்ஷிகளும், ஓடைகளும், நதிகளும், மரங்களும், கோட்டை என்ன வர்ணமோ அதே வர்ணமுள்ளவைகளாயிருக்கின்றன. முற்பிறவியில், எவர், தேவியைப் பலவகையான பூஜாக்ரமங்களால் உபாஸித்து உடலை விட்டார்களோ, அவர்களே ஸித்தர்களாகி முற்கூறிய இடத்திலிருந்துகொண்டு தேவியை யுபாஸிக்கின்றனர். அவ்வனைவரும் லலிதா மந்த்ரத்தையே ஜபித்துக்கொண்டு அந்த கிரமத்திலேயே பற்றுடையவர்களாய் லலிதாதேவியின் நாமாக்களைச் சங்கீர்த்தனஞ் செய்துகொண்டு விளங்குகின்றனர்.

புஷ்யராகக்கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் பத்மராகமயமான சதுரச்ரக்கோட்டை இருக்கிறது. அதன் துவாரம் முதலியவைகளும் மத்தியப் பிரதேசமும் பத்மராக நிறமாகவே விளங்குவனவாகும். அங்கே, சாரணலோகத்திலுள்ளோர் முன்னுடலை நீத்து ஸித்தியைப்பெற்று மஹாராக்ஞியின் சரணாரவிந்த ஸேவகர்களாக இருக்கின்றனர். சாரணஸ்திரீகளும் அழகிய சரீரமுள்ளவர்கள்; மதமுள்ளவர்கள்; அங்கு அவர்கள் கல்பவிருக்ஷத்தின் அடியில் உள்ள மேடைமேல் அமர்ந்து அடிக்கடி லலிதா தேவியைப்பற்றி இயற்றப்பட்ட கீதங்களை மிகவினிமையாகக் கானஞ் செய்

கின்றனர். அன்றியும், அவர்கள் தத்தம் கணவர்களுடன் மதுரமான மதுவைப் பருகுகின்றனர்.

பத்மராகக்கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில், முன் கோட்டைகளுக்குச் சமமான ஆக்ருதியையுடைய கோமேதக கோட்டை யொன்றிருக்கின்றது. அவ்விரண்டு கோட்டைகளுக்கும் இடையே கோடிக்கணக்கான யோகினிகளும் பைரவர்களும் வசிக்கின்றனர். தேவியின் சரீரத்திலிருந்து தோன்றிய இவர்கள் அங்கு காலஸங்கர்ஷிணி யென்னும் தேவியை அர்ச்சிக்கின்றனர்.

கோமேதக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் மிக உயரமான வஜ்ரக்கோட்டை இருக்கின்றது. கோமேதக வஜ்ரக்கோட்டைகளுக்கு இடையிலுள்ள இடமும் வஜ்ரமயமாகவே விளங்குகின்றது. அகஸ்தியரே! முற்பிறவியில் மஹாதேவியைப் பூஜித்தவர்கள் அந்த ஸுகிருதத்தால் ஆங்கு அப்ஸரஸ்ஸுகளுடன் கூடிக் கந்தர்வர்களாய் வீணை போன்ற இனிய குரலால் தேவியினது குணகணங்களை வர்ணித்துப் பாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் மன்மதனுக்கொப்பான திருமேனியைப் பெற்றவர்கள்; காம போகத்தில் பேரவாக்கொண்டவர்கள்; சிறந்த ஸ்வபாவம் வாய்ந்தவர்கள்; தேவியினிடம் ஆழ்ந்த பக்தியுள்ளவர்கள். ஊர்வசீ, மேநகை, ரம்பை, அலம்புஸா, மஞ்ஜுகோஷா, ஸுகேசீ, பூர்வஸித்தி, க்ருதாசிகை, க்ருதஸ்தலா, விச்வாசீ, புஞ்சகஸ்தலா, திலோத்தமை என்று கூறப்படும் இவர்களும், இவர்களைப்போன்ற மற்றும்பலரும் தேவ தாஸிகளாவர். இவர்கள் கந்தர்வர்களுடன் கூடிப் புதியதான கல்பவிருக்ஷத்தின் மதுவைப் பருகி யடிக்கடி ஸ்ரீலலிதாதேவியைத் தியானஞ் செய்துக்கொண்டிருக்கிறார்கள். தங்களது ஸௌபாக்யம் மேன்மேலும் விருத்தியாதற் பொருட்டுத் தேவியினுடைய மந்த்ரத்தை ஸதா ஜபிப்பார்கள். பதினான்கு இடங்களிலிருந்து தோன்றிய இவர்கள் பரம ஸந்தோஷத்

துடன் அங்கேயே தேவியைப் பூஜித்துக்கொண்டு வசிக்கின்றனர்.

அகஸ்தியர் :—விபோ! ஸர்வ வித்யைகளுக்கும் நிதியாகவுள்ளவரே! மஹாப்ராக்ஞரே! அப்ஸரஸ்ஸுகள் பிறந்த பதினான்கு ஸ்தானங்களையுங் கூறுங்கள்.

ஸ்ரீஹயக்ரீவர் :—பிரஹ்மாவினுடைய ஹ்ருதயம், காமன், ம்ருத்யு, பூமி, காற்று, ஸூர்ய கிரணங்கள், சந்த்ர கிரணங்கள், வேதங்கள், அக்நி, மின்னல், அமிருதம், இரண்டு தக்ஷகன்னிகைகள், ஜலம் என்னும் இப்பதினான்கும் ஸௌபாக்யமுள்ள தேவ வேசிகளான அப்ஸரஸ்களின் பிறவிக்குக் காரணமானவைகளென வித்வான்கள் கூறுகின்றனர். இவ்வனைவரும் கந்தர்வர்களுடன் தேவியைப் பூஜிக்கின்றனர். அன்றியும், கின்னரர்களும் கிம்புருஷர்களும் தத்தம் மனைவிகளுடன் மதோன்மத்தர்களாய் முத்துமயமான பூமியில் வசிக்கின்றனர். மஹாராக்ஞியின் மந்த்ர ஜபத்தால் ஸகல பாபங்களும் நீங்கினவர்களாய் அழகாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டுமிருக்கின்றனர். அகஸ்திய முனிவரே! வஜ்ரமயமான அதே பூமியில் வஜ்ரா எனும் நதியொன்றிருக்கின்றது. அதன் கரைகளும் வஜ்ரம்போன்ற அடர்ந்த மரங்களால் சூழப்பட்டிருக்கின்றன. வஜ்ரமயமான மணலும் வஜ்ரதிரவமயமான ஜலமுமுடைத்தான அந்தத் தூய நதியானது அங்கு நாற்புறங்களிலும் ஸதா பாய்ந்துகொண்டிருக்கின்றது. லலிதா பரமேசாநியினிடம் பக்தி கொண்டவர்கள் யாரோ அவர்கள் அந்த நதியின் தீர்த்தத்தை அருந்தினால் வஜ்ரமயமான சரீரமுடையவர்களாய் நோயற்று நீண்ட ஆயுளுள்ளவர்களாகின்றனர். வஜ்ராயுதமானது தன் கையைவிட்டு நழுவும்படி பண்டாஸுரனால் செய்யப்பட்டபொழுது, இந்திரன் இந்த நதிதீரத்தில், பக்தியுள்ளவனாய், வஜ்ரேசியைநாடித் தவம் புரிந்தனன். அந்தத் தீர்த்தத்தி

லிருந்து தோன்றிய தேவி இந்திரனுக்கு வஜ்ரத்தை யளித்து மறைந்தனள். அவனும் க்ருதார்த்தனுகி ஸ்வர்க் கஞ் சென்றான்.

வஜ்ரக்கோட்டைக்கு ஏழாவது யோஜனையில் மிக உயரமானதும், முற்கூறிய கோட்டைகளைப்போலவே அழ கிய துவார கோபுரங்களுடன் விளங்குவதுமான வைடூரியக் கோட்டை இருக்கின்றது. இவ்விரண்டிற்கு மிடையிலுள்ள பிரதேசம் வைடூரியத்தாலேயே நிர்மாணஞ் செய்யப்பட்டு மிகப்பிரகாசத்தோடு விளங்குகின்றது. பாதாளவாசிகளில் தேவிபூஜையைச் செய்தவர்கள் எவர்களோ அவர்கள், அங்கே ஸித்த சரீரமுள்ளவர்களாய் ஸுகமாக வசிக்கிறார் கள். சேஷன், கார்க்கோடகன், மஹாபத்மன், வாஸுகி, சங்கன், தக்ஷகன், சங்கசூடன், மஹாநந்தன், மஹாபணன் முதலிய நாகர்கள் நாகஸ்திரீகளுடன்கூட அங்கு வசிக்கின் றனர். மஹாபலி முதலிய தர்மசீலர்களான தைத்யர் களுடைய கணங்களும் பத்னிகளுடனும், மித்திரர்களான நாகங்களுடனும் வசிக்கின்றனர். அந்த அஸுர நாகர்கள் லலிதா மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு லலிதா சாஸ்திர விதிப்படி தீக்ஷை செய்து கொண்டவர்களாய்ப் பிரதிதினமும் ஸ்ரீலலிதையை யாராதித்துக்கொண்டிருக்கின்றனர். அந்த வைடூரிய அங்கணத்திலுள்ள நதியின் ஜலம் மிகச்சீதளமா யிருக்கின்றது. ஓடைகளில், மதங்கொண்ட ஹம்ஸங்களும் ஸாரஸ பக்ஷிகளும் அழகாக விளையாடுகின்றன. வைடூரிய மணிமயமான மாளிகைகளில் நாகர்களும் அஸுரர்களும் பெண்களுடன் கூடிக் கிரீடை செய்கின்றார்கள்.

வைடூரியக்கோட்டைக்கு ஏழாவது யோஜனையில் சக்ர வாகம்போலுள்ள இந்த்ரநீல மயமான ஒருகோட்டை இருக் கின்றது. அவ்விரண்டு கோட்டைகளுக்கு மிடையே யுள்ள ஸ்தலம் இந்த்ரநீலமயமாகவே இருக்கின்றது. ஆங்குள்ள

நதிகளும் ஓடைகளும் மதுரமானவைகள். பூலோகத்தில் எவர்கள் லலிதாமந்த்ர ஸாதகர்களோ, அவர்கள், தங்கள் சரீரம் விழுந்தபின்னர் இந்த இந்த்ரநீல அங்கணத்தில் வசிப்பார்கள். அங்கே மனோஹர திவ்ய வஸ்துக்களை அநுபவித்துக்கொண்டு பெண்மக்களுடன்கூடி மதுரமான மதுவைப் பருகிப் பக்திப் பரவசர்களாய்க் கூத்தாடுகின்றனர். ஓடைகளின் கரைகளிலும், நதீகூலங்களிலும், அழகிய லதாக்ருஹங்களிலும், செல்வம் நிறைந்த மண்டபங்களிலும் கூடி ஆடி ஆனந்த மடைகின்றனர். மஹா பாக்கியசாலிகளான அவர்கள் தமது மனைவிகள் சூழ ஸதா ஜபம் செய்துக்கொண்டு தேவியினது குணங்களையே கூறிக்கொண்டு அங்கு வசிக்கின்றனர். புண்யகர்மா தேய்ந்தபின்னர், மறுபடியும் இம்மண்ணுலகில் வந்து மானிடப் பிறப்பையடைந்து பூர்வ ஜன்ம வாசனையால் ஸ்ரீ தேவியையே அர்ச்சிப்பார்கள். அச்சிறந்த புண்யத்தால் மறுபடியும் ஸ்ரீநகரத்திற்கேகி இவ்விந்த்ரநீல அங்கணத்தையே யடைவார்கள். அந்த இடத்தின் சேர்க்கையால் ராகத்வேஷங்கள் உண்டாகி அதனால் மலினமான மனோவ்ருத்தியுள்ள மனிதர்களாகவே ஆகின்றனர். ஆனால், எவர்கள் காமக்ரோதங்களையும் ஸுகதுக்கங்களையும் விட்டு ஜிதேந்திரியர்களாய் விளங்குகின்றார்களோ அந்த ஞானிகள், சின்மய ஸ்வரூபமாகி மஹேச்வரியுடன் ஐக்கியமாகின்றனர்.

இந்த்ரநீலக்கோட்டைக்கு ஏழாவது யோஜனையில் முக்தாரத்ந மயமாய் முற்கூறிய கோட்டைகளைப் போலவே அழகிய கோபுரங்களையுடைய கோட்டை யொன்றிருக்கின்றது. அவ் விந்த்ரநீல முத்துக்கோட்டைகளுக்கிடையிலுள்ள பிரதேசம் மிக மிகப் பிரகாசமாயும், முத்து மயமாயும் சீதளமாயும், மனோஹரமாயுமிருக்கின்றது. தாம்ரபர்ணீ, மஹாபர்ணீ, ஸதாமுக்தா, ஸதோதகா முதலிய மஹா நதிகள் அங்கே ஓடுகின்றன. அவற்றின் கரைகளின்மீது தேவலோக வாஸிகள் முற்பிறவியில் தேவீ மந்த்ரத்தை ஜபித்த ஸுகிருதத்தால் இப்பிறவியி லிங்குவந்து வசிக்கின்றனர். இக்

கோட்டையைச் சுற்றிலும் எட்டுதிக்குகளிலும் இந்திரன் முதலிய திக்பாலர்களது லோகங்களிருக்கின்றன. இந்த்ர நீலக்கோட்டை முத்துக்கோட்டை இவ்விரண்டு கோட்டைகளின் வாயிற்படிகளுக்கு இடையிலுள்ள பிரதேசத்தின் கீழ்த்திசையில் இந்திரலோகமும், அதற்கடுத்த மூலையில் அக்னி லோகமும், தென் திக்கில் யமலோகமுமிருக்கின்றன. யமலோகத்தில் யமதர்மன் தண்டதரனாய்த் தீவ்ரஸ்வபாவமுள்ளவனா யிருந்துகொண்டு ஸதா ஸ்ரீ தேவதா மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டிருக்கின்றனர். தேவியின் ஏவலாளியான அவர் சித்ரகுப்தன் முதலிய யமபடர்களுடன், ஸ்ரீ தேவீ தந்த்ர த்ரோஹிகளையும், குருவினால் சபிக்கப்பட்டவர்களையும், துராசாரர்களையும், லலிதாத்வேஷிகளையும், கபட பக்தியுள்ளவர்களையும், மூர்க்கர்களையும், கர்வமுள்ளவர்களையும், மிக்கக் கொழுப்புள்ளவர்களையும், *மந்த்ரத்தைத் திருடுபவர்களையும், துர்மந்த்ரத்தை ஜபிப்பவர்களையும், துர்வித்யா தர்மங்களை ஆச்ரயித்தவர்களையும், நாஸ்திகர்களையும், பாபிகளையும், வீணாகப்பிராணிஹிம்ஸை செய்பவர்களையும், உலகத்தால் த்வேஷிக்கப்பட்டவர்களையும், மற்றபாபிகளையும், மஹா தேஜஸ்ஸையுடைய ஸ்ரீதேவியின் ஆணையின்படி கால ஸூத்ரம், ரௌரவம், கும்பீபாகம், கோரமான அஸிபத்ர வனம், க்ருமிபக்ஷம், ப்ரதாபனம், ஜ்வாலாபக்ஷம், ஸூசி வேதம், அங்காரதாபனம் முதலிய கஷ்டமான நரகங்களில் தள்ளுகிறார்.

யமலோகத்திற்கு மேற்குத் திசையில், கரத்தில் கத்தியேந்திய நிருருதி, ராக்ஷஸ லோகத்திலிருந்துகொண்டு லலிதையை அர்ச்சித்துக்கொண்டிருக்கிறார். அதற்கு வடபுறத்தில் இரண்டு வாயிற்படிகளுக்கும் நடுவில் வாருண லோகத்தை ஆச்ரயித்து வருணனிருக்கின்றார். அவர் வாருணீ யெனும் மதுவின் பானத்தால் உன்மத்தராய் வெளுத்த சரீர

---

* பிறருக்கு உபதேசிக்கும்போது அதைக்கேட்டு ஜபிப்பவர்கள்.

முள்ளவராய் மகரத்தை (மீனை) வாஹனமாயுடையவராய் ஸதா ஸ்ரீதேவதா மந்த்ரத்தை ஜபஞ்செய்துகொண்டு ஸ்ரீதேவிக்ரமத்தை ஸாதிக்கிறார். ஸ்ரீதேவதா தர்சந (சாஸ்திர)த்திற்கு விரோதிகளான த்வேஷிகளைப் பாச பந்தத்தாற் கட்டி அதோ மார்க்கத்தில் தள்ளுகிறார். தேவிபக்தர்களையோ வெனில் பந்தத்தினின்றும் விடுவிக்கிறார்.

அந்த வருண லோகத்திற்கு வடக்கு மூலையில் மஹாப் பிரகாசமான வாயுலோகமிருக்கின்றது. அங்கே வாயு சரீர முள்ளவர்களும், ஸதா பொங்கிவழியும் ஆனந்தமுள்ளவர்களுமான ஸித்தர்களும், திவ்யரிஷிகளும், ச்வாஸாப்யாஸஞ் செய்யும் மற்றவர்களும், கோரக்ஷநாதர் முதலியவர்களும், யோகாப்யாஸஞ் செய்யும் யோகிகளும் புடை சூழ, மஹா பலமுள்ள ஸ்ரீமாருதேச்வரர் (வாயுபகவான்), பெரிய சிறந்த மானின்மீதாரோகணித்துத் துவஜமெனும் ஆயுதத்தைக் கரத்திலேந்தி ஸதா லலிதா ஜபம், தியாநம், க்ரமம், பூஜை இவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். அகஸ்த்யரே! அவர் ஏழுவகையான மூர்த்த(வடிவ)ங்களையுடையவராயிருக்கின்றார். அந்த மாருதநாதருக்கு இடை, பிங்களை, ஸுஷும்னை என்னும் மூவரும் மனைவிகளாவர். அவர்கள் ஸதா மதுபான மத்தர்களாயிருக்கின்றனர். ஆனந்தம் நிறைந்த அவயவமுள்ள மற்றசக்திகளால் சூழப்பட்டவராயும் ஸ்ரீமானுமுள்ள அந்த மாருதேச்வரர் ஸதா பரதேவதா மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டிருக்கிறார். எந்தவலிமையால் கல்பாந்த காலத்தில் ஸ்தாவர ஜங்கமாத்மக முவ்வுலகங்களும் தூள் தூளாக நாசஞ்செய்யப்படுகின்றனவோ அந்த வலிமை விருத்தியாவதற்காக வாயுதேவன் ஸர்வாபரண பூஷிதையான அந்த லலிதாபரமேச்வரியைப் பூஜித்துக்கொண்டும் தியானித்துக் கொண்டுமிருக்கின்றார்.

அந்த வாயுலோகத்திற்குக் கிழக்குத் திக்கில் இருக்கிற யக்ஷலோகத்தில் இரண்டு வாயிற்படிகளுக்குமிடையில்

அழகிய காந்தியுள்ளவரான ஸ்ரீமான் யக்ஷேச்வரர் (குபேரன்) வசிக்கிறார். * ஒன்பது வகையான நிதிகளுடனும் ரித்தி விருத்தி முதலிய சக்திகளுடனும் கூடி அவர் லலிதாபக்தர்களுக்கு ஸகல ஸம்பத்தையும் யதேஷ்டமாக அளிக்கிறார்; பர்த்தாவுக்கு அநுகூலமான செய்கைகளையுடைய அழகிய யக்ஷஸ்திரீகளுடன் பல்வகையான மதுக்களால் பரதேவதையை யாராதிக்கிறார். மணிபத்ரன், பூர்ணபத்ரன், மணிமான், மணிகந்தரன், முதலிய யக்ஷஸேனாபதிகளுமங்கு வசிக்கின்றார்கள்.

யக்ஷலோகத்திற்குக் கீழ்த்திசையில் மிகச்செல்வம் வாய்ந்ததும் நவரத்நகசிதமாயுள்ளதுமான ருத்ரலோகம் இருக்கிறது. அதற்கு அதிஷ்டானதேவர் ருத்ரனாவார். அவர் ஸதாகோபத்தால் ஜ்வலிப்பவராகவும், பெரிய பாணப்பெட்டிகளை எப்போதும் உடையவராகவும், ஜ்வலிக்கும் சிவந்த கண்களையுடையவராகவும், ஜடா மகுட சோபையுள்ளவராகவும், ஸகல ஆபரணங்களையு மணிந்தவராகவும் விளங்குகிறார். அவருக்குச் சமமானவர்களும், மஹாபலமுள்ளவர்களும், உலகையெரிப்பதில் நிபுணர்களும், நாணேற்றிய வில்லையுடையவர்களும், பதினாறு ஆவரணங்களில் வஸிப்பவர்களுமான ருத்ரர்களால் சூழப்பட்டவரான மஹாருத்ரர் ஸதா தேவீத்யானஸம்பன்னராய் தேவீ பூஜையில் பேராசையுள்ளவராய் விளங்குகிறார். அநேக கோடி ருத்ராணீகணங்கள் அவரைச் சூழ்ந்திருக்கின்றனர். அந்த ருத்ராணிகளும் மஹாப்பிரகாச சரீரங்களையுடையவராகவும், நவயௌவனச் செறுக்குள்ளவர்களாகவும், லலிதாத்யானத்திலீடுபட்ட மனத்தர்களாகவும், ஸதா மதுபான மத்தர்களாகவுமிருக்கின்றனர். மூன்று கூறுகளுள்ள சூலத்தைத் தரித்த ஸ்ரீமான் மஹாருத்ரர் ருத்ராணீ கணங்கள்

* சங்கநிதி, பதுமநிதி, மஹாபத்மநிதி, மகரநிதி, கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தநிதி, நீலநிதி, கர்வநிதி.

புடைசூழ, ஹிரண்யபாஹு முதலிய இதர ருத்ரர்களால் ஸேவிக்கப்படுகிறார். அவர், ஸ்ரீலலிதோபாஸனையினின்றும் நழுவியவர்களையும், கர்வங் கொண்டவர்களையும், குருவினால் திக்ஷிக்கப்பட்டவர்களையும் சூலத்தாற் பிளந்து, கண்ணி லிருந்து தோன்றும் கடுங்கனலால் எரித்து, அவர்களது பசுக்களையும் வேலைக்காரர்களையும் பிரஜைகளையும் நாசஞ் செய்கிறார். அவர் தேவியின் ஆக்ஞாகரராகவும், மஹா வீரராகவும், தேவியின் கட்டளைகளை நிறை வேற்றுபவராக வும் இருந்துகொண்டு மிக அழகிய ருத்ரலோகத்தில் பிரகாசிக்கிறார். அகஸ்த்ய மஹா ரிஷியே! மஹா ருத்ரருக்கு எல்லாவற்றையும் அழிக்க வல்லவர்களான பரிவாரருத்ரர்கள் எவ்வளவு பேர்களிருக்கின்றார்களோ அவர்களைப்பற்றிய யாவையும் கூற எவரால்தான் முடியும்? பூமியில் எந்த ருத்ரர்கள் அதிஷ்டிதர்களா யிருக்கின்றார்களோ அவர்களது ஸங்கியை ஆயிரங்களின் ஆயிரமாகும். த்யுலோகத்திலுள்ள வர்களும் ஆயிரமாயிரமாக இருக்கின்றனர். *எவர்களுக்கு அன்னமே பாணமோ, எவர்களுக்கு வாயுவே (வாதமே) சரங்களோ, எவர்களுக்கு மழையே பாணங்களோ, அத் தகைய ருத்ரர்கள் மிகப் பிரகாசமுடையவர்களாயும் சிவந்த நேத்ரங்களோடு மஹா தேஜஸ்ஸுள்ளவர்களாயும் விளங்கு கின்றனர்.

அன்றியும், ஜடைகளையுடையவர்களாயும், கைகளில் தனுஸ்ஸையுடையவர்களாகவும், நீலகண்டமுடையவர்களாக வும், செந்நிறமான திருமேனியை யுடையவர்களாகவும், (திடீ ரெனத் தோன்றவும் மறையவுங்கூடிய ஸாமார்த்யமுடைத் தாய் மனிதர்களுக்கு உபத்ரவஞ்செய்யும்) பூதங்களுக்கு அதி பதிகளாகவும், சிகையற்றவர்களாகவும், §புஜிக்கும் வஸ்துக்

---

* அபத்ய ஆஹாரத்தாலும் வாதரோகத்தாலும், அதிவிருஷ்டி (பெருமழை) யாலும் பகைவரைக் கொல்பவர்.

§ தாது வைஷம்யத்தினால் ரோகத்தையுண்டு பண்ணுபவர்.

ஸாயணாசார்யர் ருத்ரபாஷ்யம்.

களிலிருந்துகொண்டு அவற்றைப் புஜிக்கும் ஜனங்களை வருத்துபவர்களாகவும், பானம் பண்ணு (அருந்)தற்குரிய திரவ வஸ்துக்களிலிருந்துகொண்டு அவற்றைப் பானம் பண்ணும் ஜனங்களை வாட்டுபவராயும், வழியைக் காப்பவர்களாயும் அதாவது தர்ம அதர்ம மார்க்கங்களை ரக்ஷிப்பவர்களாயும், காசி, பிரயாகை முதலிய சிறந்த புண்யதீர்த்தங்களில் வஸிப்பவர்களாகவும், ஈட்டி பட்டாக்கத்தி முதலிய ஆயுதங்களைத் தரித்துள்ளவர்களுமான ஆயிரக்கணக்கான இதர ருத்ரர்கள் ஸ்ரீலலிதாம்பாளின் ஆக்ஞையை நிறைவேற்றிக்கொண்டு நான்கு திசைகளிலும் வியாபித்து விளங்குகின்றனர். அந்த ருத்ரர்கள் யாவரும் மஹாத்மாக்களே; ஒரு க்ஷணத்தில் மூவ்வுலகங்களையும் எரிக்கவல்லவர்கள்; அவர்கள் பரதேவதையின் தியானத்திலீடுபட்டவர்களையும், தேவீமந்த்ரங்களை ஜபிப்பவர்களையும், ஸ்ரீதேவியினிடத்தில் சலனமற்றபக்தி யுடையவர்களையும் காப்பாற்றுகின்றனர்.

முத்துக்கோட்டையில் பதினாறு ஆவரணங்களையுடைய சக்ரத்தை யாச்ரயித்துக்கொண்டு வசிக்கும் ஹிரண்யபாஹு முதலிய எல்லா ருத்ரர்களும் ஜ்வலிக்கும் கோபமுடையவரான மஹாருத்ரரை யுபாஸிக்கின்றனர்.

இங்ஙனம் முத்துக்கோட்டையை இறுதியாகவுடைய ரத்னஸாலைகளையும் அவற்றிலுள்ள அங்கணங்களையும், அவற்றைக்காப்பவர்களையும் அங்கே வஸிப்பவர்களையும் பற்றிய விஷயங்கள் என்னால் சுருக்கமாகக் கூறப்பட்டன.

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று. 101 சுலோகங்கள்.

முப்பதாவது அத்தியாயம்.

ருத்ராலய ருத்ர விசேஷ நாமங்கள்.

அகஸ்தியர்.—ஒ கருணாநிதியே! ஷோடசாவரண சக்ர மென்பதெது? ஆங்குள்ள ருத்ரர்கள் யாவர்? அவர்களின் நாமங்கள் எவை? எந்த எந்த ஆவரணத்தில் யார் யார் வஸிக்கின்றனர்? அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடுகுறிப்பெயரையும் காரணப் பெயரையுங் கூறியருள்வீராக.

ஹயக்ரீவர்.—அங்கு முத்துச் சரங்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் ருத்ராலயம் ஒன்று இருக்கின்றது. அது ஐந்து யோஜனை அகலமும் ஐந்து யோஜனை நீளமுமுள்ளது. சுற்றிலும் பதினாறு ஆவரணங்கள் சூழ மத்தியில் ஒரு மனோஹரமான ஆஸனமிருக்கின்றது. அம்மத்ய பிந்து பீடத்தில், ஜ்வலிக்கும் கோபமுள்ளவராயும், மூன்று கண்ணுள்ளவராயும், எப்போதும் ஸந்நத்தமாய் நாணேற்றிய வில்லையுடையவராயுமுள்ள மஹாருத்ரர் விளங்குகின்றனர். கடோத்பவரே! முதல் ஆவரணமான த்ரிகோணத்தில் 1. ஹிரண்யபாஹு; 2. ஸேநாநீ; 3. திசாம்பதி யென்னும் மூன்று ருத்ரர்கள் இருக்கின்றனர்.

இரண்டாவது ஆவரணம்—ஷட்கோணம்.

1. விருக்ஷர்; 2. ஹரிகேசர்; 3. பசுபதி; 4. ஸஸ்பிஞ்சரர்; 5. த்விஷீமான் (மிகுந்த காந்தியுள்ளவர்); 6. பதீனாம்பதி; (தூமாதி, அர்ச்சிராதி முதலிய மார்க்கங்களுக்கு அதிபதி).

மூன்ருவது ஆவரணம்—அஷ்டகோணம்.

1. பப்ருசர் (விருஷபாரூடர்); 2. விவ்யாதி (சத்ருக்களைச் சிக்ஷிப்பவர்); 3. அந்நபதி; 4. ஹரிகேசர் (கறுத்த கேசமுடையவர்); 5. உபவீதி; 6. புஷ்டபதி (பரிபூர்ண குணமுள்ளவர்களுக்குப் பதி); 7. பவர்; 8. ஹேதி.

நான்காவது ஆவரணம்—தசதள கமலம்.

1. ஜகத்பதி ; 2. ருத்ரர் ; 3. ஆததாவி (நீண்ட தனுஸ் ஸால் ரக்ஷிப்பவர்) ; 4. க்ஷேத்ரபதி ; 5. ஸூதர் (ஸாரதி) ; 6. அஹந்த்யர் (கொல்லத்தகாதவர்) ; 7. வநபதி ; 8. ரோஹிதர் (ரக்த நிறமுடையவர்) ; 9. ஸ்தபதி (பிரபு) ; 10. விருக்ஷபதி.

ஐந்தாவது ஆவரணம்—துவாதசதள கமலம்.

1. மந்த்ரீ ; 2. வாணிஜர் (வர்த்தகர்களுக்கு யஜமானன்) ; 3. கக்ஷபதி (செடி கொடிகளின்பதி) ; 4. புவந்தீ (பிரபஞ்சத்திற்கு ஆதாரமானவர்) ; 5. வாரிவஸ்க்ருதர் (பக்தவத்ஸலன்) ; 6. ஔஷதிபதி ; 7. உச்சைர்க்கோஷர் (உரத்த குரலுள்ளவர்) ; 8. ஆக்ரந்தயர் (சத்ருக்களை யழவைப்பவர்) ; 9. பத்தீநாம்பதி (பதாதிகளின்பதி) ; 10. க்ருத்ஸ்நவீதர் (ஸகல ஸேனைகளாலும் சூழப்பட்டவர்) ; 11. தாவன் (சத்ருவைத் தொடர்ந்து ஓடுபவர்) ; 12. ஸத்வபதி (சரணாகத ரக்ஷகர்).

ஆறுவது ஆவரணம்—பதின்மூன்று தளகமலம்.

1. ஸஹமானர் (சத்ருக்களை ஸ்வாதீனப்படுத்திக் கொள்பவர்) ; 2. நிவ்யாதி (சத்ருக்களைச் சிக்ஷிப்பவர்) ; 3. ஆவ்யாதினீபதி (சூரஸேநாபதி) ; 4. ககுபர் (பிரதானர்) ; 5. நிஷங்கீ (கத்தி யேந்தியவர்) ; 6. ஸ்தேனபதி (ரஹஸ்யமாகத்திருடுபவருக்கு யஜமானன்) ; 7. நிஷங்கி ; 8. இஷுதிமான் (அம்பறாத்தூணியுடையவர்) ; 9. தஸ்கராணாம்பதி (வெளிப்படையாய்த் திருடுபவர்க்குப்பதி) ; 10. வஞ்சத் (ஸ்வாமி திரவியத்தை யபகரிப்பவர்) ; 11. பரிவஞ்சத் (எல்லா விவகாரங்களிலும் கபடி) ; 12. ஸ்தாயூநாம்பதி (நம்பியவர் பொருளைத் திருடுபவர்க்குப்பதி) ; 13. நிசேரு (ஏமாறும் ஸமயம் பார்த்துத் திருடுபவர்).

ஏழாவது ஆவரணம்—ஷோடச (16) தளகமலம்.

1. பரிசரர் (திருடும் எண்ணத்தோடு எங்குந் திரிபவர்); 2. அரண்யபதி (வழிப்போக்கரைக் கொள்ளையடிக்கக் காட்டில் திரிபவர்); 3. ஸ்ருகாவி (வஜ்ராயுதத்தால் தன்னைக் காத்துக் கொள்பவர்); 4. ஜிகாம்ஸர்கள் (பிராணிகளைக் கொல்வதில் ஆசையுள்ளவர்); 5. முஷ்ணத்பதி (உழவாளியாயிருந்து யஜமானனது தான்யத்தைத் திருடுபவர்களின்பதி); 6. அஸிமத்துக்கள் (கத்தியையுடையவர்கள்); 7. நக்தஞ்சரர் (திருடுவதற்கு இரவில் திரிபவர்); 8. ப்ரக்ருந்தபதி (கொன்று திருடுபவர்க்குப்பதி); 9. உஷ்ணீஷீ (தலைப்பாகையணிந்து பெரிய மனிதனைப்போல் நடித்துத் திருடுபவர்); 10. கிரிசரர் (காட்டில் கட்டை வெட்ட வருபவரைப் பறிப்பவர்); 11. குலுஞ்சபதி (பூமியைத் திருடும் திருடர்க்குப் பதி); 12. இஷுமத்துக்கள் (பயப்படுத்துவதற்குக் கையில் அம்பையுடையவர்); 13. தன்வாவிகள் (பயப்படுத்த வில்லுடையவர்); 14. ஆதன்வானர்கள் (வில்லில் நாணேற்றுபவர்); 15. ப்ரதிததானர்கள் (வில்லில் அம்பைத் தொடுப்பவர்); 16. ஆயச்சத்துக்கள் (நாணை யிழுப்பவர்கள்); ஆகிய இப்பதினாறு ருத்திரர்களும் ஏழாவது ஆவரணமாகும் பதினாறிதழ்க் கமலத்தில் வஸிப்பவர்களாவர்.

எட்டாவது ஆவரணம்—பதினெட்டிதழ்க் கமலம்.

1. விஸ்ருஜத்துக்கள் (பாணத்தை விடுப்பவர்); 2. அஸ்யத்துக்கள் (குறிவரை பாணத்தைச் செலுத்துபவர்); 3. வித்யத்துக்கள் (லக்ஷ்யத்தைப் பாணத்தாலடிப்பவர்); 4. ஆஸீநர்கள் (உட்கார்ந்திருப்பவர்); 5. சயாநர்கள் (படுத்திருப்பவர்கள்); 6. ஸ்வபத்துக்கள் (தூங்குபவர்); 7. ஜாக்ரத்துக்கள் (விழித்திருப்பவர்); 8. திஷ்டத்துக்கள் (நின்றுகொண்டிருப்பவர்); 9. தாவத்துக்கள் (ஓடித்திரிபவர்); 10. ஸபாப்யஃ (ஸபை வடிவமாயிருப்பவர்); 11. ஸபாபதிகள்; 12. அஸ்வர்கள்; 13. அஸ்வபதிகள்; 14. ஆவ்யா

தினீக்கள் (எங்கும் அடிப்பவர்); 15. விவித்யந்திகள் (நன்றாக அடிப்பவர்); 16. உகணர்கள் (உத்க்ருஷ்டமான கண ஸ்வருபமானவர்); 17. த்ரும்ஹதிகள் (ஹிம்ஸை செய்பவர்); 18. க்ருத்ஸர் (விஷய ஆசையுள்ளவர்) ஆகிய இப்பதினெட்டு ருத்திரர்களும் பதினெட்டு தளமுடைய எட்டாவது ஆவரண வாஸிகளாவர்.

ஒன்பதாவதாவரணம்.—இருபது தளங்களுடைய கமலம்.

1. க்ருத்ஸபதி; 2. வ்ராதங்கள் (நானு ஜாதிகளின் ஸமூஹங்கள்) 3. வ்ராதபதிகள்; 4. கணர்கள்; 5. கணபதிகள்; 6. விரூபர்கள்; 7. விஶ்வரூபர்கள்; 8. மஹத்துக்கள்; 9. க்ஷுல்லகர்கள் (அற்பர்கள்); 10. ரதிகள்; 11. அரதர்கள்; 12. ரதர்கள்; 13. ரதபதிகள்; 14. ஸேனைகள்; 15. ஸேநாநிகள்; 16. க்ஷத்தாக்கள் (குதிரைப்பாகர்); 17. ஸங்க்ரஹீதாக்கள் (கடிவாளத்தையிழுத்துப் பிடிக்கும் ஸாரதிகள்); 18. தக்ஷர்கள் (தச்சர்); 19. ரதகாரர்கள் (ரதங்கள் செய்பவர்); 20. குலாலர்கள் (குயவர்கள்); இவ்விருபது வகையான ருத்ரர்களும் ஒன்பதாவதாவரணத்தில் இருக்கின்றனர்.

பத்தாவதாவரணம்.—இருபத்திரண்டு தளகமலம்.

1. கர்மாரர்கள் (கம்மாளர்); 2. புஞ்சிஷ்டர்கள் (பக்ஷிகளைக் கொல்பவர்); 3. நிஷாதர்கள் (செம்படவர்கள்); 4. இஷுக்ருத்துக்கள் (பாணங்களைச் செய்பவர்கள்; 5. தன்வக்ருத்துக்கள் (வில்லைச் செய்பவர்); 6. ம்ருகயுக்கள் (வேட்டைக்காரர்); 7. ஶ்வநிக்கள் (நாய்களையுடையவர்); 8. ஶ்வாக்கள் (நாய்கள்); 9. ஶ்வபதிகள் (நாய்களுக்கு யஜமானர்கள்); 10. பவன் ஸிருஷ்டிகர்த்தா); 11. ருத்ரர் (துக்கத்தைப் போக்குபவர்); 12. ஶர்வர் (பாவத்தை நீக்குபவர்); 13. பசுபதி; 14. நீலக்ரீவர் 15. சிதிகண்டர்; 16. கபர்த்தி; 17. வ்யுப்த கேசர் (முண்டனஞ் செய்யப்பட்டவர்) 18. ஸஹஸ்ராக்ஷர் 19. சத

தன்வா; 20. கிரிசர்; 21. சிபிவிஷ்டர் (விஷ்ணுஸ்வரூபர்) 22. மீடுஷ்டமர் (பெருமழை பெய்யும் மேக வடிவினர்). ஆகிய இவ்விருபத்திரண்டு ருத்ரர்கள் பத்தாவதாவரணத்தில் வஸிக்கின்றனர்.

பதினேராவதாவரணம்—இருபத்திநான்கு தளகமலம்.

1. இஷுமான்; 2. ஹ்ரஸ்வன் (குள்ளமானவர்); 3. வாமநர் (குறுகிய அவயவங்களையுடையவர்); 4. ப்ருஹத் (பெரிய உருவமுள்ளவர்); 5. வர்ஷீயஸ் (குணங்களால் பெரியவர்); 6. விருத்தன் (வயதாற் பெரியவன்); 7. ஸம்வ்ருத்வன் (வேதங்களால் புகழப்பட்டவன்); 8. அக்ரியன் (சிருஷ்டிக்கு முன்னுள்ளவன்); 9. ப்ரதமர் (முக்கியமானவர்) 10. ஆசு (வ்யாபகர்); 11. அஜிரர் (நடப்பதில் ஸமர்த்தர்); 12. சிக்ரியர் (சீக்கிரம் செல்பவர்); 13. சிப்யர் (ஜலப்ரவாஹத்திலிருப்பவர்); 14. ஊர்ம்யர் (அலைகளிலுள்ளவர்); 15. அவஸ்வன்யர் (ஓட்டமற்றுத் தேங்கும் ஜலத்திலிருப்பவர். 16. ஸ்ரோதஸ்யர் (ஓடும் ஜலத்திலுள்ளவர்); 17. த்வீப்யர் (தீவிலுள்ளவர்); 18. ஜ்யேஷ்டர் (வித்தை, செல்வம் இவைகளாற் சிறந்தவர்); 19. கநிஷ்டர் (அவற்றில் குறைந்தவர்); 20. பூர்வஜர் (மூத்தவர்); 21. அபரஜர் (பின் பிறந்தவர்); 22. மத்தியமர் (மத்தியில் பிறந்தவர்); 23. அபகல்பர் (சிசுக்கள்); 24. ஜகன்யர் (பிருஷ்டபாகத்தில் பிறக்கும் பசுங்கன்று வடிவமானவர்) இவர்கள் இருபத்திநான்கு பேரும் பதினோராவது ஆவரணத்தில் வஸிப்பவர்களாவர்.

பன்னிரண்டாவதாவரணம்—இருபத்தாறு தளகமலம்.

1. புத்னியர் (மரத்தின் அடிக்கட்டை போலிருப்பவர்); 2. ஸோப்யர் (இருவினைகளோடு கூடியவர்): 3. ப்ரதிஸர்யர் (காப்பணிந்தவர்); 4. யாம்யர் (பாவிகளைச் சிக்ஷிப்பவர்); 5. க்ஷேம்யர் (மோக்ஷத்திற்குத் தகுதியுடையவர்); 6. ஊர்வர்யர் (விளைவோடு கூடிய நிலத்திற்குரியவர்); 7. கல்யர்

(வண்டல் வடிவமாயிருப்பவர்): 8. ஶ்லோக்யர் (துதிக்கப் படுபவர்); 9. அவஸான்யர் (வேதாந்தப்பிரதிபாத்தியர்); 10. வங்யர் (காட்டில் உற்பத்தியாகும் மரம் முதலிய வடிவினர்); 11. கக்ஷ்யர் (செடி கொடி வடிவினர்); 12. ஶ்ரவர் (சப்த ரூபி); 13. ப்ரதிஶ்ரவர் (பிரதி த்வனி வடிவமாயிருப்பவர்); 14. ஆசுஷேணர் (வேகமாய்ச் செல்லும் ஸேனையையுடையவர்) 15. ஆசுரதர் (வேகமாய்ச் செல்லும் ரதமுள்ளவர்); 16. சூரர்; 17. அவபிந்தர் (சத்ருவின் உடலைப் பிளப்பவர்; 18. வர்மீ (கவசமணிந்தவர்) 19. வரூதீ (நல்ல வீட்டையுடையவர்); 20. பில்மீ (தலைக்குக் கவசமுள்ளவர்); 21. கவசீ (தேஹரக்ஷையை யுடையவர்); 22. ஶ்ருதர் (வேதப் பிரஸித்தர்); 23. ஶ்ருதஸேநர் (பிரஸித்தமான ஸேனையையுடையவர்); 24. துந்துப்யர் (துந்துபியென்றும் வாத்திய விசேஷத்தின் சப்தவடிவமாயிருப்பவர்); 25. ஆஹநந்யர் (பேரிகையையடிக்குங் கோல் வடிவமானவர்); 26. த்ருஷ்ணு (சண்டையில் பின்னிடாதவர்) ஆகிய இவ்விருபத்தாறு ருத்ரர்களும் மஹா பலசாலிகளாய்ப் பன்னிரண்டாவதாவரணத்தில் வஸிக்கின்றனர்.

பதிமூன்றுமாவரணம்—முப்பது தளங்களுள்ள கமலம்.

1. ப்ரம்ருசர் (பராமர்சம் செய்பவர்); 2. தூதர்.; 3. ப்ரஹிதர் (அனுப்பப்பட்டவர்); 4. நிஷங்கி (கட்கத்தையுடையவர்); 5. இஷுதிமான் (அம்பறாத்தூணியையுடையவர்); 6. தீக்ஷ்ணேஷு (கூர்மையான அம்புகளையுடையவர்); 7. ஆயுதீ (பல ஆயுதங்களையுடையவர்); 8. ஸ்வாயுதீ (நல்ல ஆயுதமான த்ரிசூல முடையவர்); 9. ஸுதன்வா (பிநாகமென்னும் வில்லை யுடையவர்); 10. ஸ்ருத்யர் (காலடிப் பாதை வடிவாயிருப்பவர்); 11. பத்யர் (பெரிய வழி வடிவமானவர்); 12. காட்யர் (சிறியவாய்க்கால் ஜல வடிவினர்); 13. நீப்யர் (காணாற்று ஜலவடிவினர்); 14. ஸூத்யர் (சேற்று நீர் வடிவினர்), 15. ஸரஸ்யர் (குளத்து ஜலஸ்வரூபி); 16. நாத்யர் (நதி ஜல வடிவினர்); 17. வைஶந்தர் (சிறிய

ஓடையின் ஜல வடிவினர்) ; 18. கூப்யர் (கிணற்று நீர் வடிவினர்) ; 19. அவட்யர் (பள்ளத்தில் நிற்கும் ஜலவடிவினர்) ; 20. வர்ஷ்யர் (மழை ஜல வடிவினர்) ; 21. அவர்ஷ்யர் (மழையால் ஏற்படாத ஸமுத்திர ஜல வடிவினர்) ; 22. மேக்யர் (மேக ஜலமாயிருப்பவர்) ; 23. வித்யுத்யர் (மின்னலோடுகூடியவர்) ; 24. ஈத்ரியர் (நிர்மலமான சரத்கால மேக வடிவினர்) ; 25. ஆதப்யர் (வெயிலோடுகூடிய மழை வடிவமாயிருப்பவர்) ; 26. வாத்யர் (காற்று மழை வடிவினர்) ; 27. ரேஷ்மியர் (பிரளயகால வடிவமாயிருப்பவர்) ; 28. வாஸ்தவ்யர் (தனதான்யாதி வஸ்து ரூபமாயிருப்பவர்) ; 29. வாஸ்துபர் (க்ருஹ நிர்மாணத்திற்கேற்ற பூமியைக் காப்பவர்) ; 30. ஸோமர் (உமையுடன் கூடியவர்) ; இம்முப்பது ருத்ரர்களும் பதின்மூன்ருவதாவரணத்தின் முப்பது தளங்களில் இருப்பவர்களாவர்.

பதிஞன்காவதாவரணம்—முப்பது தள கமலம்.

1. ருத்ரர் (ஸம்ஸார துக்கத்தைத் தொலேப்பவர்) ; 2. தாம்ரர் (உதயரவிபோல் சிவந்த நிறமுடையவர்) ; 3. அருணர் (வெண்மை கலந்த சிவந்த நிறமுடையவர்) ; 4. சங்கரர் (ஸுகத்தைப் பொருத்துபவர்) ; 5. பசுபதி (பசுக்களேக் காப்பவர்) ; 6. உக்ரர் (கோபமுடையவர்) ; 7. பீமர் (பார்த்த மாத்திரத்தில் பயமுண்டாக்குபவர்) ; 8. அக்ரேவதர் (அநாயாஸமாய் எதிரிலுள்ள சத்ருவைக் கொல்பவர்) ; 9. தூரேவதர் (தூரத்திலிருந்தாலுங் கொல்பவர்) ; 10. ஹந்தா (எல்லாரையும் கொல்பவன்) ; 11. ஹநீயான் (பிரளய காலத்தில் யாவரையும் ஒரே க்ஷணத்தில் கொல்பவன்) ; 12. வ்ருக்ஷர் ; 13. ஹரிகேசர் ; 14. தாரர் (பிரணவப் பிரதிபாத்யர்) ; 15. சம்பு (ஸுகத்தையளிப்பவர்) ; 16. மயோபூ (பரசுகத்தையளிப்பவர்) ; 17. சங்கரர் ; 18. மயஸ்கரர் ; 19. சிவன் ; 20. சிவதரர் ; 21. தீர்த்யர் (புண்ய தீர்த்தங்களில் விளங்குபவர் ; 22. கூல்யர் (புண்ய நதி தீரங்களில் லிங்க ரூபமாய் விளங்குபவர்) ; 23. பார்யர் (நதியின் அக்கரையில் விளங்கு

பவர் ; கரைகண்ட ஞானிகளால் தியானிக்கப்படுபவர்) ; 24. அவார்யர் (இக்கரையில் விளங்குபவர் ; என்றால் காம்ய பலனை யளிப்பவர்) ; 25. ப்ரதரணர் (சிறந்த ஜபாதிகளால் பாபத்தைப் போக்கடிப்பவர்) ; 26. உத்தரணர் (தத்துவ ஞானத்தை யருள்பவர்) ; 27. ஆதார்யர் (ஞானிகளையும் மறுபடி ஸம்ஸாரத்தில் இழுத்துக் கர்ம பலனைத் தருபவர்) ; 28. ஆலாத்யர் (ஜீவர்களைப் பிரேரேபிப்பவர்) ; 29. சஷ்ப்யர் (புண்ய நதீ தீரங்களில் முளைத்த இளம்புல், இளநாணல்நுனிகள் இவற்றால் அர்ச்சிக்கத் தக்கவர்) ; 30. பேன்யர் (நதீ ஜலத்திலுள்ள நுரை வடிவமானவர்) ; இம்முப்பது பேரும் மிக்க கோபத்தோடு கூடியவர்களாய்ப் பதினான்காவதாவரணத்தில் விளங்குபவராவர்.

பதினைந்தாவதாவரணம்—முப்பத்திரண்டு தளங்களையுடைய கமலம்.

1. ஸிகத்யர் (மணல் வடிவமாயிருப்பவர்) ; 2. ப்ரவாஹ்யர் (வெள்ள வடிவமாயுள்ளவர்) ; 3. இரிண்யர் (களர் நிலத்தில் இருப்பவர்) ; 4. ப்ரபத்யர் (வெகு ஜனங்கள் நடமாடும் ராஜ வீதியிலிருப்பவர்) ; 5. கிம்சிலர் (சுக்காங்கல் நிறைந்த பூமியில் இருப்பவர்) ; 6. க்ஷயணர் (வாஸயோக்யமான பிரதேசத்தில் இருப்பவர். 7. கபர்த்தீ (ஜடையுடையவர்) ; 8. புலஸ்தீ (அன்பர்க்கருள எப்பொழுதும் அவர் முன் நிற்பவர்) ; 9. கோஷ்ட்யர் (பசுக் கொட்டில்களில் வஸிப்பவர்) ; 10. க்ருஹ்யர் (வீடுகளில் வஸிப்பவர்) ; 11. தல்ப்யர் (படுக்கையை வாஸஸ்தலமாயுடையவர்) ; 12. கேஹ்யர் (அரண்மனையில் வஸிப்பவர்) : 13. காட்யர் (முட்கள் நிறைந்த காட்டில் வஸிப்பவர்) ; 14. கஹ்வரேஷ்டர் (மலைக்குகைகளில் வஸிப்பவர்) ; 15. ஹ்ருதய்யர் (மடுவில் வஸிப்பவர்) ; 16. நிவேஷ்ப்யர் (பனிஜலத்தில் வஸிப்பவர்) ; 17. பாம்ஸவ்யர் (பரமாணுக்களில் வஸிப்பவர்) ; 18. ரஜஸ்யர் (தூ (சி)ளிகளில் இருப்பவர்) 19. சுஷ்க்யர் (உலர்ந்த விறகில் வஸிப்பவர்) ; 20. ஹரித்யர் (ஈர விறகிலுள்ளவர்) ; 21. லோப்யர் (புல்

முளையாத கட்டாந்தரையில் வஸிப்பவர்) ; 22. உலப்யர் (அற்பமான புற்களில் இருப்பவர் : 23. ஊர்வ்யர் (பூமியில் இருப்பவர் 24. ஸூர்ம்யர் (பெரிய அலைகளோடுகூடிய நதியில் வஸிப்பவர்) ; 25. பர்ண்யர் (இலைகளில் வஸிப்பவர்) ; 26. பர்ணசத்யர் (சறுகுகளில் இருப்பவர்) ; 27. அபகுரமாணர் (ஆயுதங்களைக் கையில் ஏந்தியவர்) ; 28. அபிக்னர் (சத்ருக்களை யெதிர்த்து அடிப்பவர்) ; 29. ஆக்கிதத்து (கொஞ்சமாய்க் கஷ்டப்படுத்துபவர்) ; 30. ப்ரக்கிதத்து அதிகமாய்த் துன்பப்படுத்துபவர்) ; 31. கிரிகர்கள் (தமது பக்தர்களுக்குப் பணத்தை வாரி இறைப்பவர்கள்) ; 32. தேவஹ்ருதயர் (தேவதைகளுக்குப் பிரியமானவர்கள்) ; ஆகிய இம்முப்பத்திரண்டு ருத்திரர்களும் பதினைந்தாவதாகும் முப்பத்திரண்டு தள கமலத்தில் விளங்குகின்றவராவர்.

பதினாறாவது ஆவரணம்—பூபுரம் (நான்கு துவாரங்களோடு கூடிய நாற்சதுரம்).

1. பூர்வ துவாரத்தில் விக்ஷீணகர் (நாசமின்றியவர்) ; 2. தக்ஷிண துவாரத்தில் விசின்வத்கர் (ஜீவர்களின் தர்மாதர்மங்களைப் பரிசித்துணர்பவர்) ; 3. மேற்கு துவாரத்தில் ஆநிர்ஹதர் (பாவங்தொலைப்பவர்) ; 4. உத்தர துவாரத்தில் ஆமீவத்கர்கள் (எங்கும் விஜ்ரும்பித்துள்ளவர்).

இவர்கள் நால்வரும் பதினாறுவது ஆவரணத்தின் நான்கு துவாரங்களிலும் ஆயுதங்களுடன் வஸிக்கின்றனர். மேற்கூறிய பதினைந்து ஆவரணங்களிலுள்ள ருத்ரர்கள் யாவரும், மஹாருத்ரரை யுபாஸித்துக் கொண்டு விளங்குகின்றனர் ; அம் மஹா ருத்ரரோவெனின் ஸ்ரீலலிதா தேவியின் ஆக்ஞையை நிறைவேற்றிக்கொண்டு ஸர்வ ஜகத்தின் க்ஷேமத்திற்காக முத்துக்கோட்டையின் ஈசான கோணத்தில் இருக்கின்றனர்.

மஹாபலம் வாய்ந்தவரும், சதருத்ரீயமென்று கணிக்கப்பட்டவருமான மேற்கூறிய ருத்ரர்கள் இரவும் பகலும் ஸ்ரீ

தேவி பக்தர்களைக்காக்கின்றனர். லலிதாதேவியினிடத்தில் பக்தியற்றவர்களுக்குப் பலவகையான இடையூறுகளை யுண்டாக்குகின்றனர். இங்ஙனம் இந்திரன் முதலிய அஷ்ட திக்பாலர்கள் முத்துக்கோட்டையை யாஶ்ரயித்துக்கொண்டும் ஸ்ரீலலிதா பரமேஶ்வரியை ஸேவித்துக்கொண்டும் வஸிக்கின்றனர்.

முத்துக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்திலுள்ள கோட்டைக்கு மரகதக் கோட்டையென்று பெயர். அது நான்கு யோஜனை உயரமுள்ளது. முன் கோட்டைகளுக்குள்ளனபோலவே அதற்கும் த்வாரங்களும் கோபுரங்களும் அமையப்பெற்று மிக அழகாக விளங்குகின்றது. அங்கே, அக்னி முதலிய நான்கு மூலைகளிலும் மந்த்ரிணி தேவியினது மாளிகையைப்போலவே மிக விஸ்தாரமாயுள்ள நான்கு நிலயங்கள் இருக்கின்றன. பண்டாஸுர யுத்த காலத்தில் கிரிசக்ரமெனும் ரதேந்திரத்தின் தட்டுக்களில் எந்த எந்த சக்திகள் இருந்தனரோ அந்த அந்த சக்திகளே இந்த மாளிகைகளிலும் விளங்குகின்றனர். ஆங்குள்ள பிரதேசம் முழுமையும் மரகத மயமாகவே இருக்கின்றது. அங்கே ஸ்வர்ணமயமான பனைமரங்களும், மற்றும் தேவையான ஸகல வஸ்துக்களும் நிறைந்திருக்கின்றன. ஆங்குள்ள சக்திகளனைவரும் தண்டநாதைக்குச் சமமான அழகு வாய்ந்தவர்களாவர். அவர்கள் அங்கே விளையாட்டாகக் கலப்பை, உலக்கை முதலிய ஆயுதங்களைச் சுழற்றிக்கொண்டு ஸஞ்சரிக்கின்றனர்; அன்றியும், அங்கே, விசித்ரமானவையாயும், ஒரு யோஜனை உயரம் ஓங்கி வளர்ந்தனவாயும், விசாலமான கிளைகள், ஸ்வர்ணமயமானதும் மிக வழ வழப்புள்ளதுமான பட்டை இவற்றோடு கூடியனவாயும், நல்ல நிழலைத் தருவனவாயும், இனிய பழக்குலைகளின் பாரத்தால் சிறிது வளைந்தனவாயும், வேர்முதல் நுனிவரை கட்டப்பட்ட மதுக்குடங்களை யுடையனவாயுமுள்ள கணக்கற்ற பனை மரங்கள் இருக்கின்றன. தண்டநாதையின் ப்ரீதிக்காகச் சிற்பிகள் இவற்றை மிக அழகாகப் படைத்துள்ளார்கள்.

ஜ்ரும்பினீ முதலிய சக்ர தேவிகளும், ஹேதுகர் முதலிய பைரவர்களும், ஏழு நிக்ரஹ தேவிகளும், அப் பனை மரங்களில் உற்பத்தியாகும் இனிய ஸுரையைப் பருகிப் பருகி மதோன்மத்தர்களாய்க் களித்துக் கூத்தாடுகின்றனர்.

நான்கு மூலைகளிலும், தண்டினீ தேவிக்கு எங்கே எங்கே வீடுகளிருக்கின்றனவோ அங்கே அங்கே கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும், உன்மத்த பைரவி, ஸ்வப்னேசி, திரஸ்கரிணி, கிரிபதா என்னும் நான்கு சக்திகள் ஸ்ரீ தண்ட நாதையைச் சேவிக்கின்றனர்.

இந்த அங்கணம் முழுமையும் ஒரே மரகத மயமாய் விளங்குகின்றது. தண்டநாதையானவள், கேவலம் அபிமானத்தினுல் மாத்திரம் இங்கு வஸிக்கின்ருளே தவிர, பரதேவதையின் ஸேவையின் பொருட்டு அவள் முக்கியமாய் வஸிப்பது மஹாபத்மாடவீ ஸ்தலமாகும்.

இந்த ஸ்தலம் பரதேவதையின் வாஸஸ்தலத்திற்கு அதி ஸமீபமாயிருப்பதால் மஹாராக்ஞியை ஸேவிப்பதற்காக தண்டநாதைக்கு ஆங்கோரழகிய மந்திரம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இம் மரகதக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் உதயகால இளஞ்சூரியனைப்போலச் செந்நிறமாய்ப் பிரகாசிக்கும் பவழக்கோட்டை இருக்கின்றது. ஆங்குள்ள ஸ்தலமெல்லாம் பவழமயமாகவே இருக்கின்றது. அங்கே, பவழ நிற மேனியோடுகூடிய சதுர்முகன் ஸகல முனீஸ்வரர்களுடன்கூட பிரஹ்ம லோகத்திலிருந்து வந்து மரீசி முதலிய பிரஜாபதிகளுடன் ஸ்ரீலலிதாதேவியின் தர்சனத்திற்காக எதிர்பார்த்துக்கொண்டு வஸித்துக்கொண்டிருக்கிருன். லலிதையின் கட்டளையால் பிரம்ஹலோகத்திலிருந்து *பதினுன்கு வித்தை

* பதினுன்கு வித்தைகளாவன :—4 வேதங்கள் ; சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் எனனும் 6 அங்கங்கள் ; புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்மசாஸ்திரம் என்னும் நான்கு உப அங்கங்களாம்.

களும், ஆயிரக்கணக்கான உபவித்தைகளும், அறுபத்து நான்கு கலைகளும் அழகிய வடிவங்களையேற்று, ஜகத்தின் க்ஷேமத்திற்காக அக்கோட்டையில் வஸிக்கின்றன.

பவழக் கோட்டைக்கு ஏழாவது யோஜனை தூரத்தில் மாணிக்க மண்டபமென்னும் ஓரங்கணமிருக்கின்றது. அது நானாவித ரத்னங்களால் நிர்மிக்கப்பட்டுள்ளதாகும். இதுவும் அழகிய கோபுரங்களோடும் அற்புதமான வாயிற்படிகளோடும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதன் மத்தியில் ஸ்ரீலலிதையைப் பூஜிப்பதில் பேரவாக்கொண்டுள்ள விஷ்ணு வஸிக்கும் விஷ்ணு லோகமிருக்கின்றது. அதில் மாதவன் நான்காகவும், பத்தாகவும், பன்னிரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ள மூர்த்தி பேதங்களையுடையவராக விளங்குகின்றனர். அன்றியும், பண்டாஸுர மஹாயுத்தத்தில் பரதேவதையின் நகங்களிலிருந்து தோன்றிய மச்ச, கூர்மாதி தசாவதார நாதர்களும் அவ்வங்கணத்தில் வஸிக்கின்றனர். முன் கூறப்பட்ட கோட்டைகளைவிட, இதற்கு விசேஷமாய் ஏற்பட்டுள்ள சிறப்பானது மேல்கூரையேயாகும். இக்கூரை மாணிக்கக் கற்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றது. இம் மாணிக்க மண்டபத்தில், சங்கு, சக்ர, கதாதரனாகிய பகவான் பன்னிரண்டு ரூபங்களைத் தாங்கிப் பூர்வாதி திக்குகளிலிருந்துகொண்டு அதை ரக்ஷிக்கின்றனர்.

அஃதெங்ஙனமெனின், கிழக்கே ஸ்வர்ணச் சாயையுள்ளவனும் சக்ரபாணியுமான கேசவனும், மேற்கே நீலமேக ஸ்யாமளனும் சங்கத்தைத் தரித்தவனுமான நாராயணனும், ஊர்த்வ பாகத்தில் இந்த்ரநீல நிறத்தனான மாதவனும், தெற்கே சந்த்ரப் பிரபையைப்போன்ற வெள்ளிய திருமேனியையுடைய கோவிந்தனும், வடக்குத் திசையில் தாமரைப் பூவின் கேஸரங்களைப்போன்ற நிறமுடையவனும் ஹலாயுதருமாகிய விஷ்ணுவும், ஆக்னேயத்தில் கமலாக்ஷனும் முஸலாயுதனுமாகிய மதுஸூதனனும், நிருருதி மூலையில் அக்னியைப்போல் ஜ்வலிக்கும் தேஜஸ்ஸுள்ளவனும் கட்கதாரியுமான த்ரிவிக்ரம

னும், வாயு கோணத்தில் பால சூர்யனைப்போல் பிரகாசிக்கும் சரீரமுடையவரும், வஜ்ர ஹஸ்தருமாகிய வாமனரும், ஈசான்யத்தில் புண்டரீகாக்ஷனும் பட்டஸமென்னும் ஆயுதத்தைத் தரித்தவனுமாகிய ஸ்ரீதரனும், அதோபாகத்தில், மின்னல் போல் பிரகாசிப்பவரும் முத்கரமென்னும் ஆயுதத்தைப் பூண்டவருமான ஹ்ருஷீகேசரும் ரக்ஷித்துக்கொண்டு விளங்குகின்றார்கள். ஆயிரம் ஆதித்தியர்கள் உதயமானாற் போலுள்ள பிரகாசமுடைய பத்மனுபர் சார்ங்கபாணியாய் அம்மாணிக்க மண்டபத்தைப் பிரதக்ஷிணமாயும்; ஸகல விதமான ஆயுதங்களைத் தரித்தவரும் ஸர்வ சக்தி வாய்ந்தவரும், ஸர்வக்ஞரும், ஸர்வதோமுகரும் (எங்கும் முகமுள்ளவர்), இந்த்ர கோபம்போல் சிவந்த திருமேனியுடையவரும், பாசாயுதரும், எவராலும் தோற்கடிக்க முடியாதவரும், ஸர்வாத்மாவானவருமாகும் தாமோதரன் ஸ்ரீ லலிதாபக்தி நிறைந்தவராய் அம்மண்டபத்தை யப்பிரதக்ஷிணமாயும் சுற்றி வந்துகொண்டு அதை ரக்ஷிக்கின்றனர். இங்ஙனம் பன்னிரண்டு மூர்த்தி பேதங்களோடுகூடிய பகவான் கமலாக்ஷன் விஷ்ணு லோகத்தில் விளங்குகின்றனர்.

இந்நாலு ரத்னக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் ஸஹஸ்ரஸ்தம்ப (ஆயிரக்கால்) மண்டபம் ஒன்றிருக்கின்றது. அது நானாவிதமான ரத்னக் கற்களால் இழைக்கப்பட்டும், பலவகையான கற்பக விருக்ஷங்களால் அலங்கரிக்கப்பட்டும் விளங்குகின்றது.

அங்கே குறுக்காகவும் நெடுக்காகவும் உள்ள ஒவ்வொரு வரிசையிலும் நான்கு திக்குகளிலும் ஆயிரம் ஆயிரம் தூண்கள் இருக்கின்றன. இம்மண்டபத்தின் மேற் பரப்பு முன்னர் கூறப்பட்ட மாணிக்க மண்டபத்திற்குள்ளது போலவே ரத்ன மரங்களாலாக்கப்பட்டதாகும். அதில் மஹாப்பிரகாசமுள்ள சிவலோகமானது விளங்குகின்றது. அங்கே காமிகம் முதலிய இருபத்தெட்டு சிவாகமங்களும் மூர்த்திகரித்துப் பிரகாசிக்கின்றன. நந்தி, ப்ருங்கி, மஹாகாளர் முதலிய உத்தம

மான முப்பத்தாறு தேவர்களும் ஆயிரக்கணக்கான கஜாநநர்களும் அங்கே வஸிக்கின்றனர். ஆயிரக்கால் மண்டபமான அச்சிவலோகத்தில், ஸகல வித்தைகளுக்கு அதிபதியாயும், சந்த்ரசேகரராயுமுள்ள ஈஸானர் ஸ்ரீலலிதா தேவியின் ஆக்ஞையைப் பரிபாலித்துக்கொண்டு விளங்குகின்றனர். அவர் எப்போதும் ஆநந்தமனத்தராய் ஸ்ரீலலிதா மந்த்ரத்தை ஜபம் செய்துகொண்டும், தனது பக்தர்களுக்கு, லலிதா மந்த்ரம் ஸித்தியாதற்பொருட்டு மங்களகரமான தனது திருஷ்டியால் அவர்களுக்கு உள்ளும் புறமுமுள்ள அந்தகாரக் கூட்டத்தை யொழிப்பதில் மிக்க ஸாமர்த்தியம் வாய்ந்தவராய் விளங்கிக்கொண்டும் இருக்கின்றனர். மற்றும் அம்மஹாதேவர் ஸர்வக்ஞராயும் ஸர்வ சக்தி வாய்ந்தவருமாயும் ஸ்ரீ லலிதா தேவியின் சரணாரவிந்த ஸேவகராயும் விளங்குகின்றனர்.

ஓ அகஸ்தியரே! இங்ஙனம் காரணக்ருத்ய இந்த்ரர்களான பிரஹ்மா விஷ்ணு மஹேஸ்வரர்கள் ஸ்ரீதேவீ பக்தி நிறைந்தவர்களாய் அந்த அந்தக் கோட்டைகளை யாஸ்ரயித்துக்கொண்டு இருந்து வருகிறார்கள்.

முப்பதாம் அத்தியாயம் முற்றிற்று 101 சுலோகங்கள்.

முப்பத்தோராம் அத்தியாயம்.

மஹா பத்மாடவீ வர்ணநம்.

ஹயக்ரீவர்.—* வாபீத்ரயம் முதலியவைகளில் உள்ள அங்கணப் பிரிவுகளைக் கூறுகிறேன். அதைக்கேட்ட மாத்திரத்திலேயே மஹத்தான செல்வமுண்டாகும். ஆயிரக்கால்

* நடைவாவிகள்.

மண்டப அங்கணத்திலிருந்து ஏழாவது யோஜனையில் ஸர்வ ரத்னங்களாலும் நிர்மிக்கப்பட்ட மிக விசித்ரமான மனோமயக் கோட்டை இருக்கின்றது. முற் கூறியவற்றைப்போலவே அதற்கும் கோபுரம் துவாரம் கதவு தாழ்ப்பாள் முதலியவை அமைந்துள்ளன. அதன் இடையிலுள்ள இடமெல்லாம் அம்ருதவாபிகளாம். ஓ ப்ராக்ஞரே! அதன் அம்ருதத்தை யருந்திய புருஷர்கள் யோகிகளாகவும், ஸித்தர்களாகவும், வஜ்ரம் போன்ற சரீரமுள்ளவர்களாகவும், மஹாபலிஷ்டர் களாகவும் ஆகின்றனர். ஆதலின் அவ்வம்ருதம் ரஸாயன மெனப்படுகின்றது. அங்கு ஜலம்போலிருக்கும் அம்ருதத் தைத் தொடாமலே அதை முகர்ந்த மாத்திரத்திலேயே மனிதன் ஸித்தியென்னும் ஸ்திரீக்குப் பதியாவான். விந்த்ய சத்ருவான மஹரிஷே! அவ்விரண்டு கோட்டை களுக்கும் இடையிலே உள்ள அம்ருதவாபியின் இருகரை களும் அரைக்குரோசமே நீளமுள்ளவை. மற்ற இட மெல்லாம் அம்ருதவாபியேயாகும். அது நான்கு யோஜனை ஆழமுள்ளது. நானா ரத்னங்களால் விசித்ரமான படிக்கட்டு களும் அங்கு கட்டப்பட்டிருக்கின்றன. ஆங்குள்ள ஹம்ஸங் களும் ஸார பக்ஷிகளும் ஸ்வர்ண வர்ணமாயும் ரத்ன வர்ணமாயும் இருக்கின்றன. மிகச் சஞ்சலமான அலை கள் இரு கரைகளிலும் மோதிக் கொண்டிருக்கின்றன. முனிவரே! அந்த ரஸாயன வடிவமான புதிய அம்ருதத் தைக் குடித்து நீர்க்கோழிகள் முதலிய பறவைகள் முது மையையும் மரணத்தையும் ஜயித்துக் கூவுவது என்ற வியா ஜத்தினால் ஸதா, லலிதா தேவியினது மஹா மந்த்ரத்தையே ஜபித்துக்கொண்டிருக்கின்றன. அவ்வம்ருதவாபியானது நாற் புறமும் சக்ரம்போல் வட்டமாய்ச் சூழ்ந்திருப்பதால் தோணி யில்லாமல் அங்கு செல்ல இயலாது. மந்த்ரிணீ தண்டினீ இவ்விருவர்களுடைய ஆக்ஞையால் தாரா எனும் ஓடத்தையோட்டும் (தரணீஸ்வரீ) மஹாசக்தி அங்கு அமர்ந்திருக்கின்றனள். நெய்தல்போற் கறுத்த மேனியை யுடைய தாரையின் வேலைக்காரிகள் வெளியிலே ஆயிரக் கணக்கான ரத்னமயமான ஓடங்களை வைத்துக்கொண்டு

இக்கரைக்கும் அக்கரைக்கும் வருவதும் போவதுமாக அந்த ஜலத்தில் விளையாடுகிறார்கள். நவயௌவனம் வாய்ந்த கோடிகோடியான, ஓடமோட்டும் தாரா தேவியின் தோழிகள் வீணை, புல்லாங்குழல், ம்ருதங்கம் முதலிய வாத்தியங்களை யடிக்கடி வாசிக்கின்றனர். மேலும் அவர்கள் ஓடத்தை யோட்டிக்கொண்டே பாடுகின்றனர்; சிலர் ஆடுகின்றனர். அவர்களிற் சிலர் துடுப்பைக் கையிலேந்தியவர்களாயும், சிலர் ஜலம் நிறைந்த (பசுவின்) கொம்புகளைக் கையில் தரித்தவர்களாயும் விளங்குகின்றனர். அந்த வாபிகையின் ஜலரூபமான அம்ருதத்தைப் பருகிக்கொண்டே அவர்கள் அதில் தோணிகளின் உதவியால் ஸஞ்சரிக்கின்றனர். படகோட்டும் அந்த சக்திகளுக்குத் தலைவியாயுள்ளவளும், கறுத்தமேனியுள்ளவளுமான தாராம்பாள் ஜலத்தினால் ஏற்படும் ஆபத்தை நீக்கும் ஆற்றலுள்ளவளாகப் பிரகாசிக்கின்றனள். அவள் தண்டினீ, மந்த்ரிணீ இவ்விருவர்களுடைய உத்தரவின்றி முக்கண் படைத்த பரமசிவனுக்குக்கூட அவ்வம்ருத வாபியைத்தாண்ட ஒரு தோணியைக்கூடத் தருவதில்லை. இனிமையாய்ப் பாடிக்கொண்டும், மணிமயமான ஓடங்களைச் செலுத்திக்கொண்டும், அடிக்கடி மஹாராக்ஞியின் மஹா உதாரகுணத்தைப் புகழ்ந்துகொண்டும், அடிக்கடி மாணிக்கமயமான பாத்திரத்திலிருந்து மதுவை வேண்டிய மட்டும் பருகிக்கொண்டுள்ள மனோஹர மணிமய க்ருஹத்தில் வஸிக்கும் ஓடமோட்டும் சக்திக் கூட்டமானது பார்ப்பதற்கு மிக்க ரமணீயமாய் இருக்கும். ஆங்குள்ள ஓடங்களிற் சில ஸ்வர்ணமயமாகவும், சில ரத்னமயமாகவும் மற்றுஞ் சில முதலையைப்போன்ற வடிவமுள்ளனவாயும் வேறு சில மான் முகம் போன்றனவாயும், இன்னுஞ் சில யானை முகத்தைப் போன்றனவாயுமிருக்கின்றன. இத்தகைய விசித்ரமான பற்பல ஓடங்களால் சூழப்பட்டு மிகப்பெரியதும் அழகுள்ளதுமான ஒரு சிறந்த தோணியில் தாராம்பாள் பிரகாசிக்கின்றனள். அவள் தன்னைப்போன்ற ரூபமுள்ளவரும், லலிதா மந்த்ரத்தை ஜபிப்பவருமான கணவனுடன் கூடி அத்தோணியில் ஒரு சிறந்த ரத்ன ஆஸனத்தில்

அமர்ந்து குறுக்கும் நெடுக்குமாக அவ்வாபிகையில் ஸஞ்சரித்துக்கொண்டு அதைக் காப்பாற்றி வருகின்றனள்.

மனோமயக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் புத்திமயமான ஒரு கோட்டை இருக்கின்றது. அது நான்கு யோஜனை உயரமுள்ளது. மனோமயம், புத்திமயம் என்னும் இரண்டிற்குமிடையேயுள்ள பிரதேசம் ஆநந்த வாபிகையெனப்படும்.

அங்கு மகிழம்பூப்போன்ற வாஸனையுள்ளதும், மிக ருசியானதும், உருக்கிச் சாய்த்த தங்கம்போன்ற நிறமுள்ளதுமான மஹாமத்யம் ஜலரூபமாய் இருக்கின்றது. அவ்வாநந்த வாபிகையின் ஆழம், அகலம், படிக்கட்டுகள் அதில் வஸிக்கும் நீர்ப்பறவைகள் முதலியன முன்னர் கூறப்பட்ட அம்ருதவாபிகையிலுள்ளவற்றைப் போன்றவைகளேயாகும். ஆங்குள்ள ஜலரூபமான மதுவைப் பருகிப் பருகிக் கரையிலுள்ள சக்திகள் ஸந்தோஷ பரவசர்களாகவும், மதோன்மத்தர்களாகவும் விளையாடுகின்றனர். ஸாக்ஷாத் வாருணீதேவியே ஆங்குள்ள தோணிகளுக்கு நாயகியாய் விளங்குகின்றனள். அவளை ஸுதாமாலினி யென்றும் அம்ருதேஶ்வரீ யென்றும் அழைக்கின்றனர். அவள், மணிமயமான தோணியில் அமர்ந்துள்ளவளாய்ச் சக்தி ஸேனைகளாற் சூழப்பட்டு, சிறிது வீக்ஷணமாத்திரத்தினாலேயே மூன்று லோகங்களையும் மதர்த்து விளங்குவனவாய்ச் செய்கின்றனள்.

பால ஸூர்யனைப்போன்ற பிரகாசமுள்ள அவள், மதத்தாற் சிவந்த கன்னங்களுள்ளவளாகவும், பாரிஜாத மலர்மாலை சூட்டிய பின்னலுள்ளவளாகவும், சஞ்சலமான தாமரையிதழையே மதிரா பாத்ரமாயுடையவளாகவும், பக்குவஞ் செய்யப்பட்ட மாம்ஸத்தை மற்றொரு மணிபாத்திரத்தில் வைத்திருப்பவளாகவும், ஸ்ரீதேவீ மந்த்ரத்தை ஸதா ஜபிக்கும் அநுகூலமான கணவனுடன் கூடியவளாகவும், தரணிகளுக்கு அதாவது அவ்வாபிகையை ஓடத்தின் உதவியால் கடக்கச்

செய்யும் சக்திகளுக்கு நாயகியாகவும் விளங்குகின்றனள். அவளும் மந்த்ரிணீ, தண்டினீ இவ்விருவர்களுடைய உத்தர வின்படியேதான் த்ரிநேத்ரன் முதலிய ஸகல தேவர்களுக் கும் அவ்வாநந்தவாபிகையைத் தாண்ட இடமளிக்கின்றனள்.

புத்திமயக்கோட்டைக்கு ஏழாவது யோஜனையில் அஹங் கார மயமான ஒரு கோட்டையிருக்கின்றது. அது முற் கூறிய கோட்டைகளைப்போலவே கோபுரம் முதலியவைகளு டன் கூடி விளங்குகின்றது. புத்தி, அஹங்கார மென்னும் அவ்விரண்டு கோட்டைகளுக்கும் இடையேயுள்ள பிரதேச மானது விமர்சவாபிகா என்னும் பெயருள்ள ஸௌஷும்ம் நாம்ருத ரூபமானதாய் விளங்குகின்றது. ஸௌஷும்நாம்ருத மென்பது யோகிகளது மனக்காற்றினல் நிறப்பப்பட்ட ஸுஷும்நாநாடியின் துவாரத்தில் ஆர்த்ரமாய்ப் பிரகாசிப்பதா கும். தபோதனரே! அந்த விமர்சவாபிகையிலுள்ள தீர்த்தமும் இத்தகையதேயாகும்.

இவ்வாபிகைக்கும், முன்னர் கூறப்பட்ட வாபிகைகளுக் குள்ளன போலவே தீரங்கள், படிக்கட்டுகள், பக்ஷிகள், தோணிகள், முதலியன அமைந்துள்ளன. இதற்கு யஜமானி குருகுள்ளா வெனும் பிரஸித்தமான தேவியாவள். இவளது திருமேனி பச்சிலை மரம் போன்ற ஸ்யாமளே நிறமானது; இவளது கவசமும் அந்நிறத்ததேயாகும். இவள் தன்னைப் போன்ற வடிவும் நிறமுமுடைய பல நௌகேஸ்வரிகள் அதா வது ஓடமோட்டிகளின் தலைவிகளாற் சூழப்பட்டு விளங்கு கின்றனள். மற்றும், அவள் ரத்தினத் துடுப்பைக் கையில் தரித்தவளாய், மதோன்மத்தையாய்ப் பரம ஸந்தோஷத்தை யளிக்கும் கணவனுடன்கூடிப் பரதேவதாராதனமாகும் ஸ்ரீ க்ரமத்தில் ஆசையுள்ளவளாய் மணி மயமான ஓடத்திலமர்ந்து அவ்வாபிகையில் நாற்புறமும் சுற்றி வருகின்றனள். அவ் வாபிகையின் ஆழம் முதலியவை முற்கூறப்பட்டவற்றிற்குள் ளவை போலவேயாகும்.

அஹங்காரமயமான கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் ஸூர்யபிம்ப மயமான ஒரு கோட்டை யிருக்கின்றது. இதன் உயரம் நான்கு யோஜனையாகும். அதன் காந்தி ஸூர்யனது வொளிப்போன்றது. அதன் இடையிலுள்ள ஸ்தலமானது குருவிந்தமெனும் மணிகளாலிழைக்கப்பட்டு விளங்குகின்றது. அது எப்போதும் பாலஸூர்யப் பிரகாசத்தைக் கக்கும் வண்ணமாகவேயிருக்கின்றது. அத்தகைய பிரகாசமானது சரீரத்தின் மேற்பட்ட மாத்திரத்திலேயே நரரோ, ஸுரரோ, அஸுரரோ, ஸித்தரோ எவராயினும் ஸூர்யனைப்போல் மிகுந்த தேஜஸ்விகளாய் விளங்குவார்கள். பாலாதபோத்காரமென்னும் அவ்விடத்தில் வஸித்துக்கொண்டு ஆதித்யர் ஸ்ரீலலிதேச்வரியைக் குறித்துத் தவம் செய்து அத்தகைய தேஜஸ்ஸைப் பெற்றுள்ளார். அங்கே, ஸமஸ்தமான க்ரஹகணங்களும் ராசிகளும் நக்ஷத்திரக் கூட்டங்களும் பரதேவதையின் ஆராதனத்தினால் உலகில் பிரகாசப் பொருள்களாயின. மார்த்தாண்டபைரவரெனப்படும் ஆதித்தியர் தன்னைப் பன்னிரண்டு விதமாகச் செய்துகொண்டு தேஜோமயமான கோடி கோடி சக்திகளுடன் மஹா பிரகாசமுள்ளவராகவும், மதத்தினால் சிவந்த கண்களையுடையவராகவும கங்கேளியெனும் ஒருவித மரங்களடர்ந்த தோப்பில் விஹரித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஓ விந்தியமர்த்தனரே! அவர் இருளின் அக்கரையில் இருப்பவர்; அதாவது இருளுக்கு எதிர்மறையான பிரகாச வடிவினர். மஹாப் பிரகாசா வெனப்படும் சக்தியைப் பத்னியாகவுடையவர். சக்ஷுஷ்மதீ, சாயா எனப்படும் மற்றும் இரண்டு சக்திகளும் அவருக்குண்டு. கூறப்பட்ட மூன்று சக்திகளுடன் கூடியவராய் அவர் ஸ்ரீலலிதா மஹேசானியினது மந்த்ரத்தை ஸதா மனத்தினால் ஜபித்துக்கொண்டு விளங்குகின்றனர். அன்றியும் அவர், லலிதா பக்தர்களுடைய இந்திரியங்களைப் பிரகாசப்படுத்திக் கொண்டும், அவர்களுக்கு உள்ளும் புறமுமுள்ள இருளை யடியோடு நாசஞ் செய்துகொண்டும் இருக்கின்றனர்.

ஸூர்ய பிம்பக்கோட்டைக்கு எழாவது யோஜனை தூரத்தில் நான்கு யோஜனை உயரமுள்ள சந்த்ரபிம்பக்கோட்டையொன்றிருக்கின்றது. அதுவும் முற்கூறப்பட்ட கோட்டைகளைப்போலவே உயர்ந்த கோபுரங்களும் விசாலமான வாயிற்படிகளும் அழகான கதவுகளும் நீண்ட தாழ்ப்பாள்களும் அமையப்பெற்றதாகும். அதற்குள் விளங்கும் அந்தராளஸ்தலம் முழுமையும் நிலவைக் கக்குந் தன்மையுள்ள சந்த்ரிகோத்காரமாகும். அத்ரி முனிவரது நேத்திரத்திலிருந்து உற்பவித்த சந்த்ரன், இங்கே மிகக் கடுமையாய்த் தவமியற்றிப் பரதேவதையின் அருளால் அதிசிதளமான பிரகாசத்தைப் பெற்றனன். நிர்மலமான வடிவத்தைப்பெற்ற ஸோமநாதரெனப்படும் அவர், மூவ்வுலகங்களிலுந் தோன்றும் இருளைப் போக்கிக்கொண்டு, சஷகமென்னும் மத்ய பாத்திரத்தில் நிறைந்துள்ள சந்த்ரிகாம்ருதத்தைப் பானஞ்செய்துகொண்டு ஸம்ஸாரமென்னும் பிரவர்த்தி மார்க்கத்தை வ்ருத்தி செய்பவராய் விளங்குகின்றனர். அன்றியும், அஸ்வினீ முதலிய இருபத்தேழு நக்ஷத்திரசக்திகள் புடைசூழக் களங்கமற்ற பூர்ணபிம்பம் எப்பொழுதும் விளங்கத் தனது நிஜவடிவத்தோடு பகவான் சந்த்ரன் அச் சந்த்ரிகோத்காரத்தில் வஸித்துக்கொண்டு ஸ்ரீ லலிதா மந்த்ர ஜபத்தினாலும், தியான ஸ்தோத்திரங்களினாலும், பற்பல விதமான பூஜைகளினாலும் காலத்தைக் கழிக்கின்றனன். இதுவுமன்றி தாராவென்னும் பெயரையுடைய ஆயிரக்கணக்கான சக்திகள் அவ்வங்கணத்தில் அவருடைய சமீபத்தில் நிறைந்திருக்கின்றனர்.

சந்த்ரபிம்பக் கோட்டைக்கு ஏழு யோஜனை தூரத்தில் சிருங்காரக் கோட்டை யொன்றிருக்கின்றது. அதுவும் நான்கு யோஜனை உயரமுள்ளதுவேயாகும். அது, ஸ்ருங்காரா நுராக (சிவப்பு) நிறமான அநேக கௌஸ்துப மணிகளாலாக்கப்பட்டுள்ளது. அதனுடைய உட்பிரதேசமானது மஹா ஸ்ருங்காரபரிகை (அகழ்) யென்னும் அகழையுடையதாகும். ஸ்ருங்கார ரஸம் நிறைந்த அந்த அகழில், ரமணியமான பல

வகை யாபரணங்களணிந்த ஶ்ருங்கார சக்திகள் பலர் வஸிக்கின்றனர். அச்சிருங்கார சக்திகள், மதோன்மத்தர்களாய் ஆயிரக் கணக்கான ஓடங்களில் ஸஞ்சாரஞ் செய்துகொண்டு, எப்பொழுதும் மதத்தோடுகூடியவரும் சிறந்த தோணியில் வீற்றிருப்பவருமான மன்மதனை யுபாஸிக்கின்றனர். ஸ்ரீலலிதா தேவியின் ஆக்ஞைக்கு உட்பட்டவனான அம் மன்மதன் எல்லோரையும் மோஹிக்கச் செய்யும் பாணங்களால் ஸமஸ்த லோகங்களையும் மோஹிக்கச் செய்கின்றனன். அப் பாணங்களின் பிரபாவத்தால், ஸுரரும், நரரும், அஸுரரும், ஸித்தரும் மோஹமடைந்து, அம் மஹாபத்மாடவியினருகே செல்வதற்குக் கூடச் சக்தியற்றவராகின்றனர். இயற்கையிலேயே சுத்த சித்தர்களான பிரஹ்மா, விஷ்ணு, மஹேஶ்வரன் இவர்கள் அந்த மன்மதனது ஆக்ஞையைப் பெற்றுத்தான் அங்கு செல்கின்றனர்; செல்லும்போது அவர்கள் வணக்க முள்ளவர்களாயும், சுத்தமான வேஷமுடையவர்களாயும், லலிதாம்பாளிடத்தில் பக்தி நிறைந்தவர்களாயும், ஏகாக்ர சித்தமுள்ளவர்களாயும் இருக்கின்றனர். ஸம்ஸாரிகளும், ஆசை நிறைந்தவர்களும், பற்பல ஸங்கல்பங்களுடையவர்களும், மோஹமுள்ளவர்களும், விகல்பத்தால் அழுக்கடைந்த மனமுடையவர்களுமான புருஷர்கள் பேராசையெனுங்காடு மூடியதும் பிரபலமான மோஹத்தைத் தரக்கூடியதுமான ஸ்ருங்காரபரிகையைத் தாண்டமுடியாது. ஏனெனில், எவராலும் ஜயிக்க முடியாதவரும், அழகிற் சிறந்தவரும், மூவுலகத்தோரையும் மோஹமடையும்படி செய்கின்றவருமாகிய மன்மதன் மஹாஶ்ருங்காரபரிகைக்கு அதிகாரியாயிருக்கின்றனன்.

ஶ்ருங்காரக் கோட்டைக்கு ஏழாவது யோஜனையில், சக்ரராஜமென்னும் ஸ்ரீசக்ரத்திற்கு மஹத்தான ஆலய வடிவமாயுள்ள சிந்தாமணிக்ருஹம் இருக்கின்றது. அதன் அந்தராளமானது நாற்புறமும் ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதற்கு மஹாபத்மாடவீயென்று பெயர். இது ஸர்வ ஸௌபாக்யத்தையும் அளிக்கவல்லது. ஆங்குள்ள ஶ்ருங்காரக்

கோட்டைவரையில் கோபுரங்கள் நிறைந்துள்ளன. இங்ஙனம் நான்கு திக்குகளிலும் சேர்ந்து நூறு கோபுரங்களும் இருபத்தைந்து கோட்டைகளும் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொரு கோட்டையின் அடிப்புறமும் ஒவ்வொரு யோஜனை தூரம் விசாலமானது. மஹாபத்மாடவி ப்ரதேசத்தைப் பற்றிக் கூறுகின்றேன்; கவனமாய்க் கேழ்ப்பாயாக!

எல்லா ரத்னங்களாலும் இழைக்கப்பட்டு ஆறு யோஜனை தூரம் விஸ்தாரமுள்ள அப் பத்மாடவீப்ரதேசத்தில் ஸ்தலத் தாமரைகள் இருக்கின்றன. அவற்றின் தண்டுகள் ஒரு யோஜனை நீளமுள்ளனவாயும் ம்ருதுவான முட்களுடன் கூடியனவாயுமிருக்கின்றன; அவற்றின் இலைகள் பத்துப் பனைமர வுயரமுள்ளனவாயும், கிஞ்சல்கங்கள் (கேஸரங்கள்) ஐந்து பனைமர வுயரமுள்ளனவாயும், கர்ணிகைகள் நூறு முழம் உயரமுள்ளனவாயும் இருக்கும். வெகு கோமளமாயும், ஸதா மலர்ந்து அழகுபொருந்தியதாயும், புது வாஸனையால் மனோஹரமானதாயும், விசாலமான தளங்களுள்ளதாயுமிருக்கும் தாமரை மலர்கள் எண்ணிறந்தன அங்கே விளங்குகின்றன.

அகஸ்தியரே! மஹா பத்மாடவியின் கீழ்ப்புறத்தில், ஒரு க்ரோசம் உயரமுள்ளதும், அக்னி வடிவமாயிருப்பதும், அரை யோஜனை விஸ்தாரத்தோடு வர்த்துளாகார (வட்ட) மாயிருப்பதுமான, அர்க்கிய பாத்திரத்திற்காதார ஸ்தலமொன்று இருக்கின்றது. அதன் நாற்புறங்களிலும், அக்னியினது பத்துக்கலைகளாகும் தூம்ரார்ச்சிஸ் முதலியவர்கள் ப்ரகாசமான சரீரத்தோடு சூழ்ந்திருக்கின்றனர். அழகிய யௌவன ஸ்ரீயையுடையவர்களும், பலவகையான ஆபரணம் பூண்டவர்களும், காமமதமுள்ளவர்களுமான அத் தசசக்திகளும் மிகுந்த சோபையுள்ளவராயும் (அர்க்கியபாத்திரத்திற்கு) ஆதார ரூபராயும் விளங்கும் அக்னி பகவானை யாலிங்கனஞ் செய்து கொண்டிருக்கின்றனர். தூம்ரார்ச்சிஸ், ஊஷ்மா, ஜ்வலினீ, ஜ்வாலினீ, விஸ்புலிங்கிகா, ஸுஸ்ரீ, ஸுரூபா, கபிலா, ஹவ்யவஹா, கவ்யவஹா எனப்படும்

இப்பத்து சக்திகளும் ஆதார ரூபமான அக்னியின் கலைக ளெனப்படுவர்.

அந்த ஆதாரத்தில், பாத்திர வடிவத்தை யாஸ்ரயித் துள்ள தேவன் ஸூர்யனாகும். இவன் மூன்று லோகங்களிலு முள்ள இருளை யொழிப்பவனும் ப்ரஸித்தமான உதயத்தை யுடையவனுமாவன். ஸூர்யவடிவமாயுள்ள அந்தப் பாத்திரம் ஒன்றரை யோஜனையுயரமும் ஒரு யோஜனை அகலமும் உள்ளது. மஹாஜ்யோதிஸ்ஸைப் போல் பிரகாசிக்கும் அந்த பாத்திரத்தின் நாற்புறத்திலும், ஸஹஸ்ரகிரணங்களையுடைய பாஸ்கரனது பன்னிரண்டு கலைகள் தங்கப் பதுமைகள்போல் விளங்குகின்றன. தபினீ, தாபினீ, தூம்ரா, மரீசி, மாலினீ, ருசி, ஸுஷும்நா, போகதா, விஸ்வா, போதினீ, தாரிணீ, க்ஷமா என்பன அக்கலைகளின் நாமங்களாகும். அந்தப் பாத்திரத்தில் பேரானந்தத்திற்குக் காரணமான பரமாம்ருதம் இருக்கின்றது. அது எல்லா விதமான ஒஷதி ரஸங்களாலும் பூர்ணஞ் செய்யப்பட்டு மிக்க மனோஹரமான வாஸனையுடன் கூடியதாயிருக்கின்றது. அன்றியும், அது, வாடாததும் அதிக மணமுள்ளதுமாகிய கல்ஹாரம், நீலோத்பலம் முதலிய புஷ்பங்களோடு விளங்குவதாயும், குளிர்ச்சி பொருந்திய மணமும் மனத்தைக் கவருந் தன்மையும் பொருந்தி லேசாயும் நிர்மலமாயும் இருக்கின்றது. ஸ்ரீலலிதாதேவியின் அர்ச்ச னைக்கு உசிதமாயுள்ள அவ்வம்ருதம் அடிக்கடி வீசும் அலைகளால் ஸதா சப்தித்துக்கொண்டு மிக்க உதாரமாயும் ஸித்திக்குக் காரணமாயும் விளங்குகின்றது. சந்திரகலா மயமான அது, அர்க்கியாம்ருதமெனப்படும். அவ்வம்ருதத் தில் மெல்லிய மணிமய ஓடத்தின் மீதமர்ந்து நவ யௌவனம் வாய்ந்த சந்த்ரகலைகள் விஹரித்துக்கொண்டிருக்கின்றனர். அம்ருதா, மாநதா, பூஷா, புஷ்டி, துஷ்டி, ரதி, த்ருதி, சசினீ, சந்த்ரிகா, காந்தி, ஜ்யோத்ஸ்நா, ஸ்ரீ, ப்ரீதி, அங்கதா, பூர்ணா, பூர்ணாம்ருதா என்னும் இப்பதினாறும் அக்கலைகளின் பெயர்களாகும். சந்த்ரகலைகளான இவர்கள் அம்ருத காந்தி யுடையவர்களாய் மந்தஹாஸமுகங்களோடு விளங்குகின்றனர்.

இவர்களேயன்றி, அவ் வர்க்கியாம்ருதத்தில் பிரஹ்ம, விஷ்ணு, ருத்ர, ஈஸ்வர, ஸதாசிவர்களின் கலைகளும் ப்ரஸங்கமாயிருக்கின்றன.

ஸ்ருஷ்டி, (ருத்தி), புத்தி, ஸ்ம்ருதி, மேதா, காந்தி, லக்ஷ்மீ, த்யுதி, ஸ்திரா, ஸ்திதி, ஸித்தி யென்பன பத்தும் பிரஹ்ம கலைகளாம். ஜரா, பாலிநீ, ஶாந்தி, ஈஸ்வரீ, ரதி, காமிகா, வரதா, ஆஹ்லாதினீ, ப்ரீதி, தீர்க்கா யென்பவை பத்து விஷ்ணுகலைகளாகும். தீக்ஷ்ணா, ரௌத்ரீ, பயா, நித்ரா, தந்த்ரீ, க்ஷுத், க்ரோதிநீ, க்ரியா, உத்காரீ, ம்ருத்யு வென்னும் பத்தும் ருத்ர கலைகளாம். பீதா, ஶ்வேதா, அருணா, அஸிதா வெனும் நான்கும் ஈஸ்வர கலைகள். நிவ்ருத்தி ப்ரதிஷ்டா, வித்யா, ஶாந்தி, இந்திகா, தீபிகா, ரேசிகா, மோசிகா, பரா, ஸூக்ஷ்மா, ஸூக்ஷ்மாம்ருதா, க்ஞானா, க்ஞானாம்ருதா, ஆப்யாயிநீ, வ்யாபிநீ, வ்யோமரூபா வென்னும் பதினாறு கலைகளும் ஸதாசிவ கலைகளாகும். மேலே கூறப்பட்ட ஐம்பது கலைகளும், அவ்வம்ருதத்தில், சிறிய ஓடங்களிலமர்ந்து இங்குமங்கும் ஓடி விளையாடுகின்றனர்.

அன்றியும், அங்கே, அர்க்கிய ஸம்சோதனத்திற்காகப் பரமேஷ்டியாகும் பிரஹ்மாவினால் கற்பிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான வித்யைகள் சக்திஸ்வரூபிணிகளாக வடிவெடுத்து விஹரிக்கின்றனர்.

மஹாபத்மாடவியில் வஸிப்பவர்களும், மஹா சக்ரத்தில் வஸிப்பவர்களுமான ஸகல சக்திகளும் அந்த அர்க்கியாம்ருதத்தைப் பானம் பண்ணி மதோன்மத்தர்களாய் விளங்குகின்றனர். சக்திகளால் அடிக்கடி பானஞ் செய்யப்படினும் அவ்வம்ருதம் குறைவதேயில்லை; விருத்தியாய்க் கொண்டே இருக்கின்றது; அப்போதுக்கப்போது புதுமணம் வீசுவதாகவுமிருக்கின்றது.

சிந்தாமணி க்ருஹத்திலுள்ள பரிசாரக சக்திகள் (பணிப் பெண்கள்) ஆயிரக் கணக்கான ரத்ன கும்பங்களாலும்

கோடிக் கணக்கான ஸ்வர்ண கலசங்களாலும் அம்ருதத்தை யர்க்கிய பாத்திரத்தில் நிறப்பி அணிமாதி அநேக சக்தி களுக்குத் தருகின்றனர். இங்ஙனம் மஹாபத்மாடவியின் பூர்வ பாகத்தில் அமைக்கப்பட்ட அர்க்கிய பாத்ர ஸ்வரூபம் என்னால் கூறப்பட்டது. இனி பிற்பகுதியில் உள்ளன வற்றையுங் கூறுகின்றேன்.

முப்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று. 114 சுலோகங்கள்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

சிந்தாமணி க்ருஹத்தின் உட்புற வர்ணனம்.

ஸ்ரீஹயக்ரீவர்.—சிந்தாமணிக்ருஹத்தின் ஆக்நேயமூலை யில் ஒரு யோஜனை விசாலமுள்ளதும் ஒரு யோஜனை ஆழ முள்ளதுமான ஓர் அக்கினிகுண்டம் இருக்கின்றது. அதில் அபரிமிதமான ஸுதாதாரைகளால் அர்ச்சிக்கப்பட்ட சிதக்னி பகவான் ஸ்ரீலலிதா பரமேச்வரியின் ஆக்ஞையின்படி தேவி பக்தர்களுக்கு பரம ஐச்வர்யத்தைக் கொடுத்துக்கொண்டு பரம பாவனராய் ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றனர். விற கில்லாமலே மஹா ஜ்வாலையுடன் பிரகாசிக்கின்றனர். அன்றி யும் அவர் அம்ருதத்தால் ஸந்தோஷப்படுத்தப்பட்ட திரு மேனியை யுடையவராயும், அசோகத் தளிரைப் போன்ற சிவந்த காந்தியையுடையவராயும் ஜ்வலித்துக் கொண்டிருக் கின்றனர்: அங்கே ஹோமஞ் செய்பவள் மஹாதேவியான காமேச்வரியும் ஹோமஞ் செய்பவர் காமேச்வரருமாவர். இவ்விரண்டு நித்ய ஹோதாக்களும் ஸர்வ ஜகத்தையும் ரக்ஷிக் கின்றனர். மற்றொருவருக்குப் பராதீனமல்லாது ஸ்வதந்த்ரை யாயிருக்கும் ஸ்ரீலலிதா தேவியானவள் தானே ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி முதலிய கார்யங்களில் பிரவர்த்திக்கின்றனள்.

காமேஸ்வரரும் பரதேவதையால் தூண்டப்பட்டேதான் ஜகத் வியாபாரத்தில் பிரவர்த்திக்கிறார்.

சிந்தாமணி க்ருஹராஜத்திற்கு நிருருதி பாகத்திலுள்ள மஹா பத்மாடவியில் மிகவுயர்ந்து விளங்கும் சக்ரராஜ மெனும் ஒரு சிறந்த ரதமிருக்கின்றது. அந்த ரதம், ஒன்பது அடுக்குகளோடு கூடியதும், ஸகலவிதமான ரத்தினங்களா லாக்கப்பட்டதும், நான்கு யோஜனை விசாலமும் பத்து யோஜனையுயரமு முடையது மாகும். அதன் அடிப்பாகம் பெருத்து மேலே போகப் போகச் சிறுத்திருக்கின்றது. அது நான்கு வேதங்களையே நான்கு சக்கிரங்களாகவும், தர்ம்மார்த்த காமமோக்ஷமென்னும் நான்கு புருஷார்த்தங் களையே நான்கு குதிரைகளாகவுமுடையதாகும். அன்றி யும், அது பல அழகிய கொடிகளாலும் சாமரங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும், பண்டாஸுர யுத்தத்தில் அதிஸா ஹஸமான காரியத்தைச் செய்ததும், முன் யுத்தப் பிரகரணத் திற் கூறிய பல லக்ஷணங்களுடன் கூடியதும், முத்துக் குடை யால் அலங்கரிக்கப்பட்டதும், ஸ்ரீ தேவியமர்ந்துள்ளதால் மிகப் பரிசுத்தமாயுள்ளதும், ரதங்களிலெல்லாம் தலை சிறந்து விளங்குவதாயும் இருக்கின்றது.

சிந்தாமணி க்ருஹத்தின் வாயு மூலையில் மஹாபத்மாடவி யில் மந்த்ரிணீ தேவியினுடைய கேயசக்ரமெனும் பெயரிய சிறந்த ரதமிருக்கின்றது. சிந்தாமணி க்ருஹத்தின் ஈசான பாகத்திலுள்ள மஹாபத்மாடவியில் தண்டநாதைக்குப் பிரிய மான கிரிசக்ரமெனும் பெயரிய மஹாரதமிருக்கின்றது.

இம்மூன்று ரதங்களும் ஸர்வ க்ஷேத்திரங்களிலும் அதா வது பதினாறு ஸ்ரீபுரங்களிலும் ஒரே விதமாகவிருக்கின்றன; தேவதைகளும் ஸமானமே.

அக்கினி மூலையில், ஸதா கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் சிதக்னி குண்டமிருக்கின்றதல்லவா? அதன்

3. மஹாபத்மாடவீ பிராகாரங்கள்; சிந்தாமணி கிருஹம்.



1. சிதக்நி குண்டம்.
2. பரதேவதையின் ரதம்.
3. கேயசக்ர ரதம்.
4. கிரிசக்ர ரதம்.
5. தண்டிநியின் கிருஹம்
6. மந்த்ரிணியின் கிருஹம்.

7—11. பிரஹ்மா, விஷ்ணு, உருத்திர, மஹேஸ்வர, ஸதாசிவர்களின் கிருஹங்கள்.

12—16. பூஜா பாத்திரங்கள்.

17. சிந்தாமணி கிருஹராஜம்—ஸ்ரீ சக்ரம்.

By courtesy of *Sri Brahma Vidya Vimarsini Sabha, Madras.*

மேற்கு திசையில் காயத்ரீ தேவியும், அதற்குப்பின், அபய ங்கரரும், க்ருணீ யென்னும் ஸூர்யனும், அதற்குப்பின் பிரணவ மென்னும் ஓங்காரத்தின் க்ருஹமும் துரீய காயத்ரீ தேவியும், சக்ஷுஷ்மதீ, கந்த்ர்வ ராஜ, பதிஷட் ருத்திரர் முத லியவர்களும் அவர்களுக்குப்பின் பகவதியான தாராம்பாளும் இருக்கின்றனள்.

சிந்தாமணி க்ருஹத்திற்கு நிர்ருதி மூலையில் அச்சுத, அநந்த, கோவிந்த-என்னும் நாமத்திரய மஹா மந்த்ரத்தின் பொருளான பகவான் மஹாவிஷ்ணு இருக்கின்றனர். அதற் குப் பிறகு மஹாகணபதியும், பஞ்சாக்ஷரீ மஹா மந்த்ரத்தின் அர்த்தமாய் விளங்கும் சிவனும், மூன்று பீஜாக்ஷரங்களின் வடிவ மந்த்ர வாச்சியரான ம்ருத்யுஞ்யரும், இருக்கின்றனர்.

அவ்விடத்திற்குமேல் ஶ்ருததாரிணீ யெனும் ஸரஸ்வதி வஸிக்கின்றனள். அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள ஐம்பத்தோரெழுத்துக்களேயே சரீரமாகவுடைய மாத்ருகை கள் ஸரஸ்வதீ தேவிக்குப் பின்பாகத்தில் வஸிக்கின்றனர். அதற்கும்மேல் ஸம்பத்கரீ, காலஸங்கர்ஷிணீ, ஸ்ரீலலிதா தேவியின் ஆவிர்ப்பாவத்திற்குக் காரணரான மஹா சம்பு நாதர், நிலவு போன்ற வெண்மையான காந்தியோடுள்ள நிர் மல சரீரமுடைய ஸ்ரீபராம்பாள் ஆகிய இவர்கள் ஒருவருக் கொருவர் உத்தரோத்தரமாக அமர்ந்திருக்கின்றனர். பாலா, அந்நபூர்ணா, அஶ்வாருடா. ஸ்ரீபாதுகை முதலிய தேவிகளும் அங்கே ஒருவருக்குப் பின் ஒருவராக வஸிக்கின்றனர்.

சிந்தாமணி க்ருஹத்தின் மேற்கு வாயிற்படியிலிருந்து மேன்மேலாக வஸிப்பவர்கள் மற்ற சக்திகளாவர். லகுஶ் யாமா, வாக்வாதினீ, ஸ்ரீ நகுலாம்பிகை, மஹாஶ்யாமா ஆகிய இந் நால்வரும் வாயு மூலையை யாஶ்ரயித்துள்ளவர்களாவர். சிந்தாமணி க்ருஹத்தின் வாயவ்யதிக்கிலிருந்து மஹாபத்மாட வியில், மற்றும் பல இதர தேவதைகள் வஸிக்கின்றனர். அவர்கள் உன்மத்தபைரவீ, ஸ்வப்ன வாராஹீ, திரஸ்கரிணீ,

பஞ்சமீ யெனும் தேவிகளேயாவர். இவர்களும் முற்கூறிய தேவதைகளைப் போலவே ஒருவருக்குப்பின் ஒருவராக அமைந்திருக்கின்றனர். ஸ்ரீபூர்த்தி மஹாதேவி, ஸ்ரீமஹா பாதுகை யென்னும் இரண்டு உத்தமமான தேவிகளும் அங்கே வஸிக்கின்றனர். ஷடாம்நாயஸாகர மென்னும் சிறந்த நூல் ஸ்ரீ சங்கரரால் விவரிக்கப்பட்டுள்ள ஸகல வித்யா தேவதைகளும் அங்கு மஹாபத்மாடவியில் வஸிக்கின்றனர்.

இங்ஙனம் ஸ்ரீரஸ்மிமாலை யென்னும் கிரணங்களின் காந்தியோடு கூடிய தேவிக்குச் சிந்தாமணி மயமான பெரிய வீடுகள் உயர்ந்த கொடிகளோடும், கோட்டைகளோடும், உத்யானங்களோடும் கூடி விளங்குகின்றன.

ஸமுத்திரத்தைப் பருகிய முனிவரே! சிந்தாமணி க்ருஹத்தின் கிழக்கு வாயிற்படிக்குத் தென்புறத்தில் மந்த்ரிணி தேவியின் உயர்ந்த மாளிகையும், அந்த வாயிலின் வடபுறத்தில் ரத்னமயமான, தண்டநாதையின் அரண்மனையும் இருக்கின்றன.

அர்க்கிய ஸ்தானத்திற்குக் கிழக்கே பிரஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களின் க்ருஹங்கள் இருக்கின்றன. அக்கிருஹங்கள் தனது ரத்தினக்காந்திகளால் எட்டுத்திசைகளையும் பிரகாசப் படுத்துகின்றன. ஆங்குள்ள தேவர் அனைவரும் ஸ்ரீலலிதா தேவியினிடம் பக்தியுடைவர்களாய், ஸதா ஸ்ரீலலிதா மந்த்ரத்தை யிடைவிடாது ஜபிப்பவர்களாவர்.

அர்க்கிய ஸ்தானமும், அர்க்கிய கல்பனமும் கீழ்வாயிற் படியைப் போலவே தெற்கு மேற்கு வடக்கு வாயிற்படிகளிலும் ஸமமாக இருக்கின்றன.

மஹரிஷியே! சிந்தாமணி க்ருஹத்தைப் பற்றிக் கூறுகிறேன் கேள். அது ஸ்ரீபுரத்திற்கு நடுவே இரண்டு யோஜனை விசாலமுள்ளதாய் இருக்கின்றது. சிந்தாமணி

மயமான அதன் சுவர் ஒரு க்ரோச அளவு விசாலமான தாகும். அதன் மேற்கூரைகள் சிந்தாமணிக் கற்களால் மூடப்பட்டு கூடரூபமாய் இருக்கின்றன. உந்நதமான ஸ்தூபியொன்று அங்கே பிரகாசிக்கின்றது. அச்சிந்தாமணி க்ருஹத்தின் சுவர்கள் நான்கு யோஜனை யுயரமுள்ளவை யாகும். ஸ்தூபி இருபது யோஜனை யுயரமுள்ளது. அது அடியில் அகன்றும் மேலே போகப் போகக்குறுகியும் உள் ளது. அதற்கு மூன்று சிகரங்கள் இருக்கின்றன. அம் மூன்று சிகரங்களின் மீது இச்சை, ஞானம், க்ரியைகளென் னும் மூன்று சக்திகள் ஸதாவிளங்கிக் கொண்டிருக்கின்றனர். அச்சிகரங்களும் சிந்தாமணி மயமாகவே விளங்குகின்றன. ஏன்? சிந்தாமணி க்ருஹத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் சிந்தாமணி மயமாகவே இருக்கின்றன. அரைக்ரோசம் நீளமும் கால்க்ரோசம் அகலமும் உள்ள நான்கு வாயிற் படிகள் அங்கு விளங்குகின்றன. அத்துவாரங்களிலும், சிந்தாமணி க்ருஹத்திற்குள்ளும் ஸ்ரீலலிதா தேவியினது சரீ ரத்தின் சிவந்த காந்திக் கூட்டங்களானது, ஒன்று சேர்ந்து பால ஸூர்யனது வொளிப்போன்ற பிரகாசமும் சந்திரனைப் போன்ற சீதளமும் உடையதாகி நதியின் பிரவாஹம்போல் அடிக்கடி யோடுகின்றன. அக்க்ருஹத்தின் கிழக்கு வாயிற் படி பூர்வாம்நாயமென்றும், தெற்கு மேற்கு வடக்கு வாயற் படிகள் முறையே தக்ஷிண, பஶ்சிம, உத்தர ஆம்நாயங்க ளென்றும் கூறப்படுகின்றன.

இந்த க்ருஹராஜத்தின் இடையே அழகிய சுவறுகளில் கோடிக்கணக்கான ரத்ன தீபங்களின் தண்டுகள் புதைக்கப் பட்டிருக்கின்றன. கோடி ஸூர்யர்களது ஒளிக்குச் சமமான காந்தியையுடைய அத்தீபங்கள் அச் சிந்தாமணி க்ருஹத்தின் உட்பிரதேசத்தைப் பிரகாசப்படுத்துகின்றன.

இந்த மிகப் பெரிய சிந்தாமணி க்ருஹத்தின் மத்திய பாகத்தில் மிக உயர்ந்து விளங்கும் ஒரு திண்ணையின்மேல் மஹத்தான பிந்து சக்ரம் இருக்கின்றது. அந்த க்ருஹத்

தின் உயர்ந்த சுவர்களுக்கும் பிந்துவுக்கும் இடையிலுள்ளப் பிரதேசமானது சுவற்றின் அளவான க்ரோசத்தைத் தவிற மூன்று க்ரோசங்கள் அகலமுள்ளது. அம் மூன்று க்ரோசங் களிலும் அணிமா முதலிய ஆத்ம கிரணங்கள் இருக்கின்றன. மூன்று க்ரோச அகலமுள்ள அப்பிரதேசம் கை முழ அளவிற்கு இருபத்திநான்காயிரமுழம் அகளமுள்ளதாகும். சிரேஷ்டமாயுள்ள பிந்து பீடம் வரை பதினன்கு பாகமாகப் பிரிக்க விட்ட விடத்தில் முழக் கணக்கில் அளவைக் கூறுகின் றேன் கேள். பத்மாடவிஸ்தலத்திலிருந்து சிந்தாமணி கிருஹ மானது இருபது முழம் உயரமாயிருக்கின்றது. அங்கே அணிமா மஹிமா முதலிய சக்திகள் இருக்கின்றனர்.

(முதலாவது ஆவரணம்.)

அணிமாதி சக்திகள் வஸிக்குமிடத்தின் விஸ்தாரம் நான்கு நல்வமாகும். நானூறு கிஷ்கூக்கள் ஒரு நல்வமெனப் படும். ஒரு கிஷ்கூ என்பது ஒரு முழமாகும். அங்கே அணிமா முதலிய ஸித்தி தேவதைகள் பூர்வாதி கிரமமாக வீடுகளை யமைத்துக்கொண்டு வஸிக்கின்றனர். அணிமா, மஹிமா, (கரிமா), லகிமா, ஈசித்துவம், வசித்துவம், ப்ராகாம் யம், புக்தி, இச்சா, ப்ராப்தி, ஸர்வகாமர், ஆகிய இவர்கள் உத்தமமான ஸித்திகளாவர்.

ரஸஸித்தி, மோக்ஷஸித்தி, பலஸித்தி, கட்கஸித்தி, பாதுகாஸித்தி, அஞ்ஜனஸித்தி, வாக்ஸித்தி, லோஹஸித்தி, தேஹஸித்தி, முதலியவைகள் யோகிகளுக்குப் பிரியமான வையாகும். இத்தகைய அநேக கோடி ஸித்திகளும் அங்கே நாற்புறங்களிலும் வஸித்துக்கொண்டு பரமேஸ்வரியை ஸேவித்து வருகின்றனர். அவர்கள் சுபமான அணிமாதி களுக்கிடையே புத்தழகு வாய்ந்த சரீர முள்ளவர்களாயும், மலர்ந்த தாமரைபோன்ற முகமுள்ளவர்களாயும், ஜ்வலிக் கும் சிந்தாமணிகளைக் கரங்களில் தரித்திருப்பவர்களாயும், எப்போதும் பதினாறு வயதுள்ளவர்களாயும், மிக்க கம்பீர மான ஸ்வபாவ முள்ளவர்களாயும், மதத்தினல் கலக்க மெய்தியவர்களாயும் விளங்கி விளையாடுகின்றனர்.

அணிமாதி ஸித்திகளின் வாஸஸ்தானத்திற்கு மேலே, இருபது முழம் உயரமும் ஆயிரத்தியறுநூறு முழம் விசாலமுமுள்ளதாயும், நான்கு திக்குகளிலும் பல படிக்கட்டுகளால் அலங்கரிக்கப் பெற்றதாயுமுள்ள மிக அழகிய கிருஹம் ஒன்றிருக்கின்றது. அது பிராஹ்மீ முதலிய தேவிகளின் வீடாகும். அதில் உள்ள தேவிகளைக் கூறுகிறேன் கேள். பிராஹ்மீ, மாஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டா, மஹாலக்ஷ்மீ, என்னும் எட்டுத் தேவிகளும் தங்கட்குரிய வாஸஸ்தலத்தை யமைத்துக் கொண்டு வஸித்து வருகின்றனர். அவர்கள் பலவகையான ஆயுதங்களைத் தரித்தவர்களாயும், பல பரிவாரங்களோடு சூழப் பெற்றவர்களாயும், பூர்வாதி திக்கிலிருந்து பிரதக்ஷிணமாக ஆலயங்களை அமைத்துக்கொண்டு வஸிப்பவர்களாயும் விளங்குகின்றனர்.

கும்பஸம்பவரே! பிராஹ்மீ முதலிய சக்திகளின் ஆலயங்களுக்கு மேலே, இருபது முழம் உயரமும், ஆயிரத்து அறுநூறு முழம் விசாலமுமுள்ள, முத்ராதேவிகளின் அந்தரமென்னும் ஓர் இடம் இருக்கின்றது. அங்கே, ஸம்க்ஷோபிணீ, வித்ராவிணீ, ஆகர்ஷிணீ, வஶ்யா, உந்மாதினீ, மஹாங்குசா, கேசரீ, பீஜா, யோநீ, த்ரிகண்டா என்னும் பத்து முத்ரா தேவிகள் கிழக்குத் திக்கிலிருந்து பிரதக்ஷிணமாக அமைந்திருக்கின்றனர். மிக அழகிய சரீரமுள்ளவர்களாயும், புதிய யௌவனம் நிறைந்தவர்களாயுமுள்ள அவர்கள் தங்களுடைய அழகிய காந்திகளால் மேற்கூறிய கிருஹத்தின் உட்புறத்தைப் பிரகாசப்படுத்திக்கொண்டு ஸ்ரீ லலிதா பரமேஶ்வரியை ஸேவித்து வருகின்றனர்.

அணிமாதி ஸித்திகளுள்ள முதல் பிராகாரம், பிராஹ்மீ முதலிய மாத்ருகைகளுள்ள இரண்டாவது பிராகாரம், ஸம்க்ஷோபிணீ முதலிய முத்ரா தேவிகளுள்ள மூன்றாவது பிராகாரம் ஆகிய இம்மூன்றுக்கும் த்ரைலோக்ய மோஹந சக்ரமென்று பெயர். இதிலுள்ள சக்திகளுக்குப் பிரகடயோகினி

கிளென்பது பொதுப் பெயராகும். சக்ரத்திற்கும் சக்தி களுக்கும் நாயகியாக விளங்குபவள் த்ரிபுரா சக்ரேச்வரி யாவள். அந்தச் சக்ரத்தை ஸம்க்ஷோபண வடிவ முத்ரா தேவி பரிபாலிக்கின்றனள்.

(இரண்டாவது ஆவரணம்)

முற்கூறிய முத்ரா தேவிகளது பிராகாரத்திற்குமேல் நித்யாகலாதேவிகளின் பிராகாரம் இருக்கின்றது. அதுவும் இருபது முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழம் விசால மும் உள்ளது. முன் பிராகாரத்திற்குள்ளது போலவே இதற்கும் படிக்கட்டுகள் அமைந்திருக்கின்றன. அந்த நித்யாகலாதேவிகளின் அந்தரத்தில் பதினாறு சந்த்ரகலா ஸ்வரூபிணிகளான காமாகர்ஷிணீ முதலிய சக்திகள் நாற் புறத்திலும் தங்கி மிகச் சீதளமான அம்ருதப் பெருக்கி னால் எட்டுத் திசைகளையும் ஸந்தோஷப்படுத்திக்கொண்டு விளங்குகின்றனர். அவர்களது பெயர்களைக் கூறுகிறேன் கேட்பாயாக. காமாகர்ஷிணீ, புத்தியாகர்ஷிணீ, அஹங்காரா கர்ஷிணீ, சப்தாகர்ஷிணீ, ஸ்பர்ஸாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, கந்தாகர்ஷிணீ, சித்தாகர்ஷிணீ, தைர்யா கர்ஷிணீ, ஸ்ம்ருத்யாகர்ஷிணீ, நாமாகர்ஷிணீ, பீஜாகர்ஷிணீ, ஆத்மாகர்ஷிணீ, அம்ருதாகர்ஷிணீ, சரீராகர்ஷிணீ ஆகிய இப்பதினாறு நித்யாகலா தேவிகள் குப்தயோகினீ யெனப் படுவர். இந்த சக்ரத்திற்கு ஸர்வாஸாபரிபூரக சக்ரமென்று பெயர். இதற்கு அதிஷ்டான தேவதை த்ரிபுரேஸீயெனும் சக்ரேச்வரியாகும். த்ராவணிகா வென்னும் முத்ராதேவி இந்த சக்ரத்தைப் பரிபாலிக்கின்றனள்.

(மூன்றாவது ஆவரணம்)

இந்நித்யாகலாதேவிகளின் அந்தரத்திற்கு மேலே இரு பது முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழ சுற்றளவு முள்ள அதிஸுந்தரமான சக்ரம் ஒன்று இருக்கின்றது. இதற்கும் முந்தியவற்றைப் போலவே ஸோபானங்கள் உண்டு. இது ஸர்வஸம்க்ஷோபணமென்னும் பெயரியது. இங்கே, மஹா

பயங்கரமானவையும், தீவ்ரமானவையுமான நேத்திரங்களை யுடையவர்களாய்ப் புதிய யௌவனத்தால் மதங்கொண்டவர்களான எட்டுச் சக்திகள் மஹாராக்ஞியைச் சேவித்துக் கொண்டு இருக்கின்றனர்.

குஸுமா, மேகலா, மதநா, மதநாதுரா, ரேகா, வேகிநீ, அங்குசா, மாலினீ யென்பன அச்சக்திகளின் நாமங்களாகும். அநங்க என்னும் பதத்தை இந்நாமாக்களுக்கு முதலில் சேர்த்து அநங்ககுஸுமா, அநங்கமேகலா என்று வழங்குவது ஸம்ப்ரதாயமாகும். இவர்களது பரிவாரங்கள் கோடி கோடியாய் இருக்கின்றன.

இந்த ஸர்வஸம்க்ஷோபண சக்ரத்திற்கு அதிஷ்டான தேவதை த்ரிபுரஸுந்தரீ யென்னும் சக்ரேசியாவள். குப்தர யோகினீ யென்பது இந்த ஆவரணதேவதைகளின் பொதுப் பெயராகும். ஆகர்ஷணிகா எனும் ஸர்வாகர்ஷிணீ முத்ரா தேவி இந்த சக்ரத்தைப் பரிபாலிக்கின்றனள்.

(நான்காவது ஆவரணம்)

கும்பஸம்பவரே! அநங்க சக்திகளது வாஸ ஸ்தலத்திற்கு மேலே இருபது முழம் உயரமும் ஆயிரத்தறுநூறு முழம் விஸ்தாரமுமுள்ள ஸர்வஸௌபாக்யதாயக மென்னும் பிராகாரமிருக்கின்றது. அங்கு யதமுள்ளவர்களான ஸர்வ ஸம்க்ஷோபிணீ முதலிய பதினான்கு சக்திகள் இருக்கின்றனர். அவர்களது பெயர்கள் ஸர்வஸம்க்ஷோபிணீ சக்தி, ஸர்வ வித்ராவிணீ சக்தி, ஸர்வாகர்ஷிணீ சக்தி, ஸர்வாஹ்லாதினீ சக்தி, ஸர்வ ஸம்மோஹிநீ சக்தி, ஸர்வஸ்தம்பிநீ சக்தி, ஸர்வ ஜம்பந சக்தி, ஸர்வவசங்கரீ சக்தி, ஸர்வரஞ்ஜனீ சக்தி, ஸர்வோன்மாதினீ சக்தி, ஸர்வார்த்தஸாதிநீ சக்தி, ஸர்வ ஸம்பத்திபூரணீ சக்தி, ஸர்வமந்த்ரமயீ சக்தி, ஸர்வ த்வந்த்வக்ஷயங்கரீ சக்தி யென்பனவாகும். இவர்கள் ஸம்ப்ரதாய யோகினீ யெனப்படுவார்கள். சக்ரேசியான த்ரிபுர வாஸினீ இதன் நாயகியாவள். ஸர்வவச்யா (ஸர்வவசங்கரீ)

ஸ்ரீ சக்ரம்.



பிந்துத்ரிகோணவஸுகோண தசாரயுக்ம
மன்வஶ்ர நாகதள ஸம்புத ஷோடஶாரம் |
விருத்தத்ரயஞ்ச தரணீஸதனத்ரயஞ்ச
ஶ்ரீசக்ர மேததுதிதம் பரதேவதாயா: ||

என்னும் முத்ராதேவி இதை ரக்ஷிக்கின்றனள். இந்த சக்ரேசிக்குங் கோடிக்கணக்கான வேலைக்காரிகளுண்டு.

(ஐந்தாவது ஆவரணம்)

அகஸ்தியரே! ஸம்க்ஷோபிணி முதலிய இவர்களின் அந்தரத்திற்கு மேலே இருபதுமுழம் உயரம், ஆயிரத்து அறு நூறு முழம் விசாலம் உள்ள க்ருஹம் இருக்கின்றது. இதில் ஸர்வஸித்தி முதலிய சக்திகள் வஸிக்கின்றனர். அவர்களின் பெயர்கள் ஸர்வஸித்திப்பிரதா, ஸர்வஸம்பத்ப்ரதா, ஸர்வப்பிரியங்கரீ, ஸர்வமங்கலகாரிணீ, ஸர்வகாமப்ரதா, ஸர்வதுக்கவிமோசநீ, ஸர்வம்ருத்யுப்பிரசமநீ, ஸர்வவிக்ன நிவாரிணீ, ஸர்வாங்க ஸுந்தரீ, ஸர்வ ஸௌபாக்யதாயிநீ யென்பனவாகும். இவர்கள் பொதுவாய்க் குலோத்தீர்ண யோகினிகளெனப்படுவர். இந்த சக்ரத்தின் பெயர் ஸர்வார்த்தஸாதகமென்பதாகும். இதற்கு நாயகி த்ரிபுராஸ்ரீ சக்ரேஶ்வரியாவள். ஸர்வோன்மாதினி முத்ரை இந்த சக்ரத்தை ரக்ஷிக்கின்றனள்.

(ஆறுவது ஆவரணம்)

அகஸ்தியரே! ஸர்வார்த்தஸாதகப் பிராகாரத்திற்கு மேலே இருபது முழம் உயரமும் ஆயிரத்தறுநூறு முழம் பரப்புமுள்ளதான ஸர்வக்ஞா முதலிய சக்திகளின் அந்தரம் இருக்கின்றது. அதற்கு ஸர்வரக்ஷாகர சக்ரமென்னும் பெயர் வழங்கப்படுகின்றது.

அங்கு ஸர்வக்ஞா, ஸர்வசக்தி, ஸர்வைஶ்வர்யப்பிரதாயினி, ஸர்வக்ஞானமயீ, ஸர்வவியாதிவிநாசினீ, ஸர்வாதாரஸ்வரூபா, ஸர்வபாபஹரா, ஸர்வாநந்தமயீ, ஸர்வரக்ஷாஸ்வரூபிணி, ஸர்வேப்ஸிதபலப்ரதா என்னும் பத்து சக்திகள் வஸிக்கின்றனர். இவர்கள் நிகர்ப்பயோகினிகளென்றழைக்கப்படுகின்றனர். த்ரிபுரமாலினீ யென்பளே இந்த சக்ரேஶியாவள். ஸர்வ மஹாங்குசா என்னும் முத்ராதேவி இதை ரக்ஷிக்கின்றனள். இதுவரை ஸர்வக்ஞாதிப் பிராகாரம்

வரையிலுள்ள சக்ரங்களைக் கூறினேன். மஹர்ஷியே! மற்ற சக்ரங்களைப் பற்றியும் கூறுகின்றேன் கேட்பாயாக.

முப்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று—(ஶ்லோகங்கள் 104)

முப்பத்து மூன்றும் அத்தியாயம்

கிருஹராஜத்தின் உட்புற வர்ணனம்

(ஏழாவது ஆவரணம்)

ஶ்ரீ ஹயக்ரீவர்.—முனிவரே! ஸர்வக்ஞாதிகளின் பிராகாரத்திற்கு மேலே இருபது முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழம் விசாலமுமுள்ள வசின்யாதி பிராகாரம் இருக்கின்றது. அதுவும் முந்திய சக்ரங்களைப் போலவே படிக்கட்டுகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளது. அது ஸர்வரோகஹர சக்ரமென்று அவனியில் பிரஸித்தி பெற்றுள்ளது. கிழக்குத் திசை முதல் கிரமமாக வஶின்யாதி தேவிகள் அங்கு வஸிக்கின்றனர். ஸ்வரங் (உயிரெழுத்துக்) கள் பதினாறுடன் கூடி வசினீவாக்தேவதையும், க வர்க்கமாகும் ஐந்து அக்ஷரங்களுடன் கூடி காமேஶ்வரீவாக்தேவதையும், ச வர்க்கத்துடன் கூடி மோதினீ யெனும் வாகிசியும், ட வர்க்கத்தால் அலங்கரிக்கப்பட்ட சரீரமுள்ள விமலா என்னும் வாக்தேவதையும், த வர்க்கத்துடன் கூடிய அருணை யெனும் வாக்தேவதையும், ப வர்க்கத்தால் பிரகாசிக்கும் ஜயினீவாக்தேவதையும், ய, ர, ல, வ என்னும் நான்கக்ஷரங்களுடன் கூடிய ஸர்வேஶ்வரீ வாங்மயியும், ஶ, ஷ, ஸ, ஹ, ள, க்ஷ, என்னும் ஆறெழுத்துக்களுடன் கூடிய கௌளினீவாக்தேவதையும் அங்கே விளங்குகின்றனர். இவ்வெட்டுவாக்தேவிகளும் ஜபாபுஷ்பம் போற்சிவந்த காந்தியுள்ளவர்களாகவும், முத்துமயமான ஆபரணங்களையணிந்தவர்களாகவும், எப்போதும் கத்ய (வசனம்) பத்ய (செய்யுள்) ப்பிரவாஹங்களால் ஶ்ரீலலிதாதேவியை வாக்கில் தரித்திருப்பவர்களாக

வும், காவ்ய, நாடகங்களாலும், வேதாந்தத்தின் அர்த்தத்தை வெளியிடும் உத்தமமான ஸ்தோத்திரங்களாலும், நவரஸாலங்காரம் பொருந்திய பிரபந்தங்களாலும், ஸ்ரீ தேவியை ஸந்தோஷப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றனர். இந்த தேவிகள் ரஹஸ்யயோகினிகளென்றழைக்கப்படுகின்றனர். இந்த சக்ரத்தின் நாயகி த்ரிபுராஸித்தாயெனப்படுவள். கேசரியெனும் முத்ராதேவி இந்த சக்ரத்தைக் காக்கின்றனள்.

(எட்டாவது ஆவரணம்)

(ஆயுதமண்டலம்)

விந்திய மலையின் செருக்கையடக்கியவரே! வசின்யாதிகளின் பிராகாரத்திற்கும்மேலே இருபது முழம் உயரமும் நான்கு நல்வம் அதாவது ஆயிரத்தியறுநூறு முழம் விசாலமும் உடைய அஸ்த்ர சக்ரமிருக்கின்றது. அங்கு பாணாதி அஸ்த்ரங்களுக்கு அதிஷ்டான தேவதைகள் இருக்கின்றனர். ஆதிஸ்திரீயும் ஆதிபுருஷனுமான காமேச்வரி காமேச்வரர்களின் இரு ஐந்து பாணங்களும், பிரகாசம் பொருந்திய இரண்டு அங்குசங்களும், புதிய நாமக்கரும்பினாலாகிய இரண்டு தனுஸ்ஸுகளும், மிகப்பிரகாசமான இரண்டு பாசங்களும் அங்கே விளங்குகின்றன.

ஹே கும்பஸம்பவரே! காமேச்வரியினது ஆயுதங்கள் நான்கு; காமேச்வரரது ஆயுதங்கள் நான்கு. ஆகமொத்தம் எட்டு ஆயுதங்கள் மிக்க பிரகாசத்தோடு அங்கே விளங்குகின்றன. பண்டாஸுர மஹாயுத்தத்தில் தானவர்களின் இரத்தத்தைப் பானஞ்செய்து அதனால் மிகக்களிப்படைந்து பிரகாசிக்கும் அந்த திவ்யாஸ்த்ரங்களுக்குப் பரிவாரமான ஆயுதங்கள் கோடிக்கணக்காய் இருக்கின்றன. வஜ்ரம், சக்தி, சதக்னீ, புஸுண்டீ, முஸலம், கணயம், பட்டஸம், முத்கரம், பிண்டிபாலகம் முதலிய கோடிக்கணக்கான ஆயுதங்கள் மூர்த்திமத்தைகளாய் முற்கூறிய எட்டுப்பிரதான ஆயுதங்களை ஸேவிக்கின்றன.

அகஸ்தியரே! சஸ்த்திரப் பிராகாரத்திற்கு மேலே இருபது முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழம் விசாலமும் உள்ள ஒரு கிருஹம் இருக்கின்றது. அது நான்கு ஸமயேசிகளது இருப்பிடமாகும். அவர்கள் காமேஸீ முதலிய மூன்று தேவிகளும் நான்காவதான லலிதேஸ்வரியுமாகும். இந்த லலிதேஸ்வரிதான் ஸமஸ்த பிரபஞ்சங்களையும் சிருஷ்டித்த மாதாவாவள். காமேஸீ, வஜ்ரேஸீ, பகமாலினீ யென்பவர்கள் மூன்று ஸமயேஸிகளாவர். காமேஸ்வரி முதலிய நால்வரையும் ஸமஸ்த *தர்சனங்களுக்கும் அதிதேவதைகளான பலவகைச் சக்திகளும் ஸேவிக்கின்றனர்.

ஸ்ரீ காமேஸ்வரரது இடது தொடையில் அமர்ந்துள்ள லலிதாம்பிகையாகும் ஸ்ரீ தேவியானவள், இங்கு இதுவரை கூறப்பட்ட சக்ரேசிகளின் பிரஸங்கத்திலும் யோகினிகளுடைய பிரஸங்கத்திலும் அவரவர்களைப் பூர்த்தி செய்து வைப்பவளாயிருக்கின்றனள். அஃதெங்ஙனமெனின் காமேஸ்யாதிகளில் நான்காவதாகவும், யோகினீ சக்ரேஸ்வரிகளில் ஒன்பதாவதாகவும், நித்யைகளில் பதினாறுவதாகவும் தேவி இருக்கின்றனள்.

† (குருமண்டலம்)

இல்வலாந்தகனே! ஸமயேஸிகளின் பிராகாரத்திற்கு மேலே நாதாந்தரமெனும் குருமண்டலப் பிராகாரம் இருக்கின்றது. அதுவும் முற்கூறிய பிராகாரங்களைப்போலவே இருபது முழம் உயரமும் ஆயிரத்தறுநூறு முழம் பரப்புமுள்ளது; படிக்கட்டுகளால் அலங்கரிக்கப்பெற்றது.

அங்கே பரதேவதையின் யோகசாஸ்திரத்தைப் பரப்பி நன்கு விருத்தி செய்பவர்களாகவும், எல்லோருக்கும் மந்த்

* ஷட்தர்சநங்கள்—நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, (வேதாந்தம்) உத்தரமீமாம்ஸை என்பனவாம்.

† குருமண்டலம், நித்யாமண்டலம், ஷடங்கம் இவைகள் முதலாவது ஆவரணத்தில் பூஜிப்பது ஸம்ப்ரதாயமாகும்.

ரோபதேசம் செய்யும் குரவர்களாகவும், மஹாகாமேஸ்வரரால் லோகரக்ஷணார்த்தம் சிருஷ்டிக்கப்பட்டவர்களாகவும், மஹாவித்யைகளுக்கு ஸாகரம் போன்றவர்களாகவுமுள்ள நான்கு யுக நாதர்கள் இருக்கின்றனர். மித்ரேசர், ஒட்டீசர் ஷஷ்டீசர், சர்யாநாதர் என்பன அந்நால்வரது பெயர்களாகும். கும்பஜரே! இந்நான்கு யுக நாதர்களாலும் லோகரக்ஷணத்திற்காக, பாதுகாஸ்வரூபர்களும், தங்கள் தங்கள் குருவுடன், ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாரூப்ய, ஸாயுஜ்ய முக்திகளையடைந்தவர்களுமான தேவக்கூட்டம், ஸித்தக்கூட்டம், மநுஷ்யக்கூட்டம், தேவர்ஷிக்கூட்டம் (பரௌகம்) ஆகிய நான்கு மஹா ஆசார்யக்கூட்டங்கள் படைக்கப்பட்டன. இந்த நான்கு குரு ஓகங்களும் முற்கூறிய மித்ரேசாதி நான்கு ஆசார்யர்களைச் சேவிக்கின்றன.

(நித்யாமண்டலம்)

நாதாந்தரமென்னும் இந்தப்பிராகாரத்திற்கு மேல் இருபது முழம் உயரமும், ஆயிரத்தறுநூறு முழம் விஸ்தாரமுமுள்ள நித்யாந்தரம் என்னும் ஒருத்தமமான பிராகாரமிருக்கின்றது. அதில் காமேஸ்வரீ, பகமாலினீ, நித்யக்லிந்நா, பேருண்டா, வஹ்நிவாஸினீ, மஹாவித்யேஸ்வரி, தூதி, த்வரிதா, குலஸுந்தரீ, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலினீ, சித்ரா என்னும் பதினைந்து நித்யா தேவிகள் இருக்கின்றனர். மஹாபல பராக்கிரமம் வாய்ந்த இவர்கள் முறையே பிரதமை முதலிய திதிகளாய் விளங்கி மூவுலகங்களையும் வியாபித்துக்கொண்டு காலரூபிகளாய் விளங்குகின்றனர். காலனை விழுங்குவதில் மிகச் சமர்த்தர்கள். வெகுகாலம் ஜீவித்திருக்கும் பிரஹ்மா, விஷ்ணு முதலிய அனைவர்க்கும் அவரவர்களது சதாயுஸ்ரூப ஜீவிதகாலமாயிருந்துகொண்டு தேவியின் ஆக்ஞையைப் பரிபாலிக்கின்றனர். அவர்கள் எப்பொழுதும் விழிப்புடனேயே யிருக்கின்றனர். அவர்களுக்கு யாதொரு விதமான துன்பமுங்கிடையாது ஸ்ரீ தேவியின் அங்கங்களை

ரக்ஷிக்கின்ற இவர்கள், தம்மோடு ஐக்கிய ஸ்வரூபிணியான பரதேவதையை, லோகக்ஷேமத்தின் பொருட்டு ஸேவிக்கின்றனர். இவர்களது இருப்பிடம் "அ" முதல் "அம்" வரையிலுள்ள பதினைந்து ஸ்வரங் (உயிரெழுத்துக்க) ளால் அமையப்பெற்றது. பதினாறுவது ஸ்வரமான "அ:" என்பது பதினாறுவது நித்யையினது இருப்பிடமாகிய பிந்து சக்ரமாகும்.

(ஷடங்க தேவிகள்)

இந்த நித்யாந்ராளத்திற்குமேல் அங்கதேவிகளது பிராகாரமிருக்கின்றது. அதுவும் முன்போலவே இருபது முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழம் அகலமு முள்ளது. படிக்கட்டும் முற்கூறியதுபோலவே அமைந்திருக்கின்றது. அங்கு ஹ்ருதயதேவி, சிரோதேவி முதலிய சக்திகள் இருக்கின்றனர். அவர்கள், ஹ்ருதயதேவி, சிரோதேவி, சிகாதேவி, கவசதேவி, நேத்ரதேவி, அ(ஸ) ஸ்த்ரதேவி என்று கூறப்படும் ஆறு சக்திகளாவர். காமேஸ்வரரது மனைவியான ஸ்ரீகாமேஸ்வரீ தேவிக்கு அவர்கள் மிகவும் ஸமீபத்திலிருப்பவர்கள். புதிய யௌவன அழகு நிறைந்தவர்கள். ஸாவதானத்துடன் ஆயுதங்களைத் தரிப்பவர்கள். பிந்து பீடத்திற்கு நாற்புறங்களிலும் பிரகாசமான சரீரத்துடன் ஊற்றிக் கொண்டிருப்பவர்கள். ஸ்ரீ லலிதாம்பாளுடைய அங்கங்களை ரக்ஷித்துக்கொண்டிருக்கின்றனர்.

(ஒன்பதாவது ஆவரணம்)

இந்த அங்கதேவியினது பிராகாரத்திற்கு மேலே மண்டலாகாரமான பிந்துவென்னும் மஹாபீடமிருக்கிறது. அது பத்து முழம் உயரமும் மூவாயிரத்து இருநூறு முழம் அகலமுமுள்ளது. உதய சூர்யனைப்போல் விளங்கும் அது பிந்துபீடம் என்றும் ஸ்ரீபீடம் என்றும் உத்கோஷிக்கப்படுகின்றது. அன்றியும், அது மஹாபீடம், வித்யாபீடம், ஆநந்தபீடம் எனவும் வழங்கப்படுகின்றது. அது ஐம்பது பீடங்களின்

ஸ்வரூபத்தைத் தரித்துக்கொண்டிருக்கின்றது. அங்கே மூவ்வுலகிற்கும் காரணமான பஞ்சப்பிரஹ்ம மயமான ஒரு பெரிய மஞ்சம் விளங்குகின்றது. அந்த மஞ்சத்திற்குப் பத்து முழம் உயரமும் மூன்று முழம் சுற்றளவுமுள்ள நான்கு கால்களிருக்கின்றன. ஸதா ஸ்ரீதேவியைத் தியானஞ்செய்து அதனல் சக்திகளாக மாறிய பிரஹ்மா, விஷ்ணு, மஹேஸ்வரன், ஈஸ்வரன் ஆகிய இந் நால்வருமே அந்த நான்கு கால்களாக நிற்பவர்கள். ஜபா புஷ்பம்போற் பிரகாசமான காந்தியையுடைய ஒரு காலாக யிருப்பது பிரஹ்மா. அது அக்நி மூலையிலுள்ளதாகும். இரண்டாவது கால் இந்த்ரநீலக்கல்போல் கறுத்த காந்தியோடு கூடியது. அது நிருருதி திக்கிலுள்ள மஹாவிஷ்ணு வடிவமாயுள்ளது. சுத்த ஸ்படிகம்போல் நிர்மலமாயிருக்கிற மூன்றாவதுகால் ருத்ரரூபியாய் வாயுகோணத்திலிருக்கின்றது. கர்ணிகா புஷ்பம்போல் கபிலவர்ணமாயிருக்கும் நான்காவதுகால் ஈஸ்வர வடிவமாய் ஈஸாந திக்கிலிருக்கின்றது. நான்கு கால்களின் வடிவமாயுள்ள இவர்கள் எல்லோரும் ஆயுதங்களுடன் கூடியவர்களாகவும், ஸர்வாலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்களாகவும், மேலுங் கீழும் ஸ்தம்ப வடிவமாகவும், இடையே புருஷ சரீரங்களுடன் விளங்கி, தேவித்தியாநத்தால் பாஹ்ய வ்ருத்தியற்று மூடிய கண்களுடையவர்களாகவும், ததேகத் தியானத்தினல் அசைவற்ற அங்கங்களுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்கு மேலே ஸதாசிவர் பலகையாக விளங்குகின்றனர். மலர்ந்த மாதுளம் புஷ்பம் போன்ற காந்தியுள்ளதும், ஆயிரத்து அறுநூறு முழம் அகலமும், இரண்டாயிரத்து எாநூறு முழம் நீளமுள்ளதுமான அப்பலகை யெப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அங்கதேவிப் பிராகாரம் முதல் இந்த மஞ்சப்பலகை வரையில் எல்லாம் சிந்தாமணிமயமானவைகளே. தத்துவ ஸ்வரூபமான முப்பத்தாறு படிக்கட்டுகளங்கே விளங்குகின்றன. ஆரோஹ க்ரமமாக அவைகளைக் கூறுகிறேன். அவை, பூமி ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், கந்தம், ரஸம், ரூபம், ஸ்பர்சம், சப்தம், உபஸ்தம், பாயு, பாதம், பாணி, வாய், மூக்கு, நாக்கு,

षोडशी



वालार्कमण्डलाभासां चतुर्बाहुं त्रिलोचनाम् ।
पाशाङ्कुशशरांश्चापान् धारयन्तीं शिवां भजे ॥

THE GITA PRESS, GORAKHPUR.

கண், தோல், காது, அஹங்காரம், புத்தி, மநஸ், ப்ரக்ருதி, புருஷன், நியதி, காலம், ராகம், கலா, (அ) வித்யா, மாயா, சுத்தவித்யா, ஈச்வரர், ஸதாசிவர், சக்தி, சிவம் என்பன வாகும். இந்த முப்பத்தாறு தத்துவங்களே அங்கே படிகளாக அமைந்திருக்கின்றன. இந்த படிக்கட்டுகளின் வரிசையானது மஞ்சத்திற்குக்கீழ்த் திசையில் அமைந்திருக் கின்றது. மஞ்சத்தின் காலுக்கருகே கோடி ஸூர்யனுக்குச் சமமான காந்தியுள்ளதும், இடையிடையே தகதகவென்று பிரகாசிக்கும் ஸ்வர்ண முள்ளதும், நுனியில் முத்துப் பூங்கொத்துகள் தொங்கவிடப்பட்டதும், நாநாரத்னமயமாய் விளங்குவதும், அழகானதும், தாம்பூலத் திரவத்தினல் உண்டான வாஸனையுள்ளதும், ஊமத்தம் பூப்போன்ற அமைப் புள்ளதுமான கலாச் என்னும் தாம்பூலந்துப்பும் பாத்திரம் ஒன்று இருக்கின்றது. கடலைப்பருகினவரே! மூன்று முழம் உயரமும் ஆயிரத்து அறுநூறு முழம் விசாலமுமுள்ள ஹம்ஸ தூலிகாதல்பம் மஞ்சத்தின் மேலிருக்கிறது. அதன் மேல் கால்தலையணைகள் இரண்டும், தலைத் தலையணைகள் இரண்டும் இருக்கின்றன. சிவந்த காந்தியுள்ள நான்கு திண்டுகளாற் படுக்கை மிக அழகாக இருக்கிறது. அதன்மேல் சுத்தமான தும், மிருதுவானதும், பத்மராக மணியைப்போன்ற காந்தியுடையதாயுமுள்ள கௌஸும்ப வஸ்த்ரம் விரிக்கப் பட்டிருக்கிறது. அதன்மேலே, கிழக்கு முகமாக யிருப்ப வரும், தயையோடு கூடியவரும், ம்ருங்கார வேஷத்தால் மிக அழகாயிருப்பவரும், எப்போதும் பதினறு வயதுள்ளவரும், உதய ஸூர்யபிம்பம்போல் காந்தியுள்ளவரும், நான்கு கரங் களும் மூன்று நேத்ரங்களுமுள்ளவரும், ஹாரம் கேயூரம் கிரீடம் கடகம் முதலிய ஆபரணலங்காரமுள்ளவரும், அழ கிய சிரிப்பு எனும் நிலவினல் பிரகாசிக்கும் கன்னங்களே யுடையவரும், மிகச் சிறந்தவருமான பகவான் ஆதிதேவன் ஸ்ரீகாமேஸ்வரர் பிரகாசிக்கிறர். அவருடைய மடியின் மீதிருப்பவளும், பாலஸூர்யனைப்போற் சிவந்த திருமேனி யுள்ளவளும், எப்போதும் பதினறு வயதுள்ளவளும், புதிய யௌவனத்தால் கர்வங்கொண்டவளும், கடைசற் பிடித்த

பத்மராகம் போன்ற காந்தியுள்ள பாதாரவிந்தத்தின் நகக் காந்தியுள்ளவளும், செம்பஞ்சுக் குழம்பை அபேக்ஷிக்காமல் இயற்கையாகவே சிவந்த பாதக் காந்தியுள்ளவளும், அதி மதுரமாய்ச் சப்திக்கின்ற பாதச் சலங்கையாலும், கங்கணங் களாலும் அழகாயிருப்பவளும், மன்மதனென்னும் வீர னுடைய பாணப்பெட்டியின் கர்வத்தை அழிப்பதான முழங் கால்களுள்ளவளும், யானைத்துதிக்கையையும் வாழைத்தண் டையும் ஒத்த துடைகளாலழகியவளும், சிவந்ததும் வழவழப் பானதும் மெல்லியதுமான பட்டாடையால் அலங்கரிக்கப் பட்ட இடுப்பின் கீழ்ப்பாகத்தையுடையவளும், விசாலமான இடுப்பின் பின்புறத்தாற் பிரகாசிப்பவளும், ரத்ந ஒட்டி யாணத்தால் பிரகாசிப்பவளும், வணக்கமான நாபிக்கு மேலுள்ள மூன்று மடிப்புகளாகிற காந்திப் பிரவாஹமுள்ள வளும், மொக்குபோன்ற ஸ்தநங்களில் ஊஞ்சலாடுகின்ற நாற்றுக்கணக்கான முக்தாஹாரங்களுடன் கூடியவளும், மிகப் பெருத்ததான ஸ்தநபாரத்தினுல் சிறிதுவணங்கிய இடுப்பையுடையவளும், காட்டுவாகைப் புஷ்பம்போல் அதி ம்ருதுவானதும் கேயூர கங்கண வரிசைகளுள்ளதும் மோதிரங்கள் தரித்த விரல்களோடு கூடியதுமான நான்கு கைகளையுடையவளும், கடைசற் பிடித்த சங்கம்போன்ற அழகிய கழுத்தையுடையவளும், முகமாகிற கண்ணுடிக்குக் காம்புபோன்ற கன்னமுள்ளவளும், சிவந்த உதடுகளை யுடைய வளும், சுத்தமானதும் வரிசையாய் அமைந்ததும் பிரகாச முள்ளதும் மல்லிகை யரும்பு போன்ற காந்தியுள்ளதும் வித்யாஸ்வரூபமுமான பற்களால் நிலவை யளிப்பவளும், பெரும் முத்தோடுகூடிய புல்லாக்கினுல் பிரகாசிப்பவளும், தாழம்பூவின் உள்மடல்போல் மிக நீண்டகண்களுள்ளவளும், அர்த்தசந்திரன் போன்ற நெற்றித் திலகம் உள்ளவளும், மாணிக்க குண்டலங்களாலலங்கரிக்கப்பட்ட காதுகளுள் ளவளும், புதிய கர்ப்பூரம் கஸ்தூரி இவைகளால் ஸதா வாஸனை நிறைந்த தாம்பூல மடிப்புள்ளவளும், சரத்கால சந்திர மண்டலம்போன்ற மதுரமான முகமுள்ளவளும், சிந்தாமணிகளுடைய ஸாரத்தினுல் இழைக்கப்பட்ட கிரீட

முள்ளவளும், அழகிய திலகம்போல் பிரகாசிக்கும் நெற்றிக் கண்ணுள்ளவளும், காடாந்தகாரம்போல் நெருக்கமாயும் கறுத்ததாயு மிருக்கிற கேசபாரமுடையவளும், மகுட்டுக் கோட்டில் வைக்கப்பட்ட ஸிந்தூரத்தால் பிரகாசிப்பவளும், மிருந்த பிரகாசமான சந்திரகலையைச் சிரசில் தரித்திருப்ப வளும், மதத்தால் சஞ்சலமான கண்களையுடையவளும், ஸ்ருங் காரத்திற்குரிய ஸமஸ்தமான வேஷங்கள் நிறைந்தவளும், ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பவளும், ஸமஸ்த உலகங் களுக்கும் தாயாக யிருப்பவளும், ஸதா ஆனந்தத்தை விருத்தி செய்பவளும், பிரஹ்மா விஷ்ணு ருத்திரன் ஈஸ்வரன் ஸதா சிவன் ஆகிய இவர்களுக்கு ஆதி காரணமாயிருப்பவளும், கடைக்கண்ணிலிருந்து சுரந்து ஓடும் கருணைப் பிரவாஹத்தி னால் எல்லோரையும் ஸந்தோஷப்படுத்துபவளும், ஸகல பாபங்களையும் போக்கடிப்பவளுமான பகவதி ஸ்ரீலலிதாம் பிகை பிரகாசிக்கின்றாள்.

ஸ்ரீதேவியைப் பூஜிப்பது இதர தேவதைகளைப் பூஜித்து அதன் பலனால் கிடைக்கத்தக்க பாக்யம் என்பார்கள். அன்றியும் அவளைப் பூஜிப்பதே அவளைப் பூஜித்ததாலுண் டாகும் பயனாகும். அப்படிப்பட்ட ஸ்ரீலலிதாதேவியின் சரீரத்தை எப்படி வர்ணிப்பேன்? ஆயிரங்கோடி வருஷங்க ளானாலும் ஓரம்சம் பூர்ணமாக வர்ணித்தல் முடியாது. வர்ணனை என்பது வாக்ரூபமானது. அவளிடத்தில் வாக்கு எப்படிச் செல்லும்? வாக்குகள் மனதுடன்கூட அவளைத் தேடி யடைய முடியாமல் அங்கிருந்து திரும்புகின்றன. அதிகங் கூறுவதேன்? தத்துவமான இதைக்கேள்! பக்ஷ பாதத்தினாலோ ஸ்நேஹத்தினாலோ மோஹத்தினாலோ நான் கூறவில்லை! தபோநிதியான முனிவரே! கல்ப விருக்ஷத் தின் கிளைகள் எல்லாம் எழுதுகோல்களாயிருக்கட்டும்; ஸப்த ஸமுத்திரங்களும் மைப்பாத்திரங்களாக விருக்கட்டும்; ஐம்பது கோடி யோஜனை விசாலமுள்ள பூமியே எழுதப்படும் ஓலை யல்லது காகிதமாயிருக்கட்டும்; எழுதுங்காலம் ஒரு பிரஹ்மாவின் ஜீவித காலத்திற்கு அதிகமான வர்ஷங்களை

யாகட்டும்; ஒவ்வொருவரும் கோடிக்கணக்கான கைகளைப் பெற்றுப் பதினான்கு புவனங்களிலுள்ள அனைவரும் எழுதட்டும்; பிரஹஸ்பதிக்குச் சமமாக எல்லோரும் சொல்லட்டும்; அப்படியிருந்தாலுங்கூட ஸ்ரீ தேவியினுடைய ஒரு பாதாரவிந்தத்தின் ஓரங்குலியின் அழகில் ஆயிரத்திலோரம்சத்தைக் கூட வர்ணிக்கமுடியாது. ஆதலின் அவளது குணத்தைத் துதிப்பதில் ஸமஸ்தமான வாக்வ்ருத்திகளும் பயனற்றதாகவே முடியும்.

பிந்து பீடத்திற்கு நாற்புறங்களிலும் கருநிறம் வாய்ந்த மஹாமாயை என்னும் திரை (திரஸ்கரிணி) சதுரஸ்ரமாகத் தொங்குகின்றது. தேவிக்கு மேலே நாற்பது முழம் உயரத்தில் மூவுலகிலும் கிடைக்காத இந்த்ரகோபப்பட்டு விதானம் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு அதி மனோஹரமாயிருக்கும் அலங்காரத்தை வர்ணிக்க ஆரம்பிக்கும்போதே எனது வாக்கு வெட்கத்தால் வெளிக் கிளம்பாமல் கண்டத்திலேயே (கழுத்துடன்) நின்றுவிட்டது. ஆங்குள்ள ஒப்பற்ற ஸகல குணங்களையும் அவ் வாணிதான் அறிவாள். மனதிற்கெட்டாத அந்த அழகை எவரே வர்ணிக்க வல்லவராவர்?

இங்ஙனம் பண்டாஸுரனைக் கொல்லச் சிதக்னியிலிருந்து தோன்றிய ஸ்ரீலலிதாம்பிகை, அஸுரரனைவர்களையுங் கொன்று, திவ்ய சிற்பிகளாலமைக்கப்பட்டதும் பதினாறு க்ஷேத்திரங்களிலே இருப்புள்ளதுமான ஸ்ரீ நகரத்திலே இருந்து உலகை ரக்ஷிக்கின்றாள். இங்ஙனமே இதர ஸ்ரீபுரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன, அமைப்பில் அவற்றிற்கு யாதோரற்ப பேதமும் கிடையாது; பெயர் மாத்திரந்தான் வெவ்வேறாகும். என்றுமழியாத ஸகல ஸ்ரீ புரங்களும் ஸ்ரீ லலிதையின் விருப்பத்தால் எண்ணிறந்த பக்தர்களுக்கு இடமளிக்கின்றன.

நாநாவிருக்ஷ மஹோத்யானம் முதல் ஆரம்பித்துக் கிரமமாக ஸ்ரீபுரத்தின் வர்ணனாரூப கதையைக் கூறுபவர் உயர்ந்த

கிலையை யடைவார்கள். அதைக் கூறுங்களென்று ஆர்வத்தோடு வினவியவரும், அக் கதையைச் சிரவணித்தவரும், அதைச் சொல்பவரும் புத்தகத்தில் எழுதி அதை வீட்டில் வைத்திருப்பவரும் உத்தம கதியை யடைவார்கள். இங்கு வர்ணித்த வண்ணம் சிற்பிகளைக்கொண்டு அந்தந்த கோட்டைகளையுமமைத்து ஸ்ரீதேவிக்கு ஓரழகிய பெரிய ஆலயம் அமைக்கும் சிறந்த பக்தர்களும் மோக்ஷ ஸாம்ராஜ்யமெனும் பரகதியை யடைவார்கள்.

முப்பத்து மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று. சுலோகங்கள் 110.

முப்பத்து நான்காம் அத்தியாயம்.

மந்த்ரராஜமும் அதன் ஸாதநமும்.

அகஸ்தியர் :—ஸ்ரீ தேவியினது ஆவிர்ப்பாவம் முதலிய சிறந்த சரிதமும், பண்டாஸுரனது வதமும், ஸ்ரீ நகரத்தின் அமைப்பும் என்னால் சிரவணஞ் செய்யப்பட்டன. இப்போது அத் தேவியினது மந்த்ரத்தின் ஸாதநத்தையும் தேவீ பக்தர்களது லக்ஷணத்தையும் கேட்க ஆவல் கொண்டிருக்கிறேன். அஃதெல்லாவற்றையும் அருள் புரிவீராக.

ஹயக்ரீவர் :—முனிவரே ! எல்லாப் பொருள்களையும் விட சப்தமென்பதே மிகச் சிறந்தது. எல்லாச் சப்தங்களையும்விட வேதராசியே மிகச்சிறந்தது. எல்லா வேதங்களிலும் வேதமந்த்ரங்கள் மிகச்சிறந்தன ; ஸகல வேதமந்த்ரங்களிலும் விஷ்ணு மந்த்ரங்கள் மிகச்சிறந்தன ; அவைகளிலும் சிறந்தன துர்க்கா மந்த்ரங்களாம் ; அவைகளைவிட மிகச்சிறந்தவைகள் திவ்யமான கணபதி மந்த்ரங்கள். அவைகளிலும் ஸூர்ய மந்த்ரங்கள் சிறந்தனவாம் ; அவைகளைவிட சைவ மந்த்ரங்கள் மிகச்சிறந்தனவாம். அவைகளைவிட லக்ஷ்மீ மந்த்ரங்

களும், அவைகளையும்விட ஸாரஸ்வத மந்த்ரங்களும், அவைகளைவிடப் பார்வதி மந்த்ரங்களும், அவைகளையும் விட ஆம்நாய மந்த்ரங்களும், அவைகளையும்விட வாராஹீ மந்த்ரங்களும் சிறந்தனவாம்; அவற்றையும்விட ஸ்யாமளா தேவியினது மந்த்ரங்கள் மிகமிகச் சிறந்தனவாம்; இல்வலனையடக்கிய முனிவரே! அவைகளையும் விடப் பத்துவகையாகக் கூறப்படும் ஸ்ரீலலிதாதேவியினுடைய மஹாமந்த்ரங்கள் சிறந்தன. அவற்றிலும் அத்யுத்க்ருஷ்டமானவை இரண்டாம்; அவை லோபாமுத்ரா, காமராஜம் எனப்படும்; ஹாதிவித்யை லோபாமுத்ரா என்றும், காதிவித்யை காமராஜம் என்றும் அழைக்கப்படும். ஹம்ஸாதியான மந்த்ரத்திற்கு வாச்யார்த்தம் காமராஜ மஹேஸ்வரனும்; காதியான மந்த்ரத்திற்கு ஸ்ரீ லலிதாம்பிகையே வாச்யார்த்தமாவள். ஹாதி காதியென இவ்விரண்டிற்கும் பேதம் (முதல்) மூன்று அக்ஷரங்களால் ஏற்பட்டதாகும். அவ்விரண்டிற்குள் காமராஜம் என்பது பக்திமான்களுக்கு ஸித்தியை யளிப்பதாகும்.

சிவன், சக்தி, காமன், க்ஷிதி, மாயை, ஹம்ஸம், ப்ருகு, காமன், சிவன், இந்திரன், புவனேசன், சந்த்ரன், மன்மதன், பூமி, ஹ்ருல்லேகை இவற்றோடு கூடிய மந்த்ரம் ஹாதிவித்யையாம். ஆரம்பத்தில் மன்மத, யோநி, ஸ்ரீ பீஜங்களுள்ளது காதிவித்யையாம்.

ஸ்ரீ லலிதாம்பிகையைக் கூறும் பஞ்சதசாக்ஷரீ மஹாமந்த்ரத்தை ஜபிப்பவர்கள் மஹாபாக்யசாலிகளாவார்கள். எங்குமவர்களுக்கு ஸித்தியுண்டாகும். ஸத்குருவினிடமிருந்து இம் மஹாமந்த்ரத்தைப் பெற்று மேலே கூறும்வண்ணம் அறிவுள்ளவன் நன்றாக அதை ஸாதிக்கவேண்டும். அதன் கிரமத்தைக் கூறுகின்றேன்; ஊக்கத்துடன் கேள்!

காலையில் எழுந்திருந்து, பிரகாசமானதும் ஆயிரந்தளங்களுள்ளதும் கேஸரத்துடன் கூடியதுமான கமலத்தை சிரசில் நினைத்து, அதில் கருணாவடிவினராய் ஸந்தோஷமுள்ளவ

ரான ஸ்ரீ குருவைத் தியானஞ் செய்தல் வேண்டும். பிறகு வெளியிற் சென்று சௌசம் முதலியவைகளைச் செய்து முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்து, வாஸனையோடு கூடிய தைலத்தைத் தேய்த்து உடலைப் பிடித்துவிட்டுச் சுத்தமான உஷ்ண ஜலத்தில் ஸ்நாநம் செய்தல் வேண்டும். இயற்கையி லேயே ஜலம் சுத்தமானது; (சுத்தமான) அக்நியுடன் அது கூடினால் அதன் தூய்மையைப் பற்றிக் கூறவேண்டுமா? ஆதலினால் வெந்நீரில் நீராடி, அஃதில்லாவிடில் கிடைத்த நீரில் ஸ்நாநஞ் செய்து சுத்தமான குஸும்பவர்ணம் அல்லது சிவந்த நிறமுள்ள இரண்டு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு காலைக்கழுவி ஆசமநஞ் செய்யவேண்டும். பரிசுத்தனாய்ப் பராம்பிகையைத் தியாநஞ் செய்துகொண்டு அவரவர் குலா சாரப்படி ஊர்த்வபுண்ட்ரமோ, த்ரிபுண்ட்ரமோ, பட்டவர்த் தனமோ, ஆத்தியிலைபோலவோ நெற்றியில் புண்ட்ரத்தைத் தரித்துக்கொள்ளல் வேண்டும். அழகிய கற்பூரம் கஸ்தூரீ சந்தனம் முதலியவைகளைப் பூசிக்கொண்டு ஆபரணங்களை யணிந்து ஸ்ருங்காரவேஷத்தைத் தரிக்கவேண்டும். மண முள்ள புஷ்பங்களைச் சிரஸிலணிந்து செல்வத்திற்கேற்றபடி ஆபரணங்களையும் அணிதல் வேண்டும். சக்தியற்றவர்கள் ஸங்கல்பத்தால் அதாவது மனத்தினால் அந்தந்த ஆபரணங் களை அணிந்திருப்பதாகப் பாவித்தல் வேண்டும். பின்னர் உள்ளும் புறமும் சுத்தனாய் ஸந்த்யாவந்தனத்தை யநுஷ்டிக்க வேண்டும். அரசஇலைபோன்ற பாத்திரத்தினால் தர்ப்பை அக்ஷதை புஷ்பம் சந்தனம் இவைகளுடன் ஸூர்யனுக்கு அர்க்கிய மளிக்கவேண்டும். அங்ஙனம் ஸூர்யனுக்கு அர்க்கிய மளித்த பின்னர் ஸ்ரீலலிதைக்கு மூன்று அர்க்கிய மளிக்க வேண்டும். சக்திக்கேற்றவாறு மூலமந்த்ரத்தினால் ஸ்ரீலலிதே ஸ்வரிக்கும் விதிப்படி, தேவ, ரிஷி பித்ரு வர்க்கங்களுக்கும் தர்ப்பணஞ் செய்தல் வேண்டும். பின் மௌனியாய்த் தூய மனமுள்ளவனாய் மக மந்திரமெனும் யாகசாலையை யடைந்து ந்யாஸ கண்டத்திற் கூறும் வண்ணம் கிரமமாக ந்யாஸங்களைச் செய்து கொண்டு மிருதுவான ஆஸனத்திலமர்ந்து மஹத் தான ஸ்ரீ நகரத்தைத் தியானஞ் செய்தல்வேண்டும்.

நாநாவ்ருக்ஷ மஹோத்யானம் முதல் ஸ்ரீ லலிதாதேவி வரையுள்ள திவ்யமான ஸ்ரீ நகரத்தை, மனதை வெளியிற் செலுத்தாமற் சுசியாய்த் தியானம் செய்யவேண்டும். ஸமர்த்தனை ஸாதகன் பூஜாகண்டத்திற் கூறியபடி பூஜை செய்தல் வேண்டும். கற்பூர கஸ்தூரிகளால் வாஸனையுள்ள ஜப மாலையை யெடுத்துக்கொண்டு வடக்கு அல்லது கிழக்கு முகமாக அமர்ந்து ஸ்ரீஸிம்ஹாஸநேஸ்வரியை ஜபிக்க வேண்டும். ஸமர்த்தன் முப்பத்தாறு லக்ஷம் ஸ்ரீ வித்யையை ஜபிக்க வேண்டும். அதில் பத்திலொரு பங்கு ஹோமமும் அதில் பத்திலொருபங்கு தர்ப்பணமும் அதில் பத்திலொரு பங்கு பிராஹ்மண போஜனமும் விதிப்படி செய்ய வேண்டும். இவ்விதம் மந்த்ரம் ஸித்தித்த பிறகுதான், தான் விரும்பிய பலனை நாட உத்தேசித்து ஜபம்செய்ய வேண்டும். ஒரு லக்ஷம் ஜபஞ்செய்தால் மனிதர்களை வசமாக்கலாம். இரண்டு லக்ஷம் ஜபஞ்செய்தால் ஸகல ஸ்த்ரீகளும் வஶ்யமாவார்கள். மூன்று லக்ஷம் செய்தால் அரசரனைவரும் வஶ்யமாவார்கள். நான்கு லக்ஷத்தினால் நாககன்னிகைகள் வசமாவார்கள். ஐந்து லக்ஷம் ஜபத்தினால் பாதாளத்தில் வஸிக்கும் ஸகல ஸ்திரீகளும், ஆறுலக்ஷத்தினால் பாரிலுள்ள பெண்மக்களனைவரும், ஏழு லக்ஷத்தினால் ஸ்வர்க்க ஸ்திரீகளனைவரும், எட்டு லக்ஷ ஜபத்தினால் தேவப் பிறவியில் தோன்றிய எல்லோரும், ஒன்பது லக்ஷ ஜபத்தினால் ஸமஸ்த தேவர்களும் வஶ்யமாவார்கள்; பத்து லக்ஷம் ஜபத்தினால் இந்திரன் முதலிய ஸகல திக்பாலகர்களும் வசமாவார்கள். பதினொரு லக்ஷம் ஜபத்தினால் பிரஹ்மா விஷ்ணு மஹேஶ்வரர்களையும், பன்னிரண்டு லக்ஷ ஜபத்தினால் அஷ்டஸித்திகளையும் வசமாக்கலாம். இந்திரனுக்கு இந்திர பதவியும், விஷ்ணு விஷ்ணுவாயிருத்தலும், சிவன் சிவனாயிருத்தலும், சந்திரன் சந்திரனாயிருத்தலும், ஸூர்யன் ப்ரகாசமாயிருத்தலும், ஸகல தேவர்களும் அதிப் பிரகாசமான அந்தந்த ஸித்திகளைப் பெற்றதும் இந்த மந்த்ர ராஜத்தினாற்றான் என்று தெரிந்துகொள்.

இந்த மந்த்ரத்தை ஜபிப்பவன் ஸர்வ பாபங்களை ஒழித்துவிட்டு மூவுலகிலும் அதிஸுந்தர வடிவினனாகவும், மன்மதனுக்குச் சமானமான ரூபலாவண்யங்களுள்ளவனாகவும், ஸர்வக்ஞனாகவும், ஸகலராலும் பூஜிக்கத்தக்கவனாகவும், பார்த்தமாத்திரத்தில் எல்லோருடைய உள்ளத்திலும் ஆநந்தத்தை நிறப்புபவனாகவும், வாக்கினால் ப்ருஹஸ்பதிக்குச் சமமானவனாகவும், ஸ்ரீயினால் ஸ்ரீபதிக்குச் சமானனாகவும், பலத்தில் வாயுவுக்குத் துல்யனாகவும், ஸ்திரமாயிருப்பதில் ஹிமயமலைக்குச் சமனாகவும், உன்னதமாயிருத்தலில் மேருவுக்குத் துல்யனாகவும், காம்பீர்யத்தினால் பெருங்கடலை ஒத்தவனாகவும் ஆவான். அன்றியும் தனது உருவத்தாலேயே க்ஷணத்திற்குள் சேரி, கிராமம், நகரம் முதலியவைகளைக் கலக்குபவனாகவும், சிறிது புருவத்தை நெறிப்பதால் எல்லோரையும் அசைவற்று நிற்கச்செய்து, கொட்டாவி விடும்படி செய்பவனாகவும், துஷ்ட சித்தமுள்ளவர்களை ஓட்டி, மோஹமடையும்படி செய்யவும், கொல்லவும் சக்தியுள்ளவனாகவுமாகின்றான். மிகக் கோபங்கொண்டவன்கூட தேவீ மந்த்ர ஜபம் செய்பவனைக் கண்டவுடன் ஸந்தோஷமடைந்து சினத்தை விட்டுத் தெளிந்தெழுவான்; பதினெட்டு வித்யைகளிலும் பண்டிதனெனப் பிரஸித்தி யடைவான்; அவன் வாக்கு கங்காப் பிரவாஹம்போல் தடையின்றியும் மதுரமாகவுமிருக்கும். அகஸ்தியரே! ஸர்வ சாஸ்திரங்களிலும் அவனறியாதது ஒன்றுமிராது; சகல தர்சனங்களைச் செய்யவும் கண்டிக்கவும் அவன் சக்தியுள்ளவனாவான்; ஸகல தத்துவங்களையுமறிவான்; ஸர்வக்ஞனாகவுமாவான். அவனது உள்ளம் ஸர்வ ஜந்துக்களிடமும் கருணை நிறைந்ததாயிருக்கும். அவனது கோபாக்னிக்கு மூவுலகும் போதாது.

காட்டிலோ, பட்டணத்திலோ, தேவாலயத்திலோ, மடத்திலோ, வேறெங்கேயோ தங்கி ஜபம் செய்பவனிடம் பெண்கள் ஓடி வருவார்கள். அவனைக் கண்டவுடன் உலர்ந்த சறகுகள் சுழற் காற்றிற் சிக்கிச் சுழல்வனபோல் யுவதிகளது மனம் சுழன்று பதறும். மாதரெனும் வெண்

னெயை யுருக்குந் தீப்போன்ற அவனை ஸமஸ்த வித்யா ராசிகளும் ஸேவிக்கின்றன. சந்த்ர ஸூர்ய மண்டலங் களேயே குச மண்டலமாயுடைய மூவ்வுலகெனும் வனிதை ஜாபகனைப் பார்த்ததுமே அவனிடம் ஆசை கொள்வாள். எனின், மற்ற ஸாதாரணப் பெண்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமா? பட்டணங்களிலும், வீதிகளிலும், தண்ணீர்ப் பந்தல்களிலும், வீடுகளிலும், யாகசாலைகளிலும், ஆலயங்களி லும், மடங்களிலும், ஆஸ்ரமங்களிலும், அந்தப்புரங்களி லும், வழிகளிலும், உத்தியான வனங்களிலும், புண்ய தீர்த் தங்களிலும், மலைக் குகைகளிலும், கங்கை முதலிய புனித தீர்த்தங்களிலும் அவனுடைய புண்ய கீர்த்தியானது கமகம வென்று பரிமளிக்கும். அவனைப் பார்த்தவுடன் பாபிகளது பாபக்கூட்டம் பறந்தோடும். கவிஸ்ரேஷ்டர்களால் அவ னது குணங்களே எங்கும் பாடப்படும். நிறபேதம், ஆயுதம் வாஹனம், பூஷணம் இவற்றின் பேதம், இவைகளோடு செய்யப்படும் தேவீ தியானத்தினால் அததற்குரிய ஸித்தி கள் அடையப்படுகின்றன.

ஸ்ரீ லலிதையின் மஹா மந்த்ரம் மூன்று கண்டங்களாக அமைந்திருக்கின்றது. அதில் முதல் கண்டமானது குந்த புஷ்பம் போலும் சந்திரன் போலும் வெண்மை நிறம் வாய்ந் தது. மூலாதாரத்திலிருந்து ஹ்ருதய சக்கிரம் வரையில் பிரகாசிக்கும் ஜ்வாலையுள்ளதாகத் தியானஞ் செய்ய வேண் டும். இரண்டாவது கண்டத்தை * இந்திரகோபத்திற்குச் சமமாகவும், ஹ்ருதய சக்கிரத்திலிருந்து நெற்றி வரையில் ஜ்வலிக்கும் சிகையுடையதாகவும் தியானஞ் செய்யவேண்டும். பிறகு ஸகலமான துரிதங்களையும் போக்கடிக்கும் மூன்றா வது கண்டம் நெற்றியிலுள்ள இரண்டு தளமுள்ள ஆக்ஞை யினிடையே தியானிக்கத் தக்கதாம்.

மோக்ஷத்தை விரும்புபவர் நிலவைப்போல் வெண்மை நிறமுள்ளவளாகத் தேவியைத் தியானிக்க வேண்டும். ஒரு

---

* இந்தரகோபம்-ஒருவகை சிவப்புப் பூச்சி.

வரை வசிகரம் செய்யும்போது ஸந்த்யா காலம்போல் சிவந்த வளாகத் தியானிக்க வேண்டும். சிறந்த கவியாக வேண்டு மென விரும்புவோர் ஸ்படிகம்போல் நிர்மலமாய் வெண்மை நிறமுள்ளவளாகத் தியானஞ்செய்யவேண்டும். தனத்தை விரும்புபவர் ஸ்ரீ லலிதாம்பிகையை ஸ்வர்ண வர்ணமாகத் தியானித்தல் வேண்டும். ஸர்வ ஸம்பத்தும் வேண்டுமென் போர் ஶ்யாமளையாகத் தியானிக்கவேண்டும். ஒருவனை ஊமையாகச் செய்ய வேண்டுமெனின் நீலையாகவும், அசை வற்றவனாக ஒருவனைச் செய்வதற்கு மஞ்சள் வர்ணமுள்ள வளாகவும் தியானம் செய்யவேண்டும். மூலாதாரம் முதல் பிரஹ்மரந்திரம் வரையில் ஜ்வலிக்கும் மாணிக்ய தீபம்போல் தேஜப் புஞ்ஜ (கூட்ட)மாகத் தியானம் செய்வோர் ஸகல ஸித்தி களையும் பெறுவர். கும்பஸம்பவரே! இங்ஙனம் அநேக வகையான பேதத்தினால் ஸ்ரீ தேவியைத் தியானஞ் செய் வோர் அபரிமிதமான ஸம்பத்தைப் பெறுவார்கள்.

ஸத்துக்களால்தான் இந்தத்தேவி அடையத் தக்கவள். அஸத்துக்கள் ஒருபோதும் தேவியை யடைய முடியாது. யார் தீவ்ரமான தவம் செய்தவரோ அவரே தம் மனத்தில் தேவியைத் தியானம் செய்யத்தக்கவர். யாருக்கு அது கடைசி ஜன்ம மல்லவோ, யார், தான்ஸ்வயமாகச் சங்கரனல்லவோ அவன் ஸ்ரீலலிதா பரமேஶ்வரியையோ அல்லது ஸ்ரீவித் யையோ அடைய முடியாது. (அதாவது எவனுக்கு அது கடைசி ஜன்மமோ அல்லது எவன் ஸ்வயமாகச் சங்கரனோ அவனாற்றான் ஸ்ரீவித்யையும் பரதேவதையும் அடையப்பட முடியுமென்பது கருத்து.)

அகஸ்தியரே! ஒருவனது வம்சத்தில் எவருக்காவது ஒருவருக்கு இந்த மஹாமந்த்ரம் கிடைத்தால் அந்த வம்சத் தில் தோன்றிய அனைவரும் முக்தர்களாகவும் ஸந்தோஷ முள்ளவர்களாகவும் ஆகின்றார்கள். இது மிக்க ரஹஸ்யத்தி லும் ரஹஸ்யமான வித்யையென ஸர்வ சாஸ்திரங்களும் நிச்சயிக்கின்றன. ஸமஸ்த வேதங்களும் சாஸ்திரங்களும்

ஸ்ரீலலிதேச்வரியையே கூறுகின்றன. இவளே ஆத்மவித்யை! இவளே உயர்ந்த கதி! இவளே உயர்ந்த தீர்த்தம்! இவளே மஹாபலம்! இவளையே முனிவர்கள் தியானிக்கின்றனர்; யோகிகள் தியானிக்கின்றனர். வானவரில் சிறந்தவர்கள் ஸர்வஸித்தியையு மளிக்கும் ஸ்ரீலலிதையை ஸதா அர்ச்சிக்கின்றனர். தீய குணமுள்ளவர்களாலும் அயோக்கியர்களாலும், கெட்ட எண்ணமுள்ளவர்களாலும், வேதத்தால் விலக்கப்பட்டவர்களாலும், வீண் தர்க்கஞ் செய்பவர்களாலும், வீணாக அலையும் சஞ்சல புத்தியுள்ளவர்களாலும், பிறவியை வீணாக்கியவர்களாலும், ஒழுக்க மற்றவர்களாலும், அசுத்தர்களாலும், குலத்தை விட்டு நழுவியவர்களாலும், க்ரூரமானவர்களாலும், ஸத்தர்சனத்தை வெறுப்பவர்களாலும், பாபசீலர்களாலும், ஆசாரத்தை நிந்திப்பவர்களாலும், சார்வாகமதத்தில் ஸமர்த்தர்களாலும், கர்விகளாலும், பிறரை நிந்திப்பவர்களாலும், ஆத்மஸ்வரூபத்தை உணராதவர்களாலும், அதிக ஈர்ஷ்யை உள்ளவர்களாலும், கோபிகளாலும், குருவைப் பாதிப்பவர்களாலும், கொழுத்தவர்களாலும், கர்வமாகப் பேசுபவர்களாலும், டாம்பீகர்களாலும், அதிகர்விகளாலும், இவைபோன்ற மற்ற மனிதர்களாலும் ஸர்வதா ஸ்ரீதேவி அடையப் படாதவளாவள். எப்படியோ இத்தகையவர்க்கு ஸ்ரீவித்யை கிடைப்பினும் அவர்களிடத்தில் வித்யையானது பராங்முகமாகவேயிருக்கும்.

கலசத்திற் பிறந்தவரே! நீர் கேட்ட விஷயத்தையும், தேவி எல்லோராலும் பூஜிக்கத்தக்கவள் என்பதையும், தேவதைகளாலும் பூஜிக்கத்தக்கவள் என்பதையுங் கூறினேன். பண்டாஸுர யுத்தத்திற்காகவே சிதக்னியிலிருந்து இந்தத் தேவி தோன்றினாள். இந்த மஹா த்ரிபுரஸுந்தரியினுடைய மூர்த்தியானது தேஜஸ்ஸிலிருந்தே கிளம்பியதாகும். இந்த லலிதேச்வரி பிரஹ்மாவினால் காமாக்ஷியெனத் துதிக்கப்பட்டனள். அந்த ஸர்வோத்தமையான ஸ்ரீலலிதாம்பிகையை அரிய சக்தியினால் தியானம் செய்கின்ற ஸதாசிவத்தின் மனதை லாலனை செய்ததால் லலிதா எனப் பெயர் பெற்றாள்.

அந்தத் தேவி எது எதைச் செய்தாளோ அஃதெல்லாவற்றை யும் கூறிவிட்டேன். ஸகல பூஜாவிதானங்களையும், சாஸ்தி ரோக்தமான வழியாக வேறு கண்டத்தில் கூறுகிறேன். அந்த விலாஸம் மஹா அத்புதமானது.

பல ஸ்ருதி.

கும்பஸம்பவரே! யார் இந்தத் திவ்யமான சரிதத்தைக் கேட்கிறார்களோ அவர்களுடைய ஸித்தி உள்ளங்கை நெல்லிக் கனிபோல்வதாகும்; அவர் மறுபடியும் பிறப்பதில்லை; ஸ்ரீலலிதாதேவியின் ஆக்யானத்தைப் படித்தாலும், கேட்டா லும், ஸர்வ பாபங்களையும் விட்டுத் தேவலோகத்தில் கொண்டாடப்படுவான். கன்யகையை விரும்புபவர் கன்யகை யையும், ஜயத்தைக் கோருபவர் ஜயத்தையும், மோக்ஷத்தை யிச்சிப்பவர் மோக்ஷத்தையும், தர்மத்தைக் கோருபவர் தர்மத் தையும் அடைவர். தனத்தை யபேக்ஷிப்பவர் தனத்தையும், புத்திரகாமர்கள் அநேக புத்திரர்களையும், வித்தையை விரும்பு பவர் வித்தையையும், யோகத்தை விரும்புபவர் யோகத்தையும் பெறுவர்; இராஜ்யத்தை விரும்பின் ராஜ்யங் கிடைக்கும்; கிராமத்தை விரும்பின் கிராமத்தைப் பெறுவான்; கர்ப்பிணி புத்திரனைப் பெறுவள்; கன்யகை ஸத்பதியை யடைவள்; எந்த மனிதன் எந்த ஆசையைக்கொண்டு ஸ்ரீ தேவியின் சரிதத்தைக் கேட்கிறானோ அவன் விரும்பிய எல்லாவற்றை யும் அதி விரைவில் பெறுவதோடு தேவர்களாலுங் கொண் டாடப் படுபவனுமாகின்றனன். யுத்தத்திற்குச் செல்லும் அரசன் தேவியின் சரிதத்தை ஸ்ரவணஞ் செய்து செல்வானே யாகில் அவன் பயங்கரமான பகைவர்களையும் வென்று வெற்றி மாலை சூட்டிக் கொள்வான். அன்றியும் இதைக் கேட்பவர் ஸகல நோய்களிலிருந்தும் விடுபட்டுப் புத்திர பௌத்திரர் களுடன் நற்கீர்த்திபெற்று வாழ்வார்கள். ஸ்ரீலலிதாதேவி யின் சரித்திரத்தையொரு குறிப்பிட்ட பயனையுத்தேசித்து ஒரு முறை படித்தாலும் படித்தவன் அதைப் பெறுவதுடன் வாத பித்தாதி மாறுபாடுகளால் தோன்றும் நோயினல்

பீடிக்கப்படமாட்டான். அகால மரணம் அவனை யணுகாது; அரவந் தீண்டாது; ஏனைய விஷங்களும் அவனுடலில் ஏறாது; அவன் மூடனாக ஆகமாட்டான்; ஊமையுமாகான்; ஓர் ஆபத்திற்கும் ஆளாகான்; உத்பாத பயமும் உண்டா காது; ஆபிசாரப் பிரயோகங்களும் அவனருகே வாரா.

பிரதி தினம் இதைப் படிப்பவன் ஸர்வ காமனைகளும் ஸம்பூர்ணமாக அடையப்பெறுபவனாவான். த்ருடமான பக்தியு டன் யாதொரு தடங்கலுமில்லாமல் நித்யம் இதைப் பாராய ணஞ் செய்யவேண்டும். கங்கை முதலிய புண்ய தீர்த்தாட னத்தால் என்ன புண்யம் வருமோ, அதைவிட கோடிமடங்கு புண்யம் இந்தக் கதாஸ்ரவணத்தால் உண்டாகும். பத்து ராஜஸூய யாகங்களுக்கும், நூறு ஸோமயாகங்களுக்கும் எவ்வளவு ஸுக்ருதமுண்டோ அதைப்போல் கோடி கோடி மடங்கு அதிகமான பலன் இந்தச் சரித்திர சிரவணத்தால் உண்டாகும். இதைக் கேட்பவர் எந்தப் பூதங்களாலும், எந்த மனிதர்களாலும் கொல்லத் தக்கவராகார். ஒருவித நோயு மில்லாமல் பூர்ணமாக நூறாண்டு ஜீவித்திருப்பர்.

பசுவைக் கொன்றவன், நன்றி கெட்டவன், சிசுவைக் கொன்றவன், குருபத்னீ கமனஞ் செய்தவன், சரண்புகுந்தவ ரைக் கொன்றவன், நண்பனைத் துரோஹஞ் செய்தவன், துஷ் டன், பாப ஒழுக்கமுள்ளவன், தாய் தந்தைகளைக் கொன்றவன், ஆகிய பாபிகள்கூடச் சிரத்தையுடன் இந்தச் சரித்திரத்தைச் சிரவணஞ் செய்தால் ஸர்வ பாதகங்களிலிருந்தும் விடுபடுவார் கள். புண்ய தீர்த்தங்களிலும், பூஜாகாலத்திலும், விஷுவ மென்னும் புண்யகாலத்திலும், அயநங்களிலும், பஞ்சபர்வாக் களிலும், ஜன்ம நக்ஷத்திரத்திலும், புண்யமான ஆலயங்களி லும், ராஜ்யத்திற்கு ஆபத்துண்டாகுங் காலத்திலும், நோய் பீடிக்கும் போதும், மாரியாலும், திருடராலும் பயம் நேர்ந்தபோதும் யார் இதைப் படிக்கிறார்களோ அவர்கள் அந்தந்தத் துன்பங்களினின்றும் நீங்கி ஸகல ஸித்திகளையும் பெறுவார்கள். கும்பஸம்பவரே! எங்கு இச்சரிதம் புத்தகத்

தில் எழுதப்பட்டிருக்கிறதோ அந்தத் தேசத்தில் நோயும் துர்ப்பிக்ஷமுந் தோன்ரு. முனிவரே! சாஸ்திரத்தில் கூறிய நெறிப்படி ஸமஸ்தமான பூஜா விதியையும் வேருேர் கண்டத்தில் கூறுகின்றேன்; கேளும்! இந்த முப்பத்திரண்டு அத்யாயங்கள் கொண்ட ஸ்ரீலலிதோபாக்யாநமானது திவ்ய தர்மன மான அம்ருதமென்றும், தேவி மாஹாத்ம்ய மென்றுங் கூறப்படுவதாகும். ஆதலால் ப்ரஹ்மாண்ட புராணத்தில் உத்தர கண்டத்திற் கூறப்பட்ட இந்த முப்பத்திரண்டத்தியாயங் கொண்ட சாஸ்திரமானது தேவி உத்ஸவகாலத்தில் அவஶ்யம் பாராயணஞ் செய்யத்தக்கது. மூவுலகிலுமுள்ள ஸமஸ்த தேவிகளும் லலிதாவடிவமாகவே யிருப்பதால் அந்த அந்த தேவி பூஜைகளில் இந்தச் சாஸ்திரத்தைப் பாராயணஞ் செய்யாவிடில் அவர்கள் மிக்க கோபங்கொள்வார்கள். விசேஷமாகத் துர்க்கையின் மஹோத்ஸவ காலத்தில் தேவியின் ஸந்தோஷத்தின் பொருட்டு முப்பத்திரண்டு அத்தியாயத்தைப் பாராயணஞ் செய்வதற்கு ஒரு பிராஹ்மணனை நியமிக்க வேண்டும்; அல்லது த்ருட சித்த முள்ளவனுய்த் தானே ஸ்ரீ துர்க்கையின் ஸன்னதியில் இதை ஒரு முறையோ இரு முறையோ மும்முறையோ படிக்க வேண்டும். லலிதோபாக்யான படனமானது ஸர்வ ஸித்தியையு மளிக்கவல்லதாகும். மூவ்வுலகிலுள்ள ஸகலப் பிராணிகளையும் பலியாக அளித்தால் துர்க்கை எவ்வளவு ஸந்தோஷமடைவளோ அவ்வளவு ஸந்தோஷம் இந்த லலிதோபாக்யானத்தைப் படிப்பதால் தேவிக்கு உண்டாகிறது. அசுத்தனுகவோ, சுத்தனுகவோ, உட்கார்ந்தோ, நின்ருே, எந்த நிலையிலோ இம் முப்பத்திரண்டத்தியாயத்தையும் படிப்பவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுவான். அரசன் ஒவ்வோராண்டிலும் துர்க்கா தேவியின் உத்ஸவத்தில் முப்பத்திரண்டத்தியாயங்கொண்ட இவ்வுத்தம தர்சனத்தைப் பாராயணஞ் செய்விக்க வேண்டும். இது ஸர்வ ஸித்திகளுக்கும் காரணமானது. இதை விட உயர்ந்தது வேறில்லை. இந்த முப்பத்திரண்டத்தியாயத்தை ஒருமுறை பாராயணம் செய்வதனுலேயே சண்டிகா தேவியினது சரித்திரத்தைக் கோடி முறை பாராயணம் செய்த

தாலுண்டாகும் பலனுக்குச் சமமான பலனுண்டாகும். குற்ற மற்ற குணம் வாய்ந்தவர், ஸாதுக்களின் ஸம்பிரதாயமானதும் ஸர்வதுக்கங்களையு மகற்றுவதுமான இந்த ஆக்யானத்தைப் படித்தால் மெய்ஞ்ஞான தீபத்தினால் பிரகாசிக்கப்பட்ட ஸ்ரீலலிதா மஹேஸ்வரியை யடைந்து, மனத்தில் !:ஸதா பேரானந்தத்தைப் பெறுவார்கள்.

பிரஹ்மாண்ட புராணத்தில் உத்தரகண்டத்தில்
ஸ்ரீ ஹயக்ரீவ அகஸ்திய ஸம்வாதத்தில்
ஸ்ரீலலிதோபாக்யானம்

முப்பத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

தாயே! அக்ஷரங்கள் குறைவதாலும் பதங்கள் குறைவதாலும் மாத்ரைகள் நழுவுவதாலும் என்ன அபசாரம் தோன்றிற்றோ அதை க்ஷமித்துக்கொள்வாயாக! உமக்கு நமஸ்காரம்.

தேவியே! இத்தமிழ் நூலிலுள்ள குற்றங் குறைகளையும் க்ஷமித்தருள்வாய். நமஸ்காரம்.

ப்ரஹ்மார்ப்பணம்.

குறிப்பு:—பாலக்காட்டு கிரந்தாக்ஷர புத்தகத்தை யநுசரித்து இத்தமிழ் மொழி பெயர்ப்பு முடிவடைகிறது.

சென்னை சாஸ்திர சஞ்ஜீவினி புத்தகசாலையில் வெளியிட்டுள்ள கிரந்தாக்ஷர புத்தகத்திலும் இந்நூல் இத்துடன் முடிவடைகிறது. இதற்குமேல் அஸல் பிரஹ்மாண்ட புராணத்தின்படியும், பம்பாய் நாகராக்ஷர புத்தகத்தின்படியும் 35-ம் அத்தியாயத்திலிருந்து மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ காமாக்ஷி ஆலயம் கீழ்கோபுரம்.



ஸ்ரீ குமாரகோஷ்டம்.



ஸ்ரீ காமாக்ஷி ஆலயம்: உட்புற தோற்றங்கள்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

காஞ்சீபுர மாஹாத்மியம்.

அகஸ்தியர் :—ஆதியந்த மற்றதும், அவ்யக்தமும் வ்யக்தமுமான பொருள்களுக்குக் காரணமானதும், ஆனந்த போதத்தை ஒரே ரஸமாக உடையதுமான அந்த மஹத்தான தேஜஸ்ஸைத் தியானஞ் செய்கின்றேன். மஹாபுத்திமானும் வேத வேதாந்த மறிந்தவரிற் சிறந்தவருமான ஹயக்ரீவரே! உத்தமமானதும், மஹாபுண்யமானதுமான ஸ்ரீலலிதையின் சரித்திரத்தைக் கேட்டேன். பாசம் அங்குசம் தனுசு பாணம் ஆகிய இவைகளாலலங்கரிக்கப்பட்ட நான்கு கைகளுள்ளவளும் ஸர்வ பூஜ்யையும் பரதேவதையுமான திரிபுரையைப் பற்றியுங் கூறினீர்கள். நவாவரணங்களுடன் கூடிய ஸ்ரீசக்ரதம் தேவியினது யந்த்ரமென்றும் அந்த ஸ்ரீபுரத்திற்கு அவ்விசானியே அதிஷ்டான தேவியென்றுங் கூறினீர்கள். பூமண்டலத்திற்கே சிறந்த அலங்காரமாயும் அதிபவித்ரமாயும் இருக்கின்ற காஞ்சியிலே இருகைகளுடன் மின்னற்கொடிபோற் பிரகாசிக்கின்ற சரீரமுள்ளவளாய் உயர்ந்த ஜ்யோதிர்மயமாய் முன் எப்பொழுதும் கண்டிராத அழகு வாய்ந்தவளாய் விளங்கும் காமாக்ஷி யென்று பிரஸித்தி பெற்றுப் பிரகாசிக்கும் தேவி யார்?

இங்ஙனம் அகஸ்தியர் வினவியதைக்கேட்டுப் பேரானந்த பாஷ்பம் சொரியும் நேத்திரங்களோடுகூடி திரிபுரா தேவியினது தேஜஸ்ஸைத் தியானஞ் செய்து மஹத்தான மனத்தோடு (அகண்டாகார வ்ருத்தியோடு) கூடியவராய் ஸ்ரீ ஹயக்ரீவர் ஸ்ரீ தேவியைத் தியானஞ்செய்து நமஸ்கரித்து அகஸ்தியரை நோக்கிக் கூறினர்.

ஹயக்ரீவர்.—லோபாமுத்ராபதியாகும் அகஸ்தியரே! மிகவும் ரஹஸ்யமான விஷயத்தைக் கூறுகிறேன் கேளும்! வேதங்களில் "அநாக்யை" யென்று கூறப்படும் ஸ்வரூபம் தத்வ விமர்சம் செய்பவர்களால் (சித் சக்தியின்) முதலாவது

ரூபமாகக் கருதப்படுகின்றது. இந்த ஸ்வரூபந்தான் ஆதி காரணமானது; இதற்குச் சித்பரை யென்றும் புண்யபரை யென்றும் இரண்டு பெயர்களுண்டு.

வலது கையில் யோக முத்ரையும், இடது கையில் புத்தகமும் உள்ள இரண்டு புஜங்களோடும், பனி, முல்லைமலர், சந்திரன், முத்து இவைகளுக்குச் சமானமான வெண்ணிறத்தோடுங்கூடிப் பூலோகத்தில் விளங்கும் வடிவம் இரண்டாவதாகும். இந்த ரூபத்திற்கு ஸித்தாபராவென்று பெயர்.

பதினாயிரம் பால ஸூர்யர்களுதிக்கபோதுண்டாகும் ஒளியைப்போன்ற தேஹ காந்தியோடும், ஸர்வாபரணங்களோடுங்கூடி வலது கையில் தாமரை மலரைத் தரித்து இடது கையை இடது துடையின்மேல் பொருத்திக் கிரீடத்தில் அர்த்த சந்திரனைத் தரித்த வடிவத்தோடு விளங்குவது மூன்றுவதான பராபரா ஸ்வரூபமாகும்.

பின்னர், பாசம் அங்குசம் கரும்புவில் பஞ்ச (புஷ்ப) பாணங்கள் விளங்கும் நான்கு கைகளோடும், சிவப்பு நிறத்தோடுங்கூடிய பராத்ரிபுரை தோன்றினள். இவள்தான் காஞ்சி நகரத்தில் மிகப் பிரஸித்தியோடு லலிதை யென்றும் காமாக்ஷி யென்றும் விளங்குகின்றனள். ஆத்யையாயுள்ள இவளைத்தான் ஸரஸ்வதியும், லக்ஷ்மியும், கௌரியும் உபாஸிக்கின்றனர்.

மஹர்ஷே! மற்றொரு ரஹஸ்யம் கூறுகின்றேன் கேளும்! மஹேஶ்வரனுக்குக் காசி காஞ்சி என்னும் இரண்டு நகரங்களும் இரண்டு நேத்ரங்களாகும். சிவ ஸ்வரூபத்தைப் பிரத்தியக்ஷமாய் அறிவதற்குக் காரணமான வைஷ்ணவ க்ஷேத்திரமென்று பிரக்கியாதி யடைந்த இந்தக் காஞ்சிமா நகரத்தில் முன்னொரு ஸமயம் ஸர்வலோகத்தையும் படைத்த பிரஹ்மன் ஸ்ரீ தேவியைத் தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பத்தால் மிகக் கடுமையான தவஞ் செய்தார். மிகக் கடுமையான விரதத்தோடு ஆத்மத் தியானத்தில் ஈடுபட்ட சதுர்முகனது முன்னிலையில் பத்மத்தைக் கரத்திலேங்

திய லக்ஷ்மீதேவி தோன்றினள். அவள் பத்மாஸனத்தி லமர்ந்து, எங்கும் ஜயசீலரான மஹாவிஷ்ணுவுடன்கூட ஸகல ஶ்ருங்கார வேஷங்களையுமணிந்து, ஸர்வ ஆபரணங் களாலும் அலங்கரிக்கப்பட்டவளாய் ஸிம்ஹாஸநேஶ்வரீ என்று பிரஸித்தியுள்ளவளாய், ஸர்வ லோகத்தையும் தாயொருத்தியாகவே ரக்ஷிப்பவளாய் விளங்குகிறாள். மிக ஸௌந்தர்யம் வாய்ந்தவளும், ஜ்யோதிர்மயமாய் விளங்குபவ ளும், ஆதி லக்ஷ்மியெனப் பிரஸித்தமானவளும், எல்லோ ருடைய உள்ளத்தில் வஸிப்பவளும், பிரஹ்ம விஷ்ணு ஈசன் இவர்களுக்குத் தாயாராகவுள்ளவளும் காமாக்ஷீ எனப் பிர ஸித்தமானவளுமான அந்தத் தேவியைத் தரிசித்துப் பரி பூர்ண பக்தியுள்ள பிரஹ்மா (கீழ்வருமாறு) ஸ்தோத்திரஞ் செய்தார்.

பிரஹ்மா :—

தேவி ! ஜகன்மாதாவே ! த்ரிபுர ஸுந்தரியே ! ஸ்ரீநாதனு கும் மஹா விஷ்ணுவின் ஸோதரியே ! ஸர்வ மங்கள ரூபி ணியே ! ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குவாயாக ! *(ஜய! ஜய!)

ஈஶ்வரியே ! கருணாரஸ ஸ்வரூபிணியே ! ஶ்ருங்கார ரஸத்திற்கு நாயகியே ! ஞானம் ஒன்றினால் மட்டும் ஸித்திக் கும் ஈஶ்வரியே ! வணங்கத்தக்க சரணங்களையுடையவளே ! கல்யாணியே ! (ஜய ! ஜய !)

அழிவற்று நித்யஸ்வரூபமாய் விளங்கும் லோக மாதாவே ! துதித்து வணங்குபவர்க்கு ஸகல ஸௌபாக்யங் களையும் அருள்பவளே ! ஹிமாசலனென்னும் பர்வதராஜனால் கொண்டாடத் தக்கவளே ! சங்கரரை மோஹிப்பிக்கச் செய் யும் காமநேத்ர முடையவளே ! (ஜய ! ஜய !)

எவள் தனது இச்சையால் அடிக்கடி இந்தப் பிரபஞ்சத் தில் ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்து அநுக்கிரஹிக் கின்றனளோ அந்தத் தேவியின் பொருட்டு நமஸ்காரம் !

---

*ஜய—எனில் எல்லாவற்றிலும் சிறந்தவளாய் விளங்குக என்று பொருள்.

ஒரு வர்ணத்துடன் மற்றொரு வர்ணத்தைச் சேர்த்தும், ஒரு ஆஸ்ரம தர்மத்தில் வேறொரு ஆஸ்ரம தர்மத்தைக் கலந்தும், ஸாங்கர்யத்தை யுண்டுபண்ணும் மஹாபாபிகளை எவள் கோரமான அஸ்த்ரங்களினால் நாசஞ் செய்கிறாளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

ஆகமங்களாலும் வேதங்களாலும் சாஸ்திரங்களாலும் ஹடயோகிகளாலும் எவள் அறியப்படாமல் தன்னு (ஞானத்தினு)லேயே அறியத் தக்கவளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

ரஹஸ்யமான வேதங்களாலும், வேதாந்தங்களாலும் தத்வமுணர்ந்த முநீஸ்வரர்களாலும் எவள் பரப்பிரஹ்மம் என்று அறியப்பட்டவளோ அந்தந் தேவிக்கு நமஸ்காரம்!

எவள் எல்லோருடைய உள்ளத்திலும் ஸாக்ஷிரூபிணியாய் இருந்தாலும் ஒருவராலும் அறிய முடியாத ஸூக்ஷ்ம விக்ஞான ரூபமுள்ளவளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எவள் பிரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், மஹேஸ்வரன், ஸதாசிவன் ஆகிய இவர்களால் ஸதா தியாநஞ் செய்யப்படுகின்றனளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

சிருஷ்டியாதி பஞ்ச காரணகிருத்யேந்திரர்கள் எவளுடைய ஆக்ஞையை நிறைவேற்றுகின்றனரோ அந்த ஸாம்ராஜ்ய ஸம்பதீஸ்வரியின் பொருட்டு நமஸ்காரம்!

எவளது மூச்சுக்காற்று வேதமோ, எவளது பார்வை பஞ்ச பூதங்களோ, எவளது புன்னகை சராசராத்மகமான உலகமோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எவளுடைய ஆணையால் ஆயிரம் பணமுடிகளுள்ள ஆதிசேஷன் அவனியைச் சுமக்கிறானோ, எவள் ஸர்வ ஜனங்களுக்கும் ஆதாரமானவளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எவளது ஆக்ஞையால் அக்நி ஜ்வலிக்கின்றதோ, ஸூர்யன் தபிக்கின்றானோ, காற்று வீசுகிறதோ, எவள் ஞானசக்தி வடிவமாய் விளங்குகின்றனளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

மஹர்ஷிகள் இருபத்தைந்து தத்வங்களையும் * ஐந்து மாயாகஞ்சுகங்களையும் எந்தத் தேவியின் வடிவமாகக் கூறுகிறார்களோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

சிவ, சக்தி, ஈச்வரர்களும், சுத்தவித்யையும், ஸதாசிவமும், எந்தத் தேவியினது கண் இமை கொட்டுவதால் உண்டானவர்களோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எவள் ஆசார்யனாகவும், பிரணவமாகவும், பிராணனாகவும், சித்ரூபமாகவும், பிரகாசிக்கின்றனளோ அந்த தேவிக்கு நமஸ்காரம்!

ஸர்வ பிராணிகளுக்கும் அந்தராத்மாவாகவும், பரமானந்த ரூபிணியாகவும், ஸ்ரீவித்யையாகவும் எவள் கருதப் படுகின்றனளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எந்தத் தேவியைப்பற்றி எல்லாச் சாஸ்திரங்களும் கானஞ் செய்கின்றனவென்று பண்டிதர்கள் கூறுகின்றனரோ எது அந்த அந்த சாஸ்திரங்களின் நியமரூபமாயுள்ளதோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

எவள் ஸர்வலோகங்களிலும் மணி மந்த்ர ஒளஷத ரூபமாக விளங்குகின்றனளோ தத்வோபதேச வடிவமான அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

தேச கால பதார்த்த வடிவமாயுள்ளவளும் உலகில் என்ன என்ன வஸ்து எப்படி எப்படியிருக்கிறதோ அந்த அந்த வடிவமாய் விளங்குபவளுமான அந்தத் தேவிக்கு நமஸ்காரம்!

---

*கலை, அவித்யை, ராகம், காலம், நியதி.

நிந்திக்கத் தக்க துச்ச வஸ்துக்களுக்கு எதிரிடையா யிருப்பவளென்றும், கல்யாண குணமுள்ளவளென்றும், லோகாதீதையென்றும் எவள் பிரஸித்தமாய்க் கூறப்படுகின் றனளோ அந்தத் தேவிக்கு நமஸ்காரம் !

இங்ஙனம் பிரஹ்மா ஸ்தோத்திரஞ் செய்து மஹா தேவியைப் பன்முறை நமஸ்கரித்துச் சரண மடைந்தனர். அவர் செய்த ஸ்தோத்திரத்தில் ஸந்தோஷ மடைந்தவளும், எல்லோருக்கும் வரமளிப்பவளுமான பரதேவதை வணங்கி நிற்கும் பிரஹ்மாவைப் பார்த்து "வரத்தை வேண்டிக்கொள்" என்று ஆக்ஞாபித்தாள்.

பிரஹ்மா :—"அம்மா! தங்களது தர்சனத்தினுலேயே கிருதார்த்தனுகிவிட்டேன்; ஸந்தேஹமில்லை; அங்ஙனமாயி னும், உலக நன்மையை நாடிச் சிறிது வேண்டுகின்றேன்; கர்ம பூமியான இவ்வுலகிலே பெரும்பாலும் ஜனங்கள் மூடர்களா கவே இருக்கின்றனர்; அவர்களுக்கு அருள்புரியத் தாங்கள் எப்போதுமிங்கு ஸான்னித்யம் செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, ஸ்ரீதேவியும் 'அப்படியே ஆகட்டும்' என்று அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தனள். பிறகு பிரஹ்மா, அந்தத் தேவியினுடைய அர்த்தாஸனத்தில் வீற்றிருப்பவரும், ஸ்ரீதேவியின் ஸோதரரும், செந்தாமரைக் கண்ணனுமான அச்சுதனைப் பணிந்து 'தாங்களும் இக் காஞ்சியில் எப்போதும் ஸான்னித்யத்துடனிருக்க வேண் டும்' என்று வேண்டினர். ஜனார்த்தனனும் 'அப்படியே செய்கிறே'னென்று கூறினர். பின்னர், சந்தோஷமடைந்த சதுர்முகன் மறுபடியும் மஹேஸ்வரர்களான அம்பாளையும் விஷ்ணுவையும் பார்த்து 'உங்களது ப்ரீதியால் சிவனும் இங்கே ஸான்னித்யத்துடனிருக்கும்படி செய்யுங்கள்' என்று கூறினர். உடனே ஸ்ரீ திரிபுராதேவியின் வலது புறத்திலிருந்து ஸர்வ வித்யைகளுக்கும் ஈசானனும், ஸர்வப் பிராணிகளுக் கும் ஈஸ்வரனும் ஸ்ருங்கார நாயகனுமான ஸாக்ஷாத் மஹாதேவன் மேலான காமேஸ்வரனுகத் தோன்றினர்.

ஸ்ரீ சிவகாஞ்சி ஸ்ரீ ஏகாம்ரநாதர் ஆலயம்.

பெரியகோபுரம்.



ஆலய உட்புறம்.

ஸ்ரீ அகஸ்தியராஸ்ரமம்
ஸ்ரீ அகஸ்தீஸ்வராலயம்.

ஸ்ரீ விஷ்ணு காஞ்சி
ஸ்ரீ வரதராஜஸ்வாமி ஆலயம்.

தக்ஷணமே ஸ்ரீ காமாக்ஷியினது நெற்றிக்கண் கடாக்ஷத்தின் சிறிது விலாஸத்திலிருந்து, மஹா பிரகாசமுள்ளவளும், ஸமஸ்தமான ம்ருங்கார வேஷங்களால் நிறைந்தவளும் மஹா ஸௌந்தர்யத்திற்குப் பிறப்பிடமானவளுமான மஹா கௌரி தோன்றினள்.

பிறகு, பிரஹ்மாவுடன்கூட ஸ்ரீபுண்டரீகாக்ஷன் மிக்க ஆதரவோடு ஆதி தம்பதிகளான கௌரீ மஹாதேவர்களுக்குக் கல்யாணத்தைச் செய்வித்தனர். இந்திரன் முதலான தேவர்களும், வஸு ருத்ரர் முதலிய தேவதைகளும், மார்க்கண்டேயர் முதலிய முனிவர்களும், வஸிஷ்டர் முதலிய முனீம்வரர்களும், ஸநக ஸநந்தனுதி யோகீந்திரர்களும், நாரதாதி தேவரிஷிகளும், வாமதேவர் சுகர் முதலிய ஜீவன் முக்தர்களும், யக்ஷர், கின்னரர், கந்தர்வர், ஸித்தர், வித்யா தரர், நாகர், கணங்களின் தலைவரான மஹாசாஸ்தா, துர்க்கை முதலிய மாதாக்கள், மற்றும் யார் யார் தேவர்கள் எனப் படுபவரோ அவ்வனைவரும் அஞ்ஜலி பந்தத்துடன் பத்ராஸன விமானத்திலுள்ள தேவியை நமஸ்கரித்தார்கள். பின், அதியற்புதமாயும் அதிமனோஹரமாயுமுள்ள ஒரு ஆலயம் பரமேசானிக்காக பிரஹ்மாவினுல் நகரத்திற்கு மத்தியில் மனத்தினுல் அமைக்கப்பட்டது. அங்கே பரதேவதையின் சகோதரனை ஸ்ரீவாசுதேவன் ஜலத்தை வார்த்துத் தாரா பூர்வகமாய்க் கௌரியைத் தத்தம் செய்ய மஹேம்வரன் அவளை மணந்துகொண்டான். அப்போது தேவ துந்துபிகள் முழங்கின; புஷ்பவர்ஷம் பொழிந்தது. ஜகத்பதிகளான தம்பதிகளின் விவாஹ மங்களத்தை வர்ணிக்க ஆயிரம்நாப் படைத்திருந்தாலும் யாவராலும் இயலாது. முதலாவதான இந்த ஸ்ரீமந்திரத்திற்கு வாயுமூலையில் பிரஹ்மாவால் மஹேம்வரனுக்கு ஒரு விசாலமான ஆலயம் அமைக்கப்பட்டது. ஸ்ரீகிருஹத்திற்கு ஆக்னேய மூலையில் விசித்திரமான விஷ்ணுவுக்கு மந்திரமொன்றும் அமைக்கப்பட்டது. இங்ஙனம் அங்கே மூன்று தேவதைகளும் ஸர்வதா ஸான்னித்யத் துடன் இருக்கின்றனர். இந்தத் தம்பதிகள் இருவரும்

ஸ்ரீமந்திரத்தைப் பிரதக்ஷிணஞ் செய்து * ஸம்பாவனை க்ருஹத்திற்கு வந்த உடனே பிரஹ்மாவும் விஷ்ணுவும் அவர்களின் அருகே சென்று ஸபையிற் கூடியுள்ள ஸமஸ்தமான பேர்களுக்கும் ஸந்தோஷத்துடன் வைதிக மந்த்ரங்களால் ஸத்காரம் (மரியாதை) செய்தனர்.

ஆதிலக்ஷ்மியான பரமேஸ்வரி (காமாக்ஷி) எல்லோரெதிரிலும் பிரஹ்மாவை வலது கண்ணாலும், விஷ்ணுவை இடது கண்ணாலும் நோக்கினள். உடனே அம்பாளின் கண்ணொளிக் கூட்டமாகிற கூட்டிற்குள்ளிருந்து வாணியும் லக்ஷ்மியும் தோன்றினார்கள். அவ்விருவர்களும் ஸ்ரீதேவியை நமஸ்கரித்துப் பத்தாஞ்ஜலிபுடர்களாக "ஜய காமாக்ஷி! காமாக்ஷி!" என்று உறக்கத்துதித்து நமஸ்கரித்தார்கள். கங்கையும் யமுனையும் மூர்த்திகரித்துப் பரதேவதையைச் சேவிப்பதற்காக அங்கு வந்து சேர்ந்தார்கள். தீர்த்தங்களுக்கு அதி தேவதைகளான மூன்றரைக்கோடி தீர்த்த தேவதைகளும் திரிபுராம்பிகையின் ஸேவைக்காக அங்கு வந்து சேர்ந்தனர். ஸரஸ்வதியும், மஹாலக்ஷ்மியும் இருபுறங்களிலும் நின்று சாமரம் வீசுகின்றனர். விலையற்ற ரத்னங்களாலிழைக்கப்பட்ட சலங்கைகளைப் புஜத்திலணிந்த அவ்விருவரும் ஆதிலக்ஷ்மியான காமாக்ஷி தேவியினது இரண்டு நேத்திரங்களிலிருந்துந் தோன்றியவர்கள். அவர்களைக்கண்ட ஸமஸ்த ஜனங்களும் பேராச்சர்ய மடைந்தனர். அதுமுதல் ஸ்ரீ தேவிக்கு கல்யாணி காமாக்ஷி என்னும் பெயர் வழங்கலாயிற்று. அந்தப் பெயரைக்கூறக் கேட்டவுடன் ஸ்ரீ தேவி மிகுந்த ஸந்தோஷமடைகின்றாள். காமாக்ஷி என்னும் மூன்று அக்ஷரங்கள் ஸர்வ மங்களத்திற்கும் காரணமானவைகள்.

ஜகதீஸ்வரியானவள் ஸரஸ்வதியை வேத வேதாந்தங்களின் கரைகண்டவரான பிரஹ்மாவினிடம் ஸதா வஸிக்கும்

---

* வரவேற்று உபசரிக்கும் இடம்.

படி கட்டளையிட, அந்த வாணீஸ்வரியும் கங்காதேவியினிடம் (தனது) சாமரத்தைக் கொடுத்துவிட்டுச் சகல தேவர்களும் பார்த்துக்கொண்டிருக்கையில் பிரஹ்மாவின் முகத்தில் பிரவேசித்தனள். ஸந்தோஷமுள்ள மஹாலக்ஷ்மியான காமாக்ஷியால், அங்ஙனமே ஆக்ஞாபிக்கப்பட்ட லக்ஷ்மியும் அன்புடன் விஷ்ணுவினது வக்ஷஸ்தலத்தில் நித்யவாசஞ் செய்யச் சென்றனள். லக்ஷ்மீநாராயணர்களான அந்தத் தம்பதிகள் பக்தியுடன் தேவியினது ஆக்ஞையைச் சிரஸால் வஹித்து, மஹா திரிபுரஸுந்தரியை நமஸ்கரித்து, தேவியினது ஆவரண தேவதைகளாகத் தாங்களிருக்க வேண்டுமென்று மறுபடியும் வேண்டினர். "அப்படியே" என்று திரிபுரஸுந்தரியும் வரமளிக்க, லக்ஷ்மீ நாராயணர்கள் அந்தப் பாக்யத்தையும் பெற்றனர். அச்சுதர், தனது பத்னியைத் தனது இடது புறத்திலமைத்துக்கொண்டு தேவிக்கு வலது புறத்தில் தான் அமர்ந்தனர்.

பின்னர் திரிபுரஸுந்தரி மஹா கௌரியைப் பார்த்து "வத்ஸே! நீ ஸதா இங்கு வாஸஞ் செய்" என்று ஆக்ஞாபித்து அவளையும் அங்குப் பிரதிஷ்டை செய்துவிட்டு எல்லாத் தேவர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் போது அங்கேயே ஸ்ரீதேவி மறைந்தனள். உடனே கௌரி, மஹா தேவிக்குச் சமமான அழகிய பிம்பத்தைத் திவ்ய உலோஹத்தினல் செய்தனள். அது, பால ஸூர்யனைப் போலும் செங்கழுநீர்ப் புஷ்பங்களைப் போலும் சிவந்த இரண்டு சரணங்களுடையதும், இனிமையாய்ச் சப்திக்கின்ற பொற் சதங்கைகளையுடையதும், மின்னல்போல் பிரகாசிக்கும் அழகிய வஸ்திரமுள்ளதும், அழகிய மணிமயமான ஒட்டியாணமுடையதும், ரத்ன கங்கணங்களும் கேயூரமுமணிந்த இருகரங்களுள்ளதும், முத்து வைடூர்ய மாணிக்கங்களாலிழைக்கப்பட்ட (உதரபந்தனம்) இடைச்சங்கிலிகளுள்ளதும், மூன்று மடிப்புக்களுடன் கூடிய இடையுள்ளதும், கங்கா நதியின் சுழல் போன்ற நாபியுள்ளதும், சந்தனக் குழம்பாலும் கற்பூர குங்குமங்களாலும், அலங்கரிக்கப்பட்ட

ஸ்தனங்களுள்ளதும், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் ரவிக்கையோடு கூடியதும், ஸந்தோஷத்தினால் இடுப்பில் வைத்த தாமரை போன்ற கையோடு கூடியதும், மாணிக்க சகலங்களாலாகிய மோதிரங்களாலலங்கரிக்கப்பட்டதும் அழகிய தாமரையையுடைய வலது கரத்தோடு கூடியதும், கால்வரை தொங்கும் திவ்யாபரண ஜாலங்கள் நிறைந்ததும், அழகிய ஆபரண ரத்னகிரணங்களால் எட்டுத்திசைகளையும் பிரகாசப்படுத்துவதும், உருக்கிய ஸ்வர்ணத்தாலாகிய ரத்ன சங்கிலியுள்ளதும், மங்கள ஸூத்திரத்திலுள்ள ரத்ன கிரணங்களாற் சிவந்த கழுத்தையுடையதும், பாளீவதம்ஸம் மாணிக்ய தாடங்கம் இவைகளால் அழகானதும், ஜபாபுஷ்பம் போலும், பவழம்போலும் அழகிய சிவந்த உதடுகளையுடையதும், மாதுளம் முத்துக்களைப்போன்ற தந்த வரிசையுள்ளதும், மந்தஹாஸத்தாலழகிய கன்னங்களையுடையதும், உபமானமே சொல்ல முடியாத கம்பீரமான புல்லாக்குமணியால் அழகானதும், மலர்ந்த எள்ளுப்புஷ்பம்போல் எடுப்பான நாஸிகையுள்ளதும், கொஞ்சம் மலர்ந்து அழகாய் விளங்கும் கருநெய்தல் புஷ்பம் போன்ற கண்களுள்ளதும், மன்மதனது பாணம் போன்ற அழகிய புருவமுள்ளதும், தலையில் அர்த்தசந்திரனுள்ளதும், பூர்ண சந்திரன் போன்ற முகம் உள்ளதும், கனமான வாஸனை நிறைந்த கஸ்தூரீ திலகத்தால் விளங்குவதும், மதங்கொண்ட வண்டுகள்போல் தொங்கும் முன்மயிருள்ள முகாரவிந்தமுள்ளதும், பாரிஜாத புஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சொருக்கை உடையதும், விலையற்ற ரத்னங்களாலிழைக்கப்பட்ட கிரீடத்தால் பிரகாசிக்கும் அழகிய சிரஸுள்ளதும், க்ரீடாலக்ஷ்மிக்கு ஸர்வ அழகும் வாய்ந்த ஒரொப்பற்ற இருப்பிடமானதுமான அந்தத் தேவியின் பிம்பம் விளங்கிற்று.

சிவனும், விஷ்ணுவும், ஆங்குள்ள ஸமஸ்த ஜனங்களும் 'தேவியினது அந்தப் பிம்பத்திற்கும் தேவிக்கும் யாதொரு பேதமுமில்லை' என்று எண்ணினார்கள். ஸ்வதந்த்ரையான தேவியும் அந்தப் பிம்பத்தில் பிரவேசித்தனள். அதை

மிகுந்த ஆச்சர்யத்துடன் ஸகல தேவர்களும் பார்த்தவண்ணமாயிருந்தார்கள். தானே இத்தகைய பிம்பத்தைக் கற்பித்து அதில் அநுப்பிரவேசித்து நிற்கும் தேவியைப் பார்த்து பிரஹ்மா மறுபடியும் நமஸ்கரித்து.—

"பரிபூர்ண பிரஹ்மத்தின் மஹாசக்தியே! திரிபுரஸுந்தரியே! காமாக்ஷி என்னும் பிரஸித்தமான பரசிவையே! நும்பொருட்டு நமஸ்காரம். ஹே ஜனனீ! யான் சிறிது விஞ்ஞாபனம் செய்கிறேன்; அருள் புரிந்து கேட்பாயாக. ஹே நித்யகல்யாணியே! மஹா கௌரிக்கும் மஹேஶ்வரருக்கும் இந்த க்ஷேத்திரத்தில் பிரதி வருஷமும் ஜகத்தின் க்ஷேமத்திற்காகவும் தேவர்கள் தொண்டுபுரிவதற்காகவும் விவாஹம் நடைபெற அருள்புரியவேண்டும். மஹாதேவி! உலகத்திலுள்ள அவிவேகிகளுங்கூட அவ்விவாஹோத்ஸவத்தைத் தர்சித்துத் தேவியைப் பக்தியோடு வணங்கி நற்கதி யடையட்டும்." என்று வேண்டிக்கொண்டனர்.

இதைக்கேட்டு தேவி ஆகாசவாணியினால் "அப்படியே ஆகுக" என்ற பதிலளித்து எல்லோரையும் தங்கள் தங்கள் இருப்பிடஞ்செல்ல உத்தரவிட்டனள். இதைக்கேட்டு அவ்வெல்லோரும் பரதேவதையின் உத்தமமானதும் அற்புதமானதுமான சிலத்தை அடிக்கடி நினைத்து நினைத்து தேவியை நமஸ்கரித்து, வந்தபடியே தமது இருப்பிடஞ்சென்றனர். ஆனந்தமடைந்த சதுர்முகன், முகுந்தனுடனும் சிவனுடனுங்கூட ஸ்ரீமந்திரத்தின் மண்டபத்தில் அந்தத்தேவியை அமைத்து வைதிக ஸ்தோத்திரங்களால் ஆராதித்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்கள். உடனே தேவி ஆகாசவாக்கினால் "ஓ சதுர்முகப் பிரஹ்மாவே! நீ விஷ்ணுவையும் சிவனையும் அவரவர்க்குரிய இடங்களிலமர்த்திவிட்டு ஊக்கத்துடன் த்ருடசித்தனாய் ஆண்டுதோறும் வந்து இக்காஞ்சியில் ஸேவைசெய். ஸ்ரீபுரத்தினிடையிலே அமைந்த ஸாக்ஷாத் ஸ்ரீகாமகிரி பீடமானது தானே வ்யக்தமானது; இது ஸ்ரீ நாதர், மித்ரேசர், அம்பாள் இவர்களுடன் கூடியது;

இடது புறத்தில் லக்ஷ்மியாலும், வலது புறத்தில் மாதவனு லுன் ஸேவிக்கப்படுவது. சிதாநந்த வடிவமாய் விளங்கு வதும் சர்வபீடங்களுக்கும் அதிதேவதையாயுள்ளதும், காணப் படாத ஆகார (ரூப) முள்ளதும், ஸர்வத்திற்கும் ஆதி காரணமாயுள்ளதுமான அந்தப் பீடத்தை விதிப்படி பூஜை செய்! பூலோகத்தின் க்ஷேமத்திற்காக மனிதர்கள் * மநோ ஹாமான நக்ஷத்திரத்தில் தேங்காய்ப் பழங்களினுல் அர்ச்சிக் கப்போகின்றனர். ஹே பிரஹ்மன்! இச்சமயம் நீ விதிப் படி ஸந்தோஷமாக அப்பீடத்தைப் பூஜித்து, நான் கூறிய மற்றவைகளையுமியற்றி, உனது சத்யலோகத்தைக் காத்துவா!" என்று கூறினள். இங்ஙனம் தேவியால் உத்தரவிடப்பட்ட பகவான் சதுர்முகன், தேவி கூறிய அனைத்தையுஞ் செய்து முடித்து, ஹ்ருதயத்தில் தேவியைத் தியானித்துத் தன்னிருப் பிடஞ் சென்றூர்

அகஸ்தியரே! இங்ஙனம் ஸ்ரீ காமாக்ஷி தேவியினது செய்கையை உள்ளபடி உமக்கு உரைத்தேன். இந்தக் காமாக்ஷியை ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி என்றே யறிவாயாக. இந்தச சரிதத்தைக் கேட்பவரும் படிப்பவரும் எளிதிற் போகத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள். புத்தியில் பிருஹஸ்பதிக்குச் சமமாய் விளங்கி ஸகல வித்யைகளுக்கும் அதிபதியாவார்கள். பக்தரிடம் பேரன்பு பூண்ட ஸ்ரீமந் நாராயணனை யான் நீண்டகாலம் தபஸினுல் ஸந்தோஷப் படுத்தினேன். அந்தப் பிரபு கிருபையால், புத்திரனை எனக்கு ஸாரூப்யமுக்தியை யளித்து, மஹாத்ரிபுரஸுந்தரி யின் பெருமையையும் உபதேசித்தருளினர். அவருடைய அநுக்ரஹத்தால் யான் காமாக்ஷியின் மஹிமையில் சிறிது அறிவேன்; இல்லையேல் என்னுல் அறிய முடியாது. ரஹஸ்யமான மந்த்ரம் போல் ஒரு தத்துவத்தைக் கூறுகின் றேன்; கேள்! அந்தத்தேவியினது மாயையால் மோஹமடைந்த

---

* லக்ஷ்மியின் மனோஹரனுகும் விஷ்ணுவிற்குப் பிரியமான சிரவண நக்ஷத்திரத்தில் என்றுங் கூறலாம்.

பிரஹ்மா விஷ்ணு ருத்ரன் என்னும் த்ரிமூர்த்திகளும், நான்காவதான ஈஶ்வரனும், ஸதாசிவனுங்கூட அறியாதவர்கள் எனில் ஸாதாரண தேவதைகள் எப்படியறிவார்கள்? ஆனால், ஸச்சிதாநந்தவடிவனாய் ஸர்வ ஸ்வரூபியாயுள்ள ஸதாசிவன் மாத்திரம் அவளதருளால், ஒன்றைச் செய்யாமலிருக்கவோ, அன்றி அதை வேறுவகையாகச் செய்யவோ சக்தியுள்ளவனாகின்றான், ஸத்தாயும் ஏகமாயும் சித்தாயும் உள்ள அதுவே நான் என்று எண்ணிக்கொண்டிருக்கிற மஹேஶ்வரன் அந்தத் தேவியினது மாயையால் மயங்கி ஸ்வாதீனமற்றவனாய்ப் பிணமானார். அந்தத் தேவியே இவர்களுடைய உத்பத்திக்கும் லயத்திற்கும் காரணமானவள். இங்கே சில விசேஷங்கள் கூறவேண்டியிருக்கின்றன. அவற்றையுங் கூறுகிறேன்; கேள்! பிரஹ்மாதி மூவர்களுக்கும் நான்காவதான ஈஶ்வரனே பிரபு. அவரையும் சேர்த்து நால்வர்க்கும் ஆதிகர்த்தா ஸதாசிவனாகும். இந்தப் பரமரஹஸ்யமானது நன்கு கூறப்பட்டது.

பரதேவதையின் அற்புதமான சரித்திரத்தை மறுபடியும் கூறுகிறேன்: ஸாவதானமாய்க் கேட்பாயாக.

முப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று (சுலோகங்கள் 127)

முப்பத்தாறும் அத்தியாயம்.

த்ரிபுரஸுந்தரி தசரதனுக்கு புத்ரவரமளித்தல்.

அகஸ்தியர்:—பேசுபவரில் சிறந்தவரே! ஸ்ரீ காமகோஷ்ட பீடத்திலுள்ள காமாக்ஷி என்னும் த்ரிபுரஸுந்தரி என்ன என்ன திருவிளையாடல்களைச் செய்தாள் என்பதையுங் கேட்டறிந்தேன். பூமண்டலத்தில் தங்கி அவள் எதையெதைச் செய்கிறாள் என்பதைக் கூறுங்கள்.

ஹயக்ரீவர் :—அகஸ்தியரே! காமபீடத்திலிருந்தாலும் அந்தத்தேவி எல்லோருடைய உள்ளத்திலும் விளங்கி அவரவர்களுடைய கர்மாவிற்கேற்றபடி மனிதர்களுக்குப் பயனைத் தருகிறாள். ஒருவன் ஒன்றை நினைப்பதும், ஒருவன் தன்னிஷ்டப்படி ஒன்றைச் செய்வதும், ஏதேனும் ஒரு பொருள் உலகிலிருப்பதும் ஆகிய எல்லாம் அவளுடைய செயலே. த்ரிபுரா முதலிய சக்திகளும் இவளுடைய அவதாரங்களேயாம். இந்த மஹாலக்ஷ்மியே முன்னே பிரஹ்மாதி மூன்று புருஷர்களுக்கும் அவர்களது மூன்று சக்திகளுக்கும் இருப்பிடமான மூன்று அண்டங்களைப் படைத்தாள். ஓரண்டத்திலிருந்து அம்பிகையும் மஹா விஷ்ணுவும் பிறந்தனர். மற்றொன்றிலிருந்து லக்ஷ்மியும் பிரஹ்மாவும், மூன்றாவதிலிருந்து வாணியும் சிவனும் தோன்றினார்கள். மஹேஸ்வரி, லக்ஷ்மியை முகுந்தனோடும் பார்வதியைப் பரமசிவத்தோடும், ஸரஸ்வதியைப் பிரஹ்மா வுடனும் சேர்த்து வைத்தாள். அன்றியும், பிரஹ்மனை யுலகைப்படைக்கவும், வாசுதேவனை அதைக் காக்கவும், முக்கண்ணனை அவ்வுலகை ஒடுக்கவும் உத்தரவிட்டாள். அம்மூவரும், அன்புடன் அவளைத் தியானஞ் செய்து கொண்டு, முறையே பிரஹ்ம லோகத்திலும், வைகுண்டத் திலும், கைலாஸத்திலும் வஸிக்கின்றனர்.

ஒருஸமயம் பார்வதிதேவி அழகிய கைலாஸ சிகரத்தில் விளையாடிக்கொண்டு பரமசிவனது இருகண்களையும் மூடினாள். அவருக்கு சந்த்ரஸூர்யர்களே கண்களானதால் மூவுலகும் ஒளியையிழந்து இருள் சூழ்ந்தது. பிறகு உலகில் தேவகார்யம் பித்ருகார்யம் எல்லாம் நின்றுவிட்டன. என்ன செய்வதென்று தெரியாமல் உலகம் திகைத்தது. அதைப் பார்த்துப் பகவான் ருத்ரர் பார்வதியை நோக்கி "தேவி! என் கண்களை மூடிய தால் நீ மஹாபாபம் செய்தவளானாய். முனிவர் தவத்தை விட்ட னர். வைதிகர்களது யக்ஞம் நின்றுபோய்விட்டது. ஸகல வைதிக கர்மங்களும் உன்னால் நாசஞ்செய்யப்பட்டன. ஆத லின் அப்பாவம் ஒழிவதற்குக் கடினமாகத் தவஞ்செய்.

காசி சென்று சிறிதுகாலம் விரதம் அனுஷ்டித்துப்பின், காமாக்ஷிதேவி பிரகாசிக்கும் காஞ்சிமாநகரஞ்செல். நித்திய மாயுள்ளவளும், ஸர்வபாபங்களையு மகற்றவல்லவளுமான சிவையை நீ ஆராதனை செய். துளஸியை எதிரிலே வைத்துக்கொண்டு கம்பா எனும் தீர்த்தக்கரையின் மீதமர்ந்து தவஞ் செய்'' என்று தேவிக்கு உத்தரவளித்து மஹாதேவர் அங்கேயே மறைந்தார்.

கணவன் கருத்திற்கிசைந்த தேவி அங்ஙனமே செய்த னள். நீண்டகாலம் தவத்தால் இளைத்தவளும், வேறிடத்தே மனஞ் செல்லாது தவஞ் செய்பவளுமான பார்வதி தேவியின் முன்னிலையில் காமாக்ஷிதேவி பிரத்தியக்ஷமாகி "குழந்தாய்! உனது உக்ரமான தவத்தால் யான் ஸந்தோஷமடைந்தேன்" என்றாள். உடனே பார்வதி கண்களைத் திறந்து பார்த்துத் தன்னெதிரே பதினாயிரம் பாலஸூர்யர்களைப்போற் பிரகாசிப் பவளும், கிரீடம் ஹாரம் கேயூரம் கடகம் முதலிய ஸர்வ ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டவளும், பாசம் அங்குசம் கரும்புவில் புஷ்பபாணங்கள் இவைகளைக் கரங்களிலேந்திய வளும், கிரீடத்திலுள்ள சந்த்ரகலையினால் மிக அழகியவளும், பிரஹ்ம விஷ்ணு ருத்ர ஈசான ஸதாசிவர்களாகிய இவர்களுக்கு அந்தந்த ஸ்தானங்களை யளித்தவளும், ஸகுணப் பிரஹ்ம மென்றும் நிர்க்குணப் பிரஹ்மமென்றும் அழைக்கப்படு பவளும், (சப்தம், அர்த்தம் என்னும்) இருவகையான பிரபஞ்ச ஸ்ருஷ்டிக்குக் காரணமானவளுமான ஸ்ரீ மஹா ராக்ஞியைப் பார்த்தனள். ஆநந்த பாஷ்பம் பெருக, உட லெல்லாம் மயிர்க்கூச்சலெடுக்கக் கண்கள் மலரப் பார்வதீ தேவியானவள் சண்டிகா, மங்களா முதலிய தன் தோழி களுடன்கூட ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து வலம் வந்து காமாக்ஷியுடன்கூட ஐக்கிய ஸ்வரூபமுள்ளவளாய், வணக்கத்துடன் மறுபடியும் நமஸ்கரித்தாள். மஹாத்ரிபுர ஸுந்தரீதேவி அவளைக் கருணையுடன் பார்த்து இரு கரங் களாலும் அன்புடன் தழுவிக்கொண்டு பின்வருமாறு கூறி னள்.

வத்ஸே! ஸ்வஸ்தானத்திலிருக்கும் ருத்ரனுகும் உனது பர்த்தாவை நீ அடைவாயாக. உலகை ரக்ஷிக்க நீ எனது ஆணையைப் பின்பற்று. நான், நீ என்னும் பேதமேது? நீயே தான் நான்! இதில் சற்றும் ஐயமில்லை! உனக்குப் பாப மேது! கல்யாணியே! நீ பாபங்களை வேருடன் அறுப்பவ ளல்லவா! யோகீந்திரர்கள் உன்னையே பிரஹ்மரூபிணீ என்று கூறுகின்றனர். ஸாதாரணமானவரைப்போல் நடிப்பது லீலாமாத்திரமே அல்லவா?' இங்ஙனம் கூறிய மஹாராக் ஞியைப் பார்த்து ஸர்வமங்களையான அம்பிகை பக்தியுடன் பணிந்து பரம ஸந்தோஷமடைந்தனள். மஹர்ஷே! இங்ஙனம் பார்வதி தேவி ஸ்துதிசெய்து கொண்டிருக்கும்போது, ஸந்தோஷம் நிறைந்த அவளது ஹ்ருதயத்திலே அந்த பராசக்தி நுழைந்தனள். இதைக்கண்டு பரமாச்சர்ய மடைந்த தேவி அடிக்கடி அதையே சிந்தித்து, இது கனவா அல்லது ப்ரமமா? என எண்ணி, நாற்புறங்களிலும் பார்வையைச் செலுத்தினுள். இதைக்கண்டு ஆச்சர்யங்கொண்ட ஜயா, விஜயா என்னும் இரண்டு தோழிகள் தேவியை வணங்கத் தெளிந்த முகமுள்ள தேவியானவள் அவர்களை நோக்கி, பிரியே! இதுவரை எங்கு சென்றிருந்தீர்கள்? நான் காமாக்ஷி யைத் தரிசித்தேன். நீங்கள் தரிசித்தீர்களா? எனக் கேட்ட னள். இதைக்கேட்டு மலர்ந்த கண்களையுடைய அவ்விருவர் களும் பூஜைக் கேற்றதான புஷ்பங்களைத் தேவியினெதிரே வைத்துவிட்டு 'அம்மா! தாங்கள் தர்சித்தது உண்மையே. நாங்களும் தேவியைத் தர்சித்தோம்! அது கனவல்ல! வெறுந்தோற்றமும் அல்ல! உண்மையே! காமாக்ஷி உமது உள்ளத்திலே புகுந்தனள்' என்று கூறி மிகுவிநயத்துடன் வணங்கி தேவியின் இருப்புறங்களிலும் அமர்ந்தனர்.

இதனிடையில், பார்வதியைப் பிரிந்ததனுல் உண்டான விரஹதாபத்தால் பீடிக்கப்பட்டவரான பரமசிவன் காஞ்சியி லுள்ள ஏகாம்ரம் என்னும் மாமரத்தடியில் அமர்ந்து அந்தப்பார்வதீ தேவியை யடையும்பொருட்டு ஜிதேந்திரிய ராய்க் காமாக்ஷியைத் தியானஞ் செய்தனர். ஸ்ரீ வித்யாரூபிணி

யான அந்தப் பரதேவதை அன்புடன் அசைவற்றுத் தியானம் செய்யும் சிவனெதிரிற்றோன்றி 'மன்மதன் கொழுப்பை யடக்கியவரே! தியானம் செய்தது போதும்; நிறுத்தும்; எனதாக்ஞையால் என் வசத்திலிருக்கும் பார்வதியை மறுபடியும் ஏற்றுக்கொள்ளும்! ஏகாம்ரமென்னும் பெயருள்ள எனது பீடத்தில் எப்போதும் வஸித்துக் கொண்டிரும். எனது பிரீதியின் பொருட்டு நீரே வந்து எனது ஸன்னிதியிலிரும்! கம்பா நீரத்தில் வஸிக்கும் கௌரிக்கு அநுக்ரஹஞ் செய்யும். அவளது சேர்க்கையாலும் பிரிவாலும் ஏற்பட்ட இருவித காமங்களையும் விரைவில் விட்டு விடும்' என்று கூறி தேவி சிவனுடைய உள்ளத்திலே மறைந்தாள். தீரனான சிவன் ஸந்தோஷத்துடன் எழுந்து விரைவாக தேவியினருளைப் பெற்று ஸகல தேவர்களாலும் ஸேவிக்கப்படுபவளும் பிரபஞ்சகாரணமுமான அந்த திரிபுரஸுந்தரியையே தியானம் செய்தனர். கம்பாநீரத்தில் பகவான் அன்புடன் தன்மடி மீதமர்ந்திருந்தவளாகிய தேவியை விதிப்படி விவாஹம் செய்து கொண்டனர். பின்னர், சிவன் தேவியை வ்ருஷபவாஹனத்தி லேற்றித்தானும் அதிலமர்ந்து கைலாஸஞ் சென்றார். முனிவரே! மற்றுமோர் விஷயத்தைக்கேளும்! ஆதிலக்ஷ்மியான தேவியின் மஹிமையைக் கூறுகிறேன்.

ஒரு ஸமயம் பிரஹ்மஸ்பையில் மும்மூர்த்திகளும், திக்பாலர்களும் இதர தேவர்களும், ஸநகாதியோகிகளும், நாரதாதி தேவர்ஷிகளும், வஸிஷ்டராதி தபஸ்விகளும் கூடியிருந்தார்கள். அப்போது, பிரஹ்மனும், சங்கரனும் ஒரே மாதிரியாக ஐந்து முகங்களுடன் விளங்கினதினால், அச்சபையிலுள்ளவர்களுக்கு 'யார் பிரஹ்மா? யார் சங்கரர்?' என்று கண்டு அறிய முடியாமல் ஒருவரையொருவர் வினவிக்கொண்டிருந்தனர். இவ்வாறு வினவிக்கொண்டிருக்கையில் பகவானான சிவன் திடீரென மறைந்தார். அப்போது மாயையால் மோஹிக்கப்பட்டவர்களான பிரஹ்மாவுக்கும் நாராயணனுக்கும் யார் பிரஹ்மம் என்னும் விஷயத்தில் விவாதம் ஏற்பட்டது. நாராயணன் பிரஹ்மனைநோக்கி "நீர் என்னுடைய நாபிக்

கமலத்தில் தோன்றியதால் எனது புத்திரனாகிறீர் ஆதலி னால் நான்தான் சிருஷ்டிகர்த்தா'' என்றும், பிரஹ்மாவானவர் ''எனது நாமம் பிரஹ்மத்தின் பெயராகவே இருத்தலால் நான்தான் பிரஹ்மம். நீரும், ருத்ரரும் சிருஷ்டி கர்த்தா வான என்னுடைய புத்திரர்கள்'' என்றும், இருவரும் இவ் வாறு வாதம் செய்துகொண்டிருக்கும்போது, அவ்விருவர் களுக்குமிடையில் தனது மஹிமையையும், தானே பிரஹ்மம் என்பதையும் காட்டிக்கொண்டு ஜ்யோதிர்மயமான ஒரு ஸ்தம்பமாகப் பரமசிவன் தோன்றினார். இது ஈசன் செயல் என்று மஹா விஷ்ணு பேசாதிருந்தனர். ஐந்து முகங்கள் கொண்ட பிரஹ்மா அவரை அவமதித்தார். அந்தப் பிரஹ் மாவின் சிரஸின் மீது ஜ்யோதிஸ் சக்ரம் காணப்பட்டது. அதன் மத்தியில் உமையுடன் சங்கரன் தோன்றினார். அப் போதும் லக்ஷியஞ் செய்யாமல் பிரஹ்மா அந்தச் சக்ரத்தை மேலே தூக்கி எறிந்து அவமதித்தனர்.

விஷ்ணு மௌனமாயிருப்பதையும் பிரஹ்மன் அவமதிப் பதையும் கண்டு த்ரிபுரனை எரித்த சிவன் சினங்கொண்டார். சிவகோபத்திலிருந்து பைரவர் தோன்றிக் கடுஞ்சினத்துடன் பிரஹ்மனது சிரங்களில் ஒன்றை நகத்தால் கிள்ளினார். அதைக் கண்டு எல்லோரும் பயந்து, ஹா! ஹா! எனக் கதறிக்கொண்டு ஓடினர். நகத்தி லொட்டிக்கொண்ட பிரஹ் மாவினது கபாலம் (சிரஸ்) பைரவர் கையிலிருந்து எவ்வளவு உதறியும் விழவில்லை. அந்த பிரஹ்மஹத்தி பாபம் நீங்கு வதற்குப் பைரவர் பூலோகத்தில் ஸகல புண்ய தீர்த்தங்களுக் கும், கங்கை முதலிய நதிகளுக்கும் சென்றார். கபாலம் கபாலியினது கரத்தைவிட்டு நீங்கவேயில்லை. ஆதலின் கவலையடைந்தவராய்ப் பரம நிராசாகவும், முகத்தில் தேஜஸ் அற்றவராகவுங் காணப்பட்டார். வெகுகாலமான பின், அவர் பிரஹ்மா முன்னம் உபாஸித்து ஸித்திபெற்றதான காஞ்சிக்கு வந்தார். அங்கு பிக்ஷை எடுத்துக்கொண்டு பராசக்தியை ஸேவித்து வந்தார். பஞ்சலக்ஷணம் பொருந்திய பஞ்சதீர்த் தத்தில் பிரதிதினம் ஸ்நானம் செய்து உன்மத்தனைப்போல்

திரிந்துகொண்டு சிறிதுகாலம் உக்ரமாக விரதம் அனுஷ்டித்தார். காஞ்சிக்ஷேத்ர வாஸத்தினல் அவரது மனம் சுத்தமாயிற்று. ஸகல பாபங்களும் ஒழிய, ஸ்ரீ தேவியை மனதிலே ஆவாஹனம் செய்து இடதுபுறம் லக்ஷ்மியாலும் வலதுபுறம் விஷ்ணுவாலும் ஸேவிக்கப்படும் காமகோஷ்டத்திற் கெதிரே தங்கினர். சுத்த மனத்துடன் ஆதிலக்ஷ்மியினது பாத கமலங்களைத் தியானம் செய்தார். காற்றில்லாத விடத்தின் (நிவாத) தீபம்போலும், அலையில்லா ஸாகரம்போலும் அவர் வாயுவை அடக்கி அசைவற்று நின்றார். அன்றியும் அவர் தைலதாரைபோல் இடைவிடாமல் ஸ்ரீ தேவியைத் தியானம் செய்தார். இவரைப்போல் அப்படி ஸமாதியிலிருக்கப் பிரஹ்மனும், விஷ்ணுவாலும் ஸித்தராலும், ஸநகாதிகளாலும், சுகர் முதலியவர்களாலும் இயலாது.

பிறகு பிரபாமண்டலத்திலிருப்பவளான தேவி பிரஸன்னமாய்ப் பாதிராத்ரியில் வாங்மயமாயிருந்து "ஸ்ரீ கண்ட! ஸர்வ பாபங்களையு மகற்றுபவனே! உனக்கு ஏது பாபம்? நீ என் வடிவினனல்லவா? உனக்கேது உடல்? இதையெல்லாம் நீ லோகாசாரத்தை யொட்டி இங்ஙனம் நினைத்துக் கொண்டிருக்கின்றனை. நாளை இந்த பிரஹ்மஹத்தியிலிருந்து ஒரு க்ஷணத்தில் விடுபடுவாய்; என்று கூறி ஸிம்ஹாஸநேஸ்வரி மறைந்தனள். பைரவரும் தேவியின் தர்சனத்தினல் ஸந்தோஷமடைந்து தேவியையே தியானம் செய்து க்ருதார்த்தனகி மிகுதி இரவைக் கழித்தனர். காலையிலெழுந்து பஞ்ச மஹாதீர்த்தத்தில் நீராடி ஸந்த்யையை முடித்துக் கையிலுள்ள கபாலத்தை உதறினர். அது நீங்காமலிருப்பதைக் கண்டு மிக்க துன்பமடைந்து "இரவில் பார்த்தது கனவா? மானஸிக தோற்றமா?" என்று அடிக்கடி சிந்தித்துக் கலங்கினர். தீரரில் சிறந்தவராதலால் தானே அந்தச் சோகத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு துளஸீமண்டலத்தைப் பணிந்து பூஜித்து அதனெதிரில் நின்று புலன்களையடக்கி மறுபடியும் ஸமாதியிலமர்ந்தனர். ஒருயாம காலம் கழிந்தபின், தேவி மறுபடியும் பிரத்யக்ஷமாகி "சம்போ!

போதும் ஸமாதி! இந்தத் தீர்த்தத்தில் முழுகு" என்று கூறி மறைந்தனள். இதைக்கேட்டு மறுபடியும் பைரவர் சிந்திக்கலானார். 'இது மாயையோ; கனவோ? நான் என்ன செய்வேன்! நாளைய தினம் பிரஹ்மஹத்தியிலிருந்து ஒரு க்ஷணத்தில் விடுபடுவாய் என்றாளே தேவி! இன்று ஓர் யாமமும் சென்றதே! இஃதெல்லாம் பொய்யேயாம்' என அதிகமாகச் சிந்தை நொந்து பகவான் நிற்க, மறுபடியும். "இங்கே மூழ்கு" என்று ஒரு கர்ஜனை கேட்டது. இதைக் கேட்ட பைரவர் ஸந்தேகத்தை யறவே விட்டொழித்து இது ஸத்யமேயாமென நிச்சயித்து, அந்தத் தீர்த்தத்தில் மூழ்கினார். மூழ்கி மேலுக் கெழும்போது கங்கையில் எழுந்தார். அங்கே காசிமாநகரைக் கண்டு இஃதென்ன ஆச்சர்யம்? என்றெண்ணி, ஒரு முகூர்த்தம் பேசாதிருந்தார். அப்போதும் பிரஹ்மகபாலம் அகலவில்லை. ஸூர்யனது தாபம் நெற்றியை யெரிக்க ஆரம்பித்தது. ஜிதேந்திரியனான சிவன் வழக்கப்படி நகரில் நுழைந்து வீதிகளில் சில வீடுகளிற் சென்று பிக்ஷை யெடுத்தார். ஒரு வீட்டிலே ஸ்ரீ காமாக்ஷிதேவியைப் போன்ற ஓர் உத்தமி ஜ்யோதிர்மயமான பிக்ஷையை யளித்து விரைவாக மறைந்ததைப் பைரவர் கண்டனர். உடனே அந்தக்ஷணத்திலேயே அவரது நகத்திலிருந்து பிரஹ்மகபாலம் நழுவி வீழ்ந்தது. இந்த அத்புதத்தைக் கண்ட பைரவர் பேராச்சர்யமடைந்து ஸ்ரீகாமாக்ஷியின் பிரபாவத்தை மிக மிகக் கொண்டாடினர். 'அழகிய காஞ்சி மிகச் சிறந்தபுரியாகும்; புண்யமான கம்பா நதி மிகச் சிறந்ததாகும்; இங்கு பிக்ஷையை யளித்தவள் அந்தக் காஞ்சிகாமாக்ஷிதேவியே' எனக் கொண்டாடினர். இங்ஙனம் தேவியினது பெருமையால் ஸங்கடத்தினின்றும் விடுபட்ட பைரவர் பராசக்தியைப் போற்றிக்கொண்டே ஸ்வஸ்தராய் ஸ்வஸ்தானஞ் சென்றார்.

அகஸ்தியரே! தேவியின் மற்றொரு திருவிளையாடலைக் கூறுகின்றேன். கேளும்! தேவியினுடைய மஹிமையைக் கேட்பவருக்கு அது வேண்டியவற்றையெல்லா மளிக்க வல்லது.

அயோத்திக்கு அதிபதியான தசரதன் என்னும் அரசன் அநேககாலம் புத்திரபாக்யமின்றி வருந்தினன். விவேகமும் ஆசாரமு முள்ளவனான அம்மன்னன் ரஹஸ்ய மாக ஸர்வசாஸ்திரங்களையு முணர்ந்த தன் புரோஹிதரான வஸிஷ்டரை யழைத்து "ஹே குரோ! அநேக ஆண்டுகளாகி யும் இன்னும் அடியேனுக்கு ஸந்ததி தோன்றவில்லையே! இந்தத் துன்பம் வளர்ந்துகொண்டே வருகிறது. எதைச் செய்தால் ஸந்ததி வ்ருத்தியாகு மென்று அருள்புரியுங்கள்" என்று விண்ணப்பித்துக் கொண்டனன்.

வஸிஷ்டர்:—மன்னரே! ரஹஸ்ய மொன்றைக் கூறு கின்றேன். கேள்! அயோத்தியை, மதுரை, மாயை, காசீ, காஞ்சி, அவந்திகை இவைகள் மற்றெல்லாப் பட்டணங்களுக் குள் உயர்ந்தவை; புண்யமானவை. ஸ்ரீ தேவியினது ஸாந் நித்யத்தால்தான் இவைகளுக்கு பெருமை தோன்றிற்று. மஹாத்ரிபுரஸுந்தரி இதற்கு அதிதேவதையாக யிருப்ப தால் மானிடர் அயோத்தியை பூஜிக்கின்றனர். இந்தத் தேவிக்கு ஈடாக வேறெந்த தேவதையு மில்லை. பிரஹ்மாதி தேவர்களும் மற்றவர்களும் இவளையே பூஜிக்கின்றனர். தேங்காய்களாலும், பலாப்பழங்களாலும், வாழைப்பழங் களாலும், மது ஆஜ்யம் சர்க்கரைகள் நிறைந்த பாயஸங் களாலும், ஸித்தத் திரவிய விசேஷங்களாலும், த்ரிபுராம் பிகையைப் பூஜிக்கவேண்டும். இவ்வாறு பூஜிப்பின் அவள் விரைவில் வேண்டியவற்றை யளிப்பாள்" என்று கூறினர். தசரதர் தனது இஷ்டம் பூர்த்தியாவதற்கு இஷ்டமான பொருள்களால் குருவைப்பூஜித்து அனுப்பினன்.

பின்னர் மன்னன் பரம பக்தியுடன் குரு கூறிய வண் ணம் ஸ்ரீலலிதா பரமேஶ்வரியை அர்ச்சித்துவந்தான். ஸந் தோஷத்துடன் பிரதிதினமும் அயோத்திக்கு அதிதேவதை யான தேவியை யர்ச்சித்து இரவில் அவளது ஆலயத்தி லேயே படுத்துறங்கினன். ஏகாந்தமான விலாசத்திற்கு ஏற்றதான அர்த்த ராத்திரிவேளை கழிந்தபின் சிறிது கண்

ணயர்ந்த அரசன் தன்னெதிரில் பாசம், அங்குசம், தநுஸ், புஷ்பபாணம் முதலியவைகளையேந்தி, நான்கு புஜங்களுடன் ஸர்வ ஆபரண பூஷிதையாய், ஸர்வ சிருங்கார வேஷம் நிறைந்தவளாய் ஸ்ரீத்ரிபுரஸுந்தரீதேவி தோன்றக் கண்டான். தோன்றிய பரதேவதை இந்துமதியின் புதல்வரான தசரதனை நோக்கிக் கூறினாள். "தசரத! உனக்கு புத்திரபாக்கியமுண்டு. ஆனால் அது முற்பிறவியிற் செய்த பாபங்களால் தடைப்பட்டிருக்கிறது. அவை நீங்குவதற்கு உத்தமமான காஞ்சி மாநகரஞ்சென்று, கம்பா நதியில் புனலாடிப் பவித்திரமாயுள்ள என்னைத் தர்சனஞ் செய். நகரின் நடுவிலே தஹராகாசத்திலிருக்கும் எனது காம கோஷ்டத்தைத் தர்சனம் செய். உனது பாவம் நீங்கும். ஏழு துவாரங்கள் உள்ள பிலத்துடன் கூடியதும், ஸாம்ராஜ்யத்தையளிக்கவல்லதும், மும்மூர்த்திகளுக்கு ஸித்தியையருளியதுமான அவ்விடத்திலே யான் கிழக்கு முகமாய் ஸிம்ஹாஸனேஸ்வரியாக விளங்குகிறேன். அன்றியும், மஹாலக்ஷ்மீ ஸ்வரூபத்துடன் இருகரங்களுள்ளவளாய்த் தாமரை மலரைக் கரத்திலேந்தி சக்ரேசீ, மஹாராக்ஞீ என்ற பெயர்களுடன், ஸ்தூல த்ருஷ்டியுள்ளவர்களுக்குக் காணப்படாதவளாய் இருக்கிறேன். எனது கண்ணிலிருந்து தோன்றிய மஹா கௌரி எனது வலதுபுறத்தில் இருக்கிறாள். அவள் ஸௌந்தர்ய ஸாரத்திற்கு எல்லை. அவள் எல்லா ஆபரணங்களையுமணிந்தவள். எனது உத்திரவுபடி பத்மத்தையேந்தி இருகரங்களுடன் மஹாலக்ஷ்மி ஸ்வரூபமாய் ஆனால் ஏதோ ஒரு பூதம்போல் காணப்படுவாள். எனது அம்சத்தினால் தோன்றிய அவளை உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை தர்சநம் செய்பவரது மஹாபாதகங்கள் பறந்துபோம். உபபாதகங்களைப் பற்றிக் கூறுவானேன்! கெட்ட வாஸனையும், கெட்ட புத்தியும், குதர்க்கங்களும், பாபச் சரீரமும், பாப எண்ணங்களும், நாஸ்திகத் தன்மையும் அழிந்துபோம். சர்க்கரை மது ஆஜ்ய பாயசங்களாலும், பல்வகையான பக்ஷ்ய போஜ்யங்களாலும் அறுசுவை நிறைந்த பதார்த்தங்களாலும் நீ என்னை மஹா பூஜைசெய். அங்கு நான் உனக்கு

பிரத்யக்ஷமாகி இஷ்டத்தைப் பூர்த்திசெய்கிறேன்." என்று இங்ஙனம் உபதேசித்து அழகிய ஆக்ருதியுள்ள தேவி அந்தர்த்தானமானுள்.

உடனே பார்த்திபன் எழுந்து இஃதென்னவென்று ஆச்சர்யமடைந்து அருகில் உறங்கும் கௌஸல்யையை எழுப்பி ஆதரவுடன் அந்த விருத்தாந்தத்தைக் கூறினுன். அதைக் கேட்டு அவளும் பேரானந்த மடைந்தனள். மறுநாட்காலையிலே மன்னன் மனைவியுடனும் மந்திரிகளுடனும் காஞ்சிமா நகரத்திற்குப் புறப்பட்டான். அங்கு சென்று விதிப்படி கம்பாநதியில் மூழ்கி தேவியைத் தர்சித்துப் பிறகு பஞ்ச தீர்த்தத்தில் தன் பத்தினி கௌஸல்யையுடன் ஸ்நாநஞ் செய்தான். அங்கு தேவீ பூஜை செய்பவர்களான அந்நகர வாஸிகளுக்கு பசுக்கள், வஸ்திரம், ஹிரண்யம் முதலியவைகளை தானஞ்செய்து ஸந்தோஷப்படுத்தி அவர்களை வணங்கினுன். பிறகு பக்தியுடன் ஆலயத்தில் நுழைந்து பணிவுடன் மூன்று பிரதக்ஷிணம் செய்து ஸன்னிதிக்கு சென்று காமகோடி பீடத்திலுள்ளவளும் மும்மூர்த்திகளைப் படைத்தவளும், ஸ்ரீசக்ரவடிவமாயிருப்பவளுமான ஸ்ரீத்ரிபுரஸுந்தரியைத் தரிசித்துப் பத்னியுடன் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். இக்ஷுவாகுவால் நிர்மாணஞ் செய்யப்பட்ட தனது நகரில் சிஷ்யருடன் கூடிய தூர்வாஸ முனிவரால் பூஜைக்காக நிர்மாணஞ் செய்யப்பட்டதும் அநேக தாஸதாஸிகளுடன் கூடியதும் த்வஜாரோஹணம் முதலிய மஹோத்ஸவங்களுடன் கூடியதுமான ஸ்ரீ தேவியின் ஆலயத்தில் தனது குரு கூறிய வண்ணம் பூஜை செய்து இரவில் ஸ்வப்நத்தில் எந்த வகையான தேவீ ரூபத்தைக் கண்டானே அதே வடிவமாக இங்கும் அரசன் தேவியைத் தியானம் செய்தான். நீண்டகாலம் தியானம் செய்து அழகிய வஸ்திரங்களையும் திவ்யமான ஆயதனங்களையும் தேவிக்கு ஸமர்ப்பித்து ஸ்தோத்திரம் செய்தான்.—

பாதம் வரை தொங்கும் உயரிய ஆபரணங்களால் அழகியவளே! பாதஸரத்தினுல் அழகிய பாதாரவிந்த முள்

ளவளே! பீதாம்பரத்தின்மேல் பிரகாசிக்கின்ற ஸ்வர்ண ஒட்டியாணமுள்ளவளே! கேயூர கங்கணங்களாலலங்கரிக்கப் பட்ட கரங்களுள்ளவளே! கரும்புவில்லை மிருதுவான இடது கையிலேந்தியவளே! ரத்ந மோதிரங்களாலும் பாணங்களாலும் அழகிய வலது கரமுள்ளவளே! ஸ்தநமண்டலத்தில் பிரகாசிக்கும் முக்தா ஹாரமுள்ளவளே! பாசாங்குசங்களாலும் தோள்வளையாலும் அழகிய புஜங்கள் உள்ளவளே! முககாந்தியால் சரத்கால சந்தரனை ஜயித்தவளே! தாடங்க ரத்னங்களின் ஒளியால் பிரகாசிக்கும் கன்னங்களுள்ளவளே! இடது கரத்தில் கமண்டலுவைத் தரிப்பவளே! மாணிக்ய ஸூத்திரத்தால் பிரகாசிக்கும் கழுத்துள்ளவளே! நெற்றியிலுள்ள சந்திரகிரணத்தால் மிகப் பிரகாசமானவளே! முன்மயிரால் அழகியவளே! புன்னகையுள்ளவளே! அழகிய நாஸிகையுள்ளவளே! கண்ணழகால் கருநெய்தலை ஜயித்தவளே! அழகிய புருவமும் முகமும் நெற்றியும் உள்ளவளே! யோகீந்திரர்களது சித்தகமலத்தில் வஸிக்கும் ஹம்ஸமே! ரத்னகிரீடமணிந்தவளே! ஸர்வாங்க ஸுந்தரியே! ஸமஸ்த ஸுரர்களால் நமஸ்கரிக்கத் தக்கவளே! கோரிய பலனை யளிப்பவளே! கருணை நிறைந்த சித்த முள்ளவளே! ஸாம்ராஜ்யத்தையளிப்பவளே! சக்ரநாதே! இந்திராதி தேவர்களால் ஸேவிக்கப்படும் பாதாரவிந்த முள்ளவளே! ஸிம்ஹாஸநேஸ்வரியே! எனக்கு அருள் புரிவாயாக!" என்று பக்தியுடன் துதித்துச் சக்ரவர்த்தியானவன் வெளியில்வந்து வலதுபுறத்தில் மஹாகௌரியைத் தரிசித்தான். பூமியில் தண்டம்போல் வீழ்ந்து பணிந்து துதித்து விலையுயர்ந்த பல்வகையான வஸ்திரங்களையும் மதிப்புக்கெட்டாத உயர்ந்த பல ஆபரணங்களையும் ஸமர்ப்பித்து வலம் வந்து மனைவியுடன் திரும்பினன்.

ஆசார்யன் அருள்புரிந்தபடி தேவியையே தியானஞ் செய்துகொண்டு ஏழு நாட்கள் அங்கு தங்கி மஹாபூஜை செய்து, எட்டாவது நாள் தேவியைப் பணிந்து "எனதிஷ்டத்தை யளிப்பாய்" என உருகிய மனத்துடன் வேண்டி

ஞன். பிரஸன்னமான காமாக்ஷி ஆகாயவாணியால் "அரசே! உனக்கு எனது அம்சம் பொருந்திய நான்கு புத்திரர்கள் பிறப்பார்கள்" என்று கூறினாள். இதைக்கேட்ட அரசன் ஸந்தோஷத்தால் மலர்ந்த முகமுள்ளவனாகி, வேறு அடைக்கலமில்லாதவனாய் அந்தத் தேவியை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மனத்தினாலே விடைபெற்றுக்கொண்டு பரிவாரத்துடன் அயோத்யைக்குத் திரும்பினான். ஸர்வ லோகத்திற்கும் ஹிதத்தைச் செய்யும் ஆவலுள்ள காமாக்ஷி இத்தகைய பிரபாவமுள்ளவள்! இவ்விதமே எல்லாப் பக்தர்களுக்கும் இஷ்டத்தைப் பூர்த்திசெய்பவள். இங்ஙனம் காமாக்ஷியை உபாஸித்துப் பயன் பெற்றவர் பலருண்டு. மஹர்ஷே! இப்போதும் பக்திமான்கள் காமாக்ஷியினிடம் பலனைப் பெறுகின்றனர். அவளது அநுக்ரஹத்தைப்பெறப் பலர் உண்டாகப் போகின்றனர். இந்தத் தேவியின் பெருமையை வர்ணிக்க யாவரே வல்லவர்? நானும் மும்மூர்த்திகளுங்கூட வல்லவரல்லரெனின் இதரர்களைப் பற்றிக் கேட்பானேன்! கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் பாபத்தை அகற்றுவதான ஸ்ரீகாமாக்ஷியின் சிறந்த சரித்திரத்தைச் சிறிது கூறினேன்.

முப்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று. (151 சுலோகங்கள்)

முப்பத்தேழாம் அத்தியாயம்.

ஸ்ரீசக்ரோபாஸநக் கிரமம்.

அகஸ்தியர் :—தேவியினது யந்த்ரம் எத்தகையது? மந்த்ரம் எப்படிப்பட்டது? உபதேசஞ் செய்பவர் எப்படியிருத்தல்வேண்டும்? சிஷ்யன் எப்படிப்பட்டவனாகயிருக்க வேண்டும்? இஃதெல்லாவற்றையும், ஸாக்ஷாத் பரமபுருஷராயும் ஸர்வக்ஞராயுமுள்ள ஓ ஹயக்ரீவரே! கிருபையுடன் நீர் அருள்புரிய வேண்டுகின்றேன்.

ஹயக்ரீவர் :—தேவியினது யந்த்ரம் ஸ்ரீசக்ரமே! அதுதான் த்ரிபுராம்பிகை! அவளே ஸ்ரீமஹாலக்ஷ்மீ. அவள் முன்னே ஜ்யோதிர்மயமாய் ஸ்புரிக்கும் தனது ஸ்வரூபத்தைப் பார்த்தாள். அதே ஸ்ரீசக்ரமாம். ஆதலால் ஸாக்ஷாத் ஆதிலக்ஷ்மிதான் ஸ்ரீசக்ரமென்பதன் தத்வமாகும்; அதை அர்ச்சித்துத்தான் விஷ்ணு அரிய மோஹிநீ ரூபத்தை யெடுத்தார்; அதை யர்ச்சித்துத்தான் ஈஸ்வரன் ஸர்வ வித்யேஸ்வரராக ஆனார்; பிரஹ்மாவும் படைக்கும் சக்தியைப் பெற்றார். மன்மதன் முனிவர்களது மனத்தையும் கலக்கும் சக்தியைப் பெற்றான்.

ஸ்ரீதேவியின் எதிரில் ஸுவர்ணம், வெள்ளி முதலிய உலோஹங்களால் ஸ்ரீசக்ரம் செய்துவைத்து மங்களகரமான அதை ஸ்ரீ ஷோடசாக்ஷரீவித்யையால் கந்த புஷ்பங்களாலும் பவித்ரமான துளஸீ தளங்களாலும் தினந்தோறும் தேவீ த்யானத்துடன் ஆயிரம்முறை யர்ச்சிக்கவேண்டும். சுபமான மது ஆஜ்ய சர்க்கரைப்பாயஸத்தாலும், மனோஹரமான வடைகளாலும் *மூன்று மண்டலம் மஹாலக்ஷ்மியை யர்ச்சிப்பவர்க்குத் தேவி ஸாந்நித்ய மாவதைக் காணலாம். முற்கூறிய வண்ணம் வெண்மை நிறம் வாய்ந்த புஷ்பங்களால் அர்ச்சிப்பவரது நாவில் ஸரஸ்வதி தாண்டவ மாடுவாள். சிவப்பும் வெண்மையுங் கலந்த பாடல நிறமான புஷ்பங்களால் விதிப்படி அர்ச்சிப்பவருக்குச் சக்கிரவர்த்தியும் தாஸனைப்போல் வச்யமாவான்; மஞ்சள் வர்ணமான மலர்களால் விதிப்படி பூஜிப்போரது மார்பிலே லக்ஷ்மி வஸிப்பாள். துர்க்கந்தமுள்ளதும், வாஸனையே யில்லாததுமான புஷ்பங்கள் நல்ல நிறமுள்ளதாகவிருந்தாலும் அப் புஷ்பங்களால் தேவியைப் பூஜிக்கல்கூடாது. நல்ல வாசனையுள்ள புஷ்பங்களாலும் கந்தங்களாலுந்தான் தேவியை யர்ச்சிக்கவேண்டும். காமாக்ஷியே மஹாலக்ஷ்மி யெனப்படுவாள்! சக்ரமென்பது ஸ்ரீசக்ரமே! ஸ்ரீவித்யையே உயர்ந்த வித்யை! நாயகன் ஸ்ரீகுருநாதனே!

---

* ஒரு மண்டலமென்பது நாற்பத்தெட்டு நாட்களாம்.

தேவியினது மந்த்ரராஜந்தான் ஸ்ரீவித்யை யென்பது! காம ராஜாந்தமான மந்த்ரத்தின் முடிவில் ஸ்ரீபீஜத்துடன் கூடியது ஷோடசாக்ஷரீ என்றும், ஸ்ரீவித்யை என்றும் கூறப்படும். அதிரஹஸ்யமாக மறைத்துவைத்து ரக்ஷிக்கத்தக்கது இந்த விஷயம்; மும்மூர்த்திகளுக்கும் சக்தியாயிருப்பது இந்த வித்யைதான். எல்லா மந்த்ரங்களுக்கும் பிராணரூபமாய் இருப்பதும் இதுதான். குரு சிஷ்ய பரம்பராக் கிரமத்தில் உபதேசிக்கப்பெற்ற இந்த வித்யை ஸம்ஸார பந்தத்தை யொழித்துவிடும்; ஸம்ஸார தாபத்தை நீக்கும்; கிழத்தன்மை யையும், மரணத்தையும் போக்கும். அதைப் பூஜிப்பதால் துக்கம், தௌர்ப்பாக்யம், நோய், ஏழ்மை முதலியன பறந்தோடும். அதைத் துதிப்பதால் விக்னங்கள் அருகே அணுகா. தியானம் செய்தால் ஸர்வ ஸித்திகளும் வந்து அடையும்; ஒருவன் முத்ரைகளின் விசேஷ தத்துவங்களை யுணர்ந்து, தீக்ஷையினால் தனது பாபத்தைப் போக்கிக் கொண்டு தேவியை யர்ச்சித்தால் அவன் விரும்பிய பயன்க ளெல்லாம் ஸித்திக்கும்.

வெண்மை நிறமுள்ள வஸ்திரந் தரித்தவளாகவும், வெண்மை நிறம் வாய்ந்த இடத்தில் வஸிப்பவளாகவும் செய்து, தேவியைப், பிரஹ்மசர்ய நியமத்துடன் கூடியவனாய், வெண்மையான புஷ்பங்களால் பூஜிக்கவேண்டும். அன்றியும், பாலன்னம் தயிரன்னம் முதலிய வெண்மையான நைவேத்யங் களாலோ அல்லது மனஸ் ஸங்கல்பத்தினாலோ தேவியைப் பூஜிக்கவேண்டும். ஸ்ரீபாலா மந்த்ரத்திலுள்ள மூன்று பீஜாக்ஷரங்களோடு வரிசையாய் மூன்று கண்டங்களையுஞ் சேர்த்து ஸ்ரீ ஷோடசாக்ஷரியை ஏகாக்ரசித்தனாய், சுசியாக அ முதல் க்ஷ வரையுமுள்ள மாத்ருகாக்ஷரங்களால் * அநுலோமப் பிரதிலோம முறையாக ஜபம் செய்யவேண்டும். பகவானது எதிரில் தீபரூபமாகத் தேவியைத் தியானம் செய்துகொண்டு மனதினாலாவது மெதுவாகவாவது கொஞ்சம் உறக்கத்

---

* அ முதல் க்ஷ வரை எண்ணுவது அநுலோமம். க்ஷ முதல் அவரை தலைகீழாய் எண்ணுவது ப்ரதிலோமம்.

தெளிவாகவாவது ஜபிக்கவேண்டும். ஸ்ரீதேவீந்யாஸத்துடன் கூடியவனுய்த் தன்னை ஸ்ரீதேவியாகவே பாவிக்கப்பட்ட உடலை யுடையவனுய், அதை ஒரு லக்ஷம் ஜபம் செய்தால் ஸகலமான மஹாபாபங்களிலிருந்தும் விடுபடுவான். தேவர்ஷே! இரண்டு லக்ஷம் ஜபம் செய்தால் ஏழு ஜன்மங்களில் செய்த பாபங்களைத் தேவி நாசஞ்செய்கிருள். மூன்று லக்ஷ ஜபத்தினுல் ஆயிரம் பிறவிகளில் செய்த பாபங்களகலும்; இதில் ஸம்சயமில்லை. இங்ஙனம் முறையே பதினுறுலக்ஷ ஜபத்தினுல் தேவியினது ஸாந்நித்யத்தை யடைவான். பிரதிதினம் மூன்றுகாலம் பூஜைசெய்தல் வேண்டும். ஜபம், தர்ப்பணம், ஹோமம், பிராஹ்மண போஜனம் இவைகளைச் செய்வது புரஸ்சரண மெனப்படும். ஹோமம் செய்யும்போதும், தர்ப்பணம் செய்யும்போதும் மந்த்ரமுடிவில் ஸ்வாஹா என்றும், நியாஸம் பூஜை இவைகளை யனுஷ்டிக்கும்போது நம: என்றும் கூறவேண்டும். ஜபம் செய்யும்போது மந்த்ரம் உள்ளபடி ஜபிக்கவேண்டும். ஜபம் செய்த ஸங்கியையில் பத்தில் ஒருபங்கு ஹோமமும், அதில் பத்தில் ஒருபங்கு தர்ப்பண மும், அதில் பத்தில் ஒருபங்கு பிராஹ்மண போஜனமும் செய்யவேண்டும்.

தேசகாலங்கள் அநுகூலமில்லாத இடத்தில் ஹோமம் தர்ப்பணம் பிராஹ்மணபோஜனம் ஆகிய இவைகளுக்கு எவ்வளவு ஸங்கியை சொல்லபட்டதோ அதற்கு இரண்டு மடங்கு ஜபம் செய்து, புரஸ்சர்யையைப் பூர்த்திசெய்யலாம். இங்ஙனம் செய்தபிறகு அந்தந்த காமனைகளை யடையும் பிரயோகத்தின் பொருட்டு மூன்றுலக்ஷம் ஜபம் செய்ய வேண்டும். விரதத்துடன் மனோவிகார மில்லாமல் மூன்று வேளையுந் தேவியைப் பூஜித்துக்கொண்டு, வஶ்யாதிகார்யங் களிலீடுபட்டால் அவற்றின் ஸித்தியுமுண்டாகும். சக்ர மத்தியிலிருந்து ஸாதகன் தேவியையும் தன்னையும் சிவப்பாகத் தியானம் செய்வானேயாகில் அவன் ஸர்வ ஸௌபாக்யமும் அழகும் உள்ளவனுவான். ஸர்வ ஜனங்களுக்கும் பிரியனுகி எல்லோரையும் வசமாக்கிக் கொள்வான். இதில் சற்றும்

ஐயமில்லை. கோரோசனை குங்குமப்பூ இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து அதற்கு ஸம எடை சந்தனம் கலந்து நூற்றெட்டு முறை ஸ்ரீமந்த்ரத்தை ஜபித்து நெற்றியில் திலகமணிவானுனல், அவன் எவனைப் பார்க்கின்றானோ, எவனுடன் பேசுகின்றானோ, எவனைத் தொடுகின்றானோ, எவனை நினைக்கின்றானோ அவன் தனது பொருளுடன் அவ்வுபாஸகனுக்குத் தாஸனைப்போல் வஶ்யமாகிறான். புஷ்பம், பழம் கந்தம், பாநம், வஸ்திரம் இவைகளை நூற்றெட்டு முறை ஸ்ரீமந்த்ரஜபம்செய்து யாருக்கு அனுப்புகிறானோ அவன் வஶ்யமாவான்.

பூமியில் ஒரு ஏகாந்தமான விடத்தில், நல்ல ரூபமுள்ளதும், ஸகல சிருங்காரவேஷமும் ஆபரணங்களும் பூண்டதும், அழகிய நெற்றி, கழுத்து, ஹ்ருதயம், நாபி, முழங்கால் முதலியவைகளுள்ளதுமான ஒரு பிம்பத்தைக் கோரோசனையால் வரைந்து, பெயரையும் அதில் எழுதி, மதந பீஜாக்ஷரத்தை அந்த அந்த ஸந்திகளில் அமைத்து, அவள் இருக்கும் திக்கைநோக்கி உட்கார்ந்து தேவீரூபமாகத் தன்னைப் பாவித்துக்கொண்டு க்ஷோபிணி முத்ரையுடன் நூற்றெட்டுமுறை மஹாமந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். சந்த்ர ஸூர்யரைப்போல் மிக்க ஒளியுள்ளதான ஓர் அக்நி க்ருஹத்தில் அந்தப் பெண் மன்மத பாணத்தினால் பிடிக்கப்பட்ட ஸர்வாவயமுள்ளவளாகவும், சோர்ந்த கடைக்கண் பார்வையுள்ளவளாகவும், சக்தி சக்ரத்தின் காந்தியால் சூழப்பட்டவளாகவும், கற்பை மறந்து கண்ணைவிழுக்கப்பட்டுத் தைர்யத்தை இழந்து, மந்த்ரம் யந்த்ரம் ஔஷதம் மஹாமுத்ரை இவைகளால் தன் கட்டுப்பாட்டை விட்டு, புதிய அன்பால் உள்ளம் நடுங்க மானஸிக ஸங்கல்பமெனும் காற்றால் விலக்கப்பட்ட வஸ்திரமுள்ளவளாகவும், மோஹமடைந்தவளாகவும், கலங்கிய சித்தமுள்ளவளாகவும், சித்திரத்தி லெழுதப்பட்டவள்போலும், ஸம்க்ஞை யில்லாதவளாகவும், அழகிய மந்த்ரமென்னும் காற்றால் உயரே தூக்கப்பட்ட மூங்கில் இலைபோல் ஆகாசத்தில் இருப்பவளாகவும், நூறுயோஜனை

தூரம் வரை அலைந்து திரிபவளாகவும் தியானிக்கவேண்டும். அன்றியும், சக்ரமத்தியில் மலைகளோடுங் காடுகளோடுங் கூடிய பூமியை நான்கு ஸமுத்திரம்வரை ஜ்வலிப்பதாகத் தியானம் செய்யவேண்டும். இங்ஙனம், இந்தத் தியானத்தை ஆறுமாதம் அப்பியாஸம் செய்தால் மன்மதனுக்குச் சமமான பேரழகுள்ளவனாவான். இத்தகைய ஸாதகன் பார்ப்பதற்கு முன்பே உலகமிவனுக்கு வச்யமாகும். இவனைப் பார்த்த வுடன் யுவதியின் மனங்கலங்கும்; விஷம் பறந்தோடும். ஒருவனைப் பிரஹஸ்பதிபோலாக்க இவனுக்குச் சக்தியுண்டு. சாதுர்த்திகம் முதலிய அஸாத்திய ஜ்வரங்களும் இவன் எதிரில் நிற்கா. மஞ்சள் வர்ணத்தால் எழுதிய சக்ரத்தை ரஹஸ்யமாக வைத்திருக்கவேண்டும். வாதிகளது வாக்கு இவனைப் பார்த்தவுடன் ஸ்தம்பித்துவிடும். மஹாநீலி ரஸத்தால் (அவிரிச்சாயத்தால்) சத்ருவின் பெயருடன் யந்த்ரத்தை எழுதி தெற்கு முகமாக உட்கார்ந்து அதை அக்நியில் போட்டுவிட்டால் சத்ரு விரைவில் இறப்பான். எருமைச் சாணி குதிரைலத்தை இவைகளைக் கோமூத்திரத்தில் கலந்து சத்ருவின் பெயரை எழுதிக் கழுநீரில் வைத்திருந்தால் சத்ருக்களுக்குள் த்வேஷமுண்டாகும். கோரோசனை யால் காக்கை இறகைக்கொண்டு இடையிலே பெயரை எழுதி ஆகாயத்தில் அதைத் தொங்கவிடின் அது உச்சாடனமாகும். பால், அரக்கு, கோரோசனை, மஹாநீலி ஆகிய இவைகளால் எழுதிய சக்ரத்தைத் தரித்திருந்தால் நான்கு வர்ணத்தாரும் வசமாவார்கள். இங்ஙனம் எழுதி ஜலத்தின் நடுவில் ஸ்தாபித்தால், அந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்வதாலும், அதை யருந்துவதாலும் ஸௌபாக்ய முண்டாகும். சக்ரத்தினிடையே ஒரு நகரத்தையோ அழகிய ஸ்திரீயையோ எழுதி, அது ஜ்வலிப்பதுபோல் தியாநம் செய்தால் ஏழுநாட்களில் அது கலங்கி நமது ஸ்வாதீனமாகும். மஞ்சள் வர்ணமாகச் சக்ரத்தையெழுதி கிழக்குமுகமாக நின்று அங்ஙனம் ஜபித்தால் ஸர்வ வாதிகளையும் ஜயிக்கலாம். ஸிந்தூர வர்ணத்தால் எழுதி வடக்குமுகமாக ஜபித்தால் உலகம் அவனுக்கு வசமாகும். மலை தாதுக்களால் எழுதி மேற்கு முகமாகப் பூஜித்தால் பெண்கள்

வஶ்யமாவார்கள். மலையில் ஏகாந்தமாகப் பூஜித்தால் கிழத் தன்மையையும், மரணத்தையும் ஜயிக்கலாம். இவைகள் அதி ரஹஸ்யமானவை. ஜாக்கிரதையாக ரக்ஷிக்கத் தக்கவை. மறைப்பதால் ஸித்தியும் பிரகாசப்படுத்துவதால் துன்பமும் உண்டாகும். புரஶ்சர்யை செய்யாமல் காம்யமான கார்யங்களைச் செய்தால் தேவ சாபத்தை யடைவான்; கார்யமும் ஸித்தியாகாது. புரஶ்சர்யையில்லாமல் செய்த பிரயோகத்திலுண்டாகும் தோஷம் நிவர்த்தியாவதற்காக மறுபடியும் ஒரு லக்ஷம் ஜபம் செய்து விதிப்படி பூஜை செய்யவேண்டும். இங்ஙனம் செய்யின் அவன் சுத்தனாய் மறுபடியும் பிரயோகம் செய்வதற்கு அதிகாரியாகின்றனன். காமனையின்றிப் பக்தியுடன் ஸதா தேவியையே நினைத்துப் பூஜித்துத் தன் சக்திக்கேற்ற வாறு ஜபம் செய்வோருக்குத் தேவியே ஐஹிகமாய் இவ்வுலகிற்கு வேண்டிய எல்லாக் கார்யங்களையும் முடித்துவைத்து மோக்ஷத்தையுமளிப்பாள். அன்றியும் ஸதா அவனிடத்தில் நெருங்கியிருந்து அவனுக்கெல்லாவற்றையுங் கூறுவாள். கன்றினிடமுள்ள அன்பால் தாய்ப் பசு அதோடு செல்வது போல் சரணாகதனான பக்தனைப் பின் தொடர்ந்து தேவி செல்கிறாள்.

அகஸ்தியர்.—கன்றைப் பசு தொடர்ந்து செல்வதுபோல் பக்தனைத் தேவி தொடரும்படி செய்வதான சரணாகதி யென்பது யாது? தயவுடன் கூறுங்கள்.

ஹயக்ரீவர்.—இஹலோக, பரலோக கார்யங்கள் இரண்டையும் தேவியினிடமே ஒப்பித்துவிட்டு எப்போதும் அவளிடமே மனத்தைச் செலுத்தி எல்லோருக்கும் அநுகூலனாய்ப் பகைமையை விட்டு, வேறொருவரையும் சரணமடையாமல் தன்னை ரக்ஷிக்கும்படி கௌரியையே வேண்டுபவனும், அவளையே நம்புபவனும், அவள் ஸேவையையே பரம பிரயோஜனமாய் நினைப்பவனும், தேவீ பூஜையிலேயே ஈடுபடுபவனுமுள்ளவன் சரணாகதனாவான். உலகம் தன்னை நிந்திக்குமானால் அது தன் உடலைச் சார்ந்ததேயன்றித் தன்

ஸ்வரூபத்திற்கல்லவென்னும் நிச்சயத்தோடிருப்பவன் பிரபன்னனாவான்.

ஶரணாகதி யென்பது அனுகூலமானதையே எண்ணுவது, பிரதிகூலமானதை விடுவது, பரதேவதை ரக்ஷிப்பாளென நம்புவது, நீயே ரக்ஷியெனப் பிரார்த்திப்பது, தன்னை அர்ப்பணம் செய்வது, தனது ஏழ்மையைக் காட்டுவது என ஆறுவகைப்படும். இதில் ஆத்மாவை ஸமர்ப்பணம் செய்வதே முக்யமானது. அதற்கு மற்ற ஐந்தும் அங்கங்களாம். புக்தி முக்திகளுக்கு இதற்கு ஈடான வேறு ஸாதனமில்லை. கர்வமில்லாமை, டம்பமில்லாமை, ஹிம்ஸை செய்யாமை பொறுமை, கபடமின்மை, ஆசார்யரை உபாஸித்தல், சுத்தமாயிருத்தல், த்ருட சித்தனாயிருத்தல், மனதையடக்குதல், இந்த்ரியங்களாலநுபவிக்கத்தக்க விஷயங்களில் ஆசையின்மை, அஹங்காரமில்லாமை, பிறவி, மரணம், கிழத்தன்மை, நோய், துக்கம் இவைகளிலுள்ள தோஷத்தை நன்கு அறிதல், பற்றில்லாமை, மனை மனைவி மக்களிடம் ஸங்கமில்லாமை, சுகதுக்கம் நேர்ந்தபோது ஸமமாயிருத்தல், தேவியின்பால் வேறிடஞ்செல்லாத ஏகபக்தியுடனிருத்தல், ஏகாந்தமான இடத்திலிருந்து ஸேவித்தல், ஜனக்கூட்டத்தில் ஆசையின்மை, ஸதா வேதாந்த விசாரத்தி லீடுபடுதல், தத்துவக் ஞானத்தை உணர்தல் ஆகிய இந்த ஞானஸாதனங்களை ஸதா அப்பியஸிக்கவேண்டும். ஸ்ரீதேவியினுடைய கர்மாவில் ஈடுபட்டு, அதையே சிறந்ததாக எண்ணி, தீவிர பக்தியுடையவனாய் ஸங்கத்தைவிட்டு, ஸர்வப் பிராணிகளிடமும் சத்ரு பாவத்தை விட்டிருப்பவன் சிறந்த ஶ்ரீயை அடைவான். ஆம்நாய ஆசார்யர் *என்னைப்போல் அறிவுள்ளவராகவும், கியாதியுள்ளவராகவுமிருத்தல் வேண்டும். சிஷ்யனும் †உன்னைப் போலிருக்க வேண்டுமென்று வித்வான்கள் கூறுகிறார்கள்.

முப்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 77).

---

* ஹயக்ரீவர். † அகஸ்தியர்.

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

முத்திராலக்ஷண பிரகரணம்.

அகஸ்தியர்.—ஹே அஶ்வாநந! எந்த முத்திரைகளைக் காண்பிப்பதால் ஸ்ரீ தேவியானவள் ஸந்தோஷமடைந்து பக்தர்களை அநுக்ரஹிக்கின்றாளோ அந்த முத்திரைகளின் லக்ஷணங்களைக் கூறுவீராக.

ஹயக்ரீவர்.—ஹே தபோதந! பரஸ்பரம் அபிமுகமான இருகைகளின் விரல்களையும் கோத்துக்கொண்டு இரு கட்டைவிரல்களையும் பார்ஶ்வ பாகத்தில் ஒன்றுக்கொன்று சம்பந்த முள்ளவைகளாயும் ஸமமாகவும் வைத்துக் கொள்ளவும். இரண்டு தர்ஜநிகளையும் நன்கு வளைத்து வலது தர்ஜநியால் இடது அநாமிகையையும், இடது தர்ஜநியால் வலது அநாமிகையையும் நன்றாய் வளைத்துப் பிடித்துக்கொள்ளவும். இரு சுண்டுவிரல்களையும் அவ்வாறே இரண்டு நடுவிரல்களையும் ஒன்றுக்கொன்று சேர்த்து நிமிர்த்தி வைத்துக்கொள்ளவும். இம் மஹா முத்திரையானது ஆவாஹநீ அல்லது த்ரிகண்டா எனப் பெயர் பெறும். 1.

ஸம்க்ஷோபிணீ என்னும் முத்திரையின் லக்ஷணத்தைக் கூறுகிறேன் கேளும்! ஒவ்வொரு கையினுடைய சுண்டுவிரல் கட்டைவிரல் இவைகளை அபிமுகமாகச் சேர்த்து, சேர்க்கப்பட்ட அவ்விரு விரல்களின் மத்ய பாகத்தில் நடு விரல்களைச் சேர்க்கவும். அவ்வாறு சேர்க்கப்பட்ட மூன்று விரல்களின் (நகங்களின்) நுனிகளையும் பரஸ்பரம் சேர்த்துக்கொள்ளவும். பிறகு வலது அநாமிகையை இடது நடுவிரலின் மத்யபார்ஶ்வத்திலும், அவ்வாறே இடது அநாமிகையை வலது நடுவிரலின் மத்யபார்ஶ்வத்திலும் சேர்க்கவும். இரு தர்ஜநிகளையும் தண்டம்போல் நமக்கு அபிமுகமின்றி எதிர்முகமாக நீட்டிப் பிடிக்கவும். 2.

ஹே விந்தியமலையின் கர்வத்தை யடக்கியவரே! முற் கூறிய (ஸர்வ) ஸம்க்ஷோபிணீ முத்திரையில் தர்ஜநியுடன் நடுவிரலையும் சேர்த்து நீட்டினால் அதுவே வித்ராவிணீ என்னும் முத்திரையாகும். 3.

ஹே கலசோத்பவ! மேற்சொல்லப்பட்ட (ஸர்வ) வித்ராவிணீ முத்திரையில், நேராக நீட்டப்பட்ட தர்ஜநீ, நடுவிரல் இவைகளை அங்குசாகாரமாகச் சற்று வளைத்தலே (ஸர்வ) ஆகர்ஷிணீ என்னும் முத்திரையாகும். 4.

ஹே அகஸ்தியரே! பராங்முகமான (அஃதாவது இரு புறங்கைகளையும் ஒன்றுக்கொன்று அபிமுகமாயிருக்கின்ற) இருகைகளின் விரல்களையும் கோத்துக்கொண்டு கைகளை இறுக மூடிக்கொள்ளவும். (தர்ஜநி முதலிய விரல்கள் கையினுள் அங்குசாகாரமாக வளைந்து பரஸ்பர ஸம்பந்தத்துடன் கூடியதாயிருக்கும்). பார்ஶ்வ ஸம்பந்தமுடையதாய் இரு கட்டைவிரல்களையும் சேர்த்து மற்ற விரல்களைக் கீழ் நோக்கி அமுக்கும்படி வைத்துக்கொள்ளவும். இம் முத்திரைக்கு ஸர்வவஶங்கரீ எனப்பெயர். 5.

ஹே வாதாபியைக் கொன்ற அகஸ்தியரே! இரு கைகளையும் பார்ஶ்வ ஸம்பந்தமுடையவைகளாயும், நமக்கு அபிமுகமாகவும் வைத்துக்கொள்ளவும். இரண்டு சுண்டு விரல்களையும் குறுக்காக ஒன்றின் மேலொன்றாக வைத்து பவித்ர விரல்களுக்குமேல் சுண்டு விரல்களிருக்கும்படியாக, வலது சுண்டுவிரலை இடதுநடுவிரலாலும், அவ்வாறே இடது சுண்டுவிரலை வலதுநடுவிரலாலும் அழுத்திப் பிடித்துக் கொள்ளவும். நடு விரல்களின் நகங்களை இரு கட்டைவிரல்களாலும் அழுத்திக்கொள்ளவும். ஸரளமாயிருக்கிற இரு அநாமிகைகளையும் அவைகளுக்குப் பக்கங்களிலுள்ள இரு தர்ஜநிகளையும் தண்டம்போல் நீட்டிப் பிடிக்கவும். இம் முத்திரைக்கு ஸர்வோந்மாதிநீ என்று பெயர். 6.

மேற்கூறிய ஸர்வோங்மாதிநீ முத்திரையில் தண்டம் போல் பிடிக்கப்பட்ட இரு அநாமிகைகளையும் அவ்வாறே தர்ஜநிகளையும் அங்குசாகாரமாகச் சற்று வளைக்கவும். இது ஸர்வ கார்யங்களையும் ஸித்திபெறச் செய்யக்கூடிய ஸர்வ மஹாங்குசா என்னும் முத்திரையாகும். 7.

ஹே லோபாமுத்ரையின் பதியே! வலது பாகுவின் மத்தியில் இடதுபாகுவை வைத்துப் பரிவர்த்தனக் கிரமமாக (அஃதாவது இடதுகையை வலதுகையின் அடிப்பக்கமாகக் கொண்டு வந்து) வலதுகையின் பார்ஶ்வபாகத்தை இடது கையின் பார்ஶ்வபாக ஸம்பந்த முடையதாய்ச் செய்யவும். பிறகு வலது சுண்டுவிரலையும் அநாமிகையையும் இடது நடுவிர லுக்கு அடிவழியாகச் செலுத்தி இடது தர்ஜநியால் நன்கு பிடித்துக்கொள்ளவும். அவ்வாறே இடது சுண்டு விரலையும், அநாமிகையையும் வலது தர்ஜநியால் பிடிக்கவும். இரு நடுவிரல்களையும் நிமிர்த்தி பார்ஶ்வ ஸம்பந்தமுடையவை களாயும், அவ்வாறே இருகட்டைவிரல்களையும் செய்யவும். எல்லாவற்றிலும் உத்தமமானதாயும் யோகிநிகளின் அநு க்ரஹத்திற்குக் காரணபூதமாயுமிருக்கின்ற இம்முத்திரைக்கு ஸர்வகேசரீ என்று பெயர். 8.

ஸர்வோங்மாதிநீ முத்திரையில் விஸ்தரித்தபடி முதலில் இரண்டு சுண்டுவிரல்களையும் இரண்டு நடுவிரல்களால் பிடித் துக்கொண்டு ஒவ்வொரு கையின் கட்டைவிரலையும் அதன் அதன் தர்ஜநியோடு அர்த்தசந்திராகாரமாய்ச் சேர்த்து (அஃதாவது இரு விரல்களின் நுனிகளையும் மத்தியில் அர்த்தசந்திரரூப இடைவெளியுள்ளதாய்ச் சேர்த்து) இரு கைகளையும் இறுக மூடவும். வெளியில் நீட்டிக்கொண்டிருக் கும் இரு அநாமிகைகளையும் பரஸ்பரம் அபிமுகமாகச் சேர்த்து நமக்கு எதிர்ப்பக்கமாக நீட்டிப் பிடிக்கவும். ஸர்வ ஸித்திகளையும் அருளுகின்ற இம்முத்திரைக்கு ஸர்வபீஜம் எனப் பெயர். 9.

இருகைகளையும் பார்ஶ்வ ஸ்ப்ருஷ்டமாயும், ஸ்வாபிமுக மாகவும் வைத்துக்கொண்டு, அங்குசாகாரமாக வளைக்கப்பட்ட தர்ஜநிகளின் நுனிகளை நேராக நிமிர்ந்திருக்கின்ற மத்யமை யின்மேல் வைத்து, இவ்விரல்களின் மத்தியில் தோன்றுகிற இடைவெளியில், இடது அநாமிகையை வலது சுண்டு விரலுக்கு அடிவழியாய்ச் செருகவும். அவ்வாறே வலது அநாமிகையையும் செருகவும். இரு சுண்டுவிரல்களையும் பார்ஶ்வ சம்பந்தமுடையவைகளாகவும் மத்தியமை ஸம்பந்த முடையவைகளாகவும் சேர்த்து நிமிர்த்திப் பிடித்துக்கொள்ள வும். இரு கட்டைவிரல்களின் நுனிகளை மத்தியமைகளின் மத்யரேகைகளோடு சேர்க்கவும். இதுவே எல்லாவற்றிற் கும் முதலாவதான யோநிமுத்திரை எனப்படும். (இம் முத்திரை பத்தாவதாகவும் எல்லாவற்றிற்கும் முதன்மை யானதெனவும் இங்கு வியவஹரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் ஸமாதானம் வேறு கிரந்தங்களில் விரிவாகக் கூறப் பட்டிருக்கின்றது. அங்கு கண்டு தெளிக). 10.

ஹே தேவர்ஷியே! ஸ்ரீதேவியின் ப்ரீதிக்குக் காரண மான இம் முத்திரைகள் பூஜா காலங்களில் குருவின் உப தேசக் கிரமப்படி காண்பிக்கத்தக்கவைகள்.

முப்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 20).

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்.

தேவீதர்சந தீக்ஷா வர்ணனம்.

அகஸ்தியர்.—கருணைக் கடலான அஶ்வாநநரே! தேவி யைத் தர்சிப்பதில் எத்தகைய தீக்ஷை செய்துகொள்ள வேண்டும் கூறுங்கள்.

ஹயக்ரீவர்.—உனக்கு அந்த எண்ணமிருந்தால் பாப மெனும் சேற்றை யுலர்த்தும் அந்த தீக்ஷா விதியைக் கூறு கிறேன்! கேளும். கையில் சிவபுரத்தைத் தியானம் செய்து மூலாங்கமாலினியை ஜபிக்கவேண்டும். குரு சிஷ்யனது உடலைத் தொடல் வேண்டும். இது ஸபர்சதீக்ஷை யெனப் படும். தெளிந்த புத்தியுள்ள குரு ஸ்ரீகாமாக்ஷியைத் தியா னம் செய்து கண்களைத் திறந்து சிஷ்யனை நன்றாகப் பார்ப்பது த்ருக்தீக்ஷையாம். குருவைத் தர்சித்த மாத்திரத்தினாலும், அவருடன் பேசுவதாலும், அவரைத் தொடுவதாலும், உடனே ஞானம் உதயமாகும். அது சாம்பவீதீக்ஷை யெனப்படும். தேவியினது சரீரம் போலவே குருவின் தேஹமுமிருக் கின்றது. குருவின் அருளால், சிஷ்யனும் தேவீ வடிவனாக ஆகின்றான். நீண்டகாலம் சிஷ்யன் செய்த பணிவிடை யால் ஸந்தோஷமடைந்த குரு மௌனமாய்ச் சிஷ்யனுக்கு அநுக்கிரஹம் செய்ய ஸங்கல்பம் செய்யின் அது மானஸீக தீக்ஷை எனப்படும். எல்லாத் தீக்ஷைகளிலும் இதுவே மிக உத்தமமானதாகும். ஆதியில் கிரியாதீக்ஷை செய்துகொள்ள வேண்டும். அதைக் கூறுகிறேன் கேளும்! சுக்லபக்ஷத்தில் சுபமான தினத்தில் சுத்தமனமுள்ளவனைத் தீக்ஷை ஆரம் பிக்க வேண்டும். நாக்கு, வாய் முதலியவைகளைச் சுத்தம் செய்துகொண்டு விதிப்படி ஸ்நாநஞ்செய்து ஸந்த்யையை முடித்துக் குருவின் உடலில் தேவியைத் தியானம் செய்ய வேண்டும். ஏகாந்தத்தில் மௌனியாக வஸித்துக்கொண்டு ஆகாரத்தை நியமமாக உட்கொள்ளவேண்டும். குருவும் அப் படியே இருந்து பூஜா மண்டலத்தில் நுழையவேண்டும். தேவீ ஸூக்தத்துடன் கூடியதும், மாத்ருகையுடன் கூடியது மான வித்யாங்யாஸத்தைச் செய்து, புருஷஸூக்தத்திலுள்ள பதினாறு ருக்கு(மந்த்ரங்)களால் ஆவாஹனம், ஆஸநம், பாத்யம், அர்க்யம், ஆசமநம், ஸ்நாநம், வஸ்த்ரம், ஆபரணம், கந்தம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், தாம்பூலம், பிரதக்ஷிணம், நமஸ்காரம் என்னும் பதினாறு உபசாரங்களால் அம்பிகையை அர்ச்சிக்கவேண்டும். ஸஹஸ்ராக்ஷர வித்யை யால் புஷ்பாஞ்ஜலியை அளிக்கவேண்டும்.

ஓம் ஐம் ஹ்ரீம் ஶ்ரீம் ஐம் க்லீம் ஸௌ: ஓம் நம: த்ரிபுரஸுந்தரி ஹ்ருதயதேவி ஶிரோதேவி ஶிகாதேவி கவசதேவி நேத்ரதேவி அஸ்த்ரதேவி காமேஶ்வரி பகமாலிநி நித்யக்லிந்நே பேருண்டே வஹ்நிவாஸிநி மஹாவஜ்ரேஶ்வரி வித்யேஶ்வரி பரசிவதூதி த்வரிதே குலஸுந்தரி நித்யே நீலபதாகே விஜயே ஸர்வமங்களே ஜ்வாலாமாலிநி சித்ரே மஹாநித்யே பரமேஶ்வரி மித்ரேஶமயி ஷஷ்டீஶமயி ஓட்யாணமயி சர்யாநாதமயி லோபாமுத்ராமயி அகஸ்த்யமயி காலதாபனமயி தர்மாசார்யமயி முக்தகேஶீஶ்வரமயி தீபகலாநாதமயி விஷ்ணுதேவமயி ப்ரபாகரதேவமயி தேஜோதேவமயி மநோஜதேவமயி அணிமாஸித்தே மஹிமாஸித்தே கரிமாஸித்தே லகிமாஸித்தே ஈஶித்வஸித்தே வசித்வஸித்தே ப்ராப்திஸித்தே ப்ராகாம்யஸித்தே ரஸஸித்தே மோக்ஷஸித்தே ப்ராஹ்மி மஹேஶ்வரி கௌமாரி வைஷ்ணவி வாராஹி இந்த்ராணி சாமுண்டே மஹாலக்ஷ்மி ஸர்வஸம்க்ஷோபிணி ஸர்வவித்ராவிணி ஸர்வாகர்ஷிணி ஸர்வவஶங்கரி ஸர்வோந்மாதிநி ஸர்வமஹாங்குஶே ஸர்வகேசரி ஸர்வபீஜே ஸர்வயோநே ஸர்வத்ரிகண்டே த்ரைலோக்ய மோஹநசக்ரஸ்வாமிநி ப்ரகடயோகிநி பௌத்ததர்ஶநாங்கி காமாகர்ஷிணி புத்தியாகர்ஷிணி அஹங்காராகர்ஷிணி ஶப்தாகர்ஷிணி ஸ்பர்ஶாகர்ஷிணி ரூபாகர்ஷிணி ரஸாகர்ஷிணி கந்தாகர்ஷிணி சித்தாகர்ஷிணி தைர்யாகர்ஷிணி ஸ்ம்ருத்யாகர்ஷிணி நாமாகர்ஷிணி பீஜாகர்ஷிணி ஆத்மாகர்ஷிணி அம்ருதாகர்ஷிணி ஶரீராகர்ஷிணி குப்தயோகிநி ஸர்வாஶாபரிபூரகசக்ரஸ்வாமிநி அநங்ககுஸுமே அநங்கமேகலே அநங்கமதநே அநங்கமதநாதுரே அநங்கரேகே அநங்கவேகிநி அநங்காங்குஶே அநங்கமாலிநி குப்ததரயோகிநி வைதிகதர்ஶநாங்கி ஸர்வஸம்க்ஷோபகாரகசக்ரஸ்வாமிநி பூர்வாம்நாய அதிதேவதே ஸ்ருஷ்டிரூபே ஸர்வஸம்க்ஷோபிணி ஸர்வவித்ராவிணி ஸர்வாகர்ஷிணி ஸர்வாஹ்லாதிநி ஸர்வஸம்மோஹிநி ஸர்வஸ்தம்பிநி ஸர்வஜ்ரும்பிணி ஸர்வவஶங்கரி ஸர்வரஞ்ஜிநி ஸர்வோந்மாதிநி ஸர்வார்த்தஸாதிகே ஸர்வஸம்பத்ப்ரபூரணி ஸர்வமந்த்ரமயி ஸர்வத்வந்த்வக்ஷயகரி ஸம்ப்ரதாயயோகிநி ஸௌரதர்ஶநாங்கி ஸர்வ

ஸௌபாக்யதாயகசக்ரே ஸர்வஸித்திப்ரதே ஸர்வஸம்பத்ப்ரதே ஸர்வப்ரியங்கரி ஸர்வமங்களகாரிணி ஸர்வகாமப்ரதே ஸர்வதுக்கவிமோசநி ஸர்வம்ருத்யுப்ரஶமநி ஸர்வவிக்நநிவாரிணி ஸர்வாங்கஸுந்தரி ஸர்வஸௌபாக்யதாயிநி குலோத்தீர்ணயோகிநி ஸர்வார்த்தஸாதகசக்ரே ஸர்வக்ஞே ஸர்வஶக்தே ஸர்வைஶ்வர்யபலப்ரதே ஸர்வக்ஞானமயி ஸர்வவ்யாதிநிவாரிணி ஸர்வாதாரஸ்வரூபே ஸர்வபாபஹரே ஸர்வாநந்தமயி ஸர்வரக்ஷாஸ்வரூபிணி ஸர்வேப்ஸிதப்ரதே நிகர்ப்பயோகிநி வைஷ்ணவதர்ஶநாங்கி ஸர்வரக்ஷாகரசக்ரஸ்தே தக்ஷிணாம்நாயேசி ஸ்திதிரூபே வசிநி காமேசி மோதிநி விமலே அருணே ஜயிநி ஸர்வேஶ்வரி கௌளிநி ரஹஸ்யயோகிநி ஶாக்ததர்சநாங்கி ஸர்வரோகஹரசக்ரேசி பஶ்சிமாம்நாயேசி தநுர்பாண பாஶாங்குஶ தேவதே காமேசி வஜ்ரேசி பகமாலிநி அதிரஹஸ்யயோகிநி ஶைவதர்ஶநாங்கி ஸர்வஸித்திப்ரதசக்ரகே உத்தராம்நாயேசி ஸம்ஹாரரூபே ஶுத்தபரே பிந்துபீடகதே மஹாத்ரிபுரஸுந்தரி பராபராதிரஹஸ்யயோகிநி ஶாம்பவதர்ஶநாங்கி ஸர்வாநந்தமய சக்ரேசி த்ரிபுரே த்ரிபுரேசி த்ரிபுரஸுந்தரி த்ரிபுரவாஸிநி த்ரிபுராஶ்ரீ த்ரிபுரமாலிநி த்ரிபுரஸித்தே த்ரிபுராம்பே ஸர்வசக்ரஸ்தே அநுத்தராம்நாயாக்யஸ்வரூபே மஹாத்ரிபுரபைரவி சதுர்விதகுணரூபே குலே அகுலே குலாகுலே மஹாகௌளிநி ஸர்வோத்தரே ஸர்வதர்ஶநாங்கி நவாஸநஸ்திதே நவாக்ஷரி நவ மிதுநாக்ருதே மஹேஶ மாதவ விதாத்ரு மந்மத ஸ்கந்த நந்தி இந்த்ர மநு சந்த்ர குபேர அகஸ்த்யே துர்வாஸ க்ரோதபட்டாரக வித்யாத்மிகே கல்யாண தத்துவத்ரயரூபே சிவசிவாத்மிகே பூர்ணப்ரஹ்மஶக்தே மஹாபரமேஶ்வரி மஹாத்ரிபுரஸுந்தரி தவ ஶ்ரீபாதுகாம் பூஜயாமி நம: || ஶ்ரீம் ஹ்ரீம் ஐம் ||

இந்த ஸஹஸ்ராக்ஷரவித்யையால் ஶ்ரீதேவிக்கு புஷ்பாஞ்ஜலியை யளிக்காவிடில் பூஜையே வீணாகுமென்று வேதவாதிகள் கூறுகின்றனர். கோமயத்தால் பூமியைச் சுத்தம்செய்து அதில் சுத்தமான ஆறுபடி அரிசியைப் பரப்பி, அதன்

மீது ஆறுபடிஜலம் நிறைந்த ஒரு புதிய (கும்பத்தை) பாத்திரத்தை வைத்து, அதனுள் பஞ்சரத்னங்களையும், ஆல் அரசு மா நாவல் அத்தி இந்த மரங்களின் பட்டைகளையும் தளிர்களையும் போட்டு, அக்ரத்தில் ஒரு முதிர்ந்த தேங்காயையும் வைக்கவேண்டும். அதை, கந்தம் புஷ்பம் தூபதீபங்களால் அர்ச்சித்து, ஸ்ரீ காமாக்ஷியின் வடிவமாகக் கருதி கலசத்தைக் கரத்தால் தொட்டுக்கொண்டே மாத்ருகையுடன் ஸ்ரீ சிந்தாமணி மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். நூற்றெட்டு முறை ஜபமானபின் தீபத்தைக் காட்டவேண்டும். பின்னர் வஸ்திரத்தினால் கண்களைக்கட்டி ஏகாந்தமாகச் சிஷ்யனை யழைத்து மூன்றுமுறை ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்யச்சொல்லி குரு அவன் கையில் புஷ்பங்களைக் கொடுத்து புஷ்பாஞ்ஜலி செய்யும்படி கூறவேண்டும். "ஸ்ரீ நாதே! கருணா ராசே! பரஞ்ஜ்யோதிஸ்ஸான ஈச்வரீ! உன் பாதாரவிந்தத்தில் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கப்பட்டது. பரந்தாம! பரம்ப்ரஹ்ம! எனக்கு நீயே பரதேவதை, இன்று முதல் சரணாகதி யடைந்த என் மக்களைக் காத்தருள்வாய்" என்று கூறி குருவின் பாதாரவிந்தத்தில் சிஷ்யன் சிரஸ்ஸை வைத்து வணங்க வேண்டும். "ஜன்மாந்திர பாக்யவசத்தினால் என் சிரஸ்ஸின் மீது ஸ்ரீ குருபாதுகைகள் வைக்கப்பட்டன. மும்மூர்த்திகளைச் சேவித்ததனால் இந்த பாக்யம் கிட்டிற்று" என்று கூறி பக்தி ததும்பச் சாந்தனாய் குருவின் இடதுபுறத்தில் கர்வத்தைவிட்டு விநயத்துடன் நிற்கவேண்டும். குரு சிஷ்யனை மூலமந்தரத்தால் ப்ரோக்ஷித்து, கண் கட்டை யவிழ்த்து அர்ச்சனையின் கிரமத்தைக் காட்டவேண்டும். சர்க்கரை மது நெய் கதலீபழம் பாயஸம் ஆகிய இந்த நைவேத்யத்தை மஹா த்ரிபுரஸுந்தரிக்களிக்க வேண்டுமென்று குரு உத்தரவிட வேண்டும். இடது காதில் மெதுவாக ஷோடசாக்ஷரீ மந்த்ரத்தை உபதேசிக்கவேண்டும். பிறகு வெளியில் வந்து பட்டவஸ்த்ரத்துடன் கூடிய சிஷ்யனை மணையின்மீது கிழக்கு முகமாக உட்காரவைத்து அவனுக்கு மந்த்ரத்துடன் அந்த கலச ஜலத்தால் அபிஷேகஞ் செய்யவேண்டும். பின்னர் சுத்த ஜலத்தில் ஸ்நாநம்செய்து வஸ்திர முடுத்தி நூற்றெட்டுமுறை

மந்த்ரத்தை ஜபம் செய்துவிட்டு அவன் தூங்கவேண்டும். நல்ல ஸ்வப்நம் தோன்றினால் உத்தமமான புண்யத்தைச் செய்ய வேண்டும். துஸ்வப்நம் தோன்றினால் ஆயிரத்தெட்டுமுறை ஜபம் செய்து விதிப்படி தேவீபூஜை செய்விக்க வேண்டும். ஒரு ஸ்வப்நமும் தோன்றாவிடில் வெகுகாலஞ் சென்றபிறகே ஸித்தி உண்டாகும். சிறந்த பக்தியினால் மிகுதியான தேவியினருளைப் பெறவேண்டும். உடனே அந்த உத்தம சிஷ்யன் பங்க்திபாவநகர்களில் பாவநனாக ஆவான்.

ஸ்ரீகுருவிற்குச் சீடன் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்து அவருக்கு அதீனனாய் வாழ வேண்டும்; அவரை மீறக்கூடாது. அவர் அருளிருந்தால் அரைக்ஷணத்தில் மோக்ஷலக்ஷ்மி ஸித்திப்பாள். பிறவியைத் தாண்டிவைக்கும் ஆசார்யன் கிடைப்பது அதிதுர்லபம். கு என்னும் எழுத்து இருளையும் ரு என்னும் எழுத்து அதை அகற்றுவது என்ற பொருளையு முடையதாம். ஆதலின் குரு எனில் இருளை அகற்றுபவர் என்பது பொருள். அறிவு வடிவனான ஆசார்யனைப் பெற்றபின் வேறொரு குருவைத் தேடலாகாது. அவர் கடுமையாகப் பேசினாலும் அதை ஆசீர்வாதமாகக் கருதவேண்டும். லௌகிகமோ வைதிகமோ வேதாந்தமோ எதைக் குருவினிடமிருந்து உபதேசம் பெறுவதானாலும் முதலில் அவரைப் பணியவேண்டும். இங்ஙனம் மூன்று தீக்ஷையும் செய்துகொண்ட பிறகு செய்யவேண்டியதைப் பின்னரறியவேண்டும். குரு பக்தியே ஸதாசாரம்; குருத் துரோஹமோ மஹாபாதகமாம். அவர் திருவடிகளை நினைப்பதே முக்தி. இந்தக் கிரமம் உடலுள்ளவரை அனுஷ்டிக்கத்தக்கதாகும். பசு பிராஹ்மண வதங்களைவிட குருவின் எதிரில் அஸத்தியங் கூறுவது பாபமாம். பிரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தமாக உள்ள ஒவ்வொன்றும் எனது குரு பரம்பரையாகும். ஆதலின் எல்லோரையும் அர்ச்சிக்க வேண்டிய எனக்கு எவர்தான் அவனியில் அர்ச்சிக்கத் தகாதவர்? என்று எல்லோருக்கும் அநுகூலமாக இருப்பவனே சிஷ்யனாவான். சீலம் முதலிய விமல குண

ஸம்பன்னனுயிருத்தலாலும் குரு சாஸனத்திலே அடங்கியிருத்தலாலும் சிஷ்யன் என்று ஸாதகன் கூறப்படுகிறுன்.

ஜபம் செய்து களைப்படைந்தால் தியாநமும், தியாநம் செய்து களைப்படைந்தால் ஜபமும் செய்ய வேண்டும். ஜபத்துடனும் தியாநத்துடனுங் கூடியவனுக்கு விரைவில் மந்த்ரம் ஸித்தியாகும். தியாந ஸாமர்த்தியத்தால் புழுவுங்கூட வண்டாகிறது. அங்ஙனமே ஸமாதி ஸாமர்த்தியத்தால் ஜீவனும் பிரஹ்மமாகிறுன். எங்ஙனம் கண்கள் மூடிய காலத்தில் அதாவது சுழுப்தியில் எப்படி பிரபஞ்சம் காணப்படுவதில்லையோ அங்ஙனமே உலகில் உபாஸகன் கண்களைத் திறந்திருக்கும்போது அதாவது ஜாக்கிரத்திலும் பிரபஞ்சம் தோற்ருது. அவனுக்கு எங்கும் நிறைந்த ஆத்மவஸ்துவே காணப்படும். இங்நிலையே தியாநமாகும். வர்ணங்களுக்கு அதீதமாயும் விகார மற்றதாயுமுள்ள பரதத்துவம் அறியப்படின் அந்த ஸாதகனுக்கு ஸகல மந்த்ரங்களும் மந்த்ர தேவதைகளுடன்கூட வேலைக்காரர்களாகின்றன.

ஆத்மைக்யபாவ நிஷ்டையிலுள்ளவனது செயல்களே சாஸ்திரம், யோகம், தபஸ், மந்த்ரம், த்யாநம் இவைகளாகும். தேஹாபிமானம் நீங்கிப் பரமாத்ம ஸ்வரூபத்தை யுணர்ந்தபின் மனம் எங்கு செல்கிறதோ அதே ஸமாதியாம். எங்குமுள்ளதாய், ஆனந்தமாய், ஆத்மாவாய், அத்வயமாய் உள்ள தன் ஸ்வரூபத்தைக் கண்டபின் ஒருவன் அடையவேண்டியதோ அறியவேண்டியதோ வேருென்று மில்லை.

கோடி முறை பூஜை செய்வதற்கு ஸமம் ஒரு முறை ஸ்தோத்ரம் செய்வது; கோடி ஸ்தோத்திரங்களுக்கு ஸமம் ஒரு முறை ஜபம் செய்வது; கோடி ஜபத்திற்கு ஸமம் ஒரு முறை தியாநம் செய்வது; கோடித் தியாநத்திற்கு ஸமம் லயமாவது. தேஹமே தேவாலயமாம்; ஜீவனே அநாதியான ஈஸ்வரனும்; அவ்வீஸ்வரனை அக்ஞான மென்னும் நிர்மால்யத்தை அகற்றி, ஸோஹம் (அவனே நான் என்னும்)

பாவனையால் பூஜித்தல் வேண்டும். உமி மூடியுள்ள வரை நெல் எனப்படும்; உமி விண்டபின் அது அரிசியாம். பாசத்தால் கட்டப்பட்டுள்ள வரையில் ஜீவனெனப்படுவான்; பாசமகன்ற பின் மஹேஶ்வரனவன். ஆகாயத்தில் பக்ஷிகளது கதியும், ஜலத்தில் ஜலசரங்களது கதியும், பிறர்க்கு எங்ஙனம் தெரிவதில்லையோ அங்ஙனமே மஹா புருஷர்களது செயலும் எளிதில் அறியத்தக்கதல்ல. நித்ய பூஜை பகலிலும், நைமித்திகம் இரவிலும், காம்யம் இரண்டு வேளைகளிலும் செய்யத் தக்கதென்பது சாஸ்திர விதியாகும். கோடி கோடியான மஹா தானங்களிலும், கோடி கோடியான மஹா விரதங்களிலும், கோடி கோடியான மஹா யாகங்களிலும் ஸ்ரீபாதுகா ஸ்மரணமே மிகச் சிறந்ததாம். அறிந்தோ அறியாமலோ உடல் உள்ளவரை வர்ணாஶ்ரம ஆசாரங்கள் அவசியம் கர்ம மோக்ஷத்தின் பொருட்டுச் செய்யத் தக்கன. குருவின் முகத்திலிருந்து கிளம்பிய சொற்கள் நிஷித்தமாயிருப்பினும் அதுவே வைதிகமான சாஸ்திரமென்னும் நிச்சயத்தோடு அநுஷ்டித்தல்வேண்டும். அது மீறத்தக்கதல்ல. ஒருவன் ஜாதியினாலோ, வித்யையினாலோ, செல்வத்தினாலோ சிறந்தவனாயினும் அவன் வெகுதூரத்தில் குருவைக் கண்டவுடன் தண்டம்போல் வீழ்ந்து ஒருமுறை நமஸ்கரித்து மும்முறை பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும். ஸர்வதேவதைகளையும் மிக அற்பமான மற்றெதையும் குரு என்று எண்ணி நமஸ்கரிக்க வேண்டும். உலோஹத்தினாலும் மண்ணாலும் செய்யப்பட்ட ப்ரதிமைகளைத் தெய்வ மென்றெண்ணி நமஸ்கரிக்கவேண்டும்.

குருவை ஹூம் என்று அதட்டுதலாலும், அவரை நீ என்று மரியாதையின்றிப் பேசுவதாலும், வீண் வாதத்தினால் பிராஹ்மணனை ஜயித்தலாலும், ரஹஸ்யமான சாஸ்திரங்களை விகற்பித்துப் பரிகசித்தலாலும், ஒருவன் பிரஹ்மராக்ஷஸனாவான். எப்போதும் அத்வைதத்தையே பாவித்தல் வேண்டும். ஆனால் குருபக்தியில் அபேத அத்வைதத்தைப் பாவித்தல் கூடாது. இதர மதங்களையும் வேதசாஸ்திரங்

களையும் நிந்திக்கக் கூடாது. குரு ஒரே கிராமத்தில் வஸித்தால் சிஷ்யனானவன் மூன்று ஸந்திகளிலும் அவரை வணங்க வேண்டும். க்ரோச தூரத்தில் வஸித்தால் பிரதி தினம் ஒருமுறை ஏகாக்ர சித்தனாய்க் குருவை நமஸ்கரிக்க வேண்டும். அர்த்த (பாதி) யோஜனை தூரத்தில் இருந்தால் பஞ்சபர்வாக்களிலும் வந்து நமஸ்கரிக்க வேண்டும். ஒரு யோஜனை முதல் பனிரண்டு யோஜனை தூரத்திலுள்ளவன் அந்தந்த யோஜனை தூரத்திற்குச் சொன்னபடி அதாவது முதல் யோஜனையிலுள்ளவன் மாதத்திற்கொரு முறையிலும், பத்து யோஜனையிலுள்ளவன் பத்து மாதங்களுக் கொரு முறையாகவும் குருவை நமஸ்கரிக்கவேண்டும். வெகு தூரத்திலுள்ளவன் இஷ்டமானபோது குருவினிடம் வந்து நமஸ்கரிக்கவேண்டும்.

அரசன், தேவதை, குரு ஆகிய இவர்களிடம் வெறுங் கையுடன் செல்லலாகாது. சக்திக்கேற்றபடி பழம், புஷ்பம், வஸ்திரம் முதலியவைகளைக் கொண்டுபோய் ஸமர்ப்பிக்க வேண்டும். குரு என்பவர் மனிதத்தோலால் மூடப்பட்ட ஸாக்ஷாத் பரமசிவனேயாவர். நல்ல சிஷ்யர்களை ரக்ஷிக்கும் பொருட்டு இங்ஙனம் பகவான் (சரீரத்திற்குள்) மறைந்து வஸிக்கிறார். ஸத்பக்தர்களுக்கு அருள் புரியவே, உருவமற்றவ ராயினும் கிருபாநிதியான சிவன் ஒரு ஆகார (உருவ)த்தைப் பூண்டு உலகில் ஸம்ஸாரியைப்போல் ஸஞ்சரிக்கிறார். குரு, மூன்று கண்களில்லாத சிவனாகவும், நான்கு கைகளில்லாத நாராயணனாகவும், நான்கு முகங்களில்லாத பிரஹ்மாவாகவும், கூறப்படுகின்றார். நன்றாக உதித்த சூர்யனும் குருடனுக்குத் தெரியாததுபோல் கண்முன்னே நிற்கும் பரதத்துவ மென்றும் குரு, பாக்யஹீனர்களின் கண்ணிற்குப் புலப்படுவ தில்லை. தத்துவத்தைச் சிந்தனை செய்வது உத்தமமாம்; ஜப சிந்தை மத்யமமாம்; சாஸ்திர சிந்தை அதமமாகும்; லோக சிந்தை அதமாதமமாகும். குருவைவிட சிரேஷ்டமான தத்துவமில்லை. ஞானத்திற்கு அதிகமான ஸுகமில்லை. பக்தியைவிடச் சிறந்த பூஜையில்லை. மோக்ஷத்திற் சிறந்த

பலனில்லை. ஸர்வ வேதங்களிலும், தந்த்ரங்களிலும், பிரஹ்மா விஷ்ணு சிவன் முதலிய நாமங்களிலும் அங்கங்கே சப்தங்களால் பராசக்தியான காமாக்ஷியே கூறப்படுகிருள்.

சசீ-இந்திரர்கள், ரோஹிணீ-சந்திரர்கள், ஸ்வாஹா-அக்நீக்கள், வாக்-பிரஹ்மாக்கள், லக்ஷ்மீ-நாராயணர்கள், பார்வதீ-பரமேஸ்வரர்கள், த்விட்-அக்நீக்கள், பிந்து-நாதங்கள், ப்ரக்ருதி-புருஷர்கள், ஆதார-ஆதேயங்கள், போக-மோக்ஷங்கள், பிராண-பானங்கள், சப்த-அர்த்தங்கள், விதிநிஷேதங்கள், ஸுக-துக்கங்கள், முதலிய த்வந்த்வங்கள் யாவும் பரப்ரஹ்மமே. அதைத்தவிற வேறில்லை. காமாக்ஷி என்ற பெயருடன் உருக்கொண்டு நிற்கும் பரஞ்ஜோதிஸ்ஸை மும்மூர்த்திகளும் பிரதிதினம் தியானம் செய்கின்றனர். இங்ஙனம் சாக்தமார்க்கத்தில் உள்ளவர் தேவியின் அருளால் புக்திமுக்திகளுக்குப் பாத்திரமாவர். மந்த்ரத்துடனே, மந்த்ரமில்லாமலோ காமாக்ஷியை அர்ச்சிக்கும் பெண்களும், வைஸ்யர்களும், சூத்ரர்களுங்கூடப் பரகதியை அடைவார்கள். மந்த்ர பூர்வமாகப் பூஜிக்கும் க்ஷத்திரியர்களையும், பிராஹ்மணர்களையுங் பற்றிக் கூறுவானேன்! ஸம்ஸாரிகளாக இருந்தாலும் அவர்கள் முக்தர்களே. சர்க்கரை, மது, நெய், வாழைப்பழம், பாயஸம் இவைகளைப் பஞ்சபர்வாக்களில் எப்போதும் ஸ்ரீ அன்னைக்கு நிவேதனம் செய்யவேண்டும். சக்தியுள்ளவன் பூஜிக்காவிடில் தேவியின் சாபத்தைப் பெறுவான். சக்தியில்லாதவன் பாவனையால் அம்பிகையையர்ச்சிக்கவேண்டும்.

மங்களமான ஸதாசாரத்துடன் க்ருஹஸ்தன் அநுகூல மனைவியோடு தேவியைப் பூஜிக்க வேண்டும். குரு மும்முறை சிஷ்யனுக்கு ஆசாரத்தை உபதேசிக்க வேண்டும். அதை அவன் ஏற்காவிடில் சிஷ்யனுக்கே பாபம் உண்டாகும். குருவிற்குப் பாபமில்லை. அறிவுள்ளவன் குருபத்னியையும் குருவையும் தாய் தந்தையர்களாகவும், லக்ஷ்மீ நாராயணர்களாகவும், உமா மஹேஸ்வரர்களாகவும் பாவித்தல் வேண்டும்.

அகஸ்தியரே! இங்ஙனம் சுருக்கமாக எல்லாம் கூறப்பட்டது. இதை ஊக்கத்துடன் அறிந்தவன் ஸர்வக்ஞனாக ஆவான்.

முப்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று. சுலோகங்கள் 88.

நாற்பதாம் அத்தியாயம்.

மந்த்ரோபாஸனப்ரகாரத்தைக் கூறுதல்.

ஹயக்ரீவர்.—மந்த்ரக்ஞனான உபாஸகன் ஜபத்திற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் இடத்தை யடைந்து தன் மனதை இதர விஷயங்களிற் செல்ல விடாமல் மந்த்ரோபாஸனை யிலேயே ஏகாக்கிரமாய் நிறுத்தி, குருவை மனத்தினால் நன்கு பூஜித்து, அவரால் உபதேசிக்கப்பட்ட முறைப்படி மந்த்ராதிஷ்டான தேவதையைப் பூஜித்துத் தன் ஆத்மாவை மந்த்ராதிஷ்டான தேவதையாகப் பாவித்துத் தியானம் செய்துகொண்டு கிழக்கு முகமாய்ப் பத்மாஸனத்தில் உட்கார்ந்து ஏகாக்கிரசித்தனாய்த் தியானம் செய்யவேண்டும்.

பிறகு திரிகண்டா முத்திரையினால் குருவையும் இதரமான பெரியவர்களையும் வந்தனம் செய்ய வேண்டும். அதன் பிறகு பாலாமந்த்ரத்தின் பீஜாக்ஷரங்களை இரண்டு தடவையாக நடுவிரல் முதலாக ஐந்து விரல்களிலும் இரண்டு உள்ளங்கைகள், இரண்டு புறங்கைகளிலும் கிரமமாய்க் கரசுத்தி நியாஸம் செய்தல் வேண்டும். பின் அஸ்த்ர மந்த்ரத்தினால் கரதலங்களிலும் சரீர முழுவதிலும் வியாபகமாக நியாஸம் செய்து அக்னிப்பிராகார பாவனை வரையில் செய்தல் வேண்டும்.

பின்னர், பாதம், ஹ்ருதயம், சிரஸ் என்னும் மூன்று ஸ்தானங்களில் பிரதிலோமமாகவும், சிரஸ், ஹ்ருதயம்,

பாதம் என்பவைகளில் அநுலோமமாகவும் மாயாபீஜத்தோடு சேர்த்து ஸௌ:, க்லீம், ஐம், ஐம், க்லீம், ஸௌ: என்று வியாபகந்யாஸம் செய்யவும். இங்ஙனம் செய்தபின்னர், நாபி, ஹ்ருதயம் புருவமத்தியாகும் மூன்று ஸ்தானங்களிலும் பாலா மந்த்ர பீஜங்களை முறையே ந்யாஸம்செய்து, ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணமாகும் மூன்று சரீரங்களைப் பாவித்தல் வேண்டும்.

பின்னர் அகாராதி க்ஷகாராந்தமான ஐம்பத்தோரக்ஷரங் களோடு பாலா பீஜங்களைச் சேர்த்து அம்ஐம்-க்ஷம்ஐம் (51); அம்க்லீம்-க்ஷம் க்லீம் (51); அம்ஸௌ:-க்ஷம்ஸௌ: (51); என்று நாபி, ஹ்ருதயம், புருவமத்திகளிலும், மறுபடியும் அம்ஸௌ:-க்ஷம்ஸௌ: (51); அம்க்லீம்-க்ஷம் க்லீம் (51); அம்ஐம்-க்ஷம்ஐம் (51); என்று புருவமத்தி, ஹ்ருதயம், நாபி களிலும் ந்யாஸம் செய்யவேண்டும். இந்த நாப்யாதி ந்யாஸ மானது கரசுத்தி ந்யாஸம் செய்யாமல் செய்யலாகாது.

நவாஸன ந்யாஸம்:—இரண்டு பாதங்கள், முழங்கால் கள், தொடைகள், புட்டங்கள், குஹ்யம், மூலாதாரம், நாபி, ஹ்ருதயம், சிரஸ், என்னும் ஒன்பது ஸ்தானங்களிலும் 1. பிரஹ்மாஸனம், 2. விஷ்ண்வாஸனம், 3. ருத்ராஸனம், 4. ஈஸ்வராஸனம், 5. ஸதாசிவாஸனம், 6. புஷ்ப தூலி காஸனம், 7. உச்சீர்ஷாஸனம், (மஹோபதானம்) 8. பிர காசகாஸனம், 9. வித்யாஸனம் என்னும் ஒன்பது ஆஸனங் களையும் ந்யஸித்தல் வேண்டும். ந்யாஸமந்த்ரங்களைக் குரு முகமாய் அறியவும்.

பின், ஹ்ருதயத்தில் பத்ம முத்ரை, த்ரிகண்டா முத்ரை, யோனி முத்ரைகளைக் காட்டவும்.

குண்டலீ உத்தாபனம்:—பின் இரண்டு உதடுகளைக் குறுக்கி வாயுவை உள்ளே யிழுத்து ஹூம், ஹூம், ஹூம், என்று குண்டலினீ சக்தியை நித்திரையினின்றும் எழுப்பி

ஹ்ருதயத்தில் மந்த்ர சக்தியோடு சேர்த்து மேலுக்கு எழுப்பி துவாதசாந்த ஸ்தானமாகும் ஸஹஸ்ரதள கமலத்தில் பரமசிவத்தோடு ஐக்கியப் படுத்திப் பின்னர் அக்குண்டலினீ சக்தியை ஸ்வஸ்தானமாகும் மூலாதாரத்தில் சேர்ப்பித்தல் வேண்டும். (இதற்குப் பூதசுத்தி யென்றும் வேறு பெயருண்டு.)

பின்னர் வாக்பவ, காமராஜ, சக்தி பீஜங்களை முறையே மூலாதாரம், ஹ்ருதயம், ஆக்ஞைகளிலும், சிரஸ்ஸில் எல்லாப் பீஜங்களையும் நியஸித்தல் வேண்டும்.

இங்ஙனமே மேற்கூறிய மூன்று பீஜங்களையும் இரண்டு கரங்களின் மூலம், மத்தியம், அக்ரம் என்னும் மூன்று ஸ்தானங்களிலும் நியாஸம் செய்தல் வேண்டும்.

பின்னர், மூலமந்த்ரத்தின் கரநியாஸம், அங்கநியாஸங்களைச் செய்தல் வேண்டும்.

அதன்பின், குங்குமநியாஸம் செய்யவும். அது எங்ஙனமெனின், அம்ஸௌ:, க்ஷம்ஸௌ: (51), அம்க்லீம் க்ஷம்க்லீம் (51), அம்ஐம், க்ஷம் ஐம் (51), என்று ஐம்பத்தோரு மாத்ருகைகளையும் மூன்று பாலா பீஜங்களோடு சேர்த்து மாத்ருகாஸ்தானங்களில் நியாஸம் செய்ய வேண்டும்.

பின்னர் அதிக விஸ்தாரமில்லாமல் சுருக்கமாய் பூதலிபி நியாஸத்தை ஆசரிக்கவும். பூதலிபிகளின் எட்டு வர்க்கங்களை முறையே மூலாதாரம், நாபி, ஹ்ருதயம், கண்டம் (கழுத்து), தன் முகத்தின் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நான்கு திக்குகள் ஆக எட்டு ஸ்தானங்களிலும் நியாஸம் செய்தல் வேண்டும். பூதலிபியின் எட்டு வர்க்கங்களாவன :—

(1) அ-இ-உ-ரு-லு. (2) ஏ-ஐ-ஓ-ஔ. (3) ஹ-ய-ர-வ-ல. (4) க-ச-ட-த-ப. (5) $க^2$-$ச^2$-$ட^2$-$த^2$-$ப^2$. (6) $க^3$-ஜ-$ட^3$-$த^3$-$ப^3$. (7) $க^4$-$ஜ^2$-$ட^4$-$த^4$-$ப^4$. (8) ங-ஞ-ண-ந-ம என்பனவாம். ஒன்பதாவதாகிய ஶ-ஷ-ஸ என்னும் மூன்று அக்ஷரங்

களை முறையே மூலாதாரம், ஹ்ருதயம், சிரஸ் என்னும் மூன்று இடங்களில் நியஸித்தல் வேண்டும். பின்னர், அதே ஒன்பது வர்க்கங்களை வலது கக்ஷம், வலதுகை, வலது மணிபந்தம், வலது இடுப்பு, இடது இடுப்பு, இடது மணி பந்தம், இடதுகை, இடது கக்ஷம், ஹ்ருதயம் என்னும் ஒன்பது ஸ்தானங்களிலும் நியாஸஞ் செய்தல் வேண்டும்.

அதற்குப் பிறகு பூதலிபி நியாஸத்தின் ருஷி, சந்தஸ், தேவதை முதலியவற்றையும், கரநியாஸம், அங்க நியாஸம், தியானம் முதலியவற்றையும் செய்தல் வேண்டும். இந்த பூதலிபி நியாஸத்திற்கு சப்தபிரஹ்மம் ருஷியாகும்; பூதலிபி சந்தஸ்; மூலப்பிரக்ருதி தேவதை, தியானம் கூறப்படு கின்றது:—கரங்களில் அக்ஷமாலை, புஸ்தகம், புஷ்ப பாணங் கள், கோதண்டம், வரதம், அபயம் இவைகளைத் தரித்திருக் கின்றவளும் கழுத்தில் முத்து மாலைகளையும், தோள்வளை, கைவளை, சன்ன வீரம் முதலிய ஆபரணங்களையும் அணிந்த வளும், வாஸனைத் திரவியங்களாற்கூடிய சந்தனக் கலவை அணிந்த அங்கங்களை யுடையவளும், ரத்ன குண்டலங்களா லலங்கரிக்கப்பட்ட காதுகளையுடையவளும், அக்ஷரமயமான கல்ப விருக்ஷத்தின்கீழ் அழகான தாமரை மலரின்மேல்அமர்ந் துள்ளவளும், அக்ஷர ஸ்வரூபிணியாயுள்ளவளும், பக்தர்பால் மிகுந்த அன்புள்ளவளும், தன்னைச் சுற்றிலும் அநேக கோடி தூதிகணங்களால் சூழப்பட்டவளுமான பைரவீ தேவியைத் தியானித்து பஞ்ச பூஜை செய்து அதன் பின்னரே பூதலிபி நியாஸம் செய்தல் வேண்டும். கரஷடங்க நியாஸம் செய்யும் முறை கூறப்படுகின்றது:—

(1) ஹ○-ய○-ர○-வ○-ல○ = கட்டைவிரல் .... ஹ்ருதயம்
(2) க○-ச○-ட○-த○-ப○ = தர்ஜநீவிரல் .... சிரஸ்
(3) க^{2}○-ச^{2}○-ட^{2}○-த^{2}○-ப^{2}○ = நடுவிரல் .... சிகை
(4) க^{3}○-ஜ○-ட^{3}○-த^{3}○-ப^{3}○ = மோதிரவிரல் .... கவசம்
(5) க^{4}○-ஜ^{2}○-ட^{4}○-த^{4}○-ப^{4}○ = சுண்டுவிரல் .... நேத்ரம்
(6) ங○-ஞ○-ண○-ந○-ம○ = { உள்ளங்கை / புறங்கை } .... அஸ்த்ரம்.

விஸ்தாரமான பூதலிபி ந்யாஸம் கூறப்படுகின்றது :—

(1)	மூலாதாரம்—அ०-இ०-உ०-ரு०-லு०	5	எழுத்துகள்
(2)	நாடீகந்தம்—ஏ०-ஐ०-ஓ०-ஔ०	4	,,
(3)	ஸ்வாதிஷ்டானம்—க०-ச०-ட०-த०-ப०	5	,,
(4)	மணிபூரகம்—க^{2}०-ச^{2}०-ட^{2}०-த^{2}०-ப^{2}०	5	,,
(5)	அநாஹதம்—க^{3}०-ஜ०-ட^{3}०-த^{3}०-ப^{3}०	5	,,
(6)	விசுத்தி (கழுத்து)—க^{4}०-ஜ^{2}०-ட^{4}०-த^{4}०-ப^{4}०	5	,,
(7)	முகம் (வாய்)—ங०-ஞ०-ண०-ந०-ம०	5	,,
(8)	ஆக்ஞை (புருவமத்தி)—ஹ०-ய०-ர०-வ०-ல०	5	,,

இங்ஙனம் மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையிலுள்ள எட்டு ஸ்தானங்களில் எட்டு வர்க்கங்களை ந்யாஸித்துப் பின் ஒன்பதாவது வர்க்கமாகிய ஶ-ஷ-ஸ என்னும் மூன்று எழுத்துக்களையும் சிரஸில் ந்யாஸம் செய்யவேண்டும். பின்னர் ஸ்வரங்கள் (முதல் இரண்டு வர்க்கங்கள்) சிரஸ்ஸிலேயே ந்யஸித்தல் வேண்டும். அதற்கும் பின்னர் (1) வலது தோள், முழங்கை, மணிக்கட்டு, விரல்களின் மூலம், விரல்களின் நுனி; (2) இடது தோள், முழங்கை, மணிக்கட்டு, விரல்களின் மூலம், விரல்களின் நுனி; (3) வலது தொடை மூலம், முழங்கால், கணுக்கால், கால் விரல்களின் மூலம், விரல்களின் நுனி; (4) இடது தொடை மூலம், முழங்கால், கணுக்கால், கால் விரல்களின் மூலம், விரல்களின் நுனி, (5) வயிறு; (6) வலது புறம் இடது புறம்; (7) நாபி; (8) ப்ருஷ்டம் ஆகிய எட்டு ஸ்தானங்களிலும் எட்டு வர்க்கங்களை ந்யஸித்துப்பின் ஶ-ஷ-ஸ என்னும் மூன்றெழுத்துக்களை முறையே மூலாதாரம், ஹ்ருதயம், மூர்த்தா (சிரஸ்) என்னும் மூன்றிடங்களிலும் ந்யாஸம் செய்தல் வேண்டும்.

பூதலிபிகளின் வரலாறு கூறப்படுகின்றது :—

வர்க்கங்களின் தேவதைகள்.

1-வது வர்க்கம்—ஐந்து குற்றெழுத்துக்கள். பிரஹ்மா
2-வது ,, —நான்கு நெட்டெழுத்துக்கள் .... விஷ்ணு
3-வது ,, —ஹஂ-யஂ-ரஂ-வஂ-லஂ .... ருத்ரன்
4-வது ,, —கஂ-சஂ-டஂ-தஂ-பஂ .... வ்ரஜேசன்
5-வது ,, —க^{2}ஂ-ச^{2}ஂ-ட^{2}ஂ-த^{2}ஂ-ப^{2}ஂ.... இந்திரன்
6-வது ,, —க^{3}-ஜஂ-ட^{3}ஂ-த^{3}ஂ-ப^{3}ஂ .... யமன்
7-வது ,, —க^{4}ஂ-ஜ^{2}ஂ-ட^{4}ஂ-த^{4}ஂ-ப^{4}ஂ.... வருணன்
8-வது ,, —ஙஂ-ஞஂ-ணஂ-நஂ-மஂ .... ஸோமன்
9-வது ,, —ஶஂ-ஷஂ-ஸஂ .... சக்தித்திரயங்கள்

ஆக 42 எழுத்துக்கள்.

இங்ஙனம் பூதலிபியில் ஸ்ருஷ்டி நியாஸம் செய்து இதற்கு விபரீதமாக ஸம்ஹார நியாஸமும் செய்தல் வேண்டும். இந்த பூதலிபிகளுடன் பிந்துவேயன்றி விஸர்க்கங்களும்(ঃ), விஸர்க்கபிந்துக்களும்(ஃஂ) கூடச் சேர்த்து நியஸித்தல் வேண்டும்.

குறிப்பு :—இந்த நியாஸத்தில் இந்த மூல கிரந்தத்தின் படி அநேகபிழைகள் இருக்கின்றன. அப் பிழைகளை அஸல் பிரஹ்மாண்ட புராணத்தைக்கொண்டும், மாத்ருகாசக்ர விவேகம், சாரதா திலகம் முதலிய பிரமாண நூல்களைக் கொண்டும் திருத்தி மேலே கூறப்பட்டிருப்பது அறியத்தக்கது.

தமிழில் குறித்துள்ள பீஜாக்ஷரங்களை ஸம்ஸ்க்ருதத்திற்கு இணங்க பின்கண்டவாறு உச்சரித்தல் வேண்டும் :— ரு-ஜீ, லு-ஊ, க^{2}-வ க^{3}-ம, க^{4}-வ, ச^{2}-ஊ, ஜ^{2}-ஸ, ட^{2}-O, ட^{3}-ஐ, ட^{4}-ஐ, த^{2}-ய, த^{3}-ஒ, த^{4}-ய, ப^{2}-ஶ, ப^{3}-ஶ, ப^{4}-ஹ.

இதற்குப்பின், ரத்யாதி நியாஸம் செய்யத் தக்கது. அது விமர்சிக்கப்படுகின்றது :—

அறிவுள்ள உபாஸகன் தியான பூர்வகமாய் ரத்யாதி நியாஸத்தை யாசரித்தல் வேண்டும்.

காமாதி மன்மதர்களின் தியானம் வருமாறு :—செம்பருத்தம் புஷ்பத்தின் நிறத்திற்கொப்பான திருமேனியை யுடையவர்களும், குங்குமப்பூ முதலிய சிவந்த வாஸனைக் கலவையால் பூசப்பட்ட சரீரத்தோடு கூடியவர்களும், இடது தொடையில் சக்தி (ரதீதேவி) களையுடையவர்களும், கரும்புவில் ஐந்து புஷ்பபாணங்கள் இவைகளைத் தரித்திருப்பவர்களுமான காமன், காமதன், காந்தன் முதலிய ஐம்பத்தொரு மன்மதர் களைத் தியானம் செய்து, பிறகு ரதி-காமன் முதலிய மன்மத தம்பதிகளின் நியாஸம் செய்தல் வேண்டும்.

1. காமன்-ரதி
2. காமதன்-பிரீதி
3. காந்தன்-காமினீ
4. காந்திமான்-மோஹிநீ
5. காமகன்-கலஹப்பிரியா
6. காமசாரன்-விலாஸினீ
7. காமி-கல்பலதா
8. காமுகன்-ஶ்யாமவர்ணா
9. காமவர்த்தனன்-விஸ்மயா
10. ராமன்-விஸ்மயாக்ஷி
11. ரமன்-லோலிஹனா
12. ரமணன்-ரதி
13. ரதி நாதன்-திக்வக்த்ரா
14. ரதிப் பிரியன்-குப்ஜிகா
15. ராத்ரி நாதன்-தரா
16. ரமா காந்தன்-ரமா
17. ரம மாணன்-நிசா
18. கல்யாணன்-மோஹிநீ
19. நந்தகன்-உத்தமா
20. நந்தீ-ஸுரா
21. நந்தனன்-உத்தமா
22. நந்தயிதா-ஸுலாவண்யா
23. பஞ்சபாணன்-பாலகிநீ
24. ரதி ஸகன்-கலஹப்ரியை
25. புஷ்பதன்வன்-ஏகாக்ஷி
26. மஹாதநு:-ஸுமுகா
27. ப்ராமணன்-நீலி
28. ப்ரமணன்-ஜடிலீ

29. ப்ரமமாணன்-சிகா
30. ப்ரமன்-முக்த்தா
31. ப்ராமன்-முக்த்தா
32. ப்ராமகன்-ரமா
33. ப்ருங்கன்-ப்ராமிகை
34. ப்ராந்தசாரன்-லோசனு
35. ப்ரமாவஹன்-தீர்க்க ஜீஹ்விகை
36. மோஹனன்-ரதி
37. மோஹகன்-பலாசாக்ஷீ
38. மோஹன்-க்ருஹிணீ
39. மோஹதரன்-விகடேஸீ
40. வர்த்தனன்-தரா
41. மதனன்-அநுபமா
42. மன்மதன்-மலயா
43. மாதங்கன்-ஹ்லாதினீ
44. ப்ருங்க நாயகன்-விஸ்வதோமுகி
45. காயகன்-நந்தினீ
46. கிதிஜன்-அநாமா
47. நர்த்தகன்-காளீ
48. க்ஷேவெல்லகன்-காலகர்ணுடீ
49. கந்தர்ப்போன் மத்தன்-நர்த்தஸ்யாமளா
50. விலாஸன்-ஜயை
51. காமவர்த்தனன்-உன்மத்தை

இங்ஙனம் கூறப்பட்ட ஐம்பத்தோரு மன்மத தம்பதிகளை அகாரம் முதல் க்ஷகாரம் வரையில் ஐம்பத்தோரு மாத்ருகைகளோடு சேர்த்து அந்த அந்த மாத்ருகா அக்ஷரத்திற்குரிய ஸ்தானங்களில் நியாஸம் செய்யவும். இதற்கு ரத்யாதி நியாஸம் அல்லது காமாதி நியாஸமென்று பெயர்.

இதற்குப் பிறகு ஸ்ரீகண்டாதி நியாஸம் செய்ய வேண்டியது. அந்த நியாஸத்தின் தியானம் வருமாறு:— ஸிந்தூரம், தங்கம் இவைகளைப்போன்ற நிறமுடைய இரண்டு பாகங்களை யுடையவரும், பாசம், அபயம், அக்ஷமாலே, வரதம் இவைகளைத் தரித்த கைகளை யுடையவரும், ஒரு பக்கம் பார்வதியாகிய சக்தி சின்னங்களையும், மற்றொரு பக்கம் புருஷரூப சிவசின்னங்களையும் உடைய அர்த்தநாரீஸ்வரரை மனத்தில் தியானித்து ஏகாக்கிர சித்தனுய் இந்த நியாஸம் செய்தல் வேண்டும்.

1. ஸ்ரீகண்டன்-பூர்ணோதரீ
2. அநந்தன்-விரஜா
3. ஸூக்ஷ்மேசன்-சால்மலீ
4. த்ரிமூர்த்தி-லோலாக்ஷீ
5. அமரேஸ்வரன்-வர்த்துலாக்ஷீ
6. அர்க்கேஸன்-தீர்க்ககோணா
7. பாரபூதி-ஸுதீர்க்கமுகீ
8. அதிதீசன்-கோமுகீ
9. ஸ்தாணு-தீர்க்கஜிஹ்விகா
10. ஹரன்-குஞ்சரோதரி
11. சண்டீசன்-ஊர்த்வகேசி
12. பௌதிகன்-விகடமுகி
13. ஸத்யோஜாதன்-ஜ்வாலாமுகி
14. அநுக்ரஹேஸ்வரன்-உல்காமுகி
15. அக்ரூரன்-க்ரியாமுகி
16. மஹாஸேனன்-வித்யாமுகி
17. க்ரோதீசன்-மஹாகாளி
18. சண்டீசன்-ஸரஸ்வதி
19. பஞ்சாந்தகன்-ஸர்வஸித்தி
20. சிவோத்தமன்-கௌரி
21. ஏகருத்திரன்-த்ரைலோக்யவித்யா
22. கூர்மேசன்-மந்த்ரார்த்தசக்தி
23. ஏகநேத்ரன்-பூதமாதா
24. சதுராநநன்-லம்போதரீ
25. அஜேஸ்வரன்-த்ராவிணீ
26. ஸர்வஸோமேஸ்வரன்-நாகரீ
27. லாங்கலீசன்-கேசரீ
28. தாருகேசன்-மஞ்சரீ
29. அர்த்தநாரீஸ்வரன்-ரூபிணீ
30. உமாகாந்தன்-விரிணீ
31. ஆஷாடீ-கோடரீ
32. தண்டீ-பூதனா
33. அத்ரீசன்-பத்ரகாளீ
34. மீனேசன்-யோகினீ
35. மேஷேசன்-சங்கினீ
36. லோஹிதன்-கர்ஜினீ
37. சிகீ-காளராத்ரீ
38. சகலண்டன்-கபர்த்தினீ
39. த்விதண்டன்-வஜ்ரா
40. மஹாகாளன்-ஜயா
41. வாலீஸன்-ஸுமுகேஸ்வரீ
42. புஜகேசன்-ரேவதீ
43. பிநாகீசன்-மாதவீ
44. கட்கீசன்-வாருணீ
45. பகேசன்-வாயவீ
46. ஸ்வேதன்-ரக்ஷோவதாரிணீ
47. அப்ரேசன்-ஸஹஜா
48. நகுலீசன்-லக்ஷ்மீ
49. சிவன்-வியாபினீ
50. ஸம்வர்த்தகன்-மாயா

இங்ஙனம் ஸ்ரீகண்ட பூர்ணோதரீ முதலாக ஐம்பது வர்ண சக்திகளோடு சேர்த்து மாத்ருகா ந்யாஸப்படி அந்தந்த இடங்களில் ந்யாஸம் செய்தல் வேண்டும். பிறகு ஷோடா ந்யாஸம் செய்யவேண்டும்.

ஷோடாநியாஸம்.

ஸ்ரீகண்டநியாஸம் செய்தபிறகு பாலாபீஜங்களை இரண்டு தடவை யுச்சரித்து அங்கநியாஸம் செய்து பாலையின் மூன்று பீஜாக்ஷரங்களைச் சேர்த்துக்கொண்டு ஷோடாநியாஸம் செய்தல் வேண்டும்.

இந்த நியாஸத்தின் பயன், உபாஸகன் தேவதாத் தன்மையை யடைவதுவே யாகும்.

ஷோடாநியாஸ மென்பது ஆறுவிதமான நியாசங்களாகும் : அவை கணேச, கிரஹ, நக்ஷத்திர, யோகினீ, ராசி, பீடங்களென்பனவாகும்.

அவற்றுள் முதலாவதாகும் கணேச நியாஸம் கூறப்படுகின்றது.

தியானம்—உதய காலத்திய பாலஸூர்யனுக் கொப்பான நிறத்தோடும், யானை முகத்தோடும், மூன்று நேத்திரங்களோடும், பாசம், அங்குசம், வரதம், அபயம் இவை விளங்கும் ஹஸ்தங்களோடும், சக்திகளோடுங்கூடி விளங்கும் விக்நேஶ்வரர் முதலிய கணேசர்களை நமஸ்கரிக்கின்றேன்.

இங்ஙனம் தியானம் செய்து நியாஸத்தைத் தொடங்க வேண்டும்.

கணேசர்களின் பெயர்.	சக்திகளின் பெயர்.	கணேசர்களின் பெயர்.	சக்திகளின் பெயர்.
1. விக்நேசன்	—ஸ்ரீ	6. விக்னஹந்தா	—சாச்வதி
2. விக்னராஜன்	—ஹ்ரீ	7. விக்னராட்	—ரதி
3. விநாயகன்	—புஷ்டி	8. கணநாயகன்	—மேதா
4. சிவோத்தமன்	—சாந்தி	9. ஏக தந்தன்	—ரமா
5. விக்னஹ்ருத்	—துஷ்டி	10. த்விதந்தன்	—காந்தி

11. கஜவக்த்ரன்—காமினி
12. நிரஞ்ஜனன்—மோஹினி
13. கபர்த்வான்—தீவ்ரா
14. தீர்க்கவான்—ஜ்வாலினீ
15. சங்குகர்ணன்—நந்தா
16. விருஷத்த்வஜன்—ஸுயசஸ்
17. கணநாதன்—காம ரூபிணி
18. கஜேந்திரன்—உக்ரா
19. சூர்ப்பகர்ணன்—தேஜோவதி
20. த்ரிலோசனன்—ஸத்யா
21. லம்போதரன்—விக்னேசானீ
22. மஹாநாதன்—ஸ்வரூபிணீ
23. சதுர்மூர்த்தி—காமரதா
24. ஸதாசிவன்—மதஜிஹ்வா
25. ஆமோதன்—விகடா
26. துர்மதன்—கூர்ணிதானனு
27. ஸுமுகன்—பூதி
28. ப்ரமோதன்—பூமி
29. ஏகபாதன்—த்விரம்பா
30. த்விபாதன்—உமா
31. சூரன்—மாரூபீ
32. வீரன்—மகரத்துவஜா
33. ஷண்முகன்—விகர்ணு
34. வரதன்—ப்ருகுடீ
35. வாமதேவன்—லஜ்ஜா
36. வக்ரதுண்டன்-தீர்க்ககோணு
37. த்விதண்டன்—தனுர்த்தரீ.
38. சேனுநீ—யாமினீ
39. க்ராமணீ—ராத்திரீ
40. மத்தன்—சந்திரகாந்தா
41. விமத்தன்—சசிப்ரபா
42. மத்தவாஹனன்—லோலாக்ஷீ
43. ஜடீ—சபலா
44. முண்டீ—ருஜ்வீ
45. கட்கீ—துர்ப்பகா
46. வரேண்யன்—சுபகா
47. வ்ருஷகேதனன்—சிவா
48. பக்ஷப்ரியன்—துர்க்கா
49. கணேசன்—குஹப்ரியா
50. மேகநாதன்—காளீ
51. கணேசன்—காலஜிஹ்வா

இம்மாதிரி விக்னேசர் முதலான ஐம்பத்தோரு கணபதிகளை அவரவர்களின் சக்திகளோடுகூட அகாரம் முதல் க்ஷகாரம் வரையில் ஐம்பத்தோரு மாத்ருகாஸ்தானங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

நியாஸம் செய்யும்போது ஒவ்வொன்றிற்கும் ஆதியில் பாலாபீஜங்களைச் சேர்த்தே செய்யவேண்டுமென்று முன் கூறப்பட்டுள்ளதை மறத்தல் கூடாது.

இதற்குப் பிறகு கிரஹந்யாசம் சொல்லப்படுகின்றது. தியானம்—வரதம் அபயம் இவைகளைக் கைகளில் தரித்துக் கொண்டும், சக்திகளால் ஆலிங்கனம் செய்யப்படுகிறவர்களாயுள்ள ஆதித்யாதி நவக்கிரஹங்களைச் செவ்வனே தியானம்

செய்யவேண்டும். இங்ஙனம் தியானஞ்செய்து, சூரியனைக் குங்கும வர்ணமாயும், சந்திரனைப் பால்வர்ணமாயும், அங்காரகனை ரக்தவர்ணமாயும், புதனை மல்லிகைப்பூ நிறமாயும், குருவைத் தங்கவர்ணமாயும், சுக்கிரனைச் சங்க வர்ணமாயும், சனியை மேகவர்ணமாயும், ராகுவைப் புகை (தூம்ர) வர்ணமாயும், கேதுவை இருள் நிறமாயும் தியானஞ் செய்ய வேண்டியது.

சூரியனை ஹிருதயத்தின் கீழ்ப்பாகத்திலும், சந்திரனைச் சிரஸ்ஸிலும் (மற்றொருபாடம் புருவமத்தியிலும்), குஜனை இரண்டு நயனங்களிலும், சுக்கிரனை ஹிருதயத்திலும், புதனை ஹிருதய மத்தியிலும் (காதுகளின் கீழ்), குருவைக் கழுத்திலும், சனியை நாபியிலும், ராகுவை முகத்திலும், கேதுவை இரண்டு பாதங்களிலும் நியாஸம் செய்ய வேண்டும். இதுதான் கிரஹ நியாசத்தின் கிரமமாகும்.

பிறகு நக்ஷத்திர நியாஸம் கூறப்படுகின்றது. கிரஹ நியாஸம் செய்த பின்பேதான் நக்ஷத்திர நியாஸம் செய்தல் வேண்டும்.

தியானம்—அதிக காந்தியுடன் கூடின காலாக்னிக்குச் சமமான நிறத்தோடு கூடினவர்களாயும், வரதாபயங்களைத் தரித்தவர்களாயும், எல்லா ஆபரணங்களையும் அணிந்தவர்களாயும் இருக்கின்ற நக்ஷத்திரங்களைத் தியானஞ் செய்து நியாஸம் தொடங்க வேண்டும்.

அச்விநீ—நெற்றித்தடம்
பரணி, கிருத்திகை—இரண்டு கண்கள்
ரோஹிணி, மிருகசீர்ஷம்—இரண்டு காதுகள்
திருவாதிரை, புனர்பூசம்—இருநாசிகள்
பூசம்—கண்டம்
ஆயில்யம், மகம்—இருதோள்

பூரம்—ப்ருஷ்டம்
உத்திரம்-ஹஸ்தம்—இரு கூர்ப்பரங்கள் (முழங்கை)
சித்திரை, சுவாதி—இரு மணிக் கட்டுகள்
விசாகம், அநுஷம்—இரு கரங்கள்
கேட்டை—நாபி
மூலம்—இடுப்பு
பூராடம், உத்திராடம்—இரு துடைகள்
சிரவணம், அவிட்டம்—இரு முழங்கால்கள்
சதயம், பூரட்டாதி—இரு முழங்கால்களின் அடிப்பாகம்
உத்திரட்டாதி, ரேவதி—இரு பாதங்கள்

இங்ஙனம் நக்ஷத்திர நியாஸம் செய்தபிறகு யோகிநீ நியாசம் செய்தல் வேண்டும். அது கூறப்படுகின்றது:—

விசுத்தி, ஹிருதயம், நாபி, ஸ்வாதிஷ்டானம், மூலாதாரம், புருவமத்தி, மூர்த்தா (சிரஸ்) இவைகளில் கிரமமாக யோகினீ நியாஸம் செய்தல் வேண்டும்.

டாகிநீ என்னும் யோகிநி கழுத்தில் அ முதல் அ: வரையில் 16 ஸ்வரங்கள்கூடிய பதினறு தளங்களோடு விளங்கும் விசுத்தி சக்கிரத்தில் அம்ருதா முதலான 16 சக்திகளால் சூழப்பட்டு த்வக் தாதுவுக்கு அதிபதியாய் இருக்கின்றனள்.

ராகிநீ என்னும் யோகிநி ஹிருதயத்தில் க முதல் ட² (ഠ) வரையில் பன்னிரண்டு அக்ஷரங்கள் சேர்ந்த பன்னிரண்டு தளங்களோடு கூடின அநாஹத சக்கிரத்தில் காளராத்திரி முதல் பன்னிரண்டு சக்திகளால் சூழப்பட்டு ரக்த தாதுவுக்கு அதிபதியாய் விளங்குகிறாள்.

லாகிநீ என்னும் யோகிநி நாபீ தேசத்தில் ட³ (ഡ) முதல் ப² (ഫ) வரையில் பத்து அக்ஷரங்கள் சேர்ந்த பத்து தளங்க

ளோடு கூடின மணிபூரகத்தில் டாமரீ முதல் பத்து சக்திகளால் சூழப்பட்டு மாமிசதாதுவுக்கு அதிபதியாய் இருக்கின்றாள்.

காகிநீ என்னும் யோகிநி இலிங்கஸ்தானத்தில் ப[3] வ முதல் ல வரையில் ஆறு அக்ஷரங்கள் சேர்ந்த ஆறு தளங்களோடு கூடிய ஸ்வாதிஷ்டான சக்கிரத்தில் பந்திநீ முதலான ஆறு சக்திகளால் சூழப்பட்டு மேதஸ் என்னும் தாதுவுக்கு அதிபதியாய் இருக்கின்றாள்.

ஸாகிநீ என்னும் யோகிநி குதத்திற்கும் இலிங்கத்திற்கும் மத்தியில் வ முதல் ஸ வரையில் நான்கு அக்ஷரங்கள் சேர்ந்த நான்கு இதழ்களோடு கூடின மூலாதாரத்தில் வரதா முதல் நான்கு சக்திகள் புடைசூழ அஸ்தியென்னும் தாதுவுக்கு அதிபதியாய் விளங்குகின்றாள்.

ஹாகிநீ என்னும் யோகினி புருவமத்தியில் ஹ, க்ஷ என்னும் இரண்டு அக்ஷரங்கள் சேர்ந்த இரண்டு தளங்களோடு கூடின ஆஞ்ஞை என்னும் சக்கிரத்தில் ஹம்ஸவதீ க்ஷமாவதீ என்னும் இருசக்திகளுடன் மஜ்ஜா தாதுவுக்கு அதிபதியாய் விளங்குகின்றாள்.

யாகிநீ என்னும் யோகினி சிரஸ்ஸில் இருக்கின்ற ஸஹஸ்ரார பத்மத்தில் அ முதல் க்ஷ வரையில் *ஐம்பது அக்ஷரங்களுடன் சேர்ந்த ஆயிரம் இதழ்களுடன் கூடின பத்மத்தில் விளங்குகின்றாள்.

இந்த ஏழு யோகினிகளின் விரிவான விஷயமானது ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமத்தில் நன்கு அறியத்தக்கது.

மேற்கூறிய யோகிநிகளை, ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகக் கூறப்பட்ட ஷோடசதளம் முதலான பத்மங்

---

*ஐம்பத்தோரக்ஷரங்களில், ள என்னும் அக்ஷரம் இந்த நியாஸத்தில் கிடையாது.

களுடைய கர்ணிகா மத்தியத்திலும், அவரவர்களுடைய வர்ண சக்திகளைத் தளாக்கிரங்களிலும் நியாஸம் செய்ய வேண்டும்.

யாகினீ என்னும் யோகினியை ஸஹஸ்ரதளபத்மத்தில் அகாராதி ஐம்பதுவர்ண சக்திகளான அம்ருதாதி சக்திகளுடன் நியாஸம் செய்தல் வேண்டும். அம்ருதாதி சக்திகளுடைய பெயர்கள் கூறப்படுகின்றன.

1. அம்ருதா 5. உமா 9. லுகாரா 13. ஓங்காரீ
2. ஆநந்தினீ 6. ஊர்த்துவகேசி 10. லூகாரா 14. ஔஷதீ
3. இந்த்ராணி 7. ருத்திதா 11. ஏகபதா 15. அம்பிகா
4. ஈசானீ 8. ரூஷா 12. ஐஸ்வர்யகரீ 16. அக்ஷரா
என்னும் 16 ஸ்வர சக்திகளுடன் கூடினவள் டாகினீ

1. காளராத்ரீ 5. ஙார்ணு 9. ஜங்காரிணீ
2. கேசரீ (கண்டிதா) 6. சாமுண்டா 10. ஞானரூபீ
3. காயத்ரீ 7. ச²த்ரிகா 11. டங்கஹஸ்தா
4. கண்டாதாரிணீ 8. ஜயா 12. டங்காரிணீ
என்னும் பன்னிரண்டு சக்திகளுடன் கூடினவள் ராகினீ.

1. டாமரீ 4. தாமஸீ 7. தாத்ரீ 10. பட்காரிணீ
2. டங்காரிணீ 5. தங்காரிணீ 8. நாதினீ
3. ணாமினீ 6. தயா 9. பார்வதீ
என்னும் பத்து சக்திகளோடு சேர்ந்தவள் லாகினீ.

1. பந்தினீ 3. மஜ்ஜா 5. ரமா
2. பத்ரா 4. யஶஸ்விநீ 6. லாமினீ
என்னும் ஆறு சக்திகளோடு கூடினவன் காகினீ.

1. வரதா 2. ஸ்ரீ 3. ஷண்டா 4. ஸரஸ்வதி என்னும் நான்கு சக்திகளுடன் விளங்குபவள் ஸாகிநீ.

1. ஹம்ஸவதீ 2. க்ஷமாவதீ என்னும் இரண்டு சக்திகளுடன் விளங்குபவள் ஹாகிநீ.

ஏழாவது யோகிநியான யாகிநீக்கு எல்லா அக்ஷரங்களும் சேர்ந்ததாகையினல் அம்ருதாதி எல்லா சக்திகளும் சேரும்.

இதன் பிறகு, ராசிந்யாசம் செய்யவேண்டும். இந்நியாஸத்தைத் தக்ஷிணபாகத்தில் ஆரம்பித்து வாமபாகத்தில் முடிக்கவேண்டியது.

மேஷம்-தக்ஷிணபாதம்	துலாம்-சிரோ வாமபாகம்
விருஷபம்-லிங்க தக்ஷிணபாகம்	விருச்சிகம்-இடது கரம்
மிதுனம்-குக்ஷி தக்ஷிணபாகம்	தனுசு-ஹிருதய வாமபாகம்
கடகம்-ஹிருதய தக்ஷிணபாகம்	மகரம்-குக்ஷி வாமபாகம்
ஸிம்ஹம்-தக்ஷிண கரம்	கும்பம்-லிங்க வாமபாகம்
கன்னி-சிரோ தக்ஷிணபாகம்	மீனம்-இடது பாதம்

இங்ஙனம் கிரமமாய் நியாஸம் செய்யவேண்டியது. இதன்பின்னர் செய்யவேண்டிய பீடந்யாஸம் சொல்லப்படுகின்றது.

ஐம்பத்தோரு பீடங்களை மாத்ருகாக்ஷரங்களுக்குரிய ஸ்தானங்களில் நியாஸம் செய்தல் வேண்டும்.

1. காமரூபம்
2. வாரணாஸி
3. நேபாளம்
4. பௌண்ட்ரவர்த்தனம்
5. வரஸ்திரம்
6. கான்யகுப்ஜம்
7. பூர்ண சைலம்
8. அர்ப்புதம்
9. ஆம்ராத கேச்வரம்
10. ஏகாம்ரம்

11. திரிஸ்ரோதஸ்
12. காமகோடி
13. கைலாசம்
14. ப்ருகுநகரம்
15. கேதாரம்
16. சந்திரயுக்புரம்
17. ஸ்ரீபீடம்
18. ஏகவீரம்
19. ஜாலந்த்ரம்
20. மாளவம்
21. குலான்னம்
22. தேவிகோடம்
23. கோகர்ணம்
24. மாருதேஶ்வரம்
25. அட்டஹாஸம்
26. விரஜம்
27. ராஜகேஹம்
28. மஹாபதம்
29. கோலாபுரம்
30. ஏலாபுரம்
31. காளேஶ்வரம்
32. ஜயந்தீபுரம்
33. உஜ்ஜயினீ
34. சித்ரா
35. க்ஷீரகம்
36. அஸ்தினாபுரம்
37. உட்டீசம்
38. பிரயாகை
39. ஷஷ்டி மாயாபுரம்
40. கைரீசம்
41. மலயகிரி
42. ஸ்ரீ சைலம்
43. மேரு
44. கிரிவரம்
45. மாஹேந்திரம்
46. வாமனகிரி
47. ஹிரண்யபுரம்
48. மஹாலக்ஷ்மீபுரம்
49. ஒட்டியாணபுரம்
50. சாயாபுரம்
51. சத்திரபுரம்

இங்ஙனம் ஐம்பத்தோரு பீடங்களென்று மஹான்கள் கூறுகின்றார்கள். மேற்கூறிய நியாஸங்களில், சில, வர்ணக் கிரமங்களோடு கூடினவை. அதாவது ஐம்பத்தோரக்ஷரங் களுக்குக் கிரமமாய்க் கூடினவை.

காமரதி நியாஸம், ஸ்ரீகண்ட நியாஸம், கணேசாதி பீட நியாஸம் முதலானவைகள் விபிக்ரமங்களோடு கூடினவைகள். அம்மாதிரியுள்ளதை அந்தந்த ரீதியாகவே நியாஸம் செய்ய வேண்டும்.

பரமேஶ்வரனால் கூறப்பட்ட விதமாக ஷோடாநியா ஸத்தை நான் சொன்னேன். இவ்விதம் அங்கங்களில் நியா ஸம் செய்யப்பட்டவனுக்கும் தேவதைக்கும் பேதமில்லாத தன்மை ஏற்படுகின்றது.

ஷோடா நியாஸம் செய்த பிறகு ஸ்ரீசக்கிர நியாஸத்தைச் செய்யவேண்டும். பூபுரம் முதல் ஸர்வாநந்தமய சக்கிரம் வரைக்குமுள்ள ஒன்பது சக்கிரங்களின் பீஜமந்த்ரங்களை முதலில் சரீரத்தில் வியாபகம் செய்துகொள்ளல் வேண்டும். பின்னர், சக்ரேஸ்வரீ மந்த்ரத்தையும், சக்கிர ஸமர்ப்பண மந்த்ரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்தல் வேண்டும். ஆரம்பத்தில் கணபதியை வலது துடையிலும், க்ஷேத்ர பாலனை வலது தோளிலும், யோகினியை இடது தோளிலும், வடுகனை இடது துடையிலும் நியாஸம் செய்ய வேண்டும். பிறகு இந்த்ராதி திக் பாலகர்களைக் கூறப்படும் இடங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

1. இந்த்ரன்—இரண்டுகால்களின் பெருவிரல்களின் நுனிகள்.
2. அக்னி—வலது முழங்கால்
3. யமன்—வலது பக்கம்
4. நிருதி—வலது தோள்
5. வருணன்—மூர்த்தா (சிரஸ்)
6. வாயு—முகம்
7. குபேரன்—இடது பக்கம்
8. ஈசானன்—இடது முழங்கால்
9. பிரஹ்மா—மூர்த்தா (சிரஸ்)
10. விஷ்ணு—மூலாதாரம்

பிற்பாடு த்ரைலோக்யமோஹனம் என்னும் முதல் சக்கிரத்தில் முதல் ரேகையில் இருக்கும் பத்துஸித்தி தேவிகளை மேற்கூறப்படும் பத்துஸ்தானங்களில் நியாஸம் செய்ய வேண்டும்.

1. அணிமாஸித்தி-வலது தோள் 3. மஹிமாஸித்தி-பிருஷ்டம்
2. லகிமாஸித்தி-வலதுகை

4. ஈஶித்வஸித்தி-ஸ்பிக்கு
5. வஶித்வஸித்தி-பிரபதம்
6. பிராகாம்யஸித்தி-ஸ்பிக்கு
7. பிராப்திஸித்தி-புறங்கை
8. இச்சாஸித்தி-அம்ஸ பிருஷ்டம்
9. அர்த்தஸித்தி-மூர்த்தா
10. மோக்ஷஸித்தி-இரண்டு கால்கள்

இவ்விதம் அணிமாதி ஸித்தி தேவதைகளை நியாஸஞ் செய்த பின்பு இரண்டாவது ரேகையிலிருக்கும் பிராஹ்மீ முதலான எட்டு மாத்ருக்களை மேற்கூறப்படுகின்ற இடங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

1. பிராஹ்மீ—இரண்டு கால்களின் பெருவிரல்கள்
2. மாஹேஸ்வரி—வலது பக்கம்
3. கௌமாரீ—மூர்த்தா
4. வைஷ்ணவீ—இடது பக்கம்
5. வாராஹீ—இடது முழங்கால்
6. இந்த்ராணீ—வலது முழங்கால்
7. சாமுண்டா—வலது தோள்
8. மஹாலக்ஷ்மி—இடது தோள்

இங்ஙனம் எட்டு மாத்ருக்களை நியாஸம் செய்தபிறகு மூன்றாவது ரேகையிலிருக்கும் பத்து முத்ராதேவிகளை அடியிற் கண்டவாறு அந்தஅந்த இடங்களில் நியாஸம் செய்தல் வேண்டும்.

1. ஸர்வஸம்க்ஷோபிணீ — இரண்டு கால்களின் பெருவிரல்கள்
2. ஸர்வவித்ராவிணீ — வலது பார்ஶ்வம்
3. ஸர்வாகர்ஷிணீ — மூர்த்தா
4. ஸர்வவஶ்யகரணீ — இடது பார்ஶ்வம்
5. ஸர்வப்ரியகாரிணீ — ,, முழங்கால்
6. ஸர்வமஹாங்குஶா — வலது ,,

7. ஸர்வகேசரீ	—	வலது தோள்
8. ஸர்வத்ரிகண்டா	—	இடது ,,
9. ஸர்வபீஜா	—	மூர்த்தா
10. ஸர்வயோநி	—	இரண்டு பாதங்கள்

இவ்விதமாக நியஸித்து சக்ரேஶ்வரியையும், த்ரைலோக்யமோஹனம் என்னும் சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம்செய்து சரீரத்தில் வியாபகம் செய்யவேண்டும்.

குறிப்பு :—இங்கே ஸர்வோன்மாதிநீ முத்திரைக்குப் பதிலாக ஸர்வப்பிரியகாரிணி என்னும் நாமம் கூறப்பட்டுள்ளதோடு பத்தாவதாக, இதர நூல்களில் கூறப்படும் ஸர்வத்ரிகண்டா முத்திரையை இதில் எட்டாவதாகக் கூறப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இரண்டாவது ஆவரணமான பதினாறு தளங்களுடன் கூடின ஸர்வாஶாபரிபூரக சக்கிரத்தில் இருக்கும் காமாகர்ஷிணீ முதலான பதினாறு தேவதைகளைக் கூறப்படுகின்ற ஸ்தானங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

1. காமா கர்ஷிணீ	—	வலது	காது
2. புத்தியா கர்ஷிணீ	—	,,	பிருஷ்டம்
3. அஹங்காரா கர்ஷிணீ	—	,,	தோள்
4. ஶப்தா கர்ஷிணீ	—	,,	முழங்கை
5. ஸ்பர்ஶா கர்ஷிணீ	—	,,	உள்ளங்கை
6. ரூபாகர்ஷிணீ	—	,,	ஸ்பிக்கு (இடுப்பு)
7. ரஸா கர்ஷிணீ	—	,,	முழங்கால்
8. கந்தா கர்ஷிணீ	—	,,	கணுக்கால்
9. சித்தா கர்ஷிணீ	—	இடது	,,
10. தைர்யாகர்ஷிணீ	—	,,	முழங்கால்
11. ஸ்ம்ருத்யா கர்ஷிணீ	—	,,	ஸ்பிக்கு
12. நாமா கர்ஷிணீ	—	,,	உள்ளங்கை

13. ஶ்ரத்தா கர்ஷிணீ — இடது முழங்கை
14. ஆத்மா கர்ஷிணீ — ,, தோள்
15. அம்ருதா கர்ஷிணீ — ,, பிருஷ்டம்
16. சரீரா கர்ஷிணீ — ,, காது

பிறகு சக்ரேஶ்வரியையும் சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்ய வேண்டியது.

மூன்றுவது ஆவரணமான ஸர்வஸம்க்ஷோபணம் என்னும் எட்டு தளங்களுடன் கூடின சக்கிரத்திலிருக்கும் அநங்ககுஸுமா முதலான எட்டுத்தேவிகளை கூறப்போகும் இடங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

1. அநங்ககுஸுமா — வலது (சங்கம்) நெற்றிப்பொட்டு
2. அநங்கமேகலா — ,, தோளின் சந்தி
3. அநங்க மதநா — ,, துடை
4. அநங்க மதநாதுரா — ,, கணுக்கால்
5. அநங்க ரேகா — இடது ,,
6. அநங்க வேகா — ,, துடை
7. அநங்காங்குஶா — ,, தோளின் சந்தி
8. அநங்கமாலிநீ — ,, சங்கம்

இங்ஙனம் அந்தந்த ஸ்தானங்களில் நியாஸஞ்செய்து, சக்ரேஶ்வரியையும், சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்தல் வேண்டும்.

பிறகு நான்காவது ஆவரணமான ஸர்வஸௌபாக்கிய தாயகம் என்னும் சக்கிரத்தில் பதினான்கு கோணங்களிலிருக்கும் ஸர்வஸம்க்ஷோபிணீ முதலான பதினான்கு தேவதைகளை மேல் கூறப்படும் இடங்களில் நியாஸம் செய்ய வேண்டும்.

1. ஸர்வஸம்க்ஷோபிணி	—	வலது லலாடம் (நெற்றி)
2. ஸர்வவித்ராவிணீ	—	,, கன்னம்
3. ஸர்வாகர்ஷிணீ	—	,, தோள்
4. ஸர்வாஹ்லாதிநீ	—	,, பாத மூலம்
5. ஸர்வஸம்மோஹிநீ	—	,, முழங்கால்
6. ஸர்வஸ்தம்பிநீ	—	,, ஜங்கையின் மேல் பாகம்
7. ஸர்வஜம்பிநீ	—	,, ,, கீழ்ப் பாகம்
8. ஸர்வ வஶங்கரிணீ	—	இடது ஜங்கையின் கீழ்ப்பாகம்
9. ஸர்வ ரஞ்ஜிநி	—	,, ,, மேல்பாகம்
10. ஸர்வோந் மாதிநீ	—	,, முழங்கால்
11. ஸர்வார்த்த ஸாதிநீ	—	,, பாதமூலம்
12. ஸர்வாஶாபரிபூரணீ	—	,, தோள்
13. ஸர்வமந்த்ர மயீ	—	,, கன்னம்
14. ஸர்வத்வந்த்வக்ஷயங்கரீ	—	,, லலாடம்.

இந்த இடங்களில் நியாஸம் செய்து சக்ரேஶ்வரியையும் சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்ய வேண்டும்.

ஐந்தாவது ஆவரணமான பத்துக்கோணங்களுடன் கூடின பஹிர்த்தசார மென்னும் சக்கிரத்தில் இருக்கும் ஸர்வ ஸித்திப்ரதா முதலான பத்துத்தேவதைகளை மேற்கூறப்படும் ஸ்தானங்களில் நியஸித்தல் வேண்டும்.

1, ஸர்வ ஸித்திப்ரதா	—	வலது மூக்கு
2. ஸர்வ ஸம்பத் ப்ரதா	—	,, தந்த மூலம்
3. ஸர்வப்ரியங்கரீ	—	,, ஸ்தனம்
4. ஸர்வமங்கள காரிணீ	—	,, கிருகாடிகா (பிடரி)
5. ஸர்வகாமப்ரதா	—	,, ஸீவிநீ (ரகஸ்யபாகம்)
6. ஸர்வதுக்க விமோசிநீ	—	இடது ஸீவிநீ
7. ஸர்வம்ருத்யு ப்ரஶமநீ	—	,, கிருகாடிகா
8. ஸர்வ விக்ந விநாஶிநீ	—	,, ஸ்தனம்
9. ஸர்வாங்கஸுந்தரீ	—	,, தந்த மூலம்
10. ஸர்வ ஸௌபாக்யவதாயினி	—	,, மூக்கு

இவ்விதமாக இந்த இடங்களில் நியாஸம் செய்து சக்கி ரேஸ்வரியையும் சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்ய வேண்டியது.

பிறகு பத்துக் கோணங்களுடன் கூடின அந்தர்த்தசாரம் என்னும் பெயருடன் விளங்கும் ஆறுவது ஆவரணத்திலி ருக்கும் பத்துத்தேவதைகளை மேல் கூறப்படும் இடங்களில் நியாஸம் செய்யவேண்டும்.

1. ஸர்வஞ்ஞா
2. ஸர்வசக்தி
3. ஸர்வைஸ்வர்யப்ரதா
4. ஸர்வ ஞானமயீ
5. ஸர்வவ்யாதிவிநாஸிநீ
6. ஸர்வாதாரஸ்வரூபா
7. ஸர்வபாபஹரா
8. ஸர்வாநந்தமயீ
9. ஸர்வரக்ஷாஸ்வரூபிணி
10. ஸர்வேப்ஸிதபலப்ரதா

வலது பாகம்முதல் வரிசையாய் தந்தமூலங்களில் நியாஸம் செய்யவேண்டியது.

இவ்விதமாக நியாஸம் செய்து சக்ரேஸ்வரியையும், சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்யவேண்டியது.

பின்பு, ஏழாவது ஆவரணமான ஸர்வரோகஹரம் என் னும் சக்கிரத்தில் அஷ்டகோணத்திலிருக்கும் வஸிந்யாதி எட்டு வாக்தேவிகளைப் பின்கூறுமாறு நியாஸம் செய்தல் வேண்டும்.

1. வஸிநீ — வலது சிபுகம் (தாவாய்க் கட்டை)
2. காமேஸ்வரீ — கழுத்தின் வலதுபாகம்
3. மோதிநீ — வலது ஸ்தனம்
4. விமலா — நாபியின் வலது பாகம்
5. அருணா — ,, இடது பாகம்
6. ஜயிநீ — இடது ஸ்தனம்
7. ஸர்வேஸ்வரீ — கழுத்தின் இடதுபாகம்
8. கௌளிநீ — இடது சிபுகம்

இந்த ஸ்தானங்களில் நியாஸஞ் செய்து சக்ரேஶ்வரியையும், சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்யவேண்டியது.

பின் ஸர்வஸித்திப்ரத மென்னும் எட்டாவதாவரண சக்கிரத்தை ஹ்ருதயத்தில் திரிகோண ரூபமாகப் பாவனை செய்து கோணாக்ரத்தில் (கிழக்குப் பாகத்தில்) மஹா காமேஶ்வரியையும், (நிருருதி கோணத்தில்) மஹா வஜ்ரேஶ்வரியையும், (வாயுகோணத்தில்) மஹாபகமாலினியையும் நியாஸம் செய்யவேண்டும்.

புத்திமானான உபாஸகன் திரிகோணத்தின் வெளிப்புறத்தில் நான்கு திக்குகளிலும் நான்கு ஆயுதங்களையும், திரிகோணத்தின் உட்புறத்தில் நான்கு பீடங்களையும் ஆக்நேயாதியாக நியாஸம் செய்ய வேண்டும். பிறகு சக்கிரத்தையும் சக்ரேஶ்வரியையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்யவேண்டியது.

பின்பு, திரிகோணத்தின் மத்தியில் ஒரு விருத்தத்தைப் பாவனை செய்து அதில் பதினாறு நித்யாதேவிகளை நியாஸம் செய்தல் வேண்டும்.

1. காமேஶ்வரி
2. பகமாலினீ
3. நித்யக்லின்னா
4. பேருண்டா
5. வஹ்நிவாஸினீ
6. மஹாவஜ்ரேஶ்வரீ
7. தூதீ
8. த்வரிதா
9. குலஸுந்தரீ
10. நித்யா
11. நீலபதாகா
12. விஜயா
13. ஸர்வமங்களா
14. ஜ்வாலாமாலினீ
15. சித்ரா
16. மஹாத்ரிபுரஸுந்தரீ

இவ்விதமாகப் பதினாறு நித்யாதேவிகளை நியாஸம் செய்து, பிந்துவின் மத்தியில் ஸர்வாநந்தமயம் என்னும் சக்கிரத்தில் ஸர்வ ஜகத்ரூபிணியான பரதேவதையை நியா

ஸம் செய்ய வேண்டும். பிறகு சக்ரேச்வரியையும் சக்கிரத்தையும் ஹிருதயத்தில் நியாஸம் செய்து சரீரத்தில் வியாபகம் செய்தல் வேண்டும்.

இங்ஙனம் ஒன்பது சக்கிரங்களையும் சக்கிரேச்வரிகளையும் பரதேவதையையும் நியாஸம் செய்து, யோநி முத்திரையைக் காட்டிப் பஞ்சதசாக்ஷரீ மஹாமந்த்ரத்தை ஜபம் செய்ய வேண்டும். இவ்வாறு அநுஷ்டானம் செய்பவன் ஸாக்ஷாத் ஸ்ரீ பரதேவதையாகவே ஆகின்றான்.

நாற்பதாம் அத்தியாயம் முற்றிற்று (151 சுலோகங்கள்.)

குறிப்பு :—அஸல் பிரஹ்மாண்ட புராணத்தின்படியும், பம்பாய் நாகராக்ஷர புஸ்தகத்தின்படியும், பக்கம் 202-ல் குறித்துள்ளபடி தமிழ் மொழிபெயர்ப்பு முடிவடைந்தது.

ஸ்ரீ லலிதோபாக்யாந அநுபந்தம்

* ஸதீதேவி தக்ஷயாகத்திற்குச் செல்லுதல்

அவ்வியக்தரும், வியக்தமான வடிவத்தோடு பார்க்கப்படுபவரும், பாபமற்றவரும், ஸகல பாபங்களை யொழிப்பவரும், அம்பாளோடுகூடி விளங்குபவருமான ஆநந்த சின்மய சிவ ஸ்வரூபத்தைத் தியானம் செய்கிறேன்.

அகஸ்தியர்:—லக்ஷ்மீபதியான பகவானே! சதுர்ப்புஜங்களோடும் குதிரைமுகமுள்ள சரீரத்தோடும் விளங்குபவரே! ஸதா ஞானமார்க்கத்தி லீடுபட்ட கருணாமூர்த்தியே! ஸர்வ வித்தைகளுக்கும் ஆதாரமானவரே! மஹோதயரே!! தாங்கள் நான்குவர்ணங்கள், நான்கு ஆஶ்ரமங்கள், ஆகிய இவைகளின் தர்மங்களையும், ஸதாசாரங்களையும், சாஸ்திரதத்துவத்தையும் ஸ்ரீ சண்டிகாதேவியினது பெருமையையும், பிராஹ்மீ முதலிய மாத்ருகா கணங்களின் மஹாத்மியத்தையும் நன்கு கூறினீர்கள். ஸமஸ்த தேவர்களாலும் பூஜிக்கத் தக்க தேவதை யார்? எந்தத் தேவியின் அருளுண்டானால் எங்கும் விஜய முண்டாகும்? எந்தத் தேவியின் ஸ்வரூபத்தை மனத்தில் நினைத்த மாத்திரத்தில் புக்தி முக்தி இரண்டும் உண்டாகும்? போகத்தை யளிக்கும் தெய்வம் முக்தியை யளிக்காது; முக்தியை யளிப்பது புக்தியை யளிக்காது, இவ்விரண்டையும் அருளும் தேவதை யார்? இவற்றிற்குப் பதிலளிக்க வேண்டுகின்றேன்.

---

* பாலக்காட்டுக் கிரந்தப்பிரதி, பம்பாய் நாகரப்பிரதி, அஸல் பிரஹ்மாண்ட புராணம் இவற்றில் இல்லாததான தக்ஷயாகம் முதல் மஹாசம்புயாகம்வரையிலுள்ள பதின்மூன்று அத்தியாயங்கள் சென்னைப் பதிப்பு ஆந்திர—கிரந்தாக்ஷரப் பிரதிகளில் பதினோராம் அத்தியாயத்திலிருந்து இருபத்துமூன்றும் அத்தியாயம் முடிய காணப்படுகின்றன. அந்த அத்தியாயங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுமுதல் ஆரம்பிக்கப்படுகின்றது.

ஹயக்கிரீவர் :—புக்திமுக்தியாகும் இவ்விரண்டையும் அளிப்பவள் சக்திசக்ரைகநாயகியாகும் ஸ்ரீலலிதையே யாவள். அவளே ஸாக்ஷாத் பரப்பிரஹ்மம்; அவளே மும்மூர்த்தி களுக்கும் யஜமானி; பண்டாஸுரனால் பீடிக்கப்பட்டுக் கலங்கிய மூன்று உலகங்களையும் ரக்ஷிப்பதற்காகப் பரப் பிரஹ்மமே ஸ்ரீ லலிதா ரூபத்தோடு விளங்கிற்று.

அகஸ்தியர் :—பண்டாஸுரன் யார்? அவன் எங்கே இருந்தவன்? யாரால் கொல்லப்பட்டான்? அவன் யாருடைய புத்திரன்? யார் உலகை யழித்தது? யார் பரிபாலித்தது? இவைகளை விஸ்தாரமாய்க் கூற வேண்டுகின்றேன்.

ஹயக்கிரீவர் :—சந்த்ரசேகரனும் கருணாராசியாயும் விளங்கும் ஸ்ரீமான் பரமசிவன், ஒரு ஸமயம், ஸ்ரீ தாக்ஷாயணீ தேவியாலும், நந்தி, பிருங்கி, மஹாகாளர் முதலிய சிவகணங் களாலும், ஸநகர், ஸநந்தனர் முதலிய யோகீந்திரர்களாலும் ஸேவிக்கப் பட்டு ஆஸ்தானமண்டபத்தில் தேவியுடன் ஸிம் ஹாஸனத்தில் வீற்றிருந்தார்.

அப்போது பரமசிவன், தேவியுடன் அக்காலத்திற் குசிதமாக ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார். அச்சமயத் தில் தக்ஷப்பிரஜாபதியினது கிருஹத்தை நாடிச் செல்லும் தேவக்கூட்டங்களின் ஆரவாரம் பரதேவதையின் செவிகளுக் குக்கேட்டது. உடனே தாக்ஷாயணி, "யார், எங்கே, எதற் காக அங்ஙனம் பேரிரைச்சலோடு செல்கின்றன"ரென அறி யும் ஆவலுள்ளவளாய் ஒரு (சிவ) கணத்தை யழைத்து அதை யறிந்து வரும்படி ஆக்ஞாபித்தனள். அச்சிவ கணத் தலைவனும் ஆகாயமார்க்கமாய்ச் சென்று ஒரு நொடியில் அதை யறிந்துவந்து "தேவியே! உமது தந்தை தக்ஷப்பிரஜாபதி ஒரு யாகம் செய்கின்றாராம். அதற்கு அழைக்கப்பட்ட தேவர்கள் அனைவரும் தத்தம் பரிவாரங்களுடன் செல்கின் றனர். அதனால்தான் ஆகாயத்தில் பேரிரைச்சலுண்டாயது" என்று கூறினன்.

இதைக்கேட்டதும் தாக்ஷாயணி பரமேஸ்வரனை நோக்கி "சந்த்ரசேகரா! எனது தந்தை தாய், உடன் பிறந்தவர்கள், அவர்களது புத்திரர்கள் ஆகிய எல்லாப் பந்துக்களையும் பார்த்துப் பல நாளாயிற்று. ஆதலால் இப்போது நடக்கும் வேள்வியையும் அந்த பந்து ஜனங்களையும் பார்த்துவிட்டு விரைவில் திரும்பிவருகிறேன். உத்தரவு தாருங்கள்" என்று பிரார்த்தித்தனள். இதைச் செவியுற்றுப் பரமசிவன் "ஹே தேவி! நீ அங்கு போகலாகாது. நான் இங்ஙனம் கூறுவதற் கொரு காரணமுண்டு. நாம் உலகில் பக்தர்களுக்கு இஷ்டங் களை யருளி அநிஷ்டத்தையகற்றுகின்றோம்; எல்லோரையும் விட நாம் சிறந்தவர்; எல்லோராலும் பூஜிக்கப்படத்தக்கவர். ஸத்தியக்ஞான ஸ்வரூபமாய் விளங்குபவர். உலகில் நாம் செய்யத்தக்க காரியம் ஒன்றுமில்லை; சொல்லத்தக்கதுமில்லை; அடையத்தக்கதுமில்லை. ஆதலால் கிருதகிருத்தியராய் நித்தி யம்ஆத்மாநந்த பரர்களாய் விளங்குகிறோம் என்று அறிந்த ஸகலதேவர்களும் ஒரு ஸமயம் நம்மை நமஸ்கரிக்க இங்கு வந்தனர். அப்போது அவர்களிடையே கர்வங்கொண்ட உனது பிதாவும் இங்கு வந்து, நான் அவனுக்கு மாப்பிள்ளை தானே யென்றெண்ணி என்னைப் பணியாதிருந்தனன். யான் பொதுவாக எல்லோரையும் க்ஷேமம் வினவினேன். மாமனு ராயினும் அவருக்கு நான் நமஸ்காரம் செய்யவில்லை. மூவ் வுலகங்களிலும் என்னால் பணியத்தக்கவர் எவரேனுமுண்டா? ஆயினும் அன்பினால் நீ கோபித்துச் சண்டையிடும்போது எனது நமஸ்காரத்திற்குரியவள் நீயே. உன்னைத்தவிற மற்றெவர்க்கும் என் நமஸ்காரம் உரியதாகமாட்டாது. இங்ஙன மிருக்க நான் அவருக்குத் தக்க மரியாதை செய்யவில்லை யென்று சினங்கொண்டு உன் தந்தை ஒன்றும் பேசாமல் தன் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார். அவர் முகத் தில் தோன்றிய கோபக்குறியை யான் கண்டேன். அந்த கோபத்தினால், உன்னையும் என்னையும் நீக்கிவைத்துப் பாமரர் களான தேவர்களை வைத்துக்கொண்டு அவர் இப்பொழுது ஒருயாகம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். வீணாக என்னைத் தூஷிக்கும் ஒருவன் செய்யும் யாகத்திற்கு நீ செல்வது

உசிதமல்ல. யான் சொல்வதைக்கேட்காமல் உனது விருப்பத்தின்படி நீ சென்றால் நான் சொன்னது (எனக்கேற்பட்ட அவமானம்) உனக்கும் ஏற்படும்" என்று மிகக் கம்பீரமாகக் கூறினர்.

இதைக் கேட்டுத் தேவி "நாதா! அப்படியானல் நான் சென்று அவருக்குப் புத்திமதிகள் கூறவேண்டும். உம்மை நிந்தித்ததால் அவர் அழிவரன்றோ? தனது சித்தத்திலுள்ள தோஷத்தை யொழித்து உம்மைத் தூஷிக்காமல் இருக்கும் படியும், உம்மை அவ்வியாகத்திற்கு அழைக்கும்படியும் அவருக்கு யான் உபதேசஞ்செய்ய வேண்டும்; உம்மை நிந்தித்தலென்னும் பாழ்ங்கிணற்றில் விழாதபடி அவரைப்பல சொற்களால் காக்கவேண்டும்; நீர் அவதூதராய் இருப்பதால் நீறுபூத்த தணலைப்போல் இருக்கின்றீர். ஆதலின் உமது சக்தியை அவர் உணரவில்லை. அவருக்கு அதையெடுத்துரைக்க எனக்கு உத்தரவளிக்கவேண்டுகிறேன்" என்று கூறினள்.

இதைக்கேட்டுப் பரமசிவன் தனக்கு விருப்பமில்லாவிடினும் இனிநேரிடப்போகும் காரியத்தை யெதிர் பார்த்து தேவிக்குப் பிறந்த வீட்டிற்குச் செல்ல அநுமதி தந்தனர்.

அநுமதி பெற்றுக்கொண்டு தேவி புறப்படும்போது தேவிக்கு ஸஹாயமாய்ச் செல்லும்படி மஹாகாளர், மஹாகண்டன், கண்டாகர்ணன், கபாலவான், கும்போதரன், நிகும்பன், மீனக்ரீவன், ம்ருகாந்தகன், ஊர்த்துவகேசன், கேதுமாலி, தண்டு, மகரலோசனன், ஸோமகன், நீலபாஹு, பைரவன், காலபைரவன், ஸ்வச்சந்தபைரவன், உச்சாஸ்யன், உக்ரருத்தன், விஸ்வகஸ்மரன், அலர்க்கன், ஸிம்ஹகேது, மணிமான், மணிகந்தரன் முதலிய சூரகணத்தலைவர்கள் சிலாதாது புத்திரராகும் நந்திகேஸ்வரரால் அனுப்பப்பட்டனர். பலிஷ்டரான இவர்கள் அனைவரும் ஸதீ தேவியை ரக்ஷிக்கும் பொருட்டு சஸ்த்ரபாணிகளான தத்தம் பரிவாரங்களோடு

புறப்பட்டனர். தேவியும், வாயு வேகத்தினுஞ் சிறந்து செல்லக்கூடிய ஒரு ஸ்வர்ணவிமானத்தில் அமர்ந்து ஆகாய மார்க்கமாய்க் கிளம்பினாள். தேவகணங்களும் அப்ஸரஸ்திரீகளும் தேவியை ஸ்தோத்ரம் செய்தனர். 'தமது பிராணனை விடத் தேவிதான் சிறந்தவ' ளெனக் கருதும் பேரன்பு பூண்ட தோழிமார்கள் சாமரம், விசிறி, ஸ்வர்ணபாதுகை, தாம்பூலப் பெட்டி, ஆபரணப்பெட்டி, முதலியவைகளைக் கரங்களிலேந்தி தேவியோடு சென்றனர். அத்தோழிமார்கள் அனைவரும் அழகிய கதைகளால் தேவியின் மனதைச் சந்தோஷப்படுத்துவதில் மிகுந்த ஸாமர்த்தியம் வாய்ந்தவர்கள். தேவியின் விமானமானது தனது கொடிகளால் மேக மண்டலத்தைக் கீறிக் கொண்டும், அழகிய மணிகளின் சப்தத்தினால் திக்குகள் முழுமையும் நிறப்பிக்கொண்டும் ஸ்வர்ணமலையே ஆகாயத்திற் செல்வது போல் விளங்கிற்று.

அப்போது பக்ஷிகள் ஸூர்யனைப்பார்த்துச் சத்தமிட்டன. இனி நேரிடப்போகும் ஆபத்தை ஸூசிப்பிக்கத் தேவியின் வலதுகண் துடித்தது. எதிர் முகமாகக் காற்றடித்தது. திக்குகளில் புழுதி நிறைந்து ஒரே புகை சூழ்ந்தது போல் காணப்பட்டது. இங்ஙனம் பல அபசகுனங்கள் தோன்றவும், தேவி ஸந்தேகத்தோடு தனது தந்தை வீட்டிற்குச் சென்றனள். சென்றதும், அங்கே யக்ஞசாலையில், தன் ஸஹோதரிகளையும் தாயையும், இதரபந்துக்களையும் தேவி கண்டனள். இந்த்ராதிதேவர்களும், பிரஹ்மாதி பிரஜாபதிகளும், திக்பாலகர்களும், திக்கஜங்களும், ஸித்த, சாரண கின்னர, கந்தர்வர் முதலியவர்களும், இந்த்ராணீ, ஸ்வாஹா தேவீ, தூமக்ஞா, நீதி, ருத்தி, ஸந்தி முதலிய தேவதாஸ்திரீகளும், அப்ஸரஸூகளும் அந்த யாகசாலையில் காணப்பட்டனர். அன்றியும், பலவகையான யக்ஞபாத்திரங்களும், யாகம் செய்துவைப்பதில் ஸமர்த்தர்களான பிராஹ்மணர்களும், பரீக்ஷகர்களும் ஸதஸ்ய (ஸபையோ)ர்களும், கர்மாவில் ஸமர்த்தர்களான ரித்விக்குகளும் கேட்டமாத்திரத்தில் பாபத்தை யகற்றும் மஹிமை வாய்ந்த மஹாமந்த்ரங்களும்

ப்ரயாஜை அநுயாஜையென்னும் மந்த்ரவிசேஷங்களும் ஸ்வாஹா, வெளஷட், வஷட், ஸ்தோத்ர, சஸ்த்ர, ஸாம, யாஜ்ய, புரோநுவாக்ய, பத்நீஸம்யாஜாதிகளும், பசு ஸம்க்ஞை யென்னும் பிரயோகமும், தர்ப்பைகளால் சூழப்பட்ட யூப ஸ்தம்பங்கள் அவற்றின் நுனிகளில் விளங்கும் சஷாலங்கள் இவைகளால்கூடி மிக அலங்காரமாய் விளங்கும் அந்த யாக சாலையைக் கண்டு தேவி பரம ஸந்தோஷமடைந்தனள். மற்றும் ஆங்குள்ள பலவகையான ஆச்சரியங்களையும் பார்த்துக்கொண்டு, தன்னுடன் வந்த கணங்களை வெளியி லேயே நிறுத்திவிட்டுத் தேவி தனது பிராணஸகிகளுடன், வீண் கர்வத்துடன் இறுமாந்து விளங்கும் தன் தந்தையின் அருகே சென்றனள்.

ஸதீதேவி தக்ஷயாகத்திற்குச் செல்லுதலென்னும் அத்தியாயம் முற்றிற்று. (72 சுலோகங்கள்)

ஸதீ, தக்ஷன் இவர்கள் ஒருவருக்கோருவர் ஸம்வாதம்

தாக்ஷாயணி வருவதைக்கண்டு தக்ஷப்பிரஜாபதி தன் புருவத்தை நெறித்துக் கொண்டு முகத்தைத்திருப்பிக் கொண் டான். மாப்பிள்ளையாகும் சிவனிடங்கொண்ட கோபத்தால் தேவியை வாவென்றுகூட அழைக்கவில்லை. மற்ற பந்துக் களிடம் பேரன்பு காட்டினன். தக்ஷன் தேவியை நோக்கி "ஹே பாபியே! வெளியே போ !! உன்னை யார் அழைத்தது? பாபியும் நற்குலப் பிறப்பற்றவனும், சுடுகாட்டுச் சாம்பலைப் பூசிக்கொண்டிருப்பவனும், மண்டையோட்டைத் தரித்திருப் பவனுமான புருஷனை நீ பின்தொடருகிறாய். நீ எனது பெண்ணேயாயினும் ஸதாசாரமற்ற கணவனது தோஷத்தால் நிந்திக்கப்படத் தக்கவளே. தவவேடத்தால் தன்னை மறைத் துக்கொண்டு அச்சிவன் பரமதுஷ்டனும் டாம்பிகனும் அவதூதனும் இருப்பதால் ஸாதுக்களால் வெறுக்கத் தக்க

வனாய் இருக்கின்றனன். அவனது செய்கைகள் யாவும் அமங்களகரமானவையே. வேஷமும் அவனது வாஸஸ்தானமும் அமங்களமானவையேயாகும். ஆனால் பேர்மட்டிலும் சிவன் (மங்களகரமானவன்). வீணாக அப்பெயர் அவனுக்கு ஏற்பட்டு எப்படியோ பிரசித்தமாயிற்று. டாம்பிகமான தவவேடத்தினால் அவன் மூவுலகங்களையும் ஏமாற்றித் திரிகிறான். நானும் ஏமாந்துபோய் அத்தகைய புருஷனை யுனக்குத் தேடினேன். நாய்த் தோலில் வைக்கப்பட்ட அம்ருதத்தைப்போல் அவனுடைய சேர்க்கையால் நீயும் அசுத்தையானாய். போதும் போதும்; போ! உன் புருஷன் வீட்டிற்கே போ!! பிச்சைக்காரனுக்கு வேலைக்காரியான உன்னை யாரிங்கழைத்தது?" என்று மிகக்கடுமையாய்க் கோபித்துக் கொண்டு தேவியை இழித்துக்கூறிப் புண்படுத்தினான்.

இங்ஙனம் தக்ஷன் தன்மகளாகிய ஸதீதேவியைக் கடுஞ்சொற்களால் இழித்துப் பேசியபோது, அவ்வியாஜ கருணைக் கடலாகும் அம்பாள் அவனைப் பார்த்து, "தந்தையே! குடும்பத்தோடு உன்னையழிக்கத்தக்க இந்த துர்மார்க்கத்தை யுனக்கு உபதேசித்தவர் யார்? உனது பாக்கியமும், கீர்த்தியும், அதிகாரமும் இன்றோடு அழிந்து விட்டன. குலத்தை யழிக்க வந்தவரே! நற்குலத்திற் பிறந்தும் ஏன் இந்தத் துர்ப்புத்தி? உமது சேர்க்கையால் ஸகல ஸஜ்ஜனங்களும் நாசமடையப்போகின்றனர். ஜகத்ஸ்ரஷ்டாவும், யக்ஞஸ்வரூபரும், யக்ஞபோக்தாவும், யக்ஞபல வடிவருமான சிவனை நீ நிந்திக்கின்றனை. "சிவ" என்னும் இரண்டு மங்களமான அக்ஷரங்களையுடைய அவரது திருநாமத்தை ஜபிப்பவரும் நினைப்பவரும் மோக்ஷமடைவர். அப்படிப்பட்டவரை நீ நிந்திக்கின்றனை; ஆத்மாராமர்களாயும், தபோநிஷ்டர்களாயும், ஞானாக்கினியால் எரிந்த கர்மாக்களை யுடையவர்களாயுமுள்ள முனிவர்கள் எவரை வணங்குகின்றனரோ அவரை நீ நிந்திக்கின்றனை; எவரது அஷ்டமூர்த்தி ஸ்வரூபமானது உலகமெங்கும் வியாபித்து விளங்குகின்றதோ அத்

தகைய, சந்த்ரசேகரனை நீ நிந்திக்கின்றனை. அஹோ! பாபம்!! பாபம்!!! அதிகங்கூறுவதேன்? பாழ்ங்கிணற்றில் விழுந்து விட்டனை; மூலத்தோடு அழியத்தக்க இந்த துர்எண்ணத்தை யறவே விட்டுவிடு. அவரை அழைத்து வந்து பூஜைசெய். இல்லையேல் நீ செய்யும் இந்த யாகமானது உன்னை மாய்த்துக் கொள்வதற்காக இயற்றப்படும் ஆபிசார (மாரண) யாக மாகவே முடியும்; பிறப்பும் இறப்புமற்ற அநாதி பரசிவனை நீக்கி இந்த யாகம் ஆரம்பித்தாய் அல்லவா? என்னே உனது ஸாஹஸம்? உனது வம்சமும் நீயும் அழிந்தொழியாமல் இருக்க வேண்டுமென்று நீ விரும்புவையேயானல் இப் போதே மஹாதேவனைப்பூஜி; இல்லையேல் நீ யழிவது திண்ணம். பலகோடி கணங்களுக்குப் பதியான அவருடைய ஒரு வேலைக்காரனது க்ஷணகால கோபத்தைக்கூட இந்த சரா சராத்மக பிரபஞ்சம் ஸகிக்க முடியாதே. அப்படியிருக்க நீ எம்மாத்திரம்" என்று பலவாறு நற்புத்தி புகட்டினுள்.

அப்பொழுது, கொடூர ஹ்ருதயமுள்ள தக்ஷன் மஹா கோபங்கொண்டு, புருவத்தை நெறித்துக்கொண்டு, அதி தீக்ஷ்ணமான சொற்களால் ஸதீதேவியை நிந்தித்தனன். பிறகு ஜகதம்பிகை சினங்கொண்டு அந்த மஹாபாபியைச் சபித்துவிட்டு அவனது சேர்க்கையால் அசுத்தமான தனது சரீரத்தைத் தியாகம் செய்யத்தீர்மானித்தனள்.

ஸதீதேவி தனது உடலைத்தியாகம் செய்தல்

"இத்தகைய சிவத்துரோஹியாகிய உன்னுல் ஏற்பட்ட தன்றோ இந்த எனது சரீரம்! இந்த சரீரத்தை உன் குல நாசத்தின் பொருட்டு இப்போதே விட்டுவிடுகின்றேன். எனது கோபாக்னியால் இப்போதே உன்னைத்தஹித்துச் சாம்பலாக்குவேன்; ஆயினும் தந்தையாயிற்றே யென் றெண்ணிப் பொறுமையை வகிக்கின்றேன். அந்த ஜகதீசனே உன்னை நன்ருகச் சிக்ஷிப்பார்." என்று கூறி, தேவியானவள் பத்மாஸனத்தில் அமர்ந்து மூக்கு நுனியில் திருஷ்டியை

நிறுத்தி ஸகல இந்திரியங்களையும் அடக்கி யோகத்தால் உடலைவிடத் தீர்மானித்துக்கொண்டு தனது தோழிகளைப் பார்த்து "ஸகிகளே! நீங்கள் யாதொரு சங்கையுமன்றி ஜகன்னாதராகும் பரமசிவன்பாற்சென்று மற்ற தோழிகளுடனும் கணங்களுடனும் வாழ்ந்திருப்பீராக! யான் எனது நாதனுடைய சொல்லை யவமதித்ததால் அந்தப் பயனை யநுபவிக்க இவ்வுடலைத் தியாகம் செய்யப் போகின்றேன். நான் என் உடலை விடுதற்குத் தக்ஷனிடங்கொண்ட கோபம் மாத்திரங்காரணமன்று; மற்றொரு காரணமுமுண்டு அதைக்கூறுகிறேன் கேள். முன்கல்பத்தில் ஹிமவான் என்னும் மலையரசன் ஒன்றரைகோடி வருஷங்கள் எனது அருளை நாடி மிகக்கடுமையாகத் தவஞ்செய்தனன். நான் அவருக்குப் பிரத்யக்ஷமாகி "என்ன வரம் வேண்டும்? வேண்டிய வரத்தை வேண்டிக்கொள்" என்று கூறினேன். அவர் என்னிடம் ஆழ்ந்த பக்திகொண்டவராதலால் தனக்கு மகளாக அவதரிக்கும்படி என்னை வேண்டிக்கொண்டனர். நானும் அப்படியேயாகட்டுமென்று வரந்தந்தேன். அதற்கு ஏற்ற சமயம் இதுதான். தக்ஷனைப்பழிக்க இந்தப்பிறவி பயன் பட்டது. சைலசிகாமணியாகும் ஹிமவானது பக்திக்கேற்ப அவனுக்குப் புத்திரியாக அவதரிக்க வேண்டும். நீங்கள் மஹா தேவனிடம் சென்று எனது பலகோடி நமஸ்காரங்களை யவருக்குச் சொல்லுங்கள். "சிவனே என் பிராணஸகா" என்று நான் கூறியதாகப் பிரபுவினிடம் நீங்கள் கூறுங்கள். நீங்களும், மற்றும் ஆங்குள்ள எனது ஸகிகளும், என் பொருட்டுக் கஷ்டப்படவேண்டாம். பர்வதராஜனிடம் யான் புத்திரியாய்த் தோன்றியபின் நீங்கள் முன்போலவே என்னைச் சேர்ந்து சோகத்தைக் களைந்து சந்தோஷமாய் இருக்கலாம்" என்று கூறினள்.

உடனே தேவியானவள் மூலாதாரத்திலிருந்து சிதக்கினியைக் கிளப்பி அச்சிதக்கினியால் அவ்வுடலை யெறித்தனள். ஜோதியில் கற்பூரம் லயமாவதுபோல் அந்த யோகாக்னியில் பரதேவதையின் சரீரம் கொஞ்சங்கூட மிச்ச

மில்லாமல் (சாம்பலுமின்றி) எரிந்து விட்டது. அப்பொழுது மத்தியான்ன பாஸ்கரனது பிரகாசம்போல் ஒரு ஜோதி தோன்றி அந்த க்ஷணமே மறைந்துவிட்டது. அந்தச்சபை யில் இருந்தவர் யாவரும் அதைக்கண்டு பேராச்சரிய மடைந்தனர்.

தேவி ஆகாயமார்க்கமாய்ச் சென்று ஹிமவானது தர்ம பத்தினியான மேனையிடஞ் சென்றனள். மேனை நற்குண நற்செய்கைகளையுடையவள். ஆதலின் தேவி அவளது கர்ப் பத்திற் பெண்ணாய்த்தோன்றிப் பர்வதராஜனது குலத்திற்கே ஒரு சிறப்பையுண்டாக்கக் கருதினாள். பித்ரு தேவதைகளின் மானஸபுத்திரியும் அயோனிஜையுமான ஹிமவானது மனைவி யான மேனை ஸகல லோகங்களுக்கும் ஜனனியாகும் பர தேவதையைக் கருவில் சுமந்தாள். சந்த்ரகலையானது பாற் கடலுக்குச் சந்தோஷமளித்து விருத்தி செய்வது போல் தேவியும் மேனையின் சரீரத்திற்கு ஒரு தூய்மையை அளித்தனள். கர்ப்பமும் விருத்தியாயிற்று. கர்ப்பத்திலுள்ள தேவி விருத்தியாக விருத்தியாக மேனையின் தேஜஸ்ஸும் விருத்தியாயிற்று. கடல்களும் காடுகளும் நிறைந்த இந்த அவனியைச் சிறிதுஞ் சிரமமின்றித் தாங்கும் பூதரன் அம்பாளைத் தன் கர்ப்பத்திலுடைய தன் மனைவி மேனையைத் தாங்கச் சிறிதும் முடியவில்லை. ஒரே காலத்தில் உதித்த அநேக ஸூர்யர்களுடைய ஒளியை யொத்த தேஜஸ்ஸானது மேனையிடந் தோன்ற ஹிமவான் "அம்பிகை யளித்த வரம் ஸபலமாயிற்று" என்று நிச்சயஞ் செய்தனன்.

கர்ப்பத்தின் பாரத்தால் மேனையின் மேனி தளர்ந்து கன்னங்கள் வெளுத்தன; அடி பருத்தும் நுனி சிறிது கறுத்து முள்ள, குசமண்டலங்களோடு கூடியவளாய் வயிற்றி லுள்ள மடிப்புகள் மறைய, ரோமாவளி விளங்க, மிக அழகாய் விளங்கினாள்; எழுந்து ஓரடி வைத்தாலும் பெரு மூச்சு விடுவாள். கர்ப்பத்தைத் தாங்குஞ் சிரமத்தால், இமை கொட்டுவதும் கருவிழி யசைவதுங் கூட மிக மந்தமா

யிருந்தன. சிரமத்தினுல் ஏற்பட்ட வியர்வைத் துளிகள் முத்துக்கள்போல் பிரகாசித்து முகத்தை யலங்கரித்தன. பாங்கிமார் அவளைச் சூழ்ந்து நிற்க அவர்களைப் பிடித்துக் கொண்டே இருப்பாள். இவைகளையெல்லாங் கண்ணுற்ற பர்வதராஜன் பேரானந்த மடைந்தனன்.

மேனையினிடத்தில் பார்வதீதேவி ஆவிர்ப்பவித்தல்

தாராபலமும் சந்த்ரபலமும் பூர்ணமாயிருக்கும் மிக்க சுப கரமான லக்னத்தில, சுப திருஷ்டியுள்ள ஐந்து கிரஹங்கள் உச்சமாயிருக்கையில், மூவ்வுலகங்கட்கும் மாதாவாகிய தேவியை மேனை யீன்றனள். திக்குகள் யாவும் பிரஸன்னதையை யடைந்தன; கலங்கிய ஜலமும் தெளிவடைந்தன. மூவ்வுலகும் பெரு மகிழ்ச்சி யெய்தியது; ஆகாயம் நிர்மலமாய் விளங்கிற்று. தேவ துந்துபிகள் முழங்கின. அப்ஸரஸ்திரீகள் நிர்த்தனஞ் செய்தனர். மலர்மாரி பெய்தது. மூவ்வுலகத்தவரும் அகஸ்மாத்தாய் ஆனந்தக் கடலிலாழ்ந்தனர். தேவியாகும் குழந்தை சந்திரகலையைப் போலவும், ரத்தினசலாகையைப் போலவும் பிரகாசமான தேஜஸ்ஸோடு விளங்கித் தன் தாயை யலங்கரித்தது. பர்வத மாதர்களின் ஒவ்வொரு மடி மீதிலும் மாணிக்கிய தீபம் போன்ற அக்குழந்தை விளங்கி அவர்களால் லாலனை செய்யப்பட்டு வளர்ந்தது. நக்ஷத்திரங்கள் விளங்கும் ஆகாயத்தில் சந்திரன் பிரகாசிப்பது போல் பெண்களின் கூட்டம் நிறைந்த அந்தப்புறத்தில் மஹா தேஜஸ்ஸோடு விளங்கும் தேவியின் முகாரவிந்தத்தைப் பார்த்துப்பார்த்துத் தந்தையாகும் ஹிமவானுக்கு ஏற்பட்ட ஆநந்தத்திற்கு ஒரு எல்லையே யில்லை.

இங்ஙனம் நாளொருமேனி பொழுதொரு வண்ணமாய் வளர்ந்த மைநாகனின் ஸஹோதரியான தேவியானவள் மனோஹரமானதும் அம்ருதப் பிரவாஹம் போன்றதுமான மழலைச் சொற்களால் தந்தையின் செவிகளுக்கு ரஸாயனத்தைக் கறந்தனள்.

நீலோத்பலம் போன்ற திருமேனியை யுடைய அக் குழந்தையானது அழகிய தன் சரீரகாந்தியால் பச்சைக் கல்லால் அமைக்கப்பட்டுத் தவழ்ந்துலவும் பொம்மையைப் போல விளங்கினாள். தேவி மலைச்சிறுமிகளுடன் கூடி பந்தை யும் பொம்மைகளையும் வைத்துக்கொண்டு விளையாடினாள். பர்வதராஜன் தனது குடிப்பெயரால் தேவிக்குப் பார்வதி யென்னும் திருநாமம் சூட்டினான். அந்தத் திருநாமம் ஸகல பாபங்களையும் ஒழிக்கவல்லதாகும். பார்வதிதேவி தன் தோழிகளுடன்கூடிப் புழுதியிலும், கங்காநதியின் மணல் திட்டுகளிலும் விளையாடிப் பெற்றோருக்கும் மற்றோருக்கும் பேராநந்தத்தை யளித்தனள். செம்பஞ்சுக் குழம்பு பூசப் பட்டு விளங்கும் தேவியினது சிறிய பொற்பாத கமலங்கள் பட்டுப் பர்வதங்கள் பாவனமாயின.

பார்வதீதேவியின் பாதாதி வர்ணனம்.

பார்வதீ தேவிக்குக் கிரமமாக இளமைப் பருவம்போய், மன்மதனது அஹங்காரத்திற்கு மூலகாரணமெனத்தகும் யௌவனப்பருவம் தோன்றிற்று. இயற்கையாகவே சிவந்தன வாயும் அதிகோமலமானதாயுமுள்ள தேவியினது இரு பாதார விந்தங்களும் நிலவைப்போன்ற நகக்காந்தியுடன், பூமியிற் படும்போது குங்கும ராகத்தால் பூமிக்கே ஒரு ஸௌபாக்கி யத்தைப் பெருக்குவனபோல் விளங்கின. அன்றியும், அவை சதங்கையின் மெல்லிய சப்தத்தினால் கலஹம்ஸங்களுக்குச் சந்தோஷத்தை யளித்ததுமன்றி ஞானயோகிகளால் தங்கள் ஹ்ருதயாரவிந்தத்தில் தியானம் செய்யப்படுவனவாயும் விளங்கின. இரண்டு முழங்கால்களும் மன்மதனது பாணப் பெட்டியைப்போல் பந்துக்களது மனதையும் கண்களையுங் கவர்ந்தன. இருதுடைகளும் மதர்த்த வாழைமரத்தின் கர்வத்தை யகற்றுவனவாயும், மன்மதனெனும் யானையினது துதிக்கையைப் போன்றனவாயும், மஹேச்வரனது மன மெனும் மதயானையைக் கட்டும் கட்டுமரமெனத்தக்கன வாயும், கந்தர்ப்பனது ஜயஸ்தம்பமோவெனத்தக்கனவாயும்

பிரகாசித்தன. தேவியினது நிதம்பம் ஒட்டியாணத்தால் அழகுற்றதாய் யானையின் மஸ்தகம் போலவும், தந்தையின் கிரிதடம் போலவும், மரகதமலையின் மத்தியப் பிரதேசம் போலவும் விளங்கிற்று. மூன்று மடிப்புகளுடனும் அழகிய ரோமாவளியுடனும் கூடிய தேவியின் நாபியானது மிகவும் ரமணீயமாய் விளங்கிற்று. தேவியின் இடையோவெனில், சங்கரரது அணிமாவெனும் ஐஸ்வர்யமே உருவெடுத்தது போலவும், தியானம் செய்யும் யோகிகளது நுண்ணிய மனம் போலவும் வெகுஸூக்ஷ்மமாகவும் அழகாகவும் இருந்தது. அம்ருதமும் ஆனந்தமும் உருவெடுத்தனபோல் நெருங்கிப் பருத்துப் பிரதிதினமும் விஸ்தரித்துவரும் குசங்கள் யௌவனமெனுங் கஜேந்திரனது மஸ்தகக்கும்பங்கள் போலவும், காமராஜனது அபிஷேக கலசம் போலவும், தேஹ காந்தியெனும் ஸரஸ்ஸில் விளையாடும் இரண்டு சகோரப் பக்ஷிகள் போலவும் முத்துமாலைகளால் சூழப்பட்டு மஹேஶ்வரனது மனமெனும் பாற்கடலைக் கடையும் மந்தரமலைகள் போலவும், ஸௌபாக்யமெனும் ரத்னக்கிரஹத்தின் கலசங்கள் போலவும் விளங்கின. காட்டுவாகைப்பூவைப் பரிஹஸிப்பவைபோலுள்ள மிருதுவான தேவியினது கரங்கள் மன்மத ஊஞ்சலின் ஸ்வர்ணச் சங்கிலிகள் போலவும், அன்றுகாலையில் மலர்ந்த தாமரைமலர்போலவும், தனது சிவப்பு நிறத்தைத் திக்குகட்கெல்லாம் அளிப்பனபோலவும், மஹேஶ்வரனது பாணிக்கிரஹணத்திற் கேற்றனவாயும் விளங்கின. கழுத்தானது கடைசல் பிடித்த சங்கம்போல் விளங்கிற்று. சரத்கால சந்திரனைப்போன்ற காந்தியுள்ளதும், வணங்கிய புருவமுள்ளதும், தாமரைபோன்ற கண்களுடையதும், எள்ளின்பூப்போன்ற மூக்குடையதும், சுத்தமான பற்களால் அழகாகப் பிரகாசிப்பதும், சுவையுள்ள சொற்களெனும் இனிய செந்தேன் பெருக்கால் உலகனைத்திற்கும் இன்பமளிப்பதும், மணிக்கண்ணடிபோல் பிரகாசிக்கின்ற கன்னங்களோடு கூடினதும், புதிய பவழம்போற் சிவந்த அதரபல்லவ முடையதும், சந்திரனது சகலம்போல் உதாரமான நெற்றியையுடையதும், அழகிய திலகத்தோடு கூடியது

மான தேவியினது திருமுகமும் மிகரமணீயமாய் விளங்கிற்று. குடிலமாயும் வாஸனை நிறைந்ததாயுமுள்ள தேவியினது கேசபாரமானது மயில்தோகைபோல் பிரகாசித்தது. இங்ஙனம் யௌவனம் நிறைந்த ஜகதம்பிகையானவள் கிரிராஜனது அரண்மனையில் மிக அழகாக விளையாடினள்.

ஸதீ தேவி தக்ஷயாகசாலைக்குச் செல்லுதல், தேவி தன் சரீரத்தைத் தியாகம் செய்தல், பார்வதீ யவதாரம், பார்வதியின் பாதாதிவர்ணனம் என்னும் விஷயங்கள் அடங்கிய அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள்—103).

தக்ஷனது யாகம் அழிதல்.

அகஸ்தியர்:—ஸர்வ வித்தைகளுக்கும் நிதியான ஹயக்கிரீவரே! ஸதீதேவி உடலை விட்டதைச் செவியுற்ற பரமசிவன் அதன்பின் என்னசெய்தார்? துர்ப்புத்தியுள்ள தக்ஷனிடம் கோபங்கொண்டனரா? அல்லது இயற்கையிலேயே அவ்வியாஜ கருணாமூர்த்தியான அவர் சாந்தமாய்ச் சும்மாயிருந்து விட்டனரா?

ஹயக்கிரீவர்:—ஜகன்மாதாவான ஸதீதேவி தன் தேஹத்தைக் களைந்து ஹிமவானுக்குப் புத்திரியாய் அவதரித்தபோது தேவியினது தோழிகளும் கணங்களும் யக்ஞசாலையினின்று கைலாஸஞ் சென்றனர். சென்று இந்த துக்க ஸமாசாரத்தை யெப்படி பகவானிடம் சொல்வதென்றஞ்சி நடுங்கி வெறும் விமானத்துடன் அவரருகே சென்று வணங்கிக் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகவும் தொண்டை தழதழக்கவும் ஸகிகள் ஸகலவிருத்தாந்தங்களையும் ஆதியோடந்தமாய்த் தேவனிடம் தெரிவித்தனர்.

'அம்பிகை யுடல்நீத்தாள்' என்பதைக் கேட்டவுடன், மிக்கதீரனுயினும் சிவன் ஒரு க்ஷணநேரம் சோகமடைந்தனர். உத்தரக்ஷணத்தில் சோகமானது நீங்க உக்ரரான நீல

கண்டரது உள்ளத்தே கோபக்கனல் எழும்பிற்று. தக்ஷன் மிகக் கடுமையாய்ப் பேசிப் பெருத்த அபசாரம் செய்ததை நினைக்க நினைக்க தேவனது கோபாக்கினி கொழுந்துவிட்டு எரியவாரம்பித்தது. தக்ஷனது குலத்திற்குக் கோடாரி போன்ற சிவனது புருவம் நெற்றியில் ஏறிற்று. பெரு மூச்சினால் உதடுகள் துடித்தன; அங்கமெல்லாம் ஜ்வாலாமய மாயது. சிரஸிலுள்ள கங்கையில் நீர்க்குமிழிகள் காணப்பட அவள் வருந்தியவள் போல் காணப்பட்டனள். அவரதுஉட லில் ஆபரணமாய் விளங்கியிருந்த ஸர்ப்பங்கள் உஷ்ணம் பொறுக்கமாட்டாமல் சுருண்டுவாடின. கோபத்தாற் சிவந்த இரண்டு கண்களும் ஸ்வபாவமாகவே சிவந்துள்ள அக்கினி நேத்திரத்திற்கு நண்பர்களாயின. இத்தகைய கோபத்தைக் கண்டு சிவகணங்கள் பயந்து இங்குமங்கும் ஓடி ஓரிடத்தில் மறைந்து நின்றன. இங்ஙனம் எல்லாக் கணங்களும் பயந் தோடினும் மிக்க தீரரான நந்திகேஸ்வரர் மாத்திரம் சிவனைவிட்டகலவில்லை. ஆயினும் அவர் கோபாக்கினியால் ஜொலிக்கும் ருத்திரர் முன்நிற்க முடியாமல் பின்புறத்தில் பதுங்கி ஏகாந்தமாய் நின்றனர். சங்கரரது கோபத்தைக் கண்டு பூமியும் சலித்தது; ஸூர்யன் மறைந்தனன்; நக்ஷத்தி ரங்கள் உதிர்ந்தன; கடல் கலங்கிற்று.

வீரபத்ரோத்பத்தி.

இங்ஙனம் சராசராத்மக ஸர்வப்பிரபஞ்சமும் நடுக்க முற்றபோது பரமசிவன் தனது நெற்றியில் வியர்த்த வேர்வையில் ஒரு பிந்துவை நகத்தால் எடுத்துப் பூமியில் தெறித்தனர். உடனே அவ்வியர்வைத் துளியிலிருந்து மூவுலகையும் விழுங்கத்தக்க உடலும் ஆற்றலும் வாய்ந்த ஒருவர் தோன்றினர். காலாக்கினிருத்திரனைப் போல் ஜொலிக்கும் அவர் வீரபத்திரர் என்று அழைக்கப்பட்டனர். அவர் புருவத்தை நெறித்துக்கொண்டு பிரஹ்மாண்ட பித்தி (சுவற்றை)யைப் பிளந்து தள்ளுவர்போல் மிக உயரமாயுள்ள வராகவும், மிகவும் ஜ்வலிக்கின்ற ஊர்த்துவ கேசமுள்ளவராக வும், பிரளய காலாந்தகராகவும் விளங்கினர். அவர் மிகுந்த

பக்தியுடன் பரமசிவனை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "மஹாதேவ! ஜகன்னாத!! யான் என்ன செய்யவேண்டும்? தங்கள் பணிவுள்ள தாஸனாகும் அடியேனை எந்தக் காரியத்தில் தூண்டுகின்றீர். தங்களது இன்னருளால் என்னாலாகாத காரியமொன்றுமில்லை. பூமியை அசக்கட்டுமா? தலை கீழாகப் புரட்டட்டுமா? கடலைக் குடிக்கட்டுமா? மூவ்வுலகங்களையும் கலக்கட்டுமா? உமது புருவமசைவின் அஸாத்தியமான எதையும் செய்து முடிக்கின்றேன்" என்று விக்ஞாபித்துக் கொண்டனர்.

இங்ஙனம் வீரபத்திரரால் வேண்டிக் கொள்ளப்பட்ட ருத்ரன், "செல், சீக்கிரம் செல்; துஷ்டனான தக்ஷனுடைய யாகத்தை நிர்த்தயையோடு அழிப்பாயாக! எனக்குத் துரோஹி அவன்; ஸதா என்னைத் தூஷிக்கும் பாபி; வீண் கர்வங்கொண்டவன்; ஆதலால் அவனது யாகத்தை நாசஞ் செய்து சீக்கிரம் திரும்பி வா" என்று ஆக்ஞையிட்டனர். சந்த்ர மௌளியின் ஆக்ஞையைச் சிரஸில் தாங்கி வீரபத்ரர் மிகுந்த கோபத்துடன் விரைவாய்க் கிளம்பினார். அப்பொழுது அவரது ரோம கூபங்களிலிருந்தும் கண்களிலிருந்தும் செவித்துளைகளிலிருந்தும், நாஸிகாத்துவாரத்திலிருந்தும், கோரப்பற்களிலிருந்தும் பல கோடிக் கணக்கான ப்ரமதகணங்கள் தோன்றினர். அவர்கள் பதினாயிரம் ஸூர்யர்களைப் போன்ற பிரகாசமுள்ளவர்களாயும், ஆயிரக் கணக்கான ஆயுதங்களைத் தரித்தவர்களாயும், ஆகாயத்தையும் விழுங்கும் ஆற்றலுள்ளவர்களாயும், தரணியைத் தகிப்பவர்களாயும், பூதங்களை விழுங்குபவர்களாயும் விளங்கி வீரபத்திரரைச் சூழ்ந்து கொண்டனர். உடனே வீரபத்திரனும் பிரமத கணங்களும் அங்கிருந்து புறப்பட்டுத் தக்ஷனது யாகசாலைக்குச் சென்றனர். சென்றதும், யாகசாலையில் இருந்தவரனைவரும் பேரிடி முழங்க, பெரிய மின்னல்கள் கண்ணைக் கூசும்படி செய்யப் பிரளயகால மேகம் இதுவென அஞ்சி நடுங்கி ஹா ஹா வெனக் கதறினர்; சிலர் ஓடினர்; சிலர் மூர்ச்சித்துக் கீழே விழ்ந்தனர்; சிலர் கதறிக்கொண்டு

இங்குமங்கும் ஓடினர். த்ருவை, உபப்ருத், ஜுஹூ முதலிய யக்ஞ பாத்திரங்களை எறிந்துவிட்டு ரித்விக்குகள் பயந்தோடினர். சிலர் பக்ஷிரூபமெடுத்துக் கொண்டு பறந்து சென்றனர். சிலர் பூனையுருவந்தாங்கி ஊர்ந்து சென்றனர். சிலர் பயத்தினால் உயிரையே விட்டனர். "ஐயோ! துஷ்டனான தக்ஷன் தன் குலத்தையுங் கெடுத்தான்; தன்னுடன் சேர்ந்த நம்மையுங் கெடுத்தான்" என்னும் பேச்சுகள் எங்குங் கிளம்பிற்று. இந்திரன் மயிலுருவமெடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். யக்ஞ புருஷன் மான் சரீரந்தாங்கிக்கொண்டு மறைந்தான். இதையறிந்த வீரபத்திரன் அவரைப் பின் தொடர்ந்து கூரிய கட்கத்தால் மானின் தலையை யறுத்தான். அங்ஙனம் அறுபட்ட தலையிலிருந்து புரோடாசவாஸனை வீசும்படியான, ரத்தம் பெருகிற்று. அன்றுமுதல் வீரபத்திரனுக்கு "க்ரது த்வம்ஸீ" என்னும் பெயர் வழங்கலாயிற்று. ருத்திரகோபத்தினாலுண்டான வீரபத்திரன் யக்ஞபுருஷனைக் கொன்று யக்ஞசாலையிலுள்ளோரையுங் கொல்ல உள்ளே நுழைந்தனர். நுழையும் போதே உக்கிரபராக்கிரமமுடைய வீரபத்திரனுக்கெதிரே அருணன் ஸாரத்தியம் செய்யும் ரதத்தில் ஸூர்யன் தென்பட்டான். உடனே வீரபத்திரன் சூர்யனது தலைமயிரைப் பிடித்திழுத்துக் கீழேதள்ளிக் கன்னத்தில் அறைந்துப் பற்களெல்லாம் பலபலவென்று கீழேஉதிரும்படி செய்தனன். தந்தங்களை யிழந்த சூர்யனுக்கு அன்று முதல் மாவே ஹவிஸ்ஸாகக் கொடுக்கப்படுகின்றது. பற்களுடைந்து உடலெல்லாம் ரத்தம் வீறிட்டுப்பெருக சூரியன் உதயமார்த்தாண்டன் போல் சிவப்பாய்த் தோன்றினன். பின்னர், வீரபத்திரன் சந்திரனைப் பிடித்துக்கொண்டு ஒரே அடியால் மிருகம் போல் பூமியில் தள்ளிக் காலால் உதைத்துத் தேய்த்தனர். அப்பொழுது எல்லாக் கலைகளும் அழிந்து ஒரு கலை மாத்திரம் மிஞ்சியிருந்தது. இங்ஙனம் ஒரு கலையோடு விளங்கும் சந்திரன் வீரபத்திரரைப் பணிந்துத் துதித்தனர். அதனால் ஸந்தோஷமடைந்த வீரபத்திரர் ஒரு கலையோடு விளங்கும் சசியைத்தூக்கித் தன் சிரஸில் அணிந்து கொண்டனர். அதனால் வீரபத்திரனுக்கும் சந்த்ரசூடனென்னும் பெயரேற்

பட்டது. அச்சமயத்தில் பயத்தினால் வீணை கீழே நழுவி விழ நடுங்கியோடும் ஸரஸ்வதியைப் பிடித்து வீரபத்திரன், அவளது நாசியை யறுத்தனன்; அக்கினிதேவனது இரு கரங்களையும் அறுத்தனன்.

விஷ்ணு வீரபத்திரர்களது யுத்தம்.

இங்ஙனம் தேவர் படுந்துன்பத்தைக்கண்டு மஹா விஷ்ணு, சக்கரமேந்தி, கருடவாஹனத்திலமர்ந்து வீரபத்திரருடன் யுத்தத்திற்கு வந்தனர். கருடனது இறக்கைக் காற்றினால் கடல்கள் கலங்கின. விஷ்ணு விரைவாகச் செல்லும் திவ்யாஸ்த்ரங்களால் வீரபத்திரரைத் தாக்கினர். கோபாவேசத்தோடு விளங்கும் வீரபத்திரரும் எண்ணிறந்த திவ்வியாஸ்த்ரங்களால் விஷ்ணுவை எதிர்த்தனர். அவர்கள் இருவரும் மூவுலகங்களும் நடுங்கும்படி போர் புரிந்தனர். மதகஜங்கள் போன்ற அவ்விருவர்க்கும் யுத்தம் ஏற்பட்டு அவர்கள் செய்த அட்டஹாஸ சப்தம் பத்துத் திக்குகளிலும் பரவிற்று. அவ்விருவரும் இடம் வலமாகச் சுற்றிக் கொண்டும், கர்ஜித்து ஒருவரையொருவர் பிடித்துக் கொண்டும், திவ்விய அஸ்த்ரங்களைப் பிரயோகித்துக் கொண்டும், ஹஸ்த லாகவத்தையும் ஸாமர்த்தியத்தையுங் காட்டிக்கொண்டும், மூவுலகங்களும் நடுங்கும்படி மஹா கோரமாக யுத்தம் செய்தனர். விஷ்ணு வீரபத்திரர் ஆகிய இருவர்களது முயற்சியையும், வீரபத்திரரது வெற்றிக் குறியையுங் கண்ட நான்முகப்பிரஹ்மன், உடனே ஒரு அன்னப்பக்ஷி உருவத்தையெடுத்துக் கொண்டு தன்மீதமர்ந்து போர்புரியும்படி வீரபத்திரரை வேண்டினார். இதனால் வீரருக்குப் பிரஹ்மனிடம் இருந்தகோபமானது தணிந்து ஸந்தோஷமேற்பட்டது. ஹம்ஸவாகனத்தில் அமர்ந்த வீரரும் கருடன் மீதமர்ந்துள்ள விஷ்ணுவும் முறையே பினாகத்திலிருந்தும் சார்ங்கத்திலிருந்தும் கிளம்பும் சரவர்ஷங்களால் உலகை மறைத்துத் திடுக்கிடும்படி செய்தனர். சரங்களால் வீரபத்திரரை ஜெயிக்க முடியாதென்றெண்ணிச் சக்கரபாணி

யானவர் எங்குந்தடையின்றிச் சென்று எதையும் யாரையுங் கொல்லக்கூடியதாயும் பயங்கரமாயும் விளங்கும் சக்கரத்தை யவர்மீது பிரயோகித்தனர். ஆகாயத்தை மறைத்துக் கொண்டு ஜ்வாலா மாலைகளுடன் வரும் ஸுதர்ஶனமென்னும் அந்த சக்கரத்தை, வீரபத்திரர் தனது பெரியவாயை விசால மாகத்திறந்து விழுங்கிவிட்டனர். அதைக் கண்டு ஆச்சரிய மடைந்து கருடவாஹனன் அவரைப்பார்த்து "மஹாவீரரான வீரபத்திரரே! உமது வீரத்தன்மை மெச்சத்தக்கதே!! துராத்மாவான தக்ஷனை சிக்ஷிப்பது நியாயமே. ஸாக்ஷாத் புவனேஶ்வரன் அங்கமல்லவா நீர்! உமது பராக்கிரமத்தை ஸஹிக்கயாவரே வல்லவர். எங்குந்தோல்வியுறாததும் வஜ்ரத் திலும் வலிமை பொருந்தியதுமான எனது சக்கிரத்தை விழுங்கிய உமக்கு யாரே ஈடாவர்!!! துராத்மாவான தக்ஷனைக் காக்க இனியாரால் முடியும்? எனக்கே இந்த கதியானல் மற்ற யார் அவனைக் காக்கப்போகிறார்? ஆதலால் சிவத்துரோஹி யும், தேவித் துரோஹியும், மஹாபாபியுமான தக்ஷனைக் கொல்லும். நான் மற்றொருஸமயத்தில் தவஞ்செய்து உமக்குக் குருவான பரமசிவனிடமிருந்து அந்த சக்கரத்தை மறுபடி யும் பெற்றுக் கொள்ளுகிறேன். மஹாவீரரே! உமக்கு மங்களமுண்டாகட்டும்; நான் போய்வருகிறேன். சிவனது கட்டளையை நிறைவேற்றும். துஷ்டனான தக்ஷனைப் பக்ஷிப் பீராக. சிவனது ஆக்ஞையைப் போலவே எனது ஆக்ஞை யையும் கருதும். எங்கள் இருவர்க்கும் புராணங்களிலும் ஆகமங்களிலும் பேதங் கூறப்படவில்லை. நான் சக்தி வடிவினன். விஶ்வவியாபியான அவர் சக்திமான். சக்திக்கும் சக்திமா(சக்த)னுக்கும் பேதமேது? அக்கினி வேறு, தகிக்கும் சக்தி வேறாகுமோ? ஆதிசக்தி நான்கு வகையாகப் பகுக்கப் பட்டிருக்கின்றனள். போககாலத்தில் பவானி; யுத்த காலத்தில் துர்க்கை; கோபத்திற் காளி; புருஷ கார்யத்தில் விஷ்ணு; ஆதலின் எனக்கும் சிவனுக்கும் எள்ளளவும் பேத மில்லை. சிவனையே என்னையெனக் கருதிச் சற்றுந் தயை யின்றித் தக்ஷனைச் சிக்ஷிப்பாய்" என்று கூறி யுத்தத்தி லிருந்து நிவ்ருத்தியாகித் திருமால் சக்கரத்தையிழந்து

வராய்ப் போய்விட்டனர். பின்னர், வீரபத்திரர் தனக்கு வாஹனமாய் அமர்ந்துள்ள நான்முகனைப் பரமப்ரீதியுடன் உள்ளே செல்லும்படி உத்தரவிட்டுத் தானும் உள்ளே பிரவேசித்து அட்டஹாஸம் செய்தனர். அப்பேரொலியைக் கேட்டபலரும் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தனர்; மஹரிஷிகளிற் பலர் வீரபத்திரரது சரணங்களில் வீழ்ந்துத் துதித்தனர். அவர்களைச் சற்றும் மதியாமல் விட்டுவிட்டு வீரர் தக்ஷனிடஞ்சென்று கடினமான சொற்களால் அவனை நிந்தித்துக் கூர்மையான ஒரு வாளைக்கொண்டு அவனது சிரஸை யறுத்தெறிந்தனர். இதைக்கண்டு பயந்து கோவென்று கதறும் தக்ஷபத்னியை அலக்ஷ்யமாய்க்கருதி யொன்றும் செய்யாமல் விட்டுவிட்டுத் தக்ஷனது தலையை அக்கினியிடங்கொடுத்து "இதைச் சாப்பிடு" என்று கூறினர். முன்னரே இருகரங்களும் அறுபட்ட அக்கினி, வீரபத்திரரது ஆக்ஞையைக் கீழ்ப்படியாவிடின் தன் சிரமும் அறுபட்டுப் போகுமென்று அஞ்சித் தக்ஷனது சிரஸை யுண்டனர்.

தக்ஷனது பத்நிகள் செய்த ஸ்துதி.

தக்ஷனது பத்நிகளனைவரும் ஒன்று சேர்ந்து பயத்தால் நடுங்கித் தலைமயிர் அவிழ்ந்து புரளக் கால்கள் தடுமாற நாவுலர, கண்டத்தொனி யடைக்கக் கண்ணீர் பெருக ஆபரணங்கள்விழக் கைகளைக்கூப்பிக்கொண்டு தீநமான ரோதநத்தால் வீரபத்திரர் மனம் இளகும்படி பிரார்த்தனை செய்துப் பக்தியுடன் அவரைக் கீழ்வருமாறு துதித்தார்கள்.

"ஓ தேவ! தேவ! ஜகத்தை உபஸம்ஹாரஞ் செய்யும் போது மிக்க பயங்கரமானவரே! வீரபத்ரரே! கருணை நிறைந்தவரே! பயங்கரமான பராக்கிரமத்திற் கிருப்பிடமானவரே! ஸாக்ஷாத் சிவவடிவமானவரே! எல்லோரையும் காக்க ஆவல் கொண்டவரே! துஷ்டர்களைச் சிக்ஷிப்பதில் ஆசையுள்ளவரே! சிஷ்டர்களை ரக்ஷிப்பதில் மிக்க ஊக்கமுள்ளவரே! மூன்ருவது கண்ணால் பிரளயகாலத்திலே மூவ்வுலகை

யும் எரிப்பவரே! பிரஹ்மனாக இருந்து உலகைப் படைத்து, விஷ்ணு வாயிருந்து உலகைப் பரிபாலிப்பவரே! விஸ்வரூப முடையவரே! உலகில் பற்றில்லாதவரே! தான் ஒரு பிரஜாபதி யென்ற கர்வத்தால் எங்கள் கணவன் தங்களுக்குச் செய்த குற்றத்திற்குத் தக்கபடி தாங்கள் சிக்ஷை செய்தீர்கள். மஹாப்பிரளயகாலத்தில் உமது கோபத்திற்குத் தக்க பாத்திரமாயிருப்பவை இவ்வுலகங்களல்லாவா? எளிய இந்தப் பிராஹ்மணன் உமது கோபத்திற்கேற்ற பாத்ரமாவரோ? ஆதலின் அவர் பிழைக்கவும் எங்கள் வைதவ்யம் நீங்கவும் நாங்கள் நல்வாழ்வு வாழவும் ஒரு உபாயத்தைச் செய்யும்!" என்று இங்ஙனம் தக்ஷனது மனைவிகள் துதி செய்யவும் கருணைகொண்ட வீரபத்திரர் அருகிலிருந்த ஆட்டின் தலையை அறுத்துத் தக்ஷன் கழுத்தோடு சேர்த்து அவரைப் பிழைப்பித்தனர்.

தக்ஷன் செய்த ஸ்துதி.

ஆட்டு முகத்துடன் பிழைத்தெழுந்த தக்ஷன் வீரபத்திரைப் பணிந்து ஸ்தோத்திரம் செய்தனர். "வீர! முக்கண்ணனை விலக்கி யான் செய்த வேள்வி வேள்வியல்ல. அது என்னையே யழித்துக்கொள்ள யான்செய்த அபிசாரமே யாகும். யக்ஞ வடிவனாய், யக்ஞ பலத்தை யளிப்பவனாயுள்ள சிவனை அசட்டை செய்து ஒரு வேள்வியைச் செய்தால் அதற்கு இத்தகைய பலன்தான் நேரிடும். நமஸ்காரம்! வீரபத்ரரே! மறுபடியும் உமக்குக் கோடி நமஸ்காரம். அஹங்காரத்தாற் கலங்கின மனமுள்ளவனும், பிரஜாபதி என்ற கர்வத்தால் மதமுள்ளவனும், வேறு கதியின்றி உம்மையே சரண மடைந்துள்ளவனுமான என்னை, யான் செய்த பெருங்குற்றத்தை மன்னித்து, கருணாகடாக்ஷத்தினால் காத்தருள்வாய்! பிரபுவாய் மூவ்வுலகிற்கும் மஹேசனாய் விளங்கும் உம்மைக் கேவலமான சொற்களால் நிந்தித்த சிவத்துரோஹிகளுக்கு நரகக்கடலிலிருந்து கரையேறும் வழியே கிடையாது. யான்செய்த இப்பெருங்குற்றத்திற்கு எனது பாக்கியத்தால் நீர் இந்த சிக்ஷையை விதித்தீர். இத்தகைய

கருணாமூர்த்தியைப் போற்ற உலகில் எவருக்குத்தான் சக்தியுண்டு? இன்று முதல் யான் உமது பாதஸேவை செய்ய நிச்சயித்து விட்டேன்".

இங்ஙனம் தக்ஷனால் துதிக்கப்பட்டு ஸந்தோஷமடைந்த வீரபத்ரர், யக்ஞபுருஷனது தலையை அதன் உடலுடன் சேர்த்து அதையும் பிழைப்பித்துக் கைலாஸத்திற்குக் கிளம்பினார். இந்த மஹாவீரனது சுபமான சரிதத்தைப் படிப்பவர் பாபியாயினும் பாபமகன்று பரமேஸ்வரனது திருவடியை யடைவர். ஸமஸ்த பாபங்களையும் துவம்ஸம் செய்வதான இந்த பவித்ரமான சரிதத்தைப் படிக்கும் மஹாநுபாவர்கள் நற் கீர்த்தியையும் அதிதுர்லபமான பாக்கியங்களையும் பெறுவர்.

தக்ஷயாகத்தை அழிக்க வீரபத்திரரது உற்பத்தி, விஷ்ணு வீரபத்திரர்களின் யுத்தம், தக்ஷபத்னிகள், மறுபடியும் பிழைத்த தக்ஷன் இவர்களது ஸ்துதி இவைகளடங்கிய அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 114.)

நாரதர் ஹிமாலயஞ் செல்லுதல்.

அகஸ்தியர்:—வீரபத்திரரது கதாமிருதத்தால் பேரானந்தம் பெற்றேன். மிகுதிக் கதையையும் கேட்க அவாக் கொண்டுள்ளேன். யௌவநம் வாய்ந்த பார்வதிதேவி விவாஹம் செய்துகொண்டாளா? சம்பு அவளை யாசித்தாரா? அல்லது தேவி தானே அவரிடம் சென்றனளா? எங்ஙனம் அவர்களுக்கு விவாஹம் நடைபெற்றது? ஹயக்ரீவரே! நீர் ஸர்வகதைகளுக்கும் நிதியல்லவா? ஆதலால் இவைகளை விஸ்தாரமாகக் கூறுவீராக.

ஹயக்ரீவர்:—பாபராசிகளைப் பறந்தோடும்படி செய்யும் திவ்யமான கதையைக் கூறுகிறேன்; கேள்! உலகிற்குப் பேரானந்தத்தையளிக்கும் பார்வதீ தேவியானவள் யௌவநத்தால் மிக அழகாக விளங்கும்போது, ஹிமவான் பின்

வருமாறு சிந்திக்கலானார். 'மணிவிளக்கைப்போன்ற தேவி நம்முடைய குலத்திலே தோன்றி எமக்கு என்றுமழியாத கீர்த்தியைத் தந்தனள். எமதுகுலம் சரிதார்த்தம் ஆயிற்று. அவளது விவாஹத்திற்கேற்ற வயதிது. அவளுக்கேற்ற கணவன் மூவுலகிலுமில்லை. இந்திரன் முதலிய அஷ்டதிக் பாலர்களும், பிரஹ்மாவும், விஷ்ணுவும் கூட இவளுக்குத் தகுதியானவரல்ல', என்று இவ்வாறு ஹிமவான் ஏகாந்த மாக உட்கார்ந்து யோசிக்கும்போது வீணாபாணியான நாரதர் அங்கு வந்தனர். பர்வதன் எனும் தனது நண்பனுடன் எங்கும் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஆகாயத்திலிருந்து அங்கு இறங்கும்போது பூர்ணசந்திரனைப் போல் விளங்கினர். பசும்பால் போன்ற வெளுத்த சரீரமும், மின்னல் போன்ற ஜடையும், நாதப்பிரஹ்மத்துடன் கூடிய மஹதீ என்னும் வீணையும் மிகரம்யமாகக் காணப்பட்டன. திவ்யமான கானத் தால் சந்திரசேகரனைத் துதித்துக்கொண்டு, அந்தராத் மாவைத் தியானஞ்செய்து, அந்த ஆனந்தத்தால் புளகாங்கி தராகி, அவர் பர்வதராஜனிடம் அணுகினர். ஹிமவான் அவரைக்கண்டவுடன் எழுந்து எதிர் கொண்டழைத்து நல் வரவு கூறி அர்க்கிய பாத்யாதிகளளித்து ஆஸனத்தில் அமர்த் தினன்.

நாரதர் பர்வதராஜனை நோக்கி "அமரர்களுக்கு இந்திரன்போல் பர்வதங்களுக்கு நீ இந்திரனவாய். உனக்கு மங்களம் உண்டாகுக. உனது உபசாரத்தைக் கண்டு மிக்க மகிழ்ந்தேன். நீயும், ஆதிசேஷனும், ஆதிகூர்மனும், அஷ்ட திக்கஜங்களும் பூமண்டலத்தைத் தரிக்கின்றீர்கள். ஆதலின் நீ மிக சிலாக்கியமானவன். அன்றியும், பதினான்கு உலகிற் கும் தாயாரான ஸாக்ஷாத் அம்பிகை உனக்குக் கன்யகை யாகத் தோன்றியிருக்கிறாள். இதைவிட உனக்கென்ன வேறு பாக்யம் வேண்டும்! இவளே லக்ஷ்மி, புஷ்டி, தாத்ரி; ப்ரேமை யினால் பரமசிவனது பாதிசரீரத்தைப் பெறுபவள். இவளே ஸ்வதா, ஸ்வாஹா, நீதி, ஸந்ததி, ஆத்மவித்யை! குஹ்ய வித்யை! பாபத்தை அகற்றுபவள்!

இவள் பரமசிவனது அங்கபூஷணமாக ஆகப் போகிறாள். யௌவனப் பருவத்தை யடைந்த இவளை உபேக்ஷை செய்யாதே! உடனே இவளை ஸ்தாணுவின் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் செல்! என் சொல்லைத்தட்டாதே! ஸதீதேவி உடலை விட்டதால் அவர் புலன்களை யடக்கிக் கோரமாகத் தவம் செய்கிறார். நீ அங்கு சென்று உமையை அவருக்குப் பணிவிடை செய்யும்படி அங்கு விட்டுவிட்டுவா. பின்னர் கிரமமாக உமையுடன் அவருக்குப் பரிசயம் ஏற்படும். விவாஹமும் நடைபெறும். இந்த விவாஹ விஷயத்தில் தாரகனால் பீடிக்கப்பட்ட தேவர்கள் உதவி செய்வார்கள். நான் கூறியபடிசெய்'' என்று ஞானதிருஷ்டியையுடைய நாரதர் கூறியதைப் பர்வதராஜன் கேட்டுத் தன் குலத்தை யின்னும் மிகமிக உயர்ந்ததாகக் கருதினான். நாரதரும் வந்த படியே சென்றார்.

ஹிமவான் ஸ்தாண்வாஸ்ரமஞ் செல்லுதல்.

பர்வதராஜனும் உடனே விஜயா, ஜயா என்னும் இரு தோழிகளுடன் தனது குமாரியை யழைத்துக்கொண்டு ஸ்தாண்வாஸ்ரமத்திற்குக் கிளம்பினார். அந்த ஆஸ்ரமமானது மஹாபலிஷ்டர்களான கோடிக்கணக்கான கணங்களால் காக்கப்பட்டுப் புஷ்பங்களாலும் பழங்களாலும் நிறைந்திருந்தது. கைலாஸ மலையின் பூப்பிரதேசத்திற்கருகிலுள்ள ஒரு பாகத்தில் அமைந்துள்ள அது சாந்தமான மிருகங்களால் சூழப்பட்டிருந்தது. நல்ல நிழலையளிக்கும் கங்கேளி, தேவதாரு முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து அழகாக விளங்கின. புண்ய பக்ஷிகளாலும் மிருகங்களாலும் சூழப்பட்ட சீதளமான பல நீரருவிகள் அங்கு ஓடுகின்றன. கஸ்தூரிமான் உட்கார்ந்துள்ள கற்பாறைகள் எப்போதும் கமகமவென்று ஆஸ்ரம வாஸிகளுக்கு வாஸனையைத் தருகின்றன.

ஸதாசாரமுள்ளவர்களும், த்ரிபுண்ட்ரத்தால் அழகிய நெற்றியை யுடையவர்களும், உடலெல்லாம் பஸ்மதாரணத்

தால் மிக அழகாக இருப்பவர்களும், சிவபக்தர்களுமான பிரஹ்மசாரிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. கத்துவது என்ற வியாஜத்தினால் சந்த்ரசூட! சிவ! ஈஶாந! நீலகண்ட! என்று ஸதா பக்ஷிகள் பகவந்நாமாவைக் கூறுகின்றன. பெண் என்ற பேச்சே யில்லாததும், தபஸ்ஸை விருத்தி செய்வதுமான அந்த ஆஶ்ரமத்திற்கு வெளியில் உமையையும் அவள் தோழிகளையும் நிறுத்திவிட்டு, ஹிமவான் பக்தியினால் வணங்கி மிக்க அடக்கத்துடன் உள்ளே நுழைந்தனர். பரமசிவன் இருக்கும் இடத்திற்குச் சற்று வெளியிலே மஹா தேஜஸ்வியாய் விளங்கும் சிலாதரது புத்திரரான நந்தியைத் தரிசித்து "ஓ நந்திகேஶ்வர! தாங்கள் சந்த்ரசூடனுக்குப் பிரதான பக்தரல்லவோ! பிரபுவின் பாதாரவிந்தஸேவையில் ஆசைகொண்டு இங்கு யான் வந்திருக்கின்றேன். இதை அவரிடம் தக்க சமயத்தில் விக்ஞாபநம் செய்து அவரது தரிசனத்தைச் செய்துவையும்" என்று ஹிமவான் கூறினர்.

உடனே நந்திகேஶ்வரர் உள்ளே சென்று நமஸ்கரித்துக் கையினால் வாயைப்பொத்திக்கொண்டு 'தங்கள் பாதாரவிந்த ஸேவை செய்ய ஹிமவான் காத்திருக்கிறார்,' என்று கூறினர். தபஸ்வியான பகவான் தனது புருவத்தை அசைத்து அவரை உள்ளே விடும்படி உத்தரவளித்தனர். நந்தியினால் உள்ளே யநுமதிக்கப்பட்ட பர்வதராஜன் ஜகன்னாதனைத் தரிசித்து ஸாஷ்டாங்க நமஸ்காரம்செய்து தான் வந்த காரியத்தைப் பின்வருமாறு விக்ஞாபித்துக் கொண்டனர். "தேவ! நீர் ஸர்வ லோகங்களாலும் வணங்கத்தக்கவர். ஜனன மரண மற்றவர்; சுத்தர்! ஸ்வதந்த்ரர்! தேஜோநிதி! உமது திருவடியை நினைத்த மாத்திரத்தில் ஸகல பாபங்களும் பறந்தோடும். ஸமஸ்தவிதமான தபஸ்ஸிற்கும் முக்யபலன் உமது பாத தர்சனமே! உம்மை யர்ச்சிக்காமல் ஒருவரும் ஸித்திபெற முடியாது. நானொரு விக்ஞாபநம்செய்து கொள்ளுகிறேன், அதை உள்ளமுவந்து ஏற்றுக் கொள்ளவேண்டுகிறேன். சங்கரரே! எனது புத்திரியான பார்வதி எனும் குணவதி தங்கள் பாதாரவிந்தத்திற்குத் தொண்டுபுரிய விரும்புகிறாள்.

ஆணோ, பெண்ணோ, ஜடமோ, சேதனமோ, அனைவர்க்கும் அவரவர் கோரிய பலனைப்பெறத் தங்கள் ஆராதனமே சிறந்த ஸாதனமல்லவா?

ஜிதேந்திரியர்களிற் சிறந்தவரான தங்கள் தபஸ்ஸிற்கு என் மகள் விக்னகாரியாக இருக்கமாட்டாள். அதனால் தங்களது தவங்கெடாது. அவள் விருப்பமும் பூர்த்தியாகும். தாங்கள் உத்தரவளித்தால் தோழியுடன் வாயிற்படியிற் காத்துக்கொண்டிருக்கும் என்குமாரியை இங்கு அழைத்து வருகிறேன். சம்போ! அவள் தமதாஶ்ரமத்தைப் பெருக்கி மெழுகிப் புஷ்பங்களைப் பறித்து மாலைதொடுத்து, அருவியிலிருந்து நீர் கொண்டுவந்து, பெண்களுக்குசிதமான மற்றும் பல தொண்டுகளையுஞ் செய்வாள்". இங்ஙனம் ஹிமவான் கூறப்பகவான் "அதிலென்ன குற்றம்! அப்படியே செய்யட்டும்" என்றார்.

பிறகு ஸந்தோஷங்கொண்ட பர்வதராஜன் பரமனை வணங்கி வெளியிற்சென்று கன்யகையைச் சிவனுக்குப் பணிவிடை செய்யும்படிக்கூறித் தன்னிருப்பிடஞ் சென்றனர். பார்வதியும் தோழிகளுடன் கூடி மிக வணக்கத்துடன் ஸதாசாரமுள்ளவளாய்ச் சிவனை உபசரித்தனள். ஆஶ்ரமத்திலோ புஷ்பந் தொடுப்பதிலோ, தீர்த்தம் கொண்டுவருவதிலோ, உமைக்குச் சிறிதுகூட ஆலஸ்யமில்லை. தேவபூஜாசாலையைச் சந்தனம், மாலை, பூர்ணகும்பம், அக்ஷதை, மாவினாலாகிய அழகிய கோலங்கள் முதலியவைகளாலலங்கரிப்பாள். தர்ப்பணத்திற்கு அதிபவித்ரமான கங்கா ஜலத்தையும், பூஜைக்கு ஸ்வர்ணத்தாமரைகளையும் கொண்டுதருவாள். கோமளமான குஶங்களையும், ஹோமத்திற்குத் தளிர்களையும் கொய்து வருவாள். இங்ஙனம் பலகாலம் தனதிஷ்டம் கைகூடத் தேவி தேவனை யாராதித்து வந்தாள். அந்த பசுபதியும் ஸ்த்ரீபராங்முகனாக இருந்து மூக்கின் நுனியில் திருஷ்டியை வைத்து, இந்திரியங்களை யடக்கி, புருவத்தினிடையில் மனதை நிறுத்தி, அந்தர்முகமாகக் கண்ணைச்செலுத்தி, பராநந்தமயமாயும், ஒன்றாயும், மாறுதலற்றதாயும், பற்றில்லாததாயு

முள்ள ஸ்வப்பிரகாசத்தில் நிஷ்டைகொண்டு, அலையற்ற ஸமுத்திரம் போல் விகல்பமோ அலைச்சலோ இல்லாதவராய் ஆத்மஸ்வரூபத்திலீடுபட்டிருந்தனர்.

தாரகாஸுரனது கொடுமை.

இதனிடையில் தாரகாஸுரனால் பீடிக்கப்பட்ட தேவ கணங்கள் சதுர்முகனைச் சரணமடைந்து ஸ்தோத்ரஞ் செய்து தங்களுக்கு அவ்வஸுரனால் நேர்ந்துள்ள துன்பத்தை விக்ஞாபனம் செய்துகொண்டனர்.

தேவர்கள் :—“ ஸ்வாமின் ! தாங்களே உலகைப் படைத்துப் பரிபாலிக்கின்றீர். உம்மையே உயிராகக் கொண்டவர்கள் வானவர்கள். அப்படியிருக்க எங்களைக் காப்பாற்றாமல் தாங்கள் உபேக்ஷை செய்வதேன் ? உம்மால் வரமளிக்கப்பட்ட மஹாபலிஷ்டனான தாரகன் மூவுலகையும் துன்பப்படுத்துகிறான். ஹிரண்யகசிபுவின் வம்சத்தில் தோன்றிய அவன் ஹிரண்யனுக்குச் சமமான பலமுள்ளவன். மிகச் சபலன்; கர்வி; நீதியற்றவன்; மதாந்தன்; எப்போதும் தேவர்களைப் பகைப்பவன்; இயற்றப்படும் யாகங்களை யெல்லாம் அழிப்பவன். ஸ்வதா, ஸ்வாஹா, வஷட் இவைகள் உலகில் இல்லாமல் செய்துவிட்டான். மிகக்கோபிஷ்டனான இவன் முநிஸ்ரேஷ்டர்களையெல்லாம் ஹிம்ஸிக்கின்றான். இந்திரனது கல்பவிருக்ஷம், சிந்தாமணி, காமதேனு முதலியவைகளை அபஹரித்துக்கொண்டான். அவனது படஹசப்தத்தைக் கேட்டவுடன் தேவரனைவரும் பயந்து ஓடினர். ஸ்வர்க்கத்தில் அவனே நுழைந்து தனங்களைக் கொள்ளைகொண்டு ஸ்வர்ணமயமான மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் திவ்ய ஸபைகளையும் இடித்துப் பாழாக்கினான். ஸ்வர்ணப் படிக்கட்டுகளுள்ள ஸரஸ்ஸுகளைப் புதைத்தான். இந்திரனது ராஜ்யமனைத்தையும் பாழாக்கிவிட்டான்.

சந்திர சூரியர்களது அதிகாரத்தையும் தானே பிடுங்கிக் கொண்டான். அக்நி அக்நியாக இல்லை; யமன் யமனாக

இல்லை. அவர்களது பதவிகளையும், செயல்களையும் தாரகனே ஆக்கிரமித்துக்கொண்டு செய்கிறான். தேவஸ்திரீகளைத் தூக்கிச் சென்று சிறையிலடைத்தான். தங்களெதிரில் அவனது அக்ரமங்களைக் கூறக்கூட எங்கட்கு வெட்கமாயிருக்கின்றது. கஷ்டம்! கஷ்டம்! அவனது பராக்ரமாக்நி மூவ்வுலகையும் கொளுத்துகின்றது. அவனிடமிருந்து பயமெனும் ஜ்வரம் தோன்றி எப்போதும் எங்களைத் துன்பப்படுத்துகின்றது. ஆஹாரத்திலோ, விளையாட்டிலோ எங்கள் மனம் செல்லவில்லை. இரவும் பகலும் அவன் செய்யும் துன்பம் பொறுக்க முடியாமல் தவிக்கிறோம். சில தேவர்கள் அந்த பயத்தால் மனித உடலைத்தரித்து மாநிலத்தே ஸஞ்சரிக்கின்றனர். தேவ கார்யம், பித்ருகார்யம் அனைத்தையும் கெடுத்து அவன் வானவரை நடுங்கச்செய்கின்றான். மஹா பலிஷ்டனான அவ்வஸுரனிடம் விஷ்ணுவின் சக்கரமும், சிவனது சூலமும் கூடச் செல்லவில்லை. இனித் தேவர்கள் செய்யவேண்டியதென்ன? உமது வரத்தால் கர்வங்கொண்ட அவன் எதனால் நாசமாவனோ அந்த உபாயத்தை உபதேசியுங்கள். சராசரங்களுடன்கூடிய மூவ்வுலகிலும் அவன் செய்யும் அநீதி பொறுக்க முடியவில்லை; அநாதைகளுக்கு நாதன் நீர்; ஆபத்தென்னும் கடலைத்தாண்டி வைக்கும் தோணிக்காரர் நீரேயன்றோ! தாங்கள் அவனையழிக்க ஒரு உபாயங்கூறாவிடில் நாங்கள் பிழைத்திருப்பது அரிது."

இங்ஙனம் தீனமாகத் தேவர்கள் வேண்டிக்கொள்ள, இதைக்கேட்டு பிரஹ்மா அமரர்களுக்குப் பதிலுரைக்கலானார்.

நாரதர் ஹிமவானிடம் செல்லல், ஹிமவான் ஸ்தாண்வாச்ரமம் போதல், தாரகாஸுரனது கொடுமை முதலிய விஷயங்களடங்கிய அத்தியாயம் முற்றிற்று. (சுலோ 99).

தாரகாஸுரனது கொடுமைகளையகற்ற உபாயம்.

பிரஹ்மா:—துஷ்டதாரகனால் பீடிக்கப்பட்ட தேவர்களே! அவனை யழிக்க ஓர் உபாயங் கூறுகின்றேன்;

கேளுங்கள்! அவன் இளமையிலேயே என்னை நாடிக் கடுந்தவம் புரிந்தான். அப்போது அவனிடமிருந்து கிளம்பிய புகை பதினான்கு புவனங்களிலும் பரவிற்று. பிராணிகளெல்லாம் தாபத்தினால் வெதும்பிக் கதறினார்கள். அந்தத் தவத்தால் ஸந்தோஷமடைந்த யான் அவனெதிரில் வரமளிக்கத் தோன்றினேன். அவன் 'அக்நியில் வைக்கப்பட்ட சிவ வீர்யத்தினால் ஜனித்தவனைத் தவிர வேறெந்த வீரனாலும் எனக்கு மரணபயங்கூடாது என்ற வரத்தைக்கொடும்' என்றான். அப்படியே ஆகட்டுமென வரமளித்து, யான் அவனை விருத்தி செய்தேன். அவன் அயோக்யனாயினும் கபடனாயினும் நானே வளர்த்த ஒருவனை நான் கொல்வதென்பது நியாயமல்ல. அன்றியும், நான் அவனைக் கொல்ல முயற்சித்தாலும் அது பயன்படாது. வீட்டில் தீயை வைக்கலாம்; அதை யவிப்பது கஷ்டம். ஆதலால் ஒரு தக்க ஸேனாபதியை யுண்டுபண்ணவேண்டும். ஜகன்னாதனான பரம சிவன் பார்வதியுடன் சேர்ந்து ஒரு புதல்வனைத் தோற்றி வைத்தால் அவனே ஒரு ஸேனாபதியாகித் துஷ்டனான தாரகனைக் கொல்லக்கூடும்.

பரமசிவன், ஸதீதேவி தன் தேஹத்தைத் தியாகம் செய்ததால் வைராக்கியங்கொண்டு, பெண்கள் ஸமீபத்திலிருத்தலைக்கூட வெறுக்கிறார். ஸ்தாண்வாஶ்ரமத்தில் மிகக் கடுமையான தவத்திலிறங்கித் தன்னைத்தானே அந்தர்முகமாகப் பார்த்துக்கொண்டு நிஷ்டையிலிருக்கிறார். உங்களது பாக்கியத்தினால் ஹிமவான் தனது புத்திரியான பார்வதியை பரம சிவனுக்குப் பணிவிடை செய்யும்படி சிவனருகேகொண்டு விட்டிருக்கின்றார். அழகிற்குப் பிறப்பிடமாயுள்ள அந்தத் தேவி தொண்டு செய்யும்போது பரமசிவன் அவளைக் கண்ணெடுத்துக்கூடப் பார்ப்பதில்லை; அவளுடன் பேசுவதுமில்லை. நீங்கள் முயற்சிசெய்து அந்தத் தேவியுடன் மஹா தேவனைச் சேரும்படி செய்வீர்களானால் உங்களுக்கு ஸுகமுண்டாகும். அந்தத் தேவியுடன் ஈசன் ரமிக்கும்போது அவரிடமிருந்து வெளிப்படும் வீர்யம் அக்நிபோல் இருக்கு

மாதலால் தேவி அதைத் தரிக்க முடியாமல் அவனியில் விடுவாள். பூதேவி அதை அக்நியினிடமும், அக்நி அதை சந்திரனது மனைவியான கிருத்திகா நக்ஷத்திரங்களிடமும், அவர்கள் அதைச் சுமக்க முடியாமல் கங்கையினிடமும், கங்கையும் அதன் தேஜஸ்ஸால் தாபமடைந்து சரவணப் பொய்கையிலும் விடப்போகிறார்கள். இதற்குள் சிவவீர்ய மானது குமாரனாகமாறப்போகிறது. அந்த ஸுகுமாரன் சிவனிடமிருந்து ஸகல அஸ்த்ர ஶஸ்த்ரங்களையுங் கற்று, வேதவித்யா ஸமர்த்தனாகவுமாகி நமக்கு ஸேனாபதியாக வருவான். அந்த கார்ய ஸித்திக்கு மூலகாரணமான பார்வதீ பரமேஶ்வரர்களது ஸாமரஸ்யத்தை ஸம்பாதியுங்கள். வைராக் கியமுள்ள முக்கண்ணனது மனத்தை அநுராகமுள்ளதாகச் செய்ய மன்மதன் முயற்சி செய்யட்டும்.

இங்ஙனம் கூறி பிரஹ்மா மறைந்தவுடன் தேவர்களும் கார்யஸித்தியையே கருதி அமராவதியை யடைந்தனர்.

இந்திர மன்மத ஸம்வாதம்.

தேவேந்திரன் இக்கார்யம் கைகூட மனத்தினால் மன்மதனை நினைத்தார். உடனே கரும்புவில்லைக் கரத்திலேந்தி புஷ்பபாணங்கள் நிறைந்த பாணப்பெட்டி பின்புறம் தொங்க ஸமஸ்த உலகிலுமுள்ள அழகுகளெல்லாம் உருண்டு திரண்டு அமைந்ததுபோன்ற சரீரம் வாய்ந்தவனாய், அரவிந்தம் அசோகம் மா நவமல்லிகை நீலோத்பலம் எனும் ஐந்து வகையான புஷ்பபாணங்களையுடைத்தாய் அடிக்கடி புன்னகை புரிந்துகொண்டும், ஸேநாபதியான சந்திரனுடன் பேசிக் கொண்டும், கிங்கரனான ராகனுடன் பரிஹாசம் செய்து கொண்டும், பெண் மக்களெனும் பெருஞ்சேனைசூழ, பெண் களது கடாக்ஷமெனும் ஸாயகத்துடனும், இரவெனும் மாயையுடனும், மந்தமாருதமெனும் மஹாரதத்திலமர்ந்து, எல்லோருக்கும் மோஹத்தை யளிப்பதில் ஆசையுள்ள வனாய்த் தபஸ்ஸிற்கு முதல் விக்னமாயிருப்பவனும், மாயா

ஸாரத்தையே பராக்கிரமமாயுடையவனும், மலர்ந்த கர்ணிகார புஷ்பம் போன்ற காந்தியுள்ளவனும், ரதீதேவியினால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டவனுமான மன்மதன் இந்திரனைப் பணிந்தான். அவனது பாணங்களிலிருந்து சிந்திய புஷ்பரஸங்கள் கீழே ஒழுகி பூமி மணத்தன.

வாஸவன் ஒரு பெரிய ஆஸனத்தைப் புருவத்தால் காட்டி அமரும்படி கூற, அங்ஙனமே அவன் அதன்மேல் உட்கார்ந்தான். கார்யஸித்தியின் பொருட்டு வாஸவனது ஆயிரங்கண்களும் மலர்ந்து மன்மதன்மீது விழ அதனால் ஆநந்தமடைந்த மன்மதன் இங்ஙனம் விக்ஞாபித்துக் கொண்டான். 'தேவ! பராக்கிரமத்தால் ஸகல அஸுரர்களையும் நடுங்கும்படி செய்பவனே! தங்களது ஆயிரங் கடாக்ஷங்களும் எளியவனான என்மீது வீழ்ந்தனவே! என்ன கார்யம் தங்களுக்கு ஆகவேண்டும்? அது அஸாத்யமாயினும் யான் செய்து முடிப்பேன். வைராக்யமுள்ள தபஸ்விகளை மோஹிக்கும்படி செய்கிறேன். நான் கோதண்டத்தைத் தரிக்கும்போது யாருக்கு வைராக்யமுண்டாகும்? உமது ஸ்தானத்தை விரும்புபவர் எவராயினும் அவரை மோஹமடையும்படி செய்வேன். தங்களுக்கு வஜ்ரமும், நானும் இரண்டு அஸ்த்ரங்களல்லவா? தபஸ்விகளிடம் வஜ்ரம் செல்லாது. நானே தபஸ்விகளிடமும், மற்றெல்லோரிடமும் செல்வேன். என் பாணம் அமோகமானது.

பெண்களது பேச்சே கூடாதென்னும் தபஸ்விகளையும் ஸ்திரீலோலராகச்செய்வேன். உமது சத்ருக்களான அஸுரர்களைச் சண்டை என்னும் பேச்சேயில்லாமல் பெண்மக்களிடம் சரணாகதி அடையும்படி செய்கிறேன்; அல்லது தாங்கள் விரும்பும் ஸ்திரீ, கற்பினால் தங்களுக்கு வசமாகாமலிருந்தால் உடனே பாணத்தினால் அவள் லஜ்ஜையை விட்டுத் தானே வலுவில் வந்து தங்களுக்கு வஶ்யமாகும்படி செய்கிறேன். தேவர், அஸுரர், நரர், நாகர், முனிவர், ஸித்தர், ஸாத்யர், யக்ஷர், சாரணர் முதலியவர்களிடத்திலும், பிரஹ்மா

வினிடத்திலும், விஷ்ணுவினிடத்திலும் அல்லது மஹேஸ்வரனிடமும் என்பாணம் தடையின்றிச் செல்லும். ஆதலின் யான் எங்கே எனது சரத்தைச் செலுத்துவதெனக் கூறுவீராக. மஹிமை வாய்ந்த உமது கடாக்ஷம் என்னைத் தொண்டு செய்யத்தூண்டுகின்றது.'' இங்ஙனம் காமன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட வாஸவன், 'பஞ்சபாண! நீ கூறியதெல்லாம் ஸத்தியம். ஓ ஜகதேக வீரா! நீ கூறியவற்றை விட உன்னிடம் அதிக சக்தியுண்டு. ஸகல தேவர்களுக்கும் ஒரு பெருங் கார்யம் நடைபெறவேண்டும். அது உனக்குத் தான் ஸாத்தியம்! சூர்யனின்றி வேறெவவர்தான் தாமரை மொக்கை மலரச்செய்பவர்?

திரிலோக கண்டகனும் மஹாவீர்யவானுமுள்ள தாரகாஸுரனைக் கொல்லவேண்டும். அது சிவவீர்யத்தினால் ஜனிக்கும் ஒரு சேனாபதியால்தான் ஸாத்தியம்! அந்த சிவனோ கடுந்தவம் புரிகின்றார். அவரருகே உமையவள் அவரைக் கணவராகப் பெறவேண்டுமென்ற விருப்பத்தால் அவருக்குத் தொண்டு செய்கின்றாள். அவளிடம் சிவனது மனம் சென்று ஒரு குமாரன் பிறக்கும்படி செய்யவேண்டும். இதுவே தேவகார்யம். இதைச்செய்து நீயே ஸ்வர்க்கத்தைக் காப்பாயாக'' என்றுகூறினார். இதைக்கேட்ட ரதியின் பதி வாஸவனைப் பணிந்து, 'அப்படியே' என்றுரைத்து அத்யந்தம் அஸாத்யமான கார்யத்தில் பிரவிருத்தித்தான். இந்திரன் அவனை இருகரங்களாலும் தழுவித் தக்க ஸன்மானம் செய்தனுப்பினான். காமனும் அமராவதியைவிட்டு ஸ்தாண்வாஸ்ரமத்திற்குப் புறப்பட்டான்.

இரதி மன்மத ஸம்வாதம்

இதைக் கண்டு இடிவிழுந்தாற்போலப் பயந்த இரதிதேவி நடுங்கித் தொண்டை யடைக்க, "நாதா! யோசிக்காமல் எப்படி யிப்பெருங்கார்யத்தை யேற்றுக்கொண்டீர்? நீர் உம்மை வீரனென்றெண்ணிக் கொண்டு கர்வத்தால் எல்லாவற்றையும் நாசஞ்செய்தீர். பயந்த ஸ்வபாவமுள்ள மனித

னிடத்தில் உமது வீர்யஞ்செல்லும்! அதைப் போலெண்ணி யோகிகளுக்கு நாதனான ஜகன்னாதனிடமும் கர்வங் கொள்கின்றீர்! தவத்தால் மூவ்வுலகையும் தஹிக்கும் ருத்திரனெங்கே? பெண்களிடத்தில் மாத்ரம் செல்லும் ம்ருதுவான வீர்யமுள்ள நீர் எங்கே? பதங்கமென்னும் வெட்டுக்கிளி தீபஜ்வாலையைப் பக்ஷிக்குமானால், கொசுகு விஷமருந்தி மதங்கொள்ளுமானால், இருளானது சூர்யனை ஜயிக்குமானால் உமது சக்தி சிவனிடம் செல்லும். திரிபுராஸுரன், யமன், அந்தகாஸுரன் முதலியவர்களைவிட நீர் பலிஷ்டரா? இந்திரனால் ஏமாற்றப்பட்டு உம்மையே அழித்துக்கொள்ளும்படியான காரியத்திலீடுபட்டீர். வஞ்சகர்களான தேவர்கள் சுயநலமே பிரதானமாய்க்கொண்டு ஸாதுவான உம்மை ஸங்கடத்தில் சிக்க வைத்தனர். இது அதிதியைக்கொண்டு துஷ்ட ஸர்ப்பத்தைக் கொல்வதுபோலவும், அயல்வீட்டு மனிதனைக் கொண்டு நதியின் ஆழத்தையளவிடுவதுபோலவும் இருக்கின்றது. நீர் அழிந்தால் அவர்களுக்கு என்ன நஷ்டம்? நானன்றோ வைதவ்யதுக்கத்தை யநுபவிக்கவேண்டும்! கஷ்டம்! கஷ்டம்! இதுமஹாகஷ்டம்! துறவியான மஹாதேவனை நீர் ஜயிக்க விரும்புவது அடாதசெயல்.'' என்றுயுக்தி யுக்தமாகக்கூறினாள். இதைக்கேட்டு உள்ளே நடுக்கங்கொண்டவனாயினும், மன்மதன் தீரனைப்போல் " ஓ பாபிஷ்டே! என்ன உளறுகிறாய்! என்னால் ஜயிக்க முடியாதவர்கூட உலகில் உண்டா? மஹாநுபாவர்களெல்லாம் எனது பாணத்தால் மூர்ச்சையாயினர். புலன்களை ஜயித்தவரில் மிகச் சிறந்தவரான வஸிஷ்டர் சண்டாள கன்யகையுடன் ரமித்தார்; சந்திரன் சங்கையின்றிக் குருபத்னியைக் கைக்கொண்டான்; மாதவன் கோபஸ்திரீகளுடன் ஜாரத்துவம் செய்தார்; கௌதமரது மனைவியை இந்திரன் கெடுத்தான்! தண்டகனெனும் வேந்தன் முநியின் கன்யகையைக் கிரஹித்தான்; மேலும் எனது பாணத்தினால் சூர்யன் பெண் குதிரையினிடம் ஆசைகொண்டான்; உலகைப் படைத்த பிரஹ்மன் தன் பெண்ணினிடம் பேரவாக்கொண்டான். வாலி தன் ஸோதரன் மனைவியைக் கிரஹித்தான். பிரஹ்மாவின்

பேரனான ராவணன் ராமபிரானது பார்யையை அபஹரித்தான். பெண்வலையில் என்னால் சிக்கும்படி செய்யப்பட்டவர்கள் ஓர் எண்ணிக்கையிலடங்கார். இத்தகைய எனக்குக் கோடி பிநாகிகள் தான் ஈடோ? வீணாகப் பயப்படாதே! கனவில்கூட எனக்கு அபஜயம் கிடையாது.'' என்று கூறினான். அன்றியும், மற்றும் பல தீர்மானச்சொற்களால் ஸமாதானங் கூறி நடுக்கமுற்றுள்ள ரதியின் உடலைத் தன் கரத்தால் தடவிக் கொடுத்தான். ரதியின் கருத்தை ஆமோதிக்கும் வஸந்தனையும் அத்தகைய தீரச்சொற்களால் காமன் மிரட்டி ஸமாதானப்படுத்தினான்.

பிறகு மன்மதன் வண்டுக் கூட்டமெனும் தனது நாண் கயிற்றை யிழுத்துக் கரும்புவில்லிற்பூட்டினார். அதிலிருந்து போகஸுகத்தினால் மூர்ச்சை யடைந்த தருணியின் மணிதம் எனும் துவனியானது ஆகாயத்தில் கிளம்பியிற்று. கை கங்கணங்களசைய இரு புஜங்களைத் தட்டிக்கொண்டான். அஹங்காரத்தின் கடைசி எல்லையையுங் கடந்தான். கைலாஸ மலையின் அடிப்புறத்திலுள்ள ஸ்தாண்வாஶ்ரமத்தைச் சமீபத்து மதத்தால் மதியிழந்து மஹாயோகியான பரம சிவத்தை ஜயிக்க விரும்பி உள்ளே நுழைந்தான்.

தாரகாஸுரனது துன்பத்தினின்றும் நிவர்த்தி யுபாயம், இந்திர மன்மத ஸம்வாதம், ரதிமன்மத ஸம்வாதம் இவற்றைக்கூறும் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகம் 100)

ஸ்தாண்வாஶ்ரமத்தில் வஸந்தன் விஜ்ரும்பித்தல்

மன்மதன் அகாலத்தில் அந்த ஆஶ்ரமத்தில் பரவும்படி வஸந்தனுக்குக் கட்டளை யிட்டான். அது பலஉருவங்களை யெடுத்து விருக்ஷங்களில் வியாபித்தது. பழைய யிலைகள் உதிர்ந்து புதிய தளிர்கள் தோன்றின. அப்பொழுது

ஆபரணங்களைக் களைந்த மாதர்களின் உடல்போல் கொடிகள் விளங்கின. மொக்குகள் வஸந்தனென்னும் காந்தனது ஸங்கத்தால் மயிர்க்கூச்சல்போல் விளங்கின. அகாலத்தில் வஸந்தன் பிரவேசித்ததால் தளிர் மொக்கு புஷ்பம் என்றக் கிரமமில்லாமல் ஏககாலத்தில் எல்லாம் தோன்றின. சில மரங்கள் வேர் முதல் தலைவரை பல்லவங்களால் ஒரே சிவப்பாகக் காணப்பட்டன. உத்தம ஸ்திரீகளது * பாதத்தாலடிபடாமலே அசோக மரங்கள் பூத்தன. மன்மதன் ரக்த அசோகத்தின் சிவப்புவர்ணமென்னும் அக்னியில் வைராக்கிய புருஷரது மனதை ஹோமஞ் செய்தான். பல்லவம் நிறைந்த கங்கேளி மரங்கள் வனலக்ஷ்மிக்கு அரண்மனைகள் போலிருந்தன. † கண்டுஷமில்லாமலே மகிழ மரங்கள் புஷ்பித்தன. மந்த மாருதத்தால் அசையும் செடிகொடிகள் மது மதத்தால் ஆடுவது போலிருந்தன. மாமரத்தின்மீதமர்ந்து கோகிலங்கள் மிக அழகாகப் பாடின. அது சிவயோகியை ஜயிக்க வரும் மன்மதனுக்கு மங்களவாத்யம் போலிருந்தது. தென்றற் காற்றினால் மாந்தளிர்கள் அசைவது மன்மதனது போர் வீரர்கள் கத்திகளை ஆட்டுவதுபோலிருந்தன. மகரந்தங்கள் ஆகாயத்தில் கிளம்பி மூவுலகிலும் மன்மத ராஜ்யம் நடைபெறுகிறதென்று கூறின. வண்டுகளது சப்தம் மன்மத ஜயத்திற்கு மங்களகானம் செய்வதுபோலிருந்தது. மரங்களும் கொடிகளும் பரஸ்பரம் ஆசைகொண்டு ஆலிங்கனம் செய்து கொண்டன. வஸந்தம் புகுந்தபின் அந்த ஆஶ்ரம வனமே புதியதாக விளங்கிற்று. ஒவ்வொரு மலையிலும் குஞ்ஜங்களும், ஒவ்வொரு குஞ்ஜத்திலும் கொடிகளும், ஒவ்வொரு கொடியிலும் புஷ்பங்களும், ஒவ்வொரு புஷ்பத்திலும்

---

* புஷ்பிக்காத தருக்களை உத்தமலக்ஷணம் வாய்ந்தபெண், தன் காலில் செம்பஞ்சுக் குழம்பு தடவி காலால் உதைத்தால் புஷ்பம் உண்டாகும்.

† உத்தம ஸ்திரீகள் வாயில் மதுவைக்கொண்டு கொப்பளித்து அதன்மேல் உமிழ்ந்தால் மகிழ மரம் புஷ்பிக்கும்.

(தோஹத சாஸ்திரம்)

மதுத்திவலைகளும், ஒவ்வொரு மதுபிந்துவிலும் வாஸனையும், ஒவ்வொரு வாஸனையுள்ள இடத்திலும் வண்டுகளின் கூட்டமும், ஒவ்வொரு வண்டினிடமும் ஜங்காரமும், ஒவ்வொரு ஜங்காரத்திலும் லயமும், ஒவ்வொரு லயத்திலும் ஸ்திரீகளின் மனோலயமும், ஒவ்வொரு ஸ்திரியினிடத்திலுங் ராகமும், ஒவ்வொரு ராகத்தினிடத்திலும் மன்மதனது தாண்டவமும், ஒவ்வொரு தாண்டவத்திலும் வஸந்த கானமும், ஒவ்வொரு கானத்திலும் பெண்களின் ஊஞ்சல் முதலிய கிரீடைகளும் தோன்றின. பல ஸ்ருங்கார போகச்சின்னங்கள் ஒவ்வொரு செடியிலுங் கொடியிலுங் காணப்பட்டன. இங்ஙனம் வஸந்தம் ஸ்தாண்வாஸ்ரமத்தில் கிளம்பிய காலத்தில் ஸ்ருங்காரம் தலைகீழாக ஒவ்வொருவரிடத்திலும் தோன்றிற்று. மஹரிஷிகள்கூட மனதை அடக்கமுடியாமல் எங்கும் ஸ்திரீமயமாகவே எண்ணினர். சிவனிடம் பயங்கொண்ட முனிவர்கள் சஞ்சலசித்தர்களாய்க் கின்னரர்களது பாடலைக்கேட்டுப் பரவசரானார்கள். ஸ்வப்னத்திலும் பெண்மக்களை நினையாத முனிவர்களது மனத்தை வஸந்தன்மூலமாக மன்மதன் ஒரு நிமிஷத்தில் கொள்ளைகொண்டான். தியானம் நழுவிற்று; நியமங்கள் மறந்தன; ஸமாதி அகன்றது; சிவகணங்கள்கூட அந்த வாஸனை மிகுந்த புஷ்பங்களை முகர்ந்து மதங்கொண்டு சிவனை மறந்து ஒருவரை யொருவர் கட்டியணைந்து வாதாடி கூத்தாடிப்பாடி இஷ்டமான சேஷ்டைகளைச் செய்தனர். செடிகொடிகள், ஜலசரங்கள், புழு, பூச்சி, பக்ஷி ஆகிய ஸகலப் பிராணிகளும் இங்ஙனமே மதோன்மத்தர்களாய்க் கூத்தாடின. இதைக்கண்டு கலங்காத சித்தமுள்ள நந்திபகவான் "ஹா கஷ்டம்! இதென்ன சபலம்! தவத்திலுள்ள சிவனை மறந்தீர்களா? ஸகல விகாரங்களையும் விட்டு நிர்மலமான பரப்பிரஹ்மத்தினிடம் மனதைச் செலுத்தி நிஷ்கம்பயோகம் செய்யும் யஜமானனுக்கு விக்னம் செய்யலாமா?" என்று ஹுங்காரம் செய்து மிரட்டி விரலை மூக்குமீது வைத்தார். இதைக்கண்டு ஸகலகணங்களும் சொக்கி மன்மதசேஷ்டைகளை விட்டு முன் போலவே இருந்தனர். மரத்தின் ஓர் இலைகூட அசையவில்லை. எல்லாம் ஊமை போல் காணப்பட்டன.

இங்கும் அங்கும் ஓடித்திரியும் மிருகங்கள்கூட அசைவற்று நின்றன. காற்றினால் கொடிகள்கூட அசையவில்லை. சிவனது பிரதான பக்தனான நந்தியின் ஆணையால் ஆஸ்ரமமே சித்திரத்தில் எழுதப்பட்டது போல் இருந்தது.

மன்மதன் ஆஸ்ரமத்தினுள்ளே புகுதல்.

வஸந்தன் அவ்வாஸ்ரமத்தில் புகுந்து எல்லோரையும் மதமுள்ளவர்களாகச் செய்து ஸ்ருங்கார சேஷ்டைகளைக் கிளப்பி மன்மதாக்னியைப் பிரகாசமாக்கியபோது ரதீதேவியுடன் மன்மதன் மதம்பிடித்த யானைபோல் மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்துத் தான் வருவதை ஒருவரும் பார்க்காமலிருக்க ஒவ்வொரு புதரிலும் திருடனைப்போல் பதுங்கிப்பதுங்கி ஆஸ்ரமத்தில் நுழைந்தனன். யோகீஸ்வரனை ஜபிக்க, ஸமயம் பார்த்துக்கொண்டு கணங்களது தலைவர் கண்களில் படாமல், மன்மதன் மாதவீகுஞ்ஜத்தில் நுழைந்தனன். அச்சமயம் அவனது இடதுகண் துடிக்க 'என்ன ஆபத்து நேரிடுமோ' என எண்ணி அஞ்சினான். மறுபடியும் அவனது இடதுகண்ணும், ரதியினது வலது கண்ணும் காற்றினால் அலைவதுபோல் அடிக்கடி துடித்தன. இலைகளாலும் வண்டுகளாலும் உள்ளே நுழைய முடியாதபடி மாதவீகுஞ்ஜம் தடுக்கப்பட்டிருந்தது.

சிவபெருமானது ஸமாதி வர்ணனை.

அந்தக் குஞ்ஜத்திற்கு ஸமீபத்தில் நமேரு என்னும் ஒருவகை மரத்தினடியே புலித்தோலால் மூடப்பட்ட திண்ணை மீது அசையாத சூர்யன் போலும், அலையில்லாக் கடல் போலும் காற்றில்லாத தீபசிகை போலும், ஐம்புலன்களையும் சித்தத்தையும் அடக்கிப் பத்மாஸனத்தில் அமர்ந்து, இருகரங்களையும் மடிமீது வைத்து ஜபமாலையை இரண்டாக மடித்து காதில் மாட்டி உடம்பெல்லாம் பஸ்மாவைப் பூசிப் பாம்பை யோக பட்டமாகத் தரித்துக்கொண்டு அஸத்துக்களால் பார்க்க

முடியாதவரும், துஷ்டர்களுக் கெட்டாதவரும், துர்ப்புத்தி யுடையவர்களுக்கு நினைக்கக்கூட முடியாதவரும், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவரும், வேதங்களால் தேடப்படுகிறவரும், உலகிற்கு அதீதமானவரும், தேஜோநிதியானவரும், ஜ்வலிக்கின்ற ஸுஷும்நாநாடியுள்ள தேஜோ ரேகையைப் பார்ப்பவரும், சின்மாத்ர அவசிஷ்டராய் விளங்குபவரும், சாந்தரும், அத்வயமான உல்லாஸத்திலிருப்பவரும், நினைக்க முடியாதவரும், அறியமுடியாதவரும், அஹங்கார மற்ற வரும், அஹந்தை இதந்தை யிவ்விரண்டின் ஐக்யத்தை ஆத்மாவில் அனுபவிப்பவரும், ஏககாலத்தில் உதயமான அநேக ஸூர்யர்களது தேஜஸ்ஸை ஒத்த தேஹகாந்தியால் மூவ்வுலகையும் பிரகாசப்படுத்துபவரும் ஆகாசத்தை உலர்த்துபவர் போலவும், பகைவரை விழுங்குகிறவர் போலவும் விளங்குபவரும், தைர்யத்தை இழப்பது என்ற பேச்சுக்கே இடமில்லாதவரும், நிச்சலமான சரீரமுள்ளவரும், பிரஹ்மரந்திரத்திலிருந்து கிளம்பும் ஜ்யோதிஸ்ஸினால் சந்திரனை எரிப்பவரும் பிரளயகால சூர்யனைப்போல் உக்கிரமாயும், அழகாயுள்ள முகாரவிந்தமுள்ளவரும், பிரஹ்மாநந்தமென்னும் பிரகாசத்தில் ஐக்யமானவரும் சில நாட்களிலேயே உலகை எரித்துத் தன்னிடத்தில் லயப்படுத்துபவர்போல் மேலும் மேலும் கிளம்புகின்ற தபோஜ்வாலையை உடையவரும், வைராக்யமே ராஜ்யாதிபத்யம் நடத்துவதுபோல் செய்பவரும், ஸ்வதந்திரமான தனது தேஜஸ்ஸால் அஸ்வதந்திரமான உலகை உருக்குபவர்போல் காணப்படுபவரும், சித்த விகாரத்தை அடக்கியவரும், உலகை மோஹிக்கும்படி செய்து தபோவனத்தையே ஶ்ருங்காரவனமாக்கிய வஸந்தனால் சிறிதுகூட மாற்றப்படாதவரும், சாந்தர்களில் சாந்தரும், பயங்காரமானவர்களுக்குள் பயங்காரமானவரும், கம்பீரமானவர்களுக்குள் மிகக் கம்பீரமானவரும், பிறர்க்கெட்டாத மாஹாத்ம்யமுள்ளவரும், பிறர்களால் கெடுக்கமுடியாத தபஸுள்ளவரும், தன்னைத் தானே பார்ப்பவரும், சிறிதுகூட பாஹ்யதிருஷ்டியில்லாதவரும், நீலநிறமான கண்டமுடையவருமான பரமேஸ்வரனை மன்மதன் பார்த்தான்.

ரதிமன்மதர்களின் நிலை

சிவபெருமானைப் பார்த்தவுடன் காமன் பயத்தினால் நடுங்கினான். மனம் தடுமாடிற்று; உடலெல்லாம் நடுங்கிற்று; நாவுலர்ந்தது; என் செய்வதென்று தோன்றவில்லை. தைரியமிழந்ததால் கரத்திலிருந்து கோதண்டம் நழுவிற்று; கண்கள் அசைவற்று நின்றன; ஒரு முகூர்த்தகாலம் பரவசனாகித் தன்னைமறந்தான்; தன் பலத்தை மறந்தான்; சித்தம் ஸ்வாதீனமில்லாததால் பாணமும் வில்லும் நழுவியதுகூட அவனுக்குத் தெரியவில்லை. பெருந்துறவிக்கு அவன் செய்யவேண்டுமென்று கருதிய அபசாரமே பாசமாகி அவனைக்கட்டியதுபோல் அசைவற்று நின்றான். மனம் ஸ்தம்பித்துப் போனதால் ஒரு வித ஆஸ்வாஸமுமில்லாமல் தவித்தான். பயத்தால் மூர்ச்சித்தவன் போலும், சேற்றில் அழுந்தியவன் போலும், வஜ்ரத்தாலடிபட்டவன் போலும் சிவ தேஜஸ்ஸால் அவமதிக்கப்பட்டவன் போலும், பழுத்த இரும்புப் பாத்திரத்தில் வீழ்ந்த எள்ளைப்போலும் மிகவுந் துன்பமடைந்தான். மன்மதன் சக்தியையெல்லாம் இழந்தான். அவனது வீரவாதமெல்லாம் வீணாயிற்று. யுத்த சங்கல்பம் பறந்தே போயிற்று; வாஸவன் சொற்கள் அவனது உள்ளத்தினின்றும் மறைந்தன. அவனது உயிர் மாத்திரம் உடலிலிருப்பதை அவன் அறிந்தான்; ரதியும் அப்படியேயானாள். ஏற்கனவே பயந்த அவள் இப்பொழுது மிகவும் நடுங்கினாள்; கணவனது ஸாஹஸத்தை எண்ணி என்ன செய்வதென அறியாது திகைத்தனள். கண்ணீரைச் சொரிந்தாள்; அடிக்கடி பெருமூச்சு விட்டாள். தவம் செய்யும் சிவனது தபோஜ்வாலையால் அவளது கண்கள் திறக்க முடியாமல் கூசித் தவித்தன. முக்கரணங்களாலும் காந்தனுக்கு ஜயத்தை விரும்பினாள். ஆனால் அவர்கதி என்ன ஆகுமோ என்ற சங்கையால் நடுநடுங்கி பெருமூச்சால் முக்தாஹாரங்கள் அசைந்தாடச் சிவனது தபஸ்ஸைப் பார்த்து ரதி ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். இங்ஙனம் இருவர்களும் அச்சத்தினால் வியாகுலர்களாய் இருந்தனர்.

ஸ்தாண்வாஶ்ரமத்தில் வஸந்தன் விஜ்ரும்பித்தல், மன்மதன் புகுதல், ஈஶ்வரனது ஸமாதிவர்ணனை, ரதி மன்மதர்களின் வியாகுலம் இவற்றைக்கூறும் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 101)

பார்வதீதேவியின் வர்ணனை.

ஹயக்ரீவர்:—இங்ஙனம் வீர்யத்தை இழந்த காமனுக்கு உமையவள் லோகோத்தரமான தனது அழகால் மறுபடியும் சக்தியைத் தருபவள்போல் விளங்கினள். அவளது காந்தி ஶ்ருங்கார ரஸத்தைக் கறப்பது போலிருந்தது. வஸந்த புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தேவி, மன்மத ராஜனது ராஜ்ய லக்ஷ்மியைப்போல் விளங்கினள். ஸர்வ ஆபரணங்களையும் அணிந்த பர்வதராஜகுமாரி அங்கு வந்தவுடன், காமன் ஈசனை ஜயிக்க இயலாதென்னும் எண்ணத்தை விட்டு அவரை ஜயிக்கலாமென்று கருதினன். நழுவிய வில்லை மறுபடியும் எடுத்துத் தைர்யமாகச் சிவனை ஜயிக்க ஸன்னத்தனானன். தேவியைக் காணக்காண மன்மதனது பலம் விருத்தியாயிற்று.

வஸந்தனால் மலர்த்தப்பட்ட புஷ்பங்களையே தேவி ஆபரணமாகப் பூண்டனள். கூந்தலில் தேவி சூட்டிய மாலதீ மாலை கண்ணைக் கவர்ந்தது. கூந்தலில் அலங்கரிக்கப்பட்ட ஸிந்துவார புஷ்பத்தின் மொக்குகள் முத்துமாலையைப்போல் விளங்கின. நெற்றியில் வரைந்த திலகம் ஆஶ்ரமமெல்லாம் மணக்கும்படி செய்தது. தேவியினது காதிலே சொருகப் பட்டிருந்த மாலதீ புஷ்பக்கொத்தினுள்ளிருந்து வண்டுகள் ரீங்காரம் செய்தன. அசோகப் பூங்கொத்திலிருந்து தேவியின் கன்னத்தில் சிந்திய மகரந்தங்கள் மதிரையினால் உண்டாகும் சிவப்புப் பூபோல் தோன்றிற்று. புஷ்பங்களுடைய வாஸனையை விட்டுவிட்டு வண்டுகள் தேவியின் மூச்சுக் காற்றின் மணத்திலீடுபட்டுத் தேவியைச்சுற்றி வந்தன.

தன்னுள் வஸிக்கும் வண்டோடு கூடிய ஒரு கமலத்தை உமாதேவி கரத்திலே தரித்திருக்கக் கரகாந்தியால் தோற்கடிக்கப்பட்டுத் தாமரை சிறைப்படுத்தப்பட்டதுபோல் விளங்கிற்று. பெரியமுத்துக்கள்போன்ற காந்தியையுடைய ஸிந்துவாரமொக்குகளாலாகிய ஹாரம் தேவியின் ஸ்தனங்களை அலங்கரித்தது. தேவி தரித்திருந்த தாழைமடல்கள் இரு கரங்களிலும் அங்கதமணிந்தனபோலிருந்தன. மகிழமாலையால் ஆகிய ஒட்டியாணமானது தனது பரிமளத்தால் எல்லா வண்டுகளையும் அங்கேயே இழுத்தது. வஸந்த புஷ்பங்கள் பலவற்றைச் சேர்த்து முன்மயிரில் அலங்கரித்துக்கொண்டனள். அது இருளின் நானுவர்ணமுள்ள நக்ஷத்திரங்கள்போல் விளங்கிற்று. பார்வதீதேவி அந்தந்த ஸ்தானங்களில் அலங்கரிக்கப்பட்ட வஸந்தபுஷ்பங்களால் காமன் மந்திரியான வஸந்தனைக் கிருதார்த்தனுகச் செய்தான்.

இங்ஙனம் தேவி தனக்குச் சமமான இருதோழிகளுடன்கூடச் சிவனுக்கு நித்யஸேவையைச்செய்ய அருகே வந்தனள். ஸ்ருங்காரத்தின் எல்லைச்சுவர்போலவும், உடல் பெற்ற ஆனந்தம் போலவும், யௌவனத்திற்கே ஆஸ்தானம் போலவுமுள்ள தேவியையே மன்மதன் முதல் பலமாகக் கொண்டு தேவனை ஜயிக்க விரும்பினுன்.

இயற்கையிலேயே அதிசௌந்தர்யம் வாய்ந்த பர்வத ராஜகுமாரி வஸந்த புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதைக் கண்ணுல் கண்டவுடன் உன்மாதத்தை உண்டுபண்ணுவது போல் இருந்தது. புஷ்பங்களால் ஒரு ஹம்ஸ தம்பதியைச் செய்து அதில் கண்ணைவைத்தபடியே நந்தி இருக்கும் துவாரத்திற்கு வந்து சிவதர்சன அவஸரத்தை எதிர்பார்த்து நின்ருள்.

பார்வதி ஈசனைத் தர்சித்தல்.

பார்வதி:—ஓ நந்தியே! ஸமயம் பார்த்துப் பினுகியினிடம் "உமது கிங்கரி வெகுகாலமாகக் கங்கையிலுள்ள ஸ்வர்ணத்

தாமரைகளிலிருந்து மணிகளை எடுத்து வெயிலில் உலர்த்தி விதிப்படி கயிற்றில் கோர்த்து ஜபமாலையாக்கிப் பகவானிடத்தில் ஸமர்ப்பித்து நமஸ்கரித்துச் செல்லவந்திருக்கிறாள்'' என விக்ஞாபானம் செய்துகொள்ள வேண்டினள். இதைக் கேட்ட நந்திபகவான் "அப்படியே'' என்று கூறிக் கையிலுள்ள ஸ்வர்ணப்பிரம்பை ஆட்டிக்கொண்டு உள்ளே நுழைந்தனர். அச்சமயம் பகவான் அவ்யயமான தத்துவத்தில் லயித்திருக்கும் மனதையும், அடக்கப்பட்டிருக்கும் ஶ்வாஸத்தையும் அவைகட்கு ஓய்வுகொடுக்கக் கருதியவர் போல் இரண்டையும் பந்தத்திலிருந்து விட்டனர். மூலாதாரத்தில் அடங்கிக்கிடந்த வாயுவைவிட்டு ஸமாதியிலிருந்து திரும்பியவுடன் பதினான்கு உலகு போல் பாரமாயுள்ள சிவனைச் சுமக்க, யோகிகளோ, ஆதிகூர்மரோ, திக்கஜங்களோ, குலபர்வதங்களோ, ஸர்ப்பங்களோ சக்தி உள்ளவைகளாக இல்லை.

இத்தகைய ஈசனை நந்திவணங்கிக் "காணிக்கையுடன் காத்திருக்கும் கௌரியை உள்ளே விடலாமா'' என விக்ஞாபித்துக் கொண்டனர். சிவனது புருவம் அசையும் இங்கிதத்தை உணர்ந்து அவர் தேவியை உள்ளே அழைத்துச் சென்றனர். மன்மதனது மோஹனசக்தியே உருவெடுத்து வந்தது போல் பாதச்சலங்கை கலீர் கலீர் என்று சப்திக்க மெல்லமெல்ல நடந்து தலையில் அணிந்திருக்கும் புஷ்பம் பூமியில் படும்படி மிக்க பக்தியுடன் சிவனை நமஸ்கரித்து எழுந்தனள். அஞ்சலி செய்வதற்காக இருகரங்களையும் தேவி ஒன்றாகச் சேர்க்கும் பொழுது மார்பிலுள்ள வஸ்திரம் சிறிது விலக வியக்தமாக ஒரு ஸ்தனம் தெரிந்ததைக் கண்டு வெட்கத்தால் தலைகுனிந்து வஸ்திரத்தைச் சரியாக எடுத்து மூடினாள். இதே சரியான ஸமயம் என்று எண்ணி மன்மதன் காது வரையிழுத்த தனது வில்லில் சேர்ந்த அம்பை இழுத்து வலது முழங்காலைச் சிறிது வளைத்து இடது முழங்காலைப் பூமியில் பதியவைத்து சிவனைநாடித் தைர்ய

வித்ராவணமென்னும் அம்பைவிட வைத்தகுறி சரிதானு என்று தன் கண்ணைச் செலுத்தினன்.

சிவனது மன்மத விகாரம்.

கடுமையான தவத்திலிருந்த பரமசிவத்தின் மனம் உடனே சந்திரனைக்கண்ட கடல்போல் பொங்கிற்று. உடலி லெல்லாம் முத்துப்போல் வேர்வைத் துளிகள் தோன்றின. கரத்திலிருந்து ஜபமாலை நழுவி வீழ்ந்தது. ஏதோ பேச ஆரம்பித்து உதட்டை அசைத்தாலும் கண்டம் அடை பட்டுச் சொற்கள் மேலே எழவில்லை. வேர்வைஜலத்தைப் பெருக்குவதும் நடுங்குவதுமான விரல்களுள்ள கரத்தால் விபூதி பாத்திரத்தை அடிக்கடி தொட்டார். தைரியத்தை யிழந்து, தன்னையும் மறந்து ஆசைக்கடலின் அலைகளால் சூழப்பட்டவர்போல் தனது மூன்று கண்களாலும் அசைந்த புருவங்களை யுடையவரும், மந்தஹாஸத்தால் மிகமிக ரம்ய மானதுமான ஸ்ரீ பார்வதியின் முகாரவிந்தத்தை நோக்கினர். சங்கரரது கடாக்ஷம் தன்மீது வீழ்ந்தவுடன், கால் முதல் தலைவரையில் மயிர்க்கூச்சலெடுக்க, வியர்வை சொட்ட, பயத்தி னுலுண்டான கம்பமும், ஆசையினுலுண்டான கம்பமும் ஒன்று சேர்ந்து தோன்ற, உமையவள் அரிய தெய்வாநுக் கிரஹம் பெற்றவுடன், தனது அழகு அப்போதுதான் ஸபலமாயிற்றென்று எண்ணினன். அஞ்ஜலி செய்யும்போது சிறிது வெளியில் தெரிந்த ஸ்தநமண்டலத்தை வஸ்திரத்தி னுல் மூடித் தவத்திற்கு விக்னமென்றெண்ணுவரோ என்ற அச்சம், ஆசை, வெட்கம், இயற்கையான மதம் இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து விளங்கும் கண்களுள்ளவளாய் சரத்கால சந்திரன்போன்ற தனது முகத்தைக் கீழே செலுத்தி, புதிய ஆசார்யனை மன்மதனுல் அதிரஹஸ்யமான எண்ணங்களைக் கற்பிக்கப்பட்டவள்போல் பேரவாவோடு அடிக்கடி பரமசிவத்தினிடம் லஜ்ஜையுடன்கூடிய கடாக்ஷத் தைச் செலுத்தினள். தேவியினது உடலும் கடாக்ஷமும் மன்மதனது மூலபலம் போல்விளங்கிற்று. பர்வதராஜனது

குலத்தில் உதித்த மாணிக்கதீபம் எனும் தேவி புஷ்பங்களால் சித்திரிக்கப்பட்ட ஹம்ஸமிதுனத்தையும், ஜபமாலையையும் பகவானிடம் ஸமர்ப்பித்தாள். அவைகளை, ஆசையெனும் அலைமோத மலர்ந்த கண்களால் சிவன் நோக்கினர். ஜபமாலையைக் கண்டவுடன் தவத்தின் நினைவும் அதிலிருந்து நழுவித் தன்மனம் சிற்றின்பத்திலிறங்குவதையும் நினைத்து, விரைவாக உமையினிடமிருந்து கண்களை இழுத்தனர். இழந்த தைர்யத்தை மீண்டும் நிலைநிறுத்தினர். திக்குகளில் கண்களைச் செலுத்தி மாதவிமண்டலத்தினிடையே தன் மீது புஷ்பபாணத்தைவிட ஸன்னத்தனுள்ள மன்மதனைக் கண்டார்.

மன்மத தஹனம்.

கர்வத்தினல் தனது ஸமாதிக்குப் பங்கத்தை யுண்டு பண்ணும் காமனைக் கண்டவுடன் ருத்ரன் கடுங்கோபங் கொண்டனர். இதைக்கண்டு தேவி அஞ்சிச் சிறிது தூரம் விலகிச்சென்றுள். க்ரீஷ்மருது உச்சிக்கால ஸூர்யனைப் போன்ற அக்நியானது ருத்ரனது நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றி, "ஸ்வாமின்! கோபத்தை யடக்குங்கள்! அடக்குங்கள்!" என்று வானவர் வாய்திறந்துக்கூறி முடிப்பதற்குள் க்ஷணப்பொழுதில் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அதைக்கண்ட அமரர் அஞ்சியோடத் தேவி தனது இரு கண்களையும் இறுக மூட, மோஹத்தால் மூர்ச்சையடைந்த ரதி அவனியில் விழுந்துத் தனக்கு நேர்ந்த வைதவ்ய துக்கத்தையும் அறியாதிருந்தனள். தோழிகள் ஓடிவந்து கண்கள் மூடி ஸ்தம்பித்து நிற்கும் உமையைத் தழுவிப்பிடித்துக் கொண்டனர். அபூர்வமான இந்த ஸம்பவத்தைக்கண்டு தேவியினது மார்பு படபடவென்று அடித்துக்கொள்ள, உடலெல்லாம் கம்பமுண்டாயிற்று, மன்மதனெனும் மரத்தை யெரித்த பேரிடிபோன்ற கோபத்தீ சிவனென்னும் கார் மேகத்திலே ஒளிந்தது. தவத்திற்கு விக்னமான ஸ்திரீ ஸங்கத்தை விலக்க யெண்ணி தம் கணங்களுடன் சிவன் மறைந்தனர்.

மரங்கள்தோறும் பரவி நின்ற வஸந்தன் இதைக்கண்டு நடுநடுங்கிப் புஷ்பங்களுடன்கூடவே இருக்குமிடம் தெரியாமல் உலர்ந்து விட்டான். குயில்களது வாயடைத்துப் போயிற்று. தளிர்களும் புஷ்பங்களும் வாடிவிழுந்தன. உள்ளம் நடுங்கி நிற்கும் உமையவளைக்கண்டு பர்வதராஜன், "குழந்தாய்! அஞ்சாதே! உனது மனோரதம் காலக்கிரமத்தில் கைகூடும்; நற்காரியங்களுக்குப் பற்பல இன்னல்கள் தோன்றுதல் இயற்கையேயன்றோ? மஹான்களது மனம் சில ஸமயம் புஷ்பத்திலும் மிருதுவாயிருக்கும்; சில ஸமயம் வஜ்ரத்தினும் கடினமாயிருக்கும். புருவத்தை நெறித்துக் கோபக்கனலைக் கக்கும் ருத்ரனது முகமெங்கே? அத்யந்தம் மிருதுவான சரீரமுள்ள நீ எங்கே? நீ அதை எப்படி ஸஹித்தாய்? வீட்டிற்கு வா! நமது கிரஹதேவதைகளை ஆராதித்தால் நீ விரும்பியது கைகூடும்" என்று கூறி, லஜ்ஜையாலும் பயத்தாலும் மூடிய கண்களையும் வாயையும் திறவாதிருக்கும் தேவியைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு தன்வீட்டிற்கு வந்தான்.

சிவாபராதம் செய்துவிட்டோமோ எனத் தேவர்கள் அஞ்சினர். ரதீதேவி மெல்லமெல்ல மூர்ச்சை நீங்கி எழுந்து எதிரில் சாம்பலாயிருக்கும் கணவனைக்கண்டு மறுபடியும் மூர்சையாகிவிழுந்தாள். பின்னர் மெல்லஎழுந்து இருகரங்களாலும் மார்பிலடித்துக் கொண்டு புஷ்பங்களும் தலைமயிரும் அவிழ்ந்து அவனியில் விழப் பூமியில் புரண்டதால் வஸ்திரமும் உடலும் புழுதி படிந்து இருக்க, "ஹா! நாதா! பிராணநாதா! ஜகன்மோஹன! மனதிற்கிசைந்த அமிருத வடிவனே! இன்பச் சொற்களால் செவிகட்கு அமிர்த மூட்டுபவனே! உன்னைத்தவிர வேறுகதியில்லாத என்னைத்தனியே விட்டு எங்கு சென்றாய்!" என்று கூறிப்புலம்பி அடிக்கடி பூமியில் மூர்ச்சையால் வீழ்வாள். மன்மதனது கதியையும் ரதியின் ஸ்திதியையும் கண்டு மதம் முதலிய மன்மத சேனைகள் பயந்தோடிற்று. வஸந்தன் தனது நண்பனது மனைவி படுந்

துன்பத்தைக்கண்டு மனமிரங்கி பிரஹ்ம சாபத்தை நினைத்துக் கொண்டு அவளை ஆஶ்வாஸப்படுத்தினான்.

பார்வதிதேவியின் வர்ணனை, பார்வதி ஈசனைத் தரிசத்தல், சிவனது மன்மத விகாரம், மன்மத தஹனம் இவைகளடங்கிய அத்யாயம் முற்றிற்று. (101 சுலோகங்கள்.)

பிரஹ்ம சாபம்.

அகஸ்தியர்:—கல்விக்கடலாய் மஹாமேதாவியாயுள்ள ஹயக்ரீவரே! பிரஹ்மா எதற்காக மன்மதனைச் சபித்தார்? என்பதை விஸ்தாரமாகக் கூறும்படி வேண்டுகின்றேன்.

ஹயக்ரீவர்:—முன்னம் மஹாகல்பத்தில் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் ஸுந்தன், உபஸுந்தன் என்னும் இரண்டு அஸுர சகோதரர்கள் பலத்தினால் கர்வங்கொண்டு ஜகத்தைப் பீடித்துக்கொண்டிருந்தனர். பலவகையிலும் தேவர்களை ஹிம்ஸித்து உலகில் வேதம், யக்ஞம், தேவபூஜை, தபஸ் முதலியவைகளில்லாமற் செய்தனர். தேவஸ்திரீகளை அபஹரித்துத் தேவக்கிருஹங்களையும், தேவவிருக்ஷங்களையும் இவ்வரக்கர்கள் நாசஞ்செய்தனர். தபோபலத்தினால் மதோன்மத்தர்களான அவர்களது செயலால் துன்புற்ற தேவரனைவரும் மேருசிகரத்தில் ஒன்றுகூடி யோஜித்துப் பிரஹ்மாவைச் சரணமடைந்தனர். வேதகோஷத்தினால் நிறைந்ததும், உருவெடுத்த தபஸ்ஸுகளாலும் யக்ஞங்களாலும் சூழப்பட்டதும், வாஹனமான ஹம்ஸத்தின் ஸன்னதிகளால் நிரம்பியதும், ஸாவித்ரீ காயத்ரீ ஸரஸ்வதீ ஆகிய இம்மூவர்களால் ஸேவிக்கப்பட்டதும், வேதங்களாலும், ஆகமங்களாலும், ஸப்தகோடி மஹா மந்த்ரங்களாலும் க்ருஷ்ணாஜின முடுத்தி ஜடாதாரிகளாய் ஓயாமல் வேதமோதுபவர்களான பிரஹ்மரிஷிகளாலும், தண்ட கமண்டலுகளுடன் கூடியவரும், ஸதா பிரஹ்மானுஸந்தானம் செய்பவருமான துறவிகளாலும்,

சூழப்பட்டதுமான பிரஹ்மலோகத்தில் உள்ளே நுழைந்து அமரரனைவரும் சதுர்முகனது ஸமயத்தை யுணர்ந்து உத்தரவு பெற்று அவரருகே சென்றனர். ஆங்கு, அண்டினவரது துன்பத்தை அகற்றுபவரும், இரண்டு மைல் உயரமுள்ள இதழ்கள் நிறைந்ததும், ஒரு மைல் உயரமுள்ள கர்ணிகை யுடையதும், அரை மைல் உயரமுள்ள கேஸரம் உள்ளதும், பெரிய தாமரைத் தண்டால் மிக அழகானதும் எப்பொழுதும் சூர்யன் ஸமீபத்திலிருப்பதால், மலர்ந்துள்ளதுமான தாமரைப் புஷ்பம் என்னும் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து, நான்கு முகங்களாலும் ஸகல வித்தைகளையும் ஓதுபவரும், பழுத்த வர்ணமான தாடி மீசையுள்ளவரும், கபிலவர்ணமுள்ள கண்களையுடையவரும், பவழம்போன்ற தேக காந்தியுள்ளவரும், ஜடைகளால் அழகாகப் பிரகாசிப்பவரும், யோகிகளால் ஸதா துதிக்கப்படுகிறவரும், இறக்கை முளைத்த கைலாஸமலைபோல் அருகே விளங்கும் வாஹந ஹம்ஸத்தால் ஸேவிக்கப்படுபவரும், ஸகல உலகங்களையும் படைக்க அடிக்கடி கண்விழிகளை அசைப்பவரும் மிகப் பிரஸன்னராய், சாந்தராய், கருணை நிறைந்தவராய் விளங்குபவரும், ஸ்வரூபத்துடன் நின்று துதிக்கும் பதினான்கு வித்தைகளால் ஸேவிக்கப்படுபவரும், பிணியற்றவரும், மூப்பில்லாதவரும், மாயையற்றவரும் உலகைச் சிருஷ்டி செய்பவரும், கருணாமயமாயிருப்பவருமான சதுர்முகனைத் தரிசித்தனர்.

வானவரனைவரும் அவரை ஸாஷ்டாங்கமாகப் பணிந்து, பத்தாஞ்ஜலி புடர்களாய் பிரஹ்மனிடம் விக்ஞாபனம் செய்து கொண்டனர்—

தேவர்கள் :—“ஓ பிரஹ்மன்! எப்போதும் கருணை நிறைந்த தாங்கள் விழித்துக்கொண்டிருக்கும்போது எவராலும் அடக்கமுடியாத மஹாபாபிகளான ஸுந்தோபஸுந்தர்கள் மூவுலகையும் பீடிக்கின்றனர். சித்கலாநிதியே! அவர்களை யழிக்க ஒரு தந்திரம் யோசியுங்கள். அவர்கள் எங்கள் அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்டனர்.”

இங்ஙனம் தேவர்கள் கூறக்கேட்ட சதுரானனன் புன்னகையுடன், "தேவர்களே! நான் அவ்வஸுரனது கொடுமையை யறிவேன். அவர்களுக்கு வேறெவரிடமும் மரண பயம் கிடையாது. அவர்கள் முன்னர் என்னை நாடி நீண்டகாலம் கடுந்தவம் புரிய, யான் அவரருகே சென்று 'யாது வரம் வேண்டும்? பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறினேன். அவர்கள் தாங்களிருவரும் மிக அன்யோன்யமா யிருப்பதால் தங்களுக்கு மரணம் வருவதாயின் ஒருவருக்கு மற்றொருவரால் மரணம் வரட்டும். மற்றெவரிடமும் மரணம் ஸம்பவிக்கக் கூடாதென்று வரங்கேட்டனர். நானும் அப்படியே ஆகட்டும்; நீங்கள் ஒருவருக்கொருவரே யமன் ஆவீர்கள் என்று வரமளித்தேன். ஆதலால் அவர்களைக் கொல்ல எவராலும் ஆகாது; மூவராலுங்கூட முடியாது. ஆதலால் வேறு உபாயம் செய்கிறேன். உலகிலுள்ள ஸமஸ்த ஸௌந்தர்யங்களிலிருந்தும் சிறிதுசிறிது எடுத்து அபூர்வ மான ஒரு ஸ்திரீயைப் படைத்து அவள் மூலமாகக் காமக் குரோதங்களை யுண்டுபண்ணி பரஸ்பரம் கொன்றுக் கொள்ளும்படி செய்கிறேன்'' என்றுகூறி, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சதுர்முகன் ஒவ்வோர் அழகுள்ள வஸ்துக்களிடமிருந்தும் எள்ளளவு எள்ளளவு அழகை யெடுத்து மிக அபூர்வமான ஒரு பெண்மணியைப் படைத் தனர். அங்ஙனம் படைக்கப்பட்டவளாதலின் அவள் திலோத்தமை எனப் பெயர் பெற்றனள். அதிரமணீயமான ஸமஸ்த அவயவங்களுள்ளவளும், கண்ணுற் கண்டவுடன் புருஷர்களது மனதை ஹரிப்பவளும், பெருத்த ஸ்தன பாரத் தால் வணங்கிய இடையுள்ளவளும், சரத்சந்திரன் போன்ற முகபிம்பமுள்ளவளும், காற்றிலசையும் தாமரையிதழ்போல் சஞ்சலமான விழிகளுள்ளவளும், தனது அங்கங்களால் ஆபரணங்களுக்கு அழகையளிப்பவளுமான அவள், அழகில் மின்னற்கொடிபோலவும், கண்களில் கமலம்போலவும், பற் ளில் நிலவுபோலவும், மயிரில் மயில்தோகை போலவும், கைகால் நகங்களில் ஸ்படிக ஜபமாலை போலவும், தேஹகாந்தி யால் மன்மதனை விருத்தி செய்பவள் போலவும் விளங்கினள்.

அதிலாவண்யம் வாய்ந்த திலோத்தமையைக் கண்டவுடன் பிரஹ்மாவின் மனது மன்மதனால் பீடிக்கப்பட்டது. நான் முகனது எட்டுக்கண்களும் காமனால் ஆட்டிவைக்கப்பட்டு அவளது அழகெனும் சேற்றிலமிழ்ந்தன. தான் படைத்த பெண்ணினிடம் அவருக்குக் காமவிகாரம் உண்டாயிற்று. தர்மாதர்மத்தையும் மறந்து அவளிடம் பிரஹ்மா காம சேஷ்டைக்கு ஆரம்பித்தனர். காமிகள் காமன் கணைக் காளாகி, தாயென்றோ, பெண்ணென்றோ, ஸோதரியென்றோ கூடப்பார்ப்பதில்லை!

தந்தையின் விந்தையான செயலைக்கண்டு பலாத்காரம் செய்வாரோ என்றஞ்சி, மான்வடிவமெடுத்துத் திலோத்தமை ஓடினாள். கமலாஸனனும் ஆண்மானாகி அவளைப் பின் தொடர்ந்து ஓடினார். இதைக்கண்டு பரமசிவன் வேட உருவந் தாங்கி, நாய்களாகத் தோன்றிய வேதங்களால் சூழப்பட்டு, மயில்தோகையையும் குந்துமணிகளையும் ஆபரணமாகப் பூண்டு இடையில் மான்தோல் அணிந்து, கரங்களில் வில்லையும் அம்பையுமேந்தி வந்தனர். உமையவளும் அதற் கேற்றபடி கருத்த திருமேனியுடையவளாகி மயில் சிறகு களையும் குந்துமணிமாலைகளையுமணிந்து, யானையின் மதத் தைத் திலகமாக அணிந்து கலகலவென்று சப்திக்கும் தந்த வளைகளால் அழகிய கரங்களுள்ளவளாய்த் தன்னைப்போன்ற ஆயிரக்கணக்கான வேடுவச்சிகளால் சூழப்பட்டு சிவனைப் பின் தொடர்ந்தனள். அதர்மத்தை அழிப்பவரான சிவன் பெண்ணினிடமாசை கொண்டோடும் பிரஹ்மாவின்மீது ஒரு சரத்தைவிட ஆரம்பித்தார். வேடவேடம் பூண்டு வருபவர் பரமசிவனே யென்றுணர்ந்த சதுர்முகன் வெட்கி அவர் திருவடிகளில் வீழ்ந்து தனது அபசாரத்தை க்ஷமிக்கும்படி வேண்டினார். அன்றியும், சிவனது பாணத்திற்கு உரியவர் திரிபுரர், அந்தகன் அல்லது காலன் ஆதலின் சரத்தை உப ஸம்ஹாரம் செய்யும்படி பிரார்த்தித்தனர். சங்கரனும் சரத்தை அவர்மீதுவிடாது பாணப் பெட்டியிலே வைத்துவிட்டனர். சிவஸன்னதியில் காமவிகாரமகன்ற நிர்மலமான மனமுள்ள

கமலாஸனனது திருவடிகளைத் திலோத்தமை பணிந்து "என்னை எதற்காகப் படைத்தீரோ அக்கார்யத்தில் ஏவுங்கள்" என்று வேண்டிக்கொண்டனள். உடனே சதுர் முகன் தேவர்களை யழைத்து அவர்களுடன் ஸுந்தோப ஸுந்தர்களது இருப்பிடத்திற்கு அவளை யனுப்பினர். தேவர்களுடன்கூடத் திலோத்தமை அவ்வரக்கரிடம் சென்று உத்யானத்தில் ஊஞ்சலாடிக்கொண்டு பாடஆரம்பித்தனள். அவளது இனிய குரலைக்கேட்டுக் குயில்களும் வெட்க மடைந்தன. காலத்திற்கேற்றபடி காந்தாரம், மத்தியமம், ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களைப் பாடி ஸரளீ ஸூத்திரத்தில் மிகவும் ஸாமர்த்தியத்தைக் காட்டி அழகாக வீணையை மீட்டினள். அவளது ராக ஆலாபநத்திலீடுபடும்போது ஜகத்தெல்லாம் மோஹமடைந்தன.

திலோத்தமையைக்கண்டும் கானத்தைக்கேட்டும் வியப் புற்ற உத்யான பாலகர்கள் ஓடி ஸுந்தோபஸுந்தரிடம் தெரி வித்தனர். உடனே இருஸஹோதரர்களும் நான்முன்னே, நான்முன்னே என்று போட்டிபோட்டுக் கொண்டு ஓடோடி வந்து, காதல் ததும்பும் கண்களால் அவளைநோக்கினர். தனக்கே அவள் போகத்திற்குரியவளென இருவருக்கும் கலஹம் தோன்றிற்று. "வத்ஸ! உபஸுந்த! உன் அண்ணன் மனைவியான அவளை ஆசையோடு பார்க்காதே! மூத்தவன் தந்தைக்கு ஸமானம்; அவன் மனைவி தாயல்லவா? தாயிடம் காமனை கொள்ளலாமா?" என ஸுந்தன் கூறினன். இதைக் கேட்டு உபஸுந்தன், "அண்ணா! பெரியோர் சிறுவரது ஆசையைப் பூர்த்திசெய்வது முறையல்லவா? நானே முதலில் அவளைக் கண்டேன். உனது புத்திரனுடைய என்மனைவி அவள்" என்று கோபத்துடன் கூறினன். இங்ஙனம் இருவர்க்கும் கோபத்தினாலும்மோஹத்தினாலும் கொடூரமான வார்த்தைகள் வளர்ந்தன. வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறிற்று; ஒருவர்க்கொருவர் கைகலந்து மயிரைப்பிடித்துக் கொண்டு போர்புரிய ஆரம்பித்தனர்; யுத்தம்முற்றிற்று. காலதண்டம்போன்ற கதையினால் ஒருவரையொருவர் அடித்

துக்கொண்டு இருவரும் மாண்டனர். இங்ஙனம் தேவ கார்யத்தை முடித்துவிட்டுத் திலோத்தமை பிரஹ்மனிடஞ் சென்றனள். அவர் அவளது அத்யாச்சர்யமான ரூபத்தையும், அவள் செய்த தேவகார்யத்தையும் கருதி அவளை அப்ஸரஸுகளுக்குள் மேலானவளாகச்செய்து ஸ்வர்க்கத்திற் கனுப்பினர்.

பிறகு சதுர்முகன் 'எனது பெண்ணான திலோத்தமையிடம் என்மனம் மோஹமடையும்படி செய்த துராசாரமுள்ளவனும், தபஸ்ஸுக்கு பெரும் விக்னமாயுள்ளவனுமான மன்மதனைச் சாபாக்னியால் தஹித்துவிடுகிறேன்' என்று நினைத்த மாத்திரத்தில் மன்மதன் எதிரில் தோன்றினன். அஹோ! துராத்மன்! என்னை அநியாயமாக என் மகளிடத்திலேயே ஆசைப்படும்படி நீ செய்தாய் அல்லவா? ஆதலால் நீ சினங்கொண்ட சிவனது நெற்றிக்கண் சுடரால் சுடப்பட்டுச் சாம்பலாவாயாக" என்று சதுர்முகன் மன்மதனைச் சபித்தார். ரதியும், மன்மதனும் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு அவர் திருவடியில் வீழ்ந்து மன்னிக்கும்படி வேண்டினர். கமலாஸனன் அவர்களைப் பார்த்து மனமிரங்கி, "உன் உடல் எரிந்தபின், பண்டாஸுரன் என்னும் பெரியராக்ஷஸன் உலகைத் துன்புறுத்துவான். அவனை யழிக்க அமரர்களனைவரும் ஒன்றுகூடி மஹாயாகத்தினல் ஸர்வ தேவதாஸ்வரூபணியான ஸ்ரீலலிதாதேவியைப் பிரகடனம் செய்யப்போகின்றனர். காமேஸ்வரரது மடியில் வீற்றிருந்து காமேஸ்வரியெனும் பெயர்பெற்ற அந்த லலிதாதேவி உன்னைப் பிழைப்பிப்பாள்" என்றுகூறிக் கோபந்தணிந்தவராயினர். மன்மதனும் உள்ளம் நடுங்கத் தன்னிருப்பிடஞ் சென்றான். அந்தச் சாபதோஷத்தினுற்றான் மன்மதன் சிவனது நெற்றிக்கண்ணுக்கு இரையானன். ஹரியாயினும், ஹரனாயினும், பிரஹ்மனாயினும், வானவராயினும், ஏற்பட்ட சாபத்தை அவசியம் அநுபவித்தே தீர வேண்டும். அகஸ்தியரே! இங்ஙனம் மன்மதனுக்குப் பிரஹ்ம சாபம் நேர்ந்த காரணத்தைக் கூறினேன். இனி என்ன கேட்க விரும்புகிறீர்கள். யோசித்துக் கேளும்,

பிரஹ்மாவால் மன்மதனுக்குச் சாபம் ஏற்பட்ட விதத்தைக் கூறும் அத்தியாயம் முற்றிற்று.

(சுலோகங்கள் 100).

பண்டாஸுரன் முதலியவரின் உற்பத்தி.

அகஸ்தியர்:—வாகீஸ்வரர்க்கும் ஈஸ்வரரான ஹயக்ரீவரே! பண்டாஸுரனது பிறப்பை விரிவாகக் கூறுங்கள்.

ஹயக்ரீவர்:—சிவனால் தஹிக்கப்பட்ட மன்மதனது சாம்பலிலிருந்து ஒரு அஸுரன் தோன்றினான். அவனே பண்டாஸுரனென அழைக்கப்பட்டான். நித்ய நபும்ஸகனான அவன் வஜ்ரம்போல் கடினமான உடலுள்ளவன். மூவுலகையும் நடுங்க வைத்தவன். பிரளய காலத்தின் மேக இடி போன்ற சப்தம் செய்பவன்; மாயைநிறைந்தவன்; சேறு போல் கறுத்தவன்; நீளமாயும் மெல்லியதாயுமுள்ள சரீரமுள்ளவன்; எலும்பும் தோலுமாய் விகாரமாயும், பயங்கரமாயுமுள்ள உடலுள்ளவன்; பார்வையாலேயே மூவுலகையும் கொளுத்தும் ஆற்றலுள்ள கண்களையுடையவன்; துக்கமெனும் தேரிலமர்ந்து, யாதனையெனும் கத்தியை யேந்தியிருந்தான். சித்ரகர்மாவெனும் கணத்தலைவன் அவனை இருகரங்களாலும் தழுவிக் "குழந்தாய்! மாதேவனைத் துதி. அவர் உனது இஷ்டத்தைத்தருவார்" என்று கூறிச் சதருத்ரீயத்தை உபதேசித்தனன். அவ்வஸுரன் அம்மந்த்ரத்தால் பல முறைப் பணிந்து பகவானைத் துதிக்க மாதேவன் பிரத்யக்ஷமாகி "வரத்தை வேண்டிக்கொள்" என்றனர். அவன், சத்ருவின் பலத்திற் பாதிபலம் அவனைக்கண்டவுடன் தனக்கு வரவேண்டுமென்றும், சத்ருவின் அஸ்த்ர சஸ்த்ரங்கள் தன்னை வதைக்கக்கூடாதென்றும், வரம் கேட்டான். சிவனும் அதைத்தந்து சிறிது யோசனைசெய்து அறுபதாயிரமாண்டுகள் அவனுக்கு ராஜ்யத்தைத் தந்து மறைந்தனர். இதைக்

கேட்டு பிரஹ்மா பண்ட் பண்ட் என்று கூறியதால் (சிரித்ததால்) அவனுக்குப் பண்டாஸுரனெனப் பெயர் வழங்கலாயிற்று.

பண்டனை யநுஸரித்து உக்ரமான ஜ்வாலையுடன்கூடிய விசுக்ரனும், விஷங்கனும் தோன்றினர்கள். இரு ஸஹோதரர்களுடன்கூடிய பண்டன் பாபத்தோடும் லோபத்தோடும் கூடிய மஹாமோஹம்போல் விளங்கினன். இம்மூவர்களைப் போலவே விகாரமாயும் பயங்கரமாயுமுள்ள உருவம் வாய்ந்த கோடிக்கணக்கான அரக்கர்கள் தோன்றினர்கள். உக்ரமான பராக்ரமம் வாய்ந்த பண்டனை ராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்து எல்லோருமவனை ஸேவித்தனர். இவ்வஸுரர்கள் தோன்றியபோது திக்குகளெல்லாம் அழுக்கடைந்தன; நரிகள் ஊளையிட்டன; ரத்தமழைபொழிந்தது; கொள்ளிக் கட்டைகள் வீழ்ந்தன; பூகம்பம் உண்டாயிற்று; திக்குகள் தபித்தன; தேவப் பிரதிமைகள் கண்ணீர் சிந்தின. எல்லோருடைய மனமும் மலினமாயிற்று. பண்டன் மஹேந்திர பர்வதத்திற்கு அருகில் கீழ்ஸமுத்திரக்கரையில் சூன்யகம் எனும் நகரத்தை நிர்மாணஞ் செய்துகொண்டு அங்கு வஸித்தான். அது நால்வகைச் சேனைகளால் சூழப்பட்டு தேவஜாதிகளால் அணுக முடியாததாயும், பல அகழ்களாலும், கோட்டைகளாலும், சூழப்பட்டதாயு மிருந்தது.

அவனுக்கு ஸம்மோஹினீ, குமுதினீ, சித்ராங்கீ, ஸுந்தரீ என நான்கு அழகிய மனைவிகளிருந்தனர். அப்ஸரஸுகளுடன் கூடின இந்திரன்போல் அவன் விளங்கினன். மஹாபலிஷ்டர் களான அந்தராக்ஷஸர்கள் சுக்ராசார்யார் சொற்படி நடந்து சிவ பக்தியிலீடுபட்டு புத்திராதி பாக்யமுள்ளவர்களாயிருந்தனர். ஒவ்வோரரக்கர் வீட்டிலும் யக்ஞ யாகங்கள் நடந்தபடியே இருந்தன; நான்கு வேதங்களும் ஒலித்தன. ஒரு ஸமயம் பண்டன் தனது ஸஹோதரர்களை அழைத்து "ஸஹோதரர்களே நமதுபகைவர்களான தேவர்கள் இயற்கையிலேயே

குடிலமானவர்கள் ; மஹாபாபிகள் ; ஸமயம் பார்த்து நம்மைக் கவிழ்ப்பவர்கள் ; வீண் கர்வங்கொண்டவர்கள் ; பரவஞ்சகர்கள். எப்படியாவது அவர்களை அழிக்கவேண்டும். ஸ்வர்க்கம் பூமி பாதாளம் என்னும் முவ்வுலகையும் இந்திரன் ஆளுவதால் பலாத்காரமாக அவைகளை நாசஞ்செய்வோம். அதற்கு இதுவே தக்கஸமயம் ; ஏனெனில், மன்மதன் அவர்களுக்குப் பெரும் நன்மையைத் தந்துவந்தான். அவனுள்ளவரையில் நமக்கு நன்மையில்லை ; நல்லவேளையாக அவன் சிவனால் எரிக்கப்பட்டான் ; இதுவே நமக்கு பெரும் பலமாகும். அவனை அமரர் எழுப்புவதற்குள் தேவர்களை நாம் துர்ப்பலர்களாக்கி விடுவோம். நான் ஸ்வர்க்கத்தை யழிக்கிறேன் ; பலிஷ்டர்களான நீங்கள் இருவரும் பூமியையும் பாதாளத்தையும் நாசம் செய்வீராக.

இவ்வேஷத்துடன் சென்றால் நம்மை அறிந்து கொள்வார்கள். ஆதலின் காற்றுருமாறி ஒவ்வொரு உடலிலும் புகுந்து ஆங்குள்ள ரஸத்தை உலர்த்துவோம் ; ரஸமுலர்ந்த பின் சுக்லத்தை உலர்த்துவோம். சுக்லத்தை ஆச்ரயித்ததான தேஜஸ், தானே அழிந்துவிடும். இங்ஙனம் பிராணன் உள்ள ஒவ்வொரு ஜீவனிலும் புகுந்து ரஸத்தைப் பக்ஷிப்போம். பூமி, தரு, ஜலசரம், ஸ்தலசரம், பிராணன்உள்ளது, இல்லாதது ஆகிய ஸகலவஸ்துக்களிலும் புகுந்து ரஸத்தை இழுப்போம்" என்று கூறினான். இதைக்கேட்ட அவனது தம்பிமார்கள் அவனை நமஸ்கரித்து "நல்லது, நல்லது" எனக் கொண்டாடினார்கள். உடனே அனைவரும் ஆயிரம் ஆயிரம் அக்ஷௌஹிணீ ஸேனைகளுடன் கூடக்கிளம்பினார்கள்.

பண்டாஸுரன் ஸ்வர்க்கத்தை யழித்தல்.

பண்டாஸுரன் ஓராயிரம் அக்ஷௌஹிணீ ஸேனையுடன் தன்னுடல் ஒருவர் கண்ணிலும் படாதபடி தேவலோகஞ் சென்றனன். உடனே அங்கே பல உத்பாதங்கள் தோன்ற, வானவரனைவரும் என்ன ஆபத்து நேரிடுமோ என அஞ்சி நடுங்கினர். பண்டன் முற்கூறியபடியே தேவருள்ளத்திலே

புகுந்து ரஸத்தை யுலர்த்தினன். அவர்கள் முகத்திலுள்ள அழகுமாறி ஒளிகுன்றி களையற்று விகாரமாகக் காணப்பட்டனர். உத்ஸாஹம் நஷ்டமாயிற்று; சோம்பல் அதிகமாயிற்று; ஸ்வர்க்கத்தின் சோபையே குன்றியது. வானவர் வாடிய வதநமுள்ளவர்களாக ஆயினர். அன்றியும், அவர்கள் ஆண்மையையுமிழந்து அப்ஸரஸுகளும் ஏனைய பெண்களும் எதற்காக வேண்டுமென்றெண்ணினர். அன்யோன்ய கார்யமில்லாததால் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை விட்டொருவர் விலகினர். ஸங்கமின்மையால் ஸஹாயமற்றது; ஸஹாயமின்மையால் ஊக்கம் ஒழிந்தது.

பண்டனது ஸேனைகள் அப்ஸரஸுகளிடம் புகுந்து, அவர்களைப் பயனற்றவர்களாகவும், சிற்றின்பத்தில் வெறுப்புள்ளவர்களாகவும், அழகு காந்தி விலாஸம் முதலியவைகளில்லாதவர்களாகவும் செய்தார்கள். போகத்தில் ஆசையொழிந்ததால் எவளும் கணவனைக் கண்ணால் பார்ப்பதில்லை. அம்ருதத்தை அருந்தினும் எவர்க்கும் மதமுண்டாவதில்லை. அதனால் அதிக கனமான ஸ்தந மண்டலங்கள் வெய்யிலில் உலர்ந்த எருக்கங்காய்கள் போலிருந்தன. அழகின்றிப் புன்னகையில்லாது மூப்பு தோன்றி அப்ஸரஸ்ஸுகளது முகங்கள் குரங்கு முகங்கள்போலிருந்தன.

இதர அவயவங்களும் கெட்டுப் போகமும் ஸந்தானமும் இல்லாதிருந்தனர்; இத்துன்பம் இவர்களோடு நிற்கவில்லை; நந்தவனத்திலுள்ள மரங்களிலும் தோன்றிற்று. தளிரோ, அங்குரமோ, புஷ்பமோ, கோகிலத்தின் குரலோ, வாஸனையோ அங்கு கிடையாது. இங்ஙனம் செடி கொடிகளும் ரஸத்தை யிழந்தன. பிறகு பண்டனும் சூன்யநகரஞ் சென்றான்.

விசுக்ரன் பூலோகத்தைப் பீடித்தல்.

விசுக்ரனும் ஒருவர் கண்ணிலும் படாமல் பூலோகத்தில் மானிட சரீரங்களிற் புகுந்தான். உடனே ஸகல ஜனங்களும்

குரூபிகளாகிக் காந்தியை யிழந்து ஜடர்களாகித் தங்களது முக்கிய கடமைகளைக்கூடச்செய்ய உத்ஸாஹமும் சக்தியுமற்ற வராயினர். மோஹகுணத்தை யிழந்து, பெண்களாசையைத் துறந்து ஸந்ததியில்லாதவர்களானார்கள். ஸந்ததியில்லாது போகவே அவரவர் மனம் நரம்பு யெல்லாம் உலர்ந்து உருமாறி விசுக்ரனது வர்ணம்போல் சோகையால் வெளுத்த வர்ண முள்ளவர்களாக இருந்தனர். பெண்களுக்குப் போகவிருப்பத் தைத் தரும் சோணிதத்தை விசுக்ரனது ஸைநிகர் அருந்தி யதால் ஒரு ஸ்திரீயினிடமும் ஆசையோ, இன்பப்பேச்சோ, புன்னகையோ காணப்படவில்லை; அவர்களது முகங்களில் கடுகடுப்பும் தோன்றிற்று. ஆண்மக்களுக்கு ஆலஸ்யமுண் டாயிற்று. மனிதர்களுக்கு வளர்ச்சியையும், போக இச்சையையும் தரும் ரத்தத்தையும் சுக்லத்தையும் விசுக் ரனது வீரர்கள் உறிஞ்சியதால் பெருங்கஷ்டமும் போகத்தில் வெறுப்பும் உண்டாயிற்று. பெண்கள் பொம்மைகள்போலி ருந்தனர். அவர்களது அழகியபார்வை, புருவமசைதல், பல வகையான விலாஸங்கள், லஜ்ஜை, பதியைப் பார்த்தவுடன் உண்டாகும் பரபரப்பு, யௌவநசேஷ்டைகள், அரியகானம், நாடகேளி, அத்புதலக்ஷணங்கள், தூதிகளை அனுப்புதல், பத்மிநீ முதலிய உத்தம ஸ்திரீலக்ஷண வர்ணனை முதலிய ஸகலமும் நாசமாயிற்று. இங்ஙனம் ஸந்ததிக்குரிய கார்யங் களில்லாமற்போகவே ராஜலக்ஷ்மியும் ராஜ்யத்தைவிட்டகன் றனள். ஸந்தான மற்ற வீடுகள் சூன்யமாக இருந்தன. அன்றியும் வீடெல்லாம் எருக்கு முளைத்துப் புற்பூண்டுகள் நிறைந்து காக்கை கழுகு நரி முதலியவைகளுக்கு இருப்பிட மாயிற்று.

இளந்தளிர்களாலும் மலர்ந்த புஷ்பங்களாலும் வண்டு களது ஜங்காரத்தாலும் அழகிய உத்யானங்கள் அவைகளின்றி உலர்ந்தன. பயிர்களும் பாழாயின. தாமரை ஓடைகள் இலையும் புஷ்பமும் ஜலமுமின்றி சூன்யமாயிருந்தன. அரண் யங்களில் புண்யவிருக்ஷங்கள் எரிந்து விஷவிருக்ஷங்கள் விருத்தியாயின. பிராணிகள் உண்டவுணவும் அவைகளது

உடலில் ஒட்டுவதில்லை. அதோடு அது விஷம்போல் உடலை அழித்தது. ஆதலால் எவர்க்கும் உணவில் ருசியும் விருப்பு மில்லாததுடன், வெறுப்பும் உண்டாயிற்று. ஆண்மக்கள் முகத்தில் மீசைமுளைக்கவில்லை. யுத்தத்திலும் போகத் திலும் விருப்பில்லாமல் நபும்ஸகராக இருந்தனர். பயிர் பச்சைகளும் ஜலமும் உலர்ந்தன. எங்கும் பூமி களராகவும், புண்ய ஜந்துக்களுமில்லாததாகவுமிருந்தது. லதைகளும் குஞ்ஜங்களும்உலர்ந்து கல்லும்மணலும் பயனற்ற பூண்டு களும் நிறைந்திருந்தன. மரங்களில் தண்டுகள் மாத்திரம் காணப்பட்டன.

பாதாளத்திற்குச் சென்ற விஷங்கனும் அப்படியே நாகர்களை நாசமாக்கினன். பிலத்வாரத்திலுள்ள ஸித்தர் களையும், அவர் பத்னிகளையும் ஒருவரை யொருவர் நேசிக்காத படி செய்தான். அதனல் அவர்கள் சூன்யமான மனதுடைய வர்களானர்கள். திடீரென்று பாதாளவாசிகள் அனைவரும் கடுங்கோபங்கொண்டு கலஹஞ்செய்தனர். இங்ஙனம் உக்ர மான பண்டாஸுரன் தம்பிகளுடன்கூட மூவுலகையுந் துன்புறுத்தினன். தர்மார்த்த காமமெனும் இம்மூன்றும் ரஸத்தை அவலம்பித்திருந்தது. அந்த ரஸத்தை அஸுரர்கள் உட்கொண்டதால் ரஸத்தினலுண்டாகும் காந்தி, உத்ஸாஹம் உல்லாஸம், வித்தை, தர்மம், கருணை, பிரியம், அறிவு, சாஸ் திரங்களின் அநுஷ்டானம், சாஸ்திரங்கள், காவ்யநாடகங்கள், கானம், ஹாஸம், லக்ஷ்மியுடன்கூடிய இதர கார்யங்கள் ஆகிய எல்லாம் நாசமாக்கப்பட்டன.

கட்டைகளிலிருந்த ரஸத்தைக்கூட அபஹரித்ததால் அதில் தீயை வைத்து எவ்வளவு ஊதினலும் ஜ்வலிக்காமல் அவை புகைந்தபடியேயிருந்தன. மனிதருக்குச் சுக்லமிருப் பதுபோல் மரஞ் செடி கொடிகளுக்கும் ரஸம் அமைந்து புஷ்பங்களையும் கனிகளையுமுண்டுபண்ணுகிறது. பண்டன் சராசரமான ஸகல வஸ்துக்களுக்கும் ஸமமாகத் துன்பத்தை யுண்டுபண்ணினன். ரஸமென்பதே பிரஹ்மம். ரஸமே

உயர்ந்த கதி. ரஸமே காந்தியையும் தேஜஸ்ஸையும் அளிக்கிறது. *"ரஸமே அவன்; அந்த ரஸத்தையடைந்து மனிதன் ஆநந்த முள்ளவனுகிறன்" என்று வேதங்கள் கூறுவதால் ரஸமே பிராணனும், பிராணனை யளிப்பதாயும் இருக்கிறது. ஆகாசமாயும் ஆநந்தமாயுமுள்ள ரஸமில்லாவிடில் எவன் பிழைத்திருக்கமுடியும்?" என்ற ஸ்ருதியினல் ரஸமே பிராணன் என்று கூறப்படுகின்றது.

அந்த ரஸம் பனிபோன்ற அந்தகாரத்தினல் மூடப்பட்டிருக்கிறது. மூச்சுக் காற்றல் கண்ணடிமூடப்பட்டது போலிருக்கிறது. ஆதலால் சந்திரன் பௌர்ணமி திதியில் கூடக் குறைந்தே இருந்தான். நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கவில்லை. அந்த உமையவளும் வைராக்கியங்கொண்டு ஆபரணங்களைக்களைந்து யோகிகளது விருதத்தைக் கைக்கொண்டு ஓரிடத்திலே தவஞ்செய்தாள். ரதி காமனை யிழந்தபின் தனது உயிரைவிட எண்ணியபோது "ஓ ரதி! உன் கணவன் பிழைப்பான்" என்று ஆகாசவாணி கூறியதைக் கேட்டு ஜீவனை விடாது வைத்திருந்தாள். வஸந்தன் அவளை ஆஸ்வாஸப்படுத்த அவளும் தவஞ்செய்து வந்தாள். வஸந்தன் தன் மித்ரனது மரணதுக்கத்தால் மிகவும் வருந்தினன்.

பண்டாஸுரன் முதலியோர் உற்பத்தி, அவன் ஸ்வர்க்கத்தை யழித்தல், விசுக்ரன் பூலோகத்தை யழித்தல், விஷங்கன் பாதாளத்தை யழித்தல் இவைகளைக் கூறும் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 116)

இந்திரன் முதலியோர் விஷ்ணுவினிடம் செல்லல்

அகஸ்தியர் :—அறிவாளிகளிற் சிறந்த ஹயக்ரீவரே! பண்டனது பிறப்பைக் கேட்டேன். அவனை யார் எப்படி கொன்றனரென விஸ்தாரமாக வர்ணிக்க வேண்டுகிறேன்.

---

* தைத்திரீய உபநிஷத். 2—7.

ஹயக்ரீவர் :—பிரஹ்மா முதலிய பிரஜாபதிகளும், மநு முதலிய மஹாஜனங்களும், இந்திராதி தேவர்களும், பிரஹ்லாதாதி தானவர்களும், அக்நி முதலிய திக்பாலர்களும், சாரணர்களும், ஸித்தர்களும், குஹ்யகர்களும் பண்டாஸுரனால் பீடிக்கப்பட்டுச் சக்தியையும் சுக்லத்தையும் இழந்து, சஸ்த்ரவியாபாரத்தை அறவே மறந்து, பண்டனை ஜயிக்க என்ன செய்வதென்று தெரியாமல் பாற்கடலில் பன்னகசாயியாயுள்ள ஸ்ரீ பதியை, சாதகம் மேகங்களை நாடுவது போல் சரணமடைந்தார்கள். அவரும் காமனில்லாததால் லக்ஷ்மியினிடம் வைராக்கியங்கொண்டு ஸுஷுப்தி யோகத்தை அவலம்பித்து ஆத்மஸ்வரூபத்திலீடுபட்டிருந்தனர்.

தேவர்களது ஸ்துதியைக்கேட்டு விழித்தெழுந்த பகவான் தீநமான அமரர்களைக்கண்டு ஞானதிருஷ்டியால் எல்லாவற்றையுமுணர்ந்து கூறினர்—தேவர்களே! குசலமா? உங்களது மாலின்யமே குசலமின்றெனக் காட்டுகின்றது; முன்போல் உங்களுக்கு முககாந்தி இல்லை; பாகு பலங்குன்றி கண்ணில் நீர்பெருக உடல் மெலிய பராக்ரமம் ஓய்ந்து கிடக்க, பாக்கிய மின்மையால் வேறாக மாறிவிட்டீர்களே! ஸுகஸ்வரூபியாய் ஆநந்தக்கடலாயுள்ள பரமேஶ்வரன் வீற்றிருக்கும் பீடம் மன்மத ஸ்வரூபமாய் உங்களுக்கு வீர்யத்தை அளித்தது. அது எரிக்கப்பட்டு அதிலிருந்து தோன்றிய பண்டனால் உங்கள் தேஜஸ்ஸும் உத்ஸாஹாதி குணங்களும் அழிக்கப்பட்டன. ராக்ஷஸக் கருவை அறுக்கும் வஜ்ரம் விஷமில்லாப் பாம்புபோலிருக்கிறது. அக்நியிடம் ஒளியில்லை; காலதண்டத்தின் சக்தி சாந்தமாய் விட்டது; நிருருதியினது கத்தி மழுங்கியுள்ளது; வருணபாசம் தாமரைத் தண்டுபோலிருக்கிறது; வாயுவின் த்வஜமும், யக்ஷனது தடியும் காந்தியற்றிருக்கின்றன. ஈஶானனது சூலமும் சாந்தமாயிருக்கின்றதே! உங்கள் முகமும் மிகமிக மலிநமாய் ராஹு விழுங்கிய சந்திரனைப் போலிருக்கின்றது. இதற்குக் காரணம் பண்டாஸுரன்

ஒருவர் கண்ணிலும் படாமல் உள்ளேபுகுந்து ரஸத்தை அபஹரித்ததேயாகும்.

மற்றவர்களைப் பற்றிக் கூறுவதேன்? எனக்கே லக்ஷ்மியினிடமும், பூதேவியினிடமும் வைராக்யம் உண்டாயிற்று! சராசரமான பிராணிகளில் பண்டன் புகாத சரீரமே கிடையாது. பிரஹ்மாண்டத்திலுள்ள தேவர் பசு பக்ஷிகள் நரர் முதலிய அனைவரையும் தனது ரஹஸ்யமான பாணத்தால் தாக்கி, துர்ப்பலர்களாகச் செய்துவிட்டான். காரண புருஷர்களான பிரஹ்ம விஷ்ணு ருத்திரர்களான நாங்களும்கூடப் பிரஹ்மாண்டத்தினடுவிலிருப்பதால் அந்தப் பீடைக்குச் சிறிது இலக்கானோம். அண்டத்திற்கு மேலாக உள்ள மஹாசம்பு ஒருவர்தான் இதற்கு ஈடுபடாமல் பராசக்தியால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்டு சித்கனமூர்த்தியாய் விளங்குகிறார். அவர் உருவமற்றவர்; ஆலம்பமற்றவர்; மாறுதலில்லாதவர்; எல்லாவற்றிலும் மேலானவர்; அவரது அருளால்தான் பண்டனைக்கொல்ல ஒருபாயம் பெறவேண்டும். ஆதலின் நாமனைவரும் ஒன்றுகூடி அவரைத் துதிப்போம். அதனால் ஸந்தோஷமடைந்து அவர் நமக்கு அருள் புரிவார்.'' என்று கூறி கைடபாரியாகும் திருமால், பிரஹ்மா, இந்திரன் முதலிய தேவர்களுடன் பிரஹ்மாண்டச் சுவரினருகே சென்றார். அங்கு தேவர்களாலழைக்கப்பட்ட திக் கஜங்கள் அவர் சொற்படி தங்களது கூரிய தந்தங்களால் நூறாண்டு பிரஹ்மாண்ட சுவரை இடித்துத்தள்ளின. அநேக யோஜனை தூரம் விசாலமான அந்தச் சுவரில் ஒரு துவாரம் தோன்ற அதன் வழியாக அமரர் அண்டத்திற்கு வெளியே சென்றனர். அங்கு, சின்மய ஆகாசமாய் ஒருவித பிடிப்பும் பற்றுமில்லாதவராய் பூமியோ ஜலமோ அக்கியோ காற்றோ இல்லாது கேவல ஆகாசமயமாயுள்ள மஹாசம்புவைத் தரிசித்துப் பணிந்துத் துதித்தனர்.

மஹாசம்பு ஸ்துதி

அத்வயராய் நிர்மலராய் சாந்தராய் மாயையைக் கடந்தவராய் பிறப்பற்றவராய் ஜ்யோதி ஸ்வரூபராய் குணக்

கலப்பே யில்லாதவராய் விளங்கும் மஹாசம்புவை உபாஸிக்கின்ருேம்! தேவர்களாலும் அறியமுடியாதவரும், யோகிகளாலும் தியானஞ் செய்ய முடியாதவரும், வேத மறிந்தவர்களால் அத்யயநம் செய்ய முடியாதவருமான மஹாசம்புவை உபாஸிக்கின்ருேம்! ஸத்தென்றும், அஸத்தென்றும், ஸதஸத்தென்றும் கூறமுடியாதவரும், இரண்டில்லாதவரும் ஒன்றில்லாதவரும், மஹாப்பிரகாசமான தேஜஸ்ஸுள்ளவருமான மஹாசம்புவை உபாஸிக்கிருேம்! தன்னுலேயே அறியத்தக்கவரும் தானே தோன்றியவரும், தனக்குத்தானே பிரபுவாயிருப்பவரும், பற்றற்றவரும், தானே ஏகாந்தத்தில் ஸுகப்படுபவருமான மஹாசம்புவை உபாஸிக்கிருேம்! அறியத்தக்கது, அறிவு, அறிகிறவர் என்ற திரிபுடியால் ஸ்பர்சிக்கப்படாதவராய், ஸ்வயமாயுள்ளவரை உபாஸிக்கிருேம்! தர்மாதர்மங்களாலும், அதன் பலனுன ஸுகதுக்கங்களாலும் முகரப்படாத பதமுள்ளவரும், ஈசானனுமான மஹாசம்புவை உபாஸிக்கிருேம்! ஸௌரமதத்தைத் தழுவியவர்க்குச் சூர்யனுய், பிரஹ்மவாதிகளுக்குப் பிரஹ்மமாய் ஸௌகதர்களுக்கு விக்ஞானமாயுள்ள மஹாசம்புவை உபாஸிக்கிருேம்!

லோகாயதிக மதத்தினருக்கு இயற்கைச் சரீரமாய், க்ஷணிக மதஸ்தர்களுக்கு க்ஷணவடிவராயுள்ள மஹாசம்புவை உபாஸிக்கிருேம்! மாத்யமிகர்களுக்குச் சூன்யராய், ஸாங்கியர்களுக்குப் புருஷராய், பாதஞ்சலர்களுக்குச் சப்தமாயுள்ள மஹா சம்புவை உபாஸிக்கின்ருேம்! சில்பிகளுக்கு விஸ்வகர்மாவாய், சைவர்களுக்குச் சிவனுய், பாஞ்சராத்ரர்களுக்கு விஷ்ணுவாயுள்ள மஹா சம்புவை உபாஸிக்கிருேம்! நிதியை அறிந்தவர்களுக்கு அர்த்தேஸ்வரனுய், காம ஸூத்திரத்தைத் தழுவியவர்களுக்குக் காமேஸ்வரனுய், வைத்தியர்களுக்கு வைஸ்வாநரராயுள்ள மஹாசம்புவை உபாஸிக்கிருேம்! தயையுள்ளவர்களுக்குத் தர்மதேவதையாய், உக்ரமானவர்களுக்கு உக்ரதேவராய், கர்ம மார்க்கத்தைத் தழுவியவர்களுக்கு உபாஸ்யராயுள்ள மஹா சம்புவை உபாஸிக்கிருேம்! பிராமணர்களுக்கு அக்கினியிலிருப்பவராய், யோகிகளுக்கு ஹ்ருதயத்தி

விருப்பவராய், நற்புத்தியில்லாதவர்களுக்குப் பிம்பமாயுள்ள மஹா சம்புவை உபாஸிக்கிறோம்! எல்லாவற்றிற்கும் ஆதியாய்த் தனக்கொரு ஆதியில்லாதவராய், எல்லாவற்றையும் லயப்படுத்துவராய்த் தான் லயமில்லாதவராயுள்ள மஹா சம்புவை உபாஸிக்கிறோம்!

ஓ மஹேஸ்வர! ஒருவராலும் நீர் பார்க்கமுடியாதவர்; தியானம் செய்யமுடியாதவர்! எங்கள் ஜீவன ஸித்தியின் பொருட்டு எங்கள் கண்முன் தோன்றுங்கள்! விபரீதமான செய்கையுள்ளவர்களும், துஷ்டர்களுமான பண்டன் முதலியவர்களால் துன்பப்படுத்தப்பட்ட எங்கள் கண் முன்னே தோன்றுங்கள்! ஓ சங்கர! துர்ப்பலர்களாய், முறிய அடிக்கப்பட்டவர்களாய், ரஸமில்லாதவர்களாயுள்ள எங்களைக் கருணையுடன் காப்பாற்றுங்கள். எங்கள் கண்முன் தோன்றுங்கள்! தாங்கள், சத்ருக்களால் உபத்திரவிக்கப்பட்ட பக்தர்களான எங்களைக் காப்பாற்றாவிடில் தங்கள் கீர்த்தியே குறையும்! எங்கள் கண்முன் தோன்றுங்கள்! இங்ஙனம் விஷ்ணுவினாலும், பிரஹ்மனாலும், இந்திரனாலும் ஸ்துதி செய்யப்பட்ட பகவான் பராசக்தியினால் உபாஸிக்கப்பட்டவராக ஆவிர்ப்பவித்தனர். காளமேகம்போல் கறுத்த கண்டமுடையவராயும், சூலத்தையும் கபாலத்தையும் கரங்களிலேந்தியவராயும், இருகரங்களும் மூன்று கண்களும் பிரஸன்ன முகமும் உள்ளவராயும் விளங்கினர். பராசக்தியும் சந்திர காந்திபோல் சீதளமான ஆக்ருதியுள்ளவளாய் ஜபமாலையும் புஸ்தகமும் கரத்திலேந்திய வடிவத்தோடு தேவர்களுக்குக் காக்ஷியளித்தனள். எல்லோருக்கும் மூலகாரணர்களாய் கருணாமூர்த்திகளாயுள்ள பராசக்தியும் சம்புநாதருமான தம்பதிகள் அமரர்களுக்குத் தர்சந உத்ஸவத்தைத் தந்தனர்.

பண்டவதோபாயம்.

புன்னகை பூண்ட மஹாசம்புநாதர் தேவர்களைப் பார்த்துக் கூறினர்:—

மஹாசம்பு :—உங்கள் வரவையும் நீங்கள் பிறரால் பீடிக்கப்பட்டதையும் அறிவேன்; பண்டனது துஷ்டச் செயலையுமறிவேன். உலகை யொடுக்கக் கூடிய பிரளயங்கள் மஹாப்பிரளயம், காமப்பிரளயம், அவாந்தரப் பிரளயம் என மூன்று வகைப்படும். இவைகள் பிரதி அண்டங்களிலும் பிரதி கல்பங்களிலும் தோன்றுகின்றன. மஹாப்பிரளயத்திலிருந்து காப்பாற்றுபவன் நான்; அவாந்தரப் பிரளயத்திலிருந்து காப்பாற்றுபவர் சதுர்முகன்; காமப் பிரளயத்திலிருந்து காப்பாற்றுபவள் ஸ்ரீலலிதா பரமேஸ்வரி. ஒவ்வொரு அண்டத்திலும் ஒவ்வொரு கல்பத்திலும் அவள் தோன்றுகிறாள். இப்போது தோன்றியது காமனை அடக்கும் காமிகப் பிரளயமாம். எனது தம்சமான மஹேசனால் மன்மதன் தஹிக்கப்பட்டான். அச்சாம்பலிலிருந்து தோன்றிய பண்டன் முதலியவர்கள் சராசரமான ஸமஸ்த ஜகத்தையும் சாகாப் பிணமாகச் செய்துவிட்டார்கள். ஆதலின் உலகை ஒரு லலிதாதேவி தோன்றி, மறுபடியும் சிருஷ்டிப்பாள். அவளையே உபாஸியுங்கள்.

தேவர்கள் :—அந்த மஹாதேவி எப்படி உண்டாவாள்? ஓசம்புநாதரே! எதனால் எந்த இடத்திலிருந்து ஸ்ரீ லலிதை உண்டாவாள்? ஸ்பஷ்டமாகக் கூறுங்கள்! பரமேஸ்வர! நீரே எல்லா உபாயங்களையும் நன்கு உணர்ந்தவர்!

மஹாசம்பு :—தேவர்களே! தேவி உண்டாவதற்கும் மற்ற சகலகார்யங்களும் ஸித்திப்பதற்கும் தக்க உபாயத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்! மஹா ஹோமவிதியைத் தழுவி ஒரு மஹாயாகஞ் செய்யவேண்டும். அதற்கு யான் வாயு ரூபனாகி ஹோதாவாக இருக்கிறேன். எனது சிதக்னியே யாகாக்னியாகும். ஸாமான்யாக்னி அங்கு அக்னியாக இருக்கட்டும். ஸர்வ ஜலமும் சுஷ்கமானபின் ஏழாவது கடல் யாககுண்டமாக இருக்கட்டும். மற்ற ஆறு கடல்களும் அபிகாரமாக இருக்கட்டும். ஐந்து ஸ்ருஷ்டிகளும் யாகபசுக்களாக இருக்கட்டும். மானஸீ ஸ்ருஷ்டி, ஜராயுஜம் (ஜரை என்னும் கருப்பையிலிருந்து நேராகப் பிறப்பவை),

அண்டஜம் (முட்டை மூலமாகப் பிறப்பவை), ஸ்வேதஜம் (வேர்வையால் தோன்றுபவை), உத்பிஜ்ஜம் (பூமியிலிருந்து தோன்றுபவை) ஆகிய ஐவகை ஸ்ருஷ்டிகளான இவைகள் புரோடாசங்களாகும். இவற்றிற் சேராத பூமி மலை ஜலம் காற்று மேகம் இவைகள் ஹோமத்திரவியங்களாகும். அக்னி எனது சிதக்னியுடன் சேரட்டும். இத்தகைய மஹா யாகத்தில் அக்னிஜ்வலிக்கும் போது என்னிடமுள்ள பக்தியினால் தூண்டபபட்ட நீங்களனைவரும் பிரயத்தனத் துடன் அவ்வக்னியில் விழவேண்டும். எல்லா வஸ்துக்களும் ஹோமஞ் செய்யப்பட்டபின் மேலுங் கீழும் நாற்புறங் களிலும் ஜ்வலிக்கும் அந்த அக்னியிலிருந்து ஸ்ரீ சக்கரமெனும் திவ்விய ரதத்திலமர்ந்து கோடி மின்னல் போல் பிரகாச முள்ளவளும் அழகு வடிவமானவளுமான ஸ்ரீ லலிதா பரமேஶ்வரி தோன்றுவாள். உலகைப் படைக்க விரும்பிய அவள் தனது உடலிலிருந்து ஒரு புருஷனைத் தோற்று விப்பாள். அவரே காமேஶ்வரரெனும் லலிதா தேவியின் கணவராவர்.

அவ்விருவர்களாலும் உலகம் முன்னைவிட வெகு அழகாகப் படைக்கப்படும். காமனை உஜ்ஜீவிக்கும் விஷயத்தில் அவள் ஜாகரூகையாக இருந்து கரும்புவில், ஐந்து புஷ்ப பாணங்கள், பாசம் (மஹாஶ்ருணி), அங்குஶம் ஆகிய நால் வகை ஆயுதங்களையும் படைத்து அவைகளால் பண்டா ஸுரனைக் கொல்லப்போகிறாள். கடாக்ஷ வீக்ஷணத்தால் காமனைப் படைப்பாள். அன்றியும் சிதக்னியில் உடலை ஹோமம் செய்த உங்களுக்கும் அழகிய வேறு உடலை யளிப்பாள். ஆதலின் இத்தகைய யாகத்தைச் செய்ய உங்களுக்கு ஸம்மத முண்டாயின் யான் அதைச் செய்ய முயலுகிறேன். இல்லையேல் உங்களிடமிருந்து பலத்தை யிழுத்த அஸுரன், பிராணனை மாத்திரம் வைத்துள்ள உங்களை எளிதில் கொல்வான். பின்னர் பிழைக்கும் வழியைப் பேசுவதற்கே இடமில்லை. ஆதலால் மஹா யாகத்தைச் செய்ய வேண்டிய முயற்சியைச் செய்யுங்கள்.

இங்ஙனம் மஹாசம்புநாதர் கூறியதைக் கேட்டு மிக மிக ஸந்தோஷமடைந்த வானவர்கள் பல முறை அவரைப் பணிந்து போற்றி "அப்படியே ஆகட்டும்; உமது விருப்பின் படி செய்கிறோம். அதில் என்ன ஆக்ஷேபம்? சிதக்னியில் ஹவ்ய மாகி நாங்கள் கிருதார்த்தர்களாவோம். உமது சிதக்னி யில் இவ்வுடலைவிட்டு நூதனமான வேறுஉடலைப்பெறுகிறோம். இவ் வேள்வியில் என்ன செய்ய வேண்டுமோ அதை ஹோதாவான தாங்களே செய்புங்கள். நாங்களொன்றையும் அறியோம். ஹிதமானதைத் தாங்களே செய்புங்கள்" என்று அமரர் கூறிய பின் பராசக்தியுடன் மஹா சம்புநாதர் மறைந்தனர். பரம ஸந்தோஷமடைந்த தேவர்கள் முன்னர் திக் கஜங்களால் இடிக்கப்பட்ட துவாரத்தின் வழியாகத் திரும்பி வந்து பெரும் பர்வதங்களால் அவ்வழியை அடைத்து மஹாயாகத்தையே நினைத்துக்கொண்டு தத்த மிருப்பிடஞ் சென்றனர். மஹாசம்பு உலக நன்மையை நாடிப் பரா சக்தியுடன் கூட அண்டத்திற்கு வெளியில் சிதாகாசமய மான ஞான கிரஹத்திலிருந்து ஸூக்ஷ்மரூபியாய் அண்டத் திற்குள் நுழைந்தனர்.

இந்திரன் முதலியோர் விஷ்ணுவினிடம் செல்லுதல், மஹாசம்பு ஸ்துதி, பண்டவதோபாயம் இவைகளடங்கிய அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 98)

மஹாயாகம்

அகஸ்தியர்:—மஹாப்ராக்ஞரான ஹயக்ரீவரே! விசித் திரமான யாககதையை ஆரம்பித்தீர்; அது எத்தகையது? என்ன பயனுள்ளது? உலகிற்கெல்லாம் பிரியமானஅதைக் கேட்க மிக ஆவலுள்ளவனாக இருக்கின்றேன். விஸ்தார மாகக் கூறுவீராக!

ஹயக்ரீவர்:—படித்தவர்களது பாபத்தை யகற்று வதும், கேட்டவர்களது மலத்தை நீக்குவதுமான அதைக் கூறுகிறேன்; கேள்! இதைப்பலமுறை கேட்டாலும் படித்

தாலும் ஸகலஸித்திகளுமுண்டாவதுடன் முடிவில் பிரஹ்மா நந்தத்தையுமளிக்கும். ஒரு முறை இதைச் சிரத்தையுடன் கேட்டால் ஆயிரம் ராஜஸூய யாகபலனை அளிக்கும்.

மஹாசம்புநாதர் அண்டத்துள் நுழைந்து அந்த யாகத்தில் ஹோதாவாக அமர்ந்தார். பராசக்தி யக்ஞபத்னி யாக அமர்ந்தாள். தனது ஆத்மஸ்வரூபமாயுள்ள ஸ்ரீ லலிதாம்பிகையின் மஹாவித்யையை உச்சரித்துக்கொண்டு ஏழுபிரிவுள்ள வாயுவாகத் தன்னுடலை மாற்றிக்கொண்டார். பராசக்தி அவரது கிரியாசக்தியாக மாறினாள். பிரபலையான தேவியுடன் கூடிய மஹாசம்பு வாயுரூபியாயிருந்து மூவ்வுலகி லும் வீசினார். அதனால் மூவ்வுலகும் நடுங்க, தேவர்கள் மஹாயாகததிற்கு ஆரம்பமாகி விட்டதென மகிழ்ந்தார்கள். சுத்தஜலமுள்ள ஏழாவது கடலை யாககுண்டத்திற்காக பகவான் தன்தேஜஸினால் உலர்த்தினார். அது அதிதீர்க்க மாயும் பாதாளவரை ஆழமுள்ள தாயுமிருந்தது. அந்த சமுத்திரத்திரத்தின் பள்ளத்தை யாககுண்டமாக்கி உலகி லுள்ள செடி கொடிகளனைத்தையும் ஒன்று சேர்த்து நான்கு கூறுகப்பிரித்து ஓரம்சத்தை அக்குண்டத்திலமைத்து ஸிம் ஹாஸன மஹாவித்யையை ஜபித்துக்கொண்டு ஓர் ஹூங் காரம் செய்தார். அந்த கோரமான ஹூங்காரத்தினால் விருத்தி செய்யப்பட்டு மூலாதாரத்திலிருந்து பிரஹ்ம ரந்திரம் வரையிலுள்ள சிதக்னியானது ஜ்வலித்தது. அந்தச் சிதக்னியை நெற்றிக்கண் மூலமாய் வாமதேவர் வெளிப் படுத்த அது குண்டத்தில் வீழ்ந்து மிகப் பிரகாசமாய் ஜ்வாலையுடன் ஜ்வலித்தது. இங்ஙனம் வித்யையினால் சுத்த மான சிதக்னியைப்* பிரணயநம் செய்து நக்ஷத்திர மயமான புஷ்பங்களால் குண்டத்தை நாற்புறங்களிலும் அலங் கரித்தனர்.

---

* பிரணயநம் விதிப்படி மந்த்ரத்துடன் அக்நியை குண் டத்தில் வைப்பது.

அந்தக் குண்டத்தில் மஹாசம்பு முதலில் அக்நியினது எட்டுச் சரீரங்களையும் ஸங்கல்பம் செய்து பூஜித்தனர். பிறகு ஆறு அக்கினிமூர்த்திகளையும், நடுவில் மூன்று மூர்த்திகளையும் பூஜித்து அக்நி ஸம்ஸ்காரத்தைச் செய்தனர். ஜாதவேதஸ், ஸப்தஜிஹ்வர், ஹவ்யவாஹநர், அஶ்வோதரர், வைஶ்வாநரர், கௌமாரதேஜஸ் விஶ்வேதேவமுகர், பூதி என்பன அக்நியின் அஷ்டமூர்த்திகளாம். ஸஹஸ்ரார்ச்சிஸ், ஸவஸ்திபூர்ணர், உத்திஷ்ட புருஷர், தூமவ்யாபீ, ஸப்த ஜிஹ்வர், தநுர்த்தரர் என்பவர் ஆறு மூர்த்திகளாம். வைஶ்வாநரர், உத்திஷ்டபுருஷர், சித்பிங்களர் என மும்மூர்த்திகளாம், பின்னர், சிதக்னியினது ஏழு நாக்குகளையும், மஹாசம்பு பூஜித்தனர். ஹிரண்யா, கநகா, ரக்தா, க்ருஷ்ணு, ஸுப்ரபா, அதிரக்தா, பஹுரூபா என்பன ஏழு நாக்குகளாகும். பின்பு புஷ்களம், ஆவர்த்தகமென்னும் இரண்டு பெரிய மேகங்களாகிற கரண்டிகளைக்கொண்டும், நெய் ஸமுத்திரத்திலிருந்து நெய்யை மொண்டு சிதக்னியில் சிவன் ஹோமம் செய்தார். சம்புராஜரெனும் காற்றினல் தூண்டப்பட்ட புஷ்களாவர்த்தகங்கள் நெய் ஸமுத்திரமனைத்தையும் அருந்திவிட்டன. ஞானக்னியில் ஆயிரக்கணக்காய், லக்ஷக்கணக்காய், கோடிக்கணக்காய் ஆஜ்யதாரைகள் குண்டத்தில் விழ, அக்னி நூறுயோஜனை உயரம் கொழுந்துவிட்டெரிந்தது. மறுபடியும் செடிகொடிகளின் மற்ருேர் கால்பாகத்தைச் சம்புநாதர் அந்த அக்னிகுண்டத்திலிட்டு, தயிர்க்கடலைப் புஷ்கலாவர்த்தக் கரண்டியால் ஹோமம் செய்தனர். சிதக்னி இருநூறுயோஜனை உயரம் ஜ்வாலையுடன் எழும்பியது. மறுபடியும் செடிகொடிகளின் மூன்ருவது பகுதியை ஸமித்துக்களாகக் குண்டத்திலிட்டு, சிவன் கருப்பஞ்சாற்றுக் கடலை ஹோமம் செய்தனன். அதனல் மதங்கொண்டு கூத்தாடுவதுபோல் அவ்வக்னி முந்நூறு யோஜனை உயரம் எரிந்தது. பிறகு முன்போலவே மத்ய (மது) ஸமுத்திரத்தையுமவர் ஹோமஞ் செய்தனர். அதனல் மதங்கொண்டவர்போல் சிதக்னி நாநூறு யோஜனை உயரம் ஜ்வாலையுடன் பிரகாசித்தனர்.

மிருந்துள்ள செடிகொடிக் குவியல் எல்லாவற்றையும் தீயிலிட்டு உப்புக்கடலை ஹோமம் செய்தனர். அதனால் அக்னியில் சடசட என்னும் பெருஞ்சப்தம் தோன்றிற்று. பண்டாஸுரன் முதலியவர்களது மனம் அதைக்கேட்டு நடுங்கிற்று. அங்ஙனமே பாற்கடலையும் ஹோமம் செய்யும் போது சிவனது அட்டஹாஸம் போலும் ஸ்படிகமலையின் பிளவுபோலும் அக்னி மிக்க வெண்மைநிறத்துடன் பிரகாசித்தனர். இங்ஙனம் ஸகல ஸமுத்திரங்களேம் ஹோமஞ் செய்து, ஸ்தலம் மாத்திரம் பாக்கி நிற்கச் சம்பு மற்றப் பிராணிகளையும் ஹோமஞ்செய்ய ஆரம்பித்தனர். தனது சக்தியின் ஏகதேசத்தினுல் பூமியைச் சுமந்து, வாயுரூபியாய்ச் சிவன் ஆதிசேஷன் முதலியவர்களை இழுத்தார். சிரோமணிகள் பிரகாசிக்கப் பத்தாஞ்ஜலிபுடர்களாய் ஆகாயத்தை அலங்கரித்துக்கொண்டு ஸந்தோஷத்துடன் தக்ஷன், கார்க்கோடகன் முதலியவர்கள் சிதக்னியில் வீழ்ந்தனர். இங்ஙனம் எட்டு மஹாநாகங்களை ஹோமஞ்செய்து எட்டுத் திக்கஜங்களையும் ஹோமஞ்செய்ய ஆரம்பித்தார். அவைகளும் மிகஸந்தோஷத்துடன் தாமரைத் தடாகத்திலிறங்குவது போல் சிதக்னியில் இறங்கின. பிறகு பாரதவர்ஷத்திலுள்ள ராஜாக்களுடன் மற்ற மனிதர்களையும் பத்ராஶ்வவர்ஷத்திலுள்ளோரையும் உத்தர குருதேசத்திலுள்ளோரையும் கிழக்கு, வடக்கு முதலிய திக்கிலுள்ளோரையும் மத்திய தேசத்திலுள்ளோரையும், பல த்வீபங்களிலும் பல தேசங்களிலும் உள்ளவர்களையும் ஹோமம் செய்தார். இங்ஙனம் ரஸாதலமிரண்டிலும் நாகரும் மனிதரும் மிகுதியில்லாமல் ஹோமம் செய்யபபட்டபோது ஜ்யோதிஸ் சக்கரத்திலுள்ள கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், முதலிய உலகிற்குப் பிரகாசமளிப்பவர்களான தேஜஸ் சரீரம் வாய்ந்தவர்களையும் ஹோமம் செய்தார்.

பிறகு சக்ரன் முதலிய தேவர்களும், அக்னி முதலிய திக்பாலகர்களும், அஸுரர், கந்தர்வர், சாரணர், குஹ்யகர், கின்னரர், கிம்புருஷர், ஸாத்யர், ஸித்தர் முதலிய தேவ வகுப்

பைச் சார்ந்த அனைவரும் பரம ஸந்தோஷத்துடன் ஸ்நானம் செய்து சுத்தமான ஆடை ஆபரணங்களை அணிந்து பத்தாஞ் சலி புடர்களாய் மலர்ந்த முகத்துடன் தம் தமது வாஹனங் களுடனும், ஆயுதங்களுடனும்கூடப் பண்டனால் கெடுக்கப்பட் உடலைவிடக் கருதி சிதக்னியி லிறங்கினார்கள. துவாத சாதித் யர்கள், அஷ்டவஸுக்கள், அஸ்விநிதேவர்கள், பித்ருதேவர் கள், சந்திரசூடர்களான ஏகாதச ருத்திரர்கள், கண நாயகர் களனைவரும் தத்தம் பரிவாரங்களுடன் அக்நியில் வீழ்ந்தனர். ஸநகாதி யோகிகளுடன் விஷ்வக்ஸேநர் முதலிய கிங்கரர் களுடனும், தங்களாயுதங்களுடனும், மஹாலக்ஷ்மியுடனும், பூதேவியுடனும், மந்தஹாஸராய் மஹாவிஷ்ணு தாண்டவ மாடும் ஞானக்னியில் உலக க்ஷேமத்திற்காகப் புகுந்தனர். நந்தி, ப்ருங்கி, மஹாகாளர் முதலிய கணத்தலைவர்களுடன் கூடக் கறுத்த கழுத்துள்ளவராய், சந்திரசூடராய் கங்காதர ராய் நாக ஆபரணமுள்ளவராய் உடலெல்லாம் விபூதி அணிந்த வராய் தன்னைப்போலவே சிரஸும், அங்கங்களும் உடைய வராய் விளங்கும் சிவன் சம்புநாதரால் காட்டப்பட்டவராய்ச் சிதக்னியில் புகுந்தார்.

பிரஹ்மாவினால் தூண்டப்பட்ட அறுபத்தாறுகோடி அப்ஸரஸ்ஸுகளும் சிதக்னியில் வீழ்ந்தனர். தாரகன் பண்டன் முதலிய அஸுரர்கள் இந்நகர்மாவை நிந்தித்துக் கொண்டு மதோன்மத்தர்களாய்ப் பேசாமலிருந்தனர்.

பிறகு பிரஹ்மா தனக்குச்சமமான மரீசி முதலியவர் களுடனும், மற்ற ஸத்யலோக வாஸிகளான தபஸ்விகளுடனும் ஸந்தோஷமாய் நான்குமுகங்களாலும் ஸ்தோத்திரம் செய்து கொண்டு காயத்ரீ ஸாவித்ரீ ஸரஸ்வதீ என்ற மூன்று சக்தி களுடனும் தனது வாஹநமும் அதன் ஸந்ததிகளும் பின் தொடர மஹாஜ்வாலையுடன் பிரகாசிக்கும் சிதக்னியில் தன்னுடலை ஹோமஞ்செய்தார். மஹாசம்பு எனும் மாந்த்ரிகர் இங்ஙனம், மாநஸிகம், ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், என்ற நால்வகை ஸ்ருஷ்டிகளையும் ஹோமம் செய்த பின்னர்

கேவல பூமியும் மரமில்லாதமலைகளும் வாயு வடிவனான மஹாசம்புநாதருமே மிகுதியாயிருந்தனர். ஸகலதர்சநங்களும், சாஸ்த்ரங்களும், பலவகையான மதங்களும்கூட ஹோமஞ் செய்யப்பட்டபோது அக்னி மேலே உள்ள அண்டச்சுவர்வரையில் எரிந்தது. நித்யஹோதாவாய்ச் சின்மயனுள்ள மஹாசம்பு இங்ஙனம் ஸகல ஹோமங்களையும் முடித்துவிட்டுப் பராசக்தியுடன்கூட தனது ஸ்வபாவ சரீரத்தைப் பெற்றார். அவ்வாயு சரீரத்தை விட்டுப் பிறகு கீழ்க்கண்டபடி சிதக்னியில் ஹோமம் செய்தார்.

காரிகாஷ்டகம்

ஹே! விஸ்வரூபமுள்ளவளே! எல்லாமாயுள்ளவளே! உலகிற்கு ஒரே நாயகியே! லலிதா பரமேசானீ! சிதக்னியினின்று தோன்றுவாய். ஆநந்தவடிவே! ஜகத்திற்கு ஆநந்தமளிப்பவளே! லலிதா—தோன்றுவாய். அறிவாளியாயும் அறிவாயும் அறியப்படுபவளாயு முள்ளவளே! மஹாக்ஞானத்தைப் பிரகாசப்படுத்துபவளே! லலிதா—தோன்றுவாய். உலகை ஒடுக்குவதில் ரஸமுள்ளவளே! காளி! பத்ரகாளி! லலிதா—தோன்றுவாய். உலகைக்காப்பதில் ஆசையுள்ளவளே! மங்களே! ஸர்வ மங்களே! லலிதா—தோன்றுவாய். உலகை ஸ்ருஷ்டிப்பவளே! விச்வநாதே! விசாலமானவளே! லலிதா—தோன்றுவாய். சிதக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஸமஸ்தமான ஸ்ருஷ்டிகளாலும் ஸம்பாதிக்கப்பட்ட சரீரமுள்ளவளே! லலிதா—தோன்றுவாய். பண்டன் தாரகன் முதலியவர்களால் துன்பப்படுத்தப்பட்ட ஸத்துக்களின் ஸந்தோஷத்தின் பொருட்டு ஓ லலிதா பரமேசானீ! சிதக்னியிலிருந்து தோன்றுவாய். இங்ஙனம் சம்புநாதரால் ஹோமம்செய்யப்பட்ட சிதக்னியிலிருந்து ஸாக்ஷாத் லலிதா பரமேச்வரீ தோன்றினாள்.

நூறுயோஜனை தூரம் விசாலமானதும், பத்துயோஜனை தூரம் உயரமுள்ளதும், ஒன்பது பர்வாக்களுடன் கூடியதும்,

தேஜோமயமான ஆகாரமுள்ளதும், நான்கு வேதங்களைச் சக்ரமாக உடையதும், நான்கு புருஷார்த்தங்களைக் குதிரையாகக்கொண்டதும், ஆநந்தத் துவஜமுள்ளதும், ஸ்வர்ணம் போல் ப்ரகாசிப்பதும், எல்லாவற்றிற்கும் மேலே பிரஹ்மஸ்வரூபமாய் விளங்கும் பிந்துபீடத்தோடு கூடியதும், மேருப்ரஸ்தாரரூபமுள்ளதுமான சக்ரராஜமெனும் ரதத்திலமர்ந்த தேவி முதலில் தான் மாத்திரம் தோன்றினள். பின்னர் உலகைப் படைக்கக் கருதி தனதுபுருஷரூபமான ஸ்ரீ காமேச்வரரைப் படைத்து லோகக்ஷேமார்த்தம் அவரைப் பதியாகக் கொண்டனள். அவரால் ஆலிங்கனம் செய்துகொள்ளப்பட்ட தேவி இச்சாமாத்திரத்தினல் பாசம் அங்குசம் கரும்புவில், பாணம் என்னும் நான்கு திவ்யாஸ்த்ரங்களைப் படைத்துத் தன் கரத்திலேந்தினள்.

ஆயிரம் ஸூர்யனைப்போன்ற காந்தியுள்ளவளும் அர்த்த சந்த்ரனைச் சிரஸிலணிந்தவளும் குசபாரத்தினல் சிறிது சோம்பலுள்வள்போலிருப்பவளும், ஸதா பதினறு வயதுள்ளவளும், சிரித்தமுகமுள்ளவளும், ஸகல ஆபரணங்களையும் பூண்டு மிக அழகாக உள்ளவளும், மூவுலகையும் அமிருத கடாக்ஷத்தினல் நனைப்பவளுமான ஸ்ரீதேவி மஹா சம்புவினல் தர்சிக்கப்பட்டாள். கருத்து நிறைந்ததும் வேதத்தின் அர்த்தமாயுமுள்ள துதிகளால் சம்பு, தேவியைத் துதித்து வேண்டினர். லலிதா தேவி தன்னையே பிரஹ்மாதி தேவர்களாகவும் ஸரஸ்வதி முதலிய தேவிகளாகவும் செய்யக் கருதினள். சந்த்ர ஸ்வரூபமான இடது கண்ணிலிருந்து பிருஹ்மாவையும் லக்ஷ்மியையும், சூர்யவடிவமான வலது நேத்ரத்திலிருந்து விஷ்ணுவையும் பார்வதீ தேவியையும் அக்நிமயமான நெற்றிக்கண்ணிலிருந்து ருத்ரனையும் ஸரஸ்வதியையும் படைத்தனள். பிரஹ்மாவும் லக்ஷ்மியும் மின்னல் போன்ற வர்ணமுள்ளவர்கள். விஷ்ணுவும் கௌரியும் மேக நிறமுள்ளவர்கள். சிவனும் ஸரஸ்வதியும் வெண்ணிற முள்ளவர்கள். அவர்களைமாற்றி விஷ்ணுவுக்கு லக்ஷ்மியையும், சிவனுக்குக் கௌரியையும், பிரஹ்மாவுக்கு ஸரஸ்வதியையும்

பத்நிகளாகக் கொடுத்தனள். பத்நிகளுடன் பணிந்து நிற்கும் ஹரிஹரப்பிரஹ்மர்களைப் பார்த்துத் தேவி உலகைப்படைத்துப் பரிபாலித்து உபஸம்ஹாரம் செய்யும்படி உத்தரவிட்டனள். லலிதாதேவியின் முதல் ஸ்ருஷ்டியான மூவர்களும் புதிய உடலைப் பெற்றுத் தத்தம் லோகங்களுக்குச் சென்றனர். ஸ்ரீ லலிதாதேவி தோன்றியதால் உலகே புதிதாகத் தோன்றியதுபோல் விளங்கிற்று.

மஹாயாகம், ஸ்ரீலலிதையின் பிராதுர்ப்பாவம் இவைகளைக் கூறும் அத்தியாயம் முற்றிற்று. (சுலோகங்கள் 105.)

ஸ்ரீலலிதாம்பாள் இயற்றிய ஜகத்ஸ்ருஷ்டியைக் கூறுதல்

அகஸ்தியர் :—ஹயக்ரீவரே! மஹாயாக விதானமானது அடியேனால் கேட்கப்பட்டது. ஸ்ரீலலிதாம்பாள் இயற்றிய சிருஷ்டியைப்பற்றி அறிய விரும்புகிறேன். தயைபுரிந்து உரைப்பீராக!

ஹயக்ரீவர் :—சிதக்னி குண்டத்திலிருந்து ஆவிர்ப்பவித்த ஸ்ரீலலிதாதேவியானவள் கீழ்க்கூறப்பட்ட விதமாக ஸகல ஜகத்தையும் சிருஷ்டித்தனள். தன் அளகபாரத்திலிருந்து இருட்டென்னும் அக்ஞானத்தையும், மூன்று கண்களிலிருந்து ஸூர்ய, சந்த்ர, அக்னிகளையும், நெற்றி முத்துக்களிலிருந்து நக்ஷத்திர கணங்களையும், பாளீவதம் ஸமுத்துக்களிலிருந்து நவக்கிரஹங்களையும் சிருஷ்டித்தனள். ஆக்ஞாசக்ரத்திலிருந்து தண்ட நீதியும், புருவத்திலிருந்து பிரபஞ்சசக்ரமும் சிருஷ்டிக்கப்பட்டன. மூச்சுக்காற்றே சதுர் வேதங்களாய் விளங்கின. இனிய மொழிகளே காவ்ய நாடக அலங்கார சாஸ்திரங்களாகும். நாக்கிலிருந்து ஸரஸ்வதியும், சுபுகத்திலிருந்து வேத ஷடங்கங்களும், கழுத்தின் மேல் ரேகையிலிருந்து மீமாம்ஸை, நியாயம், புராணாதிகளும், மத்திய ரேகையிலிருந்து ஆயுர் வேதமும் தநுர்வேதமும்,

கீழ் ரேகையிலிருந்து ஸங்கீத சில்ப சாஸ்திரங்களும் தோன்றின. அறுபத்து நான்கு கலைகளும் கழுத்துக் கூபத்தினின்றும் தோன்றின. தோள்களினின்று சந்தஸ் சாஸ்திரமும், ஹஸ்த மூலங்களில் மதன (களா) சாஸ்த்திரமும் தோன்றின. அஷ்டகுல பர்வதங்கள் ஸ்தனங்களிலிருந்தும், பார்ஶ்வங்களிலிருந்து எல்லாத்திசைகளும் அந்தரிக்ஷமும் சிருஷ்டிக்கப்பட்டன. மனத்தினால் ஆநந்த சக்தியும், கைகளால் அஷ்ட பாசங்களும், ரோமாவளியினால் சேஷன் முதலிய ஸர்ப்பராஜாக்களும், கைவிரல்களிலிருந்து மன்மதனது பஞ்சபாணங்களும், கைவிரல்களின் நகநுனியிலிருந்து மத்ஸ்ய கூர்மாதி தசாவதாரங்களும், கைகளின் சிவப்பு நிறத்திலிருந்து காலை மாலைச்சந்திகளும், முகத்திலிருந்து இந்த்ராக்னிகளும், பிராணனினின்று வாயுவும், நாபியினின்று அந்தரிக்ஷமும் சிரஸ்ஸினின்று ஸ்வர்க்கமும் தோன்றின. பாதங்களினின்று பூமியும், பார்வையிலிருந்து தர்மாதர்மங்களும், புன் சிரிப்பிலிருந்து பரமாநந்தமும், சிருஷ்டிக்கப்பட்டன. பின், புருஷன், ப்ரக்ருதி, மஹத்தத்துவம், அஹங்காரம், தன்மாத்திரைகள், பஞ்சபூதங்கள் முறையே நாபிருண்டம், நாபிமூலம், புட்டம், துடை மூலம், முழங்கால், கணுக்கால்களினின்றும் தோன்றின.

குதிக்காலிலிருந்து ஸப்த ஸமுத்திரங்களும் புறங்காலிலிருந்து சக்ரவாளகிரியும், உள்ளங்காலிலிருந்து ரஸாதல லோகமும் சிருஷ்டிக்கப்பட்டன. இங்ஙனமே பசுக்கள் முதலியனவும், பிரஹ்ம க்ஷத்ரியாதி நான்கு வர்ணங்களும், விருக்ஷ ஜாதிகளும், ஸ்வேதஜங்களும், ஜராயுஜாதிகளும சிருஷ்டிக்கப்பட்டன. பின்னர், கீர்த்தி, புஷ்டி, காந்தி முதலியனவும் உண்டாக்கப்பட்டன.

சக்தி ஸமூஹ சிருஷ்டி.

பின் லலிதாதேவி தன் ஹிருதயத்திலிருந்து பராம்பாளையும், புத்தியிலிருந்து ஶ்யாமளாதேவியையும், அஹங்காரத்தினின்று மஹாவாராஹீ தேவியையும், புன்சிரிப்பி

லிருந்து விக்னேஶ்வரரையும் தோற்றுவித்தனள். அவளுடைய மூலாதாராதி ஆறுசக்ரங்களே ஷடாம்நாய தேவதைகளாய் விளங்கினர்கள். லலிதையின் விளையாட்டே பாலாவாகும். பரதேவதையின் அங்குசத்திலிருந்து ஸம்பத்கரியும், பாசத்தினின்று அஶ்வாரூடையும், தாலு தேசத்திலிருந்து நகுலியும், குண்டலினீ சக்தியின் கிரணங்களிலிருந்து காயத்ரீ முதலிய ஸமஸ்த ரஶ்மிமாலா தேவதைகளும் தோன்றினர். அன்றியும், பரதேவதையின் துவக், ரக்தம் முதலிய ஸப்ததாதுக்களிலிருந்து தேவதைகளும், தேவஜாதிகளும் திர்யக்கணங்களும், பிராணசக்தியும், பலமும், ஐஶ்வர்யம், நன்மதிப்பு முதலியவையும் தோன்றின.

மற்றும் உள்ளங்கால் முதல் சிரஸ்வரையுள்ள பதினான்கு ஸ்தானங்களிலிருந்தும் மஹாபாதாளம் முதல் ஸத்ய லோகம் வரையிலுள்ள பதினான்கு லோகங்களும் சிருஷ்டிக்கப்பட்டன. இதன்பின் ஸ்ரீசக்ரரதத்தில் விளங்கும் த்ரைலோக்ய மோஹனம் முதல் ஒன்பது சக்ரங்களிலுள்ள ஆவரண தேவதைகளும் அந்த அந்த சக்ரேஶ்வரிகளும் ஸ்ரீலலிதா தேவியின் மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை, பிரஹ்மரந்த்ரம், துவாதசாந்தம், தேவியின் ஆநந்தக்கடல் என்பனவற்றினின்றும் ஆவிர்ப்பவித்தனர். பின் லலிதை தன் ஹிருதயாகாசத்தினின்றும் ஸ்ரீமார்த்தாண்ட பைரவனையும், திதிசக்ரத்தையும், ஷோடச நித்யைகளையும், அங்க தேவிகளையும், ஆயுத தேவதைகளையும், சிருஷ்டித்தனள். இங்ஙனம் சக்திசக்ரத்தைச் சிருஷ்டி செய்து விட்டுப் பரதேவதையானவள் தனது நாதனுகும் காமேஶ்வரரைச் சிவசக்ரத்தைச் சிருஷ்டிக்கும்படி வேண்டினள்.

உடனே காமேஶ்வரர், தனது முக ஹுங்காரத்தினல் திவ்யம், ஸித்தம், மானவம் என்று கூறப்பட்ட மூன்று குரு பங்க்திகளைத் தோற்றுவித்தனர். இங்ஙனம் காம காமேஶ்வரிகள் சிவசக்தி மயமான நாதக் கூட்டத்தையும் சக்திக்

கூட்டத்தையும் சிருஷ்டித்து, ஸர்வாநந்தமய ஸ்வரூப பிந்து பீடத்தில் வீற்றிருந்த ஶ்யாமளாதேவியை மந்த்ரிணியாகவும், வாராஹீ தேவியை ஸேநாநீயாகவும் ஏற்படுத்தி அவர்களுக்கு முறையே கேயசக்ர, கிரிசக்ரங்களென்னும் இரண்டு ரதங்களை யருளி லலிதை பண்டாஸுரவதத்தின் பொருட்டுப் புறப்பட்டனள். புறப்படும்போது பண்டன் மீது கோவித்து ஒரு ஹுங்காரம் செய்தனள். அதினின்று அறுபத்துநான்கு கோடி யோகினிகளும் பைரவர்களும் தோன்றினர். மற்றும் எண்ணிறந்த சக்திக்கூட்டங்களும் தோன்றின. இங்ஙனம் தோன்றிய ஸமஸ்த சக்தி ஸமூஹங்களும் கரங்களைச் சிரஸில் குவித்துப் பரதேவதையைத் தரிசித்து நிற்பதை அம்பாள் நோக்கி உத்ஸாஹத்தோடும் திருப்தியோடும் விளங்கினள்.

ஸ்ரீலலிதாதேவி இயற்றிய ஜகத்ஸிருஷ்டியைக் கூறும் அத்தியாயச் சுருக்கம் முற்றிற்று.

இதன்பின் காணப்படும் கதைகளனைத்தும் பெரும்பாலும் மற்றப்பதிப்புகளுடன் ஒத்திருக்கின்றன.

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:
சுபமஸ்து.

புத்தக விளம்பரம்

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபை
அக்ராஸனரும், ஸ்தாபகருமாகிய
பிரஹ்மஸ்ரீ ந. சுப்ரமணிய அய்யர் அவர்கள்
எழுதிய புத்தகங்கள்.

1. श्रीविद्यासपर्यापद्धतिः ஸ்ரீவித்யா ஸபர்யா பத்ததி.
ஸ்ரீசக்ரநவாவரண பூஜாவிதானமும், ஹோமம், நாமாவளிகள், ஸூக்தங்கள், 4 தேவி உபநிஷத்துக்களுடன் சுமார் 20 படங்களோடு உயர்ந்த கிளேஸ் பேபரில் அச்சிடப்பட்டது. சாதா பைண்டு ... 2 0 0
ஒரு பக்கம் அச்சிடப்பட்டது ,, ... 3 0 0
ஷை காலிகோ பைண்டு ... 3 8 0

2. ஸ்ரீவித்யாஸபர்யாவாஸனை. (தமிழ்)
ஸ்ரீவித்யாஸபர்யாபத்ததியின் அத்வைத வியாக்கியானமாயுள்ளது. இதுவரையிலும் எந்த பாஷையிலும் வெளிவராத நூல். ... 3 0 0

3. Sree Vidya Saparya Vasana ... 3 0 0
(English Translation to the above)

4. ஸ்ரீவரிவஸ்யா ரஹஸ்யம். (மூலமும் தமிழ்விரிவுரையும்)
ஸ்ரீபாஸ்கரராயர் இயற்றிய ஓர் ஒப்பற்றநூல். இது உபாஸனையின் ரஹஸ்யத்தையும் ஸ்ரீவித்யாமந்திரத்தின் 15 விதமான அர்த்தங்களையும் விரிவாகக் கூறும் ... 1 0 0

5. ஸ்ரீ நகர விமர்சம். (மூலமும், தமிழுரையும்.)
ஸ்ரீ துர்வாஸமஹரிஷியாலியற்றப்பட்ட ஸ்ரீலலிதா ஸ்தவரத்னம். ஸ்ரீசக்ரத்தின் ஸ்வரூபமும், ஸ்ரீசக்ரத்தில் உள்ள ஆவரண தேவதைகளின் விவரமும், அத்யாத்ம தத்துவமும், சாக்தாத்வைத ஸ்வரூபமும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. படங்களோடு கூடியது. ... 0 12 0

6. ஸ்ரீ குரு தத்வ விமர்சம். (தமிழ்)

இச் சிறுநூல் குருதத்வம் எல்லாத் தத்வங்களைவிடச் சிறந்தது என்பதையும், பாரமார்த்திக (தத்துவாதீத) குருவின் ஸ்வரூபத்தையும், முமுக்ஷுக்களுக்கு குருவின் பரம்பரையின் ஞானம் அத்தியாவசியம் என்பதையும், குருவை எங்ஙனம் தியானிக்க வேண்டும் என்பதையும், நன்கு விளக்குகின்றது. ... 0 5 0

7. ஸ்ரீலலிதா த்ரிசதீ ஸ்தோத்திரம். மூலமும், த்ரிசதீ நாமாக்களுக்கு ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அருளிச்செய்த வடமொழி பாஷ்யத்தைத் தழுவி இயற்றப்பட்ட சந்திரிகை என்னும் தமிழ் விருத்தியுரையும். ... 1 0 0

8. மனீஷாபஞ்சகம்.
(மூலமும் தமிழ்விருத்தி யுரையும்.) ... 0 5 0

9. ஞானப்பிரகாசம் அல்லது மனோஹாரிணி.
(ஒரு சிறந்த வேதாந்த நாடகம்) ... 0 10 0

10. ஸ்ரீ லலிதோபாக்யானம். ... 2 0 0

11. ஸ்ரீ லலிதோபாக்யான விமர்சம். ... 0 4 0

G. V. கணேசஅய்யர் B.A. B.L., அவர்கள் எழுதிய நூல்கள்.

1. ஸௌந்தர்ய லஹரி
(மூலமும், தமிழ் உரையும்) 1 8 0
2. மூகபஞ்சசதீ ஆர்யாசதகம் ,, ... 0 8 0
3. ,, கடாக்ஷ சதகம் ,, ... 0 8 0
4. ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமம். ஸ்ரீபாஸ்கரராயரது பாஷ்யத்திற்குத் தமிழ்விரிவுரை
(சுமார் 1000 பக்கங்கள்.) ... 4 0 0

இதர நூல்கள்

1. ஸ்ரீ தேவீபாகவதம் (தமிழ்) 2 பாகங்கள் ... 9 0 0
2. ஸ்ரீ தேவீகீதை. மூலமும், தமிழ் விரிவுரையும் 0 12 0
3. ஸ்ரீ த்ரிபுரா ரஹஸ்யம் ... 1 8 0

கீழ்க்கண்ட நூல்கள் கூடியசீக்கிரம் வெளிவரும்:—

1. ஸ்ரீவித்யோபாஸனா ஆஹ்நிக சந்திரிகை. (நாகரம்) ஸ்ரீவித்யோபாஸகர்கள் படுக்கையைவிட்டு எழுந்தது முதல் பிரதிதினம் அநுஷ்டிக்கவேண்டிய நித்திய வழிகள்.
2. ஸ்ரீ வித்யா ஸ்தோத்திரமாலை. (நாகரம்) திவ்யமங்கள தியானம், ஸுபகோதயஸ்துதி, லலிதா ஸ்தவராஜம் முதலிய தேவீஸ்தோத்ரங்கள்.
3. ஸ்ரீமூகபஞ்சசதீ ஸ்தோத்திரம். மூலமும் தமிழுரையும்.
4. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்வமும், ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஆவரண பூஜாவிதானம், நிர்க்குணஸுப்ரஹ்மண்ய அஷ்டோத்தர சதநாமாவளிகளும்.

கிடைக்குமிடங்கள்:—

1. N. ராஜம் & கோ,
புத்தக வியாபாரிகள், 43. புரசைவாக்கம் ஹைரோட்,
வேப்பேரி, சென்னை.

2. மானேஜர்,
ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ சபை,
178, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

3. ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் Ltd.,
டவுன் ஹைஸ்கூல் ரோட், கும்பகோணம்.

4. **B. G. PAUL & Co., Publishers,**
4, Francis Joseph Street, G. T., Madras.

ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹாமஹோபதேசக்
ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவ் சர்மா அவர்கள் எழுதிய நூல்கள்.

1. ஸ்ரீ சங்கரோபதேசரத்னம் (ஆதிசங்கரின் 100 நூல்களிலிருந்து திரட்டப்பட்ட 1313 அருமையான உபதேசங்கள்) 2 0 0
2. ஸ்ரீ பத்ம புராணம் 0 12 0
3. மார்க்கண்டேய புராணம் 0 6 0
4. ஸ்ரீ வாமன புராணம் 0 6 0
5. ஸ்ரீ பிரஹ்ம வைவர்த்த புராணம் 0 12 0
6. ஸ்ரீ பிரஹ்ம புராணம் 0 12 0
7. ஸ்ரீ கூர்ம புராணம் 0 6 0
8. ஸ்ரீலலிதோபாக்யானம் 2 10 0

கிடைக்கும் இடங்கள் :—

1. **N. ராஜம் & கம்பெனி.**

புத்தக வியாபாரிகள்,

43. புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை.

2. **அமரகலாவிலாஸினி ஸபை,**

154, தம்பு செட்டி வீதி, சென்னை.

எமது பிரசுரங்கள்.

1. ஸ்ரீ லலிதாத்ரிசதீ. நாகரத்தில் மூலமும், த்ரிசதி நாமாக்களுக்கு ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அருளிய வடமொழி பாஷ்யத்திற்கு சந்திரிகை என்னும் தமிழ் விருத்தியுரையும் ... . ரூ. 1.

2. ஸ்ரீ லலிதோபாக்யாநம் ... ... ரூ. 2.

3. ஸ்ரீ வித்யா ஸ்தோத்ரமாலை (நாகரம்).
ஸ்ரீ திவ்யமங்கள தியானம், ஸ்ரீ ஸுபகோதயஸ்துதி, ஸ்ரீ லலிதா ஸ்தவராஜம், பரசம்புஸ்துதி முதலிய அரிய ஸ்தோத்ரங்களடங்கியது.

இன்னும் ஸ்ரீ தேவியின் சம்பந்தமான கிரந்தங்களும் கிடைக்கும்.

N. RAJAM & CO.
43, Purasawalkam High Road
VEPERY :: MADRAS.

GORDON & CO., LTD., TRIPLICANE, MADRAS.